# புதிய
# கட்டிடத் திறப்புவிழா

## 2014



வேலணை பிரதேச செயலகம்
தீவகம் தெற்கு

# சிறப்பு
# மலர்

## பிரதேச செயலகம்
## வேலணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கட்டடத் திறப்பு விழா

## சிறப்பு மலர்

**14.10.2014**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

வேலணை பிரதேச செயலகம்
தீவகம் தெற்கு

9590 (P)
PL

**தீவுகள் தெற்கு,**
**பிரதேச செயலகம்,**
**வேலணை. 2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | : | புதிய கட்டடத் திறப்பு விழா சிறப்பு மலர் |
| Title | : | New Building Opening Ceremony |
| மொழி | : | தமிழ் |
| Language | : | Tamil |
| பதிப்புரிமை | : | இதழாக்கக்குழு |
| Copy Right | : | Book Publication Committee |
| இதழாசிரியர் | : | சி.சித்தார்த்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)<br>த.பாலமுருகன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) |
| Editor | : | S.Sitharththan (Development Officer)<br>T.Balamurugan (Development Officer) |
| வெளியீடு | : | 2014 |
| Publication | : | 2014 |
| நூல் வடிவமைப்பு | : | இதழாக்கக்குழு |
| Book Design | : | Book Publication Committee |
| பதிப்பு | : | மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ் |
| Printing | : | Mathi Colours Printers |
| அளவு | : | B5 |
| Size | : | B5 |
| பக்கங்கள் | : | xvii+188 |
| Pages | : | xvii+188 |
| பிரதிகள் | : | 600 |
| Copies | : | 600 |
| விலை | : | |
| Prize | : | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச கீதம்

**பல்லவி**

ஏழ்கடல் சூழும் தீவுகள் தெற்கு
எழிலுறு வேலணைப் பிரதேசம்
வாழ்க வளம்பல பெற்றிறை துணையுடன்
வாழிய வாழிய வாழியவே!

(ஏழ்கடல்)

**அனு பல்லவி**

மண்டை தீவோடு அல்லைப்பிட்டி
மண்கும் பானுடன் வேல் அணையும்
அண்டைய சரவணை புங்குடு தீவும்
அருள்புரி நயினாதீவுடனே
செந்தமிழ் மொழியும் சிறந்தபண் பாடும்
தீவுகள் தெற்கில் ஓங்கிடவே!

(ஏழ்கடல்)

**சரணங்கள்**

கலைமலி கோவில்கள் கல்விச் சாலைகள்
காண்பவர் உளம்மகிழ் கடற் கரைகள்
நிலைபெறு அரச பணிபுரி இடங்கள்
நிறைந்திடும் தெங்கு பனை வளங்கள்

கடற்றொழில் கமத்தொழில் கற்பக தருசார்
கைப்பணி கால்நடை வளர்ப்புடனே
உடலுழைப் பரச பணியொடு வர்த்தகம்
உயர்ந்திட வாழ்க்கை வளம் பெறவே!

(ஏழ்கடல்)

கற்றவர் மலிந்த நற்றவப் பதியென
மற்றவர் என்றும் போற்றிடவே
உற்றநல் வளங்கள் பெற்றிட மாந்தர்க்கு
உறுதுணை யாப்பணி ஆற்றிடுவோம்!

(ஏழ்கடல்)

**கா.பொ.இ.குலசிங்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாக்கக்குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் *(பிரதேச செயலர்)* |
| செயலாளர் | : | திரு.கா.பொ.குலசிங்கம் *(கிராம அலுவலர்)* |
| உப தலைவர்கள் | : | திருமதி.மீரா திசநாயகம்பிள்ளை *(பிரதி திட்டமிடல் பணிப்பாளர்)* |
| | | திரு.ப.கஜேந்திரன் *(கணக்காளர்)* |
| பொருளாளர் | : | திரு.இ.ஜெகதீஸ்வரன் *(அபிவிருத்தி உத்தியோகத்தர்)* |
| உப செயலாளர் | : | திருமதி.தே.துவாரகா *(அபிவிருத்தி உத்தியோகத்தர்)* |
| இதழாசிரியர் | : | திரு.சி.சித்தார்த்தன் *(அபிவிருத்தி உத்தியோகத்தர்)* |
| | | திரு.த.பாலமுருகன் *(அபிவிருத்தி உத்தியோகத்தர்)* |
| இதழாக்கக்குழு | : | திரு.க.மாணிக்கதாசன் *(ஆளணி உதவியாளர்)* |
| | | திரு.செ.சண்முகலிங்கம் *(நிதி உதவியாளர்)* |
| | | திரு.கு.சந்திரா *(கிராம அலுவலர்)* |
| | | திரு.சி.இரத்தினேஸ்வரன் *(கிராம அலுவலர்)* |
| | | திரு.இ.யோகேஸ்வரன் *(கிராம அலுவலர்)* |
| | | திரு.செ.சிவா *(கிராம அலுவலர்)* |
| | | திரு.ம.சசிக்காந் *(கிராம அலுவலர்)* |
| | | திரு.தி.கோகுலரூபன் *(கிராம அலுவலர்)* |
| | | செல்வி.க.பிரமதீஸ்வரி *(கிராம அலுவலர்)* |
| | | செல்வி.ந.நகுலராணி *(முகாமையாளர் சமுர்த்தி தலைமைப்பீடம்)* |
| | | திரு.கு.கருணாநிதி *(முகாமையாளர் சமுர்த்தி மகா சங்கம் )* |
| | | திரு.சி.ஜெயசீலன் *(முகாமையாளர் சமுர்த்தி வங்கி - புங்குடுதீவு)* |
| | | செல்வி.த.கௌரி *(அபிவிருத்தி உத்தியோகத்தர்)* |
| | | திருமதி. மேகலைச்செல்வி *(கலாச்சார உத்தியோகத்தர்)* |
| | | திரு.கு.ஜெயகாந்தன் *(சமுர்த்தி உத்தியோகத்தர்)* |
| | | திரு.ஜெ.மதனராஜன் *(முகாமைத்துவ உதவியாளர்)* |
| | | திரு.த.ஜயந்தன் *(அபிவிருத்தி உத்தியோகத்தர்)* |
| | | திரு.ஆ.இராகுலன் *(அபிவிருத்தி உத்தியோகத்தர்)* |
| | | திரு.பி.ஜெனின் *(அபிவிருத்தி உத்தியோகத்தர்)* |
| | | திரு.நா.ஹரன் *(அபிவிருத்தி உத்தியோகத்தர்)* |
| | | செல்வி.தி.லேறாஜி *(அபிவிருத்தி உத்தியோகத்தர்)* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலக சின்னம்

வேலணை பிரதேச செயலகம்
தீவகம் தெற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே......

பக்கம்

## பிரதேசக் கட்டுரைகள்



| | | |
|---|---|---|
| 01. | தீவுகள் தெற்கு நிர்வாகம் ஓர் பார்வை | 01-08 |
| 02. | கிராம உத்தியோகத்தர்கள் அலுவலகங்களை நடாத்திச் செல்லுதல் | 09-12 |
| 03. | தீவுகள் தெற்கு பிரதேச செயலக பிரிவின் அபிவிருத்தித் தந்திரோபாயங்களும் திட்டங்களும் | 13-21 |
| 04. | தீவகம் தெற்கு பிரதேச பொருளாதார சமூக நிலை அன்றும் - இன்றும் | 22-30 |
| 05. | தீவகம் தெற்கு நிர்வாகப் பிரதேசமும் கலைகளும் | 31-35 |
| 06. | வேலணை பிரதேச செயலக பிரிவினுள் தமிழ்ப்பணி ஆற்றிய சான்றோர்கள் | 36-45 |
| 07. | கல்வியில் சமசந்தர்ப்பமும் தீவக பிரதேச மாணவர்களின் கல்வி வாய்ப்புகளும் | 46-52 |
| 08. | வட இலங்கையில் தீவகங்களின் தொல்லியல் வரலாற்று உள்ளீடுகள் - தொன்மங்களூடான ஒரு பார்வை | 53-57 |
| 09. | வேலணைப் பிரதேச கல்வி நிலை | 58-60 |
| 10. | தீவக பிரதேச விளையாட்டுக்கள் பற்றிய ஓர் நோக்கு | 61-63 |
| 11. | தீவகப் பிரதேசத்தின் சுற்றுலாத்துறையும் அதன் வளவாய்ப்புக்களும் | 64-68 |
| 12. | வேலணையின் சுகாதாரம் | 69-70 |
| 13. | தீவகத்தின் விழுமியங்களும் வழக்கங்களும் | 71-73 |
| 14. | வேலணை பிரதேச சபையின் சேவை பற்றிய நோக்கில்...... | 74-79 |
| 15. | கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் | 80-81 |
| 16. | வேலணைப் பிரதேச செயலகப் பிரிவின் காணிப் பயன்பாடு பற்றிய ஓர் ஆய்வு | 82-88 |
| 17. | மண்டைதீவு எனும் மரகதத்தீவு | 89-92 |
| 18. | அல்லைப்பிட்டி மாண்மியம் | 93-98 |
| 19. | மண்கும்பான் கிராமம் ஓர் நோக்கு | 99-104 |
| 20. | வேலணைக் கிராமம் வாழ்வும் வளமும் | 105-112 |
| 21. | சரவணைக் கிராமம் ஓர் பார்வை | 113-117 |
| 22. | புங்குடுதீவு ஓர் நோக்கு | 119-127 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. நயினாதீவு – ஓர் பல்துறை நோக்கு 129–1314
24. அலுவலக முகாமை முறைமையும், 5S செயற்திட்டமும் 135–140
25. திட்டமிடலில் நேரமுகாமைத்துவமும் மனித விழுமியங்களும் 141–142
26. சமூக பராமரிப்பு நிலையமும் அதன் கூட்டிணைந்த செயற்பாடுகளும் 143–158
27. சமுர்த்தி திட்டமும் வறுமை ஒழிப்பும் 159–164
28. தொடர்பாடல் கலை 165–169
29. உள்ளத்தனையது உயர்வு – உள்ளத்தின் செம்மையே ஆரோக்கியம் 170–172
30. KEYS AND CLEAR THINKING FOR SUCCESS IN LIFE 173–176
31. போருக்கு பின்னரான தமிழ்ச் சூழல் – ஒரு பின் நவீனப் பார்வை 177–181
32. வேலணை பிரதேச செயலர் பிரிவில் சமூக நிறுவனங்கள் 182–188
33. தீவக மாதாவின் கண்ணீர் கதறல் 189
34. சாம்பல் பூத்த தணல் 190
35. தேடல் 191

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய ஆதீன குருவின்



# ஆசிச்செய்தி

வேலணைப் பிரதேச செயலக பிரிவைச் சார்ந்த மக்களின் நலனுக்காக சேவை புரியும் இப் பிரதேச செயலகத்தின் வரலாறு நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டதாகும். இப்பிரதேச செயலகத்தினுடைய ஒவ்வொரு செயற்பாடுகளும் மக்களின் நலன்கருதி மிகவும் இக்கட்டான கால கட்டங்களில் சிறப்பான சேவையினை ஆற்றி வந்தமையினை அனைவரும் நன்கு அறிவர். இங்கு சேவையாற்றிய, ஆற்றுகின்ற அனைத்து உத்தியோகத்தர்களும் மக்களின் நலனுக்காக பாடுபடுகின்ற பெரியோர்களாகவே காணப்படுகின்றனர். இன, மத வேறுபாடின்றி தற்போது கடமையாற்றிவரும் பிரதேசசெயலர் திருமதி.மஞ்சுளாதேவி சதிஷன் அவர்களதும் ஏனைய உத்தியோகத்தர்களதும் அர்ப்பணிப்புமிக்க சேவை பாராட்டுக்குரியது.

இப்பிரதேச செயலகத்திற்கென இரு மாடிகளைக் கொண்டதொரு புதிய கட்டிடம் அமையப்பெற்று திறப்புவிழா காண்பதையிட்டும் அதனையொட்டிய சிறப்புமலர் வெளியீடு செய்வதும் மகிழ்ச்சியை தருகின்றது. அந்தவகையில் இக்கட்டத்தில் பணிகள் மேலும் சிறப்பாக அமையவும் திறப்புவிழா சிறப்பு மலர் எங்கும் எழில் மணம் வீசவும் அனைத்து உத்தியோகத்தர்களும் எல்லா நலங்களும் பெற்று நீடுழி காலம் வாழவும் எல்லாம் வல்ல ஜகன் மாதாவாகிய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் பாதார விந்தங்களை பிரார்த்திப்பதுடன் எனது நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்

*"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க "*

**சிவஸ்ரீ ஐ.கைலை வாமதேவக்குருக்கள்**

*ஆதீனகுரு*

*நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்,*

*நயினாதீவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவு நாகதீப ரஜ மகா விகாராதிபதி அவர்களின்



# ஆசிச்செய்தி

இயற்கை அழகு எழில் நிறைசோலை பயன் தருமரங்கள் பசுமைநிறை வயல்கள், கடல்வளம், நீர்வளம், கற்பக தருக்களுடன் புகையிலைச் செய்கையில் பூரிக்கும் இடமாம் தீவகம்.

வடபால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீபகற்பத்தில் பரந்த பிரதேசங்களை உள்ளடக்கிய தீவகம் தெற்கு பிரதேச செயலகமானது மண்டைதீவு தொடக்கம் நயினாதீவு வரையான இடங்களை தனது நிர்வாகப் பிரிவின் கீழ் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. அதுமட்டுமல்லாது பல்லாயிரக் கணக்கான யாத்திரிகர்கள் தரிசித்து செல்கின்றதும், நான்கு இன மக்களும் ஒற்றுமையுடனும் சகோதர உணர்வுடனும் வாழ் வதற்குரிய வணக்கஸ்த்தலங்களாக அமையப் பெற்றதாகிய நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம், புத்தபெருமானின் திருப்பாத தடம் பதித்த நாகதீவு ரஜமகா விகாரை, இஸ்லாமியரின் வழிபாட்டு இடமான பள்ளி, சாட்டி சித்தாத்திரை மாதா ஆலயம் போன்றவை பிரசித்தி பெற்றவை. அதுமட்டுமல்லாது இயற்கையின் இன்பங்களை அனுபவிக்கக் கூடிய சாட்டி வெள்ளைக் கடற்கரை போன்றவையும் இப் பிரதேச செயலக பிரிவிற்கு மேலும் அழகூட்டுகின்றன. " மக்கள் குறை அறிந்து மகத்தான சேவை ஆற்று கின்ற" பிரதேச செயலகத்தின் பணிபோற்றுதற்குரியது. எவ்வளவு இடர் ஏற்பட்ட காலத்திலும் தீவகமக்களின் ஜீவனோபாய வாழ்விலே மிகவும் உன்னதமான சேவை ஆற்றுவதுடன் யாத்திரிகர்கள் சேவையிலும் இச் செயலகம் முன்னின்று உழைத்து வருகின்றது. இங்கு குறிப்பிடத்தக்க விடயம் எதுவெனில், பிரதேச செயலகத்தில் கடமை யாற்றிய, தற்போது கடமை ஆற்றுகின்ற பிரதேச செயலர்கள், தங்களின் சக உத்தி யோகத்தர்களுடன் இணைந்து மக்களுக்காக தன்னலம் கருதாது பணியாற்றுகின்ற மையால் இப்பிரதேசம் தீவகம் தெற்கு எதிலும் முன்னிற்கிறது எனலாம்.

வளங்கள் குறைவாக இருந்தாலும் இருக்கின்ற வளங்களைக் கொண்டு நிறைவான சேவையினை ஆற்றி வருகின்ற பிரதேச செயலகத்தின் பணி மென்மேலும் வளரவும், புதிதாக அமைக்கப்பட்டு திறப்புவிழா காண்கின்ற அலுவலகம் சிறப்புற இயங்கவும் புத்தபிரானின் அருள் கிடைக்க வேண்டி எனது ஆசிச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.


நன்றி

**நவதகலபதுமகீர்த்தி திஸ்ஸநாயக்கதேரோ,**
*விகாராதிபதி நாகதீப ரஜமகாவிகாரை,*
*நயினாதீவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்டி தூய மரியாள் ஆலய பங்குத் தந்தையின்



# ஆசிச்செய்தி

யாழ் மண்ணின் புகழ்பூத்த யாத்திரிகை தலமான சாட்டி சித்தாத்திரிகை அற்புத அன்னையின் ஆலயத்திற்கருகாமையில் வேலணை பிரதேச செயலகம் அமைந்திருப்பது பெருமைக்குரிய விடயமாகும். போரினால் ஆழமாக பாதிக்கப்பட்ட தீவக மக்களுக்கு "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற ஆழ்ந்த அர்ப்பணிப்போடு செயல்பட்டு வரும் வேலணை பிரதேச செயலகம் தனது தியாக சேவையினை தொடர்ந்து மக்களுக்கு வழங்க புதிய கட்டிடத்தொகுதியினை திறந்து வைப்பது மக்களுக்கு அணியும், அருளும் சேர்க்கும் பணியாகும். இப்புதிய கட்டிடத்தொகுதியின் செயற்பாடுகள் சிறப்புற அமைய இறைவனின் அருள் வேண்டி நிற்கின்றேன் இந்த கட்டிடப்பணியில் பங்காற்றிய அனைத்து பணியாளர்களையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.


*"மனித மேம்பாடே வாழ்விற்கு மேம்பாடாகும்"*

*மிகுந்த அன்புடன்*
*அருள்பணி ஜெறேம் லெம்பேட் அ.ம.தி*
*பரிபாலகர் - சாட்டி சித்தாத்திரை மாதா கோவில்,*
*சாட்டி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவு முஹியதீன் ஜூம்மா பள்ளிவாயல் மௌலவியின்



# ஆசிச்செய்தி

"அஸ்ஸலாமு அலைக்கும்"

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்வாஹ்வின் திருப்பெயரால் என் ஆசிச்செய்தியை ஆரம்பிக்கிறேன்.

இலங்கை அரசினால் இலங்கை வாழ் மக்களுக்கு செய்யப்படும் பல சேவை வழங்கும் நிறுவனங்களில் ஒன்றான வேலணை பிரதேச செயலகத்தின் புதிய கட்டிட திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலரிற்கு ஆசிச்செய்தியை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன, மத பேதமின்றி மக்களுக்கு சிறப்பான சேவையினை ஆற்றி வரும் இப் பிரதேச செயலகமானது இப் புதிய கட்டிடத்தில் மேலும் சிறப்பான சேவையினை ஆற்ற வேண்டும் என்பதுடன் இக் கட்டிடத் திறப்பு விழாவையொட்டி வெளியிடப்படும் மலரின் வாசனை தேசமெல்லாம் பரவுவதற்கும் எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்தித்து எனது நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.


**மௌலவி எஸ்.எம்.பைரூஸ் (மக்கி)**
*பிரதம கதீப் முஹியதீன் ஜும்மா பள்ளிவாயல்*
*நயினாதீவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Felicitation message

## from Minister of Public Administration and Home Affairs



It is a great pleasure for me to have opportunity as the Minister of Public Administration and Home Affairs to appreciate your commitment to ensure more effective service in the civil administrations in Northern Province amidst various hardships

Divisional Secretariat is the prime institution which brings the programmes of the Government, which are implemented by all Ministries, to the General Public. therefore a critical as well as important role is played by you. The service rendered by you during the war of three decades facing grave challenges is an example to the whole public service. Public Officers like you are the pride of our Motherland.

Now you are at the dawn of a new era at the and a dark period of the history. We expect more effective service delivery to the Public whilst offering the Divisional Secretariat with modern facilities and the new hostel to public officers. There are instance where public officers refuse certain service station due to difficulties in finding accommodations facilities. However you are fortunate to have a solution for that issue.

The confidence of General Public towards Public Officer is always at the highest level. Now you are being facilitated to ensue your valuable service to General Public protecting their confidence. All these facilities are offered to you as a result of the people friendly service rendered by you. Therefore I wish you the success and courage in your path to surmount all challenges whilst enjoying these benefits.

**W.D.J.Seneviratne**
*Minister of Public Administration and Home Affairs*
*Ministry of Public Administration and Home Affairs*
*Torringtion Square*
*Colombo - 07*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய சிறு கைத்தொழில்கள் அமைச்சரின்



# வாழ்த்துச் செய்தி

எல்லாவகையிலும் புறக்கணிக்கப்பட்டு மனிதர்கள் வாழத் தகுதியற்ற நிலமாக மாற்றப்பட்டிருந்த தீவகத்தை, மனிதர்கள் வாழக்கூடிய மண்ணாக மாற்றியமைத்த எமது சேவையை எமது மக்கள் அறிவார்கள்.

அரச நிர்வாகமும், அரசியல் அதிகாரங்களும் முடக்கப்பட்டு இருண்டு கிடந்த வடமாகாணத்தின் ஜனநாயகத்தின் மறுப்பை எதிர்த்துப் போராட எமக்கு தீவகங்களே களபூமியாக இருந்தது.

வடக்கில் இன்று திறக்கப்பட்டுள்ள ஜனநாயகத்துக்கான பாதையை தீவகங்களிலிருந்து திறந்தவர்கள் நாங்களே. எமக்கு அதற்காக தோழோடு தோள் நின்று உதவியவர்கள் தீவக மக்களே.

நாம் ஏற்படுத்திய உள்ளக கட்டமைப்பு வசதிகளும், புனரமைப்புப் பணிகளும் எமக்கும் மக்களுக்குமான உறவுமே தீவகப்பகுதிகளை, பாதுகாப்புடனும், ஜனநாயக உரிமைகளுடனும் மக்கள் வாழக்கூடிய பகுதிகளாக மாற்றியமைத்தது.

தீவக மக்களுக்கும் எமது கட்சிக்குமான பிரிக்க முடியாத உறவும், தொடர்பும் இவ்வாறு கட்டியெழுப்பப்பட்டதே தவிர, ஆயுதங்களால் மிரட்டியோ, பொய்மையில் மயக்கியோ உருவானதல்ல. ஆகையால்தான் தீவகத்துக்கும் எமக்குமான சம்மந்தமானது நெருக்கமும், இறுக்கமுமானதாக இருக்கின்றது. எந்நாளும் அவ்வாறே இருக்கும்.

வேலணை பிரதேச செயலகம் தனக்கான புதிய கட்டிடத்தில், புதுப் பொலிவுடன் இயங்கத் தொடங்குவது ஏனையவர்களைவிட எமக்கே முதல் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தீவக மக்களின் வாழ்வும், வளமும் மேம்படுவதற்கு எமது பங்களிப்பும், கரிசனையும் எப்போதும் இருந்து வந்துள்ளது.

புதியதொரு ஆரம்பத்தை வேலணை பிரதேச செயலகம் தொடங்குகின்றது. இந்த ஆரம்பம் தரும் மகிழ்ச்சியானது வேலணை பிரதேச மக்களின் எழுச்சிக்கும், சுத்தமான, சுகாதாரமான, சுய முன்னேற்றத்துக்கான வாழ்வுக்கும் பக்க துணையாக இருக்க வேண்டும்.

இப்பிரதேச செயலகத்தின் முழுமையான சேவையை வேலணை மக்கள் அனுபவிக்க துறைசார்ந்த அனைவரும் சேவை மனப்பான்மையோடு பாடுபட வேண்டும். முன் மாதிரியான பிரதேச செயலகமாக வேலணை பிரதேச செயலகம் திகழ வேண்டும். எமது கடினமான உழைப்பினால். புத்துயிர் பெற்ற தீவகங்கள் அபிவிருத்தியிலும், உட்கட்டமைப்பு வசதிகளிலும் முன் நகர்வது எமக்கு பெரும் மகிழ்ச்சியாகும்.

புதிய நிழலில், புதிய சிந்தனையில் எமது மக்களின் ஒளிமயமான வாழ்வுக்கு அர்ப்பணிப்பு மிகுந்த சேவையை வேலணை பிரதேச செயலகம் வழங்க வேண்டும்.

இந்த வரலாற்று மகிழ்ச்சியில் பிரதேச செயலர், அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் என அனைவருக்கும் எமதும், எமது மக்கள் சார்பானதுமான மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*என்றும் மக்கள் சேவையிலுள்ள*

**டக்ளஸ் தேவானந்தா பா.உ**


*செயலாளர் நாயகம் ஈ.பி.டி.பி.*
*பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்*
*சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Felicitation message

## from Deputy Minister of Public Administration and Home Affairs



As the Deputy Minister of Public Administration and Home Affairs, I am privileged to offer this message of felicitation on the occasion of the opening of the Velanai District Secretariat.

A District Secretarial could be identified as the focal point in delivering public service and it could not only be recognized as a government Institution that renders a special service to the citizens of Sri Lanka, it also as to coordinator between the general public and the state service.

We all agree that in order to provide an effective and a productive service, it is a necessity to open more state institution which will provide easy access to the general public.

The people in the North are starting a new life after the end of a bloody war that droggod for over thirty years, for them the opening of the Velanai District Secretariat is a blessing that will help them to lead a peaceful life.

In its efforts to provide an efficient and a productive state service to the people in the North as aspired in the 'Mahinda Chintana', I wish the Divisional Secretary and his staff at the Velanai Divisional Secretary and his staff at the Velanai Divisional Secretarial all the very best.

**Wijaya Dahanayake**
*Deputy Minister of Public Administration*
*and Home Affairs*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Felicitation message

### from Secretary,
### Ministry of Public Administration and Home Affairs



It is a great pleasure to deliver a message as the Secretary of the Ministry of Public Administration and Home Affairs, to the magazine issued in concurrence with the opening of the new building of Divisional Secretariat Velanai.

The new building of the Divisional Secretariat, Velanai is more like a blessing for the effort of creating an efficient and productive government service for the people in the North and East who have begun a new life with the rays of peace and hope after a cruel and cursed war of 30 years.

I extend my best wishes for the success fo the Divisional Secretariat Velenai to be government institution dedicated fr the betterment of the people.

**P.B.Abeykon**
*Secretary,*
*Ministry of Public Administration and Home Affairs.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Felicitation message

## from Additional secretary (home affairs)
## Ministry of public administration and home affairs

As additional secretary (home affairs) hereby add these few words with much pleasure to the magazine issued by the divisional secretariat velanai.

I purely believe that the new divisional secretariat velanai which is open to ensure an effective service to the general public of the northern province where the sky is blessed by the dove of peace at the end of a war prevailed for three decades.


Further I make this opportunity to wish all staff of the divisional secretariat courage and strength to shoulder their role for the benefit of the people of our motherland .

**W.m deepthie fernando**
Additional secretary (home affairs)
For secretary
Ministry of public administration and home affairs.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Felicitation message

## from hon governor of Northern Province



I am extremely happy to send this felicitation message to the people of the island south divisional secretary and staff in connection with new building opening for divisional secretariat. Divisional secretariat is playing pivotal role in the context of development administration it is central point to inter grade both urban and rural and takes towards to the national goals.

I understand that the British colonization period collects system was introduced whit the objective was collected revenue from local population and send the revenue to the ruler after independent from brutish ruling this system was continued under the title of divisional revenue officer(DRO) this system took the paradigrn shift in land development and administration responsible had been assigned and development activities had entrusted to the divisional revenue officer revenue collecting administration to charge as development administration assistant government agent took change the land power to manage the state land to the national requirement which was to promote the agricultural production to meet the country food requirement by local production because at that time poverty reduction and self sufficient was a national economic target.

In1989office of the assistant government agent had been converted as divisional secretariat under concept of goverment services forward to the footstep of the people and empowering divisional secretariat by decentralized the powers of kachcheri divisional secretary as a divisional head of the public this is a bottom level plan and based for the national plan with this background information I like to mention here under the "mahinda chintana" the government took steps to provide amble facilities to the divisional administration by which rural population will empower and contribute more to the national economy.

At this series island velinai divisional secretariat entering into the new building with the aim of the batter service to the people of velanai divisional more physical facilities to create more conducive working environment.

Finally as governor of northern province I wish to congratulate divisional secretary staff and people of isiand south for your achievement of new face for divisional administratio.

May you have a prosperous future.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவரின்



# வாழ்த்துச் செய்தி

வேலணை பிரதேசத்தினுடைய புதிய கட்டடத்திற்கான இச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். மலைபோல் மக்கள் சேவை புரிந்த வேலணைப் பிரதேசத்திற்கு நிலையான கட்டடம் நிரந்தரமாய் இல்லை என்ற நீண்ட நாள் கவலை நிறைவுக்கு வந்துள்ளது. அந்த வகையில் அத்திறப்பு விழாவோடு இச்சிறப்பு மலர் வெளியீடும் இன்னும் பெரும் மகிழ்வைத்தான் ஊட்டுகிறது. அரச காரியாலயங்கள் மக்களோடு பிணைந்திருக்க வேண்டும் என்பதற்கே இக்கட்டடத் திறப்பு விழாவினையொட்டி மக்கள் அடைந்திருக்கிற மகிழ்ச்சியே தக்க சான்றாய் அமைந்திருக்கின்றது.

இச் சிறப்பு மலரிலே பல்துறைக்கண்ணோட்டம் பரவலாகக் காணப்படுகின்றது. உத்தியோகத்தர்களின் கட்டுரையும் மையம் கொள்கின்றது, சான்றோரின் சால்பு நிறை கட்டுரைகள் காணக்கிடைக்கின்றது. இலக்கியத்தோடு பண்பாடும், கலையோடு கல்வியும் பரவலாகப் பதியப்பட்ட படியால் கட்டிடச் சிறப்பு மலர் எனும் நிலை தாண்டி பிரதேசத்தின் அடையாளச் சின்னமாய் என்னால் பார்க்க முடிகின்றது. வருங்கால இளம் சமூகம் வளமாக இதைப்பயன்படுத்த எண்ணியே இந் நூலின் ஆக்கக்குழு பல் துறையிலும் இதைப் படைத்திருக்கிறது.

அந்த வகையில் இந் நூல் வெளியீட்டிற்கு உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் இப் புதிய கட்டடத்தில் புதிய உத்வேகத்துடன் பிரதேச செயலக பணி மேலும் சிறப்பாக அமையவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சில்வேஸ்திரி அலன்ரின்**

*பாராளுமன்ற உறுப்பினர்*

*யாழ் மாவட்டம்.*

*ஒருங்கிணைப்புக்குழு தலைவர்*

*வேலணைப் பிரதேசம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின்



# வாழ்த்துச் செய்தி

வரலாற்று விழுமியங்களையும், பாரம்பரியச் சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டுள்ள வேலணைப் பிரதேசத்தில் அப்பிரதேச மக்களுக்கான பணிகள், சேவைகளையாற்றவென 1973இல் தனியான கட்டிடத் தொகுதியாகத் தோற்றம் பெற்ற வேலணை பிரதேச செயலகமானது கால மாற்றத்திற்கும், தேவைகளுக்கும் அமைவாக இன்று போதிய இட வசதிகள், அடிப்படை வசதிகள் அனைத்தையும் கொண்டதொரு விசாலமான கட்டிடத் தொகுதியாக மலர்ந்து நிமிர்ந்து நிற்கின்றது.

இப்பிரதேச செயலகத்தினால் மக்களுக்காற்றப்பட வேண்டிய சேவைகளை இடையூறுகள், சிரமங்கள் இன்றி மேற்கொள்வதற்கேற்ற வகையில் கட்டிட வசதிகள் ஏற்கனவே இல்லாதிருந்த போதிலும் மக்களுக்கான பணிகள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இயன்றளவு செவ்வனே செய்யப்பட்டு வந்தமை மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

யாழ் மாவட்டம் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள், புனர்நிர்மாணப் பணிகள், மீள்குடியேற்றப் பணிகள், வறுமையில் இருந்து மக்களை மீட்டெடுத்து அவர்களது வாழ்வையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் சமுர்த்தித் திட்டம் எனப் பல்வேறுபட்ட திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் இவ்வேளையில் பிரதேச செயலகங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். இந் நிலையில் போதிய கட்டிட வசதிகளற்ற பிரதேச செயலகங்களை வசதி வாய்ப்புக்களுடனான கட்டிடத் தொகுதியாக மாற்ற வேண்டும் எனும் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உன்னத நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வேலணை பிரதேச செயலகம் இன்று புதியதொரு வடிவம் பெற்று திறப்புவிழாவினைக் காண்கின்றது.

சகல நிர்வாக அலகுகளும் பன்முகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இக் கால கட்டத்தில் சகல வசதிகளுடனும் எழிலுற எழுந்து நிற்கும் இப் பிரதேச செயலகச் செயற்பாடுகள் யாவும் மென்மேலும் வளர்ந்து மக்களுக்குச் சிறந்த நற்சேவை செய்திடவும், இதன் திறப்பு விழா நிகழ்வு சிறப்புறவும் எனது நல்லாசிகளையும் மனமுவந்த நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**

*அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்*

*யாழ் மாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின்



# வாழ்த்துச் செய்தி

வேலணை பிரதேச செயலகத்தினால் வெளியீடு செய்யப்படுகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். வேலணைப் பிரதேசமானது விவசாயம், கடற்தொழில் ஆகியவற்றினை பிரதான பொருளாதார மார்க்கமாக கொண்டுள்ளது. வேலணை என்கின்ற பெயரானது முருகப் பெருமானது வழிபாட்டுடன் தொடர்புபட்டதாக வரலாற்றில் இருந்து அறிய முடிகின்றது. வேலணை பிரதேசமானது பல புத்தி ஜீவிகளினையும் துறைசார் நிபுணர்களையும் நாட்டிற்கு வழங்கியுள்ளது.

தீவுப்பகுதிகளில் ஒன்றான வேலணை பிரதேச செயலர் பிரிவு ஆரம்ப காலப்பகுதியில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுடனே இணைக்கப்பட்டு இருந்தது. மண்டைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு தீவுப்பகுதி மக்கள் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மிகவும் நீண்ட பயணங்களை செய்ய வேண்டியிருந்தது. அந்நிலைமாறி வேலணையில் உதவி அரச அதிபர் காரியாலயம் அமைக்கப்பட்டு பின்னர் வேலணை பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டது. ஆயினும் அலுவலகம் சிறிய கட்டிடப் பகுதியில் இயங்கி வந்தது.

2009ம் ஆண்டு பொது நிர்வாக அமைச்சுக்கு பிரதேச செயலக கட்டிடம், பிரதேச செயலர் விடுதி போன்றவற்றுக்கான கருத்திட்டத்தினூடாக இவ் வேலைத்திட்டத்தினை நிறைவேற்றியுள்ளது. இவ்வலுவலகத்துக்கு தேவையான தளபாடம், உபகரணத் தொகுதிகளையும் வழங்கியுள்ளமை சிறப்பம்சமாகும். இதற்காக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கும், அமைச்சுக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கும் மாவட்ட அபிவிருத்திக்காக நிறைந்த சேவையினை வழங்கும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருக்கும் இத்தருணத்தில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரதேச செயலக கட்டிடம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்படு கின்றமை இப்பிரதேசத்தின் முக்கிய நிகழ்வாகும் இதற்கு உயிர் கொடுப்பதற்கு உத்தியோகத்தர்கள் தன்னலமற்ற அர்ப்பணிப்பான சேவை வழங்குதல் வேண்டும்.

இப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பெரும் பங்காற்றிவரும் பிரதேச செயலகம் பிரதேச மக்களுக்கு நிறைவான விரைவான சேவையை வழங்கவேண்டும் இதன் மூலம் இப்பிரதேச மக்களின் சமூக பொருளாதார நிலையிலும், கல்வி கலாச்சாரம் விளையாட்டு போன்ற பல்துறைகளிலும் மேன்மைபெற்று திகழ வாழ்த்தி பணி சிறக்க இறைவனை வேண்டுகின்றேன்.

9590 (P)

**ரூபினி வரதலிங்கம்**
*மேலதிக அரச அதிபர்,*
*மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம கணக்காளரின்



# வாழ்த்துச் செய்தி

பொதுமக்களுக்கான பணிகள் சேவைகளை அவர்கள் வாழுகின்ற இடங்களிலேயே பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற அரச கொள்கைக்கு அமைவாக, வேலணை பிரதேசசெயலகம் இன்று பல தேவைகளையும் நிறைவேற்றக் கூடிய அடிப்படை வசதிகளை கொண்ட கட்டிடமாக புதுப்பொலிவுடன் பிரகாசித்து கொண்டிருக்கின்றது.

இப்பிரதேச செயலகத்தினால் தனித்துவமான சிறந்த சேவைகளை (Pure Public Goods And Service) முழுமையான வசதிகளை கொண்டிருக்காத சந்தர்ப்பத்திலும் கூட சேவைகளை வழங்கிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இப்புதிய கட்டடத்தொகுதியுடன் மேலும் சிறந்த சேவைகளை பிரதேசமக்களுக்கு வழங்குவதுடன் பல நிர்வாக அலகுகளும் ஒரே கூரையின் கீழ் செயற்படுவதன் மூலம் வினைத்திறனான, விளைபயன் மிக்க சேவையைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்கும், தொழில்நுட்ப அபிவிருத்தியில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கமைய புதிய புதிய தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்து வதற்கும் பொதுமக்கள் தமக்குரிய தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்வதற்கும் புதிய கட்டடத் தொகுதி வழிவகுக்கின்றது அந்த வகையில் இப்பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் எதிர் காலத்தில் மேலும் உன்னத நிலையை அடைவதற்கும் இத்திறப்புவிழா சிறப்பாக அமைவதற்கும் வேலணை பிரதேச செயலகப்பிரிவு மக்களுக்கான சேவையில் போற்றழைத்து, அறுகு போல் வேரூன்றி, மக்கள் குலத்திற்கே தன்நிழலைத்தரும் தன்மையாய் விளங்க வேண்டும்" என மனமார வாழ்த்துகிறேன்

**சி.குகதாஸ்**

*பிரதம கணக்காளர், மாவட்டச் செயலகம்*

*யாழ் மாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணை பிரதேச செயலரின்



# வாழ்த்துச் செய்தி

மாற்றம் ஒன்றே மாறாதது என்ற நிலைமைக்கேற்ப இன்று ஓர் புதிய உதயத்தினை பெறுவதற்தாக தீவுகள்தெற்கு பிரதேசம் தன்னை தயார்படுத்தி நிற்கும் இத்தருணம் வாழ்வின் மணித்துளிகளில் விசேஷமான ஓர் நொடிப்பொழுதேயாகும். இத்தகைய தருணத்திற்கு சான்றுபகரும் வகையில் வெளிவரவிருக்கும் இச்சிறப்பு மலர் ஓர் பொக்கிஷமேயாகும்.

இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பானது ஆரம்பிக்கப்பட்டு பல்வேறுபட்ட பரிமாணங்களை அடைந்து இன்று இத்தகைய நிலையை எட்டியிருக்கிறது. நாட்டு மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அவர்களை அபிவிருத்தி நோக்கி நகர்த்திச் செல்வதற்கும், நல்வழி நோக்கி அழைத்துச் செல்வதற்கும் அரசினுடைய குறிக்கோள்களையும் இலக்குகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்கும் மக்களோடு நெருங்கி உறவாடக்கூடிய பிரதேச செயலகங்களே அத்திவாரமாக விளங்குகின்றன.

தீவுகள் தெற்கு பிரதேசமானது தன்னகத்தே பல வளங்களையும் தனித்துவமான அடையாளங்களையும் சிறப்புக்களையும் கொண்டிருக்கின்றது. மக்களின் வாழ்வாதாரத்தினை கடல்வளமும் நிலவளமும் நிலை நிறுத்தி நிற்கும் வேளை தொழிற்துறையும் படிப்படியான முன்னேற்றத்தினை அடைந்து வருகின்றது. சமூகக் கட்டமைப்பிலும் கலாச்சார உறுதிப்பாட்டிலும் தனது ஸ்திரத்தன்மையை என்றும் தக்கவைத்துள்ள ஓர்பிரதேசமாகும். பல்வேறுபட்ட சூழ்நிலைகளால் பின் நிறுத்தப்பட்ட இப்பிரதேசமானது தனது சமூக பொருளாதார உச்ச அபிவிருத்தியினை அதி விரைவாக எட்டிப் பிடிக்கும் என்பது எனது கணிப்பாகும்.

தீவுகள் தெற்கு பிரதேச செயலகமானது கடந்த காலங்களில் பல இடர்பாடுகளினை சந்தித்த போதும் தனது சேவையினை என்றும் நிறுத்தாத வரலாறு கொண்டது. அதன் வழியில் இன்றும் பல அனர்த்தங்கள் எம்மை சந்தித்த போதும் மக்களுக்கான சேவையை உரிய நேரத்தில் எமது செயலகமும் உத்தியோகத்தர்களும் வழங்கி வந்திருக்கின்றனர். அதற்கு இத்தினத்தில் நன்றி கூறுவது பொருத்தமானதாகும். சூழ்நிலைகளே சிந்தனையை சிருஷ்டிப்பவையாகும். அந்த வகையில் பலரது கடின உழைப் பால் தோற்றம் பெற்றிருக்கும் எமது புதிய செயலகம் கண்ணியமானதும், அர்ப் பணிப்புடனானதும், இலகுவானதுமான சேவையினை உரியவர்களுக்கு வழங்க வழி அமைக்கும் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

மக்கள் மனம் விரும்பும் வகையில் பவித்திரமான சேவையினை வழங்குவோம் என எமது உத்தியோகத்தர்களின் துணையுடன் நான் உறுதிபடக் கூறுகின்றேன். புதிய கட்டிடத்தை அமைக்கும் செயற்றிட்டத்தின் மூலம் எமது செயலகத்திலான உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் இக் கட்டிடத்தினை உருவாக்குவதற்கான உழைத்த அனைத்து தரப்பினருக்கும் எமக்கான உதவிகளையும் வாழ்த்துக்களையும் வழங்கி நின்ற அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி கூறும் வேளை இச் சிறப்பு மலர் சிறப்புற உழைத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை வழங்கி நிற்கின்றேன்.

**மஞ்சுளாதேவி சதீஷன்**
*பிரதேச செயலர், வேலணை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணை பிரதேச சபை தவிசாளரின்



# வாழ்த்துச் செய்தி

தீவகம் தெற்கு பிரதேச செயலகத்திற்கு புதிய கட்டடம் அமைக்கப் பெற்று திறப்பு விழா காண்பதையிட்டு மன நிறைவடைகின்றேன். கடந்த கால அனர்த்தங்களின் விளைவாக அழிந்துபோன தீவகப் பிரதேச கட்டுமானங்கள் மீளவும் துரித கதியில் அபிவிருத்தியிலும் தன்நிறைவு நோக்கிலும் முன்தள்ளப்படுவதை கண்கூடாக கண்டுகொண்டிருக்கின்றோம்.

தீவகம் தெற்கு பிரதேச செயலகம் கடந்த காலத்தில் சிறிய கட்டடம் ஒன்றில் சிறந்த சேவையை வழங்கிநின்ற போதிலும் தற்போது விரிவாக்கப்பட்டுள்ள அரச சேவைகளை தீவக மக்களின் தேவைகளுக்கேற்ப நிறைவேற்றவேண்டிய தேவையும் அவை ஒருங்கிணைக்கப்பட்ட தாபனத்தின் கீழ் இயங்க வேண்டிய தேவையும் அதற்கான வசதி வாய்ப்புக்களை உருவாக்கி எமது மக்களின் அன்றாட மற்றும் அத்திய அவசிய சேவைகளைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தல் என்ற எண்ணக் கனவு இன்று நிறைவேற்றப்பட்டுள்ளதையிட்டு மனமகிழ்வு அடைகின்றேன்.


இக்கட்டட அமைப்புக்கும் திறப்புவிழாவிற்கும் அயராது உழைத்த அனை வருக்கும் எமது வாழ்த்தினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி.சிவராசா,**
*தவிசாளர், பிரதேச சபை*
*வேலணை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் உள்ளத்திலிருந்து





ஈழமணித் திருநாட்டின் வடபாலமைந்த யாழ் நகருக்கு அணியாக விளங்கும் தீவகம் வரலாற்று சிறப்பு மிக்க சில தீவுகளைக் கொண்டும் நிலவளம், கடல்வளம், பனை வளம் முதலிய வளங்களுடன் கலைப்பாரம்பரியங் களையும் கல்விப் பெருமைகளையும் வர்த்தக உயர்ச்சி களையும் கொண்டு விளங்குகின்றது. வேலணை பிரதேச பிரிவுக்குட்பட்ட தீவுகளின் ஆட்சி அலுவலகமான தீவுகள் தெற்கு பிரதேச செயலகத்தின் புதிய கட்டட திறப்புவிழாவையொட்டி இச் சிறப்புமலர் வெளியிடப்படுகின்றது.

இக் கட்டட திறப்புவிழாவையொட்டி ஓர் சிறப்புமலர் ஒன்று வெளியிடப்பட வேண்டும் என்ற பிரதேச செயலரினதும் ஏனைய உத்தியோகத்தர்களினதும் விருப்பு இதனூடாக நிறைவு பெறுகின்றது. இம் மலரினுள்ளே ஆசிச்செய்தி, வாழ்த்துச்செய்தி என்பதற்கப்பால் எம் பிரதேச செயலக உத்தியோகத்தர்களினதும், துறைசார்ந் தோரினதும் ஆக்கங்கள் இடம்பெறுகின்றன. பிரதேசக் கட்டுரைகள் என்ற வகையில் இப் பிரதேசத்தின் முக்கிய துறைசார்ந்த விடயங்களுடன் பிரதேச பிரிவுக்குட்பட்ட தீவுகளின் வரலாற்று விடயங்களையும் உள்வாங்கியிருக்கின்றோம். பொதுக் கட்டுரை, கவிதைகள் என மலர் விரிந்து செல்கின்றது. பிரதேசத்தின் முக்கிய இடங்களையும் வரலாற்று சுவடுகளையும், பிரதேச செயலக நிகழ்வுகளின் முக்கிய பதிவுகளையும் இம் மலரினுள்ளே நிழற்படங்களாக பூரணப்படுத்தியுள்ளோம்.

திறப்பு விழாவையொட்டிய சிறப்பு மலரை வெளியிடும் பாரிய பொறுப்பை ஒப்படைத்து எந்நேரமும் வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கிய பிரதேச செயலர் அவர்களுக்கு எமது தலையாய நன்றிகள். மேலும் மலர்ப் பணியினை செவ்வனே ஆற்றுவதற்கு உறுதுணையளித்த பிரதித்திட்டமிடல் பணிப் பாளர், கணக்காளர், ஆளணி உதவியாளருக்கும் எம் நன்றிகள். மேலும் மலர் சிறப்புற அமைய உதவியளித்த மலர்குழு செயலாளர், பொருளாளர் மற்றும் மலர்குழு வினருக்கும் எம் அன்பான நன்றிகள்.

மேலும் இம்மலருக்குரிய ஆசிச்செய்தி, வாழ்த்துச்செய்தியினை வழங்கியவர் களுக்கும் மலருக்குரிய ஆக்கங்களை தந்துதவியவர்களுக்கும் நிழற்படங்களை எடுப் பதற்கு உதவியளித்த படப்பிடிப்பாளர் நயினை எம்.குமரன் மற்றும் கொனிக்கா கலர் லாப் நிறுவனத்தினருக்கும் மலருக்கு விளம்பரங்களை வழங்கியவர்களுக்கும் நிதியுதவி நல்கியவர்களுக்கும் எமது நன்றிகள். மேலும் அச்சுக்கலையால் நூலழகை மிளிரவைத்து அழகுற அச்சிட்டுத்தந்த நல்லூர் மதி கலர்ஸ் பிறிண்டேர்ஸ் நிறுவனத்திற்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

பிரதேச செயலகத்தின் புதிய கட்டட திறப்புவிழா சிறப்பு மலராக, பிரதேசம் பற்றிய ஆவணப் பதிவாக உங்கள் கரங்களில் தவழும் இம்மலர் பற்றிய ஆக்கபூர்வமான கருத்துக்களையும் விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம். இது எதிர்காலத்தில் பயனுடையதாக இருக்கும் என கருதி உங்களிடமிருந்து விடைபெறுகின்றோம்.

**சி.சித்தார்த்தன்**
*அபிவிருத்தி உத்தியோகத்தர்,*
*பிரதேச செயலகம், வேலணை.*


**த.பாலமுருகன்**
*அபிவிருத்தி உத்தியோகத்தர்,*
*பிரதேச செயலகம், வேலணை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணை பிரதேச செயலக பிரிவின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் வரைபடம்

# Velanai Divisional Secretariat Grama Niladhari Divisions Map




| Province | Northern |
|---|---|
| District | Jaffna |
| D.S.Division | Island South Velanai |
| L.G.D | Velanai |
| Z.E.O | Velanai |
| Police Area | Kayts |

**Legend**

- Mandaitivu East, 7
- Mandaitivu West, 8
- Mandaitivu South, 9
- Allaippiddy, 10
- Mankumpan, 11
- Velanai North, 12
- Velanai North East, 13
- Velanai East, 14
- Velanai South East, 15
- Velanai Center East, 16
- Velanai South, 17
- Velanai Centre West, 18
- Velanai West, 19
- Saravanai East, 20
- Saravanai West, 21
- Pungudutivu North East, 22
- Pungutivu East, 23
- Pungudutivu South East, 24
- Pungudutivu East South, 25
- Pungudutivu South, 26
- Pungudutivu North, 27
- Pungudutivu Centre North, 28
- Pungudutivu South West, 29
- Pungudutivu Centre West, 30
- Pungudutivu Centre East, 31
- Pungudutivu North West, 32
- Pungudutivu West, 33
- Nainativu North, 34
- Nainativu Centre, 35
- Nainativu South, 36

L.U.P.A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலர்




## திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன்

பிரதேச செயலர் – வேலணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாக்கக்குழு



**இருப்பவர்கள்:-**

(இ–வ) – திரு.த.பாலமுருகன் (இதழாசிரியர்), திரு.கு.சந்திரா, திருமதி.மீரா திசநாயகம்பிள்ளை (DDP–*உபதலைவர்*), திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் (DS - தலைவர்), திரு.ப.கஜேந்திரன் (Former.Acct - *உபதலைவர்*), திரு.க.மாணிக்கதாஷன் (S.A), திரு.சி.இரத்தினேஸ்வரன்.

**இரண்டாம் வரிசையில் நிற்பவர்கள்:-**

(இ–வ) – திரு.பி.ஜெனின், திரு.சி.ஜெயசீலன், திரு.செ.சண்முகலிங்கம், திரு.செ.சிவா, செல்வி.க.பிரமதீஸ்வரி, செல்வி.ந.நகுலராணி, செல்வி.த.லேறாஜி, திருமதி.இ.மேகலைச்செல்வி, திருமதி.தே.துவாரகா (உப செயலாளர்), திரு.ம.சசிகாந், திரு.இ.யோகேஸ்வரன், திரு.கு.கருணாநிதி.

**முதலாம் வரிசையில் நிற்பவர்கள்:-**

(இ–வ) – செல்வி.த.கௌரி, திரு.இ.ஜெகதீஸ்வரன் (பொருளாளர்), திரு.சி.சித்தார்த்தன் (இதழாசிரியர்), திரு.நி.ஹரன், திரு.இ.குலசிங்கம் (செயலாளர்), திரு.ஆ.இராகுலன், திரு.த.ஜயந்தன், திரு.ஜெ.மதனராஜன், திரு.கு.ஜெயக்காந்தன், திரு.தி.கோகுலரூபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர்கள்



**இருப்பவர்கள்:–**

(இ–வ) – திரு.சி.இரத்தினேஸ்வரன், திரு.இ.குலசிங்கம், திரு.இ.ரமணன் *(கணக்காளர்)*, திருமதி.மீரா திஸநாயகம்பிள்ளை *(பிரதி திட்டமிடல் பணிப்பாளர்)*, திரு.சி.ஜெயகாந்த் *(உதவி பிரதேச செயலா*
திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் *(பிரதேச செயலர்)*, திரு.ப.கஜேந்திரன் *(முன்னாள் கணக்காளர்)*, திரு.க.மாணிக்கதாஷன் *(ஆளணி உதவியாளர்)*, திரு.கு.சந்திரா, திரு.இ.யோகேஸ்வரன்

**இரண்டாம் வரிசையில் நிற்பவர்கள்:–**

(இ–வ) – திரு.இ.ரமேஸ், திரு.செ.சிவா, திருமதி.ப.இராஜேஸ்வரி, செல்வி.க.சிந்துஜா, திருமதி.க.பத்மஸ்ரீ, திருமதி.நா.ஸ்ரீரங்கா, திருமதி.தீ.பிரதீபா, செல்வி.த.பிரமதீஸ்வரி, திருமதி.கி.வினோதினி, திருமதி.ஜெ.மேகலா, செல்வி.அ.தேவகி, செல்வி.ச.ஜனகா, செல்வி.சு.தனுருத்ரி

**முதலாம் வரிசையில் நிற்பவர்கள்:–**

(இ–வ) – திருமதி.க.பரமேஸ்வரன், திரு.ம.சசிகாந், திரு.கா.கணேசலிங்கம், திரு.க.பிரியலக்சன், திரு.வ.கோகுலதாஸ், திரு.செ.சுதர்சன், திரு.க.வாகீசன், திரு.தி.கோகுலரூபன், திரு.சோ.பத்மரூபன், திரு.ந.உதயராஜ், திரு.பிரான்சிஸ்சேவயர், திரு.நா.பிரியலக்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலக உத்தியோகத்தர்கள்



**இருப்பவர்கள்:–**

(இ–வ) – திருமதி.கு.தேவிகா *(பிரதம முகாமைத்துவ உதவியாளர்)*, திரு.செ.சண்முகலிங்கம் *(நிதி உதவியாளர்)*, திரு.இ.ரமணன் *(கணக்காளர்)*, திருமதி.மீரா திசநாயகம்பிள்ளை *(பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்)*, திரு.சி.ஜெயகாந்த் *(உதவி பிரதேச செயலர்)*, திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் *(பிரதேச செயலர்)*, திரு.ப.கஜேந்திரன் *(முன்னாள் கணக்காளர்)*, திரு.க.மாணிக்கதாசன் *(ஆளணி உதவியாளர்)*, திரு.சி.நிஷாந்தன் *(மேலதிக மாவட்ட பதிவாளர்)*

**முதலாம் வரிசையில் நிற்பவர்கள்:–**

(இ–வ) – திரு.த.நிமலராஜன், திருமதி.அ.கோவர்த்தனி, திருமதி.சு.தாரணி, திருமதி.நி.வித்தியா, திருமதி.தீ.தட்ஷாயினி, திருமதி.ப.சுதர்சனா, திரு.பி.ஜி.ஜ.எஸ்.ஜெயதிலக, திரு.தோ.லலித்

**இரண்டாம் வரிசையில் நிற்பவர்கள்:**

திரு.ப.நல்லைக்குமரன், திரு.ஜோ.ஜோகதாஸ், திரு.சி.பார்த்தீபன், திரு.க.சுரேஸ்குமார், திரு.ஜெ.மதனராஜன், திரு.மு.இம்ரான், திரு.ப.அம்பிகைபாகன், திரு.க.சண்முகநாதன், திரு.பொ.குணபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருப்பவர்கள்:-**

(இ-வ) – திரு.இ.ரமணன் (Acct), திருமதி.தி.மீரா (DDP), திரு.சி.ஜெயகாந்த் (ADS), திருமதி.ச.மஞ்சுளாதேவி (DS), திரு.ப.கஜேந்திரன் (Former Acct), திரு.க.மாணிக்கதாசன் (SA)

**முதலாம் வரிசையில் நிற்பவர்கள்:-**

(இ-வ) – செல்வி.தி.காயத்திரி, செல்வி.சிந்துஜா, செல்வி.த.லேறாஜி, செல்வி.கெ.பிரியந்தி, திருமதி.கா.தவநிதி, திருமதி.கா.சுரேகா, செல்வி.ந.அருணதர்சினி, செல்வி.க.சுஜாத்தா, திருமதி.மு.சயந்தினி, திருமதி.த.விஜிதா, செல்வி.ப.சுவர்ணலதா, திருமதி.சி.கோகுலவாணி

**இரண்டாம் வரிசையில் நிற்பவர்கள்:-**

(இ-வ) – திரு.சு.சதீஸ்காந், திரு.மி.கரன், திருமதி.மோ.நிசாந்தினி, திருமதி.பா.சுகந்தா, செல்வி.க.தர்சினி, செல்வி.வி.துஷாஜினி, திருமதி.கு.ஜெயசுகி, திரு.உ.திருக்குமரன், திரு.ச.சுகந்தராஜ், திரு.இ.கங்கேஸ்வரன்

**மூன்றாம் வரிசையில் நிற்பவர்கள்:-**

(இ-வ) – திரு.ந.திருச்செந்தூரான், திரு.இ.ஜெயதீஸ்வரன், திரு.சி.சித்தார்த்தன், திரு.ர.ரவிராஜ், திரு.இ.கிருபாகரன், திரு.ந.ரதிக்குமார், திரு.சு.அருட்செல்வன், திரு.கு.கிரீசன், திரு.ச.சாருதர்சன், திரு.க.தேவபாலன்

# வெளிக்கள உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள்:-

(இ-வ) - திரு.இ.ஜெகதீஸ்வரன், திரு.ப.ஞானபண்டிதன், திருமதி.இ.மேகலைச்செல்வி, திருமதி.தி.மீரா (DDP), திருமதி.ச.மஞ்சுளாதேவி (DS), திரு.சி.ஜெயகாந்த் (ADS), திரு.இ.ரமணன் (ACCT), திரு.ப.கஜேந்திரன் (Former Acct.), திரு.க.மாணிக்கதாசன் (SA)

முதலாம் வரிசையில் நிற்பவர்கள்:-

(இ-வ) - திரு.மயூரன், திரு.டி.பி.குணரட்ணம், திரு.பெ.லம்போதரன், திரு.வே.கமலேந்திரன், திரு.ந.செல்வச்சந்திரன், திரு.ச.யசிதரன், திருமதி.தே.துவாரகா, திருமதி.சு.லேனுகாராணி, செல்வி.த.கௌரி, செல்வி.இ.குந்தவி, திருமதி.ம.மாதங்கி, செல்வி.பூ.அன்பரசி, திருமதி.ஜெ.பரிமளாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்



**இருப்பவர்கள்:–**
(இ–வ) – திரு.இ.ரமணன் (Acct), திருமதி.தி.மீரா திசநாயகம்பிள்ளை (DDP), திரு.சி.ஜெகாந்த் (ADS), திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் (DS), திரு.ப.கஜேந்திரன் (Former Acct), திரு.க.மாணிக்கதாஷன் (SA)

**முதலாம் வரிசையில் நிற்பவர்கள்:–**
(இ–வ) – செல்வி.தி.தவரூபி, செல்வி.யூட்மேரி, திருமதி.சி.நிறஞ்சினி, திருமதி.கே.சைலஜா, திருமதி.கி.பத்மலோஜினி, செல்வி.த.யாழினி, திருமதி.பி.சித்திராதேவி, செல்வி.வி.சுதர்சனா

**இரண்டாம் வரிசையில் நிற்பவர்கள்:–**
(இ–வ) – திருமதி.தே.குகப்பிரியா, திருமதி.இ.கவிதா, திருமதி.எஸ்.எ.ஆர்.லின்டா, திருமதி.கு.கஜேந்தினி, திருமதி.ச.சுஜாத்தா, திருமதி.ஹே.ஜெயந்திமாலா, திருமதி.வி.பிரியா, செல்வி.சி.றெசாந்தி, செல்வி.தே.மேரி நிறோசினி

**மூன்றாம் வரிசையில் நிற்பவர்கள்:–**
(இ–வ) – திரு.ம.சுதர்சன், திரு.த.பாலமுருகன், திரு.வி.பியந்தன், திரு.ஆ.சசிகரன், திரு.அ.மதீஷன், திரு.த.ஜயந்தன், திரு.வி.ஜெனிங்ஸ் வில்லியம்ஸ், திரு.இ.சுகிர்தன், திரு.பி.ஜெனின், திரு.சு.கிருபதயாபரன், திரு.இ.றொசான் சாந்தகுமார், திரு.க.ஸ்ரீகரன்

**நான்காம் வரிசையில் நிற்பவர்கள்:–**
(இ–வ) – திரு.ம.சுதன், திரு.அ.லிங்கேசன், திரு.ம.ஜோன் றைடின், திரு.இ.ஜெகன், திரு.ஆ.இராகுலன், திரு.நா.கஜேந்திரா, திரு.எஸ்.ஏ.மொ.இ.ஜெயரஞ்சன், திரு.க.செந்தூரன், திரு.சி.ரவின்சன், திரு.இ.இந்திரமோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள்:–

(இ–வ) – திருமதி.பி.மேரிஜெனிதா, செல்வி.நா.நகுலராணி, திரு.இ.ரமணன் (Acct), திருமதி.தி.மீரா (DDP), திரு.சி.ஜெயகாந்த் (ADS), திருமதி.ச.மஞ்சுளாதேவி (DS), திரு.ப.கஜேந்திரன் (Former Acct), திரு.க.மாணிக்கதாசன் (SA), திரு.சி.ஜெயசீலன், திரு.கு.கருணாநிதி, திரு.இ.தவமோகன்

முதலாம் வரிசையில் நிற்பவர்கள்:–

(இ–வ) – திருமதி.ர.அமுதினி, செல்வி.கா.ராதிகா, திருமதி.செ.சசிமலர், செல்வி.சி.பிரியங்கனி, திருமதி.சு.மலர்விழி, திரு.யூ.மீராபரமேஸ், செல்வி.உ.விதுஷா, திருமதி.க.சுமித்திரா, செல்வி.சொ.தர்சினி, திருமதி.பு.தனுசா, திருமதி.ர.மல்லிகாதேவி, திருமதி.ஜெ.சுபாசினி, திருமதி.ச.மரியகஷில்டா

இரண்டாம் வரிசையில் நிற்பவர்கள்:–

(இ–வ) – திருமதி.ஜெ.அன்பரசி, திருமதி.வெ.பு.எட்விசா, திருமதி.லோ.அஸ்மிலா, திருமதி.கோ.வித்தியா, திருமதி.து.உஷாநந்தினி, செல்வி.பொ.சர்மிலா, திருமதி.பா.தயானி, செல்வி.ம.ஜேன்பெவர்லி, திருமதி.சு.இந்திராகாந்தி, திருமதி.கோ.பிரியதர்சினி, திருமதி.கு.சூரியகலா, திருமதி.ம.பிறேமாவதி

மூன்றாம் வரிசையில் நிற்பவர்கள்:–

(இ–வ) – திரு.க.விஜேந்திரன், திரு.ஏ.சசிகரன், திரு.ஜெ.யுகந்தன், திரு.சி.கிங்சன், திரு.பி.டெனிஸ்காந், திரு.ச.சிறீதரன், திரு.க.ஞானகரன், திரு.இ.தவரூபன், திரு.பா.கோபிநாத், திரு.வை.சுதாகர்

நான்காம் வரிசையில் நிற்பவர்கள்:–

(இ–வ) – திரு.க.கிருஸ்ணபாபு, திரு.நா.சிவகுலசிங்கம், திரு.நா.சாந்தரூபன், திரு.தெ.தவநாயகம், திரு.ஒ.கஜேந்திரன், திரு.க.பிரபாகரன், திரு.க.பஞ்சலிங்கம், திரு.வ.கிரிதரன், திரு.அ.வேதநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்ட அணி - 2013



**இருப்பவர்கள்:-**
(இ-வ) – திரு.நா.கஜேந்திரா, திரு.ச.யசிதரன் *(விளையாட்டு உத்தியோகத்தர்)*, திருமதி.மீரா திசநாயகம்பிள்ளை *(பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்)*, திருமதி. மஞ்சுளாதேவி சதீஷன் *(பிரதேச செயலர்)*, திரு.ப.கநேந்திரன் *(கணக்காளர்)*, திரு.க.மாணிக்கதாஷன் *(ஆளணி உதவியாளர்)*, திரு.ஜெ.மதனராஜன் *(அணித்தலைவர்)*

**நிற்பவர்கள்:-**
(இ-வ) – திரு.ந.ரதிகுமார், திரு.சி.சித்தார்த்தன், திரு.சோ.பத்மரூபன், திரு.க.சுரேஸ்குமார், திரு.தி.கோகுலரூபன், திரு.க.ஞானகரன், திரு.ச.ஸ்ரீதரன், திரு.இ.தவரூபன், திரு.அ.லிங்கேசன், திரு.த.ஜயந்தன், திரு.சி.ரவின்சன், திரு.நி.ஹரன், திரு.சி.பார்த்தீபன், திரு.க.தேவபாலன், திரு.சு.சதீஸ்காந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் துடுப்பாட்ட அணி - 2013



இருப்பவர்கள்:-

(இ-வ) - திரு.ச.யசிதரன் *(விளையாட்டு உத்தியோகத்தர்)*, திருமதி.மீரா திசநாயகம்பிள்ளை *(பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்)*, திருமதி. மஞ்சுளாதேவி சதீஷன் *(பிரதேச செயலர்)*, திரு.ப.கந்திரன் *(கணக்காளர்)*, திரு.க.மாணிக்கதாஷன் *(ஆளணி உதவியாளர்)*, செல்வி.மோ.நிஷாந்தினி *(அணித்தலைவர்)*

நிற்பவர்கள்:-

(இ-வ) - செல்வி.ரி.ஜே.எம்.நிரோசினி, செல்வி.கா.ராதிகா, திருமதி.ர.அமுதினி, திருமதி.த.விஜிதா, திருமதி.கே.ஜெயந்திமாலா, செல்வி.த.லேறாஜி, செல்வி.சி.பிரியங்கனி, செல்வி.தி.தவரூபி, செல்வி.சி.றெசாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்ட அணி - 2013



இருப்பவர்கள்:-

(இ-வ) - திரு.ஜெ.மதனராஜன், திரு.ச.யசிதரன் *(விளையாட்டு உத்தியோகத்தர்)*, திருமதி.மீரா திசநாயகம்பிள்ளை *(பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்)*, திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் *(பிரதேச செயலர்)* திரு.ப.கஜேந்திரன் *(கணக்காளர்)*, திரு.க.மாணிக்கதாஷன் *(ஆளணி உதவியாளர்)*, திரு.சி.பார்த்தீபன் *(அணித்தலைவர்)*

நிற்பவர்கள்:-

(இ-வ) - திரு.தி.கோகுலரூபன், திரு.வி.ஜெனிங்ஸ் வில்லியம், திரு.க.சுரேஸ்குமார், திரு.கி.சுகந்தராஜ், திரு.க.ஞானகரன், திரு.பா.கோபிநாத், திரு.சு.ஜெயரஞ்சன், திரு.ச.ஸ்ரீதரன், திரு.இ.தவரூபன், திரு.அ.லிங்கேசன், திரு.சி.ரவின்சன், திரு.தி.ஹரன், திரு.பெ.லம்போதரன், திரு.பெ.ஜெனின், திரு.பி.டெனிஸ்காந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரப்பந்தாட்ட அணி - 2013



**இருப்பவர்கள்:-**

(இ-வ) - திரு.த.பாலமுருகன், திரு.ச.யசிதரன் *(விளையாட்டு உத்தியோகத்தர்)*, திருமதி.மீரா திசநாயகம்பிள்ளை *(பிரதித்திட்டமிடல் பணிப்பாளர்)*, திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் *(பிரதேச செயலர்)*, திரு.ப.கஜேந்திரன் *(கணக்காளர்)*, திரு.க.மாணிக்கதாஷன் *(ஆளணி உதவியாளர்)*, திரு.சி.ரவின்சன் *(அணித் தலைவர்)*

**நிற்பவர்கள்:-**

(இ-வ) - திரு.பி.ஜெனின், திரு.த.ஜயந்தன், திரு.சு.ஜெயரஞ்சன், திரு.வீ.ஜெனிங்ஸ் வில்லியம், திரு.இ.ஜெகதீஸ்வரன், திரு.ந.ரதிகுமார், திரு.ஜெ.மதனராஜன், திரு.சி.பார்த்தீபன், திரு.பா.கோபிநாத், திரு.செ.சண்முகலிங்கம், திரு.வி.பியந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பந்தாட்ட அணி - 2013



**இருப்பவர்கள்:-**
(இ-வ) - திரு.ச.யசிதரன் *(விளையாட்டு உத்தியோகத்தர்)*, திருமதி.மீரா திசநாயகம்பிள்ளை *(பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்)*, திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் *(பிரதேச செயலர்)*, திரு.ப.கஜேந்திரன் *(கணக்காளர்)*, திரு.க.மாணிக்கதாஷன் *(ஆளணி உதவியாளர்)*, செல்வி.த.லேறாஜி *(அணித் தலைவி)*

**நிற்பவர்கள்:-**
(இ-வ) - செல்வி.தே.மேரி நிறோசினி, திருமதி.கா.சுரேகா, செல்வி.கா.ராதிகா, திருமதி.ர.அமுதினி, திருமதி.மோ.நிஷாந்தினி, திருமதி.ஹே.ஜெயந்திமாலா, திருமதி.த.விஜிதா, செல்வி.தி.காயத்திரி, செல்வி.சி.பிரியங்கனி, செல்வி.தி.தவரூபி, செல்வி.சி.றெசாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரங்க அணி - 2013



**இருப்பவர்கள்:-**

(இ-வ) - திரு.ச.யசிதரன் *(விளையாட்டு உத்தியோகத்தர்)*, திருமதி.மீரா திசநாயகம்பிள்ளை *(பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்)*, திருமதி. மஞ்சுளாதேவி சதீஷன் *(பிரதேச செயலர்)*, திரு.ப.கஜேந்திரன் *(கணக்காளர்)*, திரு.க.மாணிக்கதாஷன் *(ஆளணி உதவியாளர்)*, திரு.த.செல்வகுமார் *(அணித்தலைவர்)*

**நிற்பவர்கள்:-**

(இ-வ) - திரு.இ.ஜெகதீஸ்வரன், திரு.இ.இந்திரகுமார், திரு.க.பஞ்சலிங்கம், திரு.கு.கருணாநிதி, திருமதி.பா.தயானி, திருமதி.தி.தட்ஷாயினி, செல்வி.ம.ஜேன்பெவர்லின், திருமதி.மோ.நிசாந்தினி, திரு.அ.வேதநாயகம், திரு.இ.கிருபாகரன், திரு.சி.சித்தார்த்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூப்பந்தாட்ட அணி - 2013



இருப்பவர்கள்:-
(இ-வ) - திரு.ச.யசிதரன் *(விளையாட்டு உத்தியோகத்தர்)*, திருமதி.மீரா திஷநாயகம்பிள்ளை *(பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்)*, திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் *(பிரதேச செயலர்)*, திரு.ப.கஜேந்திரன் *(கணக்காளர்)*, திரு.க.மாணிக்கதாஷன் *(ஆளணி உதவியாளர்)*

நிற்பவர்கள்:-
(இ-வ) - திரு.தி.தோகுலரூபன், திரு.சோ.பத்மரூபன், திரு.ஜெ.மதனராஜன், திரு.இ.ஜெகதீஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரம் அணி - 2013



**இருப்பவர்கள்:-**

(இ-வ) – திரு.ச.யசிதரன் *(விளையாட்டு உத்தியோகத்தர்)*, திருமதி.மீரா திஷநாயகம்பிள்ளை *(பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்)*, திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் *(பிரதேச செயலர்)*, திரு.ப.கஜேந்திரன் *(கணக்காளர்)*, திரு.க.மாணிக்கதாஷன் *(ஆளணி உதவியாளர்)*, திரு.நா.கஜேந்திரா *(அணித்தலைவர்)*

**நிற்பவர்கள்:-**

(இ-வ) – திரு.சி.ரவின்சன், திரு.ஜெ.மதனராஜன், திரு.த.ஜயந்தன், திரு.சு.சதீஸ்காந், திரு.சோ.பத்மரூபன், திருமதி.ப.தயானி, திருமதி.தே.துவாரகா, செல்வி.த.லேறாஜி, திருமதி.த.விஜிதா, திருமதி.மோ.நிஷாந்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியஸ்தர் சபை



**இருப்பவர்கள்:–**


(இ–வ) – திரு.நா.நாகராசா, திரு.சு.கு.சண்முகலிங்கம் *(தவிசாளர்)*, திருமதி.மீரா திஷநாயகம்பிள்ளை *(பிரதி திட்டமிடல் பணிப்பாளர்)*, திருமதி.மஞ்சுளாதேவி சதீசன் *(பிரதேச செயலர்)*, திரு.ப.கஜேந்திரன் *(கணக்காளர்)*, திரு.க.மாணிக்கதாசன் *(ஆளணி உதவியாளர்)*

**நிற்பவர்கள்:–**

(இ–வ) – திரு.செ.சிவலோகநாதன், திரு.ஆ.கந்தையா, திரு.வீ.செல்வராஜன், திரு.க.கனகேஸ்வரன், திரு.க.குமரேஸ்வரநாதன், திருமதி.பா.லோகேஸ்வரி, செல்வி.பொ.ஜமுனாதேவி, செல்வி.செ.எல்சி செல்வவதனா, திருமதி.கோ.அமுல்யகரன் *(பிரதேச செயலக எழுதுனர்)*, திரு.சி.செல்வராசா, திரு.பொ.ஜெகதீவரன் *(அலுவலக உதவியாளர்)*, திரு.பொ.பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முன்னாள் பிரதேச செயலர்கள்



பிரதேச செயலர்
திரு.ஆ.மகாலிங்கம்
1984 – 1985



பிரதேச செயலர்
திருமதி மைதிலி சோமசுந்தரம்
1985 – 1986



பிரதேச செயலர்
திரு.சி.சடாச்சர சண்முகதாஸ்
1986 – 1987



பிரதேச செயலர்
திரு.நா.தனபாலசிங்கம்
1987 – 1991



பிரதேச செயலர்
திரு.ஆ.தியாகராசா
1991 – 1998 (தீவகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முன்னாள் பிரதேச செயலர்கள்



பிரதேச செயலர்
திரு. இ. இளங்கோவன்
1991 - 1994




பிரதேச செயலர்
திருமதி. ரூபினி வரதலிங்கம்
1993–1994



பிரதேச செயலர்
திரு. க. குணராசா
1994 - 1995



பிரதேச செயலர்
திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல்
1995 - 1996



பிரதேச செயலர்
திரு. செ. இரத்தினம்
1998 - 2002



பிரதேச செயலர்
திரு. மு. நந்தகோபாலன்
2003 - 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலக புதிய கட்டிடத் திறப்பு விழா - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேசக் கட்டுரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவுகள் தெற்கு நிர்வாகம் ஓர் பார்வை

திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன்
பிரதேச செயலர்,
வேலணை.

***தீவகமும் ஐரோப்பியர்களின் நிர்வாகமும்***

உலக வரைதளத்தில் பல்வேறுபட்ட நிர்வாக அலகுகள் நிர்வகிக்கப்பட்டு மனிதர் களை மனிதர்களாக வாழ வைக்கப்படக் கூடிய கட்டமைப்புக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோற்றம் பெற்று விட்டன. இக் கட்டமைப்புக்கள் எம் நாடான இலங்கையிலும் தோற்றம் பெற்று பல்வேறுபட்ட நிர்வாக முறைகள் நடைபெற்று அவை காலத்துக்கு காலம் மாற்றம் பெற்று வருகின்றன. இலங்கை நிர்வாக வரலாற்றில் யாழ்ப்பாணப் பிரதேசம் தனித்துவமான ஓர் இடத்தை வகித்து நிற் கின்றது. யாழ் குடாநாட்டின் நிர்வாக அலகு களில் தீவுகள் தெற்கு நிர்வாக அலகும் கணிச மான பங்கினையாற்றி வருகின்றது. 1619 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரால் கைப்பற்றும் வரை யாழ்ப்பாணமும் தீவகமும் ஒரே வகையான நிர்வாக முறையின் கீழ் இருந்தமைக்கான ஆதாரங்கள் உண்டு. இவ் நிர்வாக முறையில் ஊர்ப் பிரதானிகள் மக்களிடம் இறைவரி சேகரித்து அரசனிடம் கையளிக்கும் நடைமுறை இருந்து வந்தது. போர்த்துக்கேயர் ஆட்சியில் யாழ்ப்பாணமும் தீவுப்பற்றும் 32 கோவில் பற்றுக்களாக பிரிக்கப் பட்டு வரி சேகரிப்பு முறை போர்த்துக் கேயரினால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. தீவகத்தைப் பொறுத்த மட்டில் 6 கோவில் பற்றுக் களாக பிரிக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது.

போர்த்துக்கேயரை தொடர்ந்து ஒல்லாந்தர் ஆட்சிக்கு வந்த போது அவர்களும் போர்த்துக்கேயரைப் போலவே தீவகத்தை 6 கோவில் பற்றுக்களாக பிரித்து வரி அறவிட்டு வந்ததோடு முதலில் கோவில் பற்றுக்குள் உள்ளடங்காத மண்டைதீவு, அல்லைப்பிட்டி போன்ற பிரதேசங்களையும் கோவில் பற்றுக்குள் உள்வாங்கிக் கொண்டனர். ஒல்லாந்தர்களால் இத்தீவுகளுக்கு இட்டு அழைக்கப்பட்ட பெயர்களே இப்பொழுது ஆங்கிலத்தில் இத்தீவுகளுக்கான பெயர்களாக இடம் வகிக்கின்றது.

ஆங்கிலேயர்களால் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய போதும் யாழ்ப்பாணத்தினை உடனடியாக தமது நிர்வாக கட்டமைப்புக்குள் கொண்டு வர முடியவில்லை. 1815 இல் கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்ட பின்னரே நிர்வாக முறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. தொடர்ந்து 1833 ஆம் ஆண்டு இலங்கை முழுவதிற்கும் ஆங்கிலேயர்கள் ஒரு பெரும் நிர்வாக கட்டமைப்பினைக் கொண்டு வந்த தோடு அவர்களின் ஆட்சியின் கீழ்பட்ட நிர் வாகம் அரசாங்க அதிபர், மணியகாரன், உடையார், கிராமத் தலைவர் என்ற பொறி முறையில் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. வேலணை பிரதேசம் மணியகாரனால் நிர்வகிக்கப்பட்ட அதேவேளை மண்டைதீவு அல்லைப்பிட்டி பிரதேசங்கள் வேலணையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்ததாக அறிய முடி கின்றது. இதேவேளை அல்லைப்பிட்டியில் உடையார் நிர்வாகத்தினை மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. வேலணையின் வழி வந்த மணியகாரன்களில் கடைசியாக சோம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர மணியகாரன் நிர்வாகத்தினை மேற் கொண்டு வந்ததோடு இவரது இல்லம் வேலணை 5 ஆம் வட்டாரத்தில் அமைந்திருந்ததாகவும் இது 1990 ஆம் ஆண்டளவில் அழிந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. பிற்பாடு 1945 இல் மணியகாரன் என்ற பதவிக்குப் பதிலாக பிரிவுக் காரியதிகாரி என்ற பதவி அறிமுகமாகியது.

### சுதந்திர இலங்கையின் நிர்வாகம்

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு சோல்பரி யாப்பின் கீழ் சிறியள விலான மாற்றம் நிர்வாக கட்டமைப்பில் ஏற் படுத்தப்படுத்தப்பட்டு அரசாங்க அதிபர் முறை, காரியாதிகாரி முறை, கிராம தலைமைக் காரர் முறை என்பன தொடர்ந்து வந்ததோடு 1955 ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சியில் வழிவந்த மாகாண கச்சேரி நிர்வாகத்தினுடைய அரசாங்க அதிபர் பதவி நிறுத்தப்பட்டு மாவட்ட அடிப் படையில் நிர்வாகத்தினை மேற்கொள்வதற்காக அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்பட்டனர். தீவகம் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் நிர்வாகத்திற்கு கீழ் நிர்வாகம் செய்யப்பட்டது. தீவுகள் முழுவதற்குமான தலையாய காரியாதி காரி காரியாலயம் ஊர்காவற்றுறையில் இயங்கி வந்தது. இதுவரை காலமும் இலங்கையில் சிவில் சேவை முறை நடை முறையில் இருந்து வந்ததுடன் 1972 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவை முறை அறிமுகப்படுத்தப்பட்டமையின் பின் இறைவரி உத்தியோகத்தர் பிரிவு முறை நீக்கப்பட்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவு முறை நடைமுறைப் படுத்தப்பட்டது. இக்காலப்பகுதியில் 1971ம் ஆண்டு ஊர்காவற்றுறை காரியதிகார காரி யாலயம் நிர்வாக இலகு கருதி மூன்று பிரிவு களாக பிரிக்கப்பட்டது. ஊர்காவற்றுறையில் இருந்து நெடுந்தீவு வேலணை என்ற இரண்டு பிரிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டு புதிய நிர் வாக அலகு தோற்றம் பெற்றது.

### தீவுகள் தெற்கு

வேலணை காரியதிகாரியின் நிர்வாக அலகுக்குள் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண் கும்பான், சரவணை, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய பிரதேசங்கள் உள்வாங்கப் பட்டன. இது 98.4 சதுர கிலோ மீற்றர் பரப் பளவினைக் கொண்டிருந்தது. நெடுந்தீவு தனி யான காரியாதிகாரி காரியாலயமாக ஆக்கப்பட்டது.

1971 ம் ஆண்டு வேலணை காரியதி காரி காரியாலயம் ஒரு தற்காலிக இடத்தில் கிராம சபை மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு இருந்தாலும் ஊர்காவற்றுறையின் முதன்மை குறையாது தொடர்ந்தும் பொலிஸ் நிலையம், நீதிமன்றம், பிரதான வைத்தியசாலை என்பன அங்கு இருந்தே சிறப்பித்தன.

வேலணை புதிய காரியதிகாரி காரியாலயம் உருவான காலப்பகுதியில் 7 கிராமத் தலைவர்களை கொண்ட பிரதேச மாகவே இருந்தது. இதனுள் வேலணை இரண்டு கிராம தலைமைகாரர்களையும் புங்குடுதீவு இரண்டு கிராம தலைமைகாரர்களையும் நயினாதீவு அல்லைப்பிட்டி, மண்டைதீவு என்பன ஒரு கிராம தலைமைகாரர்களையும் கொண்டதாக இயங்கி வந்த வேளை வேலணையின் முதலாவது காரியதிகாரியாக முருகுப்பிள்ளை கார்த்திகேசு செயலாற்றி வந்தார். இவ் வேளையில் வேலணையில் காரியதிகாரி காரியாலயம் ஒன்று நிரந்தரமாக அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்ட போது இதற்கு தேவையான காணி உடனடியாக கொள் வனவு செய்யப்பட தீர்மானிக்கப்பட்டு மண்டை தீவு சுப்பிரமணியம் என்பவரிடம் இருந்து 33000 ரூபா பெறுமதிக்கு 11 பரப்பு காணி கொள்வனவு செய்யப்பட்டது. இதில் புதிதாக கட்டடம் அமைக்கப்பட்டு 1973 ம் ஆண்டு 9 ம் மாதம் 21 ஆம் திகதி அரசாங்க நிர்வாகம், உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் நீல் தி அல்விஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணை தீவகத்தின் மையப் பகுதியில் அமைந்திருப்பதனால் அதாவது நயினாதீவு மண்டைதீவு மக்களுக்கு மையப் பகுதியாக இருப்பதனால் அது திட்டமிட்டு முதன்மைப்படுத்தப்பட்டது. வைத்தியசாலை, விவசாயக் காரியாலயங்கள், கல்வித் திணைக் களங்கள் முதலான செயலகங்கள் அமைக்கப் பட்டன. 1961 ஆம் ஆண்டின் பின் யாழ் பண்ணை வீதி உருவாக்கப்பட்டு தீவகம் யாழ்ப்பாணத்துடன் தரைவழிப் பாதையாக இணைக்கப்பட்டதுடன் தீவகத்தின் சமூக பொருளாதார நிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியதோடு தோணியில் சென்று கல்வி கற்றவர்கள் பின்னர் தரைவழிப் பாதை யினூடாக சென்று கல்வியை கற்க முடிந்தது. இதே போல பொருளாதார ரீதியிலும் முன்னேற்றம் ஏற்படக் கூடிய நிலை தோற்றம் பெற்றது. இதன் மூலம் வேலணை காரியதிகாரி பிரிவுகளில் ஓர் புதிய வர்க்கம் ஒன்று தோற்றம் பெற்றது. ஏனைய பிரதேசங்க ளோடு பல்வேறு மட்டங்களில் இணைப்புகள் ஏற்பட்டு ஓர் ஸ்திர மான சமூக கட்டமைப்பு உருவாக்கம் பெற்றது.

நாடளாவிய ரீதியில் 1972ம் ஆண்டில் இருந்து இலங்கை நிர்வாக சேவை அமுல் படுத்தப்பட்டது. இவ்வேளை வேலணை பிரதேச காரியாலயம் தனியாக இடம்பெற்றது இதன் போது கடமையாற்றிய செயலாளர் விபரம் வருமாறு.

| **பிரதேச செயலர்கள்** | **சேவைக்காலப்பகுதி** |
|---|---|
| திருவாளர் மு.கார்த்திகேசு | 1972-1973 |
| திருவாளர் எஸ்.சுப்பிரமணியம் | 1973-1975 |
| திருவாளர் எஸ்.தம்பிமுத்து | 1975-1976 |
| திருவாளர் எஸ்.பாலசிங்கம் | 1976-1978 |
| திருவாளர் ஆ.செந்தில்வடிவேல் | 1978-1979 |
| திருவாளர் எஸ்.குலசேகரம் | 1980-1981 |
| திருவாளர் ஏ.குணநாயகம் | 1982-1983 |
| திருவாளர் ஏ.ஈ.நாகராசா | 1983-1984 |
| திருவாளர் ஆ.மகாலிங்கம் | 1984-1985 |
| திருமதி.மைதிலி சோமசுந்தரம் | 1985-1986 |
| திருவாளர் சி.சடாச்சரசண்முகதாஸ் | 1986-1987 |
| திருவாளர் நா.தனபாலசிங்கம் | 1987-1991 |
| திருவாளர் இ.இளங்கோவன் | 1991-1993 |
| திருமதி.றூபினி வரதலிங்கம் | 1993-1994 |
| கலாநிதி.க.குணராசா | 1994-1995 |
| திருமதி. பத்தினியம்மா திலகநாயகம் போல் | 1995-1996 |
| திருவாளர் ஆ.தியாகராசா | 1991-1998 (தீவகம்) |
| திரு.செ.இரத்தினம் | 1998-2002 |
| திருவாளர்.மு.நந்தகோபாலன் | 2003-2011 |
| திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் | 2012- இற்றை வரை |

❖ **தீவகம் தெற்கு யாழ் நகரிலும், தீவகத்திலும் தீவக இடப்பெயர்வு காலப்பகுதியில் இரண்டு நிர்வாக அலகுகளாக இயங்கி வந்தன.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.சி.நாகராசா அவர்கள் 1983 இல் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளை திடீர் மரணமடைந்தார். இவரது காலத்தில் விசேட சேவை அலுவலர்கள் நியமனம் பெற்றார்கள். கிராமோதய சபைகளின் செயற்பாடுகள் தோற்றம் பெற்றன. என்பதுடன் சமகாலத்தில் விசேட சேவை அலுவலர் மேற்பார்வையில் இடம்பெற்ற வரட்சி நிவாரண வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இவரைத் தொடர்ந்து வந்த திருவாளர் ஆ.மகாலிங்கம் அவர்களது சேவைக் காலத்தில் கிராமங்கள் தோறும் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

1982 ஆம் ஆண்டில் நியமனம் பெற்ற விசேட சேவை அலுவலர்கள் பல்வேறு காரணங்களால் 1.9.1987ம் ஆண்டு கிராம அலுவலர்களாக நியமனம் பெற வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. இரண்டு கிராம சேவை அலுவலர் பிரிவுக்கு ஒரு விசேட சேவை அலுவலர் என்ற அடிப்படையில் நியமனம் பெற்ற விசேட சேவை அலுவலர்களின் தொகைக்கு ஏற்ப கிராம அலுவலர் பிரிவுகளை அதிகரிக்க வேண்டியிலுந்தது. இதனை அப்போதைய உதவி அரசாங்க அதிபராக இருந்த புங்குடுதீவைச் சேர்ந்த திருவாளர் சடாச்சரசண்முகதாஸ் அவர்கள் செய்து முடித்தார். இதன்போது புங்குடு தீவு வேலணை கிராம அலுவலர் பிரிவுகள் அதிகரிக்கப்பட்டன.

மேலும் 1988 இல் விவசாய உத்தி யோகத்தர்களும் பயிர் செய்கை உத்தி யோகத்தர்களும் கிராம உத்தியோகத்தர்களாக பதவி மாற்றம் செய்யப்பட்டனர். இதன்போது மேலும் சில புதிய கிராம அலுவலர் பிரிவுகள் உருவாக்கப்பட்டது. இதனடிப்படையிலேயே இன்று இருக்கின்ற 30 கிராம அலுவலர் பிரிவுகள் உருவாக்கப்பட்டன.

1987 ஆம் ஆண்டு பிற்பகுதியில் அதிசிறப்பு நிர்வாக உத்தியோகத்தர் தரத்தில் இருந்து புங்குடுதீவைச் சேர்ந்த திருவாளர் தனபாலசிங்கம் அவர்கள் உதவி அரசாங்க அதி பராக கடமை ஏற்றிருந்தார். இக் காலத்தில் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் பல பகுதியில் அனர்த்தங்கள் இடம்பெற்றன. தீவகத்திற்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் பல்வேறு மட்டங்களில் தோற்றம் பெற்றன. இக் காலப் பகுதியில் இந்திய அமைதிப் படை யாழ் மாவட்டத்திற்கு வருகை தந்த போது யாழ்ப் பாணத்து மக்கள் தீவகத்திற்குள் இடம்பெயர்ந் தனர். இதன்போது அனர்த்த நிவாரணங்கள் இடம்பெயர் நிவாரணங்கள் வழங்கப்பட்டன. விசேடமாக அமேசன் கப்பலில் "மா" வருவிக் கப்பட்டு நிவாரணங்கள் வழங்கப்பட்டன. நிவாரண பொருட்களை வேலணையில் களஞ்சியம் அமைத்து அரச ஊழியர், அரச ஊழியர் அல்லாதவர் என்ற வேறுபாடின்றி சகலருக்கும் நிவாரணம் வழங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து வேலணை புங்குடு தீவில் தஞ்சம் புகுந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. இதன் பின்னர் 1985 ஆம் ஆண்டு மண்டைதீவு யுத்த நடவடிக்கையால் பாதிப்படைந்தது என்பதால் இக் கிராமத்திற்கு தொடர்ந்து நிவாரணம் வழங்கப்பட்டது.

1989 ஆம் ஆண்டு பிரதேச செயலகம் இயங்கிக் கொண்டிருந்த வேளையில் குண்டு வீச்சுக்கு இலக்கான துர்ப்பாக்கிய சம்பவம் இடம்பெற்றது. இதன்போது உதவி அரசாங்க அதிபரின் கருமபீடம் சேதமடைந்திருந்ததுடன் கிராம அலுவலர் ஒருவர் காயமடைந்தார். எனினும் அவ் உத்தியோகத்தர் உயிர் தப்பினார். காரியாலயத்திற்கு குண்டு வீசப்பட்டதை தொடர்ந்து வேறு இடத்தில் காரியாலயத்தினை இயக்க வேண்டிய நிலை இருந்தது. இதனால் வேலணை 2 ஆம் வட்டாரத்தில் தனியார் வீடொன்றில் காரி யாலயம் இயங்கியது.

1990 ஆம் ஆண்டு வேலணையில் இருந்து முதலாவது இடப்பெயர்வு இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது. வேலணை வடக்கு பகுதியாக இராணு வத்தினர் மண்டைதீவுக்குச் சென்றனர். இதனால் மக்கள் புங்குடுதீவுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடம்பெயர்ந்தார்கள். மண்டைதீவு மக்கள் இடம் பெயர்ந்து பாடசாலையிலும் சுற்றியுள்ள கோவில்களிலும் தங்கியிருந்தனர். இவர் களுக்கு உடனடியாக இடம்பெயர் நிவாரண சேவைகள் வழங்கப்பட்டது. இராணுவம் தீவகத் தினை முழுமையாக விடுவிக்க ஏற்படுத்திக் கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது மக்கள் கூட்டம் கூட்டமாக தீவகத்தை விட்டு வெளியேறினார்கள்.

பிரதேச செயலகத்தில் அலுவலக ஆவணங்கள் பொருட்களை பாதுகாப்பான பிரதேசத்துக்கு கொண்டு செல்ல வேண்டி யேற்பட்டது. இதனால் பிரதேச செயலகம் தற் காலிகமாக அல்லைப்பிட்டியில் 8 மாதங்கள் இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ் வேளையில் திருவாளர் இளங்கோவன் அவர்கள் பிரதேச செயலாளராக 1991.05.27இல் கடமையேற்றார். இவர் வட கிழக்கு மாகாண சபைக்கான முதலாவது இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் ஒருவர் என்பது குறிப் பிடத்தக்கது. இவ் வேளையில் பண்ணைப்பாலம் சேதமடைந்திருந்ததால் தந்திக்கம்பியின் மூலம் பாலம் இணைப்பு செய்யப்பட்டிருந்தது. இவ் ஒற்றையடிப் பாதையில் சென்று கடமையாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டு இருந்தது. சம காலத்து அலுவலர்களும் கிராம அலுவலர்களும் இவ்வாறு தான் தம்முடைய சேவையை மக் களுக்கு வழங்கினார்கள். தீவகத்தை விட்டு வெளியேறிய மக்கள் யாழ்ப்பாணத்திலும் அரியாலையிலும், பூம்புகாரிலும் கிளாலியிலும் மக்கள் குடியேறினார்கள். இவர்களை நேரில் சென்று பார்வையிட்டு பிரதேச செயலக நிர் வாகம் மக்களுக்கு தமது சேவையை வழங்கியது.

வேலணை பிரதேச செயலகம் யாழ்ப் பாணத்தில் இயங்க தொடங்கியது. மக்கள் யாழ்ப்பாணத்தினுடைய எல்லா பிரதேசங் களிலும் பரந்து வாழ்ந்தார்கள். வேலணையில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்களை வேலணை பிரதேச செயலகமே நிர்வகிப்பது என்பது ஒரு சிறப்பான அம்சமாக விளங்கியது. இடம்பெயர்ந்த ஒரு குடும்பம் இடம்பெயர்ந்து வாழும் பிரதேசத்தின் பிரதேச செயலக நிர்வாகத்திற்குட்பட்டு செயற் படுவதே உரிய நிலையாகும். ஆனால் பிரதேச செயலகத்தின் பிரிவுக்குட்பட்ட மக்கள் இடம் பெயர்ந்தும் வேலணை பிரதேச செயலகத் தினாலேயே பரிபாலிக்கப்படும் நிலமை ஒரளவு புதிய நடைமுறையாகும். தீவகத்தின் அதிகாரி களுடைய சேவை மனப்பாண்மையும் செயற் படுத்துமாற்றலுமே காரணமாக அமைந்தது என பலரும் கூற கேள்விப்பட்டிருக்கின்றோம். இத் தருணத்தில் அலுவலர்களுக்கு சுயவிபரக் கோவைகள் புதிதாக உருவாக்கப்பட்டன. இதற்கு தீவக நலன்விரும்பிகள் சில உதவி புரிந்ததாக அறிய முடிகின்றது. இதே சமயம் வேலணை பிரதேச செயலக பிரிவுக்குட் பட்ட திணைக்களங்கள், சங்கங்கள் ஆகியன அந்தந்த நிறுவனங்களாகவே இயங்கி வந்தன. இத்தோடு தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்காக தீவகத்தினுடைய நலன்புரி நிலையங்கள் மணியன்தோட்டம், அரியாலை, கெற்பலி, யாழ்ப்பாணம், வன்னி போன்ற இடங் களில் தோற்றம் பெற்று மக்களுடைய வாழ்வா தாரம் தொழில் என்பவற்றுக்காக திறம்பட செயலாற்றுகை செய்தன. இதேபோல் தீவக மக்கள் கழகம் தோற்றம் பெற்று திருவாளர்கள் ஐயாத்துரை, மாணிக்கவாசகர் போன்றவர்கள் மக்களின் ஒருங்கமைப்புக்கும் நலனுக்கும் வழி சமைத்து கொடுத்தார்கள். இதேபோல் கல்வித் துறையிலும் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டு கில்லர் வீதியில் உள்ள நகர்ப்புற பாடசாலை யுடன் தீவகத்தின் புங்குடுதீவு அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் வித்தியாலயத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்து அவ் வித்தியாலய அதிபர் அவர்களி னால் பாடசாலை கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பின்னர் 1994 வேலணை பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தினை நிர்வகிப்பதற் காக கலாநிதி.க.குணராசா அவர்கள் பொறுப் பேற்றுக் கொண்டார். இதன்போது சுபாஸ் விருந்தினர் விடுதிக்கு சொந்தமான கட்டடத்தில் சில மாதங்கள் செயலாற்றியது. இதனைத் தொடர்ந்து கச்சேரி சமூக சேவைப் பகுதியில் வேலணைப் பிரதேச செயலகம் இயங்கத் தொடங்கியது. இத்தருணம் திருமதி. பத்தினி யம்மா திலகநாயகம் போல் அவர்கள் பிரதேச செயலராகக் கடமையாற்றினார். இதேவேளை தீவகத்தினுள்ளும் ஓர் பிரதேச செயலகம் செயலாற்றி வந்தது. அங்கு இடம்பெயராமல் தங்கியிருந்த மக்களுக்காகவும், நயினாதீவு மக்களுக்காகவும் இச் செயலகம் செய லாற்றியது. வேலணைப் பிரதேச செயலகம் இரண்டு நிர்வாக அலகுகளாக யாழ்ப்பாணத் திலும், தீவகத்திலும் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தீவகத்தில் இயங்கி வந்த பிரதேச செயலகத்திற்கு 1991 முதல் 1998 வரை திருவாளர் ஆ.தியாகராசா அவர்கள் பிரதேச செயலராகக் கடமையாற்றினார். அதேவேளை ஊர்காவற்றுறையில் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் அவர்கள் பதில் கடமையாற்றியதுடன் மேலதிக அரசாங்க அதிபராக திருவாளர் க.சண்முக நாதன் அவர்கள் நிர்வாகத்தினை தீவகத்தில் இருந்து செற்படுத்தினார். இச்சந்தர்ப்பத்தில் வேலணைப் பிரதேச செயலகத்தினுடைய கிராம அலுவலர்கள் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த வேலணைப் பிரதேச செயல கத்தில் கடமையாற்றியமையால் தீவகத்திலுள்ள மக்களுக்கான சேவையை வழங்குவதற்றகாக புதிதாக கிராம அலவலர்களுக்கான நிய மனங்கள் வழங்கப்பட்டன. பிற்பாடு இவர்களுக் கான நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. இதேவேளை 1995ம் ஆண்டு வரை யாழ்ப் பாணத்தில் இயங்கிக் கொண்டிருந்த வேலணைப் பிரதேச செயலகம் யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற பாரிய இடப்பெயர்வின் போது சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு இடம்பெயர்ந்தது. இங்கு அனைத்து பிரதேச செயலகங்களும் இயங்கியதுடன், மாவட்ட செயலகமும் இயங்கி வந்தது.

### *மீள்குடியேற்றம்*

1996ம் ஆண்டிலிருந்து தீவகத்தில் மீள் குடியேற்றம் படிப்படியாக நடைபெற ஆரம் பித்தது. வேலணை 6ஆம் வட்டாரத்தில் இயங்கிக் கொண்டிருந்த தற்காலிகப் பிரதேச செயலகம் மீள்குடியமர்விற்கான சகல ஒழுங்கு களையும் மேற்கொண்டு செயலாற்றியது. பிரதேச செயலராக திரு.ஆ.தியாகராசா தொடர்ந்து செயலாற்றியதுடன் பிரதேச செயலகம் சிறப்பாகச் செயற்பட்டு மீள் குடியேறிய மக்களுக்கான உரிய நிவாரணத் தினையும், உரிய கொடுப்பனவுகளையும், அடிப்படை வசதிகளையும் பெற்றுக் கொடுத்தது. 1998ம் ஆண்டு அதி சிறப்பு எழுதுனர் சேவை தரத்தினையுடைய திருவாளர்.செ.இரத்தினம் அவர்கள் பிரதேச செயலராகப் பொறுப் பேற்றார். இவரது சேவைக்கலத்தில் பிரதேச செயலகம் மிக முக்கியமான நிர்வாகச் செயற் பாட்டினை தொடர்ந்து முன்னெடுத்து வந்ததோடு மீள்குடியமர்ந்த மக்களுக்கான 5000.00 கொடுப்பனவு, 25000.00 ரூபா கொடுப்பனவு, சமையற் பாத்திரங்கள், உடுபுடவைகள், மலசலகூடங்கள் மற்றும் அவர்களது ஏனைய அடிப்படை வசதிகளை முன்னின்று வழங்கியது. 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் சமுர்த்தி அதிகார சபை ஆரம்பிக்கப் பட்டு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். இத்தருணத்தில் வேலணை பிரதேச செயலகத் திற்கும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்கள் நியமனம் பெற்று சேசைவையை பொறுப்பேற்றுக் கொண்டார்கள். இதேவேளை திருவாளர். இரத்தினம் அவர்களது சேவைக் காலத்தில் பிரதேச செயலக கட்டடத் தொகுதி புனர்நிர்மானம் செய்யப்பட்டு 1999.02.26 அன்று திரு.செ.இரத்தினம் அவர்களது தலைமையில் அன்றைய அரச அதிபர் திருவாளர்.க.சண்முகநாதன் அவர்களால் மீள திறந்து வைக்கப்பட்டது.

2002 ஆம் ஆண்டு திருவாளர் செ.இரத்தினம் அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அப்போதைய நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றிய திரு.ப.லோகநாதன் அவர்கள் தற்காலிகமாக பிரதேச செயலரது கடமையை பொறுப்பேற்று பிரதேச செயலகத்தை நிர்வகித்து வந்தார்.

2003 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த திருவாளர்.மு.நந்த கோபாலன் அவர்கள் பிரதேச செயலராக கடமையைப் பொறுப்பேற்று பிரதேசத்தை நிர் வகித்தார். இத் தருணத்தில் பிரதேச செயலகத் திற்கான மாநாட்டு மண்டபம் அமைக்கப்பட்டு 29.01.2006 ஆம் ஆண்டு பிரதேச செயலர் அவர்களின் தலைமையில் அப்போதைய அரசாங்க அதிபர் திரு.க.கணேஷ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதே போல் 2008.04.30 ஆம் திகதி ஆட்பதிவுத் திணைக்களத்திற்கான புதிய கட்டடம் பிரதேச செயலர் தலைமையில் அரசாங்க அதிபர் திரு. க.கணேஷ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சமூக சேவைகள் பகுதிக்கான கட்டிடம் சமுர்த்தி வங்கி புங்குடுதீவு வேலணை என்பன திறந்து வைக்கப்பட்டன. மேலும் புதிய பிரதேச செயலக கட்டிடம், பிரதேச செயலருக்கான விடுதி ஆரம்பிப்பதற்குமான ஆரம்ப ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

2012ம்ஆண்டு திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் அவர்கள் கடமையைப் பொறுப்பேற் பதற்கு முன்பாக அவருக்கான பதிற்கடமையை மேற்கொள்வதற்காக திருவாளர்.கு.பிரபாகர மூர்த்தி அவர்கள் இரண்டு மாதகாலம் நிர்வாகக் கடமைகளை பொறுப்பேற்றிருந்தார். அதன் பிற் பாடு திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் அவர்கள் கடமைகளைப் பொறுப்பேற்று இன்றுவரை பிரதேச செயலராகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார். இவருடைய காலப் பகுதியில் புதிய பிரதேச செயலகக் கட்டிடத் திற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் பிரதேச செயலக தங்குமிட விடுதி வேலை களும் ஆரம்பிக்கப்பட்டு 2014.10.14ம் திகதி அன்று மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பான வகையில் மேற்படி கட்டிடத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்தமை பெருமைக்குரிய விடயமாகும். புதிய கட்டிடத்திற்கான நிதியுதவியானது பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் Care Project இனால் வழங்கப்பட்டு இன்று கட்டிடம் மிகவும் அழகான முறையில் காட்சியளிப்பதுடன் தீவக மக்களுக்கான சேவையினை சிறப்புற ஆற்றி வருகின்றது.

தீவுகள் தெற்கு பிரதேச செயலகம் பல நிர்வாக கட்டமைப்புக்களைக் கடந்து வந்த போதும் இன்று பிரதேச செயலகங்களினுடைய இலக்கினை அடைவதற்கான பாதையில் நின்று தனது பங்கினை ஆற்றிக் கொண்டிருக்கின்றது. அரச நிர்வாகத்தின் ஊடாக நாட்டின் ஒவ்வொரு தனிமனிதனுடைய தேவைகளையும் பூர்த்தி செய்வதே அரசினுடைய நோக்கமாகும். தனி மனிதனது சமூக, கலாச்சார, பொருளாதார அபி விருத்தியை மேம்படுத்துவதற்காக அரசபொறி முறையில் மனிதர்களுக்கு மிகமிக அண்மித்த நிர்வாகக் கட்டமைப்பாக உருவாக்கப்பட்ட அரச பொறிமுறையே பிரதேச செயலகங்களாகும். மானிட அபிவிருத்திக்காக அரசினால் உரு வாக்கப்படும் சகல உத்தியோகத்தர்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களையும் ஒன்றிணைத்து பிரஜைகளின் உடல், உள சமூக கலாசார, பொருளாதார அம்சங்களினை மேம்படுத்தும் செயற்பாட்டினை பிரதேச செயலகங்கள் முன்னின்று செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன.

குடிமக்களின் வாழ்வியலோடு இணையப் பெற்ற அவர்களது தேவைகளை துரிதமாக நிறைவேற்றத்தக்க வகையிலும், மக்களுக்கு வழிகாட்டக் கூடிய வகையிலும் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதாவது "மக்களின் காலடிக்குள் நிர்வாக சேவையைக் கொண்டு வருதல்" எனும் செயலாற்றுகையின் அடிப்படையில் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டு செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த வகையில் தீவுகள் தெற்கு பிரதேச செயலகமும் மக்களுக்கான தனது சேவையை என்றும் பொறுப்புணர்வுடன் ஆற்றிவருகின்றது.

நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால் ஆவணங்களைப் பேணி வைக்க முடியாத காரணத்தினால் போதுமான தரவுகளைப் பெறமுடியாமையினால் இக்கட்டுரையில் முழுமையான தரவுகளை தரமுடியாததோடு இதுபற்றிய விபரங்கள் தங்களிற்கு தெரிந்திருக்கும் சந்தர்ப்பத்தில் அதனை எமக்கு தந்துதவுமாறும், இதில் ஏற்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டுமாறும் தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களை நடாத்திச் செல்லுதல்


திரு.சி.ஜெயகாந்த்
SLAS, MPA, MA, BA(Hons)Diploma in Pub.Adm
உதவி பிரதேச செயலர், வேலணை.


### அறிமுகம்:-

பிரதேச மட்ட நிர்வாகத்தின் ஆரம்ப மட்ட அலகுகளாகவும் முதுகெலும்பாகவும் விளங்குவன கிராமசேவகர் அலுவலகங்களாகும். கிராம அலுவலர்கள் பொருத்தமான இடமொன்றில் தமது அலுவலகத்தைப் பேணிச் செல்வதுடன் தனது பிரிவு தொடர்பான அடிப்படைத் தகவல்கள் யாவற்றையும் இற்றைப் படுத்தி வைத்திருக்க வேண்டும். அத்துடன் சிறந்த பொதுமக்கள் தொடர்பு (Public Relation) களையும் கொண்டிருப்பதுடன் தனது கடமைகள் தொடர்பான பதிவேடுகள், புத்தகங்களை பேணுவதுடன் அவற்றை இற்றைப்படுத்தவும் (Update) வேண்டும். இன்றைய நவீன அபிவிருத்தித் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப அபிவிருத்தி மற்றும் ஆக்கச் செயற்பாடுகளுக்கு சிறந்த பங்களிப்புகளையும் நல்க வேண்டும்.

### கிராம உத்தியோகத்தரின் கடமைகள்

கிராம உத்தியோகத்தர் ஆரம்ப மட்ட சமாதான அலுவலர்களாவர். அவர் தனது பிரிவில் இடம்பெறும் குற்றங்களை விசாரணை செய்ய வேண்டும். அவரது ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் வழக்கு விசாரணையின் போதான வாக்குமூலங்களுக்கு உதவியாக அமையும். மேலும் கிராம அலுவலர் பல விதமான தவறுகளுக்கு சந்தேக நபர்களை பிடியாணையின்றியும் கைது செய்ய முடியும்.

சமூக சேவை திணக்களம் சார்ந்த கடமைகளையும் கிராம அலுவலர் நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுடையவராவார். குறிப்பாக பொதுசன மாதாந்த உதவிப்பணம், அமைய நிவாரணம், நீண்டகால இடர் நிவாரணம், வரட்சி நிவாரணம் என்பவை தொடர்பான கடமைகளை நிறைவேற்றுவதில் அவரது பங்கு பணி முக்கியம் வாய்ந்தது.

தேர்தல் திணைக்களத்திற்கு ஏற்புடைய பணிகள் பலவற்றையும் கிராம அலுவலரே நிறைவேற்றி வருகின்றார். குறிப்பாக வாக்காளர் இடாப்பு தயாரித்தல் மற்றும் திருத்தங்கள், தேர்தல் தொடர்பான பொதுக் கடமைகள் என்பவற்றில் அவர் முக்கிய பங்குதாரர் ஆவார்.

காணி அமைச்சுடன் தொடர்புடைய பணிகளை கிராம மட்டத்தில் பொறுப்பேற்பவர் கிராம அலுவலராவார். காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் அதனுடன் தொடர்புடைய காணிக் கச்சேரிகள், அரச காணிகளை பாதுகாத்தல் என்பனவும் அவரின் பணிகளாகும்.

இவற்றைத் தவிர பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் பிறப்பு இறப்பு பதிவுகளிற்கான ஒத்துழைப்பு மற்றும் மதுவரித் திணைக்களத்துக்கு உதவும் வகையான பணிகள், வனபரிபாலன திணைக்கத்தின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருத்தல், ஆட்பதிவுத் திணைக்களத்திற்கான அடையாள அட்டை வழங்கலிற்கான விண்ணப்பங்களை பூர்த்தி செய்தல் என்பனவும் அவரது பணிகளே. மேலும் வதிவிட நன்னடத்தை சான்றிதழ் வழங்குதல், பெறுமதிச் சான்றிதழ் வழங்குதல் என்பவற்றுடன் ஓய்வூதியத் திணைக்களத் திற்காகவும் அவர் பணியாற்ற வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிராம அலுவலரின் கடமை நேரம்

வாரத்தில் 06 நாட்கள் சேவை புரிவதுடன் பிரதேச செயலரின் அங்கீகாரத்துடன் சகல கிராம அலுவலர் பிரிவுக்கும் 24 மணித்தியாலங் களும் மக்களிற்கு சேவை வழங்கக் கூடிய வகையில் சுற்று முறைக்கிணங்க ஒரு நாளை ஓய்வு நாளாக நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும். மேலும் கடமையாற்றும் பிரிவுக்குள் தமது அலுவலகத்தை நடாத்திச் செல்வதுடன் கடமையில் ஈடுபட்டுள்ள எல்லா சந்தர்ப்பத் திலும் தனது சீருடை இலட்சினை என்பவற்றை அணிந்திருப்பதுடன் தனது அடையாள அட்டை அலுவலக நாட்குறிப்பு புத்தகம் ஆகியவற்றை தம்வசம் வைத்திருக்க வேண்டும்.

### கிராம அலுவலருக்குரிய நடத்தைகள்

கிராம அலுவலர்கள் நேர்மை, அர்ப் பணிப்பு, சட்டத்தை மதித்தல், பாரபட்சமின்மை, நேர்மனப்பாங்கு, நல்ல முன்மாதிரி, சிறந்த பொதுசன தொடர்பு முறைமை ஆகிய பண்பு களைக் கொண்டிருக்க வேண்டும். இவர்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட முடியாது. தமது பிரிவில் இடம்பெறும் முக்கிய சம்பவங் களில் அரசாங்கத்தின் பிரதிநிதியாக அதில் கலந்து கொள்வதுடன் தனது பிரிவில் அமைதியை எப்போதும் பேணுவதற்கு உதவக் கூடியவராக இருக்க வேண்டும். கிராம அலுவலர் மரியாதைக்குரியவராயும் அங்கீகாரத்திற்குரிய வராகவும் இருக்க வேண்டும்.

### கிராம அலுவலகம்

கிராம அலுவலகம் பொதுமக்களுக்கு இலகுவானதும் பொருத்தமானதுமான இடத்தில் அமைந்திருப்பதுடன் வரும் மக்களுக்கு தேவை யான அடிப்படை வசதிகளை கொண்டதாகவும் இருக்க வேண்டும். அத்துடன் மக்களுக்கு தேவை யான வழிகாட்டல்கள், அறிவுறுத்தல்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அலுவல கத்தின் உள்ளக வெளியகச் சூழல்கள் எப் போதும் அழகாகவும் தூய்மையாகவும் பேணப் பட வேண்டும். இங்கு முறையாகப் பேணப்படும் அறிவுறுத்தல் பலகை ஒன்று காணப்பட வேண்டும். சேவை பெறுநர் பட்டயம் ( Citizen Charter) தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப் படுத்தும் வகையில் அதிகுறைந்தது தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் பெயர் பலகை காட்சிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

கிராம அலுவலக பிரிவு தொடர்பான வரைபடம் மற்றும் அடிப்படைத் தகவல்களை கொண்டிருக்க வேண்டும். பிரிவின் மனித வளம் தொடர்பான சகல தரவுகளும் வயது, இனம், மதம், பால் என்ற அடிப்படையில் வகைப்படுத்தப் பட்டு பேணப்படுவதுடன் எப்போதும் இற்றைப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். மானிட வளத்தைப் போலவே பௌதீக வளங்கள் தொடர்பான தகவல்களையும் சேகரித்து வைத்திருப்பதுடன் பிரிவில் உள்ள பொது அமைப்புக்கள் முன்னர் கடமையாற்றிய கிராம அலுவலர்கள் பற்றிய ஏடுகளும் பேணப்பட வேண்டும்.

### கிராம அலுவலர் பேணவேண்டிய பதிவேடுகள்

1. அலுவலக தினப் பதிவேடு
2. இருப்பு பதிவேட்டுப் புத்தகம்
3. வருமானச் சான்றிதழ் வழங்கும் பதிவேடு
4. வதிவிட மற்றும் நன்னடத்தைச் சான்றிதழ் ஏடு
5. பிறப்பை அறிக்கையிடும் ஏடு
6. இறப்பை அறிக்கையிடும் ஏடு
7. பொதுசன மாதாந்த உதவிப் பணப் பதிவேடு
8. சமுர்த்திப் பயனாளிகள் பதிவேடு
9. சமுர்த்தி பயனாளிகளது பதிவேடு
10. ஓய்வூதியதாரர்களது பதிவேடு,
11. குடும்பங்களது தகவல் புத்தகம்
12. அரச காணிகள் தொடர்பான பதிவேடு
13. தேசிய அடையாள அட்டைப் பதிவேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. வாக்காளர் இடாப்பு
15. கடிதக் கோவை
16. சுற்றறிக்கைக் கோவை
17. கூட்ட அறிக்கைகள் தொடர்பான கோவை
18. சம்பவத் திரட்டுப் புத்தகம்.

### கிராம அலுவலரும் மக்கள் தொடர்பும்

கிராம அலுவலர் கிராமத்தின் சேவகராவர். அவர் பொதுமக்கள் வருகை தரும்போது அலுவலகத்தில் தரித்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் அறிவித்தற் பலகையில் அறிவிப்புச் செய்திருக்க வேண்டும்.

பொதுமக்கள் சேவையை பெற்றுக்கொள்ள வரும் போது பாகுபாடுகள் பாரபட்சங்கள் காட்டக்கூடாது. பொதுமக்களை நன்றாக வர்வேற்று மரியாதையாக நடத்த வேண்டும். பொதுமக்கள் தேவைப்பாடு தொடர்பாக நன்றாக செவிமடுத்து அதற்காக தனது கவனத்தைச் செலுத்த வேண்டும். மக்கள் தேவைகளை தாமதப்படுத்தாது உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேவை தொடர்பில் வேண்டிய அறிவுறுத்தல் வழங்க வேண்டும். பொது மக்களுக்கு பிரச்சனைகள் சிக்கல்கள் தொடர்பில் சிறந்த பதிவை வழங்க வேண்டும்.

### கிராம அலுவலகம் ஒன்றினால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள்

1. நற்சான்றிதழ்கள் வதிவிட சான்றிதழ்கள் வழங்குதல்
2. வருமானச் சான்றிதழ்களை வழங்குவதற்காக சிபார்சு செய்தல்
3. மதிப்பீட்டுச் சான்றிதழ்களை வழங்குதல்
4. மதீப்பீட்டு அறிக்கைகள்
5. தேசிய அடையாள அட்டைகளை வழங்குதல்
6. பலா மரங்களை வெட்டுதல்
7. மரங்களை வெட்டுவதற்கான அனுமதிப் பத்திரங்கள்
8. மரங்களை கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரங்கள்
09. வெடிகலன்களுக்கான அனுமதிப்பத்திரங்களுக்கான சிபார்சுகள்
10. வெடிமருந்துப் பொருட்கள்
11. மரண அறிக்கைகளை வழங்குதல்
12. வியாபார பெயர்களை பதிவு செய்தல்
13. முறைப்பாட்டு பிரதிகளை வழங்குதல்
14. பொதுசன மாதாந்த உதவிக்கான சிபார்சுகள்
15. பதிவு செய்யப்படாத பிறப்பு இறப்புக்களைப் பதிவு செய்தல்
16. மாணவர் புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பங்களை சிபார்சு செய்தல்
17. மரங்களைக் கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தல்
18. விலங்குகளைக் கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரம்
19. காணிச் சொத்துவத்தை உறுதிப்படுத்தல்
20. நீர் மின்சார வசதிகளுக்கான விண்ணப்பங்களை சிபார்சு செய்தல்
21. பாரியளவு அனர்த்த நிவாரண உதவிக்கான சிபார்சுகளை வழங்குதல்
22. கள்ளுத் தவறனைக்கான அனுமதிப் பத்திரத்திற்கு சிபார்சு செய்தல்
23. பல்வேறுபட்ட நோக்கங்களுக்கான சிபார்சுகளை வழங்குதல், தன்னிச்சையான அமைப்புக்களை பதிவு செய்தல்
24. அரச காணிகள் தொடர்பான நடவடிக்கைகள்
25. காட்டுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்
26. மதுபான அனுமதிப் பத்திரத்திற்கான சிபார்சு செய்தல்
27. சமாதான அலுவலராக கடமையாற்றல்

### கிராம அலுவலரும் தலைமைத்துவமும்

கிராம அலுவலர் கிராமத்தின் பிரதான ஓர் அலுவலராவார். அவர் தனது பிரிவில் மக்கள் பங்களிப்புடன் கூடிய நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில் அதீத ஆர்வமுடையவராயிருக்க வேண்டும். கிராமத்துக்கு வேண்டிய அடிப்படை வசதிகளான பாதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலம், மதகுகள், நீர்ப்பாசன வேலைகள், நூலகம், முன்பள்ளிகள் போன்ற நிர்மாணப் பணிகளுக்கு மக்களை தூண்டக்கூடிய ஒரு வராக இருப்பதுடன் சிரமதான நடவடிக்கை களை மேற்கொள்ள ஊக்குவிப்பாயிருப்பதுடன் பல்வேறு கிராமமட்ட அமைப்புக்களை நிறுவி அதன் மூலம் மக்களுக்கு சேவைகளை வழங்க முன்வரும் ஆர்வலராக இருக்க வேண்டும். மேலும் மக்களுடைய சுயதொழில் நடவடிக்கை கள், வருமானத்தை அதிகரிக்கு நிகழ்ச்சித் திட்டங்கள், சமய, கலாசார, விளையாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்து வெற்றி கரமாக நடாத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

## கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களை தரப்படுத்தல்

தற்போது பொது நிர்வாக உள்நாட்டலு வல்கள் அமைச்சு ஒரு செயற்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு வருடமும் வருடத்தின் முன் அரைப் பாகத்திலும் பின் அரைப்பாகத்திலும் கிராம அலுவலகங்களையும் அவற்றின் கடமை களையும் பரிசீலணை செய்து அவற்றுக்கு புள்ளிகளை வழங்குவதன் மூலம் அவற்றை வகைப்படுத்த முயற்சி செய்து வருகின்றது. அந்த வகையில் அலுவலக செயற்பாடுகளுக்கு தகுந்த புள்ளித் திட்டத்தின் கீழ் 200 புள்ளிகள் வரை வழங்க ஓர் திட்டமுண்டு. அதனடிப்படையில்,

| பெற்றுக்கொள்ளும் புள்ளி வீச்சு | தரம் |
|---|---|
| 161–200 | A |
| 121–160 | B |
| 81–120 | C |
| 41–80 | D |
| 0–40 | E |

என்றவாறு தரப்படுத்தப்படவுள்ளன. எனவே நவீன இன்றைய மாற்றங்களுக்கேற்ப கிராம அலுவலர்கள் தமது அலுவலகங்களை சிறந்த முறையில் நடாத்திச் செல்வதுடன் பொது மக்களின் பங்களிப்புடன் அலுவலகங்களை "A" தர (Grade A) கிராம அலுவலகங்களாக்கு வதற்கு தம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவுகள் தெற்கு பிரதேச செயலக பிரிவின் அபிவிருத்தித் தந்திரோபாயங்களும் திட்டங்களும்

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர்,
யாழ் பல்கலைக்கழகம்.

தீவுகள் தெற்கு பிரதேச செயலர் பிரிவு 94 சதுர கிலோமீற்றர் பரப்புடையது. இப்பிரிவு 2012 இல் 16528 மக்களைக் கொண்டிருந்தது. 1981 ஆம் ஆண்டு குடிசனக் கணிப்பில் இப்பிரிவு 35000க்கு மேற்பட்ட மக்களைக் கொண்டிருந்தது. இன்றைய மக்கள் தொகை இப் பிரிவு 1981 இல் கொண்டிருந்த மக்கள் தொகையிலும் அரைவாசிக்கு குறைவாகவுள்ள தென்பது கவனிக்கத்தக்கது. 1991 இல் ஏற்பட்ட யுத்தத்தினால் இப் பிரிவில் வேலணைத்தீவு, புங்குடுதீவு, மண்டைதீவில் வாழ்ந்த மக்கள் ஏறக்குறைய ஒட்டு மொத்தமாகத் தமது வழமை யான இருப்பிடங்களை விட்டு யாழ்ப்பாண நகருக்கு இடம் பெயரலாயினர். ஒரு சில குடும்பங்களே இடம் பெயராது இப் பிரிவில் தங்கியிருந்தனர். தங்கியிருந்த குடும்பங்கள் ஒரு சில இடங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

1991 இல் முதலில் யாழ்ப்பாணத்திற்கு இடம் பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணம், வன்னி, கொழும்பு என்று இடம்பெயரலாயினர். மேலும் ஒரு பகுதியினர் சர்வதேச இடப்பெயர்வுக்குட் பட்டு கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து மற்றும் பல நாடுகளுக்கு சென்றனர். யாழ்ப்பாணத்தில் இருந்த தீவக மக்கள் 1995 இல் மீண்டும் இடப்பெயர்வுக்குட் பட்டு தென்மராட்சி, வன்னி, கொழும்பு என இடம்பெயர்ந்தனர். இவ் இடப்பெயர்வுகளால் தீவு மக்கள் பல நாடுகளில் பல ஊர்களில் புது வாழ்வை அமைத்துக் கொண்டனர். இவர்கள் கடின முயற்சியுடையவர்களாக இருந்ததால் குறுகிய காலத்தில் புது இடங்களில் பெரும் பாலானோர் நல்வாழ்வை அமைத்துக் கொண்டனர். ஒரு பகுதியினர் இடம்பெயர்ந்து நல் வாழ்வைப்பெற இன்னொரு பலவீனமான பிரிவினர் இடம்பெயராது துன்ப துயரத்தில் மாய்ந்து வாழ்விற்காகப் போராடினார்கள்.

1996 ஏப்ரல் – மே மாதங்களில் மீள் குடியேற்றம் இப்பிரிவில் ஆரம்பிக்கப்பட்ட பொழுது சிறு தொகையினரே மீளக் குடியேறினர். இடம்பெயர்ந்து 5 வருடங்களுக்கு மேல் பிற இடங்களில் வாழ்ந்ததாலும் மேலும் தங்களது கிராமிய வாழ்வாதாரங்கள் முற்றாக அழிந்திருந்த நிலையில் மீளக்குடியேற பெரு எண்ணிக்கையில் மக்கள் முன் வரவில்லை. தீவுப்பகுதியில் மீள்குடியேற்றம் மிகவும் மெது வாகவே இடம்பெற்று வருவதைக் காண முடிகின்றது. மிகவும் வறுமைப்பட்டவர்களும் கடின ஊர் பற்றாளர்களுமே சொந்த ஊர் திரும்பினர். ஊர் திரும்பியவர்கள் முன்னர் மேற்கொண்ட தங்கள் பொருளாதார செயற் பாடுகளில் தங்கியிராது நிவாரணப் பொருளா தாரத்தில் தங்கும் நிலையில் இருந்தனர். மேலும் உழைத்து வாழ்வதற்கு பதிலாக பிறரில் தங்கி வாழும் மனோபாவமும் வளர்ந்தது.

ஐந்து வருடங்கள் மக்கள் இல்லாத பிரதேசமாகக் காணப்பட்ட புங்குடுதீவு, வேலணைத்தீவு, மண்டதீவு ஆகிய பகுதிகள் யுத்தத்தாலும் இயற்கையாலும் பெரும் அழிவுக் குட்பட்டன. மேலும் மீள் குடியேற்றம் ஆரம்ப மான பொழுது சமூக விரோத சக்திகள் மிகவும் துடிப்பாகச் செயற்பட்டு குறிப்பாக வீடுகளுக்குப் பலத்த சேதங்களை எற்படுத்தினர். கதவுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நிலைகள் ஓடுகள் எனக் கழற்றி விற்றனர். இதனால் வாழ்வகங்கள் மேலும் அழிவுக்குட் படலாயின. வீடுகள், விவசாய நிலங்கள் மற்றும் பாடசாலைகள் போன்றன பெரும் அழிவிற்குட் பட்டதினால் மக்கள் குடியேற தயங்கினர். விவசாய நிலங்கள் ஆளணியினர் இல்லாமல் முழுமையாகப் பயன்படுத்த முடியாது போயிற்று. வான் பயிர் பிரதேசங்களை மக்கள் பெற முடியாது புதர் படர்ந்த பகுதிகளாகவும் பாதுகாப்பற்ற பகுதிகளாகவும் மாறியிருந்தன. இத்தகைய சூழ்நிலையிலேயே 1996க்குப் பின்னர் மீள் குடியேற்றம், மீள் புனருத்தாரணம், மீள் கட்டுமாணம், மீள் உயிர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாகி இன்றைய நிலையை அடையப் பெற்றது. தீவுப்பகுதியில் இட்ட முதலுக்குரிய வளர்ச்சி பெறப்படவில்லை என்பது கவலைக் குரிய விடயமாகும். இதற்கு காரணங்கள் என்ன என ஆராயப்பட வேண்டும். சரியான துறை களில் முதலிடப்படவில்லையா? சரியான முறையில் திட்டங்கள் நிறைவேற்றப்பட வில்லையா? ஊழல், விரயம் காரணமாகத் திட்டங்கள் சரியாக நிறைவேற்றப்பட வில்லையா? திட்டங்களை இனங்காண்பதிலும் நிறைவேற்றுவதிலும் செயற்படுத்துவதிலும் மக்கள் பங்களிப்பு போதுமானதாக இருக்க வில்லையா? என பல கேள்விகள் கேட்கப் படலாம். சுருக்கமாகச் சொல்லின் தலைக்கான மூலதனச் செலவும் நடப்புச் செலவும் இப் பிரிவில் உயர்வாக இருந்தும் மக்கள் வாழ்வா தாரம், வாழ்க்கைத்தரம், சமூக அந்தஸ்து, மன நிறைவு என்பன பெரிதாக ஏற்படவில்லை என்பதைக் காணமுடிகிறது. பிற பகுதிகளில் இருந்து வேலைக்கு வருபவர்கள் உடன் திரும்பும் பண்பு இன்று காணப்படுகிறது. யாழ்ப் பாணத்தில் இருந்து 30 நிமிடத்துக்குள் சென்றடையக்கூடிய பிரதேசத்தைப் பின்தங்கிய அல்லது விருப்பமில்லாத பகுதிகளாக கருதும் போக்குகளை காணமுடிகின்றது.

## தரைத்தோற்றம்/ காலநிலை

இப்பிரிவு நான்கு தீவுகளை உள்ளடக் கியது. அவையாவன வேலணைத்தீவின் கிழக்குப்பகுதி, புங்குடுதீவு, நயினாதீவு மண்டைதீவு. இத் தீவுகளை விட மக்களற்ற சிறு சிறு நிலத்திணிவுகளும் காணப்படுகின்றன. இச் சிறு தீவுகள் சிலவற்றில் சிறு வழிபாட்டுத் தலங்கள் காணப்படுகின்றன. இச் சிறு தீவுகள் இன்று சுற்றுலாத் துறையினரின் கவன ஈர்ப்புக் குள்ளாகியிருக்கின்றன.

இப்பிரிவு பிரதேசம் பொதுவில் ஒரு சமதரையாக இருப்பினும் நுண்மட்டத்தில் உயர வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம். வேலணைத்தீவில் கல்லாண்ட முளங்குப் பகுதி 13 அடி உயரமானதாகவும் புங்குடுதீவில் வீரா மலை 13 அடி உயரமானதாகவும் நயினாதீவின் தென்பகுதியும் மண்டை தீவின் தென் கிழக்குப் பகுதியும் உயரமான பகுதியாகவும் இருப் பதைக் காண முடிகிறது. இப்பிரிவில் உயர அடிப் படையில் மூன்று வகையான நிலப் பரப்புக் களை அடையாளம் செய்ய முடியும். அவை யாவன

1. மக்கள் வாழ்விடங்களையும் தோட்டக் காணிகளையும் பனை மற்றும் வான் பயிர் நிலங்களையும் கொண்ட மேட்டு நிலம்
2. நெற்செய்கை நடைபெறும் வயல் பகுதிகள்
3. மழைக் காலங்களில் முற்றாக நீரில் மூழ்கும் தரவைகளும் சதுப்பு நிலங்களும்.



புகையிலைச் செய்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசத்தின் காலநிலை பொதுவில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கால நிலையை ஒத்துக் காணப்படினும் வெப்ப நிலையில் இப்பிரதேசம் சற்றுக் கூடியதாகவும் மழைவீழ்ச்சி குறைவானதாகவும் காற்றின் தாக்கம் அதிகமாகவும் இருக்கின்றது.

இப் பிரதேசத்தின் வாழ்வாதாரத்தை முன்னேற்றப் பல திட்டங்களை முன்னெடுக்க வேண்டியிருக்கின்றது. விவசாயம், மீன்பிடி, பனைசார் தொழில்களையும் வீட்டு வசதிகளையும் மேம்படுத்தும் பொழுது தான வாழ்வதற்கான ஆதாரம் கிடைக்கும். மக்களின் வீட்டுவளத்தை மேம்படுத்த பல திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். புதிய வீடுகள் அமைக்கப்படுவதுடன் நூற்றுக்கணக்கான கைவிடப்பட்டு அழியும் நிலையிலுள்ள வீட்டுவளங்களைக் கைப்பற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். இப் பிரிவில் அழிவுறும் நிலையில் காணப்படும் கல் வீடுகள் குறிப்பாக 1970 களில் மிளகாய்ச் செய்கை மூலம் கிடைத்த வருமானத்தில் கட்டப்பட்டவையாகும். பெரும் பாலான வீடுகள் 50 வயதிற்குட்பட்டவையாக இருப்பதால் இன்னும் பல ஆண்டுகள் மக்கள் வாழக் கூடியவை. அரசாங்கம் முன்னெடுத்துள்ள "வளமான வீடு" என்ற திவிநெகும திட்டத்தின் மூலம் அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும். குறுகிய காலத்தில் பயன்தரு தென்னை, மா, பலா மற்றும் பல பழ மரங்கள் நடுவதன் மூலம் வளமான வீட்டை உருவாக்க முடியும்.

விவசாய அபிவிருத்தியை முன்னெடுக்கத் தோட்டப்பயிர் செய்கையும், நெற் செய்கையும் அதிகரிக்க வேண்டும். இதற்கான வாய்ப்புக்கள் உள. இப் பிரிவில் முன்னர் செய்தளவு தோட்டப் பயிர்செய்கையை மேற் கொள்ளப் போதிய விவசாய தொழிற்பேட்டை இன்மையும் புகையிலைக்குரிய கேள்வி தொடர்ச்சியாக தென் இலங்கையில் வீழ்ச்சி கண்டு வருவதும் இப்பகுதிப் பொருளாதார வீழ்ச்சியும் முக்கிய காரணங்களாக இருக்கின்றன. இதனால் வெங்காயம், மிளகாய், முருங்கை, திராட்சை போன்ற புதிய பயிர்களை விருத்தி செய்யும் இடத்துதான் தோட்ட நிலங்களில் இருந்து முழுமையான பலனைப் பெற முடியும்.

இப் பிரதேசத்தில் நெற் செய்கையை முன்னெடுக்க பல தடைகளைத் தாண்டி நாட்ட வேண்டி உள்ளது. பல காலமாக நெற்செய்கை நிலங்கள் பயிர் செய்யாமல் விட்டதால் வரம்புகள் அழிந்தும் புற்தரவைகளாக மாறியும் நிலமும் சற்று உயர்ந்தும் போய்விட்டன. மேலும் முன்னர் தொடர்ச்சியாக இருந்த வயல் நிலங்களில் இடையிடையே மண்பரப்பி தோட்ட நிலங்களாக மாற்றப்பட்டதால் அவை தனித் தனித் துண்டுகளாகி விட்டன. இதனால் நெற் செய்கை காணிகளில் நெல் பயிரிட அவற்றைச் சுற்றி வேலி அடைக்க வேண்டி உள்ளது. வேலி இல்லை எனில் பயிர்களை கட்டாக்காலி கால் நடைகளில் இருந்து காப்பாற்ற முடியாது. வேலி அடைப்பது மிகவும் செலவு கூடிய விடயமாக இருக்கிறது. மேலும் மழைவீழ்ச்சி இங்கு ஒழுங்காக இல்லாது இருப்பதாலும் நிலமும் உலர் தன்மையாக இருப்பதாலும் நெற் செய்கையை இலாபகரமாகச் செய்து முடிப்பது மிகவும் கடினமாக இருக்கின்றது. நெற்செய்கை வெற்றிக்கு கமநலசேவை நிலையங்களின் உதவிகள் ஒத்தாசைகள் ஊக்கங்கள் மிக முக்கியமானவையாக உள்ளன.



*கட்டாக்காலி கால்நடைகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரவை நிலங்கள் இப்பிரதேச மக்களின் சமுதாய கால்நடை மேய்ச்சல் நிலங்களாகும். வேலணைத் தீவில் யாழ்ப்பாணம் – ஊர்காவற்றுறை வீதியில் இரு மருங்கும் காணப்படும் தரவை நிலம் சரவணை, மயிலப் புலம், பள்ளம்புலம், நாவலடிப்புலம், மண்கும் பான், அல்லைப்பிட்டி கிராம மக்களின் கால் நடைகளுக்கான சமுதாய மேய்ச்சல் நிலமாகும். இது போல சிறு வளவில் புங்குடுதீவு, நயினாதீவு, மண்டதீவு பகுதிகளில் சமுதாய மேய்ச்சல் தரவைகள் காணப்படுகின்றது. அண்மைக் காலத்தில் இத் தரவை நிலங்களில் இருந்து கட்டுப்பாடற்ற முறையில் மேல்மண் அகற்றப் படுவதால் நிலம் பள்ளக் காணிகளாக அல்லது பாழ் நிலங்களாக மாற்றப்படுவதுடன் புற் தரையின் தரமும் வீழ்ச்சியடைந்துள்ளது இப் பிரதேசத்தின் கால்நடை தொழில் விருத்திக்கு இங்கு காணப்படும் சமுதாய மேய்ச்சல் தரவை களின் தரம் உயர்த்தப்படுவதுடன் இவைகளின் சுற்றுச்சூழல் தரமும் குறைவடையாது பார்க்கப்பட வேண்டும். இச் சமுதாய மேய்ச்சல் நிலங்களில் தரமான புதிய புற்கள் அறிமுகம் செய்யப்படுவதுடன் கோடையில் புழுதி எழும்புவதை கட்டுப்படுத்தக்கூடிய தாவரப் போர்வையை ஏற்படுத்த வேண்டும். மேலும் கால்நடைகளுக்கு வருடம் முழுவதும் கிடைக்கக் கூடிய நீர் நிலைகள் விருத்தி செய்யப் பட வேண்டும். தற்போதைய கால் நடை வளர்ப்பு வளர்ப்பவர்களுக்குச் செலவுமின்றி சிரமமுமின்றி நடைபெறும் தொழிலாகும். இதனால் இம்முறை யான கால்நடை வளர்ப்பை இதன் இன்றைய கட்டமைப்புக் குறையாமல் விருத்தி செய்வதன் மூலம் நல்ல பயன்களைப் பெறமுடியும். இந்த முறையையும் தொட்டித்தீன் மூலம் முன்னெடுக் கப்படும் உயர்தரப் பாற் பண்ணை முறையையும் தனித்தனியாக முன்னெடுக்க வேண்டும். அப்பொழுது தான் இரு முறைகளாலும் நன்மை பெற முடியும்.

தீவுப் பகுதியில் விவசாயத்திற்கு சமனான முறையில் மீன்பிடியும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. பெரு எண்ணிக்கையானவர்கள் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளதுடன் பல குடும்பங் களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையான வரு மானத்தை கொடுத்து வருகின்றது. அல்லைப் பிட்டி, மண்டைதீவு, செட்டிபுலம், துறையூர், அம்பிகைநகர், புங்குடுதீவு கரையோரங்கள் நயினாதீவு தெற்குப் பகுதிகளில் மீன்பிடி குடியிருப்புக்கள் காணப்படுகின்றன. மீன்பிடித் தொழில் அண்மையில் சில முன்னேற்றங்களை கண்டு வந்தாலும் தொழில் வளருவதற்கு இன்னும் பல செயல் திட்டங்கள் முன்னெடுக்கப் பட வேண்டும். அவையாவன

1. தூரக்கடலுக்குச் சென்று மீன்பிடிக்கக்கூடிய மீன் படகுகள் வலைகள் மற்றும் சேவைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.
2. துறையூர், செட்டிபுலம், அல்லைப்பிட்டி, மண்டைதீவு கிழக்கு, கண்ணகையம்மன் கோவிலடி, நயினாதீவு தெற்கு குடியிருப்புக் களை சுற்றி துறைகள் அமைக்கப்பட வேண்டும்.
3. வேலணைத் துறையூரில் அமைக்கப்பட்ட மாதிரி பாற்தொழிற்சாலை, மீன் பாது காப்புப் பெட்டகம், நவீன கருவாடு பதனிடும் முறைகள் என்பன ஏனைய இடங்களிலும் (செட்டிபுலம், புங்குடுதீவு) விருத்தி செய்ய வேண்டும்.
4. மீன்பிடித் தொழில் விருத்தி பலருக்குப் புதிய வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுக்கும்.

### *பனைசார் தொழில்கள்*

விவசாய மீன்பிடிக்கு அடுத்து பனைசார் தொழில் முக்கிய வாழ்வாதாரத் தொழிலாக இருக்கின்றது. கள்ளு இறக்கல் மற்றும் பனம்பழம், ஒடியல், பனையோலை சார்பான பொருட்கள் உற்பத்தி மூலம் தொழில் வாய்ப்புக்கள் பெறப்படுவதுடன் முழுநேர அல்லது பகுதிநேர வேலை மூலம் நல்ல வரு மானத்தை பெற முடியும். பனை அபிவிருத்திச் சபையின் தொழிற்பாடுகள் மூலம் பனைசார் தொழில்கள் முன்னெடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பனம் கைவினைப் பொருட்கள்

## நீரும் / குடிநீரும்

தீவுப் பகுதியின் காலநிலை காரணமாக இங்கு வருடம் முழுவதும் பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதும் விவசாயத்துக்கான நீரைப்பெறுவதும் கடினமாகும். வருடத்தில் ஒக்ரோபர் ஏப்ரல் மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இப் பகுதியில் விவசாயம் செய்வதற்கு போதிய தரைக்கீழ் நீர் உண்டு. ஏப்ரல் ஒக்டோபருக்கு இடைப்பட்ட காலத்தில் விவசாயம் செய்வதற்கு நீர் இல்லை என்றே கூறலாம். இப் பிரதேசத்தில் விவசாயச் செய்கை காலபோகத்துடன் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் தங்கள் குடிநீர்த் தேவையை தோட்ட/வயல் நிலங்களில் இருந்து பெற்று வந்தனர். காலக் கிரமத்தில் குறிப்பாக இடப் பெயர்வுடன் கிணறுகள் தூர்ந்தும் பழுதடைந்தும் மாசடைந்தும் போனதால் தற்பொழுது முழுக்க முழுக்க சாட்டிக் குடிநீரை அல்லது சாட்டியில் இருந்து பவுசர் மூலம் பெறும் நீரையே மக்கள் நம்பி வாழ்கின்றனர். சாட்டி, மண்கும்பான், அல்லைப்பிட்டி கிராமங்கள் மணற் பாங்கான பகுதிகளாக இருப்பதுடன் நல்ல தரைக்கீழ் நீரைக் கொண்டனவாக உள்ளன. சாட்டியிலிருந்து குழாய் வழியாக வேலணைக் கிராமத்திற்கு பொதுக் குழாய் முலமும் [Stamding Pipe] ஒரு சில வீடுகளுக்கு நேரடியாகவும் நீர் விநியோகிக்கப்படுகின்றது. மக்கள் தங்கள் குடிநீர் தேவையை பொதுக் குழாய் மூலமும் பெறுகின்றனர். எனினும் வேலணைக் கிராமத்தின் பல பகுதிகள் இன்றும் குழாய் நீர் வசதியை பெறவில்லை. புங்குடு தீவுக்கு பவுசர் மூலம் சாட்டி நீர் விநியோகிக்கப் படுகின்றது. நயினாதீவுக்கும் மட்டுப்படுத்தப் பட்ட சாட்டி நீர் விநியோகிக்கப்படுகின்றது. மண்டை தீவுக்கு அல்லைப்பிட்டியிலிருந்து நீர் விநி யோகிக்கப்படுகின்றது. அல்லைப்பிட்டியிலிருந்தே ஊர்காவற்றுறைக்கும் நீர் குழாய் வழியாக எடுத்துச் செல்லப்படுகின்றது. இரணைமடு யாழ்ப்பாணக் குடிநீர் திட்டத்தில் தீவுப் பகுதிகள் உள்வாங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2016இல் நிறைவடையும் பொழுது வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, மண்டைதீவு, இரணைமடு நீரைப் பெறும் – பொறுத்திருந்து பார்ப்போமாக.

இந்நிலையில் இப்பிரிவின் நீர் வளத்தை தரை மேல் தரைகீழ் நீர்வளங்களை மேம்படுத்தப் பின்வரும் திட்டங்களை முன்னெடுக்கலாம். சில திட்டங்கள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருப்பினும் சரியான முறையில் முகாமைத்துவமோ கண்காணிப்போ இல்லாமல் விடப்பட்டுள்ளமை கவலைக்குரியதாகும். முக்கிய நீர் வள மேம்பாட்டுத் திட்டங்கள் பின்வருமாறு :-

1. கடல் நீர் உட்புக விடாத தடுப்பணைகள்
2. குளங்கள் சிறுகுளங்களின் நீர் முகாமை
3. நுண் வடிகால் நீர்வள மேம்பாடும் முகாமைத்துவமும்
4. மழை நீர் சேகரிப்புத்திட்டம்

கடல் நீர் உட்புகவிடாத தடுப்பணைகள் மண்கும்பானிலிருந்து நாய்க்குட்டி வாய்க்கால் வரையும் அமைக்கப்பட்டுள்ளன. இது போல அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, சுருவில் ஆகிய இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இத் திட்டங்கள் மூலம் பயன்பெறப் பெற்றாலும் சரியான கண்காணிப்புச் செய்யுமிடத்து மேலும் கூடிய பயனைப் பெறமுடியும்.

காலத்துக்குக்காலம் அரச திணைக் களங்களாலும் வேறு சிறப்புத் திட்டங்களாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளங்கள் ஆழப்படுத்தப்பட்ட போதும் சரியான முறையில் இத்திட்டங்கள் முன்னெடுக்கப் படாததால் இட்ட செலவுக்கு ஏற்ப பயனைப்பெற முடியவில்லை. இதற்கு பல காரணங்கள் உண்டு. பல வேலைத்திட்டங்கள் உள்ளூருக்கு பொருத்தமான முறையில் முன்னெடுக்கப் படாதவை. உதாரணமாக யாழ்ப்பாணப் பகுதியில் குளங்களைச் சுற்றி அணை அமைக்கக் கூடாது. குளத்திற்கு நாலா பக்கத்தி லிருந்தும் நீர் வருவது வழக்கம். அணை அமைக்கப்படின் அணைக்கு வெளியில் தான் நீர் காணப்படும். இங்கு தேக்க முடியாது. இதனால் சுற்றி வர அணை அமைக்கப்படாது குளங்கள் ஆழப்படுத்தப்பட வேண்டும். நீர் நிற்பதாலும் ஆழமாக்கினால் நீர் உருவாகி விடும் என்ப தாலும் குளங்கள் ஆழப்படுத்தப்படுவதில்லை. இவ் வேலைத்திட்டங்கள் மூலம் குளத்தின் நீர் கொள்ளளவையோ நீரின் தரத்தையோ பல இடங்களில் கூட்ட முடியவில்லை. குளங்களின் அபிவிருத்தி கொள்ளளவை அதிகரிக்கும் இலக்கை மையமாகக் கொண்டு இருக்க வேண்டும். பல குளங்களின் நீர் கொள்ளளவை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக் கின்றது. இந்நிதி தக்க முறையில் பயன் படுத்தப்பட வேண்டும்.

### நுண்வடிகால் மேம்பாட்டுத்திட்டத்தில்

1. வேலணையாறும் – சரவணைக்கடல் நீர் ஏலத்திட்டமம்மல்
2. புங்குடுதீவு கள்ளியாறு அபிவிருத்தித் திட்டம்
3. அல்லைப்பிட்டி நுண்வடிகால் மேம்பாட்டுத் திட்டம்

ஆகியன முக்கிய திட்டங்களாகும். இம் மூன்று திட்டங்களும் அபிவிருத்தி செய்யப்படின் வேலணை, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளில் தரைக்கீழ் நீர் வளமும் தரைமேல் நீர் நிரைகளின் வளமும் தரமும் அதிகரிக்க வாய்ப்புண்டு.

### அபிவிருத்தியின் முக்கிய பாதைகள்

பின்வரும் பாதை அமைப்பு அபிவிருத்தியை மேம்படுத்தும்

01. யாழ்ப்பாணம் – வழுக்கை – அராலி – குறிகாட்டுவான் இப்பாதை அபிவிருத்தி தீவகத்தின் அபிவிருத்தியில் முக்கிய பங்கை வகித்த பொழுதும் இதன் முக்கியத்துவம் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொழுதும் காலத்திற்கு காலம் சர்வதேச உதவியுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்படப் போவதாக கூறப் பட்ட பொழுதும் இன்றும் ஆக்க பூர்வமான பணி ஏதும் நடைபெறவில்லை. இப் பாதை அமைக்கப்படின் தீவுப்பகுதிகளும் – வலி காமமும் மிகவும் நெருக்கமாக வருவதுடன் யாழ்ப்பாணத்துக்கான இரண்டாவது பாதையும் கிடைக்கப்பெறும். இதனால் யாழ்ப்பாணம் தொடக்கம் ஊர்காவற்றுறை வீதியில் வாகன நெரிசல் குறைவடையும்.

02. மண்டைதீவு – அல்லைப்பிட்டி – மண் கும்பான் – சாட்டி – வேலணை வீதி

இப்பாதை மண்டைதீவில் இருந்து மண்கும்பான் வரை தற்பொழுது அபிவிருத்தி செய்யப்படாத சிறு தெருவாக இருக்கின்றது. அல்லைப் பிட்டிக்கும் மண்கும்பானுக்கும் இடைப்பட்ட பகுதி தார் போடப்பட்டுள்ளது. இப் பாதையை மண்கும்பானிலிருந்து சாட்டி வழியாக வேலணை– குறிகாட்டுவான் வீதி வரை நீடித்தால் சாட்டி மேற்கு மண்கும்பான் புட்டி வழவுப் பகுதிகள் வளர்ச்சி பெற வாய்ப்பு ஏற்படும். இவ் வீதி செல்லும் பாதை நன்னீர் பரப்பாக இருந்தால் குடியிருப்பு விருத்திக்கு நல்ல வாய்ப்புள்ளது. மேலும் இப்பாதை ஆர வயல் பள்ளம்புலம் ஊடாக சரவணை வரை நீடித்தால் இப்பகுதிகள் வளர்ச்சி பெற முடியும்.

03. மடத்துவெளி – ஊரதீவு – இறுப்பிட்டி – பெருங்காட்டுவீதி

இவ்வீதி ஏற்கனவே இருக்கின்ற பொழுதும் இதன் தரம் போக்குவரத்துக்கு போதியதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. இவ்வீதியை அகலப்படுத்தி விருத்தி செய்யப்படுமாயின் ஊரதீவு விருத்தி செய்வதுடன் இறுப்பிட்டி குறிகாட்டுவான் துறைகளின் விருத்திக்கும் வழி வகுக்கும். நயினாதீவுக்கான யாத்திரிகைகள், சுற்றுலாவினர் மற்றும் பிரதேச பொதுமக்கள் நிறைவான பலனைப்பெறுவர்.

04. வேலணை / புளியங்கூடல் பாதை

யுத்தத்தினாலும் கடற்படைத்தளம் இருந்ததாலும் இப்பாதையும் மத்திய கல்லூரிச் சுற்றாடலும் பெரிதும் பாதிக்கப்பட்டு இன்று வரை தனது பழைய நிலையைப் பெறவில்லை. 1970களில் இப்பிரதேசம் மிகவும் வளமான குடியிருப்பு விவசாய பிரதேசமாக இருந்தது. மேலும் 778, 779 பஸ்சேவைகள் இவ்வழியாக இடம்பெற்றன. தற்பொழுது இவ்விரண்டு பஸ் சேவைகள் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வீதி மேம்படுத்தப்படுமிடத்து மத்திய கல்லூரிச் சுற்றாடல் கொட்டைப் பெட்டி மூலைப்பகுதிகள் புனர்வாழ்வு பெற்று புதுப்பொலிவு பெற வழி ஏற்படும்.

### *புங்குடுதீவு கரையோரச்சாலை*

கண்ணகி அம்மன் கோவிலில் இருந்து ஒரு பக்கம் மடத்துவெளி வரையும் மறுபக்கம் நடுவுத்தருத்தி வரையும் தற்பொழுது அபிவிருத்தி அடையாத வண்டல் பாதையும் சிறு தெருவும் உள்ளன. மடத்து வெளியிலிருந்து கரையோரமாக நடுவுத்தருத்தி வரை இப்பாதை விருத்தி செய்யப்படின் மீன்பிடி சுற்றுலாத்துறை மற்றும் வாழ்விட விருத்திக்குப் பெரும் உதவியாக அமையும். கண்ணகி அம்மன் கோவிலுக்கு வடக்கில் மீன்பிடித்துறைமுகம் அமையுமாயின் இப்பாதையின் தேவை மேலும் அதிகரிக்கும்.

### *துறையூர்/கல்லாண்டமுளங்கு/செட்டிபுலம்*

இப்பாதை அமைக்கப்படின் கல்லாண்ட முளங்குப் பகுதியில் மக்கள் குடியிருப்பு அமைக்கவும் விவசாய/ மீன் தொழில் விருத்திக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.

### *மண்டைதீவு - அல்லைப்பிட்டி வீதி*

தற்பொழுது சிறு வீதியாக இருக்கும் இவ்வீதி பெரும் சாலையாக விருத்தி செய்யப்படின் மண்டைதீவு வேலணைத்தீவுடன் நெருக்கமான உறவைப் பெறவும் வேலணை வங்களாவடி சேவை நிலையத்தின் அரச சேவைகளை இலகுவாகப் பெறவும் வாய்ப்பு ஏற்படும்.

### *கல்வி*

கல்வி முன்னேற்றத்துக்கு பின்வரும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வெண்டும்

1. வேலணை மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக விருத்தி செய்யப்பட வேண்டும்
2. புங்குடுதீவு மகா வித்தியாலயம் 1AB பாடசாலையாக தரம் உயர்த்தப்பட வெண்டும்.
3. மண்டைதீவு நயினாதீவு மகா வித்தியாலயங்களும் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயமும் க.பொ.த உயர்தர வகுப்புக்கள் கொண்ட பாடசாலையாக விருத்தி செய்யப்பட வேண்டும்

தீவுப்பகுதி ஆசிரியர்களுள் குறைந்தது 50 விகிதத்தினர் உள்ளூர் வாசிகளாக இருப்பது நல்லது. இதன் மூலம் அவர்களது உழைப்பும் மற்றும் சேவைகளும் உள்ளூர் மக்களுக்குக் கிட்டும். 1940, 1950, 1960, 1970 களில் தீவுகளின் வளர்ச்சிக்கு உள்ளூர் தமிழ் ஆசிரியர்களின் பங்களிப்பு மிகக் காத்திரமாக இருந்ததாக நாம் அறிகிறோம். இன்று இப்பிரதேசத்தின் வளர்ச்சிக்கு இங்கு கடமையாற்றும் ஆசிரியர்களால் கிடைக்கும் பங்களிப்பு மிகவும் அவசியம் என்பதை சுட்டிக் காட்டத் தேவையில்லை.

### *சுகாதாரம்*

வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு மற்றும் மண்டைதீவு வைத்தியசாலைகளில் மருத்துவ ஆளனியினர் பற்றாக்குறை பெரும் பிரச்சனையாக இருக்கின்றது. ஆளனி பற்றாக் குறையினை நிவர்த்தி செய்ய பொருத்தமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கை வேண்டப்படுகின்றது. மேலும் பொது சுகாதார நிலையில் தீவுப்பகுதி மற்றைய பிரதேசங்களிலும் குறைந்த நிலையிலுள்ளது. இதனால் பொதுசுகாதாரத்தை மேம்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் வேண்டப்படு கின்றன.

## *சுற்றுலா*

பின்வரும் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்

1. சாட்டி, கண்ணகையம்மன் கடற்கரைகள் சுற்றுலாத் துறையினரை கவரக்கூடிய முறையில் விருத்தி செய்யப்படல் வேண்டும்.
2. நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில், நயினாதீவு புத்த விகாரை, புங்குடுதீவு கண்ணகியம்மன் கோயில், வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் கோயில், மண்குப்பான் பிள்ளையார் கோயில், சாட்டி மாதா கோயில் மற்றும் மண்குப்பான் பள்ளிவாசல் மற்றும் திருத்தலங்களை சுற்றுலாத்துறை, ஆன்மிக யாத்திரைப் பின்புலத்தில் விருத்தி செய்தல் அவசியம்.
3. சிறு தீவுகளை சுற்றுச்சூழல் நோக்கில் சுற்றுலாத்துறை இடங்களாக விருத்தி செய்தல் நல்லது.
4. அல்லைப்பிட்டி, பண்ணை – மண்டைதீவு முக்கோண கண்ணாக்காட்டு சதுப்புப் பிரதேசத்தை பறவைகள் சரணாலயமாக விருத்தி செய்தலும், சுற்றுலாப் பயணி களைக் கவரும் வகையில் சுற்றுச்சூழலை விருத்தி செய்தலும் அவசியம்.

மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பின்வரும் நிலையியல் களை சிறு நகரங்களாக விருத்தி செய்தல் வேண்டும்.

1. வங்களாவடி – ஏற்கனவே பல அரச காரியாலயங்கள் மற்றும் வங்கி தனியார் வர்த்தக நிலையங்களைக் கொண்டுள்ளது. இதனை சேவை வழியாலும் பௌதீக கட்டமைப்பாலும் சிறு நகரமாக விருத்தி யாக்க வேண்டும்.
2. பெருங்காட்டுச் சந்தி:– இதனைப் புங்குடு தீவின் பிரதான சேவை மையமாக விருத்தி செய்ய வேண்டும், இன்று 5000 மக்கள் புங்குடுதீவில் வாழ்கின்றனர். இம் மக்களின் பிரதான சேவை நிலையமாக இதனை விருத்தி செய்தல் வேண்டும்.
3. நயினாதீவு– சேவை மையம் :– நயினாதீவு நாகபூசணி கோயில் மற்றும் நாகதீப விகாரையை அண்டிய பகுதி ஒரு சிறு நகரமாக வளர்க்கப்பட வேண்டும். இங்கு இந்து பௌத்த மக்களின் சமயப் பொருட்கள் மற்றும் சேவைகள் கிடைக்கக்கூடிய இடமாக விருத்தி செய்யப்படல் வேண்டும்.
4. புளியங்கூடல் சந்தி :– புளியங்கூடலை ஒரு சிறு கைத்தொழில் சேவை மையமாக விருத்தி செய்வது நல்லது. ஏற்கனவே புளியங்கூடல் இயந்திரங்கள் திருத்தும் இடமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
5. மண்டைதீவு மத்தி :– மண்டைதீவு மக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு சேவை நிலையம் மண்டைதீவு மத்தியில் விருத்தி செய்யப்படல் வேண்டும். அரச காரியாலயங்கள், வங்கி, தபாற் கந்தோர், வர்த்தக நிலையங்கள் இங்கு அமையவேண்டும்.

மேற்குறிப்பிட்ட அபிவிருத்தி திட்டங் களை நல்ல முறையில் முன்னெடுத்தால் தீவுகள் தெற்கு பிரிவு குறுகிய காலத்தில் நல்ல முறையில் மேம்பாடு அடையும். கடந்த ஏழு ஆண்டுகளுக்கு மேல் இப் பிரிவில் பெருமளவு முதல் இட்டபொழுதும் அதற்குரிய அபி விருத்தியை காணமுடியவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்.


நல்ல திட்டங்களை இனம் கண்டு சிறந்த இலக்குகளுடன் உள்ளூருக்கு பொருத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான தந்திரோபாயங்கள் கடைப்பிடிக்கப்படின் திட்டங்கள் தோல்வி அடையாது மேலும் மக்களை அணிதிரட்டி அபிவிருத்தியில் பங்காளிகளாக மாற்றி திட்டங்களை முன்னெடுத்தால் இலக்குகளை அடைவது கடினமாகாது. தீவுகள் தெற்கு பிரிவின் வளங்கள் பற்றிய மதிப்பீடுகள் ஏற்கனவே தொகுக்கப்பட்ட நிலையில், அடுத்த கட்டமாக திட்டங்களை இனங்கண்டு அவற்றைச் செயற்றிட்டங்களாக மாற்றுவது பிரதேச மேம்பாட்டுக்கு முக்கிய மாகும். ஒரு பிரதேசம் வாழ்வதற்கான வசதி வாய்ப்புக்களையும், நல்ல பண்பாட்டுச் சூழலையும் கொண்டிருந்தால் மக்கள் வாழ விரும்புவர். எனவே இவ்விரு இலக்குகளை அடையக் கடின உழைப்பு தேவை. இதுவே தருணம், இணைந்து செயற்பட்டு, இலக்குகளை அடைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவகம் தெற்கு பிரதேச பொருளாதார சமூக நிலை அன்றும் - இன்றும்

பேராசிரியர் கா.குகபாலன்
புவியியற்றுறை,
யாழ் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென் மேற்கே அமைந்துள்ள தீவுத் தொகுதிகள் வரலாற்றுக்காலம் தொட்டு சமூக பொருளாதார, பண்பாட்டியல் அடிப்படையில் சிறப்புற்று விளங் கியதை பல்வேறு வரலாற்று ஆவணங்கள் மூலம் அறிந்துகொள்ள முடியும். இத்தீவுகள் தென்னிந் தியாவுக்கும், யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு மிடையில் அமைவு பெற்றுள்ளதனால் இவ்விரு வேறு பகுதிகளின் சமூக பொருளாதார பண் பாட்டுத் தொடர்புகளுக்கு ஒரு பாலமாக அமைந்திருந்தது என்றால் மிகையாகாது. அத்துடன் காலப்போக்கில் யாழ்ப்பாணக் குடா நாட்டினதும் நாட்டின் ஏனைய பகுதிகளின் பொருளாதார சமூக, பண்பாட்டியலுடன் மிக நெருங்கிய தொடர்பு காணப்பட்டிருந்தமைக்கு தீவகப்பிரதேசம் கடலால் பிரிக்கப்பட்டிருந்த போதிலும் கடலெல்லைப்பரப்பு மிகக்குறுகிய தாக விருந்துள்ளமையேயாகும்.

தற்போதைய நிலையில் தீவகம் நான்கு அரச நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்ற போதிலும் பொருளாதார சமூக பண்பாட்டு விழுமியங் களைக் கருத்திற்கொள்ளின் வேற்றுமையிலும் ஒற்றுமைப்பண்புகளைக் கொண்டிருக்கின்றது. அதாவது மக்கள் வாழக்கூடிய எட்டுத்தீவுகளில் வரலாற்றுக்காலம் தொட்டு மக்கள் வாழ்ந்து வந்துள்ளதை வரலாற்றறிஞர்களின் பல்வேறு குறிப்புகளிலிருந்து பெற்றுக் கொள்ள முடி கின்றது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் தீவகத்தின் குடித்தொகை நிலைபற்றி குவைறோஸ், போலததிர்திதாரே, றிபைறோ, போல்டயஸ் போன்றவர்களும் ஆங்கிலேயர் ஆட்சியில் சைமன் காசித் செட்டி மற்றும் குடிக் கணிப்புகளின் மூலம் மக்கள் வாழ்வும் வளமும் சிறப்புற்றிருந்தது என்பதைக் கூறிச் செல் கின்றனர். ஆங்கிலேயர் ஆட்சியில் மேற் கொள்ளப்பட்ட குடிக்கணிப்புக்களின் பிரகாரம் அட்டவணை Iல் குடித்தொகை நிலைமை தரப் பட்டுள்ளது.

அட்டவணை I
தீவுப்பகுதியின் குடித்தொகைப் போக்கு 1871 – 2012

| ஆண்டு | குடித்தொகை | குடித்தொகை வேறுபாடு | வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|
| 1871 | 21517 | – | |
| 1881 | 20353 | –1164 | –0.5 |
| 1891 | 23474 | 3121 | 1.5 |
| 1901 | 27196 | 3722 | 1.6 |
| 1911 | 28200 | 1004 | 0.4 |
| 1921 | 29563 | 1363 | 0.5 |
| 1946 | 41466 | 13903 | 1.9 |
| 1953 | 44448 | 2982 | 1.0 |
| 1963 | 52856 | 8408 | 1.9 |
| 1971 | 58036 | 5180 | 1.2 |
| 1981 | 64127 | 6091 | 1.1 |
| 1991 | 14219 | –49908 | –7.8 |
| 2012 | 39885 | 25666 | 16.4 |

(ஆதாரம்:– குடிக்கணிப்பு அறிக்கையிலிருந்து பெறப்பட்டது 1991ஆம் ஆண்டுக்கான தரவு வேலணைப்பிரதேச செயலக புள்ளிவிபரம்) (காரைநகர்ப்பிரதேசம் தவிர்ந்த)

தீவகப்பிரதேசத்தின் குடித்தொகை யானது 1871ல் 21517ஆகவிருந்து 110 வருடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் மூன்று மடங்காக அதிகரித்து 1981ல் 64127 மக்களாகவிருந்துள்ளனர். 1991ம் ஆண்டு தூண்டப்பட்ட இடப்பெயர்வின் விளைவாக தரைப்போக்குவரத்தினைக் கொண்ட புங்குடு தீவு, வேலணைத்தீவு, மண்டைதீவு போன்ற பிரதேசங்களிலிருந்து ஒட்டுமொத்தமாக வெளி யேறி உள்நாட்டிலும் சர்வதேசங்களிலும் வாழும் நிலை ஏற்பட்டது. தீவகம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் 1981ம் ஆண்டு குடித்தொகையானது 38411ஆக விருந்தது. 1991ம் ஆண்டு 42000 மக்கள் வாழ்ந் திருக்க வேண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இடப்பெயர்வினைத் தொடர்ந்து 5388 பேரே இடம்பெயராது வாழ்ந்துள்ளதாக புனர் வாழ்வு அமைச்சு புள்ளிவிபரங்கள் தெரிவிக் கின்றன.

| கிராமம் | மக்கள் |
|---|---|
| புங்குடுதீவு | 857 |
| மண்டைதீவு | 43 |
| நயினாதீவு | 4233 |
| வேலணைத்தீவு | 255 |
| மொத்தம் | 5388 |

(ஆதாரம்:- புனர்வாழ்வு அமைச்சுக் குறிப்பு- 1992)

1991-1996 ஏப்ரல் மாதம் வரையிலான காலப்பகுதியில் தீவகப்பிரதேசம் முழுவதும் இராணுவக்கட்டுப்பாட்டிலிருந்த படியால் உள் வரவுக்கான வாய்ப்புக்கள் இல்லை சுய விருப்பின் பேரில் பாதுகாப்புப் படையினரின் அனுமதியுடன் கணிசமானோர் திருகோண மலையூடாக வெளிமாவட்டங்களுக்குச் சென்று வந்தனர். 1996 மே மாதம் தீவகத்திற்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குமிடையிலான போக்குவரத்து மீளவும் ஆரம்பிக்கப்படவே உள் வரவுக்கான வாய்ப்பு ஏற்பட்டிருந்தது.

அட்டவனை II
1996ம் ஆண்டினைத் தொடர்ந்து தீவகம் தெற்குப் பிரதேசத்தின் குடித்தொகைநிலை

| ஆண்டு | குடித்தொகை | அதிகரிப்பு |
|---|---|---|
| 1997 | 8200 | - |
| 1998 | 9460 | 1260 |
| 2000 | 10629 | 1169 |
| 2005 | 17588 | 6959 |
| 2009 | 18983 | 1395 |
| 2012 | 16525 | -2458 |

(ஆதாரம்:- பிரதேசசெயலர் அறிக்கை, 1997-2009 குடிக்கணிப்பு அறிக்கை 2012)

1997ம் ஆண்டு மீள் இடப்பெயர் வினைத் தொடர்ந்து 8200 மக்கள் தீவகம் தெற்குப் பிரதேசத்தில் வாழ்ந்த நிலையில் தொடர்ந்து படிப்படியாக உயர்வடைந்து 2009ம் ஆண்டு 18983 மக்களாக உயர்வடைந்த போதிலும் 2012ம் ஆண்டு குடிக்கணிப்பின் பிரகாரம் 16525 மக்களாக குறைவடைந் துள்ளனர். இருப்பினும் பிரதேச செயலக புள்ளி விபரங்களின் பிரகாரம் குடித்தொகை அதி கரித்துச் செல்வதையே சுட்டிக்காட்டுகின்றது. அதாவது பல்வேறு தேவைகளின் நிமிர்த்தம் தீவகம் தெற்குப்பிரிவில் தம்மைப் பதிவுக்குட் படுத்திவிட்டு தீவகத்திற்கு வெளியில் வாழ்ந்து வரும் நிலையினாலேயே இத்தகைய எண்ணிக்கை வேறுபாடு காணப்படுவதாக அவ தானிக்கப்பட்டுள்ளது.

### இடப்பெயர்வு

தீவகத்தில் வாழும் மக்களின் பொரு ளாதார நிலைக்கும் பௌதீகக் காரணிகளான புவிச்சரிதவியல், தரைத்தோற்றம், காலநிலை, மண்வளம், நீர்வளம் என்பவற்றுக்குமிடையே மிக நெருங்கியதொடர்பு காணப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டைப் போல இப்பிர தேசமும் மயோசின் காலத்து சுண்ணப் பாறைத் திடலாக மேலுயர்த்தப்பட்ட பிரதேசமாகும். இங்கு ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் வடகீழ்ப்பருவமழை கிடைக்கப் பெறுகின்றது. வருடாந்தம் சராசரி 50"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குலத்திற்கும் குறைவாகக் கிடைக்கப் பெறும் மழைவீழ்ச்சியில் மேற்குறித்த மூன்று மாதங்களில் 90சதவீத மழை கிடைக்கப் பெறுகின்றது. பொதுவாகத் தீவுப் பகுதிகள் முழுவதும் அடித்தளப்பாறையானது முருகக் கற்பாறையாகக் காணப்படுவதுடன் பெறப்படும் மழைநீர் மிகவிரைவாக தரை மேலாலும் தரை கீழாலும் வெளியேறி விடுகின்றது. இதனால் வேலணைத்தீவில் சாட்டி, மண்கும்பான், அல்லைப்பிட்டி தவிர்ந்த ஏனைய பிரதேசங் களில் கிணற்றுநீர் உவர்த்தன்மை யாகவோ, உப்புநீராகவோ பெரும்பாலான காலங்களில் மாறிவிடும் தன்மையையும் கொண்டுள்ளது. மேற்குறித்த காலநிலைப் பண்புகள் விவசாயத் தொழிலை மட்டுப்படுத்தி யுள்ளதுடன் நன்னீர்த் தட்டுப்பாட்டினால் அவதியுற்று வாழும் நிலை காணப்பட்டுள்ளது. இந் நிலையில் 1960களைத் தொடர்ந்து வசதி படைத்தவர்கள், மற்றும் அரச தொழில் புரிபவரிடையேயான வெளியிடப் பெயர்வு படிப்படியாக அதிகரிக்கலாயின. எனினும் தமது பூர்வீகப்பிரதேசத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தனர்.

இந்நிலையில் 1960, 1970களில் தீவகம் தெற்குப்பிரதேசம் உட்பட தீவகத்தில் “கல்வீட்டு எழுச்சி” நிலை காணப்பட்டிருந்தது. அதாவது பெரும்பாலான குடியிருப்புகள் கல்வீடு களாக மாறின. இந்நிலையில் 1980களைத் தொடர்ந்து வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் யுத்த சூழ்நிலையால் அசாதாரண நிலையின் உருவாக்கமானது இப்பிரதேசத்தினையும் விட்டுவைக்கவில்லை. 1980களைத் தொடர்ந்து தீவகம் தெற்குப்பிரதேசங்களிலிருந்து இளைஞர் களின் சர்வதேச இடப்பெயர்வு முனைப்புப் பெறு கின்றது.

1990ம் ஆண்டு அரசபடைகள் தீவகத் தினைத் தம்வசப்படுத்தவே தம்மைப் பாது காத்துக் கொள்ளும் முகமாக நயினாதீவு மக்கள் தவிர்ந்தவர்கள் வாணர்பாலம், பண்ணைப் பாலத்தினைக் கடந்து யாழ்ப்பாணக் குடா நாட்டின் ஊடாக நாட்டின் ஏனைய பகுதி களுக்கும் சர்வதேசத்திற்கும் இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. வெளியிடப்பெயர்வினை மேற்கொண்ட வர்களின் 80.0 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் விவசாய பாரம்பரியத்தினைச் சேர்ந்தவர்கள். அவர்களில் பெரும்பான்மையானவர்கள் நிலவுடமையாளர்களாகவும் இருந்துள்ளனர். இத்தகையோரில் கணிசமானோர் சர்வதேச புகலிடத்தினைத் தேர்ந்தெடுத்தனர். இந் நிலையில் வேலணை, புங்குடுதீவு, மண்டைதீவு, நயினாதீவு போன்ற கிராமங்களின் விவசாய நிலங்கள் தரிசு நிலங்களாக மாற்றம் பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. அது மட்டு மல்லாது நில அமைவிட எல்லைகளை அறிந் திருந்த முதியோரின் வெளியிடப்பெயர்வும் இறப்பும் நிலவுடமைக்கான உரிமை கோரல் நிலையானது படிப்படியாகத் தூரவிலகிச் சென்று கொண்டிருக்கின்றது. பௌதீகவளம் குன்றிய தமது பூர்வீகப்பிரதேசங்களுக்கு சர்வதேச இடப்பெயர்வாளர் மட்டுமல்லாது உள் நாட்டில் இடம்பெயர்ந்தோரும் மீள் இடப்பெயர் வினை மேற்கொள்வார்கள் என்பது கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது. உதாரணமாக 2011ம் ஆண்டு தீவுப்பகுதியில் உள்ள நிலங் களை நிலவுடமையாளர்கள் உரியமுறையில் பதிவுசெய்ய வேண்டும் என அரசினால் தெரி விக்கப்பட்ட போதிலும் பெருமளவிலானோர் தமது நிலஉடமையை பதிவுக்குட்படுத்தியில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் உரிமையாளர் இல்லாத நிலங்களில் தற்போது வாழ்ந்து வரும் மக்களும் விவசாய நடவடிக் கையில் ஈடுபடும் வாய்ப்பும் இருக்கவில்லை. அதாவது அவர்கள் விவசாயத்தொழிலில் ஈடுபடு வதற்கு விருப்பம் கொண்டவர்களாகவிருக்க வில்லை.

1971ம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்ட செயலக புள்ளி விபரங்களின் அடிப்படையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவகம் தெற்குப்பிரதேசத்தில் நெல் உற்பத்திக் கான நிலம் 1050 ஹெக்டேயர்களாக இருந்தது. அதில் 873 ஹெக்டேயர் நிலம் பயிர் செய்கைக்கு உட்பட்டிருந்தது. 2009ம் ஆண்டு 104 ஹெக்டேயர் நிலப்பரப்பிலேயே பயிர் செய்யப்பட்டிருந்தது. குறிப்பாக வேலணைத் தீவிலேயே அதிகளவு நெல் பயிரிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் 1990ஆம் ஆண்டில் நிகழ்ந்த வெளியிடப்பெயர்வில் விவ சாயத்துடன் தொடர்புடையவர்கள் பெரும் பாலானவர்களாக இருந்துள்ளனர் என்பது தெளி வாகின்றது.

2012ஆம் ஆண்டு குடிக்கணிப்பில் 30341 மக்கள் வாழ்ந்துள்ளார்கள். இவர்களில் பெரும்பாலானோர் விவசாயம் சாராத தொழில் களில் ஈடுபாடு கொண்டுள்ளவர்களே பெரும் பான்மையினர்களாகக் காணப்படுகின்றனர். 2011ஆம் ஆண்டு தீவகம் தெற்குப் பிரதேச செயலகப் புள்ளிவிபரக் கோவையின்படி பயிர்ச் செய்கையில் ஈடுபடாத துறையினரின் பங்கு அதிகரித்துக்கொண்டு சென்றுள்ளதைக் காண முடிகின்றது.

அட்டவணை III

தீவகம் தெற்குப் பிரதேசம் – தொழில்சார் நிலை– 2011 (சதவீதம்)

| தொழில் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| மீன்பிடித்தொழில் | 6144 | 49.3 |
| விவசாயம் | 2716 | 21.8 |
| கூலித்தொழில் | 1867 | 15.0 |
| அரசதுறை | 893 | 7.2 |
| தனியார்துறை | 429 | 3.4 |
| கூட்டுறவுத்துறை | 126 | 1.0 |
| அரசசார்பற்ற நிறுவனங்கள் | 121 | 1.0 |
| ஏனையவை | 162 | 1.3 |
| மொத்தம் | 12458 | 100.0 |

(ஆதாரம்: பிரதேசசெயலகபுள்ளிவிபரம்– 2012)

தீவகம் தெற்குப் பிரதேசத்தில் 2011ஆம் ஆண்டில் மீன்பிடித்தொழிலில் நேரடியாகவோ அன்றில் மறைமுகமாகவோ ஈடுபாடு கொண்டுள்ளோர் 49.3 சதவீதத்தினராக இருந் துள்ளனர். 1971ஆம் ஆண்டில் இத்துறை சார்ந் தோர் 16.5 சதவீதத்தினர் மட்டுமே ஆகும். இவை தவிர கூலித்தொழில் செய்வதாக குறிப் பிட்டுள்ளவர்களில் கணிசமானவர்கள் மீன்பிடித் தொழிலிலோ அன்றில் மீன்பிடித்தொழிலுக்கு கூலிகளாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள் ளனர் என்பதை நேரடியாக அவதானிக்க முடிகின்றது. 1980களுக்கு முன்னர் மீன்பிடித் தொழிலில் குறிப்பிட்டவர்க்கத்தினர் மட்டுமே ஈடுபாடு கொண்டிருந்தனர். தற்போது இவர்கள் தவிர வேறு சமூகத்தினர் இத்தொழிலில் ஈடுபாடு கொண்டுள்ளதைக் காணமுடிகின்றது.

## கல்வி நிலை

தீவகக்கல்வி வளர்ச்சி குருகுலக்கல்வி, திண்ணைப் பள்ளியுடன் ஆரம்பமானது என்பர் எம் முன்னோர்கள். கற்றோரின் இல்லங்கள் கல்விச்சாலைகளாகக் காட்சியளித்தன. நயினா தீவில் நாகமணிப்புலவர் மற்றும் பேரன் வேலாயுதம், வேலுப்பிள்ளை என்பவர்களாலும் திண்ணைப் பள்ளிகளை நடாத்தினர். வேலணை மேற்குப் பகுதிசைவமும் தமிழும் செழித்து வளர்ந்த பகுதியாகக் காணப்படுகின்றது. ஆறுமுகநாவலரின் நெருங்கியகல்விசார் நண் பர்கள் கந்தப்பிள்ளை கனகசபாபதி, தம்பு வாத்தியார், நாகலிங்க வாத்தியார் போன்றோர் சிறந்தமாணாக்கர்களை உருவாக்கி சமூகத் திற்கு அளித்தனர் எனத் தெரியவருகின்றது. வேலணை வங்களாவடியில் வேலாயுதம் என் பவரும் வேலணைகிழக்கில் வேலுப்பிள்ளை என்பவரும் புங்குடுதீவில் சட்டம்பிசேதுகாவலர், பெருங்காடு புட்டினிக்களத்தின் வடகரையில் கல்விச்சாலையினை நிறுவியும் குமரகுருச் சட்டம்பியார், பரமானந்த சட்டம்பியார் போன் றோரும் கல்விப்பணியாற்றிய ஆரம்ப கர்த்தாக் களாகத் திகழ்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களைத் தொடர்ந்து தீவுப்பகுதி தெற்கில் அமெரிக்கன் மிசனறிமார்களும் கத்தோலிக்கத் திருச்சபையினரும் சைவ வித்தியாவிருத்திச் சபையினரும் காலத்துக்குக் காலம் கல்விச்சாலைகளை நிறுவி முறைசார் கல்வியினைவழங்கியதன் விளைவாக பல கல்விமான்கள், வைத்தியர்கள், பொறியிய லாளர்கள், சட்டவியலாளர்களைத் தொடர்ந்து உருவாக்குவதற்கு இடைத்தரக் கல்வியினை சிறப்பாக நிர்வகித்து வந்துள்ளனர். தீவகம் தெற்குப் பிரதேசத்தில் 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் 34 பாடசாலைகள் இயங்கி வந்த நிலையில் 1996 ஆண்டின் பின்னரான மீள் குடியேற்றத்தினைத் தொடர்ந்து படிப்படியாக குறைந்து தற்போது 24 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. எனினும் இடப்பெயர்வுக்கு முன்ன ரான காலப் பகுதியில் ஆரம்ப, இடைத்தரக் கல்விநிலை மேம்பட்டிருந்தது. ஆனால் உயர் கல்வியினைப் பொறுத்தவரையில் குறிப்பாக பல்கலைக்கழக நுழைவு மிகவும் மட்டுப்படுத்தப் பட்டிருந்த போதிலும் இடைத்தரக் கல்வியில் சிறப்பாகச் சித்தி பெற்றவர்கள் யாழ் நகரப் பாடசாலைகளில் உயர்தரக் கல்வியினைக் கற்றுப் பெருமளவில் பல்கலைக்கழக கல்வி யினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்குத் தீவகம் தெற்குப்பிரதேசத்தில் பணி புரிந்த உள்ளூரைச் சேர்ந்த ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையினாலேயே பெற்றுக் கொள்ள முடிந்தது.

மீள் இடப்பெயர்விற்குப் பின்னரான தற் போதைய நிலையில் பாடசாலைகள் படிப் படியாக மீளத்திறக்கும் நிலை காணப்படுகின்ற போதிலும் கல்வியில் மாணவர்கள் அடைவு மட்டம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. குறிப்பாக இங்கு கற்பிக்கும் ஆசிரியர்களில் 90.0 சதவீதத்தினருக்கு மேற் பட்டோர் தீவகத்திற்கு வெளியில் இருந்தே வருகை தருகின்றனர். கல்விக்கான ஊக்கத் தினை அளிக்கத் தவறும் பெற்றோர்களின் நிலையும் மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சி யடையக் காரணமாக உள்ளது. அது மட்டு மல்லாது யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப் படக் கூடிய கல்விச் செயற்பாட்டுக்கான புறச் சூழல்கள் தீவகத்தில் காணப்படாமையும் முக்கிய காரணிகளில் ஒன்றாகக் கொள்ளலாம். கடந்த சில ஆண்டுகளாக உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் மாணவர்கள் திறமையைக் காட்டி வருகின்ற போதிலும் பல்கலைக்கழக நுழைவுக்குத்தம்மை இட்டுச் செல்லாத நிலையினைக் காணமுடிகின்றது. எனிலும் க.பொ.த (சா.த) பரீட்சையில் பெறும் சித்தியானது மிகவும் தாழ்ந்தமட்டத்திலேயே உள்ளது. உதாரணமாக புங்குடுதீவுக் கிரமத்தில் 2006-2010ம் ஆண்டுகளுக்கிடையில் க.பொ.த சாதாரணதரப்பரீட்சையில் தோற்றிய மாணவர் களில் 13.1 சதவீதமானவர்களே க.பொ.த உயர் தர வகுப்பில் இணைவதற்கு தகுதி பெற் றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் களும் கூட கலைப்பிரிவினையே தெரிவு செய்துள்ளனர்.

வளமான எதிர்காலத்தைக் கட்டி எழுப்பவேண்டுமாயின் மிகவும் மட்டுப்படுத்தப் பட்ட பௌதிக பண்பாட்டுவளத்தைக் கொண்ட நிலையிலுள்ள தீவகத்தின் கல்வியினை மேம் படுத்துவதன் வாயிலாகவே வெற்றி கொள்ள முடியும். இதற்கான கட்டுமாணத்தை இப்பிரதே சத்தில் உருவாக்குவது காலத்தின் கட்டாய மாகும். இவற்றினை முன்னெடுத்துச் செல் வதற்கு கல்வித்திணைக்களத்தினர் மட்டு மல்லாது பெற்றோர், பழைய மாணவர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் புலம்பெயர் எமது உறவுகள் போன்றோரின் ஒத்துழைப்பின் மூலம் சாத்தியப்பட வைக்கவேண்டியது அவசியமும் அவசரமுமாகும்.

### *போக்குவரத்து*

தீவகம் தெற்கு பிரதேசத்திற்குட்பட்ட பிரதேசங்களில் இருந்து தீவகத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளேயும் வெளியேயுமான போக்கு வரத்தானது 1950களில் முற்பகுதி வரை கடல் வழிப்போக்குவரத்து ஊடாகவே நடைபெற்று வந்துள்ளது. புங்குடுதீவு – கற்பாதையானது 1953 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்படவே புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு மக்கள் சிறுதூரப் படகுச்சேவை ஊடாக பண்ணைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது. 1956ஆம் ஆண்டு பண்ணைக் கற்பாதை பூர்த்தி செய்யப்படவே யாழ்ப் பாணத்திற்கான நேரடியான பயணத்தினை மேற்கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. இருப்பினும் நயினாதீவுக்கான போக்குவரத்தில் ஏனைய தீவுகளைப் போல எவ்வித மாற்றமும் இல்லாது கடல் வழிப்போக்குவரத்து தொடர்கின்றது.

தீவகம் தெற்கு பிரதேசத்திற்குட்பட்ட சகல தீவுகளிலும் இருந்து நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்குமான போக்குவரத்தானது நீண்ட காலமாக சவால் நிறைந்ததாகவே இருந்து வந்துள்ளது. உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கும், நுகர்வுப் பொருட்கள் கட்டுமானப் பொருட்களை எடுத்து வருவதற்கும் கடற்போக்குவரத்தினை நம்பியிருக்க வேண்டி இருந்தது. நயினாதீவு மக்கள் புளியடித் துறையூடாக அலுப்பாந்திக்கும் அனலைதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறையூடாக அலுப் பாந்திக்கும் கடற்பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டது. புங்குடுதீவு மக்கள் புளியடித்துறையூடாக அலுப்பாந்திக்கும் மடத்துவெளித் துறையூடாக வேலணைக்குச் சென்று வேலணைத்துறையூடாக அராலிக்குச் சென்று குடாநாட்டை அடைந்தனர். மண்டைதீவு, அல்லைப்பிட்டி மக்கள் ஒன்றில் அல்லைப்பிட்டி – பண்ணை, மண்டைதீவு – அலுப்பாந்தி, வேலணைத்துறை – அராலியூடாக குடா நாட்டுக்கு கடற் பயணத்தை மேற்கொண்டிருந் தனர். இதே போலவே ஏனைய தீவுகளைச் சேர்ந்த மக்கள் நெடுந்தூரக் கடற்பயணத்தை மேற்கொண்டே ஏனைய பிரதேசங்களுக்குச் செல்லும் நிலை இருந்தது.

தீவகத்து மக்களின் பௌதீக ரீதியான பிரச்சினைகளாக நன்னீர் பற்றாக்குறையும், இலகுவான போக்குவரத்து முறை இல்லாதது மேயாகும். இவ்விரண்டும் இப்பிரதேச மக்களின் பொருளாதார முறைமைகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு பெருந்தடையாக இருந்து வருகின்றது. யுத்ததிற்கு பின்னரான தீவகத்தின் நிலைக்கு இவை இரண்டும் பிரதான பங்கினை வகித்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதனைக் கருத்திற் கொண்டே தீவகத்தில் வாழ்ந்து வந்த மக்கள் பொருளாதார மற்றும் கல்வித் தேட்டத்தின் பொருட்டு குடாநாட்டுப் பிரதேசங்களுக்கும் தென்னிலங்கைக்கும் ஆரம்பத்தில் தற்காலிக இடம்பெயர்வினை மேற்கொண்டும் காலப் போக்கில் தற்காலிக் நிரந்தர இடப்பெயர்விற்கு உட்பட்டும் அண்மைக் காலங்களில் நிரந்தர இடப்பெயர்வாளர்களாக புதிய பிரதேசங்களையும் நாடுகளையும் தெரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து தீவகத்திற்கும் நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்குமான போக்கு வரத்தினை இலகுபடுத்தும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. குறிப்பாக 1878ஆம் ஆண்டு காரைநகர் பொன்னாலைக் கடலில் கற் பாதையினை அமைத்து குடாநாட்டுடன் நேரடிப் போக்குவரத்தினை ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டது. இதே போலவே ஏனைய தீவுகளையும் கற்தெருவின் மூலம் இணைக்கும் பொருட்டு அன்றைய அரச அதிபரின் கீழ் குழுவொன்று அமைக்கப்பட்டது. மண்டைதீவு – அலுப்பாத்திக் கான கற்தெரு, அல்லைப்பிட்டி – பண்ணை கற்தெரு, புங்குடுதீவு – வேலணைக்கற்தெரு, வேலணை – அராலிக்கற்தெரு ஆகிய கற்தெருக் களை அமைப்பதன் மூலம் தீவகப் போக்கு வரத்தினை சுலபமாக்கலாம் என்ற கருத்தினை வெளியிட்டனர். ஆனால் இதற்கான நிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாக உள்ளதனால் திரைசேரியின் அனுமதியினைப் பெற்று படிப்படியாக மேற் கொள்ளலாம் என பரிந்துரைத்தனர். இப்பாதை அமைப்பது தொடர்பாக உள்ளூர் மக்களிடை யேயும் தத்தம் பிரதேசம் சார் வாதப் பிரதி வாதங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

சென்ற நூற்றாண்டின் சிறுத்தீவினை மையமாகக் கொண்டு மண்டைதீவிற்கும் அலுப் பாந்திக்கும் இடையில் கற்பாதை அமைக்கப் படுமாயின் தீவுப்பகுதி மக்கள் நன்மை பெறுவார்கள் என இரு பிரிவினரும் வேலணை வடக்குத்துறைமுகமும் – அராலிக்குமிடையில் கற்பாதை அமைக்கப்படுமாயின் தீவக விவசாய உற்பத்திப் பொருட்களை யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு சந்தைப்படுத்தலாம் எனவும் தீவக மாணவர்களின் கல்வி நிலை மேம்படும் என மறுசாராரும் கருத்துக்களை தெரிவித்து வந்தனர். இன்னுமொரு சாரார் அல்லைப்பிட்டி – பண்ணை வரையிலான கற்பாதை அமைப்பின் தீவக மக்கள் யாழ்ப்பாணத்துடன் நேரடியான தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தனர். இந்நிலையில் மண்டைதீவு – அலுப்பாந்திக் கற்பாதைக்கான தூரம் அதிகமாக உள்ளது எனவும் செலவும் அதிகமாகும் எனவும் கைவிடப்பட வேண்டி ஏற்பட்டது. இந்நிலையில் 1930களில் இருந்து ஊர்காவற்றுறை சட்ட சபை நிபுணர் சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்கள் வேலணை – அராலிப் பாதையை நிறுவவே விரும்பங் கொண்டவராக இருந்த போதிலும் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணையைச் சேர்ந்தவர்களின் எதிர்ப்பி னாலும் புங்குடுதீவைச் சேர்நதவர்களது நடு நிலை வசிப்பினாலும் சற்று யோசிக்க வேண்டிய நிலை காணப்பட்டது. எனினும் ஊர் மக்களின் வேண்டுகோளின் பிரகாரம் மண்கும்பான் பிள்ளையார் கோவிலில் எவ்விடத்தில் கற் பாதை அமைக்க வேண்டும் எனவும் பூக்கட்டிப் பார்த்தபோது அல்லைப்பிட்டி – பண்ணைக் கற்பாதையின் மேல் அமைக்க வேண்டும் என கூறப்பட்டது. எனவே ஏறத்தாழ பல்வேறு அனர்த்தங்கள், நிதி நெருக்கடிகளின் மத்தியில் 20 ஆண்டுகளில் கற்பாதை பூர்த்தியாக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டது.

## அராலிக் கற்பாதையின் அவசியம்

இன்றைய உலகில் போக்குவரத்துச் சாதனங்கள், தொலைத்தொடர்புச் சாதனங்கள், போக்குவரத்து முறைமைகள் வேகமாக விருத்தி அடைந்து வருகின்றன. இந்நிலையில் தமது சொந்தக் கிராமம் என்ற நிலையில் நீண்ட காலமாக பல்வேறு கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வந்த தீவக மக்களில் ஏறத்தாழ 5%4 பங்கினர் தமது சொந்தக் கிராமத்தை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டனர். இதற்கான காரணிகளில் முக்கியமானது போக்குவரத்து முறைகளில் காணப்படும் விருத்தியின்மை அல்லது நடை முறையிலுள்ள போக்குவரத்து முறையினை ஒழுங்காக பராமரிக்காமையேயாகும் என்றால் மிகையாகாது. கிராமங்களை விட்டு வெளி யேறிய மக்களின் மீள்குடியேற்றம் சாத்தியப்பட வேண்டுமாயின் மக்களுக்கு இலகுவானதும் பரவலானதுமான போக்குவரத்துப் பாதைகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே தீவகத்திற்கும் யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குமான போக்குவரத்துப் பாதையாக அரசினால் வழுக்கையாறு – குறிகட்டுவான் பாதை குறித்துக் காட்டப்பட்டு இருந்தது. ஏனெனில் அக்காலத்தில் இப்பாதையை போக்கு வரத்துக்கு முக்கியத்துவம் கொண்டுள்ளதாக இருந்துள்ளது. ஆழம் குறைந்த கடற்பரப்பைக் கொண்ட இக்கடலினூடாக மக்கள் தோணி களிலும் நடந்தும் பயணித்துள்ளனர். அன்றைய நிலையில் வேலணைப் பிரதேச மக்களுக்கு சொந்தமான கால்நடைகளை இப்பாதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்படுமாயின் களவெடுத்துச் சென்று விடுவார்கள் என்ற அச்சமே அவர்களது எதிர்ப்புக்கு காரணமாக இருந்தது. ஆனால் அவ்வகையான கருத்து நிலை இன்றில்லை.

இன்றைய சூழலில் யாழ்ப்பாண நகரம் மற்றும் அதனைச் சுழவுள்ள பிரதேசங்கள் நெருக்கமான குடியிருப்புப் பிரதேசங்களாக உருவெடுத்துவிட்டது. இந்நிலையில் வேலணை – அராலி கற்பாதை அமைக்கப்படின் அராலி, வட்டுக்கோட்டை, சங்கானை உட்பட வலிகாமப் பிரதேசங்களுடனான தொடர்புகள், குறிப்பாக தீவக உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்துவதற்கான வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடிவதுடன் அப்பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நேரடியாக தீவுப்பகுதி மக்கள் இலகுவாக தமது பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்ல வாய்புண்டாகும். அத்துடன் யாழ்ப்பாணப் பாடசாலைகள் காணப்படும் இட நெருக்கடியினாலும் போக்குவரத்துப் பிரச்சினையினாலும் தீவக மாணவர்களின் கல்வி வாய்ப்பு குறைவாகவே உள்ளது. மேற்குறித்த கற்பாதை அமைக்கப்படுமாயின் வலிகாமப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலைகளில் சேர்ந்து கல்வி வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள வசதி ஏற்படும்.

மேலும் தீவக மக்களுக்கும் அராலிப் பிரதேச மக்களுக்குமிடையில் நீண்ட நெடுங்கால உறவு ரீதியிலான தொடர்புகள் உண்டு. போக்குவரத்துப் பிரச்சினையே இவர்களை அந்நியயப்படுத்தி உள்ளது. இவ்வுறவுகள் மீண்டும் தொடர இக்கற்பாதையை அமைத்தல் அவசியமானதாகவுள்ளது.

தீவகத்தின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் போக்குவரத்துப் பிரச்சினையும் நீர்ப் பிரச்சினையும் தடையாக உள்ளது. குறிப்பாக தீவகத்தில் நிலவி வரும் நன்னீர் தட்டுப் பாட்டினைக்கூட இக்கற்பாதை அமைப்பதன் வாயிலாக தீர்வு காண முடியும். குறிப்பாக வலிகாமம் பிரதேசத்திலிருந்து நன்னீரை பௌசர்களின் மூலமாகவோ அன்றில் குழாய் மூலமாகவும் கொண்டு வருவதற்கு இக்கற் பாதையின் அமைப்பானது நிச்சயம் உதவும் எனலாம். எனவே அரசும் எம்மை பிரதி நிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளும் இவ் விடயத்திற்கு முன்னுரிமை கொடுத்து சுற்றுப் புறச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாது காலத்துக்கு உகந்த நவீன முறையில் இப்பாதையினை அமைப்பதன் மூலம் தீவக மக்களின் நீண்டநாள் கனவினை நிறைவேற்ற வேண்டும். தீவக மக்களின் வெளியிடப்பெயர்வினை கட்டுப் படுத்தவும் வாய்ப்புண்டு.

### *விவசாய செயற்பாட்டினை மேம்படுத்தல்*

தீவகம் தெற்குப் பிரதேசத்தில் குறிப்பாக வேலணை, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, மண்டைதீவு, நயினாதீவு போன்ற கிராமங்களில் வாழ்ந்துவந்த பெரும்பாலான மக்கள் 1970கள் வரை பெரும்பாலும் சுயதேவை பொருளாதாரமுறைக்குட்பட்டு வாழ்ந்து வந்தவர்கள். குறிப்பாக நெற் செய்கை, உப உணவுப் பயிர்ச்செய்கை, பனை உற்பத்தியுடன் ஈடாகவே தமது வாழ்வாதாரத்தினைப் பெற்றுக் கொண்டனர். மிகச் சிறியளவினர் வெளி மாவட்டங்களில் பொருள் தேட்டத்தினை பெற்றுக் கொண்டுள்ளனர். அத்தகைய கட்ட மைப்பு முற்றாக மாறிவிட்டது. பெரும்பாலான நிலவுடமையாளர்கள் வெளியிடப்பெயர்வினை மேற்கொண்டுள்ள நிலையில் உற்பத்தி நிலங்கள் பயன்பாட்டுக்கு உட்படாத நிலை காணப்படுகின்றது. மீன்பிடித் தொழிலே தற் போது பிரதானவாழ்வாதார செயற்பாடாக உள்ளது. இத் தொழிலும் கரையோரமீன்பிடித் தொழிலாக இருப்பதனால் அறுவடையும் குறை வாகவே உள்ளது. அதாவது இத் தொழில் சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்துக்கு போதுமானதல்ல. இந் நிலையில் தரிசு நிலங்களாக மாறிவரும் விவசாய நிலங்களை மீள் உற்பத்திக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்படுத்த வேண்டியது அவசியமானதாகும். இவற்றினது உரிமையாளரின் சம்மதத்துடன் நிர்வாக ரீதியாக அதனை பெற்று தொழில் வாய்ப்பை வேண்டி நிற்கும் மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்த முடியும். இருப்பினும் தற்போது வேலணைப் பிரதேசம் ஓரளவு முன்னேற்றம் கண்டு வருவதனையும் உணரமுடிகின்றது.

***மீள் இடப்பெயர்வு சாத்தியப்படுமா?***

தீவகம் தெற்குப் பிரதேசத்திலிருந்து 1990களில் வெளியே கல்வியினை மேற்கொண்டவர்கள் உள்நாட்டிலும் சர்வதேசங்களிலும் தமது இருப்பிடத்தினை இறக்கிக் கொண்டுள்ளனர். குறிப்பாக இப் பிரதேசத்தினைச் சேர்ந்த பெரும்பாலானோர் வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் நிலையில் அவர்களது மீள் இடப்பெயர்வு சாத்தியமானதா எனக் கருதினால் சாத்தியமில்லை என்றமுடிவுக்கு சுலபமாக வரமுடியும். அதாவது கடந்த இரண்டு தசாப்தத்திற்கு மேலான இடப்பெயர்வாளர் என்பதனால் சென்றடைந்த பிரதேசங்களை தமது வாழ்க்கைக்குகந்த பிரதேசங்களாக தெரிவு செய்து விட்டனர். இடப்பெயர்வினை மேற்கொண்ட தமது பூர்வீக கிராமங்களை நேசித்த குடும்பத் தலைவர்கள் வயதடைந்து விட்டனர். அவர்கள் தமது குடும்ப உறுப்பினர்களினால் பராமரிக்கப்படுபவர்களாகவே உள்ளனர். அவர்களது வாரிசுகள் சென்றடைந்த பிரதேசத்துக்கு இசைவுக்குட்பட்டனர். இதனால் தமது ஆரம்பப் பிரதேசத்தின் மீள் இடப் பெயர்வினை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. குடியிருப்புக்கள் அழிவுற்றும் வாழ்வதற்கு உகந்ததல்லாதநிலையிலும் காணப்படுகின்றது. குறிப்பாக வேலணை தவிர்ந்த புங்குடுதீவு, நயினாதீவு போன்ற கிராமங்களில் இத்தகையபண்பினைக் காணமுடிகின்றது. எனவே தற்போது இப் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மக்களின் வளமானமேம்பாட்டிற்கு அவர்களைத் தயார்ப்படுத்துவதன் மூலமே இப் பிரதேசம் செழிப்புற வாய்ப்புண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# பிரதேச செயலக புதிய கட்டிட சமய நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலக புதிய கட்டிடத் திறப்பு விழா - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவகம் தெற்கு நிர்வாகப் பிரதேசமும் கலைகளும்

பேராசிரியர் வி.சிவசாமி
யாழ் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டினை அடுத்துள்ள தீவுகள் கடலினாலே பிரிக்கப் பட்டிருப்பினும் சமயம், சமூகம், பண்பாடு முதலியனவற்றிலே குடாநாட்டுடன் நெருங்கிய தொடர்புள்ளனவாகவும் சில அம்சங்களில் தனிச்சிறப்பும் வாய்ந்து விளங்குகின்றன. இத் தீவுகள் சம காலத்திலே மூன்று நிர்வாகப் பிரிவு களாக வகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மண்டைதீவு தொடக்கம் சரவணை வரையுள்ள லைடன் தீவின் பகுதி, புங்குடுதீவு, நயினாதீவு ஆகியன தீவகம் தெற்கு நிர்வாகப் பிரிவில் அடங்குவன. இப்பிரதேசத்திலே நிலவி வந்துள்ள கலைகளைப் பற்றிச் சுருக்கமாக இக் கட்டுரையில் கூறப்படும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் போலவே இங்கு வாழ்ந்து வந்துள்ள மக்களும் கலைகளில் ஈடுபாடு கொண்டுள்ளனர். மேற் குறிப்பிட்ட நிலப்பகுதியிலே 1991ம் ஆண்டு ஏற்பட்ட பெரிய இடப்பெயர்வுக்கு முன் பெரும் பாலும் மக்கள் செறிவாக வாழ்ந்தனர். நில வளமும் நீர் வளமும் ஓரளவு காணப்பட்டன. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலேற்பட்ட மழைவீழ்ச்சிக் குறைவாலும் நாட்டிலேற்பட்ட நெருக்கடிகளாலும் இப்பிரதேசம் முன்னைய சிறப்பினைப் படிப்படியாக இழந்து 1991ல் ஏற்பட்ட இடப்பெயர்வால் மிகவும் பாதிப்புற்றது. 1996ம் ஆண்டு தொடக்கம் மீண்டும் இங்கு குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. ஆனால் முன்னைய சிறப்புகள் ஏற்படப் பல ஆண்டுகள் செல்லும். ஏற்கனவே குறிப்பிட்ட காரணங்களால் இப்பிரதேசத்திலே நிலவி வந்துள்ள கலைகள் பற்றி நன்கு அறிய முடியாதுள்ளது. இக் கலைகளைப் பேணி வளர்த்த பல கலைஞர்கள், கலைஞர் குடும்பங் களின் இடப்பெயர்வும் குறிப்பிடற்கரியது. இவ் விடத்தைச் சேர்ந்த பலர் இன்று யாழ்ப்பாணத் திலும் கொழும்பிலும் குறிப்பாகக் கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ் லாந்து முதலிய நாடுகளிலே வாழுகின்றனர். கலைகளையும் நன்கு வளர்க்கின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் போலவே இங்கும் தமிழர்கள் நீண்ட காலமாக வாழ்கின்றனர். இவர்களிலே சைவர்களே மிகக் கூடிய தொகையினர். மேலும் கிறிஸ்தவர்களும், இஸ்லாமியரும் உள்ளனர். கி.பி 19ம் நூற்றாண்டிலே நாவலர் பெருமான் ஏற்படுத்திய சைவசமய மறுமலர்ச்சியின் தாக்கம் தீவகத் திலும் ஏற்பட்டது. இதனால் சைவசமயக் கோவில்கள் அவை சார்பான கலைகள் மீண்டும் புத்துயிர் பெற்று வளர்ச்சியடைந்தன.

சைவ சமய மரபிலே கோவில் வழி பாட்டிடம் மட்டுமன்றிக் கலைகளின் மையமும் ஆகும். எனவே இது சார்பான குழைமைக் கலைகளான– கட்டடக் கலை, சிற்பம், ஓவியம் ஆகியனவும் ஆற்றுகைக் கலைகளான– இசை, நடனம், நாடகம், கரகம், காவடி முதலியனவும் குறிப்பிடற்பாலன. தமிழகத்திலும், இலங்கை யிலுமுள்ள சில கோவில்களிலாவது முற்காலத் திலே நித்திய, நைமித்தியக் கிரியைகளின் போது இசையும், நடனமும் குறிப்பாக இடம் பெற்றன. நடனம் பொதுவாகத் தேவ தாசிகளால் ஆடப்பட்டு வந்தது. 1947லே தமிழகத்திலே தேவதாசிகள் ஆடுதல் தடை செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்னர் அவர்கள் ஆடினர். ஆனால் இந்த ஆண்டிற்கு முன் யாழ்ப்பாணத்திலும் தீவகத்திலும் பல கோவில்களிலே குறிப்பாக மஹோற்சவ காலங்களின் போது தேவதாசிகள் ஆடிவந்தனர். அக்காலத்தில் இலங்கையும் இந்தியாவும் பிரித்தானியர் ஆட்சிக்குட்பட்டிருந்த படியால் தேவதாசிகள் மட்டுமன்றி, பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள் தமிழ் நாட்டிலிருந்து சிரமமின்றி இங்கு வந்து சேவகம் செய்து திரும்பினர். ஒரு சிலர் இங்கும் தங்கினர்.

தீவகத்திலுள்ள சில கோவில்களிலும் நாதஸ்வரம், தவில் கலைஞர்கள் நாடோறும் சேவை செய்து வந்தனர். நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவிலில் இன்றும் தொடர்ந்து அவர்கள் சேவகம் செய்கின்றனர். இது போல வேறு சில கோவில்களிலும் இத்தகைய சேவகம் இடம்பெற்றது. எடுத்துக்காட்டாக புங்குடுதீவு சிவன் கோவிலில் சென்ற நூற்றாண்டிலே இடம் பெற்றது. பின்னர் கலைஞர்கள் வேறு இடங்களுக்குச் சென்று விட்டனர்.

சென்ற நூற்றாண்டில் இங்குள்ள பிரபல கோவில்கள் சிலவற்றிலாவது மஹோற்சவத்தின் போது குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்தும், தமிழகத்திலிருந்தும் வந்த பிரபல நாதஸ்வரம், தவில் கலைஞர்கள், வாய்ப்பாட்டிசைக் (கர்நாடக இசை, பண்ணிசை) கலைஞர்கள் தேவதாசிகளின் சதிர்க்கச்சேரிகள் நன்கு இடம் பெற்றன. குறிப்பிட்ட மஹோற்சவ காலம் பெரிய கலை விழாக்காலமாக விளங்கிற்று. எடுத்துக் காட்டாகப் புங்குடுதீவு கிராஞ்சியம்பதி கந்த சுவாமி கோவில், வேலணை முத்துமாரி அம்மன் கோவில் போன்றவற்றைக் குறிப்பிடலாம். தேவதாசி நடனம் தடைசெய்யப்பட்டபின் மிக அரிதாக அதன் வழி வந்த பரதநாட்டியம் அரிதாகச் சில கோவில்களில் இடம் பெற்றது.

இப் பிராந்தியத்தில் இசைக்கலையிலே குறிப்பிடத்தக்க ஆர்வம் காணப்பட்டது. தமிழரின் பாரம்பரிய பண்ணிசை மட்டுமன்றிக் குறிப்பாகக் கர்நாடக இசையினையும், கிராமிய இசையினையும் மக்கள் ஆதரித்தனர். ஏற்கனவே குறிப்பிட்டவாறு இலங்கையும் இந்தியாவும் பிரித்தானியர் ஆட்சிக்குட் பட்டிருந்தபடியாலும் ஆர்வமுள்ள இளம் மாணவர்களில் ஒரு சாரார் தமிழ் நாட்டிற்குச்சென்று தேவாரப்பாடல்கள் சைவ ஆதீனங்கள் போன்றவற்றிலே பண்ணிசைப் பயிற்சி பெற்றனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்ற நூற்றாண்டு முற்பகுதியிலே தொடங்கிற்று. அங்குள்ள கற்கை நெறிகளிலே பண்ணிசை, கர்நாடக இசை இரண்டும் இடம் பெற்றிருந்தன. எனவே இதனைப் பயன்படுத்தி இங்குள்ள இளம் இசை ஆர்வலர்கள் ஒரு சாரார் தொடர்ந்து அங்கு சென்று நல்ல பாண்டித்தியம் பெற்றுத் திரும்பினர். சொந்த ஊரிலும் இலங்கையின் பிற இடங்களிலும் இசையைக் கற்பித்தனர், வளர்த்தனர், பரவலாக்கினர். ஆரம்ப காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று கற்றவர்களில் சங்கீத பூஷணம் திரு. பி. சந்திரசேகரம் (சரவணையைச் சேர்ந்தவர்), வேலணையைச் சேர்ந்த திரு. குலசேகரம் பிள்ளை. புங்குடுதீவைச் சேர்ந்த திரு. நடராஜா, திரு. கனகசுந்தரம்பிள்ளை, திரு. இராசலிங்கம், திரு. தாமோதரம்பிள்ளை,பாலசுந்தரம் சகோதரர்கள், மண்டைதீவைச் சேர்ந்த திரு. கனகலிங்கம், சண்முகலிங்கம் சகோதரர்கள் முதலியோரைக் குறிப்பிடலாம்.

சங்கீதபூஷணம் திரு. பி. சந்திரசேகரம் முதன்முதலாகத் தீவகத்திலிருந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று இசைப்பட்டம் பெற்றவர். யாழ்ப்பாணத்திலே இசைக்கல்வியை முன்னெடுத்தவர்களில் ஒருவராவார். இசை இலக்கணம் எனும் நூலை எழுதினார். வட இலங்கை சங்கீத சபைப் பிரமுகர்களில் இவரும் ஒருவராவார். வேலணையைச் சேர்ந்த சங்கீத பூஷணம் திரு. குலசேகரம்பிள்ளையின் குடும்பமே ஒரு சங்கீதக் குடும்பம். அவர் கூடுதலாகக் கொழும்பிலே இசை கற்பித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய மூத்தமகள் திருமதி. குலபூஷணி கல்யாணராமன் சமகாலக் கர்நாடக இசை உலகிலே பிரபலமான கலைஞர்களில் ஒருவராவார். பிறிதொரு மகளான குலநாயகி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே சிறப்பாக இசைக்கலைமாணிப் பட்டம் பெற்றவர். திரு. தாமோதரம்பிள்ளை சொந்த ஊரிலே இசைக் கலையை நன்கு கற்பித்தவர். திரு. இராசலிங்கம் மிக மூத்த கலைஞர். சொந்த ஊரில் மட்டுமன்றி வேறு இடங்களிலும் இசைக்கலையை வளர்த்தவர். யாழ்ப்பாணத்திலே பிரபலமான இசைக் கலைஞராக விளங்கிய இவர் தொடர்ந்து இசைப்பணி புரிந்து வருகிறார். பல நூல்களும் எழுதியுள்ளார். கனகலிங்கம், சண்முகலிங்கம் சகோதரர்கள் இலங்கையின் பல இடங்களிலும் சிறப்பாக இசைப்பணி செய்துள்ளனர்.

இவர்களுக்கு அடுத்த தலைமுறை யினைச் சேர்ந்த இசைக் கலைஞர்களில் திரு.பொன்.சுந்தரலிங்கம், அவருடைய சகோதரர் சுபாஸ்சந்திரன் ஆகியோர் குறிப்பிடப்பாலர். இவர்கள் புங்குடுதீவினைச் சேர்ந்தவர்கள். திரு. பொன்.சுந்தரலிங்கம் உலகளாவிய ரீதியிலே சிங்கப்பூர், அவுஸ் திரேலியா, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குச் சென்று சிறப்பாகக் கச்சேரிகள் செய்து பல விருதுகளும் பெற்றவர். தற்போது கனடாவில் இசைப்பணியைத் தொடர்கிறார். இவரின் சகோதரரும் பிரபல இசைக் கலைஞர். இவர் தற்போது நோர்வேயில் இசைப்பணி செய்கிறார். திரு.சந்திரபாலனும் ஒரு சிறந்த இசைக்கலைஞர். இவர்கள் புங்குடுதீவைச் சேர்ந்தவர்கள். திரு. கனகசுந்தரம்பிள்ளை வாய்ப்பாட்டிசையில் (கர்நாடக இசை, பண்ணிசை) மட்டுமன்றி வீணை வாசிப்பதிலும் சிறந்த வித்துவான். இராமநாதன் நுண்கலைக் கழகத்திலே பகுதி நேர விரிவுரை யாளராகவும் பணி புரிந்தவர். திரு. நடராஜா சிறந்த வயலின் கலைஞர். புங்குடுதீவினைச் சேர்ந்த திரு.கா. பரமேஸ்வரன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே சங்கீதபூஷணம் பட்டம் பெற்றவர். இசை ஆசிரியராகப் பணி புரிந்து உதவி இசைக்கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றவர். இவருடைய பாரியாரும் இசைப் பட்ட தாரி. ஆங்கில விரிவுரையாளராக விளங்கும் மகளும் இசையிலே நன்கு தேர்ச்சி பெற்றவர். எனவே இவரின் குடும்பமே ஓர் இசைக் குடும்பம்.

மண்டைதீவினைச் சேர்ந்த திருமதி. ஸ்ரீரங்கராணி இராமச்சந்திரன் சம காலத்திலே ஒரு சிறந்த இசைக் கலைஞர். இராமநாதன் நுண்கலைச் சங்கீத ரத்தினம் பட்டம் பெற்றுச் சிறப்பாக இசைப்பணி செய்து உதவி இசைக் கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றவர்.

நயினாதீவிலும் பல இசைக் கலைஞர்கள் உள்ளனர். அவர்களிலே சம காலத்திலே கலாநிதி ந.வி.மு.நவரத்தினம் அவரின் பிள்ளைகளும் நன்கு குறிப்பிடத் தக்கவர்கள். கலாநிதி நவரத்தினம் பண்ணிசையிலும் கர்நாடக இசையிலும் நன்கு குறிப்பிடத்தக்க பாண்டித்தியம் பெற்றவர். தஞ்சாவூர் பல்கலைக் கழகத்திலே கலாநிதிப் பட்டம் பெற்றவர். இலங்கையில் இப் பட்டத்தினை இவரே முதன் முதலாகப் பெற்றவர். இவரது மகனும், மகள்மார் இருவரும் இசைப்பட்டதாரிகள். கலாநிதி மு. நவரத்தினம் யாழ்ப்பாணாப் பல்கலைக்கழகத்திலே முது நிலை இசை விரிவுரையாளராகப் பணிபுரி கின்றார். பிள்ளைகளிலும் இருவர் அங்கு இசை விரிவுரையாளராகப் பணி புரிகின்றனர். மேலும் நயினாதீவைச் சேர்ந்த அ.ஆரூரன் அண்ணா மலைப் பல்கலைக்கழக இசைப்பட்டதாரி. கொழும்பிலுள்ள அழகியல் கல்வி நிறு வனத்திலே இசை விரிவுரையாளராக விளங்கு கிறார்.

இப்பிரதேசத்திலே பாரம்பரியமான பண்ணிசையினை நிறுவனங்களிலே கற்ற வர்கள் மட்டுமன்றிக் குடும்ப பின்னணி, சூழ் நிலை காரணமாக இயல்பாகவே கற்றவர்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி ஞானத்தாலும் ஆர்வமேலீட்டாலும் தாமாகவே கற்றவர்களும் இருந்தனர். இருக்கின்றனர். பண்ணிசை கோவிலில் மட்டுமன்றி மேலும் பல சமூக நிகழ்வுகளிலே குறிப்பாக இடம் பெற்று வருகின்றது. சைவத் திருமுறைகள் மட்டுமன்றி கந்தபுராணம், பெரியபுராணம் முதலிய சைவபுராணங்களைப் படிக்கவும், அவற்றுக்குப் பயன் சொல்லுவதற்கும் இவ்விசை அவசியமாகும்.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ம் நூற்றாண்டிலும், சைவம், பண்ணிசை, புராணபடலம், பயன் சொல்லும் வித்தகர்கள் குறிப்பிட்ட தொகையினர் இப்பிரதேசத்திலே வாழ்ந்துள்ளனர். எடுத்துக்காட்டுகளாக வேலணையைச் சேர்ந்த திரு.நாகலிங்கம் (இவர் சைவ நாகலிங்கம் எனவும் அழைக்கப்பட்டவர்), திரு.கந்தப்பிள்ளை இவர் வேலணை, புங்குடு தீவு ஆகிய இடங்களையும் சேர்ந்தவர், புங்குடு தீவினைச் சேர்ந்த திரு.ச.வினாசித்தம்பி முதலியோர் குறிப்பிடற்பாலர். இவர்கள் ஆசிரியப் பெருமக்கள் ஆவர். திரு.நாகலிங்கத்தின் மாணவர்கள் குறிப்பாக கந்தபுராண படலத்தை தீவுப்பகுதியிலே முன்னெடுத்துள்ளனர். அவருடைய மாணவர்களில் புங்குடு தீவினைச் சேர்ந்த ஆசிரியர்களான திரு. நா.தில்லையம்பலம், இ.சதாசிவம்பிள்ளை, அதிபர்களான திரு.சேதுபதி, திரு.அம்பல வாணர் முதலியோரும் சுதேச மருத்துவர் இ.கணபதிப்பிள்ளை, திரு.கை.நாகமணியர் முதலியோரும் குறிப்பிடற்பாலர். இவர்களிலே திரு.நா.தில்லையம்பலம் நன்கு குறிப்பிடற் பாலர். அவருடைய இனிய குரல் வளம் எவரையும் கவரத்தக்கது. இவர் மேற்குறிப்பிட்ட திரு.ச.வினாசித்தம்பியின் மருகர். இவர்களை விட வேலணையைச் சேர்ந்த சைவப் பேரறிஞர் திரு.மு.திருஞானசம்பந்தபிள்ளை, புங்குடு தீவினைச் சேர்ந்த வித்துவான் அ.கனகசபை வித்துவான், சி.ஆறுமுகம் போன்ற ஆசிரியப் பெருமக்களும் பண்ணிசை, புராணபடலம், பயன் சொல்லுவதில் திறமை பெற்றிருந்தனர்.

ஏற்கனவே குறிப்பிட்ட திரு.கனக சுந்தரம்பிள்ளை பண்ணிசையையும் தமிழ் நாட்டிலே கற்றவர். திரு.கனகசபாபதியும் அண்ணா மலையிலே இசை பயின்றவர். தற் போது திருக்கேதீஸ்வரத்திலே திருப்பணி புரிகிறார். அண்மையிலே காலமாகிய அதிபர் சி. இரத்தினசபாபதியும் மிகச் சிறந்த பண்ணிசை வித்தகர். நல்லை ஆதீனத்தினால் இசைப் பணிக்காகக் கௌரவிக்கப்பட்டவர். இவர்களை விட திருமுறைகளை நன்கு பாடியவர்களில் திரு.சி.குருமூர்த்தி சாஸ்திரியார், திரு.வி. இராமலிங்கம், திரு.கணபதிப்பிள்ளை, திரு அப்பாப்பிள்ளை, திரு.கு.விநாயகமூர்த்தி, அதிபர் திரு.மூ.சுப்பிரமணியம் (பராசு), திரு.வை. குமாரசுவாமி, சமகாலத்தில் உதவிக் கல்வி அதிகாரிகளான திரு.த.தவராசா, திரு.மு. சிவபாதம் முதலியோரையும் குறிப்பிடலாம். இவர்கள் புங்குடுதீவினைச் சேர்ந்தவர்கள். இவர்களைப் போலவே நயினாதீவிலும், வேலணையிலும் பண்ணிசையினை நன்கு பாடுவோர் உள்ளனர். எடுத்துக்காட்டாக நயினை நாகபூஷணி அம்மன் ஆலய அறங் காவலர் சபைத்தலைவரான திரு.ஆ.தியாக ராஜாவைக் குறிப்பிடலாம்.

சிறந்த வில்லிசைக் கலைஞரான திருப்பூங்குடி வி.வி.கே.ஆறுமுகம் ஆசிரியர் புங்குடுதீவினைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணத்தில் இக்கலையை முன்னெடுத்தவர்களில் இவர் நன்கு குறிப்பிடற்பாலர். புகழ்பெற்ற மெல் லிசைக் கலைஞரான திரு.ஜி.சாந்தனும் பிரபல திரைப்பட இயக்குனர் திரு.செ.குகநாதனும் புங்குடுதீவினைச் சேர்ந்தவர்கள்.

நாடகக்கலையும் இவ்விடங்களிலே நன்கு போற்றப்பட்டது. இவ்விடங்களிலுள்ள சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் சில இதனை முன்னெடுத்தன. எடுத்துக்காட்டுகளாக நயினாதீவு மணிபல்லவம், புங்குடுதீவினைச் சேர்ந்த சிவலப்பிட்டி சனசமூக நிலையம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். புங்குடு தீவினைச் சேர்ந்த பிரபல ஆசிரியர்களான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.ஐ.சிவசாமி, திரு.சு.செல்வரத்தினம் முதலியோர் மாணவர்களை நன்கு பயிற்றுவித்து நாடகத்திறனை வெளிப்படுத்தியுள்ளனர். இசை, நாடகம், நாட்டார் இசை, நாட்டுக்கூத்து, கும்பம், கரகம், காவடி ஆட்டம் முதலியன குறிப்பிடற்பாலன. சரவணையைச் சேர்ந்த திரு. மருதன் கந்தையா ஒரு சிறந்த இசை நாடகக் கலைஞர். திருவள்ளுவர் எனும் கலாமன்றமமைத்து அதன் மூலம் அரிச்சந்திரன் பற்றிய மயான காண்டத்தினை இசை நாடகமாக நன்கு நிகழ்த்தியவர். அத்துடன் கரகம், கும்மி, கோலாட்டம் முதலிய கலைகளையும் ஊக்குவித்து வருகின்றார். புங்குடுதீவினைச் சேர்ந்த திரு.சி.நல்லதம்பி ஒரு சிறந்த நாட்டுக் கூத்துக் கலைஞர். நாட்டார் பாடல்களை இனிமையாகப் பாடியவர். கரகம், நாட்டுக்கூத்துக்குரிய உடுக்கு வாத்தியத்தையும் நன்கு கையாண்டவர். அவருடைய சகோதரர் திரு.சி.கதிரவேலுவும் இக்கலைகளிலே பரிச்சயம் பெற்றிருந்தார். கட்டுரையாசிரியர் மிக இளம்பராயத்திலே அவருடைய பிறந்த இடமாகிய புங்குடுதீவிலுள்ள இறுப்பிட்டி அமெரிக்கமிஷன் பாடசாலையில் அன்றைய ஆசிரியர், மாணவர்களைக் கொண்டு தயாரித்த கோவலன் கண்ணகி நாட்டுக்கூத்து குறிப்பிடக்கூடியது. அவ்வூரைச் சேர்ந்த திரு.ச.ஆறுமுகம் ஒரு சிறந்த கரக ஆட்டக் கலைஞர். திரு.க.ஐயம்பிள்ளை ஒரு சிறந்த நாட்டுக் கூத்துக்கலைஞர்.

மேலும் சென்ற நூற்றாண்டிலும் சமகாலத்திலும் புகழ் பெற்றுள்ள சில இசை நாடகக் கலைஞர்களின் முன்னோர் புங்குடுதீவினைச் சேர்ந்தவராவார். எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணத்திலே கர்நாடக இசையினைத் தொடக்கத்திலே முன்னெடுத்தவராகிய புத்துவாட்டி சோமசுந்தரம் (சோமு), பிரபல நாதஸ்வரம், தவில் கலைஞர்களான திருவாளர்கள் என். ஆர். சின்னராசா ஆகியோரின் தாய்மார் இவ்விடத்தைச் சேர்ந்தோர் ஆவர். மேலும் சமகாலப் பிரபல பரதநாட்டியக்கலைஞர்களில் ஒருவரான திருமதி.வாசுகி விக்கினேஸ்வரனின் தாயார் (திரு.சண்முகம்பிள்ளையின் மனைவி) இவ்விடத்தைச் சேர்ந்தவர்.

இப்பிரதேசத்தில் இசைக் கலை நன்கு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்த அளவுக்குப் பரதநாட்டியம் மேற்கொள்ளப்படவில்லை. சமகாலத்தில் ஒரு சில இளம் கலைஞர்கள் உள்ளனர். குடும்பச் சூழலாலும் இயல்பான ஆர்வ மேலீட்டாலும் குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்திலே கர்நாடக இசை, பரதநாட்டியம் பயின்ற மாணவர்களுக்குப் பல ஆண்டுகளாகச் சமஸ்கிருதம் கற்பிக்கும் வாய்ப்பு ஏற்பட்டதாலும் இக்கட்டுரையில் பரதநாட்டியம், கர்நாடக இசை தொடர்பான பல கட்டுரைகளும், நூல்களும் எழுதியுள்ளார். நூல்களிலே பரதக் கலை, தென்னாசிய சாஸ்திரிய நடனங்கள் ஒரு நோக்கு, தென்னாசிய கலை வடிவங்களில் நாட்டியசாஸ்திர மரபு முதலியன குறிப்பிடற்பாலன. இவற்றைவிட தமிழிலும், சமஸ்கிருதத்திலும் சுமார் 100 கீர்த்தனைகளை இவர் இயற்றி உள்ளார்.

மேலும் சில கலைகளை நோக்குகையில் சிற்பக்கலை வல்லுனரும் சிலர் இங்கு வாழ்ந்துள்ளனர். எடுத்துக்காட்டாக புங்குடுதீவைச் சேர்ந்த திரு.க.சபாரத்தினத்தைக் குறிப்பிடலாம். அங்குள்ள கிராஞ்சியம்பதி சிவன் கோவிலிலுள்ள கம்பீரமான அழகிய கோபுரம் இவரின் கலைத்திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். வேலணையைச் சேர்ந்த திரு.சண்முகநாதன் (நாதன்) ஒரு சிறந்த ஓவியக்கலைஞர். இங்குள்ள சில கோவில்களிலும், பிற இடங்களிலும் அவரின் கைவண்ணத்தைக் காணலாம். மேலும் புங்குடுதீவினைச் சேர்ந்த திரு.சோமசுந்தரம் (சோமு) ஒரு சிறந்த ஓவியக் கலைஞர். அங்குள்ள பெரியபுலம் பிள்ளையார் கோவிலில் அவரின் கலைத்திறன் காணப்படுகின்றது.



# வேலணை பிரதேச செயலக பிரிவினுள் தமிழ்ப்பணி ஆற்றிய சான்றோர்கள்

பண்டிதர் திருநாவுக்கரசு

யாழ்ப்பாண நகருக்குத் தெற்கு, தென் மேற்கு, மேற்குப் பக்கங்களில் பண்ணைக் கடல் நீரேரியை அடுத்தும், ஆழ்கடல் சூழ்ந்தும் சப்த தீவுகள் காணப்படுகின்றன. அவற்றைச் சார்ந்த பிரதேசத்தினைத் தீவுப்பகுதி அல்லது தீவகம் என அழைப்பது வழக்கம். இந்த ஏழு தீவுகளில் பெரியதும், யாழ் நகரிலிருந்து பண்ணைக் கடலை ஊடறுத்துச் செல்லும் வீதியாற் சென்றால் 10 கி.மீ தூரத்தில் அமைவிடத்தைக் கொண்டதாக வேலணைத் தீவு (லைடன் தீவு) காணப்படும். இது ஒல்லாந்தரிட்ட லைடன் தீவு என்ற பெயராற் பெருமை பெற்றதாகும். கொழும்புத் தலைநகரிலிருந்து 410 கி.மீ தூரத்தில் இத் தீவின் மையக் கிராமமான வேலணை அமைந்துள்ளது. கிழக்கிலிருந்து மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, சரவணைகிழக்கு ஆகிய கிராமங்களையும், புங்குடுதீவு, நயினா தீவு ஆகிய இரண்டு தீவுகளையும் உள்ளடக் கியதாக 1972ஆம் ஆண்டளவில் உருவாக்கம் பெற்ற (தீவுப்பகுதி தெற்கு) வேலணை பிரதேச செயலகப் பிரிவு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. உடையார், மணியகாரன், பொலிஸ்விதானை முதலியோர் அதிகாரம் பெற்ற கிராம உத்தி யோகத்தர்களாகப் பணியாற்றிய காலம் மாறி 1939ஆம் ஆண்டு காரியாதிகாரி (DRO) முறை ஏற்பட்டபோது தீவகப் பிரதேசங்களில் நெடுந் தீவு தவிர்ந்த ஏனையவை ஊர்காவற்றுறை இறைவரிப் பிரிவினுள் அடங்கின. மண்டைதீவு, லைடன்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு, அனலை தீவு, எழுவைதீவு, காரைதீவு (காரைநகர்) ஆகிய ஏழு தீவுகளும், ஊர்காவற்றுறை காரியாதிகாரி பிரிவினுள் செயற்பட்டன. இக்காரியாதிகாரி முறை 1963ஆம் ஆண்டுடன் நிறைவுக்கு வந்தது. அதன் பின்னர் உதவி அரசாங்க அதிபர் நிர்வாக முறை (AGA) அமுலுக்கு வந்தது. முன்னரிருந்தவாறு ஊர்காவற்றுறையே உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குரியதானது. இருப் பினும் 1970 களின் தொடக்கத்தில் லைடன்தீவும் ஏனைய தீவுகளும் நெடுந்தீவு தவிர்ந்த (வேலணை) தீவுப்பகுதி தெற்கு, ஊர்கா வற்றுறை, தீவுப்பகுதி வடக்கு என இரு நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவினுள் புளியங் கூடல், நாரந்தனை, சரவணை மேற்கு (ஒரு பகுதி), கரம் பொன், ஊர்காவற்றுறை, அனலைதீவு, எழுவை தீவு, காரைநகர் ஆகிய கிராமங்கள் உள்ளடங்கின. தொண்ணூறுகளின் பிற்கூற்றில் இவை பிரதேச செயலகங்கள், (Divisional Secretariat) என அழைக்கப்படலாயின. 1973ஆம் ஆண்டு செப்டெம்பர் 23 இல் தீவுப் பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் பணி மனை (வேலணை) அப்போதைய உள்ளூராட்சி அமைச்சராயிருந்த கௌரவ நீல் டீ அல்விஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. எனவே வேலணைப் பிரதேச செயலகப் பிரிவு இயங்கத் தொடங்கி நாற்பது ஆண்டுகள் கடந்து விட்டது எனலாம்.

வேலணைப் பிரதேச செயலகப் பிரி வானது 98.4 ச.கீ.மீ பரப்பளவை அண்ணளவாக உள்ளடக்கியது. வேலணைக் கிராமம் மட்டும் 15 ச.கி.மீ பரப்புடையது. இந்து சமுத்திரமும் பண்ணைக் கடலும் சூழ்ந்திருந்தாலும், வேலணைக் கிராமம், சரவணை கிழக்குப் பகுதி ஆகியவற்றையடுத்து ஊர்காவற்றுறை வரையி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லான பிரதேசம் நிலப்பகுதியுடன் தொடர்புடைய தாகும். வேலணைக் கிராமத்தினுள் மட்டும் சுமார் 20 கிராமக் குறிச்சிகள் (பிரிவுகள்) உள. அதேபோல் ஏனைய மையக் கிராமங்களிலும் காணப்படுகின்றன. 63 குக்கிராமப் பிரிவு களையும் 30 கிராம உத்தியோகத்தர் பிரிவு களையும் கொண்டது வேலணைப் பிரதேச செயலகப் பிரிவாகும். புங்குடுதீவு (12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்), வேலணை (08 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்), மண்டைதீவு (03 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்), அல்லைப்பிட்டி (01 கிராம உத்தியோகத்தர் பிரிவு), மண்கும்பான் (01 கிராம உத்தி யோகத்தர் பிரிவு) நயினாதீவு (03 கிராம உத்தியோகத்தர் பிரிவு) என வகுக்கப் பட்டுள்ளன. 1987இல் 04 கிராம சேவை யாளர் பிரிவிருந்த வேலணை, 1990 இல் 08 ஆகியது. 1990 ஆம் ஆண்டளவில் 11004 குடும்பங்களைச் சேர்ந்த 52728 மக்கள் வாழ்ந்திருந்த சூழ்நிலையானது இடப்பெயர்வு புலப்பெயர்வு, உயிரிழப்புகள் ஆகியன காரணமாக மக்கள் குடியிருப்புத் தொகையில் பாரிய வீழ்ச்சியை வேலணைப் பிரதேச செயலகப் பிரிவிற் காட்டி நிற்கிறது. மீள்குடியேற்றங்கள் திருப்திதராத நிலையில் தற்போது 5285 குடும்பங்களைச் சேர்ந்த 17901 மக்கள் குடியிருப்பதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. குடியிருப் பாளரின் எண்ணிக்கையானது தளம்பல் நிலையையே காட்டி நிற்கிறது. வேலணைப் பிரதேச செயலக எல்லையுள் வாழக்கூடிய ஏராளமானோர் யாழ்ப்பாணம், கொழும்பு உள்ளிட்ட நகரங்களிலும், புலம்பெயர் நாடுகளிலும் வசிக்கின்றனர். 1990ஆம் ஆண்டுக்குப் பிந்திய 23 வருட எல்லையுள் முன்னரிருந்த சனத் தொகையானது இயற்கை அதிகரிப்புக்கேற்பக் குறைந்தது எழுபதாயிர மாகவாவது இருத்தல் வேண்டும். ஆனால் 20-25 வீதத்தினராகவே மக்கள் தொகை குறைந்து காணப்படுகிறது. அதற்கேற்றாற்போல இப் பிரதேச எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையும் வீழ்ச்சியைக் காட்டுகிறது. ஒரு காலத்தில் 1800 மாணவர் வரை கற்றிருந்த வேலணை மத்திய கல்லூரியில் 650 மாணவர் வரையிலேயே தற்போது கல்வி பயில்கின்றனர். பள்ளம்புலம் ஆத்திசூடி வித்தியாலயம், மண்டைதீவு கார்த்திகேய வித்தியாலயம் உட்படச் சில பாடசாலைகள் மூடப்பட்டுக்கிடக்கின்றன. தொண்ணூறுகளிலிருந்த மாணவர் தொகையுடன் ஒப்பிடும் போது எந்தவொரு பாடசாலையிலும் மாணவர் தொகை அதிகரிக்கவில்லை. மாறாகப் பெரும் வீழ்ச்சிப் போக்கையே காட்டு கிறது. அதே போன்று கல்வி சார் அடைவுகளும் பின் தங்கியே காணப்படுகிறது. சென்ற ஆண்டு கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரையில் நாட்டிலுள்ள 84 கல்வி வலயங்களுள் மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளான ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு ஆகியவற்றை உள்ளடக்கிய தீவகக் கல்வி வலயமானது 81வது இடத்தில் இருக்கிறது.

வேலணைப் பிரதேச செயலக எல்லையுள் கி.மீற்றருக்கு மக்களின் அடர்த்தி யானது 182 ஆக அமைகிறது. விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறுகைத்தொழில்கள், சிறுவாணிபம், அரச - தனியார் துறைகளில் குறைந்த வீதமானோர் பணி புரிதல் முதலான தொழில்களில் மக்களது ஈடுபாடு உள்ளது. பனைசார் குடிசைக் கைத்தொழில் முயற்சி களும் உண்டு. வானம் பார்த்த பூமியாதலால் நன்னீர்த் தட்டுப்பாடு அதிகம் காணப்படுகிறது. 9 பாகை 40 கலைகள் வட அகலாங்கிலும், 79 பாகை 54 கலைகள் கிழக்கு நெட்டாங்கிலும் லைடன்தீவு அமைந்துள்ளது. நயினாதீவில் 2500 தமிழர் களும் 150 முஸ்லிம்களும் வசிப்ப தாக அறிக்கையொன்று கூறுகிறது. அல்லைப் பிட்டியில் புதிதாக ஏற்பட்ட குருநகர் மக்களுக் கான குடியேற்றத்துடன் 1800 பேர் வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. வேலணைப் பிரதேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையும், பிரதேச செயலகமும் தம்மாலான மக்கள் நலனோம்பு சேவைகளை அளித்து வருகின்றன. இத்தகு வரலாற்றுச் சூழ்நிலையில் இப்பிரதேச செயலக எல்லையுள் வாழ்ந்து தமிழ்ப்பணி புரிந்தும், படைப்பிலக்கியங் களைத் தந்தும் அமரத்துவமடைந்த இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற படைப்பாளிகள் பற்றி மேலோட்டமாக நோக்குவோம்.

இலக்கியம் படைத்தல், உயிருடனும் அறிவுடனும் ஒன்றிய தவமாகும். சமகாலத்துடன் தாக்கம் புரியும் எழுத்தாளன், தான் அனுபவித்த உணர்வுகளை ஏனையோரும் பெறவேண்டு மென்ற விருப்புடன், இலக்கிய வடிவங்களில் ஒன்றை வாலாயமாக வரித்துக் கொண்டு, தன்னாலான மொழிநடையில் உருவாக்கு கிறான். காலக்கண்ணாடியாக அவனது படைப்புகள் வாழவும் கூடும். இரசம் தேய்ந்து மங்கி விடவும் ஆகலாம். அவரவர் படைப்புத் திறனும், எடுத்துக் கொண்ட கருப்பொருள், காலதேச வர்த்தமானங்களைக் கடந்து வாழக் கூடிய அவ்விலக்கியப் படைப்பின் தன்மை ஆகியனவும் இங்கு முக்கியமானவை. இருப் பினும் நல்லவை யாவும் மக்களைச் சென்றடை வதுமில்லை. தரமற்றவை மீது மக்கள் கவர்ச்சியும் ஈடுபாடும் கொள்ளாமலுமில்லை. ஆனால் குறித்ததொரு சமூகத்தின் இலக்கிய வரலாற்றுப் பண்புகளை இனங்காண இவ்விலக் கியங்கள் யாவும் துணை புரிகின்றன என்பதில் ஐயமில்லை.

வேலணை மேற்கில் வாழ்ந்து சைவத் தமிழ்ப் பண்பாட்டின் அடித்தளத்திலான சிவ பூசை செய்தல், புராணபடலம், இலக்கியம் படைத்தல், பத்திரிகை/சஞ்சிகை வெளியிடல், ஆசிரியப் பணிபுரிதல் முதலானவற்றில் ஈடுபட்ட பல பெரியார்கள் தீவக வரலாற்றில் வியந்து பேசப்படுகிறார்கள். அதே போன்று தற் போதைய வேலணைப் பிரதேச எல்லைக் கிராமங்களில் வாழ்ந்தவர்களில் சிலரும் இலக்கியம் படைத்தலில் தமது பங்களிப்பை நல்கியிருக்கிறார்கள். வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலையின் தாபகரும் முதல் முகாமையாளருமான கந்தப்பு வாத்தியார் என அழைக்கப்படும் வினாசித்தம்பி கந்தப்பிள்ளை (1879), வேலணை மேற்கு நடராஜ வித்தியாசாலையை நிறுவிய "இராசாவாத்தி யார்" செங்கமலையர் கனகசபாபதிப்பிள்ளை, நாகலிங்கம் வாத்தியார் என அழைக்கப்பட்ட கா.நமசிவாயம், மருதையினார் தம்பு வாத்தி யார் (1865–1943), பண்டிதர். இ.மருதையினார் (1902–1988), பண்டிதர் சரவணமுத்து சிதம்பரப் பிள்ளை (1919–1991), பண்டிதை வேதநாயகி தம்பு (1912–1994), சித்தாந்த சிரோன்மணி முருகேசு மயில்வாகனம் (1900–1990), விதானையார் சதாசிவம்பிள்ளை மகாலிங்கம் (1914–1991), முதலானோர் நாவலர் பரம்பரை யினரும் அறநெறி நின்று சைவத்தையும் தமிழையும் காத்து வளர்த்த வேலணையின் முன்னோடிகளுமாவர்.

இராசா வாத்தியார் தமது இல்லத் தருகில் (நெல்லாவிலில்) உருவாக்கிய பாட சாலையும் (1912) அச்சகமும் குறிப்பிடத் தக்கவை. 1907 ஆம் ஆண்டிலிருந்து "சைவ சூக்குமார்த்த போதினி" என்னும் சஞ்சிகை யினை மாதந்தோறும் வெளியிட்டார். அதில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பல சைவ அறிஞர்களால் எழுதப்பட்டிருந்தன. "சிவநெறிப் பிரகாசம்" என்னும் செய்யுள் நூலும் அச்சகம் மூலம் வெளியிடப்பட்டது. தம்பு வாத்தியார் நயினை நாகபூக்ஷணி வித்தியாசாலையில் கற்பித்த காலத்தில் அங்கு ஆசிரியராயிருந்த பிரம்மஸ்ரீ கணேசய்யருடன் தொடர்பு கொண்டு இலக்கிய சமயப் பணிகளில் ஈடுபட்டார். "நயினாதீவு ஸ்ரீ நாகபூக்ஷணி அம்மன் கோயில் நாகைத் திருவிரட்டை மணிமாலை", "திருநாகதீபப் பதிகம்" முதலிய நூல்களோடு ஆறுமுகநாவலர் மீதான தனிப்பாடல் முதலானவையும் தம்பு வாத்தியாரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியப் பிரசவங்களில் சில வாகும். அவரது இளைய மகளார் பண்டிதை வேதநாயகி அவர்கள் திருநெல்வேலி சைவா சிரிய கலாசாலையில் பண்டிதமணி. சி.கணபதிப் பிள்ளை அவர்களிடம் பாடங்கேட்டவர். "ஈழகே சரிப்" பத்திரிகையில் "பெண் மக்கள் விலங்கு" என்னும் கட்டுரையை 1938இல் எழுதியவர். "சைவ சூக்குமார்த்த போதினி" யின் பிற்கால வெளிவருகையில் பேருதவி புரிந்ததுடன் அதில் கட்டுரைகளையும் எழுதியவர். காரைநகர் மணிவாசகர் சபை வெளியிட்ட சிறப்பு மலர் களிலும் அம்மையாரின் கட்டுரைகள் வெளி வந்தன. "லக்ஷ்க்ஷிய கலாநிதி" என்ற தலைப்பில் பண்டிதமணி பற்றிய கட்டுரையையும் எழுதி யிருந்தார். தமிழ்நாடு விழைவுறுந் தகைசால் மெல்லியல், மருள் நீக்கும் மருத்துவம், பயனிலை, மாங்கல்யம், உள்ளத்துள் ஒளிர் கின்ற ஒளி, கந்தபுராணம் காக்கும் கலாசாரம், சைவம் பிரகாசிக்க, தேசிகர் நாயகர் வாழ்க, எங்கள் ஞான குருமணி, இவர் யார், பிரார்த் தனை உரை, நாகைத் திருவிரட்டை மணி மாலை, நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் தேர்த்திருப்பணிச்சபை மலர்க் கட்டுரை, நாகைத் திருவிரட்டை மணிமாலை, உயிர்மருந்து, வேலணைத்தீவு வேலணையில் சைவம் வளர்ந்த வரலாறு, தம்பு உபாத்தியாயர், உலக இந்து மகாநாடு, சைவசூக்குமார்த்த போதினி (04) ஆகிய பல கட்டுரைகளைக் பண்டிதை அவர்கள் எழுதியுள்ளமை பற்றிய தகவல்களை திரு.ச.கந்தவேள் அவர்கள் தொகுத்தளித்த பண்டிதை பற்றிய நூல் அறியத் தந்துள்ளது. பல மரபுச் செய்யுள்களையும் அம்மையார் இயற்றியுள்ளார். திருவாவடுதுறை ஆதீன தேவாரப் பாடசாலையில் பண்ணிசைப் பயிற்சி பெற்ற சைவசித்தாந்த பண்டிதரான நாகலிங்க வாத்தியாரின் இலக்கிய ஆக்கங்கள் பற்றிய தகவல்கள் குறைவு. பல தனிப் பாடல் களினது சொந்தக்காரராவார். அதேபோல் பண்டிதமணியின் சீடராகவும், பண்டிதமணி நூல் வெளியீட்டு சபைத் தலைவராகவும், வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபராகவும் விளங்கிய பண்டிதர். ச.சிதம்பரப்பிள்ளை அவர்கள், பெரியவர்கள் பலரைப் போற்றிப் பாடி யிருக்கிறார். "தந்தையுமாயினார் வாழ்கைத் துணை நலம்", "பெரிய மாமா", "இருவரில் ஒருவர்", "சின்னமாமா", "எடுத்துச் சுமப்பவர்", "சுடச்சுடரும் பொன்", முதலான பல கட்டுரைகள் மூலம் அறிஞர்கள், புலவர்கள் பற்றிய ஆளுமையை வெளிப்படுத்தியவர். பல நீத்தார் பாடல்களையும் தந்திருக்கிறார். ச.மகாலிங்கம் விதானையாரின் பெரிய தந்தையார் இராம லிங்கம் அவர்கள் ஒரு சிறந்த கவிஞர். ஆன்மீக நாட்டங் கொண்டு தமிழ்நாடு சித்தராகி, இளம் வயதில் காலமானவர். அவரைப்பற்றி விதானை யார் "சிதம்பரத்துச்சாமியார்" என்னும் கட்டுரைத் தொடரை எழுதி "இந்து சாதனம்" பத்திரிகையில் வெளியிட்டார். ஏராளமான நீத்தார் பாடல் களையும், கோவிற் பிரபந்தங்களையும் மகா லிங்கம் விதானையார் ஆக்கியுள்ளார். மேலே குறிப்பிடப்பட்ட சைவத் தமிழ்ச் சமூகப் பணி யாளர் வரிசையில் பொன்னையா, சட்டம் பியார், முருகேசு, முத்து, விதானையார் சதா சிவம், அப்பாத்துரை (பேரம்பலம்) வேலுப் பிள்ளை ஆகிய அரும்பணியாளர்களும் அடங்குவர். இவர்களது படைப்பாக்கங்கள் அழிந்தோ அல்லது குறைவானவையாகவோ இருக்கக்கூடும். தகவல்களைப் பெற முடிய வில்லை.

அடுத்ததாக வேலணை கோ.பேரம் பலப்புலவர் (1859-) அவர்களது படைப்புக் களை நோக்குவோம். இலந்தைக்காட்டு சித்தி விநாயகர் இரட்டை மணிமாலை, வண்ணைச் சிலேடை வெண்பா, கடம்பர் யமகவந்தாதி, பெருங்குளத்து முத்துமாரி அம்மை ஊஞ்சல் ஆகிய நூல்களுடன் தனிப்பாடல்கள், சீட்டுக் கவிகள் போன்றனவும் புலவரது ஆக்கங் களாகும். அதேபோன்று சரவணை பள்ளம் புலம் ஆறுமுகம் தில்லைநாதபிள்ளை (தில்லைநாதப் புலவர் 1985-1966) அவர்களால் பள்ளம்புலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகமூர்த்தி திருவிரட்டை மணிமாலை, (1921), பள்ளம்புலம் திருமுருகரலங்காரம் (1927), பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளை யார் பதிகம் (1948), புளியங்கூடல் மாரியம்மன் பதிகம், வேலணை இலந்தைவனம் சித்தி விநாயகர் பதிகம் (1948), நாரந்தனை சுப்பிர மணிய சுவாமி பதிகம் (1951), மேலைக் கரம்பொன் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி பதிகம் (1951), நல்லூர் பதிற்றுப்பத்தந்தாதி (1952), பள்ளம்புலம் முருகமூர்த்தி திருப்பதிகம் (1957), திருப்பள்ளம்புலம் யமகவந்தாதி (1961), நல்லைத் திருவருக்கமாலை (1961), பள்ளம் புலம் முருகமூர்த்தி திருவூஞ்சல், தில்லைச் சிலேடை வெண்பா (1959), தில்லை நடேசர் தியானப்பதிகம் (1963), கரம்பன் விசுவநாத சுவாமி தோத்திரசோடசம் (1965), விசுவநாத சுவாமி திருவூஞ்சல், வாணி வணக்கம் (தோத்திரமாலை 1956), ஸ்ரீமதி சடையம்மா ஞானசமாதி ஞாபகப்பாக்கள் (1957) ஆகிய பல தோத்திர நூல்களைத் தந்துள்ளார்.

வித்துவான் கனகசபை வேந்தனார் (1918–1966) வேலணையிற் பிறந்தவர். நாகேந் திரம் என்ற தமது பெயரைத் தமிழ்ப்பற்றின் காரணமாக மாற்றி வேந்தனார் ஆகியவர். 1946 – 1966 காலப்பகுதியில் பரமேஸ்வரா கல்லூரித் தமிழாசானாகப் பணிபுரிகையில் கம்பரா மாயணம் – கும்பகருணன் வதைப்படலம் உரை, கம்பராமாயணம்–காட்சிப்படலமும் நிந்தனைப் படலமும் உரை, கம்பராமாயணம் – மந்தரை சூழ்ச்சிப் படலமும் கைகேயி சூழ்வினைப் படலமும் உரை, பாரதியார் பாடல்கள் விளக்கம் இந்துசமயம் ஆகிய பாடநூல்களை எழுதியவர். யாழ்ப்பாணத்துத் திருநல்லூர்த் திருப்பள்ளி யெழுச்சி (1961), கவிதைப் பூம்பொழில் (1964) ஆகிய நூல்களின் சொந்தக்காரர். இவரது கட்டுரைகள் 97 வரையில் பல்வேறு பத்திரி கைகள், சஞ்சிகைகளில் (இந்துசாதனம், யாழ்ப் பாடி, ஈழநாடு, தினகரன், வீரகேசரி, தமிழ் இளைஞன் உட்பட) வெளிவந்துள்ளன. உற்ற துணை, காதற்கலை வாழ்வில் ஆகிய நெடும் பாடல்களையும் மாம்பழம், அக்கா, பொன் இராமநாதன் முதலான சிறுவர் பாடல்களையும் எழுதியதுடன் திருநல்லூர்த் திருவந்தாதி, வைத்தீஸ்வர வித்தியாலயம் பொன்விழா வாழ்த்து, கம்பனென்றொரு மானிடன் வாழ்ந் தனன் முதலானவைகளும் நூல்வடிவம் பெறா துள்ளன. இளமையில் 48 வயதில் காலமாகி யிராவிடில் அவரது இலக்கியங்களாலும், சொற்பொழிவுகளாலும், ஆசிரியர் பணியி னாலும் ஈழத் தமிழுலகம் பெரும் பயன் அடைந் திருக்கும்.

வித்துவான். பண்டிதர் கார்த்திகேசர் பொன்னம்பலம் இரத்தினம் (1914–2010) அவர்கள் தமிழ்ப்பேரறிஞர். 1963–1985 வரை இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராயிருந் தவர். உலகத் தமிழ்மறைக்கழகத்தின் தாபகர் (1952) ஆசிரிய கலாசாலைகளில் (கோப்பாய், மகரகம) விரிவுரையாளராய்ப் பணி செய்த துடன், அரச கரும மொழித் திணைக்களத்தில் ஆய்வாளராகவுமிருந்தவர். பாடசாலைப் பரி சோதகர் பணியிலும் (1943–1945) இருந்தவர். மலேசியப் பல்கலைக்கழக விரிவுரையாளர், பேரம்பலப் புலவரின் பேரனார் இவர். உலகத் தமிழறிஞர்கள் குழாமுடன் மிக நெருக்கங் கொண்டிருந்த தமிழ்ப் பற்றாளர். 1953–1983 வரை 24 திருக்குறள் மாநாடுகளை நடத்தியவர். 1980 இல் இவரால் வேலணையில் நடத்தப்பட்ட திருக்குறள் மகாநாட்டில் வண.தனிநாயகம் அடிகள் கலந்து கொண்டார். அவரது இறுதிப் பொது நிகழ்ச்சி இதுவாகும். உலகத் தமிழா ராய்ச்சி மன்றம் அமைத்தலிலும் ஈடுபட்டுத் தனிநாயகமடிகளுடன் உழைத்தவர் பண்டிதர் இரத்தினம். பல உலக நாடுகளுக்கும் சென்று தமிழ்ப்பணி ஆற்றியுள்ளார். (இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, பீஜித் தீவுகள், இங் கிலாந்து, அவுஸ்திரேலியா, தாய்லாந்து, ஜேர்மனி, இந்தோனேசியா, பிரான்ஸ், மியன் மார், பாமாசு, ரஷ்யா). ஏராளமான நூல்களைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழுலகுக்குத் தந்த இப் பேரறிஞர் பன்மொழி வித்தகர்.

அடிமைச் சாசனம், இருபத்து நான்கு மணி நேரத்தில் தமிழ்ஈழம், இலக்கியம் கற்பித்தல், இலங்கையில் இன்பத்தமிழ், உலகத்துக்கு ஒன்று, உரை வண்ணம், கல்வியும் தமிழகமும், காவியமணம், கற்பகமலர், தடுப்புக் காவலில் பத்து நாட்கள், தமிழ்ஈழப் போராட்டம், தமிழ் உணர்ச்சி, தமிழ் மறை விருந்து, தனி ஆட்சி, தாவாரம் இல்லை, தொல் இலங்கையில் தமிழர், நூற்றாண்டுகளில் தமிழர், பச்சை மண்ணும் சுட்ட மண்ணும், மனப்பால், யாவும் இரப்பவை, வள்ளுவரைக் கேளுங்கள், நினைவுத் திரைகள் ஆகிய இயற்றமிழ் நூல் களுடன் காலந்தோறும் பல்வேறு ஏடுகளும் நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் தமிழ் அன்னைக்கு அர்ப்பணஞ் செய்தவர் கா.பொ. அவரது கவிதை நூல்களாக அன்புச்சோலை, இமயத்து உச்சியில், தமிழ்ஈழம் ஐம்பது ஆகியனவும், தொகுத்தும் பதிப்பித்தும் தந்தவை களாக எழுத்தாளர் கல்கி, தமிழ் மறைக் கட்டுரைகள், திருவள்ளுவர் திருநாள் மலர், நாவலர் நினைவு மலர், முருகு, பேரம்பலப் புலவர் நினைவு மலர் ஆகியன காணப்படு கின்றன.

வேலணையூரவரான பண்டிதர் பொன்னம்பலம் ஜெகநாதன் அவர்கள் ஆசிரியப் பணிபுரிந்தவர். வரலாற்றாய்வாளர், கவிஞர், கட்டுரையாளர். 25.11.1973 இல் இவரியற்றிய வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் மீதான பக்திப் பாடல்களை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினர் நூலாக வெளியிட்டனர். 1967ல் வேலணை முத்துமாரி அம்மன் ஊஞ்சல் வெளி வந்தது. வேலணை முத்துமாரியம்மன் வரலாறு கவிதையில் இவராற் பாடப்பட்டு 21.08.1968 இல் வெளியானது. மேலும் சோம சுந்தரப் புலவர், பிரம்மஸ்ரீ. சி.கணேசையா, நவநீதகிருக்ஷ்ண பாரதியார் ஆகியோர் வேலணை முத்துமாரியம்மன் மீது பாடிய பாடல் களைத் தொகுத்து வெளியிட்டார். சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் பற்றி ஆய்வு செய்து "அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி" என்னும் நூலை 1944 இல் தமிழ் நாட்டில் வெளியிட்டார். இவரது "யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்" நூல் 1988இல் யாழ் இலக்கிய வட்டத்தினால் வெளியிடப் பட்டது. இவரைப் போலவே வேலணையைச் சேர்ந்த பண்டிதர் மாரிமுத்து மாணிக்கம் அவர் களின் சைவத் தமிழ்ப் பணியும் மரபு வழிவந்த தாகும். ஆயிரத்துக்கும் அதிகமான கல்வெட்டுக் களை யாத்தளித்த பெரியாரிவர். அழகொல்லை விநாயகராலய திருப்பள்ளி எழுச்சிப் பதிகம், வேலணை முத்துமாரி அம்மன் ஊஞ்சல் பாடல் அணிஞ்சிலடி விநாயகர் பதிகம் ஆகியனவும் இவர் இயற்றியவைகளே. பெரியபுராண வசனச் சுருக்கம், கந்தபுராண வசனச் சுருக்கம், திருக் குறள் வசனச் சுருக்கம், ஆண்டு 10இற்கான நள வெண்பா பாக்களின் பதவுரை, புறநானூற்றில் சிந்தைக்கினிய செய்திகள் சில ஆகியன இவர் வடிவமைத்து வெளியிட்ட நூல்களில் சில வாகும். சித்தாந்த சிரோன்மணி முருகேசு மயில் வாகனம் (1900-1990) அவர்கள் யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரியில் கற்பித்தவர். சைவ பரிபாலன சபையின் செயலாளராயிருந்து பணி யாற்றியவர். யோகர் சுவாமியின் அருளாசி பெற்றவர். இந்துக் கல்லூரிகளின் வாலிபர் சங்கத் தலைவர். இவரது அமுதவிழாவின் போது "எனது பழைய சிந்தனைகள்" என்னும் சிறுநூல் யாழ் இந்துக் கல்லூரியில் பிரார்த் தனை மண்டபத்தில் வெளியிடப்பட்டது. திருக் கேதீஸ்வர புராணம் வெளிவரக்காரணமா யிருந்தவர். பல்துறைச் சமய தமிழ் உரை நூல்களின் ஆசிரியர்.

தில்லையம்பலம் சிவசாமி (தில்லைச் சிவன்) சரவணை- பள்ளம்புலத்தில் பிறந்தவர். இவரதுகாலம் 1928 -2004 ஆகும். ஆசிரியராக அதிபராகப் பதவிவகித்தவர். நாடறிந்த நற்றமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞராகப் பிரபல்யம் பெற்றவர். அரசிய லாளராக, கவிஞராக, சிறுகதையாசிரியராக, கட்டுரையாளராக, சிறந்த சொற்பொழிவாள ராகப் பல் பரிமாணங்களை வெளிப்படுத் தியவர். பதினான்கு வயதிலேயே தான் கல்வி கற்ற சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை மாணவர் மன்றம் வெளியிட்ட "சைவ மாணவர் போதினி" கையெழுத்துச் சஞ்சிகையில் எழுதத் தொடங்கி தனது இறுதிக்காலம் வரை தொடர்ந்து எழுத்தாக்கங்களில் ஈடுபட்டவர். ஆரம்பத்தில் வீரகேசரி மாணவர் பக்கங்களில் வாய்ப்புப் பெற்றவர். பின்னர் புயல், மின் னொழி, வீரன், மறுமலர்ச்சி, ஈழகேசரி, இந்து சாதனம், சுதந்திரன், தினகரன், சிந்தாமணி ஆகிய ஏடுகளில் எழுதினார். தமிழக ஏடுகளான அணிகலன், பாப்பாமலர், வசந்தம் ஆகிய வற்றிலும் அண்ணாவின் "திராவிடநாடு" பத்திரி கையிலும் இவரது கவிதைகள் வெளி வந்துள்ளன. "தமிழன்" (1950-1952) "கலைச்செல்வி" (எஸ் இரத்தின சபாபதி, நடமாடி இராசரத்தினம் ஆகியோருடன் இணைந்து) ஆகிய இதழ்களைச் சிறிதுகாலம் வெளியிட்டார். தமிழ்மறைக் கழகத்தின் செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். ஈழத்து இன உணர்வுக் கவிதைகளின் முன்னோடி இவர்தான். "புயல்" சஞ்சிகையில் "தீப்பொறி" என்னும் கவிதையை எழுதியிருந்தார். சோளாவத்தை- பள்ளம்புலம் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராயிருந்து பணி செய்தார். உள்ளூர் ஆலய அறங்காவலர் சபையில் பல பதவிகளை வகித்தார். கனவுக்கன்னி (1961), தாய் (1969), ஐயனார் அருள் வேட்டலும் திருவூஞ்சலும் (1972), தில்லை மேடைத் திருப்பாட்டு (1974), பாப்பாப் பாட்டுகள் (1985), நான் சுயகாவியம் (1993), வேலணைத் தீவுப் புலவர்கள் (1996), அந்தக்காலக் கதைகள் (1997), நாவலர் வெண்பா (1997), பூஞ்சிட்டு (1998), தில்லைச் சிவன் கவிதைகள் (1998), சிறுவர் கதைப் பெட்டகம் (1999), வேலணைப் பெரியார் கா.பொ.இரத்தினம் (1999), ஆசிரியை ஆகினேன் (2000), படைப்போம் பாடுவோம் (2001), காவல்வேலி சிறுகதைத் தொகுதி (2003), தந்தை செல்வா காவியம்(2004), ஆகிய நூல்களின் சொந்தக்காரர் கவிஞர் தில்லைச்சிவன். ஈழநாடு, உதயன், ஈழநாதம், முரசொலி, தினக்குரல் போன்றவற்றிலும் இவரது படைப்புக்கள் தாராளமாக வெளி வந்துள்ளன. இவர் ஒரு தமிழ்தேசிய வாதியாக தன்னை அடையாளங் காட்டிய போதிலும் இடதுசாரிக் கொள்கைகளிலும் நம்பிக்கை உள்ளவர்.

வேலணை-பள்ளம்புலத்தைச் சேர்ந்த வரும் இளம் வயதில் காலமாகிவிட்ட வருமான முகிலன் என்பவரின் "முகிலன் கவிதைகள்" நூல் 1963 அளவில் வெளிவந்தது. தரமான கவிதைகள் இந்நூலில் உள்ளன.

வேலணைப் பிரதேசசெயலகப் பிரி வினுள் அடங்கும் மண்டைதீவுக் கிராமத்திலும் அவ்வப்போது பல இலக்கியமுயற்சிகள் நடை பெற்றுள்ளன. தி.அகிலேஸ்வரசர்மா என்பவர் திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தின் தெற்கு வீதிக்கருகில் வசித்தவர். 1951 இல் கால மானவர். பலமொழிகளில் பரிச்சயமுள்ளவர். சிறந்த சோதிடராக விளங்கியதுடன் ஜாதகம் கணிப்பதிலும் ஈடுபட்டவர். சோதிடம் சம்பந்த மான நூலொன்றினை எழுதி வெளி யிட்டுள்ளார். மேலும் பண்ணைப் பாலக்கும்மி, நவநாகரீகக்கும்மி, முதலான நூல்களையும் கவிதை வடிவில் தந்துள்ளார்.

"பிள்ளை பெற்ற பெண்களுக்கும்
பிறண்டி வேணுமாம் பிட்டுஅள்ளித் தின்பதற்குக்
கறண்டிவேணுமாம் முள்ளுக் கொண்டு
இறைச்சி குற்றித் தின்னவேணுமாம் முழுசும்
வெள்ளைக் காரர் போல மின்ன வேணுமாம்"

இது ஐயரின் நாகரிகக் கும்மிப் பாடல் களில் ஒன்று. மண்டைதீவுதெற்கைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் கந்தசாமியார் ஆலய தர்மகர்த்தாவு மாகிய திரு.பொன்னம்பலம் குமாரவேற் பிள்ளை (1908-1961) அவர்கள் நிறைந்த கல்விமான். மேலைப்பழமையூர் சோமசுந்தரம் என்னும் தமிழறிஞன் இந்தியாவிலிருந்து வரவழைத்துத் தம்முடன் தங்க வைத்து "அமுத சுரபி" என்னும் மாதாந்த சஞ்சிகையை நடத்தியவர். இந்தச் சஞ்சிகை சிலமாதங்கள் மட்டும் (மூன்றுதடவைகள்) வெளிவந்தது. இம்முயற்சி 1930களின் இறுதியில் நடை பெற்றது. 1936 இல் ஈழகேசரி பத்திரிகையில் "உத்தமமனைவி" என்ற தொடர் கதையை எழுதியதுடன் அமுதசுரபியில் "நிறைவு பெறாத மந்திரவாதியின் மகள்" தொடரையும் எழுதி யவர் குமாரவேற்பிள்ளை. மண்டைதீவுக் கிரா மத்தின் இலக்கிய முன்னோடி அவரே எனலாம். திரு.வெற்றிவேலு செல்லத்துரை என்பவர் "சென்னியூர்ச்செல்வன்" என்னும் புனைப் பெயரில் பல எழுத்தாக்கங்களைத் தந்தவர். மிக இளம் வயதில் காலமானார். "வைகறை நிலவு" கவிதைத் தொகுதியையும் "கடற் காற்று" குறு நாவலையும் வெளியிட்டவர். பல்வேறு ஏடு களில் சுவடு, நெஞ்சுக்கு ஓரு நிறைவு சுவிஸ், நிலவு இருந்தவானம், நாதங்கள் பலகோடி, கலங்காத கண்கள் ஆகிய இவரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன. "அங்கையன் கதைகள்" என்ற நூல் இவரது மறைவுக்குப் பின்னர் தாமதமாக வெளிவந்துள்ளது. அதே போன்று "செங்கடல்" நூலும் வெளியாகியது.

மண்டைதீவு க.அமிர்தலிங்கம் (ஈழ மோகன்) என்பவரும் பல தனிப்பாடல் களையும், நீத்தார் பாடல்களையும், கடவுள் மீதான பிரபந்தங்களையும் ஆக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அல்லைப்பிட்டிக் கிராமத்தைச் சேர்ந்த க.வ.ஆறுமுகம் அவர்கள் (1922-2003), பண்டிதர், எழுத்தாளர், சமூகப்பணியாளர். வல்லிபுரம் தம்பதிகளின் மகன். கவிஞராக, சிறுகதையாளராக, நாடகாசிரியராகப் பெரிதும் தன்னை வெளிக்காட்டியவர். சுதந்திரன் பத்திரிகையில் இவரது "கவிக்குமரி" சிறுகதை வெளியானது. பிரபலபத்திரிகைகள் அனைத் திலும் இவரது கவிதைகள் வெளிவந்தன. அடைப்புக்குறிகள் (1987), பக்க வாத்திய மில்லாத பாட்டுக் கச்சேரி (1993), மதமும் மானிடமும் (நெடும்பா 2000) ஆகியவை அச்சில் வெளிவந்த இவரது நூல்களாகும். இதுதான் உலகம், பெண்ணாக மாறினால், புரட்சிக்கவி, அடையாள அட்டை முதலான பல நாடகங்களை எழுதி தயாரித்து மேடை யேற்றியவர். இவரைப் போலவே பாவலர் பாவிலுப்பிள்ளை சத்தியசீலன் (1938 -2001) அவர்களும் அல்லைப்பிட்டியின் பெயர் விளக்கும் பெருங்கவிஞர். ஆசிரியப் பணி புரிந்தவர். கொழும்பு றோயல் கல்லூரியிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், நவாலி றோ.க.பாடசாலையிலும் கற்பித்தவர். "சுதந் திரனில்" தொடங்கி நாட்டின் பல்துறை ஏடு களிலும் கவிதை எழுதியவர். ஆங்கிலப் புலமை மிக்கவர். நவாலியில் மணம்முடித்து வாழ்ந் தவர். சிறுவர்களுக்கான பல பாடநூல்களைத் தந்தவர். இலங்கையின் குழந்தையிலக்கியத் துறையில் பெரும்பங்கு வகித்தவர். "பா" உட் படப் பல சிறுவர் நூல்கள் இவருடையது. "அருளப்பர் அம்மானை "என்னும் நூலையும் தந்துள்ளார். கவியரங்கக் கவிஞராகவும் விளங்கியவர் பண்டிதர் சத்தியசீலன் ஆவார்.

புங்குடுதீவில் பிறந்த பலரும் தமிழ் இலக்கியத்துறைக்குத் தம்மாலான பங்களிப்பை நல்கியுள்ளனர். "நாவேந்தன்" என்னும் புனை பெயரால் அறியப்பட்ட தம்பிராசா திருநாவுக் கரசு அவர்கள் (1932-2000) சிறுகதை, நாடகம், கட்டுரை, கவிதை, நாவல், விமர்சனம் எனப் பல்வேறு துறைகளிலும் பரிணமித்தவர். ஆசிரியராக, அதிபராக, பத்திரிகையாசிரியராக, சொற்பொழிவாளராக, அரசியல்வாதியாகப் பல் பரிமாணம் காட்டியவர். தமது 15வது வயதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்துசாதனம்" பத்திரிகை மூலம் எழுத்துலகில் அடியெடுத்துவைத்து இறக்கும் வரை தமிழிலக் கியப் பணிசெய்தவர். "வாழ்வு" சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. இவர் படைத்த "மரியாள் மகதலேனா" காவியம் புகழ் படைத்தது. நக்கீரன், ஆம்பலூர்க்கவி, அருண கிரிதாசர், மேகநாதன், பண்டிதர் பரசுராம மூர்த்தி, ததீஜி, தீப்பொறி முதலாய புனை பெயர் களைப் பயன்படுத்தி இலக்கியம் படைத்தவர். "சுதந்திரன்" பண்ணையில் முதிர்ந்த எழுத் தாளர். மானவீரன், கும்பகர்ணன், தலைவர் வன்னியசிங்கம், நான் ஒரு பிச்சைக்காரன், சிலப்பதிகாரச் செந்நெறி, மாவட்ட சபைகளைப் பகிஸ்கரிப்பது ஏன்? முதலான கட்டுரை நூல்கள் இவருடையவை. "சுதந்திரன்" இதழில் பல அரசியல் ஓரங்க நாடகங்களை எழுதியவர். "ஸ்ரீ அளித்த சிறை" நூலினைத் தமது தடுப்புக்காவல் அனுபவங்களாக வெளியிட்டவர். மண்டோதரி, தாரை, ஜோன்கஸ்டர், பெருநெருப்பு முதலிய நாடகங்களும் இவருடையவை. தமிழ்க்குரல் (1958), சங்கப்பலகை (1962), நாவேந்தன் (1970), தமிழன் (1969), நம்நாடு (1985) எனப் பல பத்திரிகைகளையும் தாம் ஆசிரியரா யிருந்து நடத்தியவர். தமிழரசு வாலிப முன்னணி இணைச் செயலாளராக, யாழ்ப்பாண மாநாகரசபைப் பிரதிமேயராகப் பணி செய்தவர். யாழ் இலக்கிய வட்டம் இவரது பெய ரால் வருடந்தோறும் சிறந்த சிறுகதைகளுக்கான நாவேந்தன் விருதினை வழங்கி வருகின்றது.

புங்குடுதீவைச் சேர்ந்த ஆசிரியரான மு.தளையசிங்கம் (1935-1973) அவர்கள் புதிய அணுகுமுறைகள் மூலமும் உலகத் தமிழிலக் கியத் துறையில் புரட்சியை ஏற்படுத் தியவர். சிறுகதை, விமர்சனம், நாவல் ஆகிய வற்றோடு விமர்சனத்துறையிலும் பங்களிப்புச் செய்தவர். சர்வோதய இயக்கச் செயற்பாடு களில் ஈடு பட்டுழைத்தவர். ஒரு தனி வீடு (நாவல் 1965), ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி (1971), போர்ப்பறை, மெய்யுள், புதுயுகம் பிறக்கிறது (சிறுகதைத் தொகுதி-சாகித்தியப் பரிசு பெற்றது) ஆகிய இவரது நூல்கள் பலரிடையேயும் பாராட்டுப் பெற்றவை. புத்திலக்கிய வடிவத்தின் வழிகாட்டி இவர். கலைஞரின் தாகம், அண்டை வீடுகள், உள்ளும் வெளியும், இரத்தம், பெப்ரவரி-04, வெள்ளை யானை ஆகியவை இவரது புதுமைப் படைப்பான சிறு கதைகளில் சிலவாகும். 1957 இல் இவரது முதற் சிறுகதை "சுதந்திரன்" பத்திரிகையில் வெளி யானது. இவரது எழுத்துக்கள் பற்றிய ஆய்வு முயற்சிகள் தமிழ் நாட்டிலும் இடம்பெறுகின்றன.

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர்.சு.வில்வரத்தினம் (1950-2006) தமிழிலக்கியவுலகில் நன்கு அறியப் பட்டவர். அகங்களும் முகங்களும், காலத்துயர், நெற்றிமண், உயிர்த்தெழும் காலத்துக்காக, காற்று வழிக்கிராமம் என்பன இவரது கவிதை நூல்களாகும். இவரது கவிதைகள் யாவும் தொகுக்கப்பட்டு "சு.வியின் கவிதை நூல்கள்" என்னும் தலைப்பில் பாரிய நூலாக வெளியிடப் பட்டுள்ளது. வித்துவான் சி.ஆறுமுகம், வித்து வான் பொன்.கனகசபை, சி.சடாச்சர சண்முக தாஸ் போன்ற அமரர்களின் இலக்கியப்பணியும் குறிப்பிடத்தக்கது. வண.தனிநாயகம் அடிகள் காலமான போது வித்துவான் சி.ஆறுமுகம் அவர்கள் "ஈழநாடு" பத்திரிகையில் எழுதிய "திலகம் இழந்தனை தமிழ்மகளே! திருமந்திரச் சொல் அடங்கிற்றே" என்ற ஈற்றடிகளையுடைய கவிதை பலராலும் பாராட்டப்பட்டது. இலங்கை நிர்வாகசேவை அதிகாரியான சி.சடாச்சர சண்முகதாஸ் அவர்கள் பல கவிதைகள் இயற்றி யுள்ளார். ஐம்பது வயதில் காலமானார். இதே போன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் பிரதியதிபராயிருந்த திரு.க.சிவராமலிங்கம் அவர்களும் கட்டுரைகள் கவிதைகள் என எழுதி யதுடன் அகில இலங்கைக் கம்பன் கழகத்தை நிறுவிச் செயற்படுத்துவதிலும் முன்னின்று உழைத்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவை அடுத்துள்ள நயினாதீவும் இலக்கிய வரலாற்றுப்பெருமை கொண்ட கிராம மாகும். நயினை நாகமணிப்புலவர் "வரகவி" எனப் போற்றப்படுபவர். நயினை நீரோட்ட யமக அந்தாதி, நயினை மான்மியம் ஆகிய நூல்களின் ஆசிரியர். நயினை கு.ப. சரவணபவன் (1909 – 1949) மலைநாட்டில் ஆசிரியராகப் பணி புரிந்தவர். பல தனிப்பாடல்களுடன் நாகபூசணி யம்மை பதிகமும் பாடியவர். நயினை முத்துக் குமார சுவாமிகள் (1897–1949) மலைநாட்டில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். பல தனிப் பாடல் களுடன் நாகபூசணியம்மை பதிகமும் பாடியவர். நயினை முத்துக்குமார சுவாமிகள் (1897–1949) (தில்லையம்பலம் – பார்வதி மைந்தர்) பத்து வயதிலேயே கணேசப்பெருமான் மீது பதிகம் பாடியவர். "தத்சிச்சி பாவும் தட்டாத்தி கூடத் தகவுடனே" என அப்பாடல் தொடங்கு கிறது. இளம் வயதிலேயே ஆன்மீக நாட்டம் கொண்டு துறவியானவர். பல தனிப் பாடல் களால் இறைவனைப் போற்றியுள்ளார். "ஆத்ம ஜோதி" என்னும் சஞ்சிகையை வெளி யிட்ட ஆத்மீகஞானி இராமச்சந்திரா அவர்களும் சமய ரீதியான இலக்கிய ஆக்கங்களைத் தந்திருக் கிறார். மேலும் இலக்கியப் பரிச்சய மிக்க டேவிட்ராஜ் (வீரகேசரி உதவியாசிரியர்) போன்றவர்களது ஆக்கங்களும் குறிப்பிடத் தக்கன.

காலந்தோறும் வேலணைப்பிரதேச எல்லையுள் எத்தனையோ இலக்கியவாதிகள் தோன்றி மறைந்திருக்கிறார்கள். அவர்களது படைப்புக்கள் பற்றிய விபரங்கள் வெளி வருவதில் பல தடைகள் உள்ளன. பாராமுகமும் அவற்றை அச்சில் வெளியிடமுடியாத பொருளா தார நெருக்கடிகளும், அவற்றின் தொலைவு களும் அழிவுகளும் சில காரணிகளாகும். இக் கட்டுரையில் அமரர்களான இலக்கியவாதிகள் சிலரை மட்டுமே அடையாளங் காட்டப் பட்டுள்ளது. எனவே வருங்காலத்தில் தேடல் முயற்சிகள் மூலம் மேலும் பல இலக்கியப் படைப்பாளிகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வர முடியுமெனலாம். அத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் படைப்பாளிகள் பற்றி இக் கட்டுரை கூறவில்லை. அந்த முயற்சியும் இனிமேல் தொடரும் என நம்புவோமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியில் சமசந்தர்ப்பமும் தீவக பிரதேச மாணவர்களின் கல்வி வாய்ப்புகளும்


திரு.சபாரட்ணம் அதிரதன்

B.A (Hons), PGDE, M.A Ecn, M.Ed, CTHE, SEDA (UK). M.phil/phd (Reading)

விரிவுரையாளர், கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.


இலங்கையின் இலவசக்கல்வியின் தந்தையான C.W.W. கன்னங்கரா அவர்கள் கல்விக் குழுவின் தலைவராக பொறுப்பேற்ற தனைத் தொடர்ந்து கல்வியில் சமத்துவம், சமவாய்ப்பு பற்றிய சிந்தனைகள் வலுவடைய லாயிற்று. 1943 விசேட கல்வி ஆணைக் குழுவின் பரிந்துரைகளுடன் இலங்கையின் கல்வியில் ஜனநாயகப் பண்புகளும், சமகல்விச் சந்தர்ப்பங்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கை களும் விரிவடையத் தொடங்கின. அதாவது தாய்மொழிவழிக் கல்வி, இலவசக்கல்வி, இலவச மதிய உணவு, கட்டாயக்கல்வி, மத்திய மகா வித்தியாலயங்களின் உருவாக்கம் போன்ற பல்வேறு முன்னெடுப்புக்கள் இந்நோக்கத்தினை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டன. காலத்திற்கு காலம் முன்னெடுக்கப்பட்ட கல்விச் சிந்தனைகளும், சீர்திருத்தங்களும் கல்வியில் சமத்துவத்தையும், சமவாய்ப்பினையும் நிலை நிறுத்தும் வகையில் அமைந்திருந்தன.

மறுபுறமாக கல்வியில் சமவாய்ப்புத் தொடர்பான உலகளாவிய சிந்தனையின் ஊடுருவலும் செல்வாக்கும் கூட இலங்கையின் கல்விச் சிந்தனைகளில் விசைகளை செலுத்தத் தொடங்கியது. அனைவருக்கும் கல்வி (Education for All) வாழ்க்கை நீடித்த கல்வி (Life Long Education) வளர்ந்தோர் கல்வி (adult Education) தொழிலாளர் கல்வி (Workers Education) என்றவாறு ஒவ்வொருவரும் கல்வி பெறுவதற்கான சந்தர்ப்பங்களை இலக்காகக் கொண்ட சிந்தனைகள் வளர்ச்சியடைய தொடங்கின. முதலாம் உலகப்போரின் முடிவில் அபிவிருத்திக்கும் புரிந்துணர்விற்குமான கருவியாக அனைவருக்கும் ஆரம்பக்கல்வியை வழங்குதல் (Primary Education for All) என்பது அமைந்திருந்தது. இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த காலப்பகுதியில் அதனை அடை வதற்கு மேலான கல்வி தேவையென கருதி அனைவருக்கும் இடைநிலைக்கல்வி (Secondary Education for All) என்ற சிந்தனையும் தற்போது அனைவருக்கும் உயர் கல்வி (High Education for All) என்ற சிந்தனை யையும் அவதானிக்க முடிகின்றது. இவ்வாறாக கல்வி வாய்ப்புக்களை பரவலாக்கி விரிவாக்கு வதன் ஊடாக ஒவ்வொருவருக்கும் கல்வி உரிமையை வழங்குவதும் சமத்துவமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுப்பதும் நோக்கமாக அமைந்திருந்தது.

எவ்வாறாயினும் C.W.W கன்னங்கரா அவர்களது காலத்துடன் தோற்றம் பெற்று இன்று வரை வளர்ச்சி கண்டு நிற்கும் கல்வியில் சமத்து வத்தையும் சமவாய்ப்பையும் கட்டியெழுப்புதல் என்ற சிந்தனை கொள்கையளவில் கவர்ச்சிகர மானதாக அமைந்திருந்தாலும் கொள்கை களிற்கும் நடைமுறைக்கும் இடையிலான இடைவெளி அகன்று செல்கின்றதனைக் காணலாம். கல்வியில் சமவாய்ப்பு சமத்துவம் என்ற கலாநிதி C.W.W கன்னங்கராவின் கனவு இலங்கை சுதந்திரம் பெற்று 60 வருடங்கள் கடந்த பின்பும் கனவாகவே இருக்கின்றது என்பதே உண்மை.

கன்னங்கரா அவர்களின் அடிப்படைச் சிந்தனைகளில் ஒன்றாக கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கு தரமான கல்வியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவது என்பது காணப்பட்டது. கிராமங்களிலுள்ள பிள்ளைகளிற்கு தரமான கல்வி சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி அதனூடாக கிராமங்களை கட்டியெழுப்பும் முயற்சியாகவே 1940 ஆம் ஆண்டு மத்திய மகாவித்தியாலயங்களை உருவாக்கினார். அதாவது வறிய கிராமப்புற மாணவர்கள் உயர்தரமான விஞ்ஞானக் கல்வியைப் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒவ்வொரு தேர்தல் தொகுதியையும் அடிப்படையாகக் கொண்டு இம் மத்திய மகா வித்தியாலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்வாறு உருவாக்கப்பட்ட பாடசாலைகளில் ஒன்று தான் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சுவாமி ம.ம.வி (வேலணை மத்திய கல்லூரி)

கல்வி என்பது ஒவ்வொரு பிள்ளையினதும் உரிமை. ஒவ்வொரு பிள்ளையும் 16 வயது வரை கட்டாயமாக கல்வியைப்பெற வேண்டும் என்ற கொள்கைகள் அழுத்தி வலியுறுத்தப்பட்டாலும் பிரதேச ரீதியிலமைந்த வேறுபாடுகளும் பாடசாலை ரீதியிலான வேறுபாடுகளும் பிள்ளைகள் சமத்துவமான கல்விச் சந்தர்ப்பங்களை பெறுவதை நிராகரிப்புக்கு உள்ளாக்கியுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவகப் பிரதேசமானது அரசியல், சூழலியல், பொருளியல் காரணிகளின் அடிப்படையில் சார்புப் பின்னடைவுமிக்க பிரதேசமாகக் காணப்படும் நிலையில் இங்கு வாழ்கின்ற மக்கள் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகமாகவும் (Land Based Society) பருவகால வருமானம் பெறுபவர்களாகவும் மட்டுமன்றி வறியவர்களாகவும் இருக்கின்றனர். இவ்வாறான பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களை பொருளாதார ரீதியாக மீட்டெடுக்கின்ற கருவியாக கல்வியினையே பயன்படுத்த முடியும். ஆனால் இப்பிரதேச கல்வி வாய்ப்புக்களும் வள நிலைமைகளும் இங்கு வாழ்கின்ற பிள்ளைகள் சமமான கல்வி வாய்ப்புக்களை அல்லது தரமான கல்விச்சந்தர்ப்பங்களை பெறமுடியாத நிலையை தோற்றுவித்துள்ளது.

## *பாடசாலை வேறுபாடுகள்* (School Differences)


தீவக கல்வி வலையத்தில் 4 கல்விக் கோட்டங்களை உள்ளடக்கிய 61 பாடசாலைகள் காணப்படுகின்றன.

அட்டவணை1: கோட்ட ரீதியாக பாடசாலைகளின் வகையும் எண்ணிக்கையும்

| கோட்டம் | 1AB | 1C | TypeII | TypeIII | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | 1 | 2 | 6 | 7 | 16 |
| வேலணை | 1 | 2 | 11 | 11 | 25 |
| காரைநகர் | 2 | 0 | 2 | 8 | 12 |
| நெடுந்தீவு | 0 | 3 | 1 | 4 | 08 |
| மொத்தம் | 04 | 07 | 20 | 30 | 61 |

Source: Zonal Education Office, Island-2013

தீவக பிரதேசத்தில் வாழ்கின்ற மாணவர்களின் கல்லூரி மட்டக் கல்விக்கான (College grade Level) கல்விச் சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவான அளவிலேயே காணப்படுகின்றன. அதாவது க.பொ.த உயர்தர வகுப்பில் கணித விஞ்ஞான பாடங்களை கற்பிக்கக் கூடிய பாடசாலைகளாக ( 1AB Schools ) இவ்வலயத்தில் 04 பாடசாலைகள் மட்டுமே உள்ளன. இது தீவக வலையப் பாடசாலைகளில் 6.5%மானதாக காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வகை 1AB வகைப்பாடசாலைகள் 9.9% மாகவும் கொழும்பு மாவட்டத்தில் 18.2% மாகவும் இலங்கையில் 7.4%மாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.




அட்டவணை 2: க.பொ.த உயர்தர வகுப்புடைய பாடசாலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடசா. | தீவகம் | | யாழ்ப்பாணம் | | கொழும்பு | | இலங்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1AB | 04 | 6.5 | 40 | 9.9 | 68 | 18.2 | 716 | 7.4 |
| 1C | 07 | 11.5 | 48 | 11.8 | 83 | 22.2 | 2005 | 20.7 |
| மொத்தம் | 11 | 18.0 | 98 | 21.7 | 151 | 40.4 | 2721 | 28.1 |

**Source: Ministry of Education, Srilanka**

மேலும் க.பொ.த உயர்தர வகுப்பில் கலை, வணிக துறைகளில் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்களும் கூட இப்பிரதேச மாணவர்களுக்கு மட்டுப்பட்ட அளவிலேயே கிடைக்கப் பெறுகிறது. அதாவது தீவகக் கல்வி வலயத்தில் 11 பாடசாலைகளிலேயே இப்பாடங்களைக் கற்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் 98 பாடசாலைகளும் கொழும்பு மாவட்டத்தில் 151 பாடசாலைகளும் அகில இலங்கையில் 2721 பாடசாலைகளும் இவ்வாய்ப்பினைக் கொண்டுள்ளன. இவ்வாறு ஒப்பு நோக்குகின்ற போது தீவக பிரதேச மாணவர்களுக்கான உயர்தர வகுப்புக்களில் கல்வி பெறுவதற்கான வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைக்கின்றன.

இவற்றின் காரணமாக ஒரு சதுரக் கிலோ மீற்றருக்கான பாடசாலைகளின் பரவலிலும் வேறுபாடுகளைக் காணலாம். தீவகப் பிரதேசத்தில் 44 சதுர கிலோ மீற்றருக்கு ஒரு 1AB பாடசாலையும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 26 சதுர கிலோமீற்றருக்கு ஒரு 1AB பாடசாலையும் கொழும்பு மாவட்டத்தில் 10 சதுர கிலோ மீற்றருக்கு ஒரு 1AB பாடசாலையும் இலங்கையில் 92 சதுரக்கிலோ மீற்றருக்கு ஒரு 1AB பாடசாலையும் என அமைந்துள்ளது. அதே போல 1C பாடசாலையிலும் இவ்வாறான ஒரு நிலைமையே காணப்படுகிறது.

கொழும்பு, யாழ்ப்பாண மாவட்டங்களின் நிலைமைகளோடு ஒப்பிடுகின்ற போது போக்குவரத்து வசதிகள் குறைந்த தீவகத்தில் வாழ்கின்ற பிள்ளைகளின் இருப்பிடத்திற்கும் கணித, விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்கும் அல்லது உயர்தர வகுப்பு பாடங்களைக் கற்பிக்கும் பாடசாலைக்குமான இடைத்தூரம் மிக அதிகமாக உள்ளது. இது தீவகப் பிரதேசத்தில் பயில்கின்ற மாணவர்களில் அநேகர் 9 ஆம் தரத்துடன் அல்லது 11 ஆம் தரத்துடன் இடைவிலகுவதற்குப் பிரதானமான காரணியாக அமைந்து விடுகின்றது.

இலங்கையில் புதிய பொதுக்கல்விச் சட்டத்தை உருவாக்குவதற்கான தேசியக்குழு 2009 தனது அறிக்கையிலே சுட்டிக்காட்டிய விடயங்கள் இங்கு குறிப்பிடத்தக்கவை.

5 வயது தொடக்கம் 6 வயது வரையுள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் $2Km^2$ தூரத்திற்குள் ஒவ்வொரு ஆரம்ப பாடசாலையும் 10 வயது தொடக்கம் 16வயது வரையுள்ள பிள்ளைகளிற்கு $4Km^2$இற்கு ஒரு இடைநிலைப்பாடசாலையும் அமைந்திருப்பது அரச கொள்கையாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. இது மட்டுமன்றி வறிய பிள்ளைகள் உயர் கல்வியை தொடர்வதற்கான ஏது நிலையை பாடசாலை இடைத்தூரம் தீர்மானிக்கின்றது என்றும் மாணவர் இடைவிலகலில் பாடசாலை இடைத்தூரம் செல்வாக்குச் செலுத்துகின்றது என்றும் போதுமான போக்குவரத்து வசதியின்மையால் அதிக தூரம் பயணம் செய்து பாடசாலைக்கு செல்ல முடியாது மாணவர்கள் இடைவிலகி விடுகின்றனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேசியப்பாடசாலைகள்
## (National Schools)

இலங்கையில் இன்று 330 தேசியப்பாடசாலைகள் காணப்படுகின்றன. இத் தேசியப் பாடசாலைகள் கல்வியில் சமத்துவமற்ற தன்மையை உருவாக்குகின்றன. இவை மத்திய அரசின் நேரடிக்கட்டுப்பாட்டில் செயற்படுவதனால் கூடுதலான வளங்களையும் உதவிகளையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று ஒப்பீட்டளவில் தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குகின்றன என்பதுடன் இவை நகரங்களை மையமாகக் கொண்டே அமைக்கப்படுகின்றன அல்லது உள்வாங்கப்படு கின்றன. அதாவது வசதி படைத்த நகர்ப்புறப் பிள்ளைகளிற்கு மேலும் தரமான கல்வியை வழங்கி கல்வி வேறுபாடுகளை நீடிக்கும் செயன் முறைகளையே இவை மேற்கொள்கின்றன. எவ் வாறாயினும் 1989 ஆண்டின் மாகாண சபைகள் திருத்தச் சட்டத்திற்கு (13 வது) முரணான வகை யிலேயே இத்தேசியப் பாடசாலைகள் செயற் றிட்டத்தினை அரசு முன்னெடுத்து வருகின்றது.

எவ்வாறாயினும் கல்விச் சந்தர்ப்பங் களை பரவலாக்குவது, சம சந்தர்ப்பங்களை உரு வாக்குவது என்ற கொள்கைகளிற்கு அப் பாலேயே தேசியப்பாடசாலை உருவாக்கம் இடம்பெறுகிறது. மிகவும் பின்தங்கிய பிரதேச மான தீவகப் பிரதேச பிள்ளைகளுக்கு தேசியப் பாடசாலைக் கல்வி வாய்ப்புக்கள் அறவே இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் 330 தேசியப் பாடசாலைகள் காணப்படும் நிலையில் குறைந்தது ஒரு தேசியப் பாடசாலை யாவது தீவகப் பிரதேசத்தில் இடம்பெறாதது வறியவர்களுக்கு தரமான கல்வி வாய்ப்புக் களை நிராகரிக்கும் ஜனநாயக மீறல் செயற் பாடாகவே பார்க்கப்பட வேண்டும்.

அட்டவணை:3 நிர்வாக அடிப்படையில் பாடசாலைகள்

| பாடசாலை | இலங்கை | கொழும்பு | யாழ்ப்பாணம் | தீவகம் |
|---|---|---|---|---|
| தேசியப் பாடசாலை | 330 | 35 | 40 | 00 |
| மாகாணப் பாடசாலை | 9355 | 368 | 364 | 61 |
| மொத்தம் | 9685 | 373 | 404 | 61 |

**Source: Ministry of Education, Srilanka & Zonel Education Office, Velanai**

## சிறிய பாடசாலைகள் (Small schools)

இன்று பாடசாலை முறைமை எதிர்கொள்ளும் மற்றுமொரு சவாலாக சிறிய பாடசாலைகள் மாறிவருகின்றன. சிறிய பாட சாலைகள் வினைத்திறனும் (Efficiency), விளைதிறனும் (Effectiveness) குன்றியதாகவும் குறைவான மேற்பார்வை, போதுமான ஆளணி, பௌதீக வளங்களின்மை காரணமாக தரம் குறைந்த கல்வியையே இவை வழங்குகின்றன. 16 வயது வரை கல்வி பெறுவது கட்டாயமானது என்பதை சட்டம் மூலம் கட்டாயப்படுத்தும் அரசு அக்கல்வி தரமானதாக வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்த வேண்டும். இச்சிறிய பாடசாலை களில் பெருமளவிற்கு வறிய பிள்ளைகளே அனுமதி பெறும் நிலையில் இங்கு தரமற்ற கல்வி வாய்ப்புக்கள் கிடைப்பது சமூக நீதியை மறுதலிப்பதாக அமைகிறது.

அட்டவணை: 4 மாணவர் தொகை அடிப் படையில் பாடசாலைகளின் எண்ணிக்கை


| மாணவர் தொகை | தீவக வலய பாடசாலைகள் | சதவீதம் | இலங்கையிலுள்ள பாடசாலைகள் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 01-50 | 12 | 19.7 | 1590 | 16.41 |
| 21-10 | 16 | 26.2 | 1456 | 15.03 |
| 101-150 | 07 | 11.5 | 1975 | 20.39 |
| 151-200 | 10 | 16.4 | | |
| 201-500 | 13 | 21.3 | 2436 | 25.15 |
| 501-மேல் | 03 | 49 | 2218 | 22.90 |
| மொத்தம் | 61 | 100 | 9685 | 100.00 |

**Source: Ministry of Education, Srilanka & Zonel Education Office, Velanai**

இருநூற்றிற்கும் குறைவான பிள்ளை களை கொண்ட பாடசாலைகள் சிறிய பாட சாலைகளாகக் குறிப்பிடப்படுகின்றன. தீவக வலையத்தில் உள்ள 61 பாடசாலைகளில் 45 பாடசாலைகள் சிறிய பாடசாலைகளாக உள்ளன. இது தீவகத்தின் மொத்தப் பாடசாலைகளின் சதவீதமாக 74%மாகக் காணப்படுகின்றது. இச்சிறிய பாடசாலைகள் போதுமான ஆளணி வளம், பௌதீக வளம், கற்றல் சாதனங்கள், கற்றலுக்கான கவின் நிலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பார்வை மற்றும் அடிப்படை வசதிகள் போன்றவற்றினை போதுமான அளவில் கொண்டிருக்கவில்லை. இதனால் இச்சிறிய பாட சாலைகள் வினைத்திறனான வெளியீடுகளைக் கொண்டிருப்பதில்லை. ஏறத்தாழ இவை தோல்வியடையும் (Failier Schools) பாட சாலைகள் என்ற நிலையில் காணப்படுகின்றன.




சிறிய பாடசாலைகளில் மிகவும் வறிய பிள்ளைகளே கல்வி கற்கின்றனர். இச்சிறிய பாடசாலைகளின் அதிபர்கள் வினைத்திறனான செயலாற்றல் அற்றவர்களாகவும், போதுமான மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு அற்ற நிலையிலும் இவை செயற்பட்டு வருகின்றன. இப் பாடசாலைகளில் அடைவுகள் பற்றிய எதிர் பார்ப்புகள் இன்மை, கவின்நிலை இன்மை, ஆசிரியர் மாணவர் இடைவினை குறைவு, ஆர்வம் இன்மை என்பனவும் இவற்றின் காரண மாக அதிகரித்த இடைவிலகலும் காணப்படு கின்றது. (பொதுக்கல்வி சட்ட உருவாக்கக் குழு 2009). தீவக வலையத்தில் இவ்வகையான பாடசாலைகளே அதிகளவில் காணப்படுவதால் கல்வித்துறைசார் அதிகாரிகள் இப்பாட சாலைகள் மீது கூடிய கவனம் எடுக்க வேண்டிய தேவையுள்ளது.

### விசேட செயற்றிட்டப் பாடசாலைகள் (Special project Schools)

தரமான கல்வியை வழங்கும் நோக்கத் துடனும் கல்விச் சந்தர்ப்பங்களைப் பரவ லாக்கும் நோக்கத்துடனும் அரசாங்கம் பல விசேட பாடசாலைச் செயற்றிட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளது. இவற்றின் அடிப்படை நோக்கமாக கிராமங்களில் தரமான கல்விச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதும் அமைந்திருந்தது. எவ்வாறாயினும் அரசியல் அதிகாரத் தலையீடுகளின் காரணமாக வளம் மிக்க நகர்ப்புறப் பாடசாலைகளே பெருமளவில் இச் செயற்றிட்டங்களுக்குள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக ஒருசில பாட சாலைகள் பல்வேறு செயற்றிட்டங்களுக் குள்ளும் உள்ளடக்கப்பட்டு உள்ளன. இவ் விசேட பாடசாலைச் செயற்றிட்டங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

- ✓ இசுறு பாடசாலைச் செயற்றிட்டம்
- ✓ நவோதயா பாடசாலைச் செயற்றிட்டம்
- ✓ வெளிச்சவீட்டுப் பாடசாலைச் செயற்றிட்டம்
- ✓ ஜனாதிபதி பாடசாலைச் செயற்றிட்டம்
- ✓ 1000 பாடசாலைச் செயற்றிட்டம்

நாட்டின் சகல மாவட்டங்களைத் தழுவக் கூடியவாறு வறுமை ஒழிப்புக் குறிகாட்டியைப் பயன்படுத்தி வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பிரதேச செயலகப் பிரிவிலிருந்து ஒரு பாடசாலை வீதம் 104 பாடசாலைகள் இசுறு பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஒரு பாடசாலைக்கு 35 மில்லியன் ரூபா நிதி முதலீடு ஒதுக்கப் பட்டுள்ளதுடன் அதன் மூலம் புதிய கட்டிடங் களை நிர்மாணித்தல், தற்பொழுதுள்ள கட்டிடங் களை பழுதுபார்த்தல், உட்கட்டமைப்பு வசதி களை விருத்தி செய்தல், அதிசிறந்த இடை நிலைப் பாடசாலைகளாகக் க.பொ.த. (உயர் தரம்) சகல பாடவிதானங்களும் கொண்ட பாட சாலைகளாக மாற்றியமைப்பது எமது எதிர்பார்ப்பாகும்.

எவ்வாறாயினும் இவ் இசுறு பாடசாலைச் செயற்றிட்டத்தின் கீழ் மிகவும் வறிய பின்தங்கிய பிரதேசமான தீவகத்தின் நான்கு பிரதேச/உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஒன்றில் கூட இப் பாடசாலைகள் இடம் பெறவில்லை. இதே போல ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளையும் அடிப்படையாகக் கொண்டதாக அமைக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவோதயா பாடசாலைகள் நாடெங்கிலும் 317 ஆக காணப்பட்ட போதும் தீவகத்தின் வேலணை மற்றும் நெடுந்தீவுப் பிரிவுகளில் மட்டும் தலா ஒரு பாடசாலை காணப்படுகின்றது என்பதுடன் இப் பாடசாலைகள் மீண்டும் 1000 பாடசாலைத் திட்டத்திலும் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

2009 இல் ஆரம்பிக்கப்பட்ட ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்திற்கு அமைய தீவகக் கல்வி வலையத்தில் 07 பாடசாலைகள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆயினும் ஏற் கனவே அபிவிருத்தி நிலையிலுள்ள பல நூறு பாடசாலைகள் நாடளாவிய நிலையில் இச் செயற்றிட்டத்தினுள் உள்வாங்கப்பட்டிருப்பது ஓர் முரண்பாடான விடயமாகும்.

அட்டவணை 05:

| பாடசாலை வகை | இலங்கை | தீவகம் |
|---|---|---|
| இசுறு பாடசாலை | 104 | 0 |
| நவோதயா பாடசாலை | 317 | 2 |
| வெளிச்ச வீட்டுப் பாடசாலை | NA | NA |
| 1000 பாடசாலை | 1000 | 7 |

பின்தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல், அனுகூலம் பெறாத பிரிவினரின் (Dis advantages group) அபிவிருத்திக்கு உதவுதல், வறியோருக்கு தரமான கல்வி வாய்ப்புக்களை வழங்குதல், கிராமங்களில் தரமான கற்றல் சூழலுடைய பாடசாலைகளை உருவாக்கி மாணவர் இடைவிலகலைக் குறைத்தல் என்ற நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் இவ் விசேட செயற்றிட்டங்கள் அமைவதற்கு பதிலாக வசதி படைத்த நகர்ப்புற பிள்ளை களிற்கு மேலும் சிறந்த வாய்ப்புக்களை ஏற் படுத்திக் கொடுத்து இடைவெளிகளை மேலும் அகழிக்கச் செய்யவே இச்செயற்றிட்டங்கள் உதவுகின்றன.

## கற்பித்தல் மொழிமூலம்
## (Medium of Instruction)


ஒவ்வொரு பிள்ளையும் தான் விரும்பிய மொழி மூலத்தில் கல்வியைப் பெறுவதற்கான உரிமையுடையது. அந்தவகையில் தீவகப் பிரதேசப் பாடசாலைகளில் இரு மொழி மூலப் பாடசாலைகளாக 02 பாடசாலைகள் மட்டுமே காணப்படுகின்றன.

அட்டவணை 06: தாய்மொழி, ஆங்கிலமொழி மூல பாடசாலைகள்

| மொழி மூலம் | இலங்கை | கொழும்பு | யாழ்ப்பாணம் | தீவகம் |
|---|---|---|---|---|
| தமிழ்மொழி, ஆங்கில மொழி | 433 | 55 | 29 | 2 |

**Source: Ministry of Education, Srilanka & Zonel Education Office, Velanai**

175 $Km^2$ பரப்புக் கொண்ட தீவகத்தின் ஒரு இடத்திலுள்ள பிள்ளை ஆங்கில மொழியில் கற்க விரும்பினால் அதற்கான சந்தர்ப்பம் அப்பிள்ளைக்கு ஏறத்தாழ கிடைப்பதில்லை. வறுமை, வதிவிடம் போன்றன கல்வி யுரிமையை மறுக்கும் விடயமாக உள்ள பிரதே சங்களில் அவ்வுரிமையை வழங்கும் கடப் பாட்டை அரசாங்கம் புறக்கணிக்க முடியாது.




மேலும் தீவகப் பிரதேசப் பாடசாலைகள் கஷ்டப் பிரதேச, அதிகஷ்டப் பிரதேச பாடசாலை களாக காணப்படுகின்றன. இதன் காரணமாக இப்பாடசாலைகளில் ஆசிரியர்கள் பணியாற்ற விரும்புவதில்லை. மாறாக இரண்டு வருடங் களின் பின் விரும்பிய வலயங்களில் நியமனம் வழங்கப்படும். அதுவரை 2 வருடங்கள் தீவகப் பாடசாலைகளில் பணியாற்ற வேண்டும் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் உடன்பாட்டின் அடிப்படையில் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். இதன் காரண மாக ஆசிரியர்கள் தமது கட்டாய பணிக்காலம் எப்போது முடியும் என்ற எதிர்பார்ப்புக்களையே கொண்டிருப்பதால் கற்றல் கற்பித்தலில் முழுமையான திறமையை வெளிப்படுத்துவது மில்லை. பொறுப்புக் கூறும் கடப்பாடுகளையும் கொண்டிருப்பதில்லை.

இதற்குப் பதிலாக ஆசிரியர்களுக்கான வதி விடம் மற்றும் விசேட நலனோம்பு, மேலதிக கொடுப்பனவுகளை வழங்குவதன் ஊடாக விருப்புடன் பணியாற்றும் ஏது நிலையை உருவாக்க கல்வித் துறைசார் நிர்வாகத்தினர் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது.

இவ்வாறு தீவக வலய பாடசாலைகள் அமை விடம், அரசியல், பொருளாதார நிலைமைகள் காரணமாக ஆளணி வள, பௌதீகவள, பற்றாக் குறை மற்றும் சிறந்த மேற்பார்வையின்மை, கற்றலுக்கான கவின்நிலையின்மை போன்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதுடன் தீவக பிரதேச மாணவர்களின் சம கல்விச் சந்தர்ப்பங் களும் கல்வி உரிமைகளும் நிராகரிப்பு செய்யப் படுகின்றன.

எனவே சுதந்திர காலம் தொடக்கம் கல்வி உரிமைகள் பற்றிய சிந்தனைகள் வலுவடைந்து வரும் நிலையில் வறிய சனத்தொகையடர்த்தி குறைந்த கிராமங்களில் அவ்வுரிமைகள் நிலை நாட்டப்படுகின்றனவா? என்ற கேள்விகளும் வலுவடைந்து வருகிறது. வறிய சனத்தொகை அடர்த்தி குறைந்த பிரதேசங்களிற்கு கல்வி வாய்ப்புக்களை பரவலாக்குவது வளவிரயங் களை ஏற்படுத்தும் என்பது உண்மையே. ஆயினும் செலவு– நன்மை (Cost- Benefit Analysis) அணுகுமுறையை அடிப்படையாக வைத்து கல்வி வாய்ப்புக்களை வழங்க முற் பட்டால் அது அனுகூலம் பெறாத பிரிவினரின் (Disadvantages Group) ஜனநாயக உரிமைகளை மறுதலிப்பதாகவும் கல்வி ஒவ்வொரு பிள்ளையினதும் உரிமையெனும் யுனெஸ்கோவினதும் இலங்கை அரசினதும் ஏற்பாடுகளை கேள்விக்குள்ளாக்குவதாகவும் அமைந்துவிடும். இது தவிர வறியவர்களைத் தொடர்ந்தும் வறியவர்களாக வைத்திருக்கும் ஒரு பொறிமுறை உபாயமாகவும் இது மாறி விடும். இவ்வாறான நிலமைகள் இலங்கையின் அபிவிருத்தியை இன்னும் பல தசாப்தங்களிற்கு தள்ளிப் போடவே செய்யும்.

எனவே தீவகம் போன்ற பின் தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்யாமல் இலங்கையின் அபிவிருத்தி பற்றிச் சிந்திக்க முடியாது என்பதையும் பின்தங்கிய வறிய மக்களிற்கு தரமான கல்வியை வழங்காமல் அவர்களை மேல்நிலைக்கு கொண்டுவர முடியாது என்பதையும் கொள்கை வகுப் பாளர்களும் அரச நிர்வாகமும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் அதற்கான நடவடிக்கை களையும் விரைந்து எடுக்க முன்வரவேண்டும்.

## Reference:


Jeyesoriya,J.E., Srilankan Education History After and Before Indipendance, Colombo, Sri Lanka.

New Education Act Formulation Committee. (2009). Srilanka

http://www.moe.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=300&Itemid=114&lang=ta

http://www.ips.lk/lei/assets_lei/education_participation.pdf

http://192.248.17.88/nilis/images/journal/v1_1/SriLanka.pdf

http://www.ips.lk/events/workshops/18_3_9_development_report/education_opportunities.pdf


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வட இலங்கையில் தீவகங்களின் தொல்லியல் வரலாற்று உள்ளீடுகள் - தொன்மங்களூடான ஒரு பார்வை

செ.கிருஷ்ணராஜா
விரிவுரையாளர் வரலாற்றுத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

ஆய்வறிமுகம் – வடஇலங்கையின் அமைவிடமானது தென்னாசியாப்பரப்பில் சமுத்திரவியல் தளத்தினை அடிப்படையாகக் கொண்டு தென்னிந்திய–தமிழகப்பரப்பின் பின்னணியில் காவேரிக் கழிமுகத்தினை எதிர்முகங் கொண்டிருக்கக்கூடிய ஒரு தள மாகவும் அமைந்து கொண்டிருப்பதைக் காண முடிகிறது. காவிரிப்பூம்பட்டினத் துறைமுகப் பரப்பினை எதிர்நோக்கியவாறு அமைந்து காணப்படும் வட இலங்கையின் கரையோரங் களானவை குறிப்பாக யாழ்ப்பாணக் குடா நாட்டின் மேற்கு,வடகரையோரப் பரப்புக்கள் பண்பாட்டு உள்ளீடுகளையும் காலத்தால் அழியாத தொன்மங்களையும் மன்னார்க் குடாவை மையமாக கொண்டமைந்த காவிரிப் பூம்பட்டினத் துறைமுகத்தினை பண்பாட்டுக் கூறுகளின் உள்ளீர்ப்பு–வெளித்தள்ளுகைக் குரிய ஒரு திறவுகோலாகவும் கொண்டமைந் திருந்தமையானது இத்தீவகங்களின் உயிர்ப் பிற்கும், மலர்ச்சிக்கும் அடிப்படை பௌதீக வளக் காரணியாக அமைய நேர்ந்துள்ளது geo-cultural உருவாக்கத்திற்கு இத்தீவகங்கள் உட்படுத்தப் பட்ட நிகழ்வுகள் இப்பின்னணியிலேயே காலந்தோறும் நிகழ்ந்தேறிக் கொண்டிருந் தமையை தொல்லியல் சான்றுகள் கோடிட்டுக் காட்டுகின்றன. இச்சிறிய ஆய்வுக்கட்டுரையின் கண் வட இலங்கையின் பண்பாட்டு ஊற்றுக் கண்களாக இருக்கக்கூடிய இந்த ஏழுதீவுகளின் தொன்மங்கள் இன்றை வரைக்கும் அங்கு வாழ்ந்த வாழும் மக்களது தலைமுறைகளின் ஆழப்பதிந்துள்ளவகையினை மீட்டெடுத்து அடையாளப்படுத்துவதன்மூலம் இப்பிராந் தியத்தில் ஒரு புவிசார் பண்பாட்டுமுறை எவ்வாறு தோற்றுவிக்கப்பட்டிருந்தது என்பது அண்மைக் காலங்களில் இத்தீவும் பரப்புக்களி லிருந்து பெற்றுக் கொள்ளப்படும் தொல்லியல் கருவூலங்கள் அவற்றை உறுதிப்படுத்து மாற்றையும் இங்கு எடுத்துக்காட்டுவது நோக்க மாக அமைந்துள்ளது.

## தொன்மங்களும் தீவுகளும்

ஒரு குறிப்பிட்டமொழிக் குழுமமானது தான் நிலைகொண்டிருந்த தளத்தில் அவற்றின் தலைமுறைகளை பன்னெடுங்காலமாக வாழ்வு என்ற நிகழ்ச்சித் திட்டத்தினூடாக பிணைந்து வைத்திருந்தமைக்கான வடிவங்களாகவே தொன்மங்கள் அமைந்துவிடுகின்றன ஆங்கிலத்தில் இக்கருத்துணர்வு antecidents எனக்குறிப்பிடப்படும் இது mythology எனப்படும் ஐதீகங்கள் என்ற வடிவத்திலிருந்து முற்றிலுமே வேறுபட்டதாக வாழ்வின் தலைமுறைகளால் நீடித்த நிலைபேற்றினைக் கொண்டமைந் தவையாக விளங்குவதைக் காணலாம். அத் தகைய தொன்மங்களானவை அம்மொழிக்குழு மத்திற்கேயுரிய தலைமுறைகளினால் அத் தலைமுறைகளின் உணர்வுகளிலே மீதுரப் பெற்றவையாக அமைந்துவிட்டிருக்கும் பண்பிணைக் கொண்டவையாக இருந்து வருவதனைக் காணமுடியும் அவ்வகையில் காலத்திற்கு காலம் அக்குறிப்பிட்ட மொழிக் குழுமத்திலே பல்வேறு பண்பாட்டு அடுக்கு களாக நிகழ்ந்த பண்பாட்டுத் தரவேற்றத்தின் போது நிகழ்ந்து மறக்கமுடியாது நினைவி லிருந்து நீக்கமுடியாத நிகழ்வுகளாக அவை மீண்டும் அதே தலைமுறையினரின் தலை முறைகளால் கொண்டாடப்பட்டு வரும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மங்களாக மாற்றமடைவதைக்காணலாம் அத்தகைய தொன்மங்கள் இங்கு நாம் எடுத்துக் கொண்ட தீவகங்களின் ஒவ்வொரு தளத் துடனும் தனித்துவம் வாய்ந்த வகையில் பிணைக்கப்பட்டிருப்பது இங்கு வாழ்ந்து வந்த மொழிக்குழுமத்தினது மிகப்புராதனம் வாய்ந்த தொன்மையை மிகத்துல்லியமாக எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

பேராசிரியர் மா.வேதநாதன் மிக அண்மையில் எழுதியிருந்த ஓர் ஆய்வுக் கட்டுரையில் தீவகங்கள் பற்றிய பௌதீகப் பண்பாட்டுக்கோலங்கள் பற்றிக்குறிப்பிடும் பொழுது தந்த தகவல்கள் எமது இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கத்திற்கு மிகப் பொருத்தமாக அமைந்துள்ளமையை இங்கு குறிப்பிட்டாக வேண்டும் அக்குறிப்பு பின்வரு மாறு அமைந்துள்ளது இலங்கையின் இந்துக் கோயிற் பண்பாட்டு மரபுகள் சிறந்து விளங்கும் இடங்களுள் தீவகத்திற்கு தனித்துவமான சிறப்புக்கள் உள்ளன வட இலங்கையின் யாழ்ப்பாணக்குடாநாட்டின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள வேலணைத்தீவு (பரப்பு 66.88ச.கி.மீ),நெடுந்தீவு (பரப்பு45.35ச.கி.மீ), காரைதீவு (பரப்பு37.59ச.கி.மீ), மண்டைதீவு (பரப்பு 10.95ச.கி.மீ) எழுவைதீவு (பரப்பு 1.68ச.கி.மீ) ஆகிய தீவுகளின் தொகுதிகளே தீவகம் என அழைக்கப்படுகிறது. இவற்றுள் வேலணைத்தீவு (லைடன்தீவு) என்பது அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை-சரவணை, நாரந்தனை, கரம்பொன், சுருவில், ஊர்காவற்றுறை ஆகிய சிறுச்சிறு கிராமக் குறிச்சிகளைக் கொண்டுள்ளது. புங்குடு தீவுக்குள்ளும் பல்லதீவு, கேரதீவு, ஊரதீவு, களதீவு, வரதீவு, கண்ணாத்தீவு எனும் சிறுசிறு தீவுகள் உள்ளன இத்தகைய பரந்த பரப்புடைய தீவுப்பிரதேசமானது யாழ்ப்பாணக்குடாநாட்டின் ஓர் அங்கமாக விளங்குகின்ற போதும் ஒவ்வொரு தீவும் தனித்தனிக் கிராமமாக விளங்குவதால் அவை ஒவ்வொன்றிலும் தனித்துவமான பண்பாட்டுக்கோலங்கள் காணப்படுகின்றன தீவகத்திற்குரிய பண் பாட்டுக்கோலங்கள் நீண்டகாலம் நிலைத் திருந்த போதும் இலங்கையில் கடந்த முப்பது ஆண்டுகள் நிலவிய போர்ச் சூழ்நிலைகளால் தீவகப்பண்பாட்டில் இந்துப்பண்பாட்டுக் கோலங்களும் பாதிப்புள்ளாகிவிட்டன தீவகத்து இந்துப் பண்பாட்டுக்கோலங்கள் பல தொன்மை யானவை. தீவகத்தில் இந்துக்கோயில்கள் மட்டு மன்றி, பௌத்தவிகாரைகள், கிறிஸ்தவ தேவாலயம், இஸ்லாமிய பள்ளிவாசல்கள் என சர்வமதங்களுக்குரிய வணக்கஸ்தலங்கள் உள்ளன (மா.வேதநாதன் 2014, 239)

பேராசிரியர் மா.வேதநாதனின் இந்த அறிமுகக்காற்று மிகவும் யதார்த்தமானவை என்ற நிலையை அண்மையில் தீவகம் தொடர்பான தொல்லியல் மேலாய்வுகளும் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் சின்னங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையைக் காண் கின்றோம். தீவகத்திலிருந்து உருவான முதற் தொல்லியலாளரான தவத்திரு தனிநாயகம் அடிகளார் லண்டன் பல்கலைக்கழகம் ஒன்றின் தொல்லியல் டிப்ளோமா கற்கைநெறி ஒன்றினை நிறைவு செய்தமையின் பின்னணியில் யாழ்ப்பாணத்து தமிழ் உலகம் முதல் தொல்லியளார் என்ற சிறப்பினை தீவகத் தினூடாக பெற்றுள்ளமையை காண்கின்றோம் இதனைத்தொடர்ந்து தீவகத்தினை மையப் படுத்திய தொல்லியல் ஆய்வில் போல் இ.பீரிஸ் என்பவர் 1917இல் ஈடுபடத் தொடங்கிய காலம்முதல், தொல்லியல திணைக்களம், பென்சில்வேனியப் பல்கலைக்கழகம், நெதர்லாந்துப் பல்கலைக்கழகம் என்பன இத் தீவகப்பிராந்தியத்தின் மீது ஆய்வுகளை நடாத்தி தொல்லியல் எச்சங்கள் அடை யாளங்கள் பற்றி பல ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்டிருந்தமையும் காண்கின்றோம். இவற்றை பின்னணியாக கொண்டு அண்மைக் காலங்களில் பேராசிரியர் இரகுபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் புஸ்பரத்தினம் ஆகியோர் மேற்கொண்ட தொல்லியல் அகழ்வாய்வுகள் தொல்லியல் மேலாய்வுகள் போன்றவற்றி னூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு தீவகத்தின் தொல்லியல் வரலாற்று உள்ளீடுகளை தீவ கத்தின் தொன்மங்களூடாக பிணைந்து தீவ கத்தின் சடப்பொருட் பண்பாட்டின் வளர்ச்சியை வரையமுடியும் என்பது நம்பிக்கையாகும்.

**நெடுந்தீவும் சடப்பொருட்பண்பாடும்**
(Delft and material culture)

இராமேஸ்வரத்தீவிலிருந்து தென்கிழக் காக 28கிலோ மீற்றர் தூரத்தில் இத் தீவு அமைந்துள்ளது. யாழ்ப்பாண நகரிலிருந்து 20 கிலோ மீற்றர் தூரத்தில் தென்மேற்காக இத்தீவு அமைந்துள்ளது நெடுந்தீவின் அமைவிடமானது வட இலங்கையின் தொடக்கவாயிலாக (focade of the northern Sri lanka) அமைந்துள்ளமையின் காரணத்தால் இங்கு பெருங்கற்கால மக்கள் வாழ்வு தொடங்கி அராபியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலம் வரைக்குமான காலப் பண் பாட்டு எச்சங்கள் பெருமளவில் கிடைத் திருப்பது குறிப்பிடத்தக்கது.

வெடியரசன் கோட்டை என்ற வட்ட வடிவமான உறுப்புக்களானவை மிகநீண்டகால வரலாற்றுத்தொன்மம் ஒன்றின் மையப் பொருளாக இருந்து வந்தமையைக் காண் கின்றோம் வெடியரசன் வரலாறு என்ற நூலில் மு.சிவப்பிரகாசம் நெடுந்தீவின் வரலாற்று பண்பாட்டு வளர்ச்சியின் முக்கியத்துவத்தினை மிகவும் விரிவாக எடுத்துக்காட்டியிருப்பினும் தொல்லியல் நோக்கில் பேராசிரியர் இரகுபதி வெடியரசன் கோட்டையின் யதார்த்தத்தினை தனது Early settlements in Jaffna என்ற ஆய்வு நூலில் விளக்கியிருப்பதைக் காண்கின்றோம் Sea born megalithic culture in Jaffna அதாவது யாழ்ப்பாணக்குடாநாட்டில் சமுத்திரம் சார் பெருங்கற்காலப் பண்பாடு பௌத்த மரபு களுடன் -மகாயானப் பௌத்த மரபுகளுடன் இணைந்த வகையில் வளர்ச்சியடைந் திருந்தமைக்கு நெடுந்தீவில் உள்ள இந்த வெடியரசன் கோட்டை ஒரு சிறந்த சான்றாகும் இலங்கை தொல்லியற் திணைக்களம் இன்று நெடுந்தீவில் புதியதொரு தொல்லியல் ஆய்வு முயற்சியில் இவ் வெடியரசன் கோட்டையை மையமாகக் கொண்டு தொடங்கியிருப்பதையும் காண்கின்றோம்.

கடற்பவளக்கற்களை (Coral Stone) பிரதானமான கட்டுமான ஊடகமாகக்கொண்டு கட்டிடக்கலை மரபுகள் யாழ்ப்பாணத்தில் வளர்ச்சியடைந்திருந்தமைக்கு நெடுந்தீவில் காணப்படுகின்ற மகாயானப் பௌத்த மதத்திற்குரிய எச்சங்கள் பெருமளவு தாய் லாந்து நகரிலுள்ள பௌத்தமத எச்சங்களுடன் ஒத்துப்போகின்ற தன்மையைக் கொண்டிருப் பதனையும் அவதானிக்கமுடிகிறது. நெடுந் தீவுடன் தென்கிழக்காசிய மரபுகள் நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்றளவிற்கு சமுத்திரவியல் சார் Navigation ஊடகமாக இருந்து வந்தமையையும் காணலாம். நெடுந்தீவில் உள்ள புறாக்கூடு என்றழைக்கப்படும் கட்டிட எச்சம் தென்கிழக்காசிய கட்டிடக்கலை மரபு களையே எமக்கு ஞாபகப்படுத்துவது போல் உள்ளது. இந்தவடிப்படையில் நோக்கும் போது நெடுந்தீவில் நிலைபெற்றிருந்த பண்பாட்டுப் படைகள் தாய்லாந்து, பர்மா போன்ற தேசங் களுடன் ஒற்றுமைப்பட்டதாகக் காணப்படு வதுடன் மகாயான பௌத்தமரபுகள் தாய்லாந்து – பர்மா ஆகிய நாடுகளிலிருந்தே நெடுந்தீவிற்கு கொண்டு செல்லப்பட்டு பரப்பப்பட்டிருக்க வேண்டும் என எண்ணந் தோன்றுகிறது. நெடுந்தீவினைப்பற்றிய செய்திகள் –இடப் பெயர்கள் எவையும் பழந்தமிழ் இலக்கியங் களிலோ அல்லது பாளி பௌத்த நூல்களிலோ இடம்பெற்றிருக்காத ஓர்நிலையில் வெடியரசன் வரலாறு பற்றிய செய்திகள் நெடுந்தீவுடன் இணைக்கப்பட்ட வகையில் யாழ்ப்பாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைபவ மாலையிலும் பின்னர் Ancient Jaffna என்ற நூலிலுமே முதற்தடவையாக குறிக்கப் பட்டிருப்பதனையும் காண்கின்றோம் இப் பின்னணியில் நெடுந்தீவின் தொன்மம் தொடர்பாக நோக்கும் போது கி.பி4ம் நூற்றாண்டிலிருந்தே இங்கு மக்கள் வாழ்வு மலர்ச்சியடைந்திருக்கவேண்டும் என்று எண்ணத்தோன்றுகிறது பெருங்கற் கால பண்பாடு கி.பி4ம் நூற்றாண்டிலேயே இங்கு தாய்லாந்து, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து கொண்டு செல்லப்பட்டிருக்கவேண்டும் என யோசிக்கவேண்டியுள்ளது.

## நயினாதீவும் சடப் பொருட்பண்பாடும்

தொன்மங்கள் நிறைந்த ஒரு தீவகக் குடியிருப்பாக நயினாதீவு உருவாக்கம் பெற்று வளர்ச்சியடைந்து வந்துள்ளமையை தொல்லியல், மானிடவியல், பண்பாட்டியல் சான்றுகள் இன்று எடுத்துக்காட்டியுள்ளமையை தெளிவாக புரிந்து கொள்ளமுடிகிறது இங்கு நாகதீபம் என்ற தொன்மம் வாய்ந்த மையம் வட இலங்கையில் நீடித்து நிலைபெற்றுவந்த பண்பாட்டு தொன்மங்களின் தாயகத்தளமாக இருந்து வருவதனை காண முடிகிறது யாழ்ப்பாணக்குடாநாட்டில் மிகவும் தொன்மம் வாய்ந்த பண்பாட்டுத்தொன்மங்களை ஒருங்கே கொண்டிருக்கும் ஒரேயொரு தனித்தீவுத் தளமாக உயிர்ப்புடன் விளங்குவது நயினாதீவு ஆகும் இத்தீவிற்கு பண்பாடு ஆரம்பித்த காலகட்டங்களில் இருந்து பல்வேறு நாமங்கள் சூட்டப்பட்டு அழைக்கப்பட்டு நாகதீவு, நயினா தீவு, நாகர்தீவு, நாகநயினாதீவு, மணிநாகதீவு, மணிபல்லவத்தீவு, மணித்தீவு, பிராமணத்தீவு, சம்புத்தீவு, நரித்தீவு, நாகேஸ்வரம், நாகரீச்சுரம் என்ற பெயர்களால் நயினாதீவு அழைக்கப்பட்டு வந்தமையை இலக்கியக் குறிப்புக்கள் எடுத்துக் காட்டுகின்றன. நாகம் பூஜித்த நாகம்மாள் என்ற தொன்மம் எகிப்தியர் காலகட்டத்தில் இருந்தே உருவாகி வளர்ச்சிபெற்று இன்றைவரைக்கும் உயிர்ப்புடனும் அத் தொன்மத்திற்குரிய மக்களால் அவர்களது தலைமுறைகளினால் பேணப்பட்டு வருவதனையும் காண்கின்றோம். நாகர்மரபு , நாகவழிபாட்டுமரபு , சக்திபீடம் – புவனேஸ்வரியம்மன் மரபு போன்றவை நயினாதீவின் தொன்மங்களாகப் பரிணமித் துள்ளமையைக் காண்கிறோம்.

நயினாதீவிலுள்ள பௌத்தப்பீடத் தினைப் பொறுத்தவரையில் தேரவாத பௌத்தப் பிரிவிற்குரியதாக அதன் வடிவமைவு அமையப் பெற்றமையைக் காணமுடிகிறது. நாகர் குல வம்சத்தினருடன் தொடர்புபட்ட வகையில் தேர வாத பௌத்தத்திற்குரிய ஒரு புனிதத் தளமாக கௌதம புத்தராலேயே அவரது வாழ்வுக் காலத்திலே அவரால் தேர்வுசெய்யப்பட்ட ஒரு பண்பாட்டுத் தளமாக நயினாதீவு அமையப் பெற்றதனை பௌத்த–பாளி–திரிபீடக இலக்கிய நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது. புத்தருடைய இலங்கை மீதான விஜயத்தின் போது இரண்டாவது வருகை யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள நயினார் (நாகத்தீவு) தீவிற்க மைந்தது என பௌத்த மரபுகள் சுட்டிக் காட்டுகின்றன. மணிமேகலை மரபினூடாக மணிபல்லவம் நாகர்தீவில் சாதவன் போன்ற தொன்மங்களின் சமூக இயங்கியல் விபரணத் தரவுகள் இணைக்கப்பட்டுள்ளமையையும் காண்கின்றோம். ஆபுத்திரனின் அமுத சுரபித் தொடர்பும் விஷ்ணு புத்திரனின் (வெடியரசன்) நெடுந்தீவுத் தொடர்பும் கருவளத்தினை (Fertility Cult) மையப்படுத்தி உருவாக் கப்பட்ட தொன்மங்களாக இலக்கியங்களில் பதிவு செய்து வைக்கப்பட்டவை என்ற முடிவுக்கு வரலாம் என்பதனை தொல்லியல் வரலாற்று உள்ளீடுகள் எடுத்துக் காட்டுகின்றன. ஆபுத்திரன் விஷ்ணுபுத்திரன் என்ற பெயர்கள் அச் சொற்களின் உள்ளீட்டின் அடிப்படையில் ஒரே பொருளுடையதாக இருப்பதனையும் காண முடியும். ஆபுத்திரன் காமதேனுவின் புத்திரன் என்பதும் திரையர் வம்சத்திலிருந்து வருகை தந்தவர்களே விஷ்ணுபுத்திரர் என்பதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் நாவிதர்கள் (மரக்கலம் ஓட்டுபவர்கள்) என்பதும் மீகாமன் குலச்சிறையர் என்பதும். இலக்கியங்கள் காட்டும் பொருண்மையாக உள்ளது. இப்பின்னணியிலே நயினாதீவுப் பண்பாட்டுப் பகைப்புலம் பௌத்த, சாக்த மத வாதிகளின் வாழ்வியக்கத்துடன் இணைக்கப் பட்டிருந்த தொன்மங்களினால் தலைமுறை தலைமுறையாக உயிர்க்கப்பட்டு வருகின்ற யதார்த்தமான தரிசனத்திற்குள் அகப்பட்டுக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலணைப் பிரதேச கல்வி நிலை

திரு.யோன் குயின்ரஸ்
கல்விப் பணிப்பாளர்
தீவக வலயம் – வேலணை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங்களில் ஒன்றான தீவகக்கல்வி வலயம் 1996ல் உருவாக்கப்பட்டது. இது இப் பிரதேசத்தின் கல்வி நிர்வாக செயற்பாடுகளை பன்முகப்படுத்தும் நோக்கில் 7 தீவுக் கூட்டங் களை உள்ளடக்கிய வகையில் உருவாக்கப் பட்டுள்ளது. அவையாவன வேலணை, மண்டை தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு, காரைநகர் என்பனவாகும்.

தீவகத்தின் கல்வி வலய அலுவலகம் வேலணை, வங்களாவடியில் அமைந்துள்ளது. யாழ் நகரிலிருந்து 16KM தூரத்தில் அமைந் துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேசமாகவும் இது காணப்படு கின்றது. 1991ல் இப் பிரதேச மக்கள் இடம் பெயர்ந்து யாழ்மாவட்டத்தின் ஏனைய பிரதே சங்களுக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் சென்று குடியேறினர். இடம்பெயரும் முன்னர் 76 பாடசாலைகள் இயங்கி வந்தன. 1996ல் இப் பிரதேச மக்கள் தமது செந்த இடங்களில் குடிய மரக்கூடிய சூழ்நிலை உருவாகியது. அதன் பின்னர் மக்கள் படிப்படியாக மீள்குடியமர்ந்து வருகின்றனர்.

தீவகக்கல்வி வலயம் 4 கல்விக் கோட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு, தீவகம் தெற்கு (வேலணை), ஊர்காவற்றுறை, காரைநகர் என்பவை அவையாகும். வேலணைக்கல்விக்கோட்டம் வேலணை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாடசாலை களின் செயற்பாடுகளை மேற்கொண்டு வரு கின்றது. எமது கல்வி வலயம் 4 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கியது. அவையாவன நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, காரைநகர், வேலணை என்பனவாகும்.

பிரதேச ரீதியாக நோக்குகையில் தீவகப் பகுதியில் அதிகளவான (16) பாட சாலைகள் இயங்காத நிலையில் உள்ளன. அதிலும் வேலணைப் பிரதேசத்தில் மிகக் கூடுதலான (9) பாடசாலைகள் இயங்காத நிலையில் உள்ளன. பாடசாலைகள் இயங்கு வதற்கு பாடசாலைக்கட்டடங்கள் சேதமடைந் திருத்தல், இடப்பெயர்வு காரணமாக மாண வர்கள் யாழ்ப்பாணம் நோக்கி நகர்தல் மற்றும் ஆசிரியர் மாணவர்களது போக்குவரத்து பிரச்சினைகள் காரணமாக மாணவர் வரவு குறைந்தன. இதனால் பெருமளவான பாட சாலைகள் மூடப்பட்டன.

தற்போது வேலணை கல்விக் கோட்டத்தில் 25 பாடசாலைகள் இயங்கு கின்றன. 9 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப் பட்ட நிலையில் உள்ளன. அட்டவணை 1 தீவகம் தெற்கு (வேலணை) பிரதேசத்தினதும் தீவக வலயத்தினதும் இயங்கும் மற்றும் இயங்காத பாடசாலைகளின் விபரங்கள் எடுத்துக்காட்டு கின்றது. அட்டவணை: 01

| கல்வி வலயம் | கல்விக் கோட்டம் | இயங்கு. பாடசா. | தற்காலி. மூடப்பட். பாடசா. | மொத்தப் பாடசாலை. |
|---|---|---|---|---|
| தீவகம் | நெடுந்தீவு | 08 | 2 | 10 |
| | ஊர்காவற்றுறை | 16 | 2 | 18 |
| | வேலணை | 25 | 9 | 34 |
| | காரைநகர் | 12 | 3 | 15 |
| | மொத்தம் | 61 | 16 | 77 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவக வலயத்தில் 76 பாடசாலைகளாக இருந்த எண்ணிக்கை, 2012ம் ஆண்டு ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் கலாநிதி ஆ.தியாக ராஜா ம.ம.வி இணைத்து கொள்ளப்பட்டு ஆரம்பப்பிரிவு தனி பாடசாலையாக பிரிக்கப் பட்டமையால் 77 பாடசாலைகளாக உயர் வடைந்தது.

தீவகப் பிரதேசத்தில் தேசியப் பாட சாலைகள் இல்லை. அனைத்துப் பாடசாலை களும் மாகாணப் பாடசாலைகளாகும். வேலணைக் கோட்டப் பாடசாலைகள் வகை களின் அடிப்படையில் அட்டவணை 2ல் காட்டப் பட்டுள்ளது.

| பாடசாலைகளின் எண்ணிக்கை | | 1AB | | 1C | | Type II | | Type III | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இயங்கும் பாடசாலைகள் | தற்காலியமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகள் | இயங்கும் பாடசாலைகள் | தற்காலியமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகள் | இயங்கும் பாடசாலைகள் | தற்காலியமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகள் | இயங்கும் பாடசாலைகள் | தற்காலியமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகள் | இயங்கும் பாடசாலைகள் | தற்காலியமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகள் |
| 25 | 9 | 1 | 0 | 2 | 0 | 11 | 0 | 11 | 9 |

வேலணைக்கல்விக் கோட்ட பாடசாலையில் கல்வி கற்பிக்கும் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 248 பேராகும். மாணவர்கள் எண்ணிக்கை பால் ரீதியாக அட்டவணை 3ல் காட்டப்பட்டுள்ளது.

| வேலணை கல்வி கோட்டம் | | |
|---|---|---|
| ஆண் | பெண் | மொத்தம் |
| 2060 | 2024 | 4084 |

செட்டிபுலம் அ.த.க.பாடசாலை, மண்டைதீவு றோ.க வித்தியாலயம் ஆகிய பாட சாலைகளில் வகுப்பறை வசதிகள் போதுமானதாக இல்லை. இவற்றை விட 7 பாடசாலைகளில் மலசலகூட வசதிகள் பற்றாக்குறையாகக் காணப்படு கின்றன. வேலணைப்பிரதேசத்தில் அதிகமான பாட சாலைகளில் நூலக வசதியின்மை காணப்படுகின்றது.

வேலணைக் கோட்டப் பாடசாலை களினது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை சித்தி வீதம் கீழ்வரும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளது. ஆசிரியர் பற்றாக்குறை காரண மாகவும் மாணவர்களின் வறுமையாலும் போக்குவரத்து சீரின்மை மற்றும் பாடசாலை வரவொழுங்கின்மை போன்ற காரணங் களாலும் சித்திவீதம் ஏனைய கல்வி வலயங் களோடு ஒப்பிடுகையில் குறைவாக காணப் பட்டாலும் முன்னைய ஆண்டுகளை விட குறிப் பிடத்தக்க வளர்ச்சி நிலையை அவதானிக்க முடிகின்றது.

| | 2009 | | | 2010 | | | 2011 | | | 2012 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடசாலையின் பெயர் | Sat | Pass | Pass% | Sat | Pass | Pass% | Sat | Pass | Pass% | Sat | Pass | Pass% |
| நயினாதீவு மகா வித்தியாலயம் | 24 | 0 | 0.00 | 18 | 1 | 5.56 | 31 | 1 | 3.23 | 11 | 0 | 0.00 |
| புங்குடுதீவு மகா வித்தியாலயம் | 13 | 0 | 0.00 | 18 | 0 | 0.00 | 18 | 0 | 0.00 | 15 | 0 | 0.00 |
| புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயம் | 14 | 0 | 0.00 | 17 | 0 | 0.00 | 9 | 0 | 0.00 | 8 | 0 | 0.00 |
| புங்குடுதீவு ஸ்ரீ வித்தி விநாயகர் மகா வித்தியாலயம் | 21 | 0 | 0.00 | 17 | 0 | 0.00 | 28 | 1 | 3.57 | 28 | 1 | 3.57 |
| நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ர வித்தியாலயம் | 6 | 0 | 0.00 | 11 | 0 | 0.00 | 16 | 0 | 0.00 | 9 | 0 | 0.00 |
| புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம் | 26 | 1 | 3.85 | 23 | 0 | 0.00 | 27 | 0 | 0.00 | 22 | 1 | 4.55 |
| புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் மகா வித்தியாலயம் | 16 | 1 | 6.25 | 24 | 0 | 0.00 | 16 | 0 | 0.00 | 17 | 0 | 0.00 |
| நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம் | | | | | | | | | | | | |
| புங்குடுதீவு மேற்கு அ.மி.த.க.பாடசாலை | | | | | | | | | | 13 | 0 | 0.00 |
| புங்குடுதீவு றோ.க.த.க.பாடசாலை | | | | | | | | | | | | |
| புங்குடுதீவு துரைசுவாமி வித்தியாலயம் | 10 | 0 | 0.00 | 11 | 0 | 0.00 | 10 | 10 | 0.00 | | | |
| வேலணை மத்திய கல்லூரி | 17 | 0 | 0.00 | 15 | 0 | 0.00 | 12 | 12 | 8.33 | 13 | 1 | 7.69 |
| மண்டைதீவு மகா வித்தியாலயம் | 8 | 0 | 0.00 | 6 | 0 | 0.00 | 10 | 10 | 0.00 | 13 | 0 | 0.00 |
| வேலணை கிழக்கு மகா வித்தியாலயம் | 14 | 0 | 0.00 | 16 | 0 | 0.00 | 8 | 8 | 0.00 | 12 | 0 | 0.00 |
| சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம் | 17 | 0 | 0.00 | 20 | 0 | 0.00 | 22 | 22 | 0.00 | 13 | 0 | 0.00 |
| வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் | 9 | 0 | 0.00 | 18 | 0 | 0.00 | 29 | 29 | 3.45 | 21 | 1 | 4.76 |
| வேலணை சரஸ்வதி வித்தியாலயம் | 31 | 0 | 0.00 | 33 | 0 | 0.00 | 35 | 35 | 5.71 | 26 | 0 | 0.00 |
| அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் | 5 | 1 | 20.00 | 10 | 0 | 0.00 | 7 | 7 | 0.00 | 34 | 3 | 8.82 |
| வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம் | 37 | 1 | 2.70 | 27 | 3 | 11.11 | 38 | 38 | 5.26 | 17 | 1 | 5.88 |
| மண்டைதீவு றோ.க.த.க.பாடசாலை | 1 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 | 4 | 4 | 0.00 | 32 | 0 | 3.13 |
| வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம் | | | | | | | | | | 11 | | 0.00 |
| மண்கும்பான் அ.த.க.பாடசாலை | | | | | | | | | | | 0 | |
| அல்லைப்பிட்டி றோ.க.த.பாடசாலை | 10 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 | 17 | 17 | 0.00 | | | |
| செட்டிபுலம் அ.த.க.பாடசாலை | 279 | 4 | 1.43 | 298 | 4 | 1.34 | 337 | 337 | 237 | 13 | 9 | 0.00 |
| | | | | | | | | | | 328 | | 274 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணை கோட்டப் பாடசாலைகளினது க.பொ.த (சா/த) பரீட்சை சித்தி வீதம் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**க.பொ.த(சா/த) பரீட்சை பெறுபேறு**

| | 2012 | | | 2011 | | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடசாலையின் பெயர் | Sat | Pass | Pass% | Sat | Pass | Pass% | Sat | Pass | Pass% | Sat | Pass | Pass% |
| **வேலணை** | 253 | 99 | 39.13 | 304 | 89 | 29.28 | 257 | 94 | 36.58 | 209 | 69 | 33.01 |
| நயினாதீவு மகா வித்தியாலயம் | 11 | 5 | 45.45 | 22 | 5 | 22.73 | 16 | 5 | 32.25 | 22 | 6 | 27.27 |
| புங்குடுதீவு மகா வித்தியாலயம் | 25 | 7 | 28.00 | 22 | 4 | 18.18 | 21 | 7 | 33.33 | 22 | 5 | 22.73 |
| புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் | 12 | 3 | 25.00 | 22 | 3 | 13.64 | 11 | 2 | 18.18 | 10 | 2 | 20.00 |
| புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலயம் | 9 | 1 | 11.11 | 10 | 1 | 10.00 | 10 | 4 | 40.00 | 5 | 0 | 0.00 |
| நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஸ்ர வித்தியாலயம் | 27 | 6 | 22.22 | 26 | 10 | 38.46 | 34 | 12 | 35.29 | 19 | 4 | 21.05 |
| புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம் | 14 | 8 | 57.14 | 9 | 1 | 11.11 | 7 | 5 | 71.43 | 8 | 3 | 37.50 |
| புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் மகா வித்தி. | 15 | 5 | 33.33 | 19 | 5 | 26.32 | 16 | 4 | 25.00 | 8 | 0 | 0.00 |
| வேலணை மத்திய கல்லூரி | 83 | 46 | 55.42 | 83 | 39 | 46.99 | 76 | 38 | 50.00 | 54 | 28 | 51.85 |
| மண்டைதீவு மகா வித்தியாலயம் | 13 | 6 | 46.15 | 18 | 6 | 33.33 | 7 | 3 | 42.86 | 9 | 2 | 22.22 |
| வேலணை கிழக்கு மகா வித்தியாலயம் | 6 | 4 | 66.67 | 16 | 1 | 6.25 | 13 | 2 | 15.38 | 16 | 6 | 37.50 |
| வேலணை சரஸ்வதி வித்தியாலயம் | 12 | 3 | 25.00 | 11 | 1 | 9.09 | 9 | 1 | 11.11 | 7 | 3 | 42.86 |
| அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் | 15 | 3 | 20.00 | 14 | 2 | 14.29 | 13 | 2 | 15.38 | 4 | 0 | 0.00 |
| வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம் | 11 | 2 | 18.18 | 32 | 11 | 34.38 | 24 | 9 | 37.50 | 20 | 8 | 40.00 |
| சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம் | – | – | – | 5 | 2 | 40.00 | 5 | 1 | 20.00 | 5 | 2 | 40.00 |

க.பொ.த (சா/த) பெறுபேற்றினை கீழ்வரும் அட்டவணையில் அவதானிக்கலாம். தீவகப்பிரதேசத்தில் பெரும்பாலான மாணவர்கள் கலைத்துறைப் பாடங்களையே கற்கின்றனர். ஏனைய பிரிவுகளை கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக காணப்படுகின்றது.

**க.பொ.த(உ/த) பிரிவு பரீட்சை சித்தி வீதம்**

| வேலணை கோட்டம் | 2012 | | | 2011 | | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடசாலை | Sat | Pass | Pass% | Sat | Pass | Pass% | Sat | Pass | Pass% | Sat | Pass | Pass% |
| நயினாதீவு ம.வி | 20 | 9 | 45.00 | 21 | 16 | 76.19 | 15 | 9 | 60.00 | 22 | 16 | 72.73 |
| புங்குடுதீவு ம.வி | 11 | 8 | 72.73 | 7 | 6 | 85.71 | 10 | 7 | 70.00 | 4 | 4 | 100.00 |
| வேலணை மத்திய கல்லூரி | 55 | 36 | 65.45 | 58 | 43 | 74.14 | 68 | 54 | 79.41 | 60 | 43 | 71.67 |


தீவகக்கல்வி வலயத்தில் அமைந்துள்ள பெரும்பாலான பாடசாலைகள் கிராமப்புற பாடசாலைகளாகவும் பிரதான வீதிகளில் இருந்து தொலை தூரத்திலும் அமையப் பெற்றிருப்பதாலும் ஆசிரியர்கள் நீண்டதூரம் பயணித்தே பாடசாலைகளை அடைகின்றனர். அதிகமான ஆசிரியர்கள் யாழ் குடாநாட்டிலிருந்தே தீவகத்திற்கு வருகின்றனர். இவர்கள் 20 – 30 KM தூரம் தாண்டி வருகின்றனர். இங்குள்ள பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர் விடுதி வசதிகளின்மையாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் நயினாதீவு விஜயம்



## கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்கள் அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச மட்டத்திலான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவக பிரதேச விளையாட்டுக்கள் பற்றிய ஓர் நோக்கு

மா.இளம்பிறையன்
யாழ்.பல்கலைக்கழகம்.

தீவகம் என்பது வேலணை ஊர்காவற்துறை, நெடுந்தீவு ஆகிய மூன்று பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய பாரிய நிலப்பரப்பினை கொண்ட பிரதேசமாகும்.

இப் பிரதேசமானது யாழ் குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது மழைவீழ்ச்சி குறைந்த பிரதேசமாக இருக்கின்ற காரணத்தினால் வருடம் 365 நாட்களும் இங்கு விளையாட்டு செயற்பாட்டை மேற்கொள்ள முடியும் என்பதுடன் இங்கு பாரிய வெளிகள் சமதரைகளாக காணப்படு வதால் இலகுவாக மைதானங்களை அமைக்கக் கூடியதாக இருக்கின்றது.

70களிற்கு முன்னர் இங்குள்ள மக்களால் தாச்சி மறித்தல் அதாவது கிளித்தட்டு என அழைக்கப்படும் கிராமிய விளையாட்டு முக்கியமாக விளையாடப் படுவதுடன், சிறுவர்களால் கிட்டிப்புல்லு எனும் சிறு விளையாட்டுக்களும், பெண்களால் கெந்தி மிதித்தல் அதாவது இங்கு எட்டுக்கோடு என அழைக்கப்படும் விளையாட்டுக்களும் பிரபல்யமாக விளையாடப்பட்டு வந்தன.

1970களிற்குப் பின்னர் உதைபந்தாட்டம், மென்பந்து கிரிக்கெட், கரப்பந்தாட்டம், வலைப் பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் விளையாடப்பட்டு வந்தன. இதன் காரணமாக பாரம் பரியமாக விளையாடப்பட்டு வந்த பாரம்பரிய விளையாட்டுக்கள் அருகிவரத் தொடங்கின. எழுவைதீவு, ஊர்காவற்றுறை போன்ற இடங் களில் நீச்சல் போட்டிகள், படகு வலித்தல் போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இங்கு காலத்துக்குக் காலம் விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் முகமாக பிரதேச செயலகங்களினாலும், விளையாட்டுக்கழகங்களினாலும் கழகங்களினிடையே போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. தீவக விளையாட்டினைப் பொறுத்தவரை தனியே கழகங்கள் மட்டுமன்றி தீவக பாடசாலைகளும் பெரும் பங்களிப்பை வழங்குகின்றன. அந்த வகையில் தீவகத்தில் பிரபல்யமாக இயங்குகின்ற பாடசாலைகளான வேலணை மத்திய கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி ஆகிய பாடசாலைகள் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் தங்களின் தடங்களைப் பதித்து தீவக விளையாட்டு வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளன. 1980களிற்கு முன்னர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியினால் கூடைப்பந்தாட்ட விளையாட்டு ஆடப்பட்டதுடன், ஒரு காலத்தில் யாழ். மாவட்டத்தில் தலை சிறந்த அணியாக திகழ்ந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும். 1980களிற்கு முன்னர் வேலணை மத்திய கல்லூரி உடற்பயிற்சி அணி தேசிய மட்டத்தில் சாதனை படைத்ததுடன், அண்மைக்காலமாக புனித அந்தோனியார் கல்லூரி உடற்பயிற்சி அணி தேசிய மட்டத்தில் சாதனை படைத்து வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அதேபோல் ஊர்காவற்றுறை சின்னமடு கிராமத்தைச் சேர்ந்த திரு. சண்முகம்பிள்ளை மரதனோட்டப் போட்டியில் தேசிய மட்டத்தில் 1980களில் சாதனை படைத்தது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவகத்தில் 1990களின் ஆரம்பத்தில் ஏற்பட்ட பாரிய இடம்பெயர்வு தீவக விளையாட்டுத் துறையிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத் தியதை மறுக்கமுடியாது. 1990களின் முன் தீவக பிரதேசத்தில் கிட்டத்தட்ட 90000இற்கு மேற் பட்ட மக்கள் தொகையினர் வாழ்ந்துவந்தனர். ஆனால் இன்று கிட்டத்தட்ட 20000மக்களே வாழ்ந்து வருகின்றனர் என்பதுடன், 1990களில் ஏற்பட்ட இடம்பெயர்வால் தீவக பாடசாலைகள் இடம்பெயர்ந்த சூழ்நிலையில் இயங்கிய காரணத்தால் அவர்களால் சிறிதுகாலம் விளை யாட்டுச் செயற்பாட்டை மேற்கொள்ள முடி யாமற் போய்விட்டதுடன் மீள் குடியேற்றத்தின் பின்னரும் உடனடியாக விளையாட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமற் போய்விட்டது. தீவக விளையாட்டு அபி விருத் தியை ஆராயவேண்டுமாயின் 1990களிற்கு முன்னர், அதன் பின்னர் என ஒப்புநோக்குதல் வேண்டும்.

தற்போது தீவகத்தில் வாழ்ந்துவரும் மக்களால் உதைபந்தாட்டம், மென்பந்து கிறிக்கட், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்ட விளையாட்டுக்கள் ஆடப்பட்டு வருகின்றன.

தீவகத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங் களால் ஆடப்பட்டுவரும் விளையாட்டுக்கள் தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு:

| விபரம் | ஊர்காவற் றுறை | வேலணை | நெடுந்தீவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| உதைபந்தாட்டம் | 14 | 22 | 07 | 43 |
| மென்பந்து கிறிக்கெட் | 14 | 20 | 07 | 41 |
| கரப்பந்தாட்டம் | 09 | 14 | 07 | 28 |
| வலைபந்தாட்டம் | 04 | 08 | 05 | 17 |

* தகவல் – விளையாட்டு உத்தியோகத்தர்கள்

மேற்காட்டப்பட்ட புள்ளிவிபரங்களை நோக்கும்போது அங்கு வாழ்ந்துவரும் மக்கள் ஏனைய பிரிவுகளுடன் ஒப்பிடும்போது இங்கு அதிகமான கழகங்கள் இயங்கிவருவது குறிப் பிடத்தக்க அம்சமாகும். அதேபோல் தீவகப் பாட சாலைகளிலும், கணிசமான அளவு விளை யாட்டு அணிகள் உருவாக்கப்பட்டிருப்பது குறிப் பிடத்தக்க விடயமாகும்.

இங்கு குறிப்பிடவேண்டிய குறை பாடாக பெருமளவான கழகங்கள் இயங்கி வருகின்ற போதும் ஒவ்வொரு விளையாட்டுக் களையும் ஒருங்கிணைத்து செயற்படுத்தக் கூடிய ஓர் அமைப்போ சங்கமோ இல்லாதது குறைபாடான விடயமாகும். பாடசாலைகளில் விளையாட்டுக்கள் விளையாட்டுப் பணிப்பாளர் களால் ஒருங்கிணைத்து செயற்படுத்தப்படுவது போல் கழகங்களை ஒருங்கிணைத்து செயற் படுத்துவதற்கு ஓர் அமைப்பு இல்லாத குறை யைப் போக்க கழகங்கள் யாவும் ஒருங் கிணைந்து சங்கமாக அமைப்பதன் மூலம் ஒருங்கிணைந்து செயற்பட முடிவதுடன் அவர் களுக்கிடையே கட்டுப்பாடு, ஒழுக்கம் என் பவற்றைப் பேணுவதுடன் போட்டிகளை கட்டுப் பாட்டுடன் நடத்தக்கூடியதாகவும் இருக்கும். அத்துடன் தேசிய மட்டத்தில் இயங்கும் சம் மேளனங்களுடன் தொடர்புகளைப் பேணி விசேட பயிற்சியளித்தல், தேசியமட்டப் போட்டி களில் பங்குபற்றுதல் உபகரண உதவிகள், நிபுணத்துவ உதவிகள் என்பவற்றைப் பெறமுடியும். மேலும் இங்குள்ள அணிகள் யாழ் பெரு நிலப்பரப்பில் இடம்பெறும் போட்டிகளில் பங்குபற்றுவது குறைவாக இருக்கின்றது. பிரதேச செயலக போட்டிகளைத் தவிர ஏனைய போட்டிகளில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் இயங்கும் விளையாட்டுக்கழகங்களால் ஏற்பாடு செய்யப்படும் போட்டிகளில் பங்குபற்றுவது மிகக் குறைவாகக் காணப்படுவது ஒரு குறை பாடான விடயமாகும். யாழ் மாவட்டப் போட்டி களில் பங்குபற்றுவதன் மூலம் தங்களின் விளையாட்டு ஆற்றல், திறன்கள் என்பவற்றை வளர்க்க முடிவதுடன், ஏனைய பிரதேச அணி களுக்கு ஈடாக தங்களை வளர்த்துக்கொள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். மேலும், இங்குள்ள கழகங்கள் பெரும் பாலானவை நிதியுதவிகள் குறைவாகக் கிடைக் கின்ற கழகங்களாகக் காணப்படுகின்றன. அரச, அரசசார்பற்ற நிறுவன உதவிகள் குறைவாகக் கிடைப்பதுடன், ஊக்குவிப்புக்களும் குறை வாகக் காணப்படுகின்றது. இங்குள்ள கழகங் களைத் தேர்ந்தெடுத்து ஊக்குவிப்புகளை வழங்குவதன் மூலம் அவர்களைத் தேசிய அளவில் உருவாக்க முடியும். தீவகப் பிரதேசத்தில் உதைபந் தாட்டத்தில் பலவீரர்கள் தேசிய மட்ட அணிகளுக்கான தகுதிகள் இருந்தும்கூட அவர்களுக்கு சரியான வழிகாட்டுதல்கள், ஊக்குவிப்புக்கள் இல்லாத காரணத்தால் அவர்களால் தேசிய அளவில் பிரகாசிக்க முடியவில்லை. மேலும், தீவகப் பிரதேசத்தில் நன்னீர் நீர் நிலைகள் பெருமளவில் காணப்படுவதுடன் அலைகள் குறைந்த உவர்நீர் ஏரிகள் பெருமளவில் காணப்படுவதால் இப்பகுதிகளில் நீரியல் விளையாட்டுக்களை அறிமுகப்படுத்த முடியும். மேலும் பெருமளவான கழகங்கள் இங்கிருந்தும், பெரும் பாடசாலைகள் இங்கு இயங்கிய போதும் அவர்களால் வன்பந்து கிரிக்கெட் விளையாட்டினை அறிமுகப்படுத்த முடியாமல் இருப்பது குறிப்பிடக்கூடிய ஒரு குறைபாடாகும். எதிர்காலத்தில் இவ்விளை யாட்டினை அறிமுகப்படுத்துவதன் மூலம் இக் குறைபாட்டினை நிவர்த்திசெய்ய முடியும்.

எனவே, தீவக விளையாட்டுத் துறை யினை மேல்நிலைக்கு கொண்டுசெல்வதற்கு அனைவரும் இணைந்து செயற்படவேண்டியது எமது கடமையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவகப் பிரதேசத்தின் சுற்றுலாத்துறையும் அதன் வளவாய்ப்புக்களும்

செல்வி.வக்ஷினி சூரியகுமார்
B.A (Hons)

இன்றைய நவீன உலகில் உலக நாடுகளின் மரபு ரீதியான பொருளாதார முறைகள் பாரிய மாற்றமடைந்து வருவதனை காணமுடிகிறது. பொருளாதார கட்டமைப்பில் நடைமுறைச்சாத்தியமான விடயங்களை உள் வாங்கி இன்று உலகின் பல நாடுகள் தமது பொருளாதாரக் கட்டமைப்பிலிருந்து விடுபட்டு சுற்றுலாத்துறையினை விருத்தி செய்து வரு கின்றன. சுற்றுலாத்துறையானது அந்நிய செலா வணியை பெற்றுக்கொள்வதுடன் மக்களின் வாழ்வாதாரத்துக்கான தொழில் வாய்ப்புக் களையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

இந் நிலையில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பெருந்தோட்ட பயிர்ச்செய்கையும் அதனைத் தொடர்ந்து வெளி நாட்டு வேலை வாய்ப்பு ஆடைக் கைத்தொழில் மூலம் அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்வதன் மூலம் பொருளாதார மேம்பாட்டை அடைய முயற்சிக்கப்பட்டது. ஆயினும் அலை வரைபு ரீதியாக எதிர்பார்த்த பலனை அடையத் தவறியதன் விளைவாக புதிய துறையான சர்வதேச உள்நாட்டு சுற்றுலா துறையினை வளர்த்தெடுப்பதன் வாயிலாக பொருளாதார சமூக மேம்பாட்டினை பெற்றுக்கொள்ளும் முயற்சி அண்மைக் காலங்களில் விரிபுபடுத்தப் பட்டு வருகின்றது.

2009ம் ஆண்டு வடக்கு கிழக்கு பகுதியில் யுத்தம் முடிவடைந்ததை தொடர்ந்து அங்கு சுற்றுலாத்துறை வேகமாக வளர்ச்சி யடைந்து வருகின்றது. இதன் பொருட்டு வடக்கையும் கிழக்கையும் இணைத்து சுற்றுலாத் துறையினை வளர்த்தெடுத்தல் அவசியமான தாகும். அந்த வகையில் வடபகுதியில் சர்வதேச சுற்றுலாப் பயணிகளது வருகையானது மட்டுப் படுத்தப்பட்ட அளவிலேயே தொடர்கின்றது. எனினும் உள்நாட்டுச் சுற்றுலா சாதனை படைத் துள்ளது. கடந்த 30 ஆண்டுகால யுத்தம் முடி வடைந்த நிலையில் அதன் அழிவையும் முக்கிய சின்னங்களையும் பார்வையிடுவதற்காக தென்னிலங்கைப் பயணிகள் வடக்கிற்கு அதி களவில் வருகை தருகின்றனர். குறிப்பாக ஒவ்வொரு ஆண்டும் 2 லட்சம் பயணிகள் யாழ்ப்பாணம் வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சுற்றுலா மையங்கள் நிறைந்த யாழ் மாவட்டத்தின் தென்மேற்குத் திசையில் அமைந் துள்ள வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, காரைநகர், நெடுந்தீவு, அனலைதீவு, எழுவை தீவு ஆகிய சப்த தீவுகளும் தீவகம் என வரையறுக்கப்படுகிறது. இங்கு மிதமான வெப்ப நிலை, கண்கவர்கடற்கரை, முருகைக்கற் பாறைகள், வேறுபட்ட இயற்கைத் தோற்றங்கள் என்பன சுற்றுலா பயணிகளைக் கவரும் விடயங்களாக உள்ளன.

## சுற்றுலா மையங்களை இனங்காணல்

சுற்றுலா மையங்களை அவற்றின் இயல்புக்கும் தன்மைக்கும் ஏற்ப பலவாறு வகைப்படுத்தலாம்.

### 1. சூழலியல் சுற்றுலா

இது சூழல்சார் நலன் பேணும் பொருட்டும் உயிர் பல்வகைமையினை பேணும் பொருட்டும் சூழல்சார் விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

- குதிரைலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவில் அமைந்துள்ள இக்குதிரை லயமானது வெடியரசன் என்ற மன்னன் ஆட்சி செய்த காலத்தில் குதிரைகள் தங்குவதற்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்டதாகும்.

**2. கலாசாரச்சுற்றுலா**

ஒவ்வொரு மதத்தினரதும் தனித்துவமான விழுமியங்கள் பண்பாடுகளை பறைசாற்றும் வண்ணம் அமைந்துள்ள சிறப்புமிக்க வழிபாட்டுத்தலங்களும் கலாசார பண்பாட்டு அம்சங்களும் இதனுள் அடங்குகின்றன.

- நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்

தீவுப்பகுதியின் இந்துப் பாரம்பரியத்தின் அடையாளமாக விளங்கும் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் இலங்கை வரலாற்றுக்காலங்களில் பலமுறை சேதமாக்கப்பட்டது. எனினும் தற்போது புனரமைக்கப்பட்டு 4 கோபுரங்கள் கொண்டு இந்தியாவின் சிறப்பு மிகு ஆலயங்கள் போன்ற பொலிவைப் பெற்று வருகின்றது.

- நயினாதீவு நாகவிகாரை

இது 1944ல் கட்டப்பட்டது. BC 524-483 காலத்தில் இங்கு புத்த பெருமான் வருகை தந்துள்ளார். இதற்கு பின்னரே இங்கு விகாரை அமைக்கப்பட்டது.

- சாட்டி மாதா ஆலயம்
- சென் ஜேம்ஸ் ஆலயம்

ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள இவ்வாலயம் பிரித்தானிய அரசால் 1910ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு வைகாசி மாதம் திருவிழாக் காலமாகும். இங்கு அதிகளவு கிறிஸ்தவர்கள் வருகை தருகின்றனர்.

- சின்னமடுமாதா ஆலயம்

போர்த்துக்கேயரால் உருவாக்கப்பட்ட இவ்வாலயம் கிறிஸ்தவ மதகுருமார் அதிகளவு வருகைதந்த ஆலயமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

- காரைநகர் ஈழத்து சிதம்பரம்

ஈழத்து சிவாலயங்களில் முக்கியமாக காணப்படும் இவ்வாலயம் அதிகளவு இந்து மக்கள் வருகைதரும் இடமாகவுள்ளது.

இவற்றைவிட அனலைதீவு ஐயனார் கோயில் புளியந்தீவு நாகேஸ்வரன் கோயில் என்பனவும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் புகழ்மிக்க ஆலயங்களாகும்.

**3. பொழுது போக்கு சுற்றுலா**

பொழுது போக்கு சுற்றுலாவானது மக்கள் தமது ஓய்வு நேரத்தை கழிப்பதற்கென வருகைதரும் சுற்றுலா மையங்களை உள்ளடக்கியுள்ளது.

- Pigeon's net

ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் சுண்ணாம்புக் கற்களை பயன்படுத்தி தமது பாதுகாப்புக்காக கட்டியுள்ளனர். இது நெடுந்தீவில் அமைந்துள்ளது.

- மீகாமன் கோட்டை

நெடுந்தீவில் அமைந்துள்ள இக்கோட்டையானது ஒல்லாந்தரது இரணுவக் கட்டடக்கலையை பயன்படுத்திக் கட்டப்பட்டது. இரு அடுக்குகளை கொண்டு 50 யார் சதுரப் பரப்பில் அமைந்துள்ளது. முதல் அடுக்கு நிலமட்டத்தில் காணப்படுகிறது. மேல் அடுக்கு ஒடுங்கிய நீண்ட அறைகளை உடையது. கூரை சீமெந்தால் அமைக்கப்பட்டுள்ளதுடன் இங்கு எந்தவித கதவுகளும் காணப்படவில்லை. கைதிகளை சிறைப்பிடித்து வைப்பதற்கான தனித்தனி பாதுகாப்பு அறைகள் காணப்படுகின்றன.

- வெடியரசன் கோட்டை

இது வெடியரசன் என்ற தமிழ் மன்னனால் நெடுந்தீவில் கட்டப்பட்டது மீகாமன் கோட்டையை விட சிறியது எனினும் தொன்மையான கட்டடக்கலையுடன் பலம் பொருந்திய சுவர்களுடன் உருவாக்கப்பட்டது.

- பாதச்சுவடு

நெடுந்தீவில் அமைந்துள்ள இப்பாதச்சுவடு உயரமான ஒருமனிதனது பாத அடையாளமாகும். இது ஓர் பாறையின் மேல் ஆழமாகப் பதிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Queen tower

இது பிரித்தானியரது ஆட்சியில் தேசாதிபதி ஒருவரால் நெடுந்தீவில் கடல் நடுவே கட்டப்பட்டது.

- பெருக்கு மரங்கள்

நெடுந்தீவில் அமைந்துள்ள இப் பெருக்கு மரம் அக்காலத்தில் குதிரைகளின் உணவுத் தேவைக்காக நாட்டப்பட்டது. இது யாழ்ப் பாணத்தில் பெரிய மரமாகவும் தென்னாசி யாவில் 2வது பெரிய மரமாகவும் உள்ளது.



பெருக்கு மரம்

புங்குடுதீவில் அமைந்துள்ள பெருக்க மரமானது ஒல்லாந்தர் காலத்தில் பழைய துறை முகத்தை அண்டி நாட்டப்பட்டுள்ளது. இது 30 அடி உயரமுடைய 15m சுற்றளவுடைய வெள்ளைநிற பூக்கள் கொண்டதாக உள்ளது.

- காமன் செங்கோட்டை

ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள காமன் செங்கோட்டை போர்த்துக்கேய தேசாதிபதி tortalezamdo caes என்பவரால் கட்டப்பட்டது. பவளப்பாறைகளாலான உட்பக்கச்சுவர் கொண்டது. இது ஒல்லாந்தர் காலத்தில் காமன் செயல் என்பவரால் திருத்தியமைக்கப்பட்டது. 1975ல் பிரித்தானியர் மீளவும் இதனை புனரமைத்தனர். இது இப்போது உயர் பாதுகாப்பு வலயமாக உள்ளது.

- ஊர்காவற்றுறை துறைமுகம்


இது இயற்கைத் துறைமுகமாகும். இங்கு சிறுகப்பல்கள், படகுகள் நிற்கக்கூடிய அமைப்பு காணப்படுகிறது. புராதன வணிக செயற்பாடுகள் இங்கு மேற்கொள்ளப்பட்டது.

- கயூரினா கடற்கரை

யாழ் நகரிலிருந்து 23km தூரமுடையது. இங்கு அழகான நிலநீர் சிறிய அலைகள் நிலத்தை நோக்கிய தன்மை மிக அழகானது. இங்கு கயூரினா மரம் உயரமாக வளரக் கூடியது. ஆகையால் இப்பெயர் பெற்றது.

- சாட்டிக் கடற்கரை

இது இயற்கைசார் சுற்றுலா மையமாகும். அழகான மணல் கொண்ட இக்கடற்கரை சாட்டி மாதா ஆலயத்துக்கு அண்மையில் அமைந் துள்ளது. இது ஆபத்துக் குறைந்த கடல்பகுதி என்பதால் நீச்சல் செய்வதற்கு அதிக பயணிகள் விரும்புகின்றனர்.



சாட்டி கடற்கரை

- வெளிச்ச வீடுகள்

புங்குடுதீவின் சோரியா என்ற இடத்தில் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட வெளிச்ச வீடொன்று உள்ளது. பெருங் கப்பல்களும் செழித்த வாணிபமும் அக்காலத்தில் இருந்தமையால் நடுக்கடலில் கப்பல்கள் சென்றுதிரியும் இராக் காலத்திலே கப்பல்கள் திசைமாறாது கரை சேர்வதற்குத் துணையாகக் கடற்கரைப் பட்டினத்தில் 35 அடி உயரமுடையதாக இவ்வெளிச்ச வீடமைந்துள்ளது. இது 5 செக்கனுக்கு ஒரு முறை விட்டுவிட்டு ஒளிரும். காரைநகர் கோவளம் எனுமிடத்தில் மற்றொரு வெளிச்ச வீடும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவகப் பிரதேசத்தினைப் பொறுத்தவரை 1990களில் விவசாயம், மீன்பிடி சிறுகைத் தொழில் போன்ற பொருளாதார கட்டமைப் பினை கொண்டிருப்பினும் அவற்றின் மூலம் நல்ல வருமானம் கிடைக்கக்கூடியதாக இருந்தது. எனினும் 1990களில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக வெளியேறிய தீவக மக்களில் பெரும்பாலானவர்கள் மீளவும் தீவகத் துக்கு திரும்பவில்லை. இதனால் தற்சமயம் நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களே அதிகம் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் வன்னியில் வாழ்ந்த தீவகமக்கள் யுத்த இழப்புக்களை எதிர்கொண்டு மீளவும் தீவகத்தில் குடியேறியுள்ளனர். எனவே இம் மக்கள் பாரம்பரிய பொருளாதார முறைகள் மூலம் அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுக்கு ஈடுகொடுக்க முடியாதிருப்பதால் நவீன உலகில் பிரபலமாயிருக்கும் சுற்றுலாக் கைத்தொழிலுக் கான வளவாய்ப்புக்கள் நிறைந்த இப்பகுதியில் மக்களும் தமது தொழில்வாய்ப்புக்களை சுற்றுலாத்துறை நோக்கி நகர்த்துவது அவசிய மானது.



வெளிச்சவீடு - புங்குடுதீவு

தீவகத்தின் சுற்றுலாத் துறையினை விருத்தி செய்து அதிக சுற்றுலாப் பயணிகளை கவருதல் வாயிலாக அதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். தீவகத்தினை பொறுத்தவரை போக்குவரத்து சீரின்மை முக்கிய பிரச்சனை யாக உள்ளது. எனவே வீதிகளை புனரமைத்து நவீன மயமாக்குவதால் வேகமாகவும் இலகு வாகவும் குறித்த இடத்தினை அடைந்து கொள்ளலாம். அத்துடன் நயினாதீவு, நெடுந்தீவு பகுதிகளில் பாலம் மூலமான போக்குவரத்து ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். இதன் மூலம் பயணிகள் தமது சொந்த வாகனங்களில் அந்த தீவுகளில் பயணம் செய்யக்கூடியதாக ஒழுங் கமைக்க வேண்டும் ஏனெனில் நெடுந்தீவுக்கான குமுதினி படகுச்சேவை 8-2 மணிவரையே இடம்பெறுகிறது. இதனால் போக்குவரத்து சீரின்றி காணப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கான தங்குமிட வசதிகள் பற்றாக்குறையாக உள்ளது. நயினாதீவு, நெடுந்தீவு பகுதிகளில் தங்கு மிடங்கள் இல்லை. எனவே புதிய சுற்றுலா விடுதிகள் நவீன முறையில் அமைக்கப்பட வேண்டும் இதற்கான முயற்சியை ஐரோப்பிய முகவரகம் ஆரம்பித்துள்ளது. வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு நட்சத்திர விடுதிகள் அமைக்கும் பணிகள் ஆரம்பாமா கியுள்ளன. இதன்மூலம் மக்களுக்கு இவ்விடுதி களில் வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும். சுற்றுலா பயணிகள் அதிகளவு வருகைதரும் இடங்களான நயினாதீவு, நெடுந்தீவு, கசூரினா, சாட்டி கடற்கரைகளில் விடுதிகள் அமைக்கப் படுவது அவசியமாகும். அத்துடன் மக்கள் சுற்று லாத்துறை தொடர்பான பூரண அறிவற்றவர் களாக காணப்படுகின்றனர். எனவே அவர்களை சுற்றுலாத்துறைக்குள் உள்வாங்குவதற்காக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டும்.



சாட்டி கடற்கரை தங்குமிடமும் உணவு விடுதியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நீர் பற்றாக்குறை முக்கிய பிரச்சனை யாகக் காணப்படுகிறது. குறுகிய 3 மாதக் காலத்தில் பெய்யும் மாரிமழை வருடம் முழுக்க போதாது என்பதால் மாற்றுவழிகள் ஏற்படுத்தப் பட வேண்டும். இங்கு இரணைமடு நீர் விநியோகத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ள போதும் கிளிநொச்சிப் பிரதேசத்துக்கு நீர் வழங்கி மேலதிக நீரே இங்கு வழங்கப்பட வேண்டும் எனவே இதற்கான சாத்தியப்பாடு குறைவாக உள்ளது.இதற்கு சரியான தீர்வு மழைநீர் சேகரிப்பு திட்டமாகும். இவற்றை விட கடல்நீரை நன்னீராக்கவும் முடியும் ஆயினும் அவற்றுக்கான செலவுகள் அதிகமாகும்.

கடல்வளம் நிறைந்த இப்பகுதியில் கடலிலிருந்து கிடைக்கப்பெறும் சிப்பி போன்ற பொருட்களை பயன்படுத்தி கைவினைப் பொருட்களை தயாரித்து விற்றல் மற்றும் பனம் பொருள்சார் உணவு உற்பத்திகள், அலங்காரப் பொருட்கள், ஞாபகச்சின்னங்கள் என்பவற்றைத் தயாரித்து சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்வதன் மூலம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும். அத்துடன் திருவிழாக் காலங்களில் கலை கலாசார நிகழ்வுகளை ஒழுங்கு செய்வதன் வாயிலாக மேலும் சுற்றுலாப் பயணிகள் அதிகரிக்க வாய்ப்புண்டு.

குதிரைகள் நெடுந்தீவில் காணப்படுவதால் அங்கு குதிரைச் சவாரியினை ஒழுங்கு செய்யலாம். இதற்கென திறமையானவர்களை இனங்கண்டு பயிற்சியளிக்க வேண்டும் அதே போல் ஆழம் குறைந்த கடற்பரப்புக்களில் படகுச் சவாரியினை மேற்கொள்ள முடியும். குறிப்பாக அதிக பயணிகள் வருகை தரும் நயினாதீவு, பருத்தித்தீவு போன்ற இடங்களில் சிறந்த பட கோட்டிகளுக்கு பயிற்சியளித்து படகோட்டத் தினை மேற்கொள்ளலாம். நிறுவன செயற் பாடின்மை, மின்சார வசதியின்மை, வைத்திய சேவையின்மை என்பன சுற்றுலாத்துறைக்கு தடையாக இருப்பதால் உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தி செய்யப்பட வேண்டும். சுற்றுலா அதிகார சபை மூலம் இங்குள்ள சுற்றுலா மையங்கள் விருத்தி செய்யப்படு வதுடன் வெளிநாட்டுப் பல்தேசிய கம்பனிகள் புலம்பெயர் மக்கள் மூலமாக அதிக முதலீடு களை உள் வாங்கி உட்கட்டமைப்பை விருத்தி செய்யலாம்.

மேலும் புதிய சுற்றுலா வளவாய்ப்புக்களாக நெடுந்தீவு, மண்டைதீவு பகுதிகளில் பறவைகள் சரணாலயம் அமைத்தல் பருத்தித்தீவு சுற்றுலா கிராமம் என்பன இனங்காணப்பட்டுள்ளன. அத்துடன் சுற்றுலாத்துறை விருத்திக் கென காரைநகரில் விமான ஒடுதளம் அமைக்கவும் இடத்தெரிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு தீவகத்தின் சுற்றுலாத் துறை வளர்ச்சி மூலம் சமூக பொருளாதார நன்மைகள் கிடைக்கப்பெறினும் அதனால் பல கேடு களையும் அனுபவிக்க வேண்டியுள்ளது. குறிப் பாக கலாசார சீர்கேடுகள், சிறுவர் பெண்கள் துஸ்பிரயோகம், சூழல் மாசடைதல், வரலாற்று சின்னங்கள் சிதைக்கப்படல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே சுற்றுலாத்துறையினால் ஏற்படும் பாதக விளைவுகளை தவிர்ப்பதற்கான முயற்சிகளையும் அறிவுறுத்தல்களையும் மேற்கொண்டு முடிந்தவரை பாதிப்புக்களைத் தவிர்த்து சுற்றுலாத்துறையை வளர்ச்சியடைய செய்யலாம். இவற்றை சரியான நிறுவன கட்டமைப்பு மூலம் முகாமை செய்து வேலை வாய்ப்புக்கள், வருமானம் என்பவற்றினை அதி கரிப்பதன் வாயிலாக தீவகத்தின் சமூக பொருளாதார பண்பாட்டு வளர்ச்சியினை அதிகரிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலணையின் சுகாதாரம்

மகாதேவன் குணதாசன்
வைத்திய அதிகாரி

சுகாதாரம் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். அந்த வகையில் இலங்கையில் சுகாதாரம் தொடர்பான சேவைகள் பல்வேறுபட்ட வளர்ச்சி நிலைகளை அடைந்திருப்பதைக் காண முடிகின்றது. யாழ் மாவட்டத்தில் தீவகம் தெற்கு பிரதேச செயலக எல்லைக்குள் சுகாதாரம் தொடர்பான சேவைகளை பின்வரும் நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

1. பிரதேச வைத்தியசாலைகள்
2. ஆயுள்வேத வைத்தியசாலை
3. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை

### *பிரதேச வைத்தியசாலைகள்*

தீவகம் தெற்கு பிரதேச எல்லையினுள் நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, மண்டைதீவு ஆகிய பிரதேசங்களில் இயங்கிவந்த நிலையில் மண்டைதீபு வைத்தியசாலையானது நாட்டில் ஏற்பட்ட அசாதாரணமான சூழ்நிலை நீண்ட காலமாக இயங்காமல் கட்டிடமும் அழிவடைந்த நிலையில் காணப்பட்டு வந்தது. தற்போது கட்டிடமானது புனரமைக்கப்பட்டு வருகிறது.

ஏனைய வைத்தியசாலைகளில் ஆளணி பற்றாக்குறை காணப்படுகின்றபோதும் பிரதேச மக்களுக்கு தன்னால் ஆன சுகாதார சேவைகளை முழுமையாக வழங்கி வரு கின்றன.

### *சுகாதார பராமரிப்பு சேவைகள்*

பிரதேச வைத்தியசாலைகள் கட்டில் வசதி வழங்கப்படும் சேவைகள்

| | | |
|---|---|---|
| நயினாதீவு | 34 | உள்ளக சிகிச்சை, வெளியக சிகிச்சை |
| புங்குடுதீவு | 19 | உள்ளக சிகிச்சை, வெளியக சிகிச்சை |
| வேலணை | 39 | உள்ளக சிகிச்சை, வெளியக சிகிச்சை |

(தரவு மூலம்) :- Statistical Handbook - 2013
RDHS Division - Jaffna

### *பிரதேச வைத்தியசாலை கிளினிக் வசதிகள்*

| மருத்துவ சேவை | நயினாதீவு | புங்குடுதீவு | வேலணை |
|---|---|---|---|
| பொது வைத்தியம் | சேவை உண்டு | சேவை உண்டு | சேவை உண்டு |
| கர்ப்பவதி சகிச்சை | சேவை உண்டு | சேவை உண்டு | சேவை உண்டு |
| குழந்தை நல சிகிச்சை | சேவை உண்டு | சேவை உண்டு | சேவை உண்டு |
| குடும்பத்திட்ட சிகிச்சை | சேவை உண்டு | சேவை உண்டு | சேவை உண்டு |
| நீர் இழிவுச் சிகிச்சை | சேவை உண்டு | சேவை உண்டு | சேவை உண்டு |
| சுகவனிதர் சிகிச்சை | சேவை உண்டு | சேவை உண்டு | சேவை உண்டு |
| உளவள சிகிச்சை | சேவை உண்டு | சேவை உண்டு | சேவை உண்டு |
| பற் சிகிச்சை | சேவை உண்டு | சேவை உண்டு | சேவை உண்டு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று மேலதிக சிகிச்சை தேவைப் படுவோர். நோயாளர் காவு வாகனங்கள் மூலம் யாழ் போதனா வைத்தியசாலைகளுக்கு அனுப்புவதற்கான வசதிகளும் செய்யப் பட்டுள்ளன. இங்கு புங்குடுதீவு, வேலணை வைத்தியசாலையிலும் தனித் தனியான நோயாளர் காவு வாகனமும், நயினாதீவுக்கு நோயாளர் காவு படகும் சேவையில் உள்ளன. நயினாதீவில் இருந்து படகு மூலம் அனுப்பப் படும் நோயாளர்கள் புங்குடுதீவு அல்லது வேலணை வைத்தியசாலைகளின் வாகனங்கள் மூலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

வேலணை வைத்தியசாலையில் நடமாடும் ஆய்வுகூடம் மூலம் வாராந்தம் முதலாம் நாள் இரத்தப் பரிசோதனையும் மேற்கொள்ளப்படுகிறது. புங்குடுதீவு வைத்திய சாலையில் பற்சிகிச்சையானது நடமாடும் சிகிச்சை நிலையம் மூலம் நடைபெற்று வருகிறது.

வேலணை வைத்தியசாலையில் உளவள சிகிச்சையானது மாதாந்தம் இரு தடவைகள் தெல்லிப்பளை உளநல சிகிச்சை பிரிவில் இருந்து வருகைதரும் வைத்திய உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படுகிறது. புங்குடுதீவு, நயினாதீவு வைத்தியசாலைகளில் ஓய்வுபெற்ற வைத்தியர்களே ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றி வருகின்றனர். அதேபோல் புங்குடுதீவு வைத்தியசாலையிலும், வேலணை வைத்தியசாலையிலும் ஒரு தாதிய உத்தியோகத்தரும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றி வருகின்றார்.

| **ஆளணி விபரம்** | **வேலணை** | **நயினாதீவு** | **புங்குடுதீவு** |
|---|---|---|---|
| வைத்திய அலுவலர் | 02 | 02 | 01 |
| பல் வைத்திய உத்தியோகத்தர் | 01 | – | – |
| தாதிய உத்தியோகத்தர் | 02 | – | 01 |
| மருந்து கலவையாளர் | 01 | 01 | 01 |
| குடும்ப நல மாது | 01 | 01 | 01 |
| சாரதி | 01 | – | 01 |
| படகு ஓட்டி | – | 03 | – |
| பரிசோதகர் | 08 | 07 | 02 |
| சாதாரண தொழிலாளிகள் | 05 | 03 | 05 |
| சுத்திகரிப்பு தொழிலாளி | 01 | 03 | 04 |
| காவலாளி | 01 | – | 01 |
| உள நல பணியாளர் | 01 | – | – |
| மேற்பார்வை உத்தியோகத்தர் | – | 01 | – |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவகத்தின் விழுமியங்களும் வழக்கங்களும்

திரு.க.மாணிக்கதாஷன்
ஆளணி உதவியாளர்
பிரதேச செயலகம் – வேலணை

இந்து மகாசமுத்திரத்தில் முத்தாக விளங்குவது இலங்கைத் தீவாகும். இத்தீவு பல சிறப்புக்களுக்கும், வளர்ச்சிக்கும் காரணமாய் அமைவதற்கு அது தன்னகத்தே பல அரிய பொக்கிசங்களையும் வரலாற்றுத் தகவல்களை யும் பொதித்து வைத்திருப்பதாகும். அந்த வகையில் இலங்கைத்தீவின் வடதிசையிலே நெய்தலும் மருதமும் ஒருங்கே இணையப் பெற்று யாழ் குடாநாடு அமைந்திருக்கின்றது. இவ் யாழ்குடா நாடு எழிலுறக் காரணம் இதன் அருகே காணப்படும் சப்த தீவுகள் ஆகும். இவ் சப்த தீவுகளில் எமது பிரதேச செயலர் பிரிவிற் குட்பட்ட சில தீவுகளும் உள்ளடங்கப்படு கின்றன. தலைத்தீவாம் மண்டைதீவு தொடக்கம் நயினாதீவு வரை இவை படர்ந்து செல்கின்றன. யாழ்ப்பாணத் தரைத்தோற்றத்துடன் ஒரு வழிப்பாதையாக அமையப்பெற்ற பொழுதும் பொருளாதார ரீதியாக இத்தீவுகள் யாழ் குடாவில் தங்கியிருந்தாலும், தமக்கு வேண்டிய வற்றைத் தாமே உற்பத்தி செய்து தன்னிறைவு காணும் ஒரு எழில்கொஞ்சும் தீவுகளாக எம் தீவுகள் காணப்படுகின்றன.

யாழ்குடா நாட்டோடு பின்னிப் பிணைந்திருந்தாலும் இத்தீவக மக்களின் கல்வி, கலை, கலாசாரம், சமுதாயப்பண்பாட்டு விழுமியங்கள் தனித்துவமானவை. அவையே யாழ்ப்பாணத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் உந்து துணையாய் அமைந்து காணப்படுகிறது. இவ்மக்களின் பரம்பல் நாகர்கள், இயக்கர்கள் வருகையோடு ஆரம்பிக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றபொழுதும், இங்குள்ள மக்களின் பூர்வீகங்களை வரையறை செய்வதென்பது சற்றுக் கடினமானதாகவே காணப்படுகின்றது.

பௌதீகச்சூழலில் இதன் தரைத் தோற்றம் வறண்டு காணப்படுவதால் இங்கு பனைமரங்களும், தென்னையும் அதிகம் வளர்க்கப்படுகின்றன. இவற்றின் மூலமே இக்கிராம மக்கள் இதன் உச்சப் பயனைப் பெறுகின்றனர். நெய்தலும், மருதமும், ஒருங்கே இத்தீவகத்திற்கு அமையப்பெற்றமை மேலும் ஒரு சிறப்பம்சமாகும். இங்கே கால்நடை வளர்ப்பிலும், கோழி வளர்ப்பிலும் மக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். கல்வி வளர்ச்சியில் போதிய அறிவுரைகள் ஊட்டும் பல ஆசான்கள் இங்கே வர மறுக்கும் சூழலிலும் இங்குள்ள மாணவச் செல்வங்கள் யாழ் குடாநாட்டோடு ஒப்பிடும் அளவிற்கு சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்துவது வியக்கத் தக்கது. ஆரம்பப் பாடசாலைகள் தொடக்கம் உயர்தர பாடசாலைகள் மட்டுமன்றி அறநெறிப் பாடசாலைகளை நிறுவியும் இவ் ஊர் மக்கள் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அயராது உழைப்பது என்றும் பெருமைக்குரிய விடயமாகும்.

கலை கலாசார பண்பாடுகளை அழியவிடாது பாதுகாக்கும் பாதுகாவலர்களும் இவர்களே அருகிவரும் நாட்டார் ஆடல்கள், நாட்டுக் கூத்துக்கள் பராம்பரிய விளையாட்டு களான பட்டம் ஏற்றுதல், கிளித்தட்டு, கிட்டிப்புல், எல்லே, தாச்சி, படகு ஓட்டம், மாட்டு வண்டிச் சவாரி போன்றவற்றைக் கட்டிக்காத்து இன்றும் அவற்றை ஊக்குவித்து நடாத்தி வருகின்றனர்.

வயல் உழும் போதும் விதை விதைக்கும் போதும் களை பிடுங்கும் போதும் இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையான பாடல்களை பாடி தம் மரபுகளை பேணுவதோடு எருதுகள் மூலம் வயல்களை உழுது தம் பாரம்பரிய விவசாய முறைகளை செய்துவருகின்றனர்.

ஒரு தேசம் செழிக்க வேண்டுமாக இருந்தால் அங்கு வாழும் இனத்தின் மொழியும் மதமும் வளர்ச்சி அடைய வேண்டும். ஆகவே இம் மக்கள் சைவத்தையும் தமிழையும் வளர்த்ததோடல்லாமல் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற சிந்தையின் அடிப் படையில் ஊர்தோறும் சிறு தெய்வ வழிபாடு களையும் நாட்டுப்புறத் தெய்வங்களையும் அதிகம் நம்பி மடைபரப்பி பொங்கலிட்டு வழி பாடு செய்யும் முறைமையும் தான்தோன்றிய ஆலயங்களின் வளர்சியும் இவ்வூர் மக்களின் அறப்பணிகள் என்றும் முக்கிய பங்காற்றுகின்ற ஆசார அனுட்டானங்களிலும் கிரியை முறைகளிலும யாழ்ப்பாண குடா நாட்டை விட சிறப்பாகவே காணப்படுகின்றது.

சிறந்த விருந்தோம்பல் உள்ள ஒரு சமூகமாக ஒழுக்கமான கட்டமைப்புடன் காணப்படுவதோடு பண்டிகைக் காலங்களில் தத்தமது உறவுகள் வீடுகளுக்குச் சென்று விருந்தோம்பல்களில் ஈடுபட்டு பலகாரங்கள், கைவிசேடங்கள் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தும் தமது ஒற்றுமையை வளர்த்துக் கொள்கின்றனர். தீபாவளி, தைப்பொங்கல், வருடப்பிறப்பு போன்ற விசேட தினங்களின் முதல் நாள் அயலவர், உறவினர்கள் இறந்திருந்தால் அவர்கள் வீடுகளுக்குச் சென்று இழவு கொடுக்கும் முறையும் இறந்த ஆத்மாக் களுக்கு பிதிர்க்கடன் நிறைவு செய்தல், இறந்தவர் வீட்டில் உறவினர்கள் கைநீட்டி இரங்கல் தெரிவிக்கும் முறை, பிண்டங்களின் எண்ணிக்கை போன்றவற்றோடு இடுகாட்டில் இருந்து வந்ததுடன் வீட்டிலுள் நுழைய விடாது உலக்கையை. அவர்களிற்கு குறுக்கே நிலத்தில் போட்டு சில சடங்குகள் செய்த பின்னே அவர்களை வீட்டிலுள் போக அனுமதிப்பர். பிள்ளைப் பிரசவம், மங்கைப் பருவம் அடையும் சடங்குகளும் மற்றைய இடங்களை விட மாறுபட்டவை. பெண் பார்க்க ஆண் வீட்டார் பெண் வீட்டுக்குச் சென்றதும் அப்பெண் தமது குடும்பத்தாருடன் வெற்றிலைத் தட்டம் கொடுத்து வந்தவர்களை வரவேற்று அமரச் செய்து தனக்கு வரப்போகும் கணவர் உட்பட வந்தவர்களுக்குத் தேநீர் அருந்தக் கொடுத்தும் உபசரிக்கின்றனர். இத்தோடு ஆராத்தி எடுக்கும் முறை அவை சுற்றும் எண்ணிக்கை, கும்பங் களில் வைக்கும் மா இலைகளின் எண்ணிக்கை, தோரணங்கள் வெட்டும் முறை போன்றவை மற்றைய இடங்களைவிட மாறுபட்டவை. வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில் விந்தை தரு மனித நாகரீக வளர்ச்சியில் மேலைத்தேய கலாசாரம் மாற்றமடைந்து வந்தாலும் இவ்வூர் மக்களின் நடை உடை பாவனை சற்றேனும் வழி புரளாது தமக்கே உரிய பராம்பரிய கலாசாரத் தோடு தீவக பெருமைகளை கட்டிக் காப் பதனையும் அவதானிக்கலாம்.

இவர்களின் பெரும்பாலானவர்களின் தொழில்களாகக் கடற்றொழிலும் விவசாயமும் காணப்படுகின்றது. கடற்றொழில் உபகரணங் களாக இழுவைப் படகுகள் தொடக்கம் பாய் மரம் வரையும் கொண்டு படுப்பு வலை, தூண்டில், களம் கண்ணி, அட்டை, சங்கு குழித்தல் இத்தோடு சூழ் கொளுத்தி மீன் பிடி. பறிக்கூடு போன்ற முறையும் தீவக தொழில் முறைகளில் முக்கியமானவையாகும்.

விவசாயிகள் எருது கொண்டு வயல் உழுது நெல், திணை, சாமி, குரக்கன் முதலியன வற்றையும் வெங்காயம், மிளகாய், புகையிலை போன்றவற்றையும் பயிரிடுகின்ற தோடு துலா மூலம் நீர் இறைக்கும் முறையும் இன்றும் தீவக பெருமைக்குரிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது பிரதான உணவாக நெல் அரிசி சோறு காணப்பட்டாலும் மாதம் ஒரு முறையாவது இவர்களது உணவுகளில் ஒடியல் பிட்டு, கஞ்சி, ஒடியல் கூழ் முதலிய வற்றை காணலாம். மிகவும் சுறுசுறுப்பாக இயங்கும் இவ்வூர் மக்கள் சிறு கைத்தொழில் மூலமாகவும் தமது சீவனோபாயத்தை ஓட்டுகின்றனர். அந்த வகையில் பனை ஒலை மூலம் வீட்டுக்குத் தேவையான பெட்டி, பாய் இழைத்தல், நீத்துப் பெட்டி, திருகாணி, சுளகு இளைத்தல், துணிக்கு நிறமூட்டுதல், தென்னந்தும்பு மட்டை முதலிய வற்றை நீரில் ஊறவைத்து கயிறு திரித்தல், தும்புத்தடி விளக்குமாறு செய்து குடிசைக் கைத்தொழிலை மேம்படுத்துகின்றனர்.

ஏற்றுமதி பொருட்களாக புளுக் கொடியல், புகையிலை, வெங்காயம், மிளகாய், பனாட்டு, பனங்குட்டான், கருவாடு போன்றவை தீவக ஏற்றுமதியில் அதிக வருவாயை ஈட்டித் தரு கின்றன. தல வரலாறுகளும் மேலும் விகாரைகள், இஸ்லாமிய தலங்கள், கத்தோலிக்க திருச்சபைகள் ஆலயங்கள் இத் தீவகத்திற்கு பெருமை சேர்ப்பதோடு தீவகம் நாட்டின் பொருளாதார ரீதீயாகவும் அளப் பெரும் பங்காற்றுகின்றன. தீவகம் சுற்றுலாத் துறை வளர்ச்சியிலும் அளப்பெரும் பங்காற்றி நாட்டின் பொருளாதார ரீதியாக முக்கிய இடம் வகிக்கின்றது. பிரசித்தி பெற்ற வணக்கஸ் தலங்கள் அல்லைப்பிட்டி, மண்கும்பான் சாட்டி வெள்ளை கடற்கரை, புங்குடுதீவு கண்ணகை அம்மன் கடற்கரை பல சிறு தீவுகள் கடனீரேரிகள் போன்ற இடங்கள் சுற்றுலாத் துறையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்று கின்றன.

வறண்ட பௌதீக சூழலினால் இங்கு குடிநீர் பிரச்சினை என்பது பாரிய பிரச்சினை யாக துளிர்விட்ட பொழுதிலும் புலம் பெயர் உறவுகளினதும் அரசாங்கத்தின் ஆதரவுடனும் சாட்டி அல்லைப்பிட்டி நீர்த்தேக்கங்கள் மூலம் பௌசர்கள் ஊடாக அயல் கிராமத்திற்கு நீர் வழங்கி அக்கிராம மக்களின் வளர்ச்சியின் பாதைக்கு அடித்தளமைக்கின்ற அளப்பரிய பங்கு போற்றுத்குரியதாகும்.

யுத்தம் எம் தேசத்தை கோரப்பிடியில் சிக்க வைத்திருந்த காரணத்தால் இங்குள்ள மக்கள் முன்னைய கால அளவுடன் ஒப்பிடுகையில் குறைவாக இருந்தாலும் தற்போதைய சமாதான சூழலில் படிப்படியாக வந்து மீள் குடியேறுவதும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

பொது சுகாதார வசதிகள் வைத்திய சாலைகள் என்பன ஒவ்வொரு கிராம மட்டத் திலும் எழுச்சி காண்பதினால் அங்குள்ள மக்கள் தமது தேவைகளை அங்கே நிறைவேற்றிக் கொள்கின்றனர். ஒரு நகரத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அதனை அண்டிய கிராமத்தி லிருந்தே தோற்றுவிக்கப்படுகின்றன. அந்த வகையில் இலங்கைத் தீவில் மூளை வளமிக்க பிரதேசமாக கணிக்கப்படுகின்ற யாழப் பாணத்தின் எழுச்சிக்கும் வளர்சிக்கும் எழில் ஊட்டுவன இப் பசுஞ்சோலை படர்ந்த தீவக மாகும். இதன் கல்வி கலை கலாசார சமுதாய பண்பாட்டு விழுமியங்கள் தனித்துவமானது. இவையே இத்தீவகத்தின் சிறப்பம்சங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலணை பிரதேச சபையின் சேவை பற்றிய நோக்கில்......

திரு.மு.இராஜகோபால்
செயலாளர்
பிரதேச சபை – வேலணை

ஒருநாட்டின் வளர்ச்சியானது கிராமிய பொருளாதார துறைகளான விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில் போன்றவற்றின் அபிவிருத்தியிலேயே தங்கியுள்ளது. நமது நாடு கடந்த காலங்களில் பல்வேறு சீர்திருத்த சட்டங்கள் மூலம் கிராம அபிவிருத்தி ஊடான தேசிய அபிவிருத்தியை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதிலும் அவை குறித்த இலக்கை அடையாமையால் எதிர்பார்த்த வெற்றியினைத் தந்திருக்கவில்லை.

இவ்வகையில் 1987ம் ஆண்டு 15ம் இலக்க உள்ளூராட்சி கட்டளை சட்டத்தினால் கிராம சபை, பட்டின சபை என்ற நிர்வாக எல்லைகள் மாற்றப்பட்டு பிரதேசசபை, நகர சபை, மாநகரசபையாக நிர்வாக எல்லைகள் பிரிக்கப்பட்டன. திட்டமிடல் அதிகாரமுறை மூலம் பிரதேச சபையானது பிரதேச செயலகத்துடனும் ஏனைய திணைக்களங்களுடனும் இணைந்து செயலாற்றுவதற்கு வகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்ற விதிகளின் பிரகாரம் சனத்தொகை விகிதாசார அடிப்படையில் சபை ஒன்று தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டு, நான்கு வருடங்கள் நிர்வாக ஆட்சிக்காலத்தை கொண்டு அமைந்ததாகவும், அரச இயந்திரத்தின் ஆரம்ப இயங்கு தளமாகவும், கிராம அபிவிருத்தி மேம்பாட்டில் இருந்து தேசிய அபிவிருத்தியை பலப்படுத்தும் அமைப்பாக இயங்கி வருகின்றது. நன்கொடை வருமானங்கள், வரியிறுப்புகள் மூலம் கிடைக்கும் நிதியினால் வரவுசெலவுத் திட்ட முகாமையின் மூலம் பிரதேசத்தின் அபிவிருத்தியையும் உட்கட்டுமானத்தையும் தன்னிறைவையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இயங்குவது குறிப்பிடத்தக்கது.

வேலணையில் தலைமை அலுவலகத்தினையும், நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகியவற்றை உப அலுவலகங்களாகவும் கொண்ட நிர்வாக எல்லையாக அமைந்துள்ளது. எமது பிரதேச சபையானது 98.4 சதுர கிலோமீற்றர் பரப்பளவினையும்,அண்ணளவாக 20,000 சனத்தொகையினையும் உள்ளடக்கியுள்ளது. உள்ளூராட்சிமன்ற தேர்தல் மூலம் 11 உறுப்பினர்களையும், 53 நிரந்தர உத்தியோகத்தர்களையும், 07 தற்காலிக உத்தியோகத்தர்களையும் கொண்டு பிரதேச சபை செயற்பட்டு வருகின்றது. கடந்த கால அனர்த்தங்களின் விளைவாக பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்தும்,புலம் பெயர்ந்தும் வாழ்ந்து வருகின்றனர். தற்போதைய அமைதிச் சூழ்நிலையில் மீண்டும் மக்கள் மீள் குடியேற்றப்பட்டு வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகின்றது. இவ்வகையில் "மக்கள் பணியே மகேசன் பணி" என்பதற்கு இணங்க சேவை அடிப்படையில் பிரதேச சபையினால் சேவைகள் முன்னேடுக்கப்பட்டுவருகின்றன.

ஐந்து உப அலுவலகங்களிலும் நூலகங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன்புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு, மாணவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நூலக சேவையானது சிறப்பாக இடம்பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது. இதற்கேற்ப ஒவ்வொரு உப அலுவலக ரீதியாக நூலக அங்கத்தவர், புத்தகங் களின் எண்ணிக்கை வருமாறு:

| உப அலுவலகம் | நூலக அங்கத்த. எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மண்டைதீவு | 21 | 608 |
| அல்லைப்பிட்டி | 20 | 1068 |
| வேலணை | 117 | 4040 |
| புங்குடுதீவு | 28 | 2200 |
| நயினாதீவு | 120 | 4260 |

வாசகர் வட்டத்தை மையமாக கொண்டு அங்கத்தவர்களிடையே கவிதை, கட்டுரை, சிறுகதை, கையேட்டுச் சஞ்சிகை வெளியிடல் ஆகியவற்றுக்கான போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கி கௌரவிக் கப்படுவதுடன் வாசிப்பு திறனை பிரதேச மட்டத்தில் அதிகரிப்பதற்கான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மேலும் பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம் படுத்தும் நோக்கில் இறுவட்டுக்கள், கல்வி சார்ந்த பயிற்சிப் புத்தகங்கள் இரவலாக வழங்கப்படுகின்றன.

எமது பிரதேசத்தில் 51 சனசமூக நிலையங்கள் உள்ளன. சனசமூக நிலையங் களை நெறிப்படுத்தி இவற்றின் ஊடாகமக்கள் சேவையை முன்னெடுக்கும் நோக்கில் சனசமூக நிலையங்களைப் புனரமைத்தல், சனசமூக நிலையங்களை அமைத்தல், விளையாட்டு உபகரணங்களை வழங்கல், தளபாட வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தல், சிறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை சனசமூக நிலையங்கள் ஊடாக மேற்கொண்டு நிலையத்தினை வலுப் படுத்தல் போன்றநடவடிக்கைகள் எடுக்கப்படு கின்றன.

புங்குடுதீவு, நயினாதீவு பகுதிகளில் ஆயுள்வேத வைத்தியசாலை ஊடாக மருத்துவ சேவையை விஸ்தாரிப்பதற்காக இலவச நடமாடும் மருத்துவ சேவை நடாத்தல், நோயாளர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கல், மருத்துவ ஆலோசனையை வழங்கல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

பொதுப் பாதைகள் புனரமைத்தல், அவற்றை பராமரித்தல் என்பன பிரதேச சபையின் கடமைகளில் ஒன்றாக உள்ளது. இந்த வகையில் எமது சபையினால் 49.54Km நீளமான தார் வீதிகளும், 147.22 Km நீளமான கிரவல் வீதிகளும் பராமரிக்கப்படுகின்றன. மேலும் 18சோலர் தெருவிளக்குகள் கடந்த காலங்களில் சபையினால் பொருத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

பொது இடங்களில் மலசலகூட வசதி களை ஏற்படுத்திக் கொடுத்தல், தீவுப்பகுதியில் காணப்படும் குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு பௌசர் மூலமான குடிநீர் விநியோக திட்டத்தையும், புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில் பகுதியில் குழாய் மூலமான நீர்விநியோகத்தையும் நடைமுறைப் படுத்தி வருகின்றது. இது தவிர பொது மக்கள் பாவனையில் உள்ள 167 பொதுகிணறு களும் சபையினால் பராமரிக்கப்படுகின்றது.

9590(P)

மேலும் இப்பிரதேசத்தில் உள்ள 09 பொதுச்சந்தைகள் சபையினால் புனரமைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. கழிவகற்றல் நடைமுறையில் சூழலை பாதுகாத்தல் பொருட்டு நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை ஆகிய பகுதி களில் குப்பைகள் கொட்டுவதற்கான எல்லைச் சுவர்கள் அமைக்கப்பட்டு கழிவுகள் சிறந்த முறையில் அகற்றப்படுவதற்கான வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. கட்டிட அமைப்பு தொடர்பான சேவைகளில் கட்டிட விண்ணப்பம் வழங்கல், கட்டளை சட்டத்தின் கீழான கண் காணிப்பு செய்தல், அனுமதி வழங்கல் நடை முறைகளையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுச் சிறப்பு மிக்க புனித பிரதேச மாக இருப்பதனாலும் வரலாற்று சிறப்பு மிக்க தலங்களான நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில், நயினாதீவு ரஜமகாவிகாரை, சாட்டி சித்தாந்திரை மாதாகோவில், சாட்டி பள்ளி வாசல் போன்றவழிபாட்டு இடங்கள் காணப்படு வதால் அதிகளவில் வருகை தரும் யாத்திரிகர் களுக்கும், சுற்றுலா மையமான வேலணை சாட்டிவெள்ளை மண் கடற்கரை பகுதி என்பவற்றை உள்ளடக்கிய பகுதியில் வரும் சுற்றுலா பயணிகளுக்கும் எமது பிரதேச சபையால் பல்வேறு நலனோன்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மேலும் பொதுமயானங்கள் இடு காடுகள் என்பவற்றை நிறுவன மயப்படுத்தி அவற்றை மக்கள் பயன்பாட்டுக்கு விடல் போன்ற சேவைகளை வழங்கி வருகின்றது. இப்பிரதேசம் மீள் குடியேற்றம் மற்றும் அழிக்கப்பட்ட கடல் வளம், நீர்வளம் அற்ற பிரதேசமாக காணப்படு வதாலும் அனர்த்த காலங்களின் போது ஆவணங்கள் அழிக்கப்பட்டமையால் சபையின் பிரதான வருமான மூலமான ஆதனவரி வரியிறுப்பினை மேற்கொள்ள முடியாது இருப்பதன் மூலம் போதிய அளவு வரு மானத்தை ஈட்டிக் கொள்வதில் பெரும் இடர்பாடுகள் காணப்படுகின்றன.

எனினும் குறிப்பிட்ட சேவைகள் சபைநிதி, குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபி விருத்தி நன்கொடை (PSDG) நிதி, பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிதி, புறநெகும (PURANEGUMA) ஆயுள்வேத நன்கொடைநிதி, மலசலகூட நன்கொடைநிதி, சனசமுக நிலைய நன்கொடை சபை நிதி, அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதி என்ப வற்றின் மூலம் சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் எமது சபையினால் நிறைவேற்றப்பட்ட வேலைத் திட்டங்கள்

01) சபையினால் நிறைவேற்றப்பட்ட வேலைத் திட்டங்கள்

| தொ இல. | வேலை விபரங்கள் | அமைவிடம் | ஒதுக்கிடு (மில்லியனில்) | செலவு | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | புங்குடுதீவு நுணுக்கல் வீதி புனரமைப்பு | J/27 | 0.50 | 468,841.52 | 4 | | | |
| 02 | வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலக வாகனத் தரிப்பிடம் அமைத்தல். | J/13 | 0.80 | 735,709.52 | | | | |
| 03 | புங்குடுதீவு உப அவுலகத்திற்குரிய வாகனத் தரிப்பிடம் அமைத்தல். | J/28 | 0.17 | 144,459.80 | | | | |
| 04 | குறிகட்டுவானில் குப்பைகள் கொட்டுவதற்கான எல்லைச்சுவர் அமைத்தல் | J/31 | 0.38 | 303,810.45 | | | | |
| 05 | நயினாதீவு உப அலுவலகத்திற்குரிய வாகனத் தரிப்பிடம் அமைத்தல். | J/35 | 0.70 | 684,295.86 | | 5 | | |
| 06 | அல்லைப்பிட்டி கடற்கரை வீதி புனரமைப்பு | J/10 | 1.20 | 585,793.60 | | | | |
| 07 | நயினாதீவு உப அலுவலகத்திற்குரிய சுற்றுமதில் புனரமைப்பு | J/35 | 0.12 | 115,000.00 | | | | |
| 08 | புங்குடுதீவில் மலசலகூடம் அமைத்தல் | J/29 | 0.06 | 81,000.00 | | | | |
| 09 | நுணுக்கல் வீதி புனரமைப்பு | J/27 | 0.50 | 468,841.52 | | | | |
| 10 | மண்டைதீவு உப அலுவலகத்திற்கு புறாத்தடுப்பு வலை பொருத்தல். | J/08 | 0.05 | 43,407.00 | | | 2 | |
| 11 | துறையூர் பொது கிணறு புனரமைப்பு | J/14 | 0.13 | 120,939.27 | | | | |
| 12 | புங்குடுதீவு உப அலுவலகத்திற்குரிய தற்காலிக வாகனத் தரிப்பிடம் புனரமைப்பு | J/26 | 0.08 | 56,660.80 | | | | 2 |
| 13 | புங்குடுதீவு கொல்கள புனரமைப்பு | J/16 | 0.21 | 158,681.60 | | | | |
| | மொத்தம் | | 4.89 | 3,967,440.94 | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02)குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) மூலம் நிறைவேற்றப்பட்ட வேலைத்திட்டங்கள்

| தொ இல. | வேலை விபரங்கள் | அமைவிடம் | ஒதுக்கிடு (மில்லியனில்) | செலவு | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | சாட்டி கடற்கரையில் கொட்டகைகளும், ஆடைமாற்று அறைகளும் அமைத்தல் | J/13 | 1.40 | 1,396,035.79 | | | | |
| 02 | குறிகட்டுவானில் மலசலகூடங்கள் அமைத்தல் | J/29 | 1.11 | 984,847.55 | | | | |
| 03 | குறிகட்டுவானில் இளைப்பாறு மண்டபம் அமைத்தல் – 1 | J/29 | 1.38 | 1,335,690.90 | 5 | | | |
| 04 | அம்பலவாணர் வீதி புனரமைப்பு பகுதி – 11 | J/25 | 1.50 | 1,483,209.12 | | | | |
| 05 | குப்பை தள்ளுவண்டி திருத்தம் | J/13 | 0.05 | 29,387.00 | | | | |
| 06 | நயினாதீவில் குப்பைகள் கொட்டுவதற்கான எல்லைச்சுவர் அமைத்தல் | J/35 | 0.50 | 493,376.02 | | | | |
| 07 | கிணறுகளும், பொது மலசலகூடங்களும் அமைத்தல் (இளைப்பாறு மண்டபம்) | J/10,11,23 | 4.50 | Implement ting Agent CLG Office | | 3 | | |
| 08 | சாட்டிக் கடற்கரையில் உடைமாற்று அறைகள் அமைத்தல் | J/14 | 10.00 | Implement ting Agent CLG Office | | | | |
| 09 | அம்பிகைநகர் கண்ணபுரம் வீதி புனரமைப்பு (பாண வீதி) | J/17 | 9.00 | Implement ting Agent ACLG Office | | | | |
| 10 | வேலணை பிரதேசத்தில் சூரிய ஒளியிலான வீதி விளக்கு பொருத்தல் (10 இல) | J/07 | 1.00 | 910,00.00 | | | | |
| 11 | அராலி சந்திக்கு அருகில் குப்பைகள் கொட்டுவதற்கான எல்லைச்சுவர் அமைத்தல் | J/10 | 2.00 | 1,819,999.86 | | | 5 | |
| 12 | 02 மூடிய குப்பைகள் கொட்டுவதற்கான ரக்ரர் பெட்டி கொள்வனவு | J/12 | 1.00 | 980,00.00 | | | | |
| 13 | வேலணை பிரதேசத்தில் சூரிய ஒளியிலான வீதி விளக்கு பொருத்தல் (08 இல) | J/07 | 1.00 | 1,000,000.00 | | | | |
| 14 | சாட்டியில் எரிகொட்டகையும், மடமும் அமைத்தல். | J/36 | 1.26 | 1,248,749.60 | | | | |
| 15 | துறையூரில் எரிகொட்டகையும், மடமும் அமைத்தல். | J/11 | 0.71 | 698,185.60 | | | | |
| 16 | அம்பிகைநகர் எரிகொட்டகையும், மடமும் அமைத்தல். | J/11 | 1.28 | 1,263,550.40 | | | | 6 |
| 17 | அண்டைதீவு எரிகொட்டகையும், மடமும் அமைத்தல். | J/33 | 1.38 | 1,360,364.32 | | | | |
| 18 | புங்குடுதீவு எரிகொட்டகையும், மடமும் அமைத்தல். | J/13 | 1.51 | 1,481,669.84 | | | | |
| 19 | புங்குடுதீவு விரம்புளியடி வீதி புனரமைப்பு | J/19 | 6.00 | – | | | | |
| | மொத்தம் | | 46.57 | 16,485,066.00 | | | | |

03) பிரமான அடிப்படையிலான நன்கொடை (CBG) மூலம் நிறைவேற்றப்பட்ட வேலைத்திட்டங்கள்

| தொ இல. | வேலை விபரங்கள் | அமைவிடம் | ஒதுக்கிடு (மில்லியனில்) | செலவு | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | அல்லைப்பிட்டி உப அலுவலக கட்டிட புனரமைப்பு | J/08 | 0.80 | 793,781.52 | | | | |
| 02 | சிவலைப்பிட்டி சனசமூக நிலைய புனரமைப்பு | J/27 | 0.50 | 440,884.14 | | | | |
| 03 | சாட்டி சிற்றுச்சாலை அமைத்தல் | J/13 | 0.75 | 683,399.99 | 5 | | | |
| 04 | குறிகட்டுவானில் இளைப்பாறு மண்டபம் அமைத்தல் – 11 | J/29 | 1.695 | 1,627,000.00 | | | | |
| 05 | சாட்டி அந்தியட்டி மடம் அமைத்தல் | J/13 | 1.60 | 1,416,752.46 | | | | |
| | மொத்தம் | | 5.35 | 4,961,818.11 | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04)மூலதன அடிப்படையிலான நன்கொடை

| தொ இல. | வேலை விபரங்கள் | அமைவிடம் | ஒதுக்கீடு (மில்லியனில்) | செலவு | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | அண்ணா சனசமூக நிலைய திருத்தம் | சாட்டி | 0.03 | 28,466.00 | 18 | | | |
| 02 | மடத்துவெளி சனசமூக நிலைய திருத்தம் | மடத்துவெளி | 0.04 | 39,985.00 | | | | |
| 03 | முனையப்புலம் இந்து மயானத் திருத்தம் | புங்குடுதீவு | 0.05 | 49,420.00 | | | | |
| 04 | அல்லைப்பிட்டி பொதுச்சந்தை திருத்தம் | அல்லைப்பிட்டி | 0.05 | 50,000.00 | | | | |
| 05 | கண்ணாவோடை வீதி திருத்தம் | வேலணை | 0.1 | 98,548.00 | | | | |
| 06 | ஸ்ரீ முருகன் முன்பள்ளி திருத்தம் | வேலணை | 0.03 | 30,000.00 | | | | |
| 07 | திருவள்ளுவர் சனசமூக நிலைய திருத்தம் | வேலணை | 0.04 | 9,731.00 | | | | |
| 08 | பாரதி சனசமூக நிலைய மின் இணைப்பு வேலை | வேலணை | 0.04 | 39,290.00 | | | | |
| 09 | தேவி கோட்டம் சனசமூக நிலைய திருத்தம் | வேலணை | 0.05 | 49,303.50 | | | | |
| 10 | வீரம்புளியடி மதகு திருத்தம் | புங்குடுதீவு | 0.05 | 49,999.64 | | | | |
| 11 | நேதாஜி சனசமூக நிலைய முன்பள்ளி | வேலணை | 0.05 | 49,603.50 | | | | |
| 12 | நயினாதீவு அந்தியேட்டி மட திருத்தம் | நயினாதீவு | 0.05 | 49,865.20 | | | | |
| 13 | இறுப்பிட்டி சனசமூக நிலைய விளையாட்டு உபகரணச் செலவு | புங்குடுதீவு | 0.03 | 29,875.00 | | | | |
| 14 | உதயசூரியன் சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவு | வேலணை | 0.05 | 50,000.00 | | | | |
| 15 | அறிவொளி சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவு | வேலணை | 0.04 | 39,000.00 | | | | |
| 16 | தொல்காப்பியர் சனசமூக நிலைய தளபாட கொள்வனவு | வேலணை | 0.05 | 49,500.00 | | | | |
| 17 | பிடாரி அம்மன் சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவு | வேலணை | 0.04 | 39,000.00 | | | | |
| 18 | ஞானவைரவர் சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவு | வேலணை | 0.04 | 39,000.00 | | | | |
| 19 | சித்தி விநாயகர் சனசமூக நிலைய புனரமைப்பு | வேலணை | 0.05 | 44,918.10 | | 04 | | |
| 20 | சென் பிலிப்ஸ் சனசமூக நிலைய திருத்தம் | அல்லைப்பிட்டி | 0.06 | | | | | |
| 21 | அம்பிகைநகர் சனசமூக நிலைய திருத்தம் | வேலணை | 0.04 | | | | | |
| 22 | செட்டிப்புலம் சனசமூக நிலைய திருத்தம் | வேலணை | 0.04 | 49,550.00 | | | | |
| 23 | நாவலர் சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவு | நயினாதீவு | 0.02 | 24,250.00 | | | 08 | |
| 24 | சிவலைப்பிட்டி சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவு | வேலணை | 0.02 | 24,250.00 | | | | |
| 25 | செட்டிப்புலம் சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவு | வேலணை | 0.02 | 24,250.00 | | | | |
| 26 | மதிஒளி சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவு | மண்டைதீவு | 0.02 | 24,250.00 | | | | |
| 27 | திருவள்ளுவர் சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவு | வேலணை | 0.05 | 48,500.00 | | | | |
| 28 | திருவள்ளுவர் சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவு | வேலணை | 0.05 | 48,500.00 | | | | |
| 29 | நசரத் சனசமூக நிலைய தீந்தை பூசுதல் வேலை | புங்குடுதீவு | 0.03 | 29,100.00 | | | | |
| 30 | காந்தி சனசமூக நிலைய திருத்தம் | புங்குடுதீவு | 0.10 | 96,519.00 | | | | |
| | மொத்தம் | | 1.33 | 369,169.00 | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


05) புறநெகும நிகழ்ச்சித்திட்டம்

| தொ இல. | வேலை விபரங்கள் | அமைவிடம் | ஒதுக்கிடு (மில்லியனில்) | செலவு | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இராசையா வீதி புனரமைப்பு | வேலணை | 10.21 | 6,123,413.58 | | | | |
| 02 | சங்கத்தார்கேணி வீதி புனரமைப்பு | புங்குடுதீவு | 10.65 | 5,242,221.10 | | 03 | | |
| 03 | பெருங்குளம் வீதி புனரமைப்பு | நயினாதீவு | 14.03 | 4,041,702.79 | | | | |
| 04 | சுடலைவீதி புனரமைப்பு | மண்டைதீவு | 15.80 | 12,600,788.29 | | | 01 | |
| 05 | துறையூர் மீன் சந்தையும் அனுகு பாதையும் அமைத்தல் | வேலணை | 19.80 | | | | | 02 |
| 06 | முற்றவெளி மீன் சந்தை அமைத்தல் | புங்குடுதீவு | 18.50 | | | | | |

தற்போது இப்பிரதேச சனத்தொகை விகிதம் சற்று அதிகரித்துக் கொண்டு வருவது அவதானிக்க முடிகின்றது. யுத்தம் முடிவுறுத்தப்பட்டமையும், இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றப்பட்டமையும் இதற்கான காரணங்களாக குறிப்பிடமுடியும். இவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படுகின்றன. இவர்களின் அடிப்படைவசதிகள் பெருக்கப்பட வேண்டும், அழிக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும், கிராமிய உட்கட்டுமான வசதிகள் மேம்படுத்தப்பட்டு கைத்தொழில் மற்றும் சுயதொழில்துறைகள் ஊக்குவிக்கப்பட்டு மக்களின் வாழ்வாதாரம் உயர எமது சபையுடன் ஏனைய திணைக்களங்கள் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பதே எமது நோக்கமும் எதிர்பார்ப்பும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள்

திரு.ந.செல்வச்சந்திரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் (பதில்)
பிரதேச செயலகம் – வேலணை

எமது பிரதேசசெயலாளர் பிரிவில் 24 கிராம அபிவிருத்திச் சங்கங்களும், 18 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும், ஒரு பிரதேச சமாசமும் பதிவு செய்யப்பட்டு மொத்தம் 43 சங்கங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சங்கங்களில் அங்கத்தவராக உள்ளவர் களில் பிரதேசத்திலே நிரந்தரமாக வசிக்கின்ற வர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற் காகவும், தொழில் விருத்தி, தொழில் வாய்ப் பினை ஏற்படுத்துவதற்காகவும் கிராம அபி விருத்தித் திணைக்களம், நியாப்-1, நியாப் 11, சேவாலங்கா, கியூடெக், UNDP போன்ற நிறுவனங்கள் மூலம் 13 சங்கங்களுக்கு சுழற்சி முறைக் கடன் திட்டத்திற்காக நிதி வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் 713 பயனாளிகள் பயன் பெற்று வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக பிரதேச மகளிர்களின் சுய தொழில் பயிற்சிகள் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதிப்பங்களிப்புடன் வருடாந்தம் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் நடமாடும் பயிற்சி நிலையமாக நடைபெற்று வருகின்றது. தற்போது வேலணை கிழக்கிலே 2014 ஆண்டிற்கான மகளிர் அபி விருத்தி நிலையப் பயிற்சிகள் நடைபெற்று வரு கின்றன. இதில் 21 பயனாளிகள் பயிற்சியைப் பெற்று வருகின்றனர். இந்தப் பயிற்சிகள் முதல் எட்டு மாத காலத்திற்கு ஆடை வடிவமைத்தலும், கைவேலைக்குமான பயிற்சியாகவும், பின்னர் அழகுக்கலையும், மனைப்பொருளியல் என்ற வகையில் மூன்று மாத கால பயிற்சியாகவும் வழங்கப்படவிருகின்றது.

வருடாந்தம் பயிற்சிகளை நிறை வுறுத்தும் மாணவர்களது கண்காட்சி நிகழ் வானது பிரதேச மட்டத்திலே காட்சிப்படுத்தப் பட்டு, பின்னர் திணைக்களத்தினால் மேற் கொள்ளப்படும் மாவட்ட, மாகாணக் கண்காட்சி களிலும் மாணவர்களின் பொருட்கள் காட்சிப் படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. சிறந்த பொருட் தெரிவுக்காக எமது பிரதேச செயலர் பிரிவு சார்பாக பணப்பரிசில்களும், சான்றிதழ் களும் கிடைக்கப்பெற்று எமது பிரதேசத்திற்கு பெருமை சேர்த்து வருவதையும் இங்கு குறிப்பிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

மாறிவரும் உலக முன்னேற்றத்திற் கான தகவல் தொடர்பாடல் (நெனசல) மற்றும் கணினி பயிற்சிகள் அல்லைப்பிட்டி பிரதேசத் திலே நடைபெறுகிறது. இதனை அல்லைப்பிட்டி மா.கி.அ.சங்கத்தினர் மேற்பார்வை செய்து வருகின்றனர். பிரதேச மக்களும், மாணவர் களும் இதன் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

கிராமங்களிலே உள்ள பொது மண்டபங்களை மக்கள் சிறப்பாக பயன்படுத்தி வருகின்றனர். இந்த பொது மண்டபங்களில் பொதுக்கூட்டங்கள், பொதுநிகழ்வுகள், சுகா தாரக் கருத்தரங்குகள், முன்பள்ளி, மாதாந்த நிர்வாக சபைக் கூட்டங்கள், மாதாந்த தாய் சேய் நிலையம் என்பன இடம்பெற்று வருகின்றன. இச் செயற்பாடுகள் சரவணை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், நயினாதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், வேலணை வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றில் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய வரட்சிக் காலத்தில் மக்களுக்கு வேண்டிய குடிநீரை சரவணை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் அப்பிரதேச மக்களுக்கு சமூக சேவைத்திணைக்களத்தின் அனுசரனையோடு நீரை வழங்கி வருகிறது. தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை நயினாதீவு மத்தி கிராம அபிவிருத்திச் சங்க சிபார்சின் மூலம் பிரதிநிதி ஒருவரை நியமித்து பிரதேசத்திற்கான நீர் விநியோகத்தை வழங்கி மேற்பார்வை செய்து வருகிறது.

இன்னும் கூறுகையில் கண்ணபுரம் கிராம அபிவிருத்தி அமைப்பும் மக்களுக்கு சுழற்சி முறையில் கடனை வழங்கி மேற்பார்வை செய்து வருகிறது. அத்துடன் சங்கங்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காக சங்கங்கள் கதிரைகளின் வாடகை மூலம் வருமானத்தைப் பெற்று சங்கத்தேவைகளை பூர்த்தி செய்கின்றன. இதில் மண்டைதீவு தெற்கு மா.கி.அ.சங்கம், மண்டைதீவு கிழக்கு மா.கி.அ.சங்கம், மண்கும்பான் மா.கி.அ.சங்கம். ஆகியவை ஈடுபட்டு வருகின்றன.

பொதுவாக எமது பிரதேச செயலர் பிரிவில் உள்ள சங்கங்கள் ஒற்றுமையுடனும், ஆர்வத்துடனும், அர்பணிப்புடனும் மக்களுக்கு சேவையை வழங்க முன்வந்தால் இதைவிட தங்களது பிரதேசத்தை மேலும் அபிவிருத்தியடையச் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலணைப் பிரதேச செயலகப் பிரிவின் காணிப் பயன்பாடு பற்றிய ஓர் ஆய்வு


திரு.வே.கமலேந்திரன்
காணிப் பயன்பாட்டு உதவியாளர்
பிரதேச செயலகம் – வேலணை


***அறிமுகம்***

வேலணைப் பிரதேச செயலகமானது யாழ்குடாவின் தென் மேற்கே யாழ் நகரில் இருந்து சுமார் 15கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இதன் மொத்தப் பரப்பளவு 90.014537 ஆகும். அதாவது யாழ்குடாவின் மொத்த பரப்பளவில் 8.78% த்தை உள்ளடக்கிய தாக உள்ளதுடன் 30 கிராம அலுவலர் பிரிவு களையும் 64க்கு மேற்பட்ட கிராமங்களையும் கொண்டு அமைந்துள்ளது.

இதன் எல்லைகளாக

வடக்கு – கடல் நீரேரி

தெற்கு – கடல்

மேற்கு – ஊர்காவற்றுறை

கிழக்கு – கடல்

பிரதேசத்தின் முக்கிய பகுதிகளாக மொத்த பரப்பளவில் 12.16% மண்டைதீவும், 6.97% அல்லைப்பிட்டியும், 7.72% மண் கும்பானும், 5.74% சரவணையும், 26.13% வேலணையும், 36.07% புங்குடுதீவும், 5.18% நயினாதீவும் கொண்டமைந்துள்ளது.

தொழில் – இங்கு வாழும் மக்கள் விவசாயம், மீன்பிடி, விலங்கு வளர்ப்பு, பனையை மையமாகக்கொண்ட கைவினைத் தொழில் ஆகியவற்றை பிரதானமான தொழில் களாகக் கொண்டுள்ளனர்.

நீர் வளம் – வேலணைப் பிரதேசத்தின் நீர் வளம் எனும் போது பொதுவாக உவர் நீராகும். எனினும் சாட்டி, மண்கும்பான், அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகள் நன்னீர் வளத்தைக் கொண்டமைந்துள்ளன.

மண்வளம் – வேலணைப் பிரதே சத்தின் மண் வளம் பொதுவாக நரை மண்ணாகும். மேலும் அல்லைப்பிட்டி, மண் கும்பான் மற்றும் தீவின் கரையோரப் பகுதி களில் மணல் மண்ணையும். வேலணை கிழக்கு 4ம் வட்டாரம், வேலணை தெற்கு 6ம் வட்டாரம், வேலணை மத்திமேற்கு 7ம் வட்டாரம், புங்குடுதீவு தெற்கு 12ம் வட்டாரம் ஆகிய குறிப்பிட்ட சில பகுதிகளில் சிறிதளவு பரப் பளவில் செம்மண்ணையும் கொண்டமைந் துள்ளது.

இயற்கைத்தாவரம் – வறழ்நில வளரி

**நிலம், பூமி, காணி பற்றிய சிறு துளிகள்.....**

நிலம் – நிலம் எமது மூதாதையரால் எமக்கு தரப்பட்டதன்று. அது எமது பிள்ளை களிடமிருந்து கடனாகப் பெறப்பட்டதாகும். நிலவள மானது பாதுகாக்கப்பட்டு எமது சந்ததி யிடம் மீள ஒப்படைக்கப்படல் வேண்டும். ஒரு நாட்டிற்கு கட்டிடங்கள்,வாகனங்கள், இயந் திரங்கள், பணம் என பல்வேறுபட்ட சொத் துக்கள் இருந்தாலும் நிலத்தின் பெறுமதிக்கு இவ் அனைத்துச் சொத்துக்களையும் ஈடு செய்ய முடியாது என்பது தான் உண்மை. ஏனெனில் மேற்சொன்ன சொத்துக்களை தேடிக் கொள்ளவும், அதன் அளவுகளை அதிகரித்துக் கொள்ளவும் முடியும். ஆனால் நிலத்தை சம் பாதிக்கவோ அளவை அதிகரிக்கவோ முடி யாது. ஒரு நாட்டிற்கு சொந்தமான அனைத்து வளங்களையும் சொத்துக்களையும் தாங்கி நிற்பதும் அவற்றை விருத்தி செய்வதற்கு உதவுவதும் நிலமே. நிலம் என்பது இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களிற்கு மட்டுமல்லாமல் எதிர்கால சந்ததியினருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரித்துடையதாகும். எனவே இயற்கையின் அருட் கொடையாகக் கிடைக்கப்பெற்ற நில வளத்தை வளம் குன்றாது பேணிப் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும்.

பூமியும் காணியும் – பூமியில் இருந்து எமது தேவைகளுக்காக ஒதுக்கிக்கொண்டு உரித்தாக்கிக் கொள்ளும் பகுதியே காணி எனப் படுகிறது. ஒரு நாட்டிற்கு பூமி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே அளவிற்கு ஒரு தனி மனிதனுக்கு காணி என்பதும் முக்கியத்துவம் பெறுகின்றது. காணி என்பது பேணிப் பாதுகாக்கப்படவேண்டிய சொத்து, வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கு உறுதுணை யாக அமையும் சொத்து. தமது காணியில் இருந்து உச்ச பயனை பெற்றுக்கொள்ள வாய்ப்பு கிடைக்குமானால், வாழ்க்கையில் வரும் சவால் களை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும்.

**காணிப்பயன்பாடு**

காணிப்பயன்பாடு – காணிப்பயன்பாடு என்பது ஓரலகுப் பரப்பளவு காணியில் இருந்து நிலைத்து நிற்கக்கூடிய உச்சப் பயன்பாட்டைப் பெறும் வகையில் முறையாகக் காணியைப் பயன்படுத்தல் ஆகும்.

காணிப்பயன்பாட்டு வகை என்பது – நில மேற்பரப்பில் மேற்கொள்ளப்படும் மனிதனது செயற்பாடுகளும் இயற்கையான மற்றும் செயற்கையான நில, நீர் போர்வைகளையும் குறித்து நிற்கிறது.

## வேலணைப் பிரதேச செயலகத்தின் காணிப்பயன்பாட்டு வகைகள்

| Main Category | Sub Category | Area Figures (Hectare) | Percentage (%) |
|---|---|---|---|
| Home Gardens | | 2945.85 | 32.6 |
| Agricultural Lands | Paddy | 1228.46 | 13.5 |
| | Field Crops | 637.86 | 7 |
| | Palmyra | 551.31 | 6.1 |
| | Coconut | 71.77 | 0.7 |
| Non Agricultural Lands | Other | 118.15 | 1.3 |
| | Other Service Centers | 7.88 | 0.1 |
| Forest Lands | Scrub Land | 252.72 | 2.8 |
| | Grass Land | 2036.81 | 22.5 |
| Wet Lands | Marsh | 588.83 | 6.5 |
| | Mangroves | 462.26 | 5.1 |
| Other Lands | Sandy Areas | 26.84 | 0.3 |
| | Beaches | 1.23 | 0.01 |
| | Rock Out Crops | 2.78 | 0.03 |
| Water Bodies | Natural Pond | 102.42 | 1.1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியிருப்பு நிலங்கள் – வேலணைப் பிரதேசத்தின் காணிப்பயன்பாட்டில் 32.6% மான நிலப்பரப்பு குடியிருப்பு நிலமாக உள்ளது. அரச அலுவலகங்கள், கடைகள், போக்குவரத்து வசதி களை அடிப்படையாகக் கொண்டு தீவின் மையப் பகுதிகளில் மக்கள் அதிகமாக குடியிருப்புக் களை அமைத்து வாழ்கின்றனர். மேலும் சில கடற்கரைக் கிராமங்களிலும் மக்கள் செறிவாக தமது குடியிருப்புக்களை அமைத்து வாழ்கின்றனர். உதாரணமாக அம்பிகைநகர், கண்ணபுரம், செட்டிபுலம் ஆகிய கிராமங்களைக் குறிப்பிடலாம். புங்குடுதீவில் பரந்து பட்டதாக குடியிருப்புக்கள் உள்ள போதும் இடப் பெயர்வு, வெளிநாட்டு வாழ்க்கை காரணமாகவும் அநேகமான வீடுகள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. நயினாதீவு சனத்தொகை செறி வாகவும் அதிக குடியிருப்புக்களைக் கொண்ட தாகவும் உள்ளது.

நெற்காணிகள் – வேலணைப் பிரதேசத்தின் காணிப்பயன்பாட்டில் 13.5%மான நிலப்பரப்பு வயல் நிலங்களாக உள்ளன. இவை தாழ்நிலங் களாக இருப்பதுடன் வருடத்தில் ஒரு முறை பெரும்போகத்தில் பயிர் செய்யப்படுகின்றது. மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை வடகிழக்கு, நயினாதீவு, புங்குடுதீவு ஆகிய பிரதேசங்களில் வயல் நிலங்கள் உள்ளதுடன் நெற்செய்கையும் குறைந்தளவில் மேற்கொள்ளப்படுகின்றது.

வேலணை, சரவணைப் பகுதிகளில் உள்ள வயல் காணிகள் சில கொட்டுமண் போட்டு உயர்த்தப்பட்டு தோட்ட நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. புங்குடுதீவின் நெற்செய்கை பிரதேசங்களில் கூடிய விகிதம் இடப்பெயர்வின் காரணமாக கைவிடப்பட்டு தற்பொழுது தரிசு நிலங்களாகக் காணப்படுகின்றன. நிலச் சொந்தக் காரர் வெளிநாடுகளில் வாழ்வத னாலும், கட்டாக் காலி மாடுகளின் தொல்லை களாலும் அதிகளவான நிலங்கள் பல வருடங்களாக செய்கை பண்ணப்படாது கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

ஏனைய பயிர்கள்:– வேலணைப் பிரதேசத்தின் காணிப்பயன்பாட்டில் 7%மான நிலப்பரபில் ஏனைய பயிர்கள் உள்ளன. மண்டைதீவு கிழக்கு, தெற்கு, மேற்கில் பெருங்குளத்தை அண்டிய பகுதி, அல்லைப்பிட்டி, மண்கும்பானில் தோட்டப்பகுதி, வேலணை வடகிழக்கு. வேலணை வடக்கு, வேலணை தெற்கு, வேலணை மத்தி கிழக்கு. வேலணை மேற்கு, பகுதிகளிலும் குறிப்பிட்டளவு தோட்ட நிலங்கள் உள்ளன. இக்காணிகளில் மரக்கறிச் செய்கையும், வெங்காயச் செய்கையும் மேற் கொள்ளப்படுகின்றது. சரவணை கிழக்கு, சரவணை மேற்கு, வேலணை மேற்கு ஆகிய பகுதிகளில் கூடிய விகிதம் ஒரு போகம் புகையிலை செய்கை பண்ணப்படுகின்றது. புகையிலைச் செய்கைக்கு இங்குள்ள மண்ணின் இயல்பும் சவர் நீரும் ஒத்திசைவாக உள்ளமை யாலும் வருமானம் ஈட்டம் அதிகளவாக இருப்பதனாலும் விவசாயிகள் புகையிலைச் செய்கைக்கு முன்னுரிமை கொடுக்கின்றார்கள். நயினாதீவுப் பிரதேசத்தில் அதிகம் வீட்டுத் தோட்டங்கள் உள்ளன.

தரவை நிலங்கள்– வேலணைப் பிரதே சத்தின் காணிப் பயன்பாட்டில் 22.5% மான நிலப் பரப்பு தரவை நிலங்களாக உள்ளன. யாழ்ப் பாணம் ஊர்காவற்றுறை வீதியின் வடக்கே உள்ள பகுதி, மண்டைதீவின் மேற்கு, கிழக்கின் சில பகுதிகள் புங்குடுதீவின் வடபகுதி, மற்றும் தென்மேற்கு பகுதி. நயினாதீவின் தென்மேற்கு கரைகள் தரவை நிலங்களாக உள்ளன. இந் நிலப்பரப்புக் களில் மாரி காலத்தில் வெள்ளம் தேங்கி நின்றாலும் அவை கோடை காலத்தில் கால் நடைகளிற்குரிய மேய்ச்சல் நிலங்களாக காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

சதுப்பு நிலம் :- வேலணைப் பிரதேசத்தின் காணிப் பயன்பாட்டில் 6.5%மான நிலப்பரப்பு சதுப்பு நிலமாக உள்ளது. மண்டைதீவு, அல்லைப் பிட்டி, பண்ணைக்கு இடைப்பட்டபகுதி, சிறுத்தீவு, குறுச்சாட்டித்தீவு, கண்ணாதீவு ஆகிய தீவுகளும் பற்றை நிறைந்த சதுப்பு நிலங்களாக உள்ளன. மேலும் வேலணை வடக்கின் வடபகுதி கரை யோரம், கேரதீவின் வட கரையோரம் ஆகி யனவும் சதுப்பு நிலங்களாக உள்ளன.

கண்டல் தாவரங்கள் – வேலணைப் பிரதேசத்தின் காணிப்பயன்பாட்டில் 5.1%மான நிலப்பரப்பு கண்டல் தாவரமாக உள்ளது. மண்டைதீவு, அல்லைப்பிட்டி பண்ணைக்கு இடைப்பட்ட முக்கோண கடற்பரப்பு கண்டல் தாவர பற்றையாக உள்ளதுடன் வட கீழ்பருவப் பெயர்ச்சிக் காலங்களில் வெளிநாட்டுப் பறவை களின் சரணாலய மாகவும் காணப்படுகின்றது.

பற்றைக்காடுகள் – வேலணைப் பிரதேசத்தின் காணிப்பயன்பாட்டில் 2.8%மான நிலப்பரப்பு பற்றைக்காடுகளாக உள்ளன. யாழ் – ஊர்கா வற்றுறை வீதியின் இரு மருங்கிலும் ஆங் காங்கே சிறு சிறு பகுதிகளிலும் புங்குடுதீவு வட மேற்கு கிராம அலுவலர் பகுதியின் மேற்கு கரை யோரமாகவும், புங்குடுதீவு தென் மேற்கின் ஒரு சிறு பகுதியிலும் பற்றைக்காடுகள் உள்ளன.

மணல் நிலம்:- வேலணைப் பிரதேசத்தின் காணிப்பயன்பாட்டில் 0.3%மான நிலப்பரப்பு மணல் பாங்கான நிலப்பரப்பாக உள்ளது. தீவின் கரையோரப்பகுதிகள், அல்லைப்பிட்டி. மண் கும்பான் ஆகிய பகுதிகள் மணல்பாங்காக காணப்படுகின்றன. மண்கும்பான், அல்லைப் பிட்டி கிராமங்கள் கடந்த காலங்களில் அதிகளவு மணல் திட்டுக்களை கொண்டிருந்தன. ஆயினும் தற் போது அதிகரித்த மணல் அகழ்வு காரணமாக அவை குறைவடைந்துள்ளன.

பனை வளமுள்ள நிலங்கள் :- வேலணைப் பிரதேசத்தின் காணிப்பயன்பாட்டில் 6.1%மான நிலப்பரப்பு பனை வளம் சார்ந்த பகுதிகளாக உள்ளன. பனைவளவுகள் ஒப்பீட்டளவில் உயர மான பகுதிகளில் அமைந்துள்ளதுடன் அல்லைப் பிட்டி. மண்கும்பான், வேலணை பிரதேச மெங்கும் செறிந்து காணப்படுகின்றது. சிறப்பாக புங்குடுதீவின் எல்லாப் பாகத்திலும் பனங்கூடல் களை அவதானிக்கலாம். நயினாதீவிலும் ஆங்காங்கே கரையோரமாக பனங்கூடல்கள் உள்ளன.

தென்னங்காணிகள் – வேலணைப் பிரதே சத்தின் காணிப்பயன்பாட்டில் 0.7% மான நிலப் பரப்பு தென்னம் வளவுகளாக உள்ளன. அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை கிழக்கு, தென்கிழக்கின் ஒருபகுதி புங்குடுதீவின் தென் கரையோரமாகவும், புங்குடுதீவு வட மேற்கின் ஒரு பகுதியிலும் நடுவத்துருத்தி கிரா மத்திலும் தென்னங்காணிகள் அதிகம் உள்ளன. மற்றும் மண்டைதீவு, கேரதீவு, நயினாதீவு அகிய பகுதிகளில் குறிப்பிட்டளவு தென்னங்காணிகள் உள்ளன.

நீர் நிலைகள் :- வேலணைப் பிரதேசத்தின் காணிப்பயன்பாட்டில் 1.1% நீர் நிலைகளாக உள்ளன. இப்பிரதேசத்தினுள் 100 மேற்பட்ட சிறிய குளங்கள் உள்ளன. மண்கும்பான், அல்லைப்பிட்டி, சாட்டி பகுதிகள் நன்னீர் ஊற்றைக் கொண்ட கிராமங்களாக உள்ளன.

### காணிப்பயன்பாட்டு பிரச்சனைகள்

1. மண் அகழ்வு – மண்டைதீவின் தென் கரை யோரம், புங்குடுதீவின் தென் கரையோரம், நயினாதீவின் தென்மேற்கு கரையோரம், மற்றும் மண்கும்பான் அல்லைப்பிட்டி கிராமங் களிலும் அதிகளவு மண் அகழ்வு இடம்பெற்று பாரியளவு குழிகளாக உள்ளன. இதனால் சம நிலம் பள்ளமாக்கப்பட்டுள்ளதுடன் கரையோர பகுதிகளில் கடல் நீர் உட்புகுந்து தேங்குவதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாக வளமான நிலங்கள் வளமிழக்கக்கூடிய அபாயம் உள்ளது.

2. மேல் மண் அகற்றப்படல் – செய்கை பண்ணப்படாத வயல் நிலங்கள் மற்றும் தரவை நிலங்களில் இருந்து வளமான மேல் மண் வெட்டி எடுத்துச் செல்லப்படுகின்றன. அதாவது வளமான மேல் மண் படை முற்றாக அகற்றப் படுகின்றன. இதனால் குறிப்பிட்ட நிலங்கள் வளமிழக்கப்பட்டு அவற்றின் இயல் தன்மை மாற்றமடைந்து குறுகிய காலத்தில் புழுதி வெளிகளாக மாற்றமடைகின்றன. இதனால் தீவகப்பிரதேச கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்கள் அழிக்கப்படுவதுடன் எதிர் காலத்தில் அவற்றின் உணவுத்தேவைக்கும் பெரும் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் அபாயம் உள்ளது.

3. பயன்படுத்தக்கூடிய நிலங்கள் முழுவதுமாக பயன்படுத்தப்படாது உள்ளது. மன்டைதீவு, வேலணை, புங்குடுதீவு ஆகிய பகுதிகளில் பல நூறு ஏக்கர் வயல் நிலங்கள் மற்றும் குறிப் பிட்டளவு மேட்டுக் காணிகள் பயன்படுத்தப் படாது கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. இந் நிலங்கள் முறையான பராமரிப்பின்றி உள்ளன. வயல் நிலங்கள் வரம்பு வாய்க்கால்கள் கட்டப் படாத நிலையிலும். பண்படுத்தப்படாத நிலை யிலும் உள்ளன. இதனால் கிடைக்கப் பெறும் மழை நீர் நிலத்தில் தேங்கி நிற்காது வழிந்தோடி வீண் விரையமாக கடலைச் சென்றடைகின்றன. செய்கை பண்ணப்படும் வயல் நிலங்களிலும் ஒரு பகுதி நிலம் செய்கை பண்ணப்பட எஞ்சிய நிலம் பயன்பாடற்ற நிலையில் உள்ளது.

4. பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகள் பாதுகாக்கப்படாத நிலையில் உள்ளன. வேலணைப் பிரதேசத்தில் உள்ள நீர் நிலைகள் யாவும் பாதுகாக்கப்படல் வேண்டும். இங்குள்ள குளங்கள் யாவும் குளக் கட்டுக்கள் இன்றியும் இருக்கும் அணைகள் சிதைவடைந்த நிலையிலும் உள்ளன. குளங்களில் கழிவுகள் இடப்பட்டு அவற்றின் கொள்ளளவு குறைவடைந் துள்ள துடன் நீரேந்து பிரதேசங்கள் பாதுகாக்கப் படாதும் உள்ளன.

5. காணிப்பயன்பாட்டில் உள்ள முரண்பாடான தன்மை – இங்குள்ள வயல் நிலங்கள் கொட்டு மண் போட்டு நிரவப்பட்டு தோட்ட நிலங்களாக மாற்றப்பட்டுள்ளதுடன் வயல் நிலங்கள் குடி யிருப்புத் தேவைக்காகவும் பயன்படுத்தப் பட்டுள்ள முரண்பாடான காணிப்பயன்பாட்டை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

6. உவர் நீர் உட்புகுதல் – கரையோரமாக உள்ள பிரதேசங்களில் உவர் நீர்த் தடுப்பணை அமைக் கப்படாதமையினாலும் இருக்கும் தடுப் பணைகள் சிதைவடைந்து உள்ளமையினாலும் கடல் நீர் உட்புகுந்து கரையோரக் கிராமங் களிற்குள் ஊடுருவும் நிலை உள்ளது. இதனால் படிப்படியாக கிராமப்புற நிலங்கள் உவராகும் அபாயம் உள்ளது.

## தீர்வுகள்

1. சட்ட விரோதமான முறையில் கடற் கரை யோரமாக மேற்கொள்ளப்படும் மண் அகழ்தல் முற்றுமுழுதாக தடை செய்யப்படுதல் வேண்டும். கரையோர பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் உரிய நட வடிக்கை எடுக்கப்பட்டு கரையோரம் பாது காக்கப்படுதல் வேண்டும்.

2. மேல் மண் அகற்றப்படுதல் தடை செய்யப் பட்டு மண் வளமிழக்கப்படுதல் தடுக்கப்படு வதுடன் கால் நடைகளிற்குரிய மேய்ச்சல் நிலங்கள் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

3. பராமரிப்பின்றியும் கைவிடப்பட்டுள்ளது மான நிலங்கள் உள்ளார்ந்த காணிப் பயன் பாட்டின் கீழ் கொண்டு வரப்படல் வேண்டும். வயல் நிலங்கள் பண்படுத்தப்படல் வேண்டும். வரம்பு வாய்க்கால்கள் புனரமைக்கப்படுதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். யுத்தத்தால் அழிவடைந்த பனங் காணிகள் மீள் நடுகைக்கு உட்படுத்தப்படல் வேண்டும். குறிப்பாக விவசாயம் ஊக்கிவிக்கப் படுதல் வேண்டும். கமநலசேவை நிலையங்கள் விதை மானியங்களை வழங்குதல், வங்கி களின் ஊடாக குறைந்தளவு வட்டியுடன் விவ சாயக்கடன் வழங்கல். பிரதேச சபையூடாக கட்டாக்காலி மாடுகள் கட்டுப்படுத்தப்படல் போன்ற செயற்பாடுகளினூடாக விவசாயம் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

4. குளங்கள் யாவும் தூர்வாரப்படுதல் வேண்டும். குளக்கட்டுக்கள் அமைக்கப்படுதல் வேண்டும். கழிவுகள் குளத்தினுள் கொட்டப் படுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். வாய்க் கால்கள் புனரமைக்கப்படுதல் வேண்டும். நீரேந்து பிரதேசங்கள் பாதுகாக்கப்படுதல் வேண்டும். புங்குடுதீவின் நீரேந்து பிரதேசமாக கள்ளி ஆறு உள்ளது. இவ் ஆறு புங்குடுதீவு மேற்கு, புங்குடுதீவு வடக்கு, புங்குடுதீவு மத்தி வடக்கு, புங்குடுதீவு வடகிழக்கு அகிய கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக பல நூறு ஏக்கர் பரப்பளவு விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது. இவ் ஆற்றுப்பிரதேசத்தை உள்ளடக்கியதாக அதன் கொள்ளளவுக்கேற்ப அணை அமைப்பதன் ஊடாக அதிகளவு மழை நீரை தேக்கி வைத்துக்கொள்ள முடியும். இதனூடாக காலப்போக்கில் இதனை அண்டி யுள்ள பகுதிகளில் உள்ள கிணற்று நீரின் சவர்த் தன்மை மாற்றமடைவதுடன் நீர்மட்டமும் அதிகரிக்கக்கூடிய சாத்தியப்பாடு உண்டு.

5. காணிப்பயன்பாடு திட்டமிட்ட முறையில் நிலம் நீர் ஆகியவற்றின் உள்ளார்ந்த தன்மைக்கு ஏற்ப அமைதல் வேண்டும். அவற்றிடையே முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுதல் ஆகாது. எல்லா நிலத்திலும் விவசாயம் செய்யமுடியாது. அவை வரையறைக்கு உட்பட்டவை எனவே வயல் நிலம் வயல் நிலமாகவே இருத்தல் வேண்டும். குறுகிய கால வருமானத்தை மைய மாகக் கொண்டு அவை மேட்டு நிலமாக மாற்றப் படுதல் ஆகாது. எதிர்காலத்தை கருத்தில் கொள்ளல் அவசியமாகும். இன்று எமது பகுதிகளில் மக்கள் தொகை குறைவாக இருப்பினும் இது நிலையானது அல்ல காலப் போக்கில் வெளிநாடுகளில் உள்ள மக்கள் மற்றும் உள்ளக இடப்பெயர்வு மக்கள் மீண்டும் தம் சொந்த இடங்களிற்கு வந்து குடியிருக்கும் சூழல் ஏற்படலாம். அவ்வேளை மக்கள் தமது சொந்த தேவைக்கு உரிய நெல்லை உற்பத்தி செய்ய வயல் நிலம் போதாத நிலை ஏற்படும்.

எனவே வயல் நிலம், தோட்ட நிலம், குடியிருப்பு நிலம், மேய்ச்சல் நிலம் என்பன தனித்தனியே சிறந்த திட்டமிடலின் ஊடாக பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. உவர் நீர் உட்புகுதலைத் தடுக்கும் பொருட்டு தீவின் அனைத்துக் கரையோரங்களையும் சுற்றி உவர் நீர் தடுப்பணை அமைக்கப்படுவதுடன் சிதைவடைந்துள்ள அணைகள் யாவும் புனரமைக்கப்படுதல் வேண்டும்.

முடிவாக நோக்குமிடத்து எமது பிரதே சத்தில் உள்ள விவசாய நிலங்கள் முழுவதும் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படுவதற்கான சிறந்த திட்டமிடலுடன் கூடிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். உரமானியங்கள் வழங்கல், விவசாயக் கடன்கள் வழங்கல், கட்டாக்காலிகளை கட்டுப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளின் மூலம் விவசாயி களிற்கு ஊக்கமும் தன்னம்பிக்கையும் பாது காப்பும் அளிக்கப்பட்டு நிலைத்து நிற்கும் உச்ச காணிப்பயன்பாட்டை அடைதல் வேண்டும். நன்னீர்ப் பிரச்சனையை எதிர்கொண்டுள்ள எமது தீவில் உள்ள நீர் நிலைகள் பாதுகாக்கப்படல், கிடைக்கப்பெறும் மழை நீரை வீண் விரையமாகவிடாது சேமித்தல், பண்படுத்தப் படாது பல வருடங்களாக உள்ள விளை நிலங்கள் பண்படுத்தப்படல். ஆகிய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு களை மேற்கொள்வதன் ஊடாக நாம் எதிர் நோக்கும் வரட்சிக்காலத்து நீர் பிரச்சனையை எதிர்காலத்தில் இயன்றளவு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படல் வேண்டும்.

மேலும் தவறான காணிப் பயன்பாட்டை தடுத்தல், மேய்ச்சல் நிலங்கள் பாதுகாக்கப்படல், சுற்றுச்சூழல் மாசுபடாது பாதுகாக்கப்படுவதன் ஊடாக சூழல் சமநிலை பேணப்படல், வரையறைக்குட்பட்ட வளங்கள் அழிவடையாதவாறு பாதுகாக்கப்படுதல் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், சுற்றுலா மையங்கள், நீர் நிலைகள், நீரேந்து பகுதிகள், பறவைகளின் வாழ்விடங்கள் பேணிப்பாதுகாக்கப்படல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்வதன் ஊடாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் பூமி பாதுகாக்கப் பட்டு எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண்டைதீவு எனும் மரகத்தீவு

திரு.ம.சசிகாந்
கிராம அலுவலர், தரம் III
பிரதேச செயலகம் - வேலணை

### அறிமுகம்

இலங்கைத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள அழகிய தீவுக்கூட்டங்களில் தலைத்தீவாய் எழில்மிகு கிராமமாய் நம் மண்டைதீவு விளங்குகின்றது நாற்புறமும் கடல் சூழ்ந்த பச்சைப்பசேலென வயல் நிலங்கள் நிறைந்த தேசமாய் இருக்கும் இங்கே பாசமாய் சைவ, கிறிஸ்தவ மக்கள் வாழ்ந்து வருகின் றார்கள் யாழ் நகரத்துக்கு மிக அருகில் இருக் கின்ற இக்கிராமம் 10.01 சதுர கிலோமீற்றர் பரப் பளவு கொண்ட அழகிய கிராமமாகும் நாற் புறமும் கடலால் சூழப்பட்டிருந்தாலும் வடக்கே யாழ்ப்பாணத்துடனும் மேற்கே அல்லைப் பிட்டியோடும் வீதியால் இணைக்கப்பட்டுள்ளது.

### வரலாறு

தீவுக்கூட்டங்களின் தலை போல அமை வதால் இக்கிராமத்திற்கு மண்டைதீவு எனும் பெயர் உருவாகியது என்பார்கள் அத்துடன் சிங்கள பௌத்த வரலாற்று நூலான தீபவம்சம் மண்டைதீவை "மண்ட தீப" எனக்குறிப்பிடுகிறது அதுமட்டுமல்ல இராமாயணத்தில் இராமனால் வதம் செய்யப்பட்ட இராவணணின் தலைகளில் ஒன்று இங்கே விழுந்ததாகவும் அதனாலே இக் கிராமத்திற்கு மண்டைதீவு எனும் பெயர் வந்த தாக கர்ணபரம்பரை கதையொன்று உள்ளது.

மண்டைதீவிலே கிழக்குப்பகுதியில் செம்பியன் தோட்டம் எனும் பகுதி உள்ளது இதை வரலாற்று ரீதியாக பார்த்தால் தென்னிந்தி யாவை ஆண்ட தமிழர்களில் ஒரு பகுதியினர் சோழர்கள் ஆவர் இவர்களை செம்பியன் என்றும் அழைப்பதுண்டு இலங்கையை சோழர் களும் ஆண்டதன் அடிப்படையில் மண்டை தீவில் சோழர்கள் தங்கியிருந்த இடம்தான் செம்பியன் தோட்டம் எனும்" பகுதியாக இருக்கலாம் என ஊகிக்க முடிகிறது அத்துடன் ஆனை பிடிச்சான் என்ற ஒரு இடமும் இங்கு உண்டு யானைகளை பொறிவைத்து பிடித்த இடம்தான் ஆனைபிடிச்சான் என அழைக்கப் படுகிறது.

### பொருளாதாரம்

எமது மண்டைதீவுக்கிராமம் மண்டை தீவு கிழக்கு (J/07), மண்டைதீவு மேற்கு (J/08), மண்டைதீவு தெற்கு (J/09) ஆகிய மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்டது இங்கே வாழும் மக்கள் பெரும்பான்மையாக விவசாயம், கடற்றொழில் ஆகிய தொழில்களை வாழ்வாதாரமாக கொண்டவர்கள் மண்டைதீவு புகையிலை என்றால் நாட்டிலே ஒரு தனி மதிப்புண்டு இதனாலேதான் இங்கே பெரும் பான்மையாக புகையிலை செய்கையாளர் களும், வியாபாரிகளும் உள்ளனர் அது மட்டுமல்ல மண்டைதீவு நண்டுக்கு மயங்காத வர்கள் இல்லை எனலாம். அதனால் தான் இங்கு வாழும் மக்கள் ஒரளவுக்கு தங்களின் தேவை களை பூர்த்தி செய்து வாழக்கூடிய தகுதியில் உள்ளார்கள் அத்துடன் அரசகடமைகள் புரிவோர், வியாபாரிகள், ஒப்பந்தகாரர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் பிறதொழில் செய் பவர்களும் இங்கு வாழ்ந்து வருகின்றார்கள். இங்கு இயங்கிய மீன்தூள் ஆலைத்தொழிற் சாலை தற்போது முற்றாக கைவிடப்பட்டு அழிவுற்ற நிலையில் உள்ளது இது இக்கிராம பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடித்தொகை

இங்கே 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் சுமார் ஆயிரத்து ஐந்நூறு குடும்பங்கள் வசித்து வந்துள்ளனர் பின்னர் நாட்டில் ஏற்பட்ட முப்பது வருட உள்நாட்டு யுத்தம் காரணமாக ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வுகள் மண்டை தீவுக்கிரா மத்தை வெறுமையாக்கியது மக்கள் வாழ்ந்த இடங்களெல்லாம் இடிபாடுகள் பற்றைகள் நிறைந்ததாக காணப்படுகின்றது. பின்னர் 1996, 2002, 2003, 2009 ஆகிய ஆண்டுகளில் மீள் குடியேற்றம் நடைபெற்றதன் மூலம் 580 குடும் பங்கள் தற்போது வசித்து வருகின்றனர் இது 1990 ஆம் ஆண்டு இருந்த சனத்தொகையில் 50 சதவீதத்திலும் குறைவாகும். பெரும்பான் மையான மக்கள் யாழ்ப்பாணத்திலும் பிற மாவட்டங்களிலும் புலம்பெயர்ந்து வெளிநாடு களிலும் வசித்து வருகின்றனர் இக்கிராமத்தில் அடிப்படை வசதிகளை பெறமுடியாத நிலை யாலும் அபிவிருத்தித்திட்டங்கள் எதுவும் பெரி தாக நடைமுறைப்படுத்தபடாமல் இருப்பத னாலும் இந்த மக்கள் மீளக்குடியமர தயக்கம் காட்டி வருகின்றார்கள்.

## ஆலயங்கள்

மண்டைதீவில் புகுந்தவுடன் முதல் வருவது அனைவருக்கும் வழித்துணையாய் இருக்கும் வழிப்பிள்ளையார் ஆலயம். கிழக்கு கடற்கரையில் காவலிருப்பது பூம்புகார் ஸ்ரீ கண்ணகையம்மன் ஆலயம். இவ்வாலயம் வற்றாப்பளை கண்ணகை ஆலயத்திற்கு அடுத்த தாக புகழ்பூத்த அற்புதங்கள் நிறைந்த ஆலயமாகும். இங்கு நடைபெறும் பொங்கல் திருவிழாவும் தீ மிதிப்பும் பிரசித்தமானது அடுத்த தாக வேப்பம் திடலில் குடியிருக்கும் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம். அருகே அமர்ந்திருப்பது ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயம் துறைமுகத்திலிருப்பது பெரியதம்பிரான் ஆலயம். திருவெண்காட்டிலே சித்திவிநாயகர் ஆலயம். சிறுப்புலத்திலே கந்தசாமி கோயில், முகப்பு வயலிலும் கந்தசாமிகோயில், தெற்கு





புனித பேதுருவானவர் தேவாலயம்

கடற்கரையில் திருதிடுக்கைவைரவர் அவருக்கு வடக்கே கொஞ்சம் சென்றால் சாம்பலோடை கண்ணகை அம்மன் அல்லைப்பிட்டி செல்லும் பாதையிலே உக்கிர வீரபத்திரர், ஊருக்குள்ளே ஆதிவைரவர், கொவ்வைக்குளி வயல்வெளி யோரம் தில்லேஸ்வர சிவன்கோயில் எனும் இந்து ஆலயங்களோடு ஆங்காங்கே சிறு சிறு வைரவர் ஆலயங்களும் மக்களை காத்து அருள் புரிய மத்தியிலே புனித பேதுருவானவர் தேவாலயமும் கடற்கரையிலே வேளாங்கன்னி மாதாவும் வீற்றிருக்க மக்கள் தங்கள் இஷ்ட தெய்வங்களை வாழ்த்தி வணங்கி மகிழ்வுறு கிறார்கள்.

## கல்வி

1990 ஆம் ஆண்டில் சீரழிந்து போன இக்கிராமத்தில் அதற்கு முன்னர் மூன்று தரமான பாடசாலைகள் இயங்கி வந்தன அதில் மண்டை தீவு மகா வித்தியாலயமும் றோமன் கத் தோலிக்க பாடசாலையும் தற்போதும் சேவையை தொடருகின்றன ஆனால் முதல் பாட சாலையான கார்த்திகேய வித்தியாலயம் அழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுற்ற நிலையில் கேட்பார் யாருமின்றி கிடக் கின்றது. இப்பாடசாலைகளில் கல்வி கற்ற வர்கள் நம்நாட்டிலே சிறந்த கல்விமான்களாக அதிபராக, ஆசிரியராக உதவி அரசாங்க அதிபராக பேராசிரியராக பத்திரிகை ஆசிரியர் களாக மிளிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.



மண்டைதீவு மகா வித்தியாலயம்

### சுகாதாரம்

அடுத்து இங்கு பிரதேச பிரசவ வைத்தியசாலை இக்கிராம மக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்கி வந்தது. இவ் வைத்திய சாலை 1953ஆம் ஆண்டு சேர்.ஜோன். கொத்த லாவ அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதற்கு முன்னர் 1910 ஆம் ஆண்டுக்கு முன்னரே மண்டைதீவு கிழக்கில் ஒரு சிறிய அரசினர் வைத்தியசாலை இயங்கி வந்துள்ளது. அழிக்கப்பட்ட நிலையி லிருந்த மண்டைதீவு வைத்தியசாலை தற்போது புணரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது. இவ் வைத்தியசாலை அல்லைப்பிட்டி, மண்கும்பான் கிராம மக்களுக்கும் பொதுவானதொன்றாகும்.

அடுத்து வேலணை பிரதேசசபையின் உப அலுவலகம் இங்கு பெரியதோர் கட்டடமாக அமைந்துள்ளது. இது மண்டைதீவின் முதன்மை மனிதன் எனக்குறிப்பிடப்படும் கிராம சபைத் தலைவர் அமரர் க.கைலாசபிள்ளை என்பவரின் முயற்சியினால் கட்டப்பட்டதாகும். இங்கு மக் களுக்கு தேவையான பிரதேச சபை சார்ந்த சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது.



பிரதேச வைத்தியசாலை - மண்டைதீவு

### சமய சமூக பணிகள்

எமது கிராமத்தில் சமய, சமூக பணி களை பல அமைப்புக்கள் முன்னெடுத்து செல் கின்றன. அவற்றுள் கிராம அபிவிருத்தி சங் கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் என்பவற்றுடன் சிவசக்தி இந்து இளைஞர் மன்றம், உதயசூரியன் சனசமூகநிலையம், பேதுருவானவர் சனசமூக நிலையம், புனித பேதுருவானவர் இளைஞர்மன்றம் மதிஒளி சன சமூக நிலையம், ரோஜாவனம் சிறுவர்கழகம், மண்டைதீவு மக்கள் ஒன்றியம், விவசாய சம் மேளனம் கடற்றொழிற்சங்கம் என்பவை மக்களுக்கு பல்வேறு வகைப்பட்ட சமய சமூக பணிகளை மேற்கொண்டு வருகின்றன. இவற்றுடன் வான்மதி விளையாட்டுக்கழகம், புனித பேதுருவானவர் விளையாட்டுக்கழகம் என்பவை மக்களின் விளையாட்டு திறமை யினை, பண்பினை மேம்படுத்தி வருகின்றன. இவற்றுடன் இளங்குரல் நாடக மன்றம் தனது கலைச் சேவையின் மூலம் மக்கள் மத்தியில் நல்லதோர் பண்பாட்டை வளர்க்க இன்றும் சேவையை முன்னெடுத்துள்ளது என்பது இக் கால ஓட்டத்தில் சவால் மிகுந்த செயற்பாடாகும்.

இவ்வாறு மேற்கூறிய அமைப்புக்கள் யாவும் சிதைந்து போன இக்கிராமத்தின் தோற்றத்தையும் வரலாற்றையும் கட்டியெழுப்ப மெல்ல மெல்ல முயற்சி செய்து வருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***போக்குவரத்து***


இங்கிருந்து வெளியிடத்திற்கு செல்வதற்கான பாதைகள் இரு பாதைகள் மாத்திரமே இவற்றில் ஒன்று யாழ்ப்பாணம் நோக்கிய பிரதான பாதையும் மற்றையது மண்டைதீவு, அல்லைப்பிட்டி இணைப்பு வீதியும் ஆகும். இரண்டுமே இப்பொழுது மிக மோசம். RDDக்கு செந்தமான பிரதான வீதி 6.2 கிலோ மீற்றர் நீளம் கொண்டது. இது குன்றும் குழியு மாக காட்சியளிக்கின்றது. இவ்வருட மாரி காலம் வந்தால் இதன் கதை முடிந்துவிடும் அல்லைப்பிட்டி இணைப்பு வீதியின் கதை முடிந்து விட்ட கதை இதனூடாக பயணிக்க முடியாது. இவ்வீதி பிரதேச சபைக்குச் சொந்தமானது. இதுவரை பல தசாப்தங்களாக திருத்தப்படாத இவ் வீதிகள் வேகமாக தற்போது திருத்தப்பட வேண்டியவையாகும். இல்லையெனின் மண்டதீவு எனும் கிராமத்தின் தரை மார்க்க பாதை துண்டிக்கப்படலாம். மற்றும் இக் கிராமத்தின் உள்ளூர் வீதிகள் சில திருத்தப்பட்டு வருகின்றன.

***பின்னிணைப்பு***

பாடசாலைகள்
மண்டைதீவு மகா வித்தியாலயம்
மண்டைதீவு றோ.க.த.க. பாடசாலை
மண்டைதீவு கார்த்திகேசு வித்தியாலயம்

இவ்வாறு சிறந்த அமைவிடத்தைக் கொண்ட பேரழகு சொரியும் மரகதத் தீவாம் மண்டைதீவு கட்டியெழுப்ப வேண்டியதோர் கிராமமாகும். யாழ்நகருக்கு அண்மித்ததாக இருப்பதனால் பிறிதொரு காலத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக்கருதப்பட்டு பல திட்டங்கள் வரவாய்ப்புண்டு. எனினும் நம் நாட்டு யுத்த அனர்த்தத்தின் அடையாளச் சின்னமாக இன்னும் விளங்கிக்கொண்டிருக்கும் இக்கிராமம் முன்னர் போல் எழில் கொண்டு உயர்ச்சி அடைய வேண்டும் என்பதே இக் கிராமத்தை சொந்தமாகக் கொண்ட இங்கு வாழ்கின்ற வெளியிடங்களில் வாழ்கின்ற புலம் பெயர்ந்து வாழ்கின்ற மக்களின் ஆசையாகும். இம்மக்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப் படுமா? இக்கிராமம் தலை நிமிர்ந்து எழில் கொண்டு நிற்குமா? என்பது இனிவரும் காலங்களில் தான் உள்ளது வசந்தகாலம் வரும்வரை இக்கிராமம் காத்திருக்கும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லைப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்லைப்பிட்டி மான்மியம்

திரு.சி.இரத்தினேஸ்வரன்
கிராம அலுவலர் – தரம் I
பிரதேச செயலகம் – வேலணை

## அறிமுகம்.

இலங்கையின் வடமாகாணத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தின் தெற்கே 7km தூரத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமமே அல்லைப்பிட்டி ஆகும். 1.8km நீளமும் 1.6km அகலமும் கொண்ட இக்கிராமம் வடக்கே பரவைக்கடலையும் தெற்கே பெருங்கடலையும் கிழக்கே பரவைக்கடலையும் மேற்கே மண் கும்பான் கிராமத்தையும் எல்லைகளாக கொண்டது.

இலங்கைத்தீவில் கிராம சபைகள் உருவாக்கப்பட்ட போது மண்டைதீவு, அல்லைப் பிட்டி, மண்கும்பான் ஆகிய கிராமங்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு 1 – 13 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டு அல்லைப்பிட்டி கிராம சபையின் கீழ் உள்ளூராட்சி நிர்வாகம் இருந்தது. பின்னர் 1968ம் ஆண்டு மண்டைதீவு கிராமம் தனிக் கிராம சபையாக பிரிந்து சென்றது. அல்லைப் பிட்டி, மண்கும்பான் கிராமங்களை இணைத்து 1 – 5 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டு தற்போது இது வேலணை பிரதேச சபையின் கீழ் நிர்வகிக் கப்பட்டு வருகின்றது.

முல்லை, நெய்தல், குறிஞ்சி, பாலை என்கின்ற நால்வகை நிலத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. பனைகளையும், தென்னை களையும், பயன்தரு மரங்களையும் கொண்ட இக் கிராமம் ஆன்மீகம், பண்பாடு, கல்வி, கலை, கலாசாரம், பொருளாதாரம் என்பவற்றில் உயர்ச்சி கண்டு தன்னிறைவு கொண்ட கிராம மாக மிளிர்கின்றது.

இக்கிராமம் யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கி பல இடப்பெயர்வுகளையும் சொத்து, உயிர், உடமை, அழிவுகளையும் சந்தித்தது. சாம்பல் மேட்டிலிருந்து மீண்டும் மீண்டும் உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவை போல் இன்று அனைத்து அடிப்படைக் கட்டுமானங்களையும் பெற்று தலை நிமிர்ந்து நிற்கின்றது. தீவுப் பகுதி யிலிருந்து இடம்பெயர்ந்த மக்களிலே 100% மீளக்குடியமர்வை மேற்கொண்ட ஒரே ஒரு கிராமம் அல்லைப்பிட்டி என்பது பெருமைக் குரிய விடயமாகும்.

## வரலாறு

வரலாற்று ஆவணங்கள் எதுவும் இல்லை என்றாலும் பரம்பரை பரம்பரையாக கூறப்பட்ட கதைகள், மூதாதையரிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது.



அல்லி ராணிக் கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் அல்லிராணி என்பவர் இவ் விடத்திலிருந்து வன்னியின் சில பகுதிகளையும் தீவுப் பகுதியையும் ஆட்சி செய்தமையினால் இக்கிராமம் ஆரம்பத்தில் அல்லிப்பிட்டி என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. காலப் போக்கில் அது மருவி அல்லைப்பிட்டியாக மாறியதாக கூறப்படு கின்றது. இன்றும் அல்லி ராணியின் கோட்டை என சிலரால் அழைக்கப்படும் ஓர் கட்டடம் அழிவடைந்த நிலையில் காணப்படு கின்றது. இக்கட்டடம் அந்நியர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட கட்டடம் அல்லது கோயில் (இடிந்த மாதாங் கோயில்) எனவும் சிலரால் அழைக்கப்படுகின்றது.

இக்கட்டட அமைப்பினை ஒத்த முருகை கற்களாலான பழைய கோட்டைகள் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு போன்ற இடங்களிலும் காணப்படுகின்றன. இவ்விடம் அரசிற்கு சொந்தமான காணியாகவே இன்றும் காணப்படுகின்றது.



நூற்றாண்டு பழமை வாய்ந்த மணிக்கோபுரம்

இரண்டாவது காரணம் இக்கிராமத்தின் மத்தியிலும் கரையோரங்களிலும் கடல் அலைகள் போன்ற அமைப்பில் மணல் பிட்டிகள் அமைந்து இருந்ததால் அலைப்பிட்டி என்ற பெயர் மருவி அல்லைப்பிட்டியாக மாறிய தாகவும் கூறப்படுகின்றது. (தற்போது அவைகள் இல்லை)

### பௌதீக வளங்கள்

விவசாயம் செய்வோருக்கு 90% ற்கு மேல் நன்னீர் வளம் உள்ளது. மேட்டு நிலம் 80 ஏக்கரும் அதே அளவான நிலம் வயல் நிலங் களாகவும் உள்ளன. கட்டுமான வேலைக்கான மணல் வளமும், பனை வளமும், தென்னை வளமும் காணப்படுகின்றன. கடற்றொழில் செய்வோருக்கு ஒருபக்கம் சிறு கடலையும் ஒரு பக்கம் பெருங்கடலையும் வளங்களாக கொண்டதுடன், கால் நடைகளுக்கான (புல்) மேய்ச்சல் நிலத்தையும் வளமாக கொண்டுள்ளது.



அல்லைப்பிட்டி மீன்பிடித்துறை

### ஆலயங்கள்

சைவ சமயமும் கிறிஸ்தவ சமயமும் தமிழோடு சேர்ந்து ஆன்மீக சமுக சேவைகள் ஆற்றிக்கொண்டிருக்கின்ற வகையிலே மிகப் பழமை வாய்ந்த சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் வடக்கிலும், ஐயனார் கோவில், கறண்டப்பாய் முருகன் கோவில், ஞான வைரவர் கோவில் என்பன கிழக்கிலும், கொக்குளப்பதி அம்மன் கோவில் மேற்கிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்கிர வைரவர் கோவில் தெற்கிலும், மத்தியில் இனிச்சபுளியடி முருகன் கோவிலும் அமைந் திருந்து கிராமத்தின் காவல் தெய்வங்களாக அருளாட்சி செய்கின்றன. அதேவேளை கிரா மத்தின் மத்தியில் புனித கார்மேல் மாதா, புனித யுவானியர் ஆலயம், புனித பிலிப்பினேரியார் ஆலயம், அன்னை வேளாங்கன்னி ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம் என்பன அமைந் துள்ளன. இத்துடன் கிறிஸ்தவ சமயப் பிரிவு களான பெந்தகோஸ்தே சபை ஆலயமும், மெதடிஸ்த மிசன் தேவாலயமும் ஆன்மீக சேவையை ஆற்றிக்கொண்டு இருக்கின்றன. புனித யுவானியார் ஆலயம் சுமார் 100 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இங்கு 72 அடி உயரமான மணிக்கூட்டுக் கோபுரமும் 1910ம் ஆண்டு செய்யப்பட்ட பெரிய மணியும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

*கரண்டப்பா கந்தசாமி கோவில்*





*புனித கார்மேல் மாதா*

## மீள்குடியேற்றமும் மனித வளமும்

அல்லைப்பிட்டி கிராமமானது பல இடர் களுக்கு முகங்கொடுத்துப் பல இடப்பெயர்வு களை சந்தித் திருக்கின்றது.

இவ் இடப்பெயர்வுகளில் 1990, 1991 ஆம் ஆண்டுகளிலான இடப்பெயர்வும் 2006 வைகாசி மற்றும் ஆவணி மாத இடம்பெயர்வு களும் குறிப்பிடத்தக்கதாகும். இக்காலங்களில் (1990 - 1991) இடம்பெயர்ந்த மக்களில் குறித்த தொகையினர் 1996 - 2006 முற்பகுதி வரை மீள் குடியமர்ந்தனர். இம் மக்கள் 2006 ஆம் ஆண்டு வைகாசி மாதம் இடம்பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக இப்பிரதேசத்தை விட்டு மீண்டும் முற்று முழுதாக வெளியேறினார்கள். இதன் பின்னர் இம்மக்களின் மீள்குடியமர்வு 2008-2010-2011 காலப் பகுதியிலேயே இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள குரு நகர் எனும் இடத்திலிருந்து இட நெருக்கடி காரணமாக அல்லைப்பிட்டி 3ம் வட்டாரத்தில் வெண்புரவி குடியேற்றத்திட்டம் ஒன்று அமைக்கப்பட்டது. இதில் ஏறக்குறைய 150 குடும் பங்கள் வரை வசித்து வருகின்றன.

## கல்வி

அல்லைப்பிட்டியில் கல்விச்சேவை பற்றி குறிப்பிடுகையில் பாடசாலைகளாக அல்லைப் பிட்டி பராசக்தி வித்தியாலயம், அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை என்பன உள்ளன. இதில் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் தரம் 01 முதல் தரம் 11 வரையான வகுப்புக்கள் காணப்படுகின்றன. அல்லைப்பிட்டி றோ.க.த.க பாடசாலையில் தரம் 01 முதல் தரம் 04 வரையான வகுப்புக்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.



*யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லைப்பிட்டியில் முன்பள்ளிகளாக பின் வருவன காணப்படுகின்றது

- ✓ வாகீசர் முன்பள்ளி
- ✓ மெதடிஸ்த திருச்சபை முன்பள்ளி
- ✓ சென்பிலிப்ஸ் முன்பள்ளி
- ✓ டேவிற் பேளி முன்பள்ளி

### சுகாதாரம்

எமது கிராமத்திலிருந்து 8km தூரத்தில் உள்ள யாழ் போதனா வைத்தியசாலை யினையே பெரும்பாலான மக்கள் பயன்படுத்து கின்றனர். 7km தூரத்திலுள்ள வேலணை பிரதேச வைத்தியசாலையை சிலர் பயன்படுத்து கின்றனர். கிராமிய வைத்தியசாலை கிரா மத்தின் மத்தியில் அமைந்துள்ளது. இங்கு கிராமிய சுகாதார மருத்துவ மாது 24 மணி நேரம் கடமையிலுள்ளார். கற்பிணித்தாயமார், பாலூட்டும் தாய்மார், சிறுவர்களுக்கான வைத்திய சேவைகள் நடைபெறுகின்றன. வேலணை பிரதேச வைத்தியசாலையின் நட மாடும் சேவை மாதத்திற்கு இருதடவை நடை பெறுகின்றது. மோசி மலேசியா எனும் நிறுவனத் தினால் மாதத்திற்கு ஒருதடவை நடமாடும் சேவை நடாத்தப்படுகின்றது. பற்சிகிச்சை நிலையம் கிழமைக்கு ஒருதடவை நடை பெறுகின்றது.

### போக்குவரத்தும் தொடர்பாடலும்

பிரதான போக்குவரத்து சாதனங்களாக இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்து களும், தனியார் பேருந்துகளும் ஈடுபடுகின்றன. 5% மானோர் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி, மிதிவண்டி போன்றவற்றினை பயன் படுத்துகின்றனர்.

யாழ் – ஊர்காவற்றுறை வீதியானது இக் கிராமத்தின் வடக்குக் கரையோரமாக அமைந்துள்ளது. அல்லைப்பிட்டி – மண்கும்பான் வீதி கிராமத்தின் மத்தியினூடாக செல்கின்றது. அல்லைப்பிட்டி – மண்டைதீவு வீதி கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது. (திருத்தம் செய்யப் பட வேண்டியது). உப வீதிகளாக கடற்கரை வீதி, சுடலை வீதி, அம்மன் கோவில் வீதி, பாடசாலை வீதி என்பன காணப்படுகின்றன. மற்றும் சிறு சிறு வீதிகள், இணைப்பு வீதிகள் உள்ளன.

### நீர் வளம்

இக் கிராமத்தில் பல குளங்கள் காணப்படுகின்ற போதும் இவற்றில் 06 குளங்கள் நீர்பாசனத்திற்கு பயன்படுத்தப் படுவதில்லை. இவை மழை நீரினை சேகரிப் பதற்கும், கால்நடைகளுக்குத் தேவையான நீரை சேமித்து வைப்பதற்கும் பயன்படுகின்றன.

### பொருளாதாரம்

இக்கிராம மக்கள் பிரதான பொருளாதார வரு மானம் பெறும் வழிகளாக கடற்றொழிலையும், விவசாயத்தினையும் பிரதானமாக நம்பி யுள்ளனர். கடற்றொழில் 50%, விவசாயம் 30%, பனை சார்ந்த தொழில் 5%, தச்சுவேலை 1%, மேசன் 1%, கூலி வேலை 2%, குடிசை சார் தொழில் 3%, தனியார் 2%, வெளிநாடு 1%, அரசபணி 1% ஏனையவை 4% ஆக காணப்படுகின்றது.

### அபிவிருத்தியும் தந்திரோபாயங்களும்

அல்லைப்பிட்டி கிராமமானது 1990ம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன்னர் அடிப்படை வசதிகள் அனைத்தும் கொண்டதாக இருந்தது. தொடர் இடப்பெயர்வுகளினால் மக்களின் வீடுகள், தொழில்கள், சேவைகள், மற்றும் வாழ்வாதாரம் அனைத்தும் முற்றாக அழிவடைந்தன. மீளக் குடியமர்வின் போது மக்கள் எஞ்சியிருந்த வீடுகளில் பல குடும்பங்கள் கூட்டாக வசித்தனர். பின்னர் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் சிறிது சிறிதாக கிடைக்கத் தொடங்கின. அந்த வகையில் இக்கிராமத்தில் மீள் எழுச்சிக்கு வித்திட்ட அரச சார்பற்ற நிறுவனங்களை குறிப்பிட்டாகவே வேண்டும். அவையாவன,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், UNHCR, UNICEF, Care, WFO, World Vision, UNDP, GTZ, I.O.M, உலக வங்கி, சிறுவர் பாதுகாப்பு FO, Non Violent Peace Force, Action Farm, ZOA, இந்திய வீட்டுத்திட்டம், D.D Group, இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், போரூட், SOND, நிக்கொட், நேர்ப், கரித்தாஸ் – கியூடெக், இலங்கை இராணுவம், இலங்கைக் கடற்படை, அல்லையூர் இணையம். போன்றவையாகும்.

இது போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவ களின் உதவியினால் 90% மான குடும்பங்க வீடு, மலசலகூடம், கிணறு போன்ற அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொண்டுள்ளன. இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் தற்போது 147 வீடுகள் கிடைக்கப்பெற்று கட்டப்படுகின்றது.

## அறிவகம் (நெசனல)

தகவல் தொழில் நுட்பத்தின் அனைத்து வசதிகளையும் கொண்ட அறிவகம் (நெசனல) எனும் திட்டத்தின் கீழ் அல்லைப்பிட்டியில் தொலைத் தொடர்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் சில நாடுகளில் செயற்படவுள்ள இந் நிலையத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு தொலை பேசி அழைப்புக்கள், இணையம், மின்னஞ்சல் போன்ற கணணி சார்ந்த சேவைகளை பெற முடியும். அலுவலக நிர்வாகம், செயலக உதவி, தொலைநகல் பிரதி, அச்சுப்பிரதி போன்ற சேவைகளுடன் இளைஞர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் தொலைக்கல்வி சேவைகளையும் பெறமுடியும்.



அறிவகம்

இந்நிலையமானது வேலனை பிரதேசத்தில் முதன்முதலாக அல்லைப்பிட்டியிலேயே நிறுவப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. இந் நிலையத்தின் சேவைகளை அயல் கிராமத்தவர்களும் பெற்றுக்கொள்ள முடியும்.

அல்லைப்பிட்டி கிராமத்தில் பல வளங்கள் உள்ள போதும் அவை சரியான வகையில் பயன் படுத்தப்படுவதில்லை, பாரம்பரிய நடைமுறை களை கைவிட்டு நவீன முறைகளை பயன்படுத்த வேண்டும். இவற்றுக்கு தேவையான தொழில் ப வசதிகளும், பயிற்சிகளும், நிதி உதவி நம், நவீன உபகரணங்களும் வழங்கி ாருளாதார வளர்ச்சிக்கு வித்திட வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

## சுற்றுலாத்துறை

பாரம்பரிய அடையாளங்களாக கப்பலடி என அழைக்கப்படும் இடம் கிழக்கே உள்ளது. இவ் இடத்தில் அந்நியர் ஆட்சிக்கா த்தில் பாய் மரக் கப்பல்கள் வந்து செல்லுமிடமா கருதப்பட்டது. இதனை அண்டியே முன்னர் கு பிட்ட அல்லி ராணி கோட்டை அமைந்துள்ளது. டன் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த கோபுரத்தினையும் குறிப்பிடலாம்.

சுற்றுலாத்துறையை எடுத்துக்கொண்டால் சாட்டி கடற்கரையுடன் கூடிய 2km நீளமுடைய ஆழ் கடற் பரப்பும், அல்லைப்பிட்டி கடற்கரையி லிருந்து 1km தொலைவில் கடலுக்குள் அமைந் துள்ள இயற்கை வளம் பொருந்திய இடத் தினையும் குறிப்பிடலாம். இங்கு முருகை கற் களினாலான பாறைகள், குன்றுகள், கடற் தாவரங்கள், கடல் வாழ் உயிரினங்கள், பூ வடிவி லான முருகை கற்பாறைகள், வண்ண மீன்கள் என்பனவற்றை கண்டுகளிக்கலாம். இன்னும் சரியாக இனங்காணப்படாத இவ்விடத்தை சுற்றுலாத்துறையினரை கவரும் இடமாக குறிப் பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***பின்னிணைப்பு***

பாடசாலைகள்


அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்

அல்லைப்பிட்டி றோ.க.த.க. பாடசாலை



*புராதன ஆலயம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்கும்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண்கும்பான் கிராமம் ஓர் நோக்கு


திரு.இ.யோகேஸ்வரன்
கிராம அலுவலர் - தரம் I
பிரதேச செயலகம் - வேலணை


## அறிமுகம்

ஈழ மணித்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண திருநாட்டை அண் மித்த யாழ் ஊர்காவற்றுறை பிரதான வீதியில் 8km தூரத்தில் தீவகம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள மண்கும்பான் கிராமம் 4ம் வட்டாரம், 5ம் வட்டாரம் எனும் இரு பிரிவு களைக் கொண்ட இயற்கை எழில் கொஞ்சும் வெண்மணல் பாங்கான நன்னீர் வளம் நிறைந்த கற்பகதருவின் கவின்மிகு காட்சிகளையும் தெவிட்டாத தென்னந் தோப்புக்களையும் கொண்டு சைவமும், தமிழும் தழைத் தோங்கும் எழில்மிகு விவசாயக்கிராமம் ஆகும்.

இக்கிராமம் 4.8 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. கிழக்கு எல்லையில் அல்லைப்பிட்டிக் கிராமத்தையும், மேற்கு எல்லையில் வேலணை சாட்டி கிராமத்தையும் அயல் கிராமங்களாகக் கொண்டு 3.25km நீள மான வடக்கேயுள்ள உவர்நிலக் கடற்கரை யையும் 3.5km நீளமான வெண் மணல் பரப்பையும் கொண்டு உல்லாசப் பயணிகளைக் கவரும் வெள்ளைக் கடற்கரையை தெற்கேயும் தன்னகத்தே கொண்டுள்ள இக்கிராமம் தீவகத்தின் நன்னீர் விநியோக மையமாகக் காணப்படுதவால் தீவகம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவின் இதயப் பகுதியாக முக்கி யத்துவம் பெறுகின்றது எனக் கூறினால் அது மிகையாகாது.

## வரலாறு

இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் மணல் பாறைகளின் மீது இயற்கை ஏற் படுத்திய காலநிலை மாற்றங்களின் தாக்கம் மற்றும் இப்பகுதி கடலடித்தள இயல்பு நிலை காரணமாகவும் உருவாகிய மணல், கடல், அலை மற்றும் காற்றின் தொடர்ச்சியான இயக்கம் காரணமாக ஒதுக்கப்பட்டு கிராமத்தின் பல்வேறு பகுதிகளிலும் காணப்பட்ட பாரிய மணல் குவியல்கள் (கும்பங்கள்) இக்கிராமத் திற்கு மண்கும்பான் எனப் பெயர்வரக் காரண மாயிற்று.

## பௌதீக வளம்



மணல் மேடு

மண்கும்பான் கிராமத்தின் பௌதீக வளங்கள் என்ற வகையில் கிராமத்தின் பெயருக்கேற்ப, கட்டுமானத் தேவைகளுக்கு மிகப் பொருத்தமான தரமான வெண் மணல் அரிய கனிய வளமாக கிராமம் எங்கும் பரவிக் காணப்படுகினறது. கடந்த 40 வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட சுமார் 30 அடி உயரமான பாரிய மணல் மலைகள், மனித செயற்பாடு களால் அருகிவிட்ட நிலையில் தற்போது ஒரு சில மணல் மேடுகளே கிராமத்தில் காணப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன.இவ்வாறான மண் மலைகள் இருந்த மைக்கான சான்றாக கிராமத்தின் குறித்த பகுதிக் காணிகளின் பெயர் "இராச மலை காடு" என்ற வாறு இன்னும் வழக்கிலுள்ளது.

இக் கிராமத்தின் நிலத்தடி நீர் மாசற்ற சுத்தமான நன்னீராக காணப்படுவதோடு, தென் கடலோரக் கரையிலே 6 அடி ஆழத்தில் நன்னீர் ஊற்றினைக் கொண்ட நீர்வளம் பொருந்திய அதிசய பூமி ஆகும். பிரதான வீதியின் வட பகுதியில் ஊரி களிமண்ணினைக் கொண்ட கால் நடைகளுக்கு உணவளிக்கும் பசும் புற்றரை காணப்படுகின்றது. இது இப்பகுதி கால்நடை வளர்ப்போருக்கு சாதகமாகவுள்ளது. கிராமத்தின் மையப் பகுதியில் நெற் செய் கைக்கு உகந்த வண்டல் மண்ணைக் கொண்ட செழிப்பான நெல் வயல்கள் பரந்து விரிந்து காணப்படுகின்றது. மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்குரிய வளமான தோட்ட நிலங்களும் தாராளமாகக் காணப்படுகின்றது. இவற்றில் 30% மானவையே தற்போது பயன்பாட்டிலுள்ளது. தென்னை செய்கைக்கும் இக்கிராம மண்வளம் மிகப் பொருத்தமானதாகக் காணப்படுவதால் தென்னந் தோப்புக்கள் நிறைந்ததாகவும் பனை வளம் நிறைந்ததாகவும் காணப்படுவதாலும் எதிர் காலத்தில் தென்னை மீள் நடுகையை ஊக்குவித்து பனை, தென்னை தொடர்பான கைத்தொழில்களை நிறுவி அபிவிருத்தி செய்யக் கூடிய வாய்ப்பக்களை இப்பகுதி மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

கிராமத்தின் நீர் நிலைகளைப் பொறுத்த வரையில் கேணிக்கரைக் குளம், தச்சன்காட்டுக் குளம், புலுணிக்குளம் ஆகியன முக்கியமானவை அத்துடன், பிரதேச சபைக்குரிய 10 பொதுக் கிணறுகளும் காணப்படுகின்றன. வயல் நிலங்களில் தேங்கும் மேலதிக வெள்ள நீரை கடலுக்கு வெளியேற்று வதற்கு மண்கும்பான் 4ம் வட்டாரத்தில் ஒரு வெள்ள வாய்க்காலும் 5ம் வட்டாரத்தில் ஒரு வெள்ள வாய்க்காலும் உள்ளது. அத்துடன் கடல் நீர் கிராமத்தினுள் உட்புகுவதை தடுக்கவும் நன்னீரை சேகரிக்கவும் வடகடல் உவர் நீர் தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்காலத்தில் ஒருதுளி மழை நீரையேனும் கடலுக்குள் செல்ல விடாது மழைநீரை சேகரிக்கும் முறைகளை ஏற்படுத்தி கிராமத்தின் நிலத்தடி நீரைப் பெருக்குவதற்கு காலத்தின் கட்டாயமாகும். மேலும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய யாழ் ஊர்காவற்றுறை பிரதான வீதியும், வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய சாட்டி வீதி, மற்றும் அல்லைப்பிட்டி, மண்கும்பான் வீதியும் கிராமத்தை ஊடறுத்து செல்வதோடு பிரதேச சபைக்குரிய 16 உப வீதிகளும் இங்கு காணப் படுகின்றன.

### மனித வளமும் மீள்குடியேற்றமும்

இரு வட்டாரப் பிரிவுகளை உள்ள டக்கிய மண்கும்பான் கிராமத்தில் 1990ம் ஆண்டுக்கு முன்னர் (இடம்பெயர்வுகளுக்கு முன்னர்) 500 குடும்பங்களை சேர்ந்த 1650 பேர் வாழ்ந்து வந்தனர். இதன் பின்னர் ஏற்பட்ட யுத்த நிலைமை காரணமாக பல்வேறு காலப் பகுதியிலும் ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் அடிப் படை வாழ்வாதாரம் 90% அழிக்கப்பட்ட நிலையில் தற்போது 2009/2010ம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர் 250 குடும்பங்களைத் சேர்ந்த 810 பேர் இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

### நீர் விநியோகம்

இலங்கை நீர் வழங்கல் வடிகால மைப்பு சபையின் மண்கும்பான் செட்டிகாடு நீர் விநியோகத்திட்டம் 50 பரப்பு காணியில் 10 கிணறுகளையும் 04 நீரிறைக்கும் இயந்திரங் களையும் 01 மின் பிறப்பாக்கியையும் ஊழியர் தங்கும் விடுதி ஒன்றையும் கொண்டு இயங்கி வருகின்றது. இவ்விநியோக மையத்திலிருந்து தினசரி 150 000 லீற்றர் நீரை ஊர்காவற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைக்கும் 10 000 லீற்றர் நீர் மண்டைதீவுக்கும் விநியோகிக்கப்படுகின்றது. குறித்த பகுதியில் இருந்து 10 கிணறுகள் மூலம் தொடர்ந்து நீரை வெளியேற்றுவதனால் இரு கிணறுகள் சவர் தன்மை அடைந்து பாவனையில் இருந்து தவிர்க் கப்பட்டுள்ளது.



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை

இக்கிணறுகளில் இருந்து தொடர்ந்து நீரை இறைக்கும் போது அய லிலுள்ள குடியிருப்பாளர்களின் கிணற்று நீர் மட்டம் திடீரெனக் குறைவடைகின்றது. அவை உவர்நிலை அடையக்கூடிய ஆபத்தான நிலையும் எதிர்காலத்தில் ஏற்படலாம். இதற்கு சட்ட விரோத மணல் அகழ்வும் காரணமாக வுள்ளது. திட்டமிட்ட முறையில் மணல் அகழ் வினை மேற்கொள்வதுடன் இதற்கான சட்ட ஒழுங்குகளை ஏற்படுத்தி சட்டவிரோதமாக நடைபெறும் மணல் அகழ்வுகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியம் அல்லது மணல் அகழ்வினை முற்றாகத் தடைசெய்தல் சாலச் சிறந்ததாகும். அத்துடன் இக்கிராமத்தின் நிலத்தடி நீர் பற்றிய ஆய்வினை மேற்கொண்டு இப்பகுதியில் இருந்து வேறு பகுதிக்கான நீர் விநியோக முறைமைகளை, உபாயங்களை மாற்றியமைத்தல் காலத்தின் தேவையாகும்.

## *பொருளாதாரம்*

இக்கிராமத்தைச் சேர்ந்த பெரும்பா லானோர் விவசாயத்தையும், விவசாயத்துடன் இணைந்த தொழில்களையுமே செய்து வரு கின்றனர். இவர்கள் மிளகாய், வெங்காயத் துடன் பெரும்பாலான மரக்கறி (பயற்றை, புடோல், பாவல், கத்தரி, வெண்டி, தக்காளி, பூசணி) வகைகளையும் பயிரிடுவதோடு வெள்ளரிப்பழம், வத்தகப்பழம் போன்ற பழ வகைகளையும் உப பயிராக பயிரிட்டு வரு கின்றனர். அத்துடன் 75 ஏக்கர் நிலப்பரப்பில் நெற் செய்கையும் மேற் கொண்டு வருகின்றனர். வீட்டுத் தோட்டச் செய்கைகளையும் ஆர்வ முடன் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் பனை, தென்னை போன்ற நிரந்தர பயிர்களின் வருமானத்தை நம்பியும் அதனோடிணைந்த சிறு குடிசைக்கைத் தொழில் களில் ஈடுபட்டும் வாழ்ந்து வருகின்றனர். மேலும் தற்போது இந்திய முருங்கை இனத்தைப் பயிரிட்டு கணிசமான வருமானத்தை பெற்று வருவதோடு திராட்சைப்பழப்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு அதிலும் வெற்றி கண்டுள்ளனர். அத்துடன் பெரிய வெங்காய உண்மை விதை உற்பத்தியிலும் பரீட்சார்த்த மாக ஈடுபட்டுள்ளனர். விவசாயத்திற்குத் தேவையான நீரை நீர்ப்பம்பிகள் மூலம் கிணறு மற்றும் குட்டைகளிலிருந்து பெற்று பயன்படுத்து கின்றனர்.



முந்திரிகைத் தோட்டம்

பொதுவாக வியாபாரத்துறையை நோக்கும் போது யாழ் நகரின் தங்கநகை வியா பாரத்தில் சிறப்புற்று விளங்குவோர் பெரும் பாலும் இக்கிராமத்தை பூர்வீகமாக கொண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களே ஆகும். இவர்களும் ஏனைய வர்த்தக துறையினரும் இணைந்து மீளக் குடியேறிய பல இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்கியுள்ளதோடு கிராமத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இருந்து வருகின்றனர். உள்ளூரில் நிரந்தரமாக வசிப்பவர்களில் சிலர் சிறு பலசரக்கு கடைகள் மூலம் பலசரக்கு வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் சிலர் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளையும், பனை சார்ந்த உற்பத்திப் பொருட்களையும் கொள்வனவு செய்து வெளியிடங்களில் விற்பனை செய்து பொருளீட்டி வருகின்றனர். குறிப்பிட்ட சில இளைஞர்கள் யாழ் நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் கடை சிப்பந்திகளாக பணியாற்றி வருகின்றனர். கைத்தொழில் என்ற ரீதியில் நோக்கும் போது பாரிய கைத்தொழில்கள் எவையும் காணப்படவில்லை. எனினும் சிறு குடிசைக்கைத்தொழில் என்ற வகையில் பனை, தென்னை சார்ந்த பொருட்களின் உற்பத்தி மற்றும் உணவு பொதியிடல் என்பன இங்கு குறிப்பிடத் தக்களவு மேற்கொள்ளபபட்டு வருகின்றது. சுயதொழிலாகக் கால்நடை வளர்ப்பு மட்டுமே மேற்கொண்டு வருகின்றனர்.

இத்துடன் இக்கிராமத்தில் வசிக்கும் முஸ்லிம் சகோதரர்கள் கடற்றொழிலை நம்பி வாழ்ந்து வருகின்றனர்.

### கல்வி

மண்கும்பான் கிராமத்தின் கல்வித் துறையை எடுத்துக் கொண்டால் 1946ம் ஆண்டுக்கு முன்னர் கிறிஸ்தவ மிசனரிமாரின் கட்டுப்பாட்டில் மண்கும்பான் 4ம் வட்டாரத்தில் இயங்கிய அமெரிக்க மிசனரி பாடசாலை மிகப் பழமை வாய்ந்த ஆரம்பப் பாடசாலை ஆகும். செயலிழந்து போயுள்ள இப்பாடசாலையின் கட்டிட இடுபாடுகள் மட்டுமே கிராமத்தில் தற்போது காணப்படுகின்றது.

1946ம் ஆண்டுக்கு பின்னர் இந்து போட் ஸ்தாபகர், இந்து போட் இராசரத்தினம் அவர் களின் நிதியுதவியுடனும் மண்கும்பானை சேர்ந்த நிலச் சுவாந்தர் திரு. ஆறுமுகம் சோமசுந்தரம் அவர்கள் 2 ஏக்கர் காணியை நன்கொடையாக வழங்கியமையாலும், 08.04. 1948ல் மண்கும்பானின் மத்திய பகுதியில் இந்து பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இந்து போட் இராசரெத்தினம் அவர்களால் கிராமத்தின் கொடையாளர்களின் ஒத்துழைப்புடனும் நடாத் தப்பட்டு வந்தது. 1960களில் அரச பாட சாலையாக சுவீகரிக்கப்பட்டு மண்கும்பான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையாக தோற்றம் பெற்றது. இன்று தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புக்களுடன் 4 ஆசிரியர் களையும் 48 மாணவர்களையும் கொண்டு வகை III தரத்துடன் இயங்கி வருகின்து. அன்றிலிருந்து இன்று வரை மண்கும்பான் கிராம கல்விப்புல மேம்பாட்டிற்கு அளப்பரிய சேவைகளை இப்பாடசாலை ஆற்றி வருகின்றது.




*யா/மண்கும்பான் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை*

இடம்பெயர்வுக்கு முன்னர் வட இலங்கை சர்வோதய சபையால் இயக்கப்பட்டு வந்த இரு முன்பள்ளிகள் தற்போது செயலிழந்துள்ள நிலையில் விநாயகர் முன்பள்ளி வேலணை பிரதேச சபை மற்றும் கிராமத்தின் புலம்பெயர் அன்பர்களின் அனுசரணையுடன் திறம்பட பாலர் கல்வி சேவையை ஆற்றி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுகாதாரம்**

இக்கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையமோ மருத்துவ மனையோ இல்லாமை இக்கிராம மக்களிடையே பெரும் குறையாக காணப்படுகின்றது ஆரம்ப சுகாதார நிலைய சேவைகளைப் பெற அல்லைப்பிட்டிக்கும் மருத்துவ சேவையினைப் பெற வேலணைப் பிரதேச வைத்தியசாலைக்கும் அல்லது 5km தூரத்திலுள்ள யாழ் போதனா வைத்திய சாலைக்கும் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

**சுற்றுலாத்துறை**

கிராமத்தின் தென் கடல் பகுதி ஆழமற்ற கடல் பகுதியாகும். வெள்ளைக் கடற்கரை என அழைக்கப்படும் வெண்மணல் பரப்பை கொண்ட அழகிய கடற்கரையாக அமைந்திருப்பதனாலும் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு ஏற்ற பௌதீக அம்சங்களை கொண்டிருப்பதனாலும் எதிர்காலத்தில் இங்கு சுற்றுலாத்துறை சார்ந்த பல தொழில் வாய்ப்புக்கள் மற்றும் உற்பத்திகளை மேற்கொள்ளக்கூடிய வசதி வாய்ப்புக்கள் உள்ள போதும் மக்கள் மத்தியில் காணப்படும் ஆர்வமின்மை, போதிய நிதிவசதியின்மை, பொருத்தமான தொழில்நுட்ப அறிவின்மை, மற்றும் சந்தைப்படுத்தும் திறனின்மை போன்ற காரணங்களால் இத்துறை மூலம் கிடைக்கக் கூடிய தொழில் வாய்ப்புக்கள் இழக்கப்படுவதுடன் சுற்றுலாத்துறையும் பாதிப்படைகின்றது என்றே கூறலாம். எதிர்காலத்தில் கிராமத்தின் இளைஞர் யுவதிகளுக்கு சுற்றுலாத்துறை சார்ந்த பயிற்சியினை வழங்கி ஊக்குவித்தால் கிராமத்தின் பொருளாதார வளம் மேம்படும் என்பது நிச்சயம்.


**ஆலயங்கள்**

இக்கிராமத்தில் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களே மிக அதிகளவில் வசித்து வருவதால், இங்கு இந்து கோவில்களே அதிகமாக காணப்படுகின்றன. இந்த வகையில் மண்கும்பான் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் பழம்பெரும் வரலாற்று பெருமை கொண்டதும் மண்கும்பான் மக்களின் குல தெய்வமாகவும் விளங்குகின்றது. கிராமத்தின் மஹோற்சவம் நடைபெறும் ஒரே ஆலயமாகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. அத்துடன் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயம், கருமாரி அம்மன் ஆலயம், சிவகாமி அம்மன் ஆலயம் என்பனவும் சிறப்பு வாய்ந்த ஆலயங்களாகும். இவற்றைவிட கிராமிய வழிபாட்டோடு இணைந்த சிறிய ஆலயங்களான ஐயனார் ஆலயம், செட்டிகாடு ஞானவைரவர் ஆலயம், திருவண்ணாமலை ஞானவைரவர் ஆலயம், வண்ணான் குண்டு ஞானவைரவர் ஆலயம் ஆகியவை கிராம எல்லைகளில் காவல் தெய்வங்களாக விளங்குகின்றன.

அத்துடன் பாரம்பரிய பெருமை கொண்ட வெள்ளைக் கடற்கரை ஜும்மா பள்ளிவாசல் கி.பி. 1598இல் ஷெய்கு சுல்தான் அப்துல் காதிர் வொலிய்யுல்லாஹ் றழி (வீரா சாமியார்) அவர்கள் விஜயஞ்செய்த பின்னர் அடக்கம்

ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்





ஜும்மா பள்ளிவாசல்

பெற்றதால் இது புனிதம் பெற்ற தலமாக கருதப்படுகின்றது. மேலும் இறைவன் இல்லம் என அழைக்கப்படுகின்ற பாபா பள்ளிவாசல் அனைத்து சமய மக்களுக்குமான மன ஆற்றுகைக்கான தியான வழிபாட்டு சேவையை வழங்கி வருகின்றது.

**அபிவிருத்தியும் தந்திரோபாயங்களும்**

1975ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பான் கிராம அபிவிருத்திச் சங்கம் கிராமத்தின் வளர்ச்சியிலும், உட்கட்டுமான பணிகளிலும் காத்திரமான ஆலோசனை மற்றும் சேவைகளை வழங்கி வருகின்றது. 1996ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மண்கும்பான் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம், பெண்கள் உரிமை, பெண் தலைமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி இல்லத்தரசிகளின் மனைப் பொருளாதாரத்தை வளம்படுத்தி அதன் மூலம் கிராமத்தை வலுப்படுத்தும் செயற்பாட்டினை முன்னெடுத்து வருகின்றது.

கிராமத்தின் விவசாயிகளின் நலன்களை மேம்படுத்துவதற்கும் அவர்களது விவசாய தேவைகளை குறிப்பாக தொழில்நுட்ப ஆலோசனை, விவசாயக் கடன், உள்ளீடுகள், பயிற்சிகள் என்பனவற்றை வழங்குவதற்காக 1996 ல் மண்கும்பான் விவசாய சம்மேளனம் ஆரம்பிக்கப் பட்டது. மேலும் புதிய நீர்ப்பாசன முறைகளை அறிமுகப்படுத்தி விவசாய நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதோடு அதனோடிணைந்த கால்நடை வளர்ப்பும் சிறப்பாக அபிவிருத்தி பெறுவதற்காக இவ்வமைப்பு பல்வேறு சேவைகளை ஆற்றி வருகின்றது.

மண்கும்பான் விநாயகர் சனசமூக நிலையம் நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் சேதமடைந்து தற்போது பகுதித் திருத்தம் செய்யப்பட்ட நிலையில் பொது மக்களுக்கான சேவையினை வழங்கத் தயாராகி வருகின்றது. பிரதேச புத்தி ஜீவிகளால் உருவாக்கப்பட்ட மண்கும்பான் அபிவிருத்தி கழகம் புலம் பெயர்ந்தோரின் உதவிகளை ஒருங்கிணைத்து கிராம அபிவிருத்திக்கு பயன்படுத்தி வருகின்றது.

செந்தமிழ் சிறுவர் கழகம் மூலம் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் அனுசரணையுடன், சமாதானக் கல்வி, வன்முறையற்ற தொடர்பாடல், பெண்கள் உரிமை, சிறுவர் உரிமை, சிறுவர் துஷ்பிரயோகம், தலைமைத்துவம் தொடர்பான கருத்தமர்வுகள் மற்றும் போட்டிகள் ஒன்றுகூடல் நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் ஆகியவற்றை நடாத்தி சிறுவர் மேம்பாட்டுக்கு உதவி வருகின்றது. அத்துடன் மண்கும்பான் உபதபாலகம், தொடர்பாடல், பொதுசன உதவிக் கொடுப்பனவு வழங்கல், கிராமிய வங்கிச் சேவை ஆகிய செயற்பாடுகளில் மக்களுக்கு பக்க பலமாக வுள்ளது.

மேலும் சமூக பிரச்சினை மற்றும் அனர்த்தம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மக்களை நல்வழிப்படுத்தவும் பாதுகாக்கவும் சிவில் பாதுகாப்புக் குழுவும், அனர்த்த முகாமைத்துவ குழுவும் தயார் நிலையிலுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்..

2009ம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள்.


1) வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவச மின் விநியோகம்
2) மண்கும்பான் - அல்லைப்பிட்டி தார் வீதி புனரமைப்பு
3) கருமாரி அம்மன் தார் வீதி புனரமைப்பு
4) சிவகாமி அம்மன் ஊரி வீதி புனரமைப்பு
5) கருமாரி அம்மன் கடற்கரை ஊரி வீதி, புதியது அமைக்கப்பட்டது.
6) மண்கும்பான் சாட்டி தார் வீதி புனரமைப்பு
7) அரை நிரந்தர வீடு -130
8) NEHRP நிரந்தர வீடு -32
9) அரை நிரந்தர மலசல கூடம் - 52
10) நிரந்தர மலசல கூடம் - 20
11) மலசல கூடத்திருத்தம் - 25
12) வாழ்வாதாரம் உதவி-170 குடும்பங்களுக்கு
13) பொது கிணறு திருத்தம் - 35
14) வடகடல் உவர் நீர்த்தடுப்பானை - 3km
15) திவிநெகும மனைப் பொருளாதார உதவி -243 குடும்பங்களுக்கு
16) இந்திய வீட்டுத்திட்டம் - 77

மேற்படி அபிவிருத்தி திட்டங்களை கிராமத்தில் நடைமுறைப்படுத்திய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நன்றிகளை தெரிவிப்பதோடு மேலும் பல அபிவிருத்தி திட்டங்களை கிராமத்தில் மேற்கொண்டு கிராமத்தின் பூரண வளர்ச்சிக்கு பக்கபலமாக இருக்க வேண்டும் என வேண்டுகின்றேன்.

***பின்னிணைப்பு***

பாடசாலைகள்
மண்கும்பான் அ.த.க.பாடசாலை
மண்கும்பான் அரச தமிழ் முஸ்லீம் பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலணைக் கிராமம் வாழ்வும் வளமும்

திரு.கா.பொ.இ.குலசிங்கம்
கிராம அலுவலர் – தரம் I
பிரதேச செயலகம் – வேலணை

### அறிமுகம்

இந்து சமுத்திரத்தின் நித்திலம் என சிறப்பிக்கப்படுவது இலங்கை. இதன் சிகரம் என விளங்குவது யாழ்ப்பாணம். யாழ்பாணத்திலிருந்து தென்மேற்கே பண்ணை ஊர்காவற்றுறை வீதியில் சுமார் 8 கிலோமீற்றர் தூரத்தில் ஆரம்பமாகின்றது வேலணைக்கிராமம். இதன் கிழக்கு எல்லையாக மண்கும்பானும் மேற்கே சுருவில், புளியங்கூடல், சரவணை ஆகிய கிராமங்களும், வடக்கு, தெற்கு எல்லைகளாக கடல்களும் காணப்படுகின்றன.

வரலாற்று ரீதியாக வேலணைக் கிராமம் வேலணை கிழக்கு, வேலணை மேற்கு என இரு கிராம அலுவலர் பிரிவுகளாக இருந்தது. 1987 ல் கிராம அலுவலர் பிரிவுகள் நாடளாவிய ரீதியில் மீளாய்வு செய்யப்பட்ட போது வேலணை கிழக்கு, வேலணை மேற்கு ஆகிய பிரிவுகளுடன் வேலணை வடக்கு, வேலணை தெற்கு ஆகிய இரு பிரிவுகளும் சேர்க்கப்பட்டு நான்கு பிரிவுகளாக்கப்பட்டன. மீண்டும் 1990 இல் கிராம அலுவலர் பிரிவுகள் மீளாய்வின் போது வேலணைக் கிராமமானது 01 தொடக்கம் 08 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு என்ற ரீதியில் 1ம் வட்டாரம் J/13 வேலணை வடகிழக்கு, 2ம் வட்டாரம் J/16 வேலணை கிழக்குமத்தி, 3ம் வட்டாரம் J/15 வேலணை தென்கிழக்கு, 4ம் வட்டாரம் J/14 வேலணை கிழக்கு, 5ம் வட்டாரம் J/12 வேலணை வடக்கு, 6ம் வட்டாரம் J/17 வேலணை தெற்கு, 7ம் வட்டாரம் J/18 வேலணை மேற்கு மத்தி,8ம் வட்டாரம் J/19 வேலணை மேற்கு என எட்டு கிராம அலுவலர் பிரிவுகளாக்கப்பட்டன. வேலணைக் கிராம மானது 5.5 கி.மீ நீளமும், 5 கி.மீ அகலமும் உடையது. இதன் பரப்பளவு 23.319 சதுர கிலோ மீற்றராகும். ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம் வீதிக்கு தெற்குப் பக்கமாகவுள்ள பகுதி களிலேயே குடியிருப்புக்கள் அமைந்துள்ளன. வீதிக்கு வடபுறம் பரந்த வெளியாய் மேய்ச்சல் தரையாகவுள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்பு வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளுக்கான நிர்வாகக் காரியாலயம் ஊர்காவற்றுறையில் அமைக்கப்பட்டது. 1973ம் ஆண்டு வேலணைக்கென பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பணிமனை வேலணையிலே அமைக்கப்பட்டது. இதுவே தற்போது பிரதேச செயலகமாக இயங்குகின்றது.

### வரலாறு

யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி காலத்தில் வேலன் என்னும் பிரதானி தானை சேனையுடன் வந்து தங்கி யிருந்த இடமாகையால் வேலன்தானை என்பது மருவி வேலணை எனவும், முருகப் பெருமானின் கைவேல் அணைந்த இடமாகையால் வேலணை எனப் பெயர் பெற்றதாகவும் கூறுவர். வேலணைக் கிராமத்தில் பள்ளம்புலம் முருக மூர்த்தி கோயில், சிற்பனை முருகன் கோயில், வங்களாவடி நொச்சியம்பதி முருகன் கோயில், துறையூர் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், ஆகியன அமைந்திருப்பது இதனை உணர்த்தி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணைக் கிராமத்தில் அடங்கும் எட்டுக்கிராம அலுவலர் பிரிவுகளிலும் பல குறிச்சிப் பெயர்கள் உள்ளன. அவையாவன பெரியபுலம், சிற்பனை, கேணிக்கரை, கொல்லுக் குடி, சாத்திரங்குண்டான், சீனக்கலடு, தலை காட்டி, தும்பளைப்பிட்டி, குரக்கன்பிட்டி, நெல் லாவில், கொட்டப்பெட்டிமூலை, கெட்டில் முக்கியாதுறை, பள்ளம்புலம், ஈச்சம்புலம், அரங் கணங்கை, கற்குழிவயல், திமிலன்காடு, முனியன்தோட்டம், செம்மண்காடு, ஆலம்புலம், கோயிலடி, வங்களாவடி, சோளாவத்தை. கமரவெளி. கைத்தனை, தாழிபுலம், துறையூர், நாவலடிப்புலம், அக்கவாளி, சாட்டி, தேவி கோட்டம், கோயிலுப்புலம், ஆரவயல்பிட்டி, இலந்தைக்காடு, கந்தன்கடவை என்பனவாகும்,



நான்கு கிளைத் தென்னை

### பௌதீகவளம்

ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம் வீதிக்கு வடக்குப் பக்கமாகவுள்ள நிலங்கள் ஊரி கலந்த உவர்மண்ணாகவும் பற்றைக்காடுகளும் மேய்ச்சல் தரைகளும் நிறைந்த இடமாக வுமுள்ளது. வீதிக்குத் தெற்குப் பக்கமாகவுள்ள பகுதி வளங்குறைந்த மண்வகைகளைச் சார்ந்த தாகவுள்ளது. பெருமளவு பகுதி சமதரையாக இருப்பினும் ஒப்பீட்டு ரீதியில் வடக்கு, வட மேற்குப் பகுதிகளிலும் பார்க்க கிராமத்தின் தெற்குப் பகுதிகள் உயரங்கூடிய நிலங்களைக் கொண்டுள்ளன. கிராமத்தின் தரவைப் பகுதி களும் நெற்செய்கைக் காணிகளும் உயரங் குறைந்தும், குடியிருப்பு தோட்டக்காணிகள் பனை வளவுகள் உயரங்கூடிய பகுதிகளாகவும் உள்ளன. குறிகாட்டுவான் – யாழ்ப்பாணம் வீதியில் 2km, 1ம் வட்டாரங்களிலும் , சிற்பனை, வேலணை மேற்கு மத்தி, வேலணை மேற்கில் சுருவில் ஊர்காவற்றுறை வீதிக்கு கிழக்குப் பகுதி ஆகிய இடங்கள் பயிர்ச்செய்கைக்குரிய களிப்பாங்கான, சாம்பல் நிற வண்டல்மண், வகைகள் அடங்கிய பிரதேசங்களாகவுள்ளன. சாட்டி, மண்கும்பானை அண்டிய பகுதிகள் மணல் பாங்கான மண்வகையைக் கொண்டுள்ளன.

### மனித வளம்

வேலணைக் கிராமத்திலுள்ள எட்டுக் கிராம அலுவலர் பிரிவுகளிலும் மொத்தமாக 1482 குடும்பங்களைச் சேர்ந்த 5044 பேர் வசித்து வருகின்றனர். இவர்களில் 46 குடும் பங்கள் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுபவர் களாகவும் 1436 குடும்பங்கள் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களாகவும் விளங்குகின்றனர். மொத் தத்தில் வேலணைக்கிராமமானது சைவ மணங் கமழும் கிராமமாகத் திகழ்கின்றது. கிராமத்தின் இன்றைய மக்கள் பரம்பலை நோக்கின் துறையூர், அம்பிகைநகர், செட்டிபுலம், அம்மன் கோயிலடி, கண்ணபுரம், பஸ்கொம்பனியடி, சிற்பனை ஆகிய பகுதிகளில் மக்கள் செறிவாக வாழ்கின்றனர். இலங்கையில் மீனவ சமூகத் தினர் மத்தியில் கிறிஸ்தவமதம் முக்கியத்துவம் பெற்றிருந்தபோதும் வேலணைக் கிராமத் திலுள்ள மூன்று பெரிய மீனவ குடியிருப்புக் களிலும் இந்து சமயத்தவரே முழுமையாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### நீர் வளம்

கிராமத்தின் நீர்வளத்தின் பெரும்பகுதி தரைக்கீழ் நீராகும். மேற்பரப்பு நீர் மழைமூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய குளங்களில் சேர்கின்ற வெள்ள நீரினால் கிடைக்கின்றது. வருடத்தில் ஐப்பசி மாத பிற் பகுதியில் இருந்து பங்குனி மாத இறுதிவரையும் கிணறுகளில் நீர் இருக்கும். கிணற்று நீர் வீட்டுப் பாவனைக்கு உகந்ததாக இருப்பினும் விவசாய நடவடிக்கைகளுக்கு போதுமானதாக இருக்காது. சாட்டியில் நன்னீர் வளமும் அம்மன் கோவிலடி, சிற்பனை, வேலணை மேற்கு புளியங்கூடலுக்கு அண்மித்த பகுதிகள் ஓரளவு நன்னீர்த்தன்மை வாய்ந்தவையாகவும் காணப் படுகின்றன. பெரும்பாலான இடங்களில் உள்ள கிணற்று நீர் வீட்டுப்பாவனைக்கே பயன்படுத்த முடியாத உவர்த்தன்மை கொண்டதாகவுள்ளது.



குடிநீர் விநியோகம் - சாட்டி

மக்களின் அன்றாடத் தேவைக்கான குடிநீரின் பெரும்பகுதி சாட்டிப் பகுதியில் இருந்தே தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குழாய்நீர் விநியோகத்திட்டத்தின் மூலமும், வேலணைப் பிரதேச சபையின் குடிநீர் விநியோகத்தின் மூலமாகவும், ஈடுசெய்யப் படுகின்றது. எனினும் போதியளவு நீரைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் சிரமங்களையே எதிர்நோக்குகின்றனர். எதிர்காலத்தில் இரணை மடுக்குள நீர் விநியோகத்திட்டம் செயற்படுத்தப் படும் சந்தர்ப்பத்தில் நீர்ப்பிரச்சினை நிவர்த் திக்கப்படலாம். வருடாந்தம் ஐப்பசி மாதத்தி லிருந்து மார்கழி மாதம் வரை கூடியளவு மழை வீழ்ச்சி காணப்படுகின்றது. மழைவீழ்ச்சிக்கும் தாழமுக்கத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பிருப்பதால் தாழமுக்கம் அதிகமாக வுள்ள காலங்களில் கூடிய மழைவீழ்ச்சி கிடைக்கும். சராசரி மழைவீழ்ச்சியானது 35"– 50" இடைப்பட்டதாகவுள்ளது. சராசரி வெப்ப நிலை 31° யாகக் காணப்படுகின்றது.

மழைநீரைத் தேக்கி வைக்கக்கூடிய நிலையில் முத்தாய்க்குளம், வெட்டுக்குளம், நவக்கைக்குளம், உப்புக்களிக்குளம், பனிக்கா மில்குளம், ஆலடிச்சாட்டி வண்ணான்குளம், சாந்தோமைக்குளம், வேணாக்குளம், கரிப் பியன்குளம், கேணிக்கரைக்குளம், கைத் தனைக்குளம், கொல்லுளிக்குளம், அம்பிகை நகர்குளம், பெருங்குளம், சங்கத்தார்கேணிக் குளம், வண்ணான்குளம், தேவகுளம், ஆரவயல் குளம், அதிசய வைரவர் கோயில் குளம், கோணாவில் குளம், பெரியகுளம் ஆகிய குளங்கள் உள்ளன. இவைகளில் பெரும் பாலான குளங்கள் பிரதேச சபையினாலும் கமநல சேவைகள் நிலையத்தினாலும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. சில குளங்களிலிருந்து விவசாயத்தேவைக்கு நீரைப் பயன்படுத்து கின்றனர்.

### பொருளாதாரம்

வேலணைக் கிராமத்தின் பொருளா தாரமானது 1990 இடப்பெயர்வுக்கு முன்னர் விவசாயத்துறையிலேயே தங்கியிருந்தது. 2005, 2009 ஆகிய ஆண்டுகளில் மக்கள் மீளக் குடியமர்ந்த போதும் விவசாயம் செய்வோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சியே காணப் படுகின்றது. பருவகால மழைவீழ்ச்சி அருகி வருவதும் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதில் ஏற்படுகின்ற சிக்கல், விவ சாய இரசாயனப் பொருட்களின் விலையேற்றம் விவசாயக் கூலிக் கொடுப்பனவுகளின் அதி கரிப்பு ஆகிய இன்னோரன்ன காரணங்களால் விவசாயத்துறை பின்தங்கிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. தற்போது 272 குடும் பங்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய சம்மேளனங்கள் கமநல சேவைகள் நிலையம் ஊடாக விதை நெல், உரம், ஆகியவை மானிய அடிப்படையில் வழங்கப் பட்டாலும் நெற் செய்கையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை மிகக் குறைந்தளவிலேயே உள்ளது. திவிநெகும வாழ்வெழுச்சித் திட்டத்தின் ஊடாக வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கப்படுவதால் கணிசமானோர் பருவ காலங்களில் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். பெரும் பாலானோர் வர்த்தகப் பயிரான புகையிலைச் செய்கையிலே நாட்டம் கொண்டுள்ளனர். சிறு தானியப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோர் மிகக் குறைந்தள விலேயே உள்ளனர்.

கடற்றொழிலைப் பொறுத்தமட்டில் சுமார் 417 குடும்பங்கள் கடற்றொழிலில் ஈடு படுகின்றனர். செட்டிபுலம், துறையூர் கண்ண புரம், அம்பிகைநகர் போன்ற கிராமங்களில் வசிப்போரின் வாழ்வாதாரத் தொழிலாக கடற் றொழிலே காணப்படுகின்றது. சிலர் இன்னும் பாரம்பரிய முறைகளான பாய்வள்ளம், கட்டு மரம், பறிக்கூடு கரப்பு, இறால்கூடு, களங்கண்ணி போன்றவற்றைப் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபடுகின்றனர். சிலர் வெளி இணைப்பு இயந்திரங்கள் பிளாஸ்ரிக் படகுகளைப் பயன் படுத்தி ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். தீவுப்பகுதி தெற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கிராமிய கடற்றொழி லாளர் அமைப்பு ஆகியன கடற்றொழிலை அபி விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றது. இலங்கை வங்கி, வர்த்தகவங்கி, ஹற்றன் நெசனல் வங்கி ஆகியன விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் ஆகி யோருக்கு இலகு கடன்களை வழங்கி வரு கின்றன. ஜப்பானிய தொண்டு நிறுவனமான "பார்சிக்" நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் வேலணை கிழக்கு கிராம அலுவலர் (J/14) பிரிவில் ஐஸ் உற்பத்தி நிலையமொன்றை உருவாக்கியுள்ளது. இதன் மூலமாக தொழி லாளர்களிடமிருந்து நியாயமான விலைக்கு கடலுணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப் பட்டு குளிரூட்டி வாகனங்கள் மூலமாக கடலுணவுப் பொருட்கள் கொழும்புக்கு ஏற்று மதி செய்யப்படுகின்றன. பார்சிக் நிறுவனம் நவீன முறையில் கருவாடு பதனிடும் பயிற்சியையும் வழங்கியுள்ளது. பரீட்சார்த்த முயற்சியாக கடற்பாசி வளர்க்கும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தி யுள்ளது.

வேலணைக் கிராமத்தைப் பொறுத்த மட்டில் பனைவளம் மிகுந்து காணப்படுவதால் கணிசமான குடும்பங்கள் பனைசார் தொழில் களான கள் இறக்கல், பாய், பெட்டி, கடகம் இழைத்தல், கருப்பட்டி, பனாட்டு, ஒடியல், புழுக் கொடியல் தயாரித்தல் ஆகிய முயற்சிகளிலும் ஈடுபட்டு வருவதுடன் தென்னிலங்கை மக் களுக்கு இவற்றை விற்பனை செய்தும் வரு கின்றன. வேலணைக் கிராமத்தில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும், விற்பனை நிலையங்கள் இரண்டும் செயற்படுகின்றன. துறையூரில் பெண் தலை மைத்துவக் குடும்பங்கள் சில மோர் மிளகாய் பதனிடும் குடிசைக் கைத்தொழிலில் ஈடு பட்டுள்ளன. சுமார் 100 குடும்பங்கள் அரசாங்கத் துறைகளில் கடமையாற்றுகின்றன. 50 வரையி லான குடும்பங்கள் வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. ஏனையோர் தச்சுவேலை, மேசன் வேலை, விவசாய, கடற்றொழில் கூலியாட்களாகவும் இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள வியாபார நிறுவனங்களில் தொழில் புரிபவர்களாகவும் உள்ளதுடன் சிறு தொகையினர் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிபவர்களாகவும் உள்ளனர்.

### கல்வி

பிரதேசத்தின் கல்வி நிர்வாக செயற் பாடுகளை பன்முகப்படுத்தும் நோக்கில் தீவகக் கல்வி வலயம் 1996ல் வேலணையில் ஆரம்பிக் கப்பட்டதுடன் வேலணைப் பிரதேச செயலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளின் செயற்பாடு களை மேற்கொள்ளும் முகமாக கோட்டக் கல்வி அலுவலகமும், ஆசிரிய வள நிலையமும் வேலணையிலேயே அமைந்துள்ளன.

வேலணைக் கிராமத்தில் வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம், செட்டிபுலம் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம், வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், ஆகிய மூன்று ஆரம்பப் பாடசாலைகள் இயங்குகின்றன, இவற்றில் மொத்தமாக 305 மாணவர்கள் கல்வி கற்பதுடன் 18 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர்.



*யா/வேலணை மத்திய கல்லூரி*

இடைநிலைப் பாடசாலைகளாக வேலணை கிழக்கு மகா வித்தியாலயம், வேலணை சரஸ்வதி வித்தி யாலயம், வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம், ஆகியன விளங்கு கின்றன. இவற்றில் தரம் 01 தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்புக்கள் உள்ளதுடன் 635 மாணவர்கள் கல்வி கற்பதுடன் 40 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். வேலணைப் பிரதேச செயலர் பிரிவிலேயே மிகப்பெரிய பாட சாலையாக வேலணை மத்திய கல்லூரி விளங்குகின்றது. இது தற்போது 1AB நவோதயப் பாடசாலையாக விளங்குகின்றது. இங்கு தரம் 6 தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரையிலான வகுப்புக்கள் உள்ளன. 762 மாண வர்கள் கல்வி கற்பதுடன் 33 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். வேலணைக் கிரா மத்தில் இவ்வாண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 10 மாணவர்கள் சித்தி யடைந்துள்ளனர். பாலர் முன்பள்ளிகளாக ஐயனார் முன்பள்ளி, நாவலர் முன்பள்ளி, தென்னிந்திய திருச்சபை முன்பள்ளி, தேவி கோட்டம் முன்பள்ளி மத்திய சிறுவர் முன்பள்ளி, அம்பிகை நகர் ஸ்ரீ மகேஸ்வரி அம்மன் முன் பள்ளி, முடிப்பிள்ளையார் முன்பள்ளி ஆகிய 07 முன்பள்ளிகள் தற்போது செயற்படுகின்றன. 1990ம் ஆண்டிற்கு முன்னர் இயங்கிய பாட சாலைகளில் வேலணைக் கிராமத்தில் வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாலயமே இதுவரை இயங்காத நிலையில் உள்ளது.

### சுகாதாரம்

வேலணைக் கிராமத்தில் உள்ளக, வெளியக சிகிச்சை வசதிகளுடன் கூடிய பிரதேச வைத்தியசாலை இயங்குகின்றது. இங்கு பிரசவ விடுதி, பற்சிகிச்சை வசதிகளும் உள்ளன. அவசர நோயாளர்களை யாழ் போதனா வைத்திய சாலைக்கு இடமாற்றுவதற்கான நோயாளர் காவு வண்டிச் சேவையும் இடம்பெறுகின்றது. மேற்படி வைத்தியசாலையை ஆதார வைத்திய சாலையாக தரமுயர்த்தினால் மேலும் பல வசதிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். துறையூரில் இரண்டு பதிவு செய்யப்பட்ட தனியார் வைத்தியசாலைகள் இயங்குகின்றன. ஆயுள் வேத மத்திய மருந்தகம் வேலணை வடக்கு, கிராம அலுவலர் பிரிவில் உள்ளது.




*பிரதேச வைத்தியசாலை*

சூழல் மாசடையா வண்ணம் கழிவுப் பொருட்களை அகற்றும் செயற்பாடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச சபை கூடிய கவனம் செலுத்துவதுடன் டெங்கு நோய் பரவாத வகையில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் பணிகளில் வேலணை வைத்திய அதிகாரி பணிமனை யினரும் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபி விருத்தி உத்தியோகத்தர்கள், பொதுச்சுகாதார உத்தியோகத்தர்கள், பொருளாதார அபி விருத்தி அமைச்சின் அலுவலர்கள் ஆகியோர் கூடிய கவனம் செலுத்தி வருகின்றனர்.

### ஆலயங்கள்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் வேலணைக் கிராமத்திலே பல இந்து ஆல யங்கள் அமைந்துள்ளன. அவற்றில் மகோற் சவங்கள் நடைபெறுகின்ற ஆலயங்கள் என்ற வகையில் பெருங்குளம் முத்துமாரியம்மன் கோயில், மகா கணபதி பிள்ளையார் கோயில், துறையூர் ஹரிகரபுத்தி ஐயனார் கோயில், சிற்பனை முருகன் ஆலயம், வங்களாவடி முருகன் ஆலயம், அம்பிகைநகர் மகேஸ்வரி அம்மன் கோயில், இலந்தைவனம் அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயம் ஆகிய வற்றைக் குறிப்பிடலாம். இவை தவிர வைரவர், முருகன், ஐயனார், நாச்சியம்மன் ஆகிய தெய் வங்களுக்கு சிறிய கோயில்களும் உள்ளன. ஆலயங்களில் திருவிழாக்கள் வெகு விமரிசை யாக நடைபெறுவதுடன் திருவிழாக் காலங் களில் அன்னதானப் பணிகளும் இடம்பெறு கின்றன.

வேலணையின் தென்கிழக்கில் சாட்டி என்னும் கிராமத்தில் கிறிஸ்தவர்களின் வழிபாட்டுத் தலமாக சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயம் அமைந்துள்ளது ஆண்டு தோறும் புரட்டாதி மாதத்தில் சாட்டி மாதா திருநாள் கொண்டாடப்படுகின்றது. இத் திருநாளிற்கு இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும் கிறிஸ்தவமக்கள் வருகை தருகின்றனர். அத்துடன் சாட்டிக் கடலானது உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் இடமாகவும், நீராடு வதற்கு உகந்த கடலாகவும், பொழுது போக்கு இடமாகவும் விளங்குகின்றது. அத்துடன் இந்துக்களின் பிதிர்க்கடன்களை நிறைவேற்றும் புனித தீர்த்தமும் சாட்டியிலே அமைந்துள்ளது. மற்றும் வேலணைக் கிராமத்தில் இந்து மதத்த வர்களை தகனம் செய்யும் பொது மயானங் களாக செம்படவன்காடு சாட்டி மயானம், தாளை யம்பதி இந்து மயானம், அம்பலவன் இந்து மயானம் என்னும் இந்து மயானங்கள் உள்ளன. வேலணை வடக்கில் வீரன்பிட்டி இந்து மயானம் இயங்காத நிலையில் உள்ளது. அத்துடன் கிறிஸ்தவ சேமக்காலை ஒன்றும் உள்ளது.

பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்





சாட்டி மாதா கோயில்

### அபிவிருத்தியும் தந்திரோபாயங்கள்

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் வேலணைக் கிராமமானது கேந்திர முக்கியத் துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இங்கே பிரதேச செயலகம், பிரதேச சபை, பிரதேச வைத்தியசாலை, கமநலசேவைகள் நிலையம், சமுர்த்தி வங்கி, வேலணைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரி யாலயம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை அலுவலகம், தீவக கல்வி வலயம், கோட்டக் கல்வி அலுவலகம் மின்பாவனையாளர்கள் சேவை நிலையம், கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம், தபால் அலுவலகம், வீதி அபி விருத்தித் திணைக்கள அலுவலகம், ஆயுள்வேத மத்திய மருந்தகம் தீவுப்பகுதி பிறப்பு இறப்பு விவாகபதிவாளர் அலுவலகம், இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி ஆகியன வேலணைக் கிராமத்திலே அமைந்து சேவையாற்றி வருகின்றன.

இப்பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான யாழ்ப்பாணம் பண்ணை ஊர்காவற்றுறை வீதி, வழுக்கியாறு புங்குடுதீவு குறிகாட்டுவான்வீதி,வேலணை ஊர் காவற்றுறை வீதி, ஆகியனவும், வீதி அபி விருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான துறையூர் சுருவில் ஊர்காவற்றுறை வீதி, மாரி யம்மன் கோவில் வீதி ஆகியவனவும் பிரதேச சபைக்குச் சொந்தமான பல வீதிகளும் காணப் படுகின்றன. இவற்றில் பெரும்பாலான பிரதேச சபை வீதிகளைத் தவிர ஏனைய வீதிகள் புனர மைப்புச் செய்யப்பட வேண்டிய நிலையிலே உள்ளன. போக்குவரத்து வசதிகளைப் பொறுத்த மட்டில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேரூந்துகளும், குறிகாட்டுவான், ஊர்காவற்றுறை தனியார் பேரூந்துகளும் திருப்திகரமான சேவைகளை வழங்குவதுடன் உள்ளூர் பிரயாணத்துக்கென 30 க்கும் மேற் பட்ட முச்சக்கரவண்டிகள் சேவையிலுள்ளன. தீவுப் பகுதியிலேயுள்ள அரச அலுவலகங்களில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத்திலிருந்தே வந்து செல்கின்றனர்.

தபால் சேவையில் வேலணை வங்களா வடிக்கு அண்மையில் பிரதான தபால் அலுவல கமும் சோளாவத்தை, செட்டிபுலம், வேலணை கிழக்கு, துறையூர், சிற்பனை ஆகிய இடங்களில் உபதபாலகங்களும் இயங்கி வருகின்றன. தொலைபேசிச் சேவையைப் பொறுத்தளவில் பத்திற்கு மேற்பட்ட அரச அலுவலகங்களில் வானொலி தொலைபேசிகள் இயங்குகின்றன. மேலும் கணிசமானளவு CDMA தொலை பேசிகளும், லங்காபெல் தொலைபேசிகளும் பயன்பாட்டிலுள்ளன. இவற்றைவிட வீட்டுக்கு வீடு கைத்தொலைபேசிப் பாவனையாளர்கள் உள்ளனர். டயலொக், எயார்டெல், எடிசலாட், மொபிட்டல் ஆகியவற்றின் சமிக்ஞைகள் போது மானதாகவுள்ளது. மேற்படி நிறுவனங்களது தொலைத்தொடர்புக் கோபுரங்கள் வேலணை தெற்கு, வேலணை கிழக்கு, வேலணை வட கிழக்கு ஆகிய கிராம அலுவலர்கள் பிரிவுகளில் அமைக்கப்பட்டுள்ளது. மின்சார பாவனையாளர் சேவை நிலையம் வேலணையிலே அமைந் துள்ளது. செட்டிபுலம், வேலணை வடக்கு ஆகிய இடங்களில் ஒரு சில பகுதிகளைத் தவிர எல்லா இடங்களிலும் 24 மணித்தியால மின்விநி யோகம் இடம் பெறுகிறது. வடக்கின் வசந்தத்தின் ஊடாக மீளக்குடியமர்த்த பல குடும்பங்களுக்கு மின்சார விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

சமூக நிறுவனங்கள் என்ற வகையில் ஐயனார் சனசமூக நிலையம், திருவள்ளுவர் சன சமூக நிலையம், செட்டிபுலம் சனசமூக நிலையம், தேவிகோட்டம் சனசமூக நிலையம், ஐக்கிய உதயமால் சனசமூக நிலையம், அம்பிகை நகர் சனசமூக நிலையம், நேதாஜி சனசமூக நிலையம் ஆகியன இயங்குகின்றன. மேலும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பலவும் செயற் படுகின்றன. விளையாட்டுக் கழகங்களாக துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகம், செட்டிபுலம் ஐயனார் விளையாட்டுக் கழகம், அம்பிகை நகர் ஸ்ரீ மகேஸ்வரி அம்மன் ஐயனார் விளையாட்டுக் கழகம் என்பன சிறந்த முறையில் செயற்படுகின்றன.

இவ்வாறாக பல்வேறு வளங்களைக் கொண்ட வேலணைக் கிராமத்தை சமூக பொருளாதார அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டியது வேலணைக் கிராமத்தைச் சேர்ந்த அனைவரதும் பணியாகும்.

**"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்**
**நற்றவ வானிலும் நனிசிறந்ததுவே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு

பாடசாலைகள்

வேலணை மத்திய கல்லூரி

வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்

வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்

வேலணை சரஸ்வதி வித்தியாலயம்

வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்


வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம்

வேலணை செட்டிப்புலம்அ.த.க.பாடசாலை

வேலணை ஆத்திசூடி வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரவணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



# சரவணைக் கிராமம் ஓர் பார்வை

திருமதி.இராஜேஸ்வரி பரமேஸ்வரன்
கிராம அலுவலர் – தரம் II
பிரதேச செயலகம் – வேலணை

***அறிமுகம்***

சரவணைக் கிராமம் யாழ்ப்பாண மாவட்டத்தில் தீவகம் தெற்கு (வேலணை) பிரதேச செயலர் பிரிவில் வேலணைப் பிரதேச சபையில் அமைந்துள்ளது. 10 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இக்கிராமம் வடக்கே அராலிக் கடலின் குடாக்கடலாகிய நாவாய் கட்டிய வாய்க்கால் (நாய் வெட்டி வாய்க்கால்) கடலையும், மேற்கில் நாரந்தனையையும், தென் மேற்கில் புளியங்கூடலையும், தெற்கே வேலணையையும், கிழக்கே வேலணை வடக்கையும் எல்லைகளாகக் கொண்டுள்ளன. 1962ம் ஆண்டு வேலணை பிரதேச செயலர் பிரிவு தோற்றம் பெறமுன்னர் ஊர்காவற்றுறை D.R.O பிரிவுக்குட்பட்டு இருந்தது. அப்போது வேலணையைப் போல் பரந்த கிராமமாக இக் கிராமம் இருந்தது. 1962ல் சரவணை தெற்கு, புளியங்கூடல் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கானது. இதேபோல் கிராம அலுவலர் பிரிவுகள் ஏற்பட்டபோது கிராமத்தைக் கவனி யாது பிரதான வீதிகளைக் கொண்டு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்மையினால் நான்கு பக்கமும் குறுகி இன்று சரவணை கிழக்கு J/20 , சரவணை மேற்கு J/21 என இரு கிராம அலுவலர் பிரிவுக் குட்பட்டதாக அமைந்துள்ளது. பல்வேறு தொழில்துறையைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்த போதும் விவசாயமே பிரதான தொழிலாக கொண்ட கிராமம் 1991ல் தீவகத்தில் ஏற்பட்ட யுத்தசூழலில் இக்கிராமத்தவர் யாவரும் இடம் பெயர்ந்து செல்ல வேண்டி ஏற்பட்டது. 1996.06.ம் மாதம் மீள்குடியேற்றம் ஏற்பட்டது. இன்னும் 1991ற்கு முந்திய மக்கள் தொகையில் 20%த்தினராகவே உள்ளனர். இதற்கு காரணம் நீண்டகால இடம்பெயர்வும், J/21 கிராம அலுவலர் பிரிவில் முற்று முழுதாக வீடுகள் யுத்தகாலத்தில் அழிக்கப்பட்டமையும், போதிய தொழில்வசதிகள் இன்மையும் காரணமாக உள்ளது.

***வரலாறு***

இங்கு சைவசமயக் கடவுளாகிய முருக வழிபாடு சிறந்து விளங்குகின்றது. முருகனின் சரங்கள் வந்து சேர்ந்த படியால் சரவணை என்று கூறப்படுகிறது. இதேபோல் வேல் வந்து சேர்ந்த இடம் வேலணை எனவும் கூறுவர். முருகன், சரவணனின் ஆலயங்கள் இங்கு அதிகமாகக் காணப்படுவதும் இதற்கு ஓர் சான்றாக அமை கின்றது.

***பௌதீக வளம்***

சரவணைக் கிராமத்தின் பௌதீக வளங்கள் என்ற வகையில் வண்டல் மண்ணும், சுண்ணக்கல்லும் பிரதேசத்திற்கே உரித்தானது. விவசாயத்திற்கு உகந்த மண்வளம்மிக்கது. கிராமத்தின் நீர்நிலைகளைப் பொறுத்தவரை கெவிழிக்குளம், சூளகொண்டான்குளம், வண்ணாங்குளம் (தற்போதைய பெயர் கரப்பியன் குளம்) தெங்கங்குளம், கட்டுவன் குளம், பாலாவிக்குளம், ஈனியக்கக்குளம், குருக்கள்குளம் போன்ற குளங்களும், பிரதேச சபைக்குரிய பொதுக் கிணறுகளும் காணப்படு கின்றன. குளங்களை அண்டிய பெரும்பாலான மேட்டு நிலங்கள் பயிர் செய் நிலங்களாகவும், வயல் நிலங்களாகவும் பரந்து விரிந்து காணப் படுகின்றன. பெரும்பாலான நிலங்கள் தற் போதும் பயன்பாட்டில் உள்ளன. புகையிலைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புகையிலைத் தோட்டம்

செய்கைக்கு பெயர்போன இடமாக சரவணைக் கிராமம் காணப்படுகிறது. வயல் நிலங்களிலும், குளங்களிலும் தேங்கும் மேலதிக நீரை கடலுக்கு வெளியேற்ற 06 வாய்க்கால்களும் உள்ளன. அத்துடன் கடல் நீர் கிராமத்தினுள் உட்புகுவதைத் தடுக்கவும் நன்னீரைச் சேகரிக்கவும், அராலிக்கடல் உவர் நீர்த்தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய யாழ் – ஊர்காவற்றுறை பிரதான வீதியும், வேலணை – ஊர்காவற்றுறை வீதியும், வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய சரவணை–சுருவில் வீதியும் கிராமத்தினை ஊடறுத்துச் செல்வதோடு பிரதேச சபைக்குரிய 31உபவீதிகளும் இங்கு காணப்படுகின்றன.

### மனித வளம்

மூன்று வட்டாரப் பிரிவுகளைக் கொண்ட சரவணைக் கிராமத்தில் 1990ம் ஆண்டு இடப்பெயர்வுக்குப் முன்னர் பெரும்பாலான குடும்பங்கள் வாழ்ந்து வந்தனர். இதன் பின்னர் ஏற்பட்ட யுத்த நிலைமை காரணமாகவும், பல்வேறு காலப்பகுதிகளில் எற்பட்ட இடப்பெயர்வினாலும் அடிப்படை வாழ்வாதாரம் 90% அழிக்கப்பட்ட நிலையில் தற்போது 2009, 2010ம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் 256 குடும்பங்களைச் சேர்ந்த 818 பேர் இக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர். சமய அடிப்படையிலான குடித்தொகை விபரம் பின்வருமாறு காணப்படுகின்றது.

| சமயம் | குடும்பங்கள் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்து | 208 | 305 | 355 | 660 |
| கிறிஸ்தவம் | 48 | 79 | 84 | 163 |

இவர்களில் விவசாயிகள், விவசாயம் செய்வோர், பனை சார்ந்த குடிசைக் கைத்தொழில் புரிவோர், தனியார் துறை ஊழியர்களும், அரச உத்தியோகத்தர்கள், ஓய்வூதியர்கள் எனப் பலதரப்பட்டோர் உள்ளடக்கப்படுகிறார்கள்.

இக்கிராமத்தைச் சேர்ந்த பெரும்பாலானோர் விவசாயத்தையும், விவசாயத்துடன் இணைந்த தொழில்களையும் செய்து வருகின்றனர். இங்கு புகையிலைச் செய்கை பிரதான பயிராகப் பயிரிடப்படுகிறது. இவர்கள் மிளகாய், வெங்காயத்துடன் பெரும்பாலான மரக்கறி (பயற்றை, புடோல், பாவல், கத்தரி, வெண்டி, தக்காளி, பூசணி) வகைகளையும் பயிரிடுகின்றனர். அத்துடன் 250 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையும் மேற்கொண்டு வருகின்றனர். வீட்டுத்தோட்டச் செய்கைகளையும் ஆர்வமுடன் மேற்கொண்டு வருகின்றனர். மேலும் தற்போது இந்திய முருங்கை இனத்தைப் பயிரிட்டு வருமானத்தைப் பெற்று வருகின்றனர். விவசாயத்திற்குத் தேவையான நீரைக் குளங்களிலிருந்தும் மழைநீரையும் கொண்டே ஈடு செய்கின்றனர்.

உள்ளூரில் நிரந்தரமாக வசிப்பவர்களில் சிலர் சிறுபலசரக்குக் கடைகள் மூலம் பலசரக்கு வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் சிலர் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளையும் கொள்வனவு செய்து வெளியிடங்களில் விற்பனை செய்து பொருளீட்டி வருகின்றனர். குறித்த தொகை இளைஞர்கள் யாழ்நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் கடைச்சிப்பந்திகளாக பணியாற்றி வருகின்றனர். கைத்தொழில் என்ற ரீதியில் நோக்கும் போது பாரிய கைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்கள் எவையும் காணப்படவில்லை. சுய தொழில்களாக கால்நடை வளர்ப்பு மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### நீர் வளம்

இக்கிராமத்தில் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. தமது குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் சாட்டியில் இருந்து தண்ணீர் தாங்கிகளில் கொண்டு வந்து விற்பனை செய்பவர்களிடமிருந்தே பணம் கொடுத்து பெற்றுக் கொள்கின்றார்கள். கோடை காலங்களில் வேலணை பிரதேச செயலகத் தினால் விநியோகிக்கப்படும் இலவச குடிநீர் திட்டத்தின் மூலம் நீரைப் பெற்றுக் கொள் கின்றனர். விவசாயம் மழை நீரை நம்பியே செய்கை பண்ணப்படுகின்றது. கோடை காலங் களில் கிணற்று நீர் முற்றாக வற்றி விடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### பொருளாதாரம்

இக்கிராமத்தைப் பொறுத்த வரையில் பல்வேறு பட்ட தொழில்களினையாற்றி தமது வாழ்வாதாரத்தினை இட்டுச் செல்லும் தன்மை காணப்படுகின்றது. அந்த வகையில்

| குடும்பங்களின் | எண்ணிக்கை |
|---|---|
| விவசாயம் | 89 |
| விவசாயத் தொழிலாளர்கள் | 50 |
| சிறிய வியாபாரம் | 05 |
| அரச பணிமனைகளில் | 09 |
| பயிற்றப்படாத தொழிலாளர்கள் | 105 |
| தனியார் பணிமனைகளில் | 02 |
| கடைச் சிப்பந்தி | 05 |

### கல்வி

சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் தரம் 1 முதல் க.பொ.த.சாதாரண தரம் வரை அமையப் பெற்றுள்ளது. எனினும் மாண வர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. மேலும் தொல்காப்பியர் முன்பள்ளி, திருவள்ளுவர் முன்பள்ளி என இரு முன்பள்ளிகள் இக்கிராமத்தில் கல்விச் சேவையினை மேற்கொள்ளுகின்றன.

### சுகாதாரம்

இக்கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையமோ, மருத்துவமனையோ இல்லாமை இக்கிராம மக்களிடையே பெரும் குறையாக காணப்படுகின்றன. ஆரம்ப சுகாதார நிலைய சேவைகளைப் பெற வேலணை பிரதேச வைத்தியசாலைக்கு அல்லது ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு செல்லவேண்டிய நிலையுள்ளது.

### ஆலயங்கள்

இக்கிராமத்தில் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களே மிக அதிகளவில் வசித்து வரு கின்றனர். மேலும் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவர்களும் ஓரளவு காணப்படுகின்றனர். இந்துக் கோவில்களே அதிகமாகக் காணப்படு கின்றன. இக்கிராமத்தில் மகோற்சவம் நடைபெறும் ஆலயங்களாக நாச்சிமார் அம்மன் ஆலயம், கதிர்வேலாயுத சுவாமி ஆலயம் அத்துடன் சிவன் கோவில், நாகபூசணி அம்மன் கோவில், கனக முத்துமாரி அம்மன் கோவில், காளிகோவில், செல்லக் கதிர்காமம், கொட்டாங் காட்டு வைரவர், திருக்கொன்றை வைரவர், ஈனியக்க வைரவர், வல்லிபுரக் கோவில்களில் அலங்கார உற்சவத்திருவிழாக்கள் நடைபெறு வதும் குறிப் பிடத்தக்கது.



ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமத்தில் கிறிஸ்தவர்கள் குறிப்பிட்டளவு வசித்து வந்தபோதிலும் எந்த வொரு கிறிஸ்தவ ஆலயமும் இப்பிரிவினுள் அமையப் பெறவில்லை. இவர்கள் தமது வழி பாட்டிற்காக அயற்கிராமமான சின்ன மடுவில் அமைந்துள்ள மடுமாதா தேவாலயத்திற்கு செல்வது வழமையாகும். சமய கலாசார நிகழ்வுகளும் சமயம் சம்பந்தமான ஆன்மீக நிகழ்வுகளும் திருவிழாக்காலங்களில் ஆலயங் களால் நடாத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் நாயன்மார்களின் குருபூசைத் தினங் களும், விசேட தினங்களும் ஆலயங்களில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அத்துடன் அறநெறிப் பாடசாலைகளும்( கதிர் வேலாயுத சுவாமி அறநெறிப் பாடசாலை, செல்லக் கதிர்காமம் அறநெறிப் பாடசாலை) நடாத்தப்பட்டு சமயக் கல்வி போதிக்கப்பட்டு வருகின்றது.

### அபிவிருத்தியும் தந்திரோபாயங்களும்

2009ம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நட வடிக்கைகள்

01. NEHRP நிரந்தர வீடுகள் – 15
02. வாழ்வாதார உதவி 15 குடும்பங்க்ள
03. திவிநெகும மனைப்பொருளாதார உதவி 256 பேர்
04. உவர்நீர்த்தடுப்பணை புனரமைப்பு
05. இலவச மின்இணைப்பு 05

மேற்படி அபிவிருத்தித் திட்டங்களை கிராமத்தில் நடைமுறைப்படுத்திய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதோடு மேலும் பல அபிவிருத்தி திட்டங்களை கிராமத்தில் மேற்கொண்டு கிரா மத்தின் பூரண வளர்ச்சிக்கு பக்கபலமாக இருக்க வேண்டும் என வேண்டுகின்றேன்.

மீள்குடியேறிய பின்பு பலநிறுவனங்களால் வீடுகள் சிறிய அளவில் கட்டிக் கொடுக்கப் பட்டிருந்தாலும் இன்னும் வீடுகள் தேவையுடை யோர் பலர் உள்ளனர். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். சகலருக்கும் மின்சார வசதி கிடைக்க வேண்டும். குளங்கள் யாவும் புனரமைக்கப்பட்டு மழைநீரைக் கூடுதலாகச் சேமிக்க வேண்டும். சரவணை பாரம்பரிய விளையாட்டு மைதானம் புனரமைக்கப்பட வேண்டும். நாய்க்குட்டியான் வாய்க்கால் விளை யாட்டு மைதானம் இவ்வருடம் நாகபூசணி அம்மன் விளையாட்டுக் கழகத்தால் ஓரளவு புனரமைக்கப்பட்டு மாபெரும் விளையாட்டு விழாவினை நடாத்தியுள்ளனர். பன்னம்பிட்டி இந்து மயானம் அணைபோடப்பட்டு புனரமைக்கப்பட வேண்டும்.

சகல வீதிகளும் திருத்தப்பட்டு பெயர் இடல் வேண்டும். யுத்த சூழ்நிலையில் அழிந்துபோன தையல் பாடசாலை, நெசவுசாலை போன்ற தொழிற்சாலைகளை கட்டி புதுப்பித்து நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தொழில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சரவணை மேற்கு கிராம அலுவலர் பகுதிக்கு பொது மண்டபம் வேண்டும். சின்னமடு கிராமத்தில் மழைக் காலத்தில் தண்ணீர் தேங்காதவாறு தண்ணீர் ஓடுவதற்கு வாய்க்கால் வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும். கிராமத்தில் இருக்கின்ற பற்றைகளை அழித்து சகல விளைநிலங்களையும் விவசாய செய்கையைச் செய்யக்கூடிய முறையில் சீர்செய்து வளமோடு கிராம மக்கள் வாழ வழி செய்யப்பட வேண்டும்.

மேலும் கிராம அபிவிருத்திச் சங்கம், மகளீர் அபிவிருத்திச் சங்கம், தொல்காப்பியர் சனசமூக நிலையம், திருவள்ளுவர் சனசமூக நிலையம், பாரதி சனசமூக நிலையம், நாக பூசணி விளையாட்டு கழகம், திரு வள்ளுவர் விளையாட்டுக் கழகம், விவசாய சம்மேளனம், மகளீர் விவகாரச் சங்கம், என்பனவும் இக்கிராமத்தில் அமையப் பெற்று தங்கள் பணிகளைத் திறம்பட மேற்கொண்டு கிராம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சிக்கு உறுதுணை புரிந்து வருகின்றது. அத்துடன் சரவணை உபதபால் அலுவலகம் தொடர்பாடல், பொதுசன உதவிக் கொடுப்பனவு வழங்கல், கிராமிய வங்கிச் சேவை ஆகிய செயற்பாடுகளில் மக்களுக்கு பக்க பலமாகவுள்ளது. மேலும் சமூக பிரச்சனை மற்றும் அனர்த்தம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மக்களை நல்வழிப்படுத்தவும் மக்களைப் பாதுகாக்கவும் சிவில் பாதுகாப்புக் குழுவும், அனர்த்த முகாமைத்துவக் குழுவும் தயார் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

***பின்னிணைப்பு***

பாடசாலைகள்

சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்



*மிளகாய்த் தோட்டம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புங்குடுதீவு ஓர் நோக்கு

திரு.கு.சந்திரா
கிராம அலுவலர் – தரம் I
பிரதேச செயலகம் – வேலணை

## அறிமுகம்

யாழ் மாவட்டத்தின் வடமேற்கே அமைந்துள்ள சப்த தீவுகளில் ஒன்றான புங்குடுதீவு கிராமம் நான்கு பக்கமும் கடலா... சூழப்பட்ட ஒரு தீவாகும். இத்தீவானது ஏனைய தீவுகளால் சூழப்பட்டுள்ளதுடன் 11.2 சதுர மைல் பரப்பளவினைக் கொண்டது. பாய்க்கப்பலின் உருவத்தினை போன்ற நிலத்தோற்றத்தினை கொண்ட இத்தீவானது யாழ்ப்பாண நகரி லிருந்து 15 மைல் (24km) தொலைவில் அமைந்துள்ளதுடன் வேலணை தீவிலிருந்து ஆழங்குறைந்த 5km தாம்போதியினால் இணைக்கப்பட்டுள்ளது. இத்தீவானது 34 சதுர கிலோமீற்றர் சுற்றளவை கொண்டிருக்கிறது. இத்தீவின் பிரதான நிலப்பரப்பு தவிர்ந்த கூரதீவு, பல்லதீவு, கேரதீவு போன்ற சிறுதீவுகள் மழை காலங்களில் நீரினால் பிரிக்கப்பட்டு கோடை காலங்களில் இணைந்தும் காணப்படுகின்றது. 2013 ம் ஆண்டு இத்தீவின் குடித்தொகையானது 4087 மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

## பௌதீக வளம்

யாழ்ப்பாண குடாநாடும் அதனை சூழ்ந்துள்ள தீவுப்பகுதியும் மயோசின் கால சுண்ணக்கல் பாறைகளின் உருவாக்கத்தினால் உருவான போதிலும் யாழ்ப்பாண குடாநாட்டில் காணப்படக்கூடிய சுண்ணக்கல் படிவுகளுக்கும் புங்குடுதீவு உட்பட்ட தீவுப்பகுதிகளில் காணப் படும் சுண்ணக்கல் பாறை படிவுகளுக்கு மிடையில் வேறுபட்ட பண்புகளை கொண்டிருப் பதை காணமுடிகிறது. அதாவது இத் தீவுப்பகுதி உட்பட புங்குடுதீவு கிராமம் கடலில் இருந்து மேலுயர்த்துகை செயற்பாட்டின் விளைவினால் அதற்குரிய புவிச்சரிதவியல் பண்புகளை கொண்டு காணப்படுகின்றது. இத் தீவில் பெரும் பாலான நிலப்பகுதியில் முருகைக் கற்பாறை களும் அதனைத் தொடர்ந்து மக்கித்தன்மை கொண்ட நிலப்பரப்புமே இத் தீவின் பெரும் பாலான பகுதிகளில் காணப்படுகின்றது. இத் தீவினுடைய நிலப்பரப்பின் மேற்பரப்பில் 1 அல்லது 1½ அடி ஆழத்திற்கு மட்டுமே நரை அல்லது நரை கலந்த களிமண்ணும் சேர்ந்த தாகவே காணப்படுகின்றது. இத் தீவின் தெற்கு, கிழக்கு, வடக்கு பிரதேசங்களில் மணல் கலந்த மணல் மண் கடற்கரை ஓரங்கள் சார்ந்து காணப்படுகின்றது.


இத் தீவினது தரைத்தோற்ற பண்பு களை நோக்கின்ற போது இத் தீவினுடைய தென் கிழக்கு பிரதேசமான வீராமலை, வல்லன், மாவுதடை ஆகிய பிரதேசங்கள் கடல் மட்டத்தில் இருந்து 9 அடி உயரத்தில் காணப்பட ஏனைய பிரதேசங்கள் படிப்படியாக உயரம் குறைந்து காணப்படுவதுடன் சராசரியாக 6 அடி உயரம் கொண்டதாக இருக்கிறது. இதனால் இத் தீவில் வீராமலையில் இருந்து மழைகாலங்களில் கள்ளியாறு, என்ற பருவகால ஆறு பெரிய கிராய், சிறிய கிராய், குறிச்சிக்காடு,கள்ளிக்காடு ஊடாக கடலுடன் சங்கமமாகின்றது. பொதுவாக இத் தீவில் சராசரி வருடாந்த மழைவீழ்ச்சி 50 அங்குலத்திற்கு குறைவானதாகும். அதிவறள் வலயத்திற்குள் அடங்குகின்ற இத் தீவின் மழை வீழ்ச்சியில் 80% ஒக்ரோபர் நவம்பர் மாதங் களிலும் 12% டிசம்பர் மாதத்திலும் 8% ஏனைய மாதங்களிலும் கிடைக்கப் பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர் வளம்

பொதுவாக 90% ற்கு மேற்பட்ட மழை வீழ்ச்சி ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் மாதங் களில் கிடைக்கப்பெறுகிறது. இந்நீரின் ஒருபகுதி தரைகீழ் நீராகவும் மேற்பரப்பு நீரின் பெரும் பகுதி கடலுடன் கலக்கப்படுகின்றது. இந் நிலையில் இத் தீவிலே காணப்படக்கூடிய புவிச் சரிதவியல் பண்புகள் குறிப்பாக முருகைக் கற்பாறைகளூடாக நிலத்துள் செல்கின்றது. நீர் உட்செல்லும் ஊடு துளைகளூடாக நீர் நிலப் பரப்பின் கீழ் செல்கின்றது.




நுணுக்கல் குளம்

அதே வேளை கடல் மட்டத்தில் இருந்து குறைந்த உயரத்தில் இத் தீவு அமைந்து காணப்படுவத னால் நிலத்தின் கீழான உவர் நீர் படலம் நிலத்தின் மேற்பரப்பில் இருந்து 10 அடிக்கு கீழ் காணப்படுகின்றது. இதனால் இக் கிராமத்தில் பெரும்பாலான பகுதிகளில் உவர் நீர் அல்லது உப்பு நீரே ஏனைய மாதங்களில் கிணறுகளில் காணப்படும். இருந்த போதிலும் சில பகுதிகள் குறிப்பாக சங்கத்தா கேணியின் வட பிரதேசத்தின் சில பகுதிகள் கேரதீவு பிரதேசம் பெருங்காடு தெற்கின் குறித்த சில பகுதிகள் கண்ணகை அம்மன் ஆலய சூழல் பகுதி ஆகிய வற்றில் நன்னீர் படுக்கைகள் காணப்படுகின்றன. இது சம்பந்தமாக யாழ்ப் பாண பல்கலைக்கழகத் தினால் மேற்கொள்ளப் பட்ட ஆய்வின் பிரகாரம் மேற்குறித்த பகுதிகள் நன்னீர் படுக்கை கொண்ட பகுதிகளாக இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இந் நன்னீரின் கொள்ளளவு எவ்வளவு காணப் படலாம் என்பது பற்றி விரிவான ஆய்வு இப்பல்கலைக்கழக புவியியல் துறையினரால் 2014 ம் ஆண்டு மேற்கொள்ள தீர்மானிக்கப் பட்டுள்ளது.

## வரலாறு

புங்குடுதீவு கிராமத்தின் வரலாறு தீவகத்தின் வரலாற்றுடன் மட்டுமல்லாது யாழ்ப் பாண குடாநாட்டுடனும் தென்னிந்தியாவுடனும் நெருங்கிய தொடர்பை கொண்டுள்ளது. இவ்விரு பிரதேசங்களுக்குமான போக்கு வரத்தில் இத்தீவு முக்கியமான இடத்தில் அமைந்துள்ளமையினால் வரலாற்றுக் காலத்தில் இருந்து இத்தீவுடனான தொடர்பினை தென்னிந்தியா மற்றும் குடாநாட்டினர் கொண்டிருந்தனர் எனக்கொள்ளலாம்.



தேசாதிபதி சோல்பரியால் திறந்து வைக்கப்பட்ட மாநாட்டு மண்டபம்

இத்தீவு உட்பட ஏனைய தீவுகளுக்கு காலத்துக்காலம் ஏற்பட்டு வந்த பௌதீக மற்றும் அரசியல் மாற்றங்களினால் அங்கிருந்து இப்பகுதிகளுக்கு மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்திருக்க நியாயமுண்டு. இது சம்பந்தமான பதிவுகளும் வரலாற்றில் உள்ளன. குறிப்பாக புங்குடுதீவின் "புளியடித்துறை" என்ற தற்போது பயன்படுத்தப் படாது காணப்படுகின்ற துறைக்கு அருகாமையில் அராபியரால் அறிமுகப்படுத்தப் பட்டதாக கூறப்படும் பெருக்குமரம் ஒன்று காணப்படுகின்றது. எனவே அராபியர் இத் தீவுடன் வர்த்தக தொடர்பினை மேற் கொண்டிருக்கலாமென ஒரு கருத்தினை வரலாற்று அறிஞர்கள் எடுத்துக்கூறியுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியாங்குதீபம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கருத்தானது தற்போதைய புங்குடுதீவையே குறித்துள்ளது என வரலாற்று அறிஞர்கள் தெரிவித்துள்ளனர். இது காலப்போக்கில் பியாங்குதீவு எனவும் பின்னர் புங்குடுதீவு எனவும் மருவியதாக கொள்ள இடமுண்டு. மேலும் இத்தீவிற்கும் தமிழ் நாட்டுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப் பட்டிருந்ததால் தமிழ்நாட்டிலுள்ள புங்கனூர், பூங்குடி என்ற இடப்பெயர்களை அவர்களால் இத்தீவிற்கு அறிமுகப்படுத்தியிருக்கலாம் எனவும் கொள்ள இடமுண்டு. குறிப்பாக இஸ்லாமியர்களது படையெடுப்புக்காலத்தில் அவர்களது கொடுமையில் இருந்து தமது கன்னிப்பெண்களை பாதுகாக்கும் நோக்குடன் இத்தீவில் வந்துகுடியேறினர் எனவும் அவர் களால் இடப்பட்ட பூங்குடி என்ற பெயர் காலப் போக்கில் புங்குடுதீவு எனவும் மருவி இருக்கலாம் எனக் கொள்பவர்களும் உளர். இவை தவிர தென்னிந்தியாவில் காணப் படுகின்ற சோழனோடை, சோழன்புலம், பல்லதீவு போன்ற இடப்பெயர்கள் அவர்களால் இடப்பட்டிருக்கலாம் எனக் கொள்ள இடமிருக் கிறது. மேலும் ஐரோப்பிய ஆட்சியில் குறிப்பாக போர்த்துக்கீசர் இத்தீவுக்கு கொங்கரடிவா எனவும் ஒல்லாந்தர் மிடில்பேர்க் எனவும் பெயரிட்டு அழைத்துள்ளனர். பல தீவுகளின் மத்தியில் அமைந்துள்ளதால் இப்பெயரை இட்டிருக்கலாம்.

## மனித வளம்

இக்கிராமத்தில் 2013ம் ஆண்டு 1182 குடும்பங்களைக் கொண்ட 4087 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். போர்த்துக்கீசர் காலத்தில் இத்தீவில் வாழ்ந்து வந்த மக்களின் எண்ணிக்கை 800 என மதிப்பிட்டுள்ளனர். ஆங்கிலேயர் ஆட்சியில் 1824ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் 1802 மக்கள் வாழ்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது. 1871 ம் ஆண்டு முதன் முதலாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான பூர்வமான கணிப்பீட்டின் பிரகாரம் 3966 மக்கள் வாழ்ந்துள்ளனர்.

| ஆண்டு | சனத்தொகை |
|---|---|
| 1824 | 1802 |
| 1871 | 3966 |
| 1881 | 3499 |
| 1891 | 4098 |
| 1901 | 5201 |
| 1911 | 5188 |
| 1921 | 5888 |
| 1946 | 9149 |
| 1953 | 9773 |
| 1963 | 12028 |
| 1971 | 13766 |
| 1981 | 14622 |
| 1991 | 15121 |
| 1991-09-17 பின் | 851 |
| 2002 | 2582 |
| 2009 | 5247 |
| 2011 | 4683 |
| 2013 | 4087 |

இத்தீவின் குடித்தொகையானது படிப் படியாக வளர்ச்சியடைந்து 1981ம் ஆண்டு 14622 ஆக உயர்வடைந்து இருந்தது. 1991ம் ஆண்டு நிகழ்ந்த மாபெரும் இடப்பெயர்வினைத் தொடர்ந்து இத்தீவில் 851 மக்களே வாழ்ந் துள்ளனர். 1996ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இத்தீவுப் பகுதிக்கான மீள் குடியேற்றத்தினை மேற்கொள்வதாக அரசாங்கம் அனுமதி யளித்ததைத் தொடர்ந்து படிப்படியாக மக்கள் மீள் குடியேற்றத்தினை மேற்கொள்ளினும் அது மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்பட்டது. 2002 ம் ஆண்டு 2582 மக்களாக இருந்து 2009ம் ஆண்டு 5247 மக்களாகவும் அதிகரித் துள்ளது. எனினும் 2013ம் ஆண்டு 4087 மக்களாகக் குறைவடைந்துள்ளது. வேலை வாய்ப்பினைக் கருதியும் வன்னியை வாழ் விடமாகக் கொண்டவர்களின் மீள் திரும்பலும் இதற்கான காரணங்களில் சிலவாகும்.

## குடியிருப்புக்கள்

குடியிருப்புக்கள் மக்கள் குடியிருக்கும் குடியிருப்புக்கள், மக்கள் குடியிருக்காத குடியிருப்புக்கள், என வகைப்படுத்தலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991ம் ஆண்டு நிகழ்ந்த வெளி இடப்பெயர்விற்கு முன்னரான காலப்பகுதிகளில் குடியிருப்புக்கள் காணப்பட்டன. இக்கிராமத்தில் 1940களுக்கு முற்பட்ட காலப்பகுதிகளில் பெரும்பாலான குடியிருப்புக்கள் ஓலைகளினால் வேயப்பட்ட குடியிருப்புக்களாக காணப்பட்டிருந்தன. வசதி படைத்த சிலர் சுண்ணாம்பு சீமெந்துகளினாலான சுவர்களையும் ஓடுகளினாலான கூரைகளையும் கொண்டு வீடுகளை அமைத்தனர். 1950 களில் ஆரம்ப மற்றும் இடைத்தரக் கல்வியைப் பூர்த்தி செய்த வர்களில் கொழும்பு மற்றும் தென்னிலங்கையின் வர்த்தக நிலையங்களில் சிப்பந்திகளாக இணைந்து காலப்போக்கில் வர்த்தகர்களாக தம்மை உயர்த்திக் கொண்டனர். மற்றொரு தொகுதியினர் கொழும்புத் துறைமுகத்தில் தொழில் வாய்ப்பினை மேற் கொண்டு சென்றிருந்தனர். இவர்கள் தவிர 1942 ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக்கல்வியினைப் பெற்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் உயர்கல்வி பெற்றவர்களாக இருந்துள்ளார்கள். குறிப்பாக 1920 களில் இருந்து தென்னிலங்கை சென்றவர்கள் அங்கு வர்த்தகத் தொழிலில் ஈடுபாடு கொண்டு பொருளீட்டினார்கள். இவர்கள் தாம் சென்றடைந்த பிரதேசங்களின் பெயரினையோ அல்லது தொழிலின் தன்மை பொறுத்தோ அவர்களை அழைத்துள்ளார்கள். குறிப்பாக சென்றடைந்த பிரதேசத்தைப் பொறுத்த வரையில் நுவரெலியா கார்த்திகேசு, பாணந்துறை நல்லதம்பி, பாணந்துறை ஐயாத்துரை, றத்கம சண்முகம் எனவும் வெங்கடகல செல்லையா, பழக்கடை மாணிக்கம் போன்ற பெயர்களைத் தாங்கியவர்களாக இருந்துள்ளார்கள். இத்தகையவர்களினால் 1950 களின் பின்னர் அமைக்கப்பட்ட குடியிருப்புக்கள் நிரந்தர கல்வீடுகளாக மாறத் தொடங்கின. இவர்கள் தவிர அரச உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் தங்களது குடியிருப்புககளை கல் வீடுகளாக மாற்றியுள்ளார்கள். 1980 களின் பிற் பகுதிகளில் புங்குடுதீவுக் கிராமத்திலுள்ள குடியிருப்புக்களில் ஏறத்தாழ 90 சதவீதமானவை நிரந்தர கல்வீடுகளாக மாற்றப்பட்டன.

1991 ம் ஆண்டு நிகழ்ந்த ஒட்டுமொத்த இடப்பெயர்வின் விளைவாக 90 சதவீதத்திற்கு மேற்பட்ட குடியிருப்புக்கள் மக்கள் வாழாத கைவிடப்பட்ட குடியிருப்புக்களாக மாறும் சூழ்நிலை உருவானது. 1996 ம் ஆண்டு மீள் குடியேற்றத்தை மேற்கொள்வதற்கு அரசாங்கம் அனுமதியளித்த போதிலும் பெரும்பாலானவர்கள் தாம் சென்றடைந்த பிரதேசங்களிலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழ்வதே விருப்பமாகக் கொண்டிருந்தனர். எனினும் பொருளாதார ரீதியில் நலிவுற்ற இடம் பெயர்ந்து குடாநாட்டிலும் வன்னிப் பிரதேசத்திலும் வாழ்ந்து வந்த சிறு எண்ணிக்கையினர் மீள் குடியமர்வினை மேற்கொண்டிருந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் ஏற்கனவே கைவிடப்பட்ட குடியிருப்புக்களில் தமக்குப் பொருத்தமானவற்றில் குடியமர்ந்துள்ளனர்.

## கல்வி

மனித வாழ்வில் முக்கியமான துறை கல்வியாகும். ஒரு நாட்டினது அல்லது பிரதேசத்தினது அபிவிருத்திக்கு கல்வி ஒரு அளவு கோலாகும். அந்த வகையில் புங்குடுதீவு கிராமம் உட்பட தீவுப் பகுதி யாழ்ப்பாணக் குடாநாட்டோடு ஒப்பிடும் போது பௌதீக ரீதியில் வளம் குறைந்த பிரதேசமாகும். எனினும் புங்குடுதீவு கிராமம் வரலாற்று ரீதியாக அவ்வக் காலங்களுக்கு ஏற்ப கல்வி நிலையைப் பொறுத்த வரையில் உயர்ந்த நிலையில் காணப்பட்டிருந்ததாக வரலாற்று ஆதாரங்கள் உண்டு. குறிப்பாக 1950 களைத் தொடர்ந்து இக்கிராம மக்கள் தமது பிள்ளைகளைக் கல்வியின் பால் அக்கறை கொள்ள வைத்தனர். இதன் விளைவாக ஆரம்ப இடைத்தரக் கல்வியினை இப்பிரதேசப் பாடசாலையில் பயின்று உயர்தரக் கல்வியினை யாழ்ப்பாணக்குடாநாட்டில் பெற்று அரச மற்றும் தனியார் துறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் உயர் தொழில்களில் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டது.

யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்





யா/புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயம்

இந்நிலையில் இக்கிராமத்தின் கல்வி நிலையினை கருத்தில் கொள்ளும் போது நிலாப்பள்ளி, குருகுலக்கல்வி, திண்ணைப் பள்ளி போன்ற முறைசாராத கல்விநிலை 19ம் நூற்றாண்டின் பின்னரைக் காலப்பகுதிவரை கிராமத்தின் பல பாகங்களில் நடைபெற்றதாக அறிய முடிகின்றது. ஐரோப்பியர் வருகை யினைத் தொடர்ந்து முறைசார் கல்வியினை மேற்கொள்ளும் முகமாக நாடு முழுவதும் தம் மதம் சார்ந்த பாடசாலைகளை நிறுவினார்கள். 1831ஆம் ஆண்டு கத்தோலிக்க மிஷனறிமாரால் முதன் முதலாக ரோமன் கத்தோலிக்க பாட சாலை ஆரம்பிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து 1850ஆம் ஆண்டு அமெரிக்க மிஷநெறிமாரால் புங்குடுதீவு வடக்கு அமெரிக்கமிஷன் பாட சாலையும் (இப் பாடசாலை கமலாம்பிகை மகாவித்தியாலத்துடன் இணைக்கப்பட்டு விட்டது) புங்குடுதீவு இறுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையும், 1872ம் ஆண்டு புங்குடுதீவு மேற்கு அமெரிக்க மிஷன் பாட சாலையும், நிறுவப்பட்டது. கிறிஸ்தவப் பாட சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு மதமாற்றம் நிகழ் வதில் இருந்து இந்துக்களை நெறிப்படுத்து வதற்காக சைவப் பெரியார்கள் புங்குடுதீவில் சைவப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு முன் வந்தார்கள். 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இக்கிராமத்தின் விதானையாரும் கிராமசங்கத் தலைவராகவும் இருந்த உயர்திரு. அமரர்.வ. பசுபதிப்பிள்ளை அவர்களின் முயற்சியால் 1910ம் ஆண்டு ஸ்ரீகணேச மகா வித்தி யாலயமும் பராசக்தி வித்தியாலயமும் ஆரம்பிக்கப்பட்டன. இதனை தொடர்ந்து 1913ஆம் ஆண்டு 1914ஆம் ஆண்டு புங்குடுதீவு ஸ்ரீசித்தி விநாயகர் பாடசாலையும் அதனை தொடர்ந்து புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயம், கமலாம்பிகை வித்தியாலயம், திருநாவுக்கரசர் வித்தியாலயம், துரைசுவாமி வித்தியாலயம் ,இராஜேஸ்வரி வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1946ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் மகா வித்தியாலயங்களை நிறுவும் நோக்குடன் பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன அந்த வகையில் 1946ம் ஆண்டு புங்குடுதீவு மகா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது இதனை தொடர்ந்து அரியநாயகன் புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, குறிகட்டுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியன ஆரம்பிக்கப் பட்டன.

1991ம் ஆண்டு வரையும் இக்கிரா மத்தில் 15 பாடசாலைகள் இயங்கி வந்தன. 1991ம் ஆண்டு வெளி இடப்பெயர்வினை தொடர்ந்து இக்கிராமத்தில் புங்குடுதீவு மகாவித்தியாலயம் மட்டுமே இயங்கி வந்தது ஏனைய பாடசாலைகள் யாழ்ப்பாண நகரத் திலும் நகரம் சார்ந்த பகுதிகளிலும் கல்வித் திணைக்களத்தினரால் இயங்க வைக்கப்பட்டன. 1995ம் ஆண்டு வலிகாமம் இடப் பெயர்வினைத் தொடர்ந்து மேற்குறித்த பாடசாலைகள் தென் மராட்சி மற்றும் வடமராட்சி பிரதேசங்களிற்கு நகர்த்தப்பட்டன. 1996ம் ஆண்டு ஏப்பிரல் மாதம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கிராமத்துக்கான மீள் குடியேற்றத்துக்கு அரசாங்கம் அனுமதி அளித்ததன் விளைவாக படிப்படியாக 4 பாடசாலைகளை கல்வித் திணைக்களம் இயங்குவதற்கு அனுமதி அளித்தது. அவையாவன கமலாம்பிகை கனிஸ்ட வித்தியாலயம், கணேசா மகா வித்தியாலயம், சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், சித்தி விநாயகர் மகா வித்தியாலயம். 2010ம் ஆண்டினை அடுத்து துரைசுவாமி கனிஷ்ட வித்தியாலயம், றோமன் கத்தோலிக்க பாடசாலை, பெருங்காடு அமெரிக்க மிஷன் பாடசாலை, இராஜேஸ்வரி வித்தியாலயம் ஆகியன மாணவர்களின் கல்வியை முன்னெடுக்கும் நோக்குடன் மீள ஆரம்பிக் கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தற்போது திருநாவுக்கரசு வித்தியாலயம், அரியநாயகன் புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, புங்குடுதீவு மேற்கு அமெரிக்கமிஷன் பாடசாலை, குறிகட்டுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, பாராசக்தி வித்தியாலயம், சண்முகநாதன் வித்தியாலயம் ஆகியன மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலை களாகும்.

## ஆலயங்கள்

மிக நீண்ட காலமாக சைவ பாரம் பரியத்தினை கொண்ட புங்குடுதீவில் சைவ ஆலயங்கள் பலவும் கிறிஸ்தவ மிஷனரிமார் களினால் நிறுவப்பட்ட கிறிஸ்தவ ஆலயங்களும் அமைந்து மக்களின் ஆன்மீக ஈடேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் வழிகாட்டி நிற்கின்றன. வெவ் வேறு மதங்களை சார்ந்தவர்கள் இக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்ற போதிலும் மத வேறுபாடின்றி அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருவதை காண முடிகின்றது.

சைவ ஆலயங்களை பொறுத்த வரை பெருங்காடு சிவன் கோயில், பானாவிடை சிவன் கோயில், சிவாலயங்களாகும். மடத்து வெளி நுழைவாயில் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம், கலட்டிப்பிள்ளையார் ஆலயம், பெருங்காடு முத்தநயினார் புலம் ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம், தெங்கு திடல் விநாயகர் ஆலயம், அரியநாயகன் புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம், பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம், வல்லன் கண்டி பிள்ளையார் ஆலயம் என்பன விநாயகருக்குரிய ஆலயங்களாகும்.



**கண்ணகி அம்மன் கோவில் – புங்குடுதீவு**

இறுப்பிட்டி நாச்சிமார் ஆலயம், பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி ஆலயம், ஊரதீவு காளியம்மன், மாவுதிடல் மலையடி நாச்சிமார் கோயில், கோவில் வயல் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம், குறிகட்டுவான் மனோன்மணி அம்மன் ஆலயம், கல்லடி நாக புவனேஸ்வரி அம்மன் ஆலயம், பட்டயக்கார அம்மன் ஆலயம் ஆகியவற்றுடன் தீவுப் பகுதியில் பிரசித்தி பெற்ற கண்ணகையம்மன் என வழங்கப்படும் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயமும் அம்மன் ஆலயங்களாக உள்ளன. மடத்துவெளி வயலார் பாலசுப்பிர மணியர் கோவில், பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோயில் தில்லைப்பற்று முருக மூர்த்தி கோயில் ஆகியன முருகன் கோயில்களாக உள்ளன. இவை தவிர சிறு தெய்வ வழிபாடுகள் கிராமத்தின் பல பகுதிகளில் காணப்படுகின்றன. குறிப்பாக ஐயனார் ஆலயங்கள், நாகதம்பிரான் ஆலயங்கள், வைரவர் கோவில்கள் என பல சிறு தெய்வங்களுக்கு கோவில் கட்டி வழிபடும் மரபு இக்கிராமத்தில் காணப்படுகின்றது. இவை தவிர புங்குடுதீவு 4ம் வட்டாரத்தில் பழமை வாய்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக பிரசித்தி பெற்ற ஆஞ்சநேயர் ஆலயம் ஒன்றும் காணப்படுகின்றது.

### கிறிஸ்தவ ஆலயங்கள்

தீவுப்பகுதியில் மிகவும் பிரசித்தி பெற்ற கிறிஸ்தவ ஆலயங்களில் புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயம், புனித அந்தோனியார் தேவாலயம் ஆகியன புங்குடுதீவு 2ம் வட்டாரத்தில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயங்களாகும்.



புனித பிரான்சிஸ் சவேரியார்

இவை தவிர புங்குடுதீவு 1ம் வட்டாரத்தில் தென்னிந்திய திருச்சபைக்குரிய ஆலயமும் காணப்படுகிறது.

### பொருளாதார நிலை

புங்குடுதீவு கிராமத்தின் பொருளாதார நிலையானது பௌதீக காரணிகளுடன் இணைந்ததாகவே உள்ளது. வரலாற்றில் இக் கிராமத்தின் மக்களின் வாழ்வாதாரமானது பண்டமாற்றுப் பொருளாதார அமைப்புக்குட் பட்டிருந்தது. கிராமத்தில்லுள்ள தாழ்நிலங் களில் நெல்லுற்பத்தியும் மேட்டு நிலங்களில் சிறுதானியங்கள் மற்றும் பயறு, உழுந்து போன்ற பயிரினங்கள் மழையை நம்பி பயிரிடப் பட்டு வந்துள்ளன. அது தவிர பனையுடன் கூடிய உற்பத்திப் பொருட்களும் பெரும்பாலான குடும்பத்தினரால் உற்பத்தி செய்யப்பட்டு நுகரப் பட்டது மட்டுமல்லாது சந்தைப்படுத்தவும்பட்டது. பொதுவாக இக்கிராம மக்கள் சுய தேவைப் பொருளாதார அமைப்புடன் இணைந்திருந்தனர் எனக் கொள்ளலாம். பிரித்தானிய ஆட்சியில் மிகக்குறைந்த அளவினர் வெளியிடப் பெயர்வினை மேற்கொண்டு பொருள் தேட்ட மீட்டினர்.

20ம் நூற்றாண்டின் முதற் பகுதியில் வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ளும் பொருட்டும் பல்வித தேவையினை நிறைவு செய்யும் முகமாகவும் யாழ்ப்பாண குடா நாட்டிற்கும் தென்னிலங்கைக்கும் சிறு அளவில் இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தனர்.



இவர்கள் தவிர இக் கிராமத்தில் இருந்து குறித்த சிறு எண்ணிக்கையினர் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு தொழில் நிமித்தம் புலம் பெயர்ந்துள்ளனர். இதனால் இக்கிராமத்தின் பொருளாதார நிலை ஏனைய பிரதேசங்க ளோடு தொடர்புபட்டதாக மாற தொடங்கியது. 1942ம் ஆண்டு இலவசக் கல்வியைத் தொடர்ந்து ஆரம்ப இடைநிலைக் கல்வியினை பூர்த்தி செய்த இளைஞர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு கொழும்பு மற்றும் தென்னிலங்கைக்கு செல்லும் நிலை உருவானது. அது மட்டுமல்லாது கொழும்பு துறைமுகத்தில் வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு கணிசமான இளைஞர்கள் மற்றும் நடுத்தர வயதினர் சென்றுள்ளனர் வெளியிடப் பெயர்வினை மேற் கொள்ளாதவர்கள் தத்தம் துறைசார் தொழில் களில் ஈடுபாடு கொண்டிருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப் பெயர்வின் விளைவாக தாம் சென்றடைந்த பிரதேசங்களில் மேற் கொள்ளப்பட்ட தொழில்களின் விளைவாக தமது ஊதியத்தினை தமது உறவினர்களுக்கு மணிஓடர் மூலம் அனுப்பி வந்துள்ளனர். எனவே இக் காலப்பகுதினை மணிஓடர் பொருளாதார முறைமை கொண்ட காலப்பகுதியாக கொள்ள முடியும். இக்காலப்பகுதிகளில் அரச துறைகளில் மிகச் சிறிய எண்ணிக்கையினரே ஈடுபாடு கொண்டிருந்தனர் குறிப்பாக ஆசிரியர்கள் எழுதுவினைஞர்கள் போன்றோரைக் குறிப்பிடலாம்.

1960களைத் தொடந்து தமது பிள்ளை களுக்கு கல்வி புகட்ட வேண்டும் என விழிப்புணர்வு உருவாக அவர்களும் ஊர் பாட சாலைகளில் பிள்ளைகளை இணைத்துக் கொள்ளும் நிலை உருவானது. இதனால் கணிச மானோர் அரச தொழில்களில் ஈடுபடும் வாய்ப்பு உருவானது. பருவ கால விவசாயத்துடன் சமூக நிலையில் ஏற்பட்டு வந்த மாற்றங்களும் மக்களின் வாழ்வாதார நிலையை உயர்த்தியது எனலாம். மக்களிடையே பொருளாதார நிலையானது உயர்வடைந்து 1960களில் "கல்வீட்டுப் பொருளாதாரம்" உருவாகவே பெரு மளவிலான குடியிருப்புக்கள் கல்வீடுகளாக மாற்றமடையலாகின.

1980களைத் தொடர்ந்து ஏற்பட்ட அசா தாரண நிலையினைத் தொடர்ந்து இளைஞர்கள் சர்வதேச நாடுகளுக்கு புலம் பெயரும் நிலை உருவானது. இந் நிலையானது புங்குடுதீவு கிராமத்தினையும் விட்டு வைக்கவில்லை. பெரு மளவிலான இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அவர்களால் அனுப்பப்படும் பணமானது இக்கிராம மக்களின் வாழ்வாதாரத்திற்கு மட்டு மல்லாது தொடர்ச்சியான புலம்பெயர்வுக்கே வழிவகுத்தது. இக்கால பொருளாதார நிலை யினை "டிறா வீட்டு பொருளாதார அமைப்பு" எனக் கொள்ளமுடிகிறது.

1991ம் ஆண்டு நிகழ்ந்த இக் கிராமத்தின் ஒட்டுமொத்த மக்களின் வெளி இடப்பெயர்வானது சர்வதேச இடப்பெயர்வினை அதிகரித்தது. புலம் பெயர் இளைஞர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களை வரவழைக்கும் நிலை உருவாகியது. இக்கிராமத்து வாழ் பெரும் பாலான மக்கள் புலம் பெயரும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். 1991ம் ஆண்டு 150000 மக்கள் வாழ்ந்திருக்க 2013ம் ஆண்டு 4000 மக்களே வாழ்வதற்கு புலப்பெயர் நிகழ்வு பிரதான காரணியாக அமைந்து விட்டது.

1996ம் ஆண்டின் பின்னர் மீள் இடப் பெயர்வினை மேற் கொண்டவர்களில் பெரு மளவினர் பொருளாதார சமூகரீதியில் நலிவுற்ற வர்களாகவே காணப்படுகின்றனர். குறிப்பாக பெரும்பாலானோர் பயிர்ச்செய்கை நடவடிக் கைகளில் ஈடுபாடு கொள்ளாதவர்களாக உள்ளனர். அது மட்டுமல்லாது தாம் சார்ந்த தொழில்களின் மேன்மைநிலையினை அடை வதற்கு பல்வேறு இடர்பாடுகளை அனுபவித்து வருகின்றனர். அதாவது தமது வாழ்வாதாரத் தினை மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறைந்த நிலையில் உள்ளதால் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை எதிர் பார்க்கும் நிலையில் உள்ளனர் என்பதனை காணமுடிகின்றது.

**சுற்றுலா**

இப்பிரதேசத்தின் சுற்றுலாவைப் பொறுத்த வரையில் புங்குடுதீவின் சோரியா எனும் இடத்தில் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட வெளிச்சவீடும் சோழ்பரி பிரபுவினால் திறந்து வைக்கப்பட்ட மாநாட்டு மண்டபமும் குதிரைக்காக ஒல்லாந்தரால் நாட்டப்பட்ட பெருக்கு மரமும், கண்ணகி அம்மன் ஆலயமும் சுற்றுலாத் தலங்களாக அமைந்துள்ளன.

**சுகாதாரம்**

புங்குடுதீவின் சுகாதாரத்தினைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்த வரையில் அரச வைத்தியசாலையான புங்குடுதீவு ஆதார வைத்தியசாலையும் தனியார் ஆயுள்வேத மருத்துவ நிலையங்களும் காணப்படுகின்றன. புங்குடுதீவு ஆதார வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவு, அம்புலன்ஸ் சேவையும் அத்தோடு 24 மணி நேர சேவையும் வழங்கப்படுகின்றது.

### அபிவிருத்திக்கான உபாயங்கள்

புங்குடுதீவு கிராமத்தின் தற்போதைய முக்கியமான பிரச்சினை நன்னீரைப் பெற்றுக் கொள்வதில் உள்ள இடர்பாடேயாகும். கிராமத்தின் பெரும்பாலான பிரதேசங்களில் கிணற்று நீரானது உவர்த்தன்மை கொண்டதாகவோ, உப்பு நீராகவோ காணப்படுகிறது. குறைந்த பட்சம் குறித்த சில மாதங்களில் கிடைக்கப் பெறும் மழைநீரினை கடலுடன் சென்றடைய விடாது பாதுகாப்பதன் மூலம் சிறிதளவிலான நிவாரணத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும். இதன் முன்னோடியாக கடல்நீர் உட்புகாத வகையிலும் மழைநீர் வெளியேறாத வகையிலும் வாணர்பால முகப்பில் இருந்து இறுப்பிட்டி கடற்கரை வரை உவர் நிர் தடுப்பணையும், மூன்றாம் வட்டாரத்தில் தடுப்பணையும் உருவாக்கப்பட்டுள்ளது.


எனினும் மழைக்காலங்களில் பெறப்படும் நீரினை வீணாகாது பாதுகாப்பது மிகவும் முக்கியமானதாகும் அவ்வாறு பாதுகாப்பதன் மூலம் மேலும் சில மாதங்களுக்கு நன்னீரினைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உருவாகலாம். அதாவது வீராமலையில் இருந்து வரும் நீரினை பெரிய கிராய்குளம், சிறிய கிராய் குளங்களில் சேமிப்பதுடன் மேலதிக நீரினை குறிச்சிக்காடு, கன்னியாற்றுப் பகுதிகளில் பலமான அணைக் கட்டுக்கள் மூலம் தேக்குவதன் மூலம் அயலில் உள்ள நீர் நிலைகளில் நன்னீரை சேமிக்க முடியும். எனவே இதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

இவை தவிர கழுதைப்பிட்டி இறங்கு துறையினை மீளவும் செயற்படுத்த வேண்டும். ஏனெனில் நயினாதீவுக்கான கடற்பயணத்தினை குறிப்பாக பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு பயன்படுத்தும் பட்சத்தில் இப்பிரதேசம் சார்பகுதிகள் விருத்தியடைய வாய்ப்புள்ளன.

### *பின்னிணைப்பு*

பாடசாலைகள்
புங்குடுதீவு மகா வித்தியாலயம்
புங்குடுதீவு ஸ்ரீகணேசா வித்தியாலயம்
புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலயம்
புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்
புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்
புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாத வித்தியாலயம்
புங்குடுதீவு அமெரிக்க மிஷன் வித்தியாலயம்
புங்குடுதீவு இராஜ ராஜேஸ்வரி வித்தியாலயம்
அரியநாயகம்புலம் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை
இறுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயம்
குறிகாட்டுவான் அ.த.க.பாடசாலை
புங்குடுதீவு பராசக்தி வித்தியாலயம்
புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம்
புங்குடுதீவு றோ.க.வித்தியாலயம்
புங்குடுதீவு சேர் துரைச்சாமி வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாணர் பாலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புங்குடுதீவு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் வரைபடம்
Pungudutivu Grama Niladhari Divisions Map
Legend
Office Location
Type
Agrarian Service Centre
G.S.Office
Pradeshiya Sabha Sub Office
S.D.O. Office
Religious Place
Type
Church
Minstry
Temple
Hall
Type
Annathana Hall
Anthiyaddy Hall
Cultural Hall
Community Base Organization
Type
Community Centre
Fishermen Society
R.D.S
Sports Club
Youth Club
Post Office
Type
Main Post Office
Sub Post Office
Public Water Source
Type
Common Open Dug Well
Water Tank
Vender
Type
Fish Market
Retail Sale
Today Co-operation
Tourism Development
Type
Biobab
Light House
L.U.P.A
Legend
Hospital
Type
Divisional Hospital
Private Dispensary
M.P.C.S
Type
Co-op City
Retail
Head Office
Cemetery
Type
Burial Ground
Crematorium
Road
Type
Main Road
Secondary Road
Jeep Track/Cart Track
Foot Path
Hydro
Legend
Financial Institution
Type
B.O.C
Samurdhi Bank
School
Pre School
Bus Halt
Police post
Filling Station
N.G.O
Garbage Disposal
Play Ground
Transpormer
Dialog
N
W
E
S
Kannaativu
Pallativu
Urativu Sangumal Veethy
J/32
6 Ward
Iruppiddy
Iruppiddy
Ketativu
5 Ward
J/33
7 Ward
Urativu
Varativu
7 Ward
J/22
5 Ward
Iruppiddy Veethy
4 Ward
J/27
Nunukkal
Kurikadduvan
4 Ward
3Ward
Naduvaththuruththy
Sankaththarkerni
J/29
3Ward
Perungadu
1 Ward
J/28
Madathuveli
8 Ward
Kurikadduvan - Pungudutivu Road
J/23
8 Ward
Kurichchikkadu West
12 Ward
12 Ward
11 Ward
11 Ward
J/25
Mavuthidal
J/24
Vallan
9 Ward
Perungadu
J/30
J/31
2 Ward
J/26
10 Ward
10Ward
1:47,000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினாதீவு - ஓர் பல்துறை நோக்கு

திரு.தி.கோகுலரூபன்
கிராம அலுவலர்
பிரதேச செயலகம் – வேலணை

### அறிமுகம்

இலங்கையின் வடமேற்கே யாழ்ப் பாணக் குடாநாட்டின் தென்மேற்காக அமைந் துள்ள சப்த தீவுகளில் தனிப்பெரும் சரித்திரப் புகழ் பெற்ற தீவாக நயினாதீவு அமைந்துள்ளது. இத்தீவானது 5.7சதுர கிலோமீற்றர் பரப் பளவைக் கொண்டுள்ளது. இத்தீவானது வடக்கே அனலைதீவையும், மேற்கே பாக்கு நீரிணை யையும், தெற்கே நெடுந்தீவையும், கிழக்கே புங்குடுதீவையும் எல்லைகளாகக் கொண்டு வடக்கு தெற்காக நீண்டு அமைந்துள்ளது. இத் தீவின் கிழக்குக் கரையோரத்தில் வடக்குத் தெற் காக இரண்டு மைல் நீளமான போக்குவரத்துப் பாதையும் அதிலிருந்து கிழக்குக் கடலினுள் மூன்று படகு துறைகளும் காணப்படுகின்றன. இவை முறையே நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு முன்பாகவும், நயினாதீவு ரஜமகா விகாரைக்கு முன்பாகவும், நயினாதீவு ஞானவைரவர் ஆலயத்திற்கு முன்பாகவும் அமைந்துள்ளன. இக்கிராமத்தின் மேற்குப் பகுதி பிரதான தெருவுடன் மூன்று முக்கிய சிறு வீதி களால் இணைக்கப்பட்டுள்ளதுடன் ஆங்காங்கே இவ்வீதிகளுக்கு குறுக்காக பிரதேச சபை வீதிகளையும் கொண்டு காணப்படுகின்றது.

நயினாதீவானது தீவுகள் தெற்கு, வேலணை பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்டது. J/34, நயினாதீவு வடக்கு, J/35, நயினாதீவு மத்தி, J/36, நயினாதீவு தெற்கு எனும் கிராம அலுவலர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இங்கு 08 வட்டாரப்பிரிப்புகள் காணப் படுகின்றன. இவற்றுள் 01–04ஆம் வட்டாரங்கள் நயினாதீவு வடக்கிற்கும், 05ஆம் வட்டாரம் நயினாதீவு மத்திக்கும், 06–08ஆம் வட்டா ரங்கள் நயினாதீவு தெற்கிற்குமாகப் பிரிக்கப் பட்டுள்ளன. இவை தவிர உள்ளூராட்சி என்ற வகையில் வேலணை பிரதேச சபையின் உப அலுவலகம் ஒன்று நயினாதீவு மத்தியில் இயங்கி வருகின்றது.

### பௌதீக வளம்

இத்தீவானது மயோசீன் காலச் சுண்ணக்கல் பாறைகளைக் கொண்டு விளங்கு கின்றது. மேலும் ஆழமற்ற கடற்பரப்பைக் கொண்டமைந்துள்ளது. நாற்புறமும் கடலால் சூழப்பட்டுள்ள இத்தீவின் மேற்கு மற்றும் தெற்குப் பகுதிகள் அடிக்கடி கடலரிப்புக்கு உள்ளாகும் பகுதிகளாகக் காணப்படுகின்றன. அத்துடன் இத்தீவின் புவிவெளியுருவவியல் பண்புகளானவை மனித நடவடிக்கைகளாலும், இயற்கையினாலும் மாற்றமடைந்து வரு கின்றன. நயினாதீவின் மண்வளத்தைப் பொறுத்த வரையில் மேற்குக் கரையோரப் பகுதிகளில் ஊரி கலந்த மண்ணும், நடுப் பகுதியில் நரைமண்ணும், அதனைச் சூழவுள்ள பகுதிகளில் சிறிதளவு களிமண்ணும், கிழக்குக் கரையோரப் பகுதிகளில் மணல் தன்மை கொண்ட மண்ணும் காணப்படுகின்றது. இத் தீவின் நீர்வளத்தை எடுத்து நோக்கின் மக்கள் தரைக்கீழ் நீர்வளத்தையே பெரிதும் நம்பி வாழ்கின்றனர். அதிக மழைவீழ்ச்சியைப் பெறு கின்ற ஒக்டோபர் – ஜனவரி வரையான காலப் பகுதிகளில் நீர்மட்டம் உயர்வாகவும், மே– செப்டெம்பர் வரையான காலப் பகுதிகளில் நீர் மட்டம் குறைவாகவும் காணப்படுகின்றது. நீர் மட்டம் குறைவாகவுள்ள காலப்பகுதிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் வரட்சி நிலவுவதால் மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கு அதிக தூரத்திற்கு செல்ல வேண்டியுள்ளது. நீர்நிலைகளைப் பொறுத்த வரையில் ஆலங்குளம், சின்னக்குளம், கிராய்க் குளம், நரிக்குளம், வண்ணான்குளம், பெருங் குளம் என்பன முக்கியமானவை. இவை தவிர சிறிய நீர்க்குன்றுகளும் காணப்படுகின்றன. எனினும் கிணற்றிலிருந்து பெறப்படும் நீரே குடிநீர், விவசாயம் மற்றும் பிறதேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. இருந்த போதிலும் இத் தீவின் மத்திய பகுதியின் சில இடங்களிலும், தெற்கின் சில பகுதிகளிலும் நன்னீரைப் பெறக் கூடியதாக உள்ளது. கடும் வரட்சிக் காலப் பகுதி யான ஜுன் – செப்டெம்பர் வரையான மாதங் களில் பிரதேச செயலகத்தின் வரட்சிக்கால குடிநீர் விநியோகமும், நயினாதீவு சுவிற்சர் லாந்து அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணை யுடன் பிரதேசசபையூடாக இடம்பெற்றுவரும் இலவச குடிநீர் விநியோகமும் மக்களது குடிநீர்ப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வாக அமைகின்றன.

நயினாதீவின் நிலப்பயன்பாட்டை அவதானிக்கையில் தென்னைகளைக் கொண்ட வதிவிடக் காணிகள், தோட்டக்காணிகள், பனங் காணிகள், சிறிய நெல்வயல்கள், எதுவுமற்ற திறந்த வெளிக்காணிகள் என்பன குறிப்பிடத் தக்கவை. நயினாதீவின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் தோட்டக்காணிகள் காணப்படு கின்றன. எனினும் இவற்றின் பயன்பாடு மழை நீரை அடிப்படையாகக் கொண்டே காணப்படு கின்றது. வயற்காணிகளைப் பொறுத்தவரையில் வடக்கு மற்றும் மத்திய பிரதேசங்களில் குறிப்பிட்ட சில வயற்காணிகளில் நெற்செய்கை இடம்பெறுகின்றது. அத்துடன் தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் பெரும்பாலான மக்கள் வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டு வரு கின்றனர். பனைவளத்தைப் பொறுத்தவரையில் இப்பிரதேசத்தில் 17%மான அளவில் காணப் படுகின்ற போதிலும் அது தொடர்பான கைத் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தொகை மிகக் குறைவாகவே காணப்படு கின்றது.

### *பொருளாதாரம்*

* **கடற்றொழில்**

நயினாதீவுப் பொருளாதாரத்தின் முக்கியமான பகுதியாக தற்போது கடற்றொழில் காணப்படுகின்றது. நாற்புறமும் கடலால் சூழப் பட்டுள்ளதால் இப்பிரதேசம் கடற்றொழிலுக்கு வாய்ப்பான ஒரு பிரதேசமாக காணப்படு கின்றது. கடற்றொழிலானது சாதியடிப் படையிலேயே மேற்கொள்ளப்பட்டு வரு கின்றது. இத்தீவின் கரையோரத்தை அண்டிய பிரதேசங்களில் மீனவக் குடியிருப்புக்கள் அதிகளவாகக் காணப்படுகின்றன. மேலும் இப்பிரதேசத்தில் மே–நவம்பர் வரையான காலப்பகுதிகளில் மீன்பிடித்தொழில் குறைந் தளவிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. நவம்பர்– ஏப்ரல் வரையான காலப்பகுதிகளில் அதிகளவில் மேற்கொள்ளப்படுவதுடன் கட்டா, சூரை போன்ற மீனினங்களும் இக்காலப்பகுதி யிலேயே பிடிக்கப்படுகின்றன. இக்காலப் பகுதியே மீனவர்களுக்கு அதிக வருமானம் ஈட்டித்தரும் காலமாக அமைகின்றது. இப் பகுதியில் பிடிக்கப்படும் கடலுணவுகள் உள்ளூரிலும் எஞ்சிய தொகை வெளியூர் களிலும் சந்தைப்படுத்தப்படுகின்றன. மீன்கள் உடனடியாகச் சந்தைப்படுத்தப்படுவதால் பதப்படுத்தும் தேவை குறைவாகவே உள்ளது. எனினும் குறிப்பிட்டளவில் மீன்கள் உப்பிட்டுக் காய வைத்து கருவாடாக்கப்படுகின்றன. இவை பெரிதும் உள்ளூரிலேயே விற்பனை செய்யப் படுகின்றன. அண்மைக்காலமாக குறிகாட்டு வான் துறைமுகத்திலிருந்து நண்டுகள் கூலர்வாகனம் மூலம் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனால் அண்மைக் காலமாக மீனவர்கள் நண்டு பிடித்தலுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். மீன வர்களின் தேவைகள், பிரச்சினைகள் என் பவற்றைத் தீர்த்து வைப்பதற்காக வடக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கில் கடற்றொழிலாளர் சங்கங்கள் காணப்படுகின்றன.

* **விவசாயம்**

நயினாதீவைப் பொறுத்தவரையில் 1980களுக்கு முன்னர் மக்களின் பொருளாதாரத்தின் முக்கிய அம்சமாக விவசாயம் காணப்பட்ட போதிலும் தற்போது அந்நிலைமாறி விவசாயத்தின் முக்கியத்துவமானது படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றது. விவசாயம் பாரியளவிலன்றி சிறிய அளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவற்றுள் பெரும்பாலானவை வீட்டுத் தோட்டங்களாகவே காணப்படுகின்றன. இப்பகுதி விவசாயமானது பெரிதும் மழையை நம்பியே மேற்கொள்ளப்படுவதால் குறிப்பிட்ட சில காலப்பகுதிகளில் விவசாயிகள் பருவகால வேலையின்மையை எதிர்நோக்குகின்றனர். இதனால் மக்கள் மத்தியில் விவசாயத்திற்கான ஆர்வம் குறைவடைந்து பிறதொழில்களில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இங்கு மேற்கொள்ளப்படும் பிரதான பயிர்களாக சின்ன வெங்காயம், மிளகாய், மரக்கறி வகைகள், மற்றும் பயறு, உழுந்து போன்றனவும் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன. முன்னர் நெல் செய்கை பண்ணப்பட்ட போதும் அண்மைக் காலமாக செய்கை பண்ணப்படுவதில்லை.

* **வர்த்தகமும் கைத்தொழிலும்**

நயினாதீவின் வர்த்தகத்துறையைப் பொறுத்தவரையில் உள்ளூரில் நிரந்தரமாக வசிப்பவர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் பெரும்பாலானவை பலசரக்குப் பொருட்களின் விற்பனை நிலையங்களாகவே காணப்படுகின்றன. வர்த்தகத்திற்கான பொருட்கள் பெருமளவு யாழ்ப்பாணத்திலிருந்தே கொள்வனவு செய்யப்படுகின்றன.

கைத்தொழில் என்ற ரீதியில் நோக்கும் போது பாரிய கைத்தொழில்கள் எவையும் காணப்படவில்லை. எனினும் சிறுகைத்தொழில்கள் என்ற வகையில் பாண் உற்பத்தி, இரும்புக் கைத்தொழில், தச்சுத்தொழில், பனை சார் உற்பத்திப் பொருட்களின் விற்பனை என்பன இங்கு குறிப்பிடத்தக்க அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## *கல்வி*

நயினாதீவின் கல்வித்துறையைப் பொறுத்தவரை இங்கு 04 முன்பள்ளிகளும், 03 பாடசாலைகளும் காணப்படுகின்றன. அந்த வகையில் பாலர் முன்பள்ளிகளாக நயினாதீவு அம்பிகா முன்பள்ளி, நயினாதீவு செல்லம் முன்பள்ளி, நயினாதீவு கணேசா முன்பள்ளி, நயினாதீவு அண்ணா முன்பள்ளி போன்றனவும் பாடசாலைகள் என்ற வகையில் யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம் – தரம் 01 – 05 வரையும், யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலயம் – தரம் 01 – 11 வரையும், யா/நயினாதீவு மகா வித்தியாலயம் – தரம் 06 – 13 வரையும் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

*யா/நயினாதீவு மகா வித்தியாலயம்*





*ஸ்ரீ கணேச பாலர் முன்பள்ளி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலங்களில் இத்தீவின் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் பல கல்விமான் களை உருவாக்கிய பெருமையைக் கொண் டுள்ளது. எனினும் அண்மைக்காலமாக கல்வி நிலை தளம்பல் நிலையிலேயே காணப்படு கின்றது. காரணம் பெரும்பாலான மாணவர்கள் புலமைப்பரிசில், க.பொ.த(சா.த) சித்தியின் பின்னர் குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு கல்வி பயிலச் செல்வதேயாகும். மேலும் வெளியூர் களிலிருந்து இங்கு வந்து கற்பிக்கும் ஆசிரியர் களுக்கு இங்குள்ள பாடசாலைகளில் போதி யளவு தங்குமிட வசதிகள் இன்மையால் அவர்கள் தமது கற்பித்தல் செயற்பாட்டை சிறந்த முறையில் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

***சுகாதாரம்***

நயினாதீவின் மருத்துவமும் சுகா தாரமும் என்றவகையில் நோக்கும்போது இங்கு பிரதேச வைத்தியசாலை ஒன்று ஆண், பெண் நோயாளர் விடுதி, வைத்தியர் தங்கும் விடுதி, தாதியர் தங்கும் விடுதி, மகப்பேற்று நிலையம், பல்வைத்திய நிலையம், பிரேத அறை, அவசர அம்புலன்ஸ் சேவை என்பனவற்றைக் கொண்டு காணப்படுகின்றது. தற்காலிகமாக நியமிக்கப் பட்ட வைத்தியர் ஒருவர் இங்கு கடமையாற்றி வருகின்றார். எனினும் இவ் வைத்திய சாலையில் நிரந்தர வைத்தியரின்மையும், அவசரசிகிச்சை தேவைப்படும்போது யாழ் போதனா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய



*பிரதேச வைத்தியசாலை நயினாதீவு*

இக்கட்டான நிலையும் இக்கிராம மக்கள் எதிர் நோக்கும் ஒரு பிரச்சினையாக இருந்து வரு கின்றது. மேலும் பிரதேசசபை உப அலுவலக இலவச ஆயுர்வேத வைத்தியசாலையும் தற்போது புதிய கட்டடத்தொகுதியில் அனைத்து வசதிகளுடன் இயங்கி வருகின்றது. இவ் வைத்தியசாலைக்கென நிரந்தர வைத்தியர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அடுத்து சுகாதாரத்துறையினை எடுத்து நோக்கின் மக்களின் சுகாதாரத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பொதுச் சுகாதார பரி சோதகர் ஒருவரும், மருத்துவமாது ஒருவரும் நிரந்தரமாக சேவையாற்றி வருகின்றனர். மற்றும் கிராமச்சுத்தம் பேணும் பொருட்டு பிரதேசசபை தனது கழிவகற்றல் சேவையை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது.

***சுற்றுலா***

இலங்கையிலுள்ள பிரசித்தி பெற்ற சுற்றுலா மையங்களில் நயினாதீவும் ஒன் றாகும். அந்தவகையில் அறுபத்துநான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடம் என்று சிறப்பிக்கப்படுகின்ற ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் மற்றும் புத்தபிரான் வந்திறங்கி பெருமை தந்த நயினாதீவு ரஜமகா விகாரை, பாரம்பரிய பெருமை கொண்ட இஸ்லாமிய பள்ளிவாசல் என்பன சுற்றுலாப்பயணிகளின் வருகைக்கான ஸ்தலங்களாகக் காணப்படு கின்றன.

மத தலங்கள் காணப்படுவதன் காரணமாக உள்நாடு மற்றும் வெளிநாடு களிலிருந்து பெரும் எண்ணிக்கை யான யாத்திரிகர்கள் நாளாந்தம் வருகை தந்து கொண்டிருக்கின்றனர். வரலாற்று ரீதியில் மணிமேகலை காப்பியத்தில் வரும் மணிமேகலை தெய்வம் இத்தீவிற்கு வந்த தாகவும், மணிமேகலையை உபவனத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிபல்லவம் கொண்டு சென்று புத்தபீடிகைக் காட்சியை இந்திரனுக்கு உணர்த்தியதாகவும் மணிமேகலைக் காப்பியத்தில் கூறப்படுகின்றது. இவ்வாறான வரலாற்றுப் பெருமைகள் காரண மாக நயினாதீவானது சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக இன்றும் சிறப்புப் பெற்று விளங்கி வருகின்றது.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்





நாகதீப ரஜ மகா விகாரை

எனினும் சுற்றுலாத் துறையானது சுற்றுலாவுக்குரிய பண்புகளுடன் விருத்தி செய்யப்படாத நிலையினைக் காணக் கூடியதாக உள்ளது.

## போக்குவரத்தும் மின்சாரமும்

நயினாதீவின் போக்குவரத்துத் துறையில் குறிகாட்டுவான் - நயினாதீவுக்கான கடல் பிரயாணத்திற்காக 45 தனியார் படகு களும், உள்ளூர் போக்குவரத்திற்காக இ.போ.ச பேருந்து ஒன்றும், 30 முச்சக்கரவண்டிகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. படகு சேவை மு.ப 6.30 - பி.ப 6.30வரை அரை மணித்தியாலயத்திற்கு ஒருமுறை இடம்பெற்று வருகின்றது. மேலும் மக்கள் தமது தனிப்பட்ட பாவனைக்காக துவிச்சக்கர வண்டிகளையும், மோட்டார் சைக்கிள்களையும் பயன்படுத்தி வரு கின்றனர். இங்கு வீதிகள் பூரணமாக செப் பனிடப்படாத நிலையில் காணப்படுவதால் உள்ளூர் போக்குவரத்தில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நயினாதீவு நாகதீப விகாரை இறங்குதுறை





நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய இறங்குதுறை

தற்போது நயினாதீவில் மின்சார மானது 24 மணித்தியாலமும் தொடர்ச்சியாக விநியோகிக்கப்படுகின்றது. மக்கள் தமது மின் சாரம் தொடர்பான பிரச்சினைகள், தேவை களுக்காக இலங்கை மின்சாரசபையின் வேலணை அலுவலகத்திற்கு சென்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர்.

நயினாதீவுக் கிராமம் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஓர் கிராமமாக இருப்பதன் காரணமாக அண்மைக்காலமாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் மேலும் பல அபிவிருத்தித்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்களினை அரசும், ஏனைய சமூகமட்ட நிறுவனங்களும் மேற்கொள்வதனூடாக நயினா தீவினை சகல துறைகளிலும் விருத்தியடைந்த கிராமமாக மாற்றலாம் என்பதில் ஐயமில்லை.

***பின்னிணைப்பு***

பாடசாலைகள்

நயினாதீவு மகா வித்தியாலயம்

நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்தியாலயம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம்



*நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக் கட்டுரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அலுவலக முகாமை முறைமையும், 5 எஸ் செயற்திட்டமும் (Office Management System and 5s System)

திரு.ப.கஜேந்திரன்
முன்னாள் கணக்காளர்
பிரதேச செயலகம், வேலணை.

### அறிமுகம்

எந்த ஒரு நிறுவனத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் சரியான திறமையான முகாமைத்துவம் அவசியமாகும். முகாமைத்துவம் என்பது பற்றி பல்வேறு ஆய் வாளர்கள் வெவ்வேறு கால கட்டங்களில் வேறு பட்ட வரைவிலக்கணங்களைக் கொடுத் துள்ளனர். ஆரம்ப காலத்தில் கொடுக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் முகாமையாளரை மையப்படுத்தி வழங்கப்பட்டவை ஆகும். அதாவது முகாமையாளர் தன் கீழ் உள்ள ஊழியரைக் கொண்டு திறமையாக எவ்வாறு வேலை செய்ய வேண்டும். எவ்வாறு கட்டுப் படுத்த வேண்டும் போன்றனவாகும். ஆனால் நவீன காலத்தில் வழங்கப்பட்டு வரும் வரை விலக்கணங்கள் அவர்களது நலன்களைக் கருத்தில் கொண்டு வழங்கப்படுபவையாய் அமைகின்றன. இந்த வகையில் முகாமைத்துவம் என்பது முகாமையாளர் தன் கீழ் உள்ள ஊழியர் களுடன் சேர்ந்து பல்வேறு செயற்பாடுகளைத் திறமையாகவும் சரியாகவும் செய்வதனூடாக நிறுவனத்தை அதன் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யும் ஓர் நடவடிக்கை எனலாம்.

இன்றைய நவீன உலகில் ஒரு நிறுவனம் பல்வேறு விடயங்களை முகாமை செய்ய வேண்டி உள்ளது. மனித வள முகாமை, நிதி முகாமை, உற்பத்தி முகாமை, சந்தைப் படுத்தல் முகாமை போன்றன முக்கியமானவை யாகும். எனவே இவையனைத்தையும் தன்னகத்தே கொண்டுள்ள அலுவலகத்தை முகாமை செய்வது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். முகாமைத்துவத்தை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும். அதற்கான நடவடிக் கைகள் எவை என்பதை உள்ளடக்கியதாக இக் கட்டுரை அமைகிறது.

### அலுவலக முகாமைத்துவம்
### Office Management

எந்தவொரு நிறுவனத்திலும் அலுவலக முகாமைத்துவத்தை சரிவர வழிநடத்த வேண்டி யதும் முகாமையாளர் நிறுவனத் தலைவரின் தலையாய கடமையாகும். இதில் பல்வேறு விட யங்கள் உள்ளடங்குகின்றன. முதலில் அலுவலக முகாமைத்துவம் என்றால் என்ன என பார்ப் போம்.

அலுவலகமானது ஊழியர்களையும் வேறு பல பௌதீக வளங்களையும் உள்ளடக் கியதாக காணப்படும். இந்த மனித வளத்தையும், பௌதீக வளங்களையும் சரிவர நெறிப்படுத்தி சரிவர ஒழுங்கமைத்து நிறுவனத்தில் அதி உச்ச வேலைத்திறனை அடையச் செய்வதே அலுவலக முகாமைத்துவம் ஆகும்.

இன்று எமது நாட்டில் பல்வேறுபட்ட அலுவலகங்கள் காணப்படுகின்றன. அரசு தனியார், பகுதிசார் அரசு, அரச சார்பற்ற நிறுவனங்களில் அலுவலகங்கள் காணப்படு கின்றன. இவை பல்வேறு நோக்கங்களை கொண்டவையாகவும், தமது நோக்கத்தை அடையும் பொருட்டு பல்வேறுபட்ட தொழிற் பாடுகளையும், தந்திரோபாயங்களையும் அமுல் படுத்துபவையாகவும் காணப்படுகின்றன. இவை தமது நடவடிக்கைகளை வெவ்வேறு கோணங்களில் அடைய முற்பட்டாலும் அடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய இலக்கு ஒன்றாகவே இருக்கும். அதாவது நிறுவன வளர்ச்சியும் அபி விருத்தியுமே அவற்றின் இறுதி இலக்காக இருக்கும். எனவே இத்தகைய அலுவலக முகாமைத்துவத்தை சரிவர நெறிப்படுத்த வேண்டும். அவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

1. நிறுவன அமைப்பு முறையும் அதன் செயற்பாடுகளும் (Organization chart)

பொதுவாக எல்லா நிறுவனங்களிலுமே அலுவலக முகாமையை திறமையாக செய்ய அமைப்பு வரைபடம் ஒன்றை வைத்திருக்கும். இது ஊழியர்களுக்கிடையேயான அதிகார ஒப்படைப்பு, பொறுப்பு, தொடர்பு முறைமை போன்றவற்றை விளக்கமாக எடுத்துக் காட்டும். இவ் வரைபடம் ஒரு நிறைவேற்று அதிகாரியின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக் களையும், ஊழியர்கள் தாம் யார் யாரிடம் பதில் கூற வேண்டும் என்பதனையும் காட்டும்.

2. அலுவலக இட ஒழுங்கமைப்பு (Layout)

இங்கு ஊழியர்களுக்கான பொருத்தமான இடங்கள் மற்றும் அலுவலகத் தளபாடங்கள் சரியான இடத்தில் வேலைகளை இலகுவாக்கும் முறையிலும் இடத்தை மீதப் படுத்தும் வகையிலும் ஒழுங்குபடுத்தப் பட்டிருக்க வேண்டும் என்பதுமே முக்கியமானதாகும். இதனால் ஊழியர்களுக்கு இடையேயான தொடர்பாடல் இலகுவாக்கப் படும்.

3. ஊழியரை ஊக்கப்படுத்தல்
(Staff Appraisal)

இங்கு ஊழியரை எல்லா மட்டத்திலும் ஊக்குவிப்பது இன்றியமையாத ஒன்றாகும். ஊழியர்களை அவர்களது வேலைத் திறன் அடிப்படையில் உற்சாகப்படுத்தி அவர் களுக்கு வெகுமதி அளித்தல் முக்கியமானதாகும். அத்துடன் அவர்களது தவறுகள் சுட்டிக் காட்டப்படுவதோடு அவற்றை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர தண்டனை வழங்கப் படல் ஏற்புடையதன்று, எந்தவொரு ஊழியரும் தவறு விடுவது என்பது இயல்பானதாகும். ஆனால் அத்தவறு வேண்டுமென்று செய்யப் பட்டதோ அன்றி தவறுதலாக செய்யப்பட்டதோ என்பதே இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும். தவறுகள் வேண்டுமென்றே செய்யப்பட்டால் அவை சுட்டிக்காட்டப்படுவதோடு அவர்களுக்கு ஒரு கடுமையான எச்சரிக்கை விட வேண்டும். அவர்கள் மீண்டும் மீண்டும் செய்தால் தண்டனை வழங்குவது தவிர்க்க முடியாததாகும். ஆனால் அறியாமல் செய்யப்படும் தவறுகளுக்கு மன்னிப்பு வழங்கி ஆலோசனை வழங்க வேண்டும்.

4. நேர முகாமைத்துவம் (Time Management)

எல்லா ஊழியர்களும் தமது வேலையின் தன்மைக்கேற்ற வகையில் குறிப் பிட்ட நேரத்துக்குள் வேலையை செய்து முடிக்க வேண்டும். ஊழியர்களின் கடமை நேரம் மற்றும் ஓய்வு நேரங்கள் கணிப்பிடப்பட வேண்டும்.

***நேர முகாமையை கடைப்பிடிக்க பின்வருவனவற்றை கடைப்பிடிக்கலாம்.***

- காலையில் எழுந்தவுடன் செய்ய வேண்டிய வேலைகளுக்கான நேரங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.
- இரவு மேலே குறிப்பிட்ட வேலைகள் உரிய நேரத்துக்குள் செய்யப்பட்டதா எனச் சரி பார்த்தல்.
- ஊழியருக்கான வேலையை அதிகாலையிலேயே திட்டமிட்டு ஒதுக்கி வைத்தல்.
- அன்றைய தினத்துக்குரிய விடயங்களை ஒழுங்குபடுத்தி தயார் பண்ணி வைத்தல்.
- விருந்தினர்கள் யாராவது வந்திருந்தால் அவர்களுடன் கதைத்த படியே உமது வேலையை செய்தல்.
- விருந்தினருடன் நேரத்தை வீணாக்காமல் அளவுடன் உரையாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தொலைபேசியில் உரையாடும் போது சுருக்கமாகவும் தேவையுடனும் உரையாடல்.
- சட்டங்களுக்கு நிகழ்ச்சி நிரலை தயார் செய்து வைத்தல்.
- தினசரி பத்திரிகைகளை வாசிக்க 15 நிமிடங்களை செலவிடுதல்.
- ஏதாவது வேலைக்கு தாமதம் ஏற்படுமானால் அந்த நேரத்தில் புத்தகங்களை வாசித்தல்.
- குடும்பத்தினருடன் சிறிது நேரத்தை செல விடுதல்.

5. ஊழியரின் மனவலிமை (Staff Morales)

மேற் கூறப்பட்ட நேர முகாமைத்துவ விதிகளைச் சரிவர வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தினால் மன வலிமையுடனும், திறமையாகவும் வேலைகளைச் செய்வதுடன் மன அழுத்தங் களிலிருந்து விடுதலை பெறலாம். மன அழுத்தமானது வேலைப்பழு அதிகரிக்கும் போதும் மன உளைச்சல் கூடும் போதும் ஏற்படுகின்றது. இதனை தடுப்பதற்கு பின் வரும் வழிமுறைகளை கையாளலாம்.

- வேலை தொடர்பான பிரச்சனைகளை மற்ற வர்களுடன் கலந்து ஆலோசித்தல்.
- உமக்கு சாதகமான தீர்வாக தென்பட்டால் அதனைத் தயங்காமல் செய்தல்.
- வேலைகளை பகிர்ந்து அளித்தல்.
- நேரமுகாமைத்துவத்தை கடைப்பிடித்தல்.
- உரிய நேரத்தில் சாப்பிடுதல்.
- தினமும் உடற்பயிற்சி செய்தல்.
- விடுமுறையினை சிறப்பாக கழித்தல்
- நீங்கள் மிகவும் முக்கியமான அல்லது இக் கட்டான நிலையில் இருப்பதாக எண்ணி னால் அலுவலகத்திற்கு செல்லாது விடு முறை எடுக்கவும்.

6. தொடர்பாடல் (Communication)

வினைத்திறனான தொடர் பாடல்முறை பின்பற்றல் நிறுவனத்திற்கு மிகவும் முக்கியமான தொன்றாகும். தகவலானது மேல் மட்டத்திலிருந்து கீழ்மட்ட ஊழியர்களுக்கு செல்லும் போது அத்தகவலை அவர்கள் சரியாகவும், தெளிவாகவும், விரைவாகவும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

7. அலுவலக முறைமைக் கட்டுப்பாடு (Office System Control)

அலுவலகத்தில் காணப்படும் இயந்திரங்கள், உபகரணங்கள், மோசடி தடுப்பு நடவடிக்கைகள், ஊழியர் பாதுகாப்பு மற்றும் சேவைகள் போன்றவற்றில் ஏற்படுத்தப்படும் கட்டுப்பாடுகளைக் குறிக்கும். அலுவலகங்களில் காணப்படும் பல்வேறு தராதர ஊழியர்களை ஒன்றிணைத்து அவர்களுக்குரிய வேலைகளை "வேலைப்பகிர்வின்" மூலம் பிரித்து கொடுப்பதன் மூலம் நிறுவன இலக்கினை வினைத்திறனான முறையில் அடைந்து கொள்ளலாம்.

***ஒரு சிறந்த அலுவலக முகாமையை உரு வாக்கத் தேவையானவை***

- உங்களில் மிகுந்த நம்பிக்கை வைக்கவும்.
- சரியான மனப்பாங்கைக் கைக்கொள்ளல்.
- தலைமைத்துவப் பண்புகளை கையாளுதல்.
- புத்தாக்கத் திறனை விருத்தி செய்தல்.
- சரியான உடல்ரீதியான மொழியைப் (Body Language) பயன்படுத்தல்.
- அதிகார பகிர்வினை மேற்கொள்ளல் பிரச்சனைகளைத் தீர்த்தல்.
- நேர முகாமைத்துவத்தைக் கடைப்பிடித்தல்.
- மன அழுத்தத்தைத் தவிர்த்தல்.

***அரச அலுவலகங்களில் 5 எஸ் செயற் திட்டம்***

அறிமுகம்

இன்றைய நவீன உலகில் உற்பத்தித் திறன் என்னும் எண்ணக்கருபற்றி பல்வேறு தரப் பினரும் பிரஸ்தாபித்து வருகின்றனர். யப்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற வளரச்சியடைந்த நாடுகளின் முன்னேற்றத்தை அவதானிக்கும்போது அந்நாடுகள் உற்பத்தித்திறன் பற்றிய எண்ணக்கருக்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வந்தன என்ற உண்மை புலனாகும். இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது மிகமோசமான பாதிப்புக்குள்ளான யப்பான் அதன்பின் மிகவேகமாக முன்னேறியது. இதற்காக வேலைக்குழு, சரியான முகாமைத்துவ முறை சேர்ந்து நடத்தும் முகாமைத்துவம், தலைமைத்துவ அபிவிருத்தி ஆகிய நுட்பங்களைப் புகுத்தியபோது 5 எஸ் எனக் கூறப்படும் உற்பத்தித்திறன் உத்திகளில் ஒன்றையும் யப்பான் பாவித்தது. இதனால் தொழிலாளர் பிரச்சனைகள், வேலை நிறுத்தங்கள், நேரத்திற்கு மாத்திரம் வேலை போன்ற தொழிலாளர் பிரச்சனைகள் இல்லாதுபோய் இயந்திரங்களின் சரியான இயக்கம் தரமான பொருட்களின் உற்பத்தி என்ற இலக்கை சுலபமாக அடைந்தது. இவ்விதம் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த 5 எஸ் யப்பானில் அரசாங்க அலுவலகங்களிலும், தனியார் நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும் மாத்திரமன்றி வீடு வாசல்களிலும் செயற்பட ஆரம்பித்து யப்பானிய சமூகத்தின் வாழ்கையுடன் இணைந்ததொன்றாக மாறியது. இதனால் யப்பானிய மக்கள் மனப்பழு இன்றி தங்கள் வேலைகளைச் செய்து தமது நாட்டின் செல்வத்தைப் பெருக்க தங்களால் ஆன பங்களிப்பை வழங்கினார்கள்.

இவ்விதமாக முன்னேறிய யப்பானைப் பின்பற்றி ஆசிய நாடுகளான சிங்கப்பூர், மலேசியா, கொரியா, தாய்வான் ஆகிய நாடுகள் 5 எஸ் எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தி பெருவெற்றி அடைந்தன. தற்போது நமது நாட்டிலும் அரச, தனியார் அலுவலகங்களிலும் 5 எஸ் எண்ணக்கருவையும் உற்பத்தித்திறன் செயற்திட்டத்தையும் மேம்படுத்துவதற்கு அரசு பெரும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. இதற்காக தேசிய உற்பத்தித்திறன் செயலகம் தாபிக்கப்பட்டு அதன் பணிகள் நாடு முழுவதும் பன்முகப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக அலுவலகங்களுக்கு இடையில் போட்டிகள் நடத்தப்பட்டு சிறந்த அலுவலகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றின் தரம் மேம்பாடடைய ஊக்குவிக்கப்படுகின்றன.

5 எஸ் எனப்படுவது யப்பானிய மொழியில் வரும் பின்வரும் ஐந்து சொற்களின் முதலெழுத்துக்களாகும்.

- SEIRI (Short) – செய்றி
- SEITON (Set in order) - செய்த்தோன்
- SEISO (Shine/ Sweep - செய்சோ
- SEIKETSU (Standardize) - செய்கெட்சு
- SHITSUKE (Sustain) - சித்சுகே

உற்பத்தித்திறனை மேம்படுத்த பல்வேறு வழி முறைகளிருந்தும் 5 எஸ் நுட்பமானது மிகவும் இலகுவாகச் செய்யக்கூடியது, யாவருக்கும் இலகுவாக விளங்கக்கூடியது, எந்த இடத்திலும் நடைமுறைப்படுத்தக்கூடியது, மிகக்குறைந்த செலவில் செய்யக்கூடியது மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்த அடிக்கல்லாக அமைவது போன்ற காரணங்களால் முக்கியத்துவம் பெறுகிறது. மேலும் 5 எஸ் இன் முப்பரிமாணங்களாக

1. அமுல்படுத்தல் (Implementation)
2. அர்ப்பணிப்புடன் கூடிய ஈடுபாடு. (Habitual Practice)
3. தேக்கத்தை தவிர்த்தல். (Prevention of Accumulation)

என்பன அமைகின்றன.

### SEIRI (Short) – *செய்றி*

தேவையானவை எவை தேவையற்றவை எவை என வேறுபடுத்தலும் தேவையற்றவற்றை அகற்றுதலும் மற்றும் குப்பை கூழங்களை அகற்றுதலும். இதற்காக நாம் பின்வருமாறு வகைப்படுத்தலை செய்து தேவையற்றவற்றை அகற்றலாம்.




- தேவையற்றவை, இலகுவில் அப்புறப்படுத்தக்கூடியவை, விலைமதிப்பற்றவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ தேவையற்றவை ஆனால் விலை மதிப்புள்ளவை
♦ தேவையற்றவை, இலகுவில் அப்புறப்படுத்த இயலாதவை விலைமதிப்பற்றவை
♦ அடிக்கடி தேவைப்படுபவை அல்லது உப யோகப்படுத்துபவை
♦ அடிக்கடி தேவைப்படாதவை.

தேவையற்றவற்றை நீக்க களஞ்சியப் படுத்தலைக் கட்டுபடுத்தலாம், தேவையற்ற வற்றை அழித்து விடலாம், தேவையற்றவற்றை விற்பனை செய்யலாம், வேறு இடத்தில் களஞ் சியப்படுத்தலாம், தேவைக்கு ஏற்ப ஏனைய பகுதிகளுக்கு பகிர்ந்தளிக்கலாம், தேக்கி வைக்கும் மனப்பாங்கினை கட்டுப்படுத்தலாம்.

## SEITON (Set in order) – *செய்த்தோன்*

தேவையானவற்றை இலகுவில் எடுத்துக்கொள்ளும் விதத்தில் ஒழுங்குபடுத்தி வைத்தல். இதற்காக நாம் Labeling, Visual Control, Marking உடன் Colour System ஐயும் பாவிக்கலாம்.

❖ எல்லா பொருட்களையும், உபகரணங் களையும் இடம் குறித்து பயன்படுத்தல்.
❖ இந்த பொருள் இந்த இடத்துக்கானது, இந்த இடம் இந்த பொருளுக்கானது.
❖ தேடுதலுக்கான நேரத்தை குறைத்தல்
❖ ஒழுங்கமைத்து பேணும் மனப்பாங்கு வளர்ச்சி.

## SEISO (Shine/Sweep) - *செய்சோ*

செய்சோ தினமும் சுத்தப்படுத்தலை கிரமமாக மேற்கொள்ள வேண்டும். இடத்தின் சுத்தத்தை இடைக்கிடை சோதனையிட வேண்டும். இடைக்கிடை சிரமதானங்களை ஒழுங்குசெய்து சுத்தப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும். அதாவது செய்சோ ஆனது முறை யாக சுத்தம் பேணுதலும் அழகுபடுத்துதலும் ஆகும்.

## SEIKETSU (Standardize) – *செய்கெட்சு*

தர மேம்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளை பின்பற்றுதலும். செய்றி, செய்த் தோன், செய்சோ ஆகியனவற்றை இடை விடாமல் முன்னேற்றல் ஆகும். இதற்காக

➤ கால அட்டவணைப்படி செயற்படல்.
➤ பிரிவுகளுக்கிடையிலான போட்டிகளை ஏற் பாடு செய்தல் என்பவற்றைச் செய்யலாம்.

## SHITSUKE (Sustain) – *சித்சுகே*

பயிற்சியும் ஒழுக்க நெறிகளும் இதில் அடங்குகின்றன. சகலருக்கும் 5 எஸ்ஐ கற் பித்தல். உற்பத்தித்திறன் உத்திகளில் ஒன்றான 5 எஸ் இன் பயன்களாக உள்ளுணர்வில் மாற்றம், நிறுவனத்தின் உள்ளும் புறமும் மாற்றம், சேவை உணர்வு திருப்தி என்பவற்றைக் கொண்ட பணியாளர் குழு ஒன்றை உருவாக்குதல், பாவிக்கும் இடத்தினை உச்ச அளவில் பாவித் தலும் அழகாக வைத்திருத்தலும் மற்றும் மூலப் பொருட்களை சிறந்த முறையில் பாவித்தல் போன்ற நன்மைகளும் ஏற்படுகின்றன. இதன் மூலம் உயர் உற்பத்தி, உயர் தரம், செலவீனங் களைக் குறைப்பதன் மூலம் நட்ட மேற்படு தலைக் குறைத்தல், சேவையின் தரம் வளர்ச்சி யடைதல், பொது மக்களின் சேவை வளர்ச்சி யடைதல், ஒற்றுமையின் வெளிப்பாடு மேம் படுதல், வினைத்திறன் வளர்ச்சியடைதல், இயந்திர உபகரணங்கள் பழுதடைதலைக் கட்டுப்படுத்தல், விபத்துக்கள் குறைதல் மற்றும் உரிய நேரத்தில் விநியோகம் என்பன போன்ற மேலும் நன்மைகள் ஏற்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய உலகில் உற்பத்தித்திறன் என்பது பொருளாதார வளர்ச்சியைப் பெருக் கவும், நாணய மதிப்பினை ஸ்திர நிலையில் வைத்திருப்பதற்கும், சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதற்கும் அவசியமான ஒரு கருப்பொருளாக உள்ளது. உற்பத்தித் திற னானது ஒரு எண்ணப்பாங்குடன் அமைந்தது (Mental Attitude), நடைமுறை ஒழுங்குடன் சம்மந்தப்பட்டது (Practical Action), தெளி வாகக் காணக்கூடியதாக இருப்பது, தரமேம் பாடு, அளவு என்பவற்றை விருத்தி செய்வது (Quality), மக்களின் வேலைக்கு மேலதிக பெறுமதி சேர்ப்பது (Adding Value), குழு ஒற்று மையை உருவாக்குவது (Team Sprit), வினைத் திறனுடனும் (Efficiency), பயன்தரு வினைத் திறனுடனும் (Effectiveness) சம்பந்தமுடையது. மேலும் இது நுகர்வோனின் விருப்பத்தை நோக்கி அமைந்தது, (Customer Orientation), அறிவு (Knowledge), வேலைத்திறன் (Skills), மனோபாவம் (Attitude), குழு முறைமை (Team Work) என்பவற்றுடன் தொடர்புடையது. எனவே 5 எஸ் என்ற எண்ணக்கரு சாதி, மத, குல, நாடு பேதமின்றி எந்த மட்டத்திலும் நடை முறைப்படுத்தக்கூடிய ஒரு எளிய கருத்துரு ஆகும்.

மேற்கூறிய 5 எஸ்ஐ நடைமுறைப்படுத்தியதால் யப்பான் நாடு பின்வருவனவற்றைப் பயின்றுக்கொண்டது.

- நிறுவனங்களை நல்ல விதத்தில் முகாமைத் துவம் செய்ய வேலை செய்வோரின் பங் களிப்பு மிகவும் அவசியம்.
- தனியே வேலை செய்வதைவிட ஒன்றுபட்டு உழைப்பதன் பயன் அதிகம்.
- எந்த ஒரு வேலைக்கும் தொடக்கவேலை அதற்கு அடித்தளமிடுவதே.
- விபத்துக்களைக் குறைக்கும் விதங்கள்.

## முடிவுரை

இன்றைய நவீன உலகில் ஒரு நிறுவனம் தனது செயற்பாடுகளை வினைத்திறனான முறையில் செய்வதற்கு முகாமைத்துவம் இன்றியமையாத தொன்றாகும். அதாவது மனிதவள முகாமை, நிதி முகாமை,திட்டமிடல் முகாமை மற்றும் உற்பத்திறன் முகாமை, சந்தைப்படுத்தல் முகாமை போன்றன முக்கிய மானதாகும். எனவே மேற்கூறியவற்றை உள் ளடக்கிய அலுவலகத்தை முகாமை செய்வது முக்கியமானதாகும். அலுவலக முகாமை முறையினை திறம்படச் செய்து நிறுவன இலக்கினை உரிய முறையில் அடைவதற்கு மேற்கூறப்பட்டுள்ள 5S செயற்றிட்டத்தினை இணைத்து செயற்படும் போது ஏனைய நாடுகள் மற்றும் நிறுவனங்களைப் போல் எமது நிறு வனமும் தனது வளர்ச்சியில் நவீன முறைகளை கூட உட்கொணர்ந்து முன்னேற முடியும். இதனை அமுல்படுத்துவது நிறுவனங்களை பொறுத்த வரை முகாமையுடன் முழு ஊழியர் களும் முழு மனதுடன் ஒத்துழைத்தாலே சாத்தியமானதாகும். எனவே நாமும் எமது நிறுவனத்தின் முகாமை முறையினை உரிய முறையில் பின்பற்றுவதோடு அதன் வளர்ச்சிக்கு 5S செயற்றிட்டத்தினையும் இணைத்து செயற்படுத்துவோம்.

உசாத்துணை நூல்கள்


- Denyer, J.C (1980) office Management, 5th Edition, Pitman Publishing, London.
- Miner, J.B (2005) Organizational Behavior: Essential Theories of Motivation and Leadership Armonk: ME Sharpe.
- 5 s for service organization and officers – by Debashissarker
- 5 s methodology - Wikipedia




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச மட்டத்திலான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச மட்ட விளையாட்டு நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திட்டமிடலில் நேரமுகாமைத்துவமும் மனித விழுமியங்களும்

திருமதி.மீரா திசநாயகம்பிள்ளை
பிரதி திட்டமிடல் பணிப்பாளர்
பிரதேச செயலகம்-வேலணை.

***திட்டமிடலில் மனித விழுமியங்கள்***

சிறப்பான திருப்திகரமான வாழ்க்கையை வாழ்வதற்கு பொருத்தமான முறையில் திட்டமிடுதல் அவசியமாகின்றது. திட்டமிடலில் முக்கியமான நோக்கங்களையும் குறிக்கோள்களையும் வகுத்தல், இந்த நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைவதற்குமான வழிமுறைகள், நெறிமுறைகள் என்பன மனித தர்மத்திற்கு உடன்பாடுடையவையாக அமைதல் அவசியம். இதற்கு கிடைக்கக் கூடிய வளங்களையும் ஆளணிகளையும் சாதனங்களையும் முறையாகப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறான முறையில் பெறப்படும் அடைவுகளே வாழ்க்கைக்கு உறுதியை தரவல்லன.

நாம் குறிக்கோள்களை வகுக்கும் போது அவற்றை என்னால் அடைய முடியுமா? அடைவதற்கு உதவக்கூடிய வளங்கள், திறமைகள், சந்தர்ப்பங்கள், பொருள், காலம் என்பன பொருத்தமாக இருக்கின்றதா? மன உறுதி, விடாமுயற்சி, ஆர்வம் என்பன உண்டா? என சுய கணிப்பீடு செய்து பார்க்க வேண்டும்.

ஒருவரோ அல்லது ஒரு நிறுவனமோ தங்களது பலம், பலவீனம் என்பவற்றை நன்கு அறிந்து ஆராய்ந்து அதற்கேற்ப குறிக்கோள்களை அமைத்தால் மாத்திரமே அக்குறிக்கோள்கள் அடையக்கூடியவையாக இருக்கும்.

குறிக்கோள்களும் வழிமுறைகளும் மிக அழகாக எழுத்துக்களில் வடிக்கப்பட்டிருக்கலாம். பார்ப்பதற்கும் வாசிப்பதற்கும் இலகுவாக இருக்கலாம். ஆனால் அவை செயற்படுத்தப்படக் கூடியவையாக உள்ளனவா என நோக்கப்பட வேண்டும். செயற்படுத்த முடியாத திட்டங்கள் பயனற்றதாகி விடுகின்றது. அத்தோடு எந்தவொரு திட்டத்தையும் சரியான முறையில் முகாமை செய்ய வேண்டும். நல்ல முகாமைத்துவம் இல்லாவிட்டால் குறிக்கோள்கள் எதிர்பார்த்தபடி நிறைவேறமாட்டாது.

திட்டங்களை நிர்ணயித்த கையோடு காலம் தாமதியாது குறித்தகாலத்திற்கு முன்னர் அவற்றைச் செயற்படுத்துவது இன்றியமையாததாகும். திட்டங்களிற்கு குந்தகமாக அமையும் பிரதான காரணிகள் காலதாமதமும் முயற்சியின்மையும் ஆகும். காலத்தைத் தாமதப் படுத்துவது என்பது ஒரு பலவீனமே தவிரப் பலமன்று. திட்டங்களை குறித்த காலத்திற்குள் செய்து முடிப்பது எத்தனையோ விரயங்களைத் தடுப்பதாக அமைகின்றது.

நாம் போடும் திட்டங்களை அமுல்படுத்தும் போது பல்வேறு இடையூறுகள் குறுக்கிடலாம். அவற்றை நேர்மையுடன் எதிர்கொண்டு துணிவுடன் முறியடிப்பது எமது பலமாகும்.

சில சமயங்களில் தோல்விகள் ஏற்படும் போது தோல்வியே வெற்றிக்கு உந்து சக்தி யாகும் நிலமையை நாம் உருவாக்க வேண்டும். இடையூறுகளை அறிவுபூர்வமாக அணுக வேண்டுமே தவிர உணர்வு பூர்வமாக அணுகுதலாகாது.

திட்டங்களை செம்மையாகச் செயற்படுத்த முடியாமல் போவதற்கும் காலதாமதமாவதற்கும் அலுவலர்களால் தரப்படும் காரணங்கள் சரியான காரணங்களாக இருப்பதில்லை. சில சமயங்களில் மேலதிகாரிகளின் வற்புறுத்தலால் முறைகேடாக நடந்து கொண்டோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றோ அல்லது சூழ்நிலை காரணமாக பிழைகள் நேர்ந்து விட்டது என்றோ சொல்லி தவறுகளைப் புரிந்துவிட்டு நியாயப்படுத்தும் பல பேரை நாம் சந்திப்பதுண்டு. முறைகேடுகளிற்கு இத்தகையோரே காரணமாகின்றனர்.

திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பல விரைவாக தீர்க்கப்படக் கூடியனவாக இருப் பினும் மாதக்கணக்கில் ஏன் வருடக்கணக்கிலும் கூட இழுத்தடிக்கப் படுகின்றன. இதற்கு அமுலாக்கம் செய்வோரின் உதாசீனப் போக்கே காரணமாகும். எனவே திட்டங்களை அமுல் படுத்துவோர் மனித விழுமியங்களை மதிப்ப வராக இருத்தல் வேண்டும்.

இடையூறுகள் வேறுபட்டன அதனை எதிர்கொள்ளும் மனிதரின் மனப்பாங்குகள் வேறுபட்டவை. நல்ல மனப்பாங்குள்ளவர்கள் இடையூறுகளைக்கண்டு அஞ்சமாட்டார்கள். பிரச்சனைகளிற்குத் துணிவுடன் முகம்கொடுத்துத் தீர்த்துக்கொள்வர். மனிதரின் ஆளுமையும் மனப்பாங்கும் உடன்பாடாக இருக்குமேயானால் இடையூறுகளோ பிரச்சனைகளோ எவ்வளவு கடினமானவையாக இருந்தாலும் திட்டப் பணிகளைப் பாதிக்கமாட்டாது. எனவே எல்லா வளங்களும் நிறைவாக இருப்பினும் மனித விழுமியப் பண்புகள் இல்லையெனின் கருமங்களை வெற்றிகரமாக ஆற்றமுடியாத நிலையில் இருப்பர்.

### நேரமுகாமைத்துவம்

ஒரு நிறுவனம் சிறந்த முறையில் இயங்கச் செய்வதற்கும் ஒரு குறித்த செயற் பாட்டை குறித்த நேரத்திற்குள் செய்து முடிப் பதற்கும் நேர முகாமைத்துவம் அவசிய மாகின்றது. இந்த வகையில் நேர முகாமைத் துவம் என்பது நேரத்தை பயன்பெறும் முறையில் பயன்படுத்திக் கொள்ளும் ஓர் சுய நிர்வாக முறையாகும். எனவே நேர முகாமைத்துவத் தினூடாக அலுவலகங்களில் நிறுவனங்களில் பணிபுரியும் ஒவ்வொரு ஊழியரும் தமக்கு வழங்கப்பட்ட பணிகளை ஒழுங்கான முறையில் ஆற்றுவதன் மூலம் நேரத்தினை சரியான முறையில் பயன்படுத்தி நோக்கத்தை அடைய முடியும்.

ஒரு தாபனம் சிறந்த முறையில் இயங்குவதற்கு பின்வரும் நேரமுகாமைத்துவச் செயற்பாடுகள் அவசியமாகும்.

1. அலுவலகத்திற்கு நேரத்திற்கு முன்னதாக வந்து தமது கடமைகளை செய்வதை உறுதிப் படுத்தல்.
2. நேரத்தை திட்டமிட்டு அதற்கு ஏற்ற வகையில் வேலைகளை மேற்கொள்ளல்.
3. ஊழியர்களின் அசைவுகளை கட்டுப்படுத்தக் கூடிய வகையில் தொழிற் சூழலை அமைத்துக் கொடுத்தல்.
4. ஊழியர்களுக்கு தொழில் மீது பற்று ஏற்படக் கூடிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
5. அலுவலகத்தில் தேவையற்ற உரையாடல் களைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.
6. அதிகமான கூட்டங்களைக் கூட்டுவதைத் தவிர்த்தல்.
7. ஊழியர்களின் நேரம் விரயமாகும் செயற் பாடுகளைக் கண்டறிந்து அவற்றிற்குரிய மாற்று ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுதல்.

எனவே திட்டமிடலில் திட்டமிடல் படிமுறைகள், காலத்துக் காலம் வெளி விடப்படும் சுற்றறிக்கைகள், தாபன விதிக் கோவையின் நிதியியல் நடைமுறைகள் என்பவற்றுக்கு அப்பால் மனித விழுமியங் களால் ஏற்படும் ஒழுக்கம் மற்றும் நேர முகாமைத்துவத்தால் ஏற்படும் ஒழுங்கு ஆகிய இவ்விரண்டும் பின் பற்றப்படும் போது மட்டுமே உண்மையான திட்டமிடலை செய்ய முடி கின்றது. இவற்றை பின்பற்றாத பட்சத்தில் பல்வேறு ஒழுக்கச் சீர்கேடுகள், ஊழல்கள், வன்முறைகள் சமுதாயத்தில் பெருகி வரும். எந்த அடைவையும் ஒழுங்கான வழியில் சென்று அடையவேண்டும் என உறுதியாக நிற்கும் போதுதான் திருப்தியான வாழ்வைப் பெற முடியும் என்பதை உணர்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக பராமரிப்பு நிலையமும் அதன் கூட்டிணைந்த செயற்பாடுகளும்


உத்தியோகத்தர்கள்
சமூக பராமரிப்பு நிலையம்
பிரதேச செயலகம் – வேலணை

## அறிமுகம்


சமூக பராமரிப்பு நிலையம் என்பது இலங்கையின் நலன்புரித் துறையில் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு எண்ணக்கருவாகும். இத்தகைய சமூக பராமரிப்பு நிலையங்களை அமைப்பதன் பிரதான குறிக்கோள் பிரதேச மட்டங்களில் செயற்படுத்தப்படும் பல்வேறு வகையான சமூக நலன்புரி சேவைகளை செயற் திறன் மிக்க வகையில் ஒருங்கிணைப்பதாகும். சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு, மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சு ஆகிய இரு அமைச்சுக்களின் கூட்டிணைந்த செயற்பாட்டினூ டாகவே இச் சமூக பராமரிப்பு நிலையங்கள் தமது வினைத்திறன் மிக்க நலன்புரிச் சேவை களை வழங்கி வருகின்றன.

அந்தவகையில் சமூக பராமரிப்பு நிலை யத்தின் சேவை வழங்கும் உத்தியோகத்தர் களாக சமூக சேவை உத்தியோகத்தர், நன் நடத்தை உத்தியோகத்தர், பெண்கள் அபி விருத்தி உத்தியோகத்தர், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், முதியோர் உரிமைகள் பாதுகாப்பு உத்தியோகத்தர், அபி விருத்தி உத்தியோகத்தர் (சமூக அபிவிருத்தி), அபிவிருத்தி உத்தியோகத்தர் (உளவளத் துணை), அபிவிருத்தி உத்தியோகத்தர் (ஆரம்ப குழந்தைப்பருவ அபிவிருத்தி), மற்றும் நிவாரண சகோதரி போன்ற உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர். பிரதேச மட்டங்களில் இவர் களுடைய சேவையானது ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட ஒரு கூட்டிணைந்த சேவை யாகவே காணப்படுகின்றது.

## சமூக பராமரிப்பு நிலையத்தின் செயற் பாட்டுக் கட்டமைப்பு:




## சமூகசேவைப் பகுதியும் அதன் செயற்பாடு களும்



சமூகபராமரிப்பு நிலையத்தின் மையப் பகுதியாக சமூக சேவைப்பகுதி செயற்பட்டு வரு கின்றது சமூகசேவைகள் அமைச்சு, முதி யோருக்கான தேசிய செயலகம், அங்கவீன முற்றோருக்கான தேசிய செயலகம் மற்றும் மாகாண சபையின் சமூகசேவைகள் திணைக் களத்தின் உத்தியோகத்தர்களின் ஒருங் கிணைந்த சேவைகள் இங்கு இணைக்கப் பட்டுள்ளன. பிரதி இலாபமின்றி சமூக மேம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டை மட்டுமே குறிப்பாக நலிவுற்றோர் நலன்களை நோக்காக கொண்டு 1948 ம் ஆண்டு தொடக்கம் இப்பகுதி இலங்கை முழுவதும் செயற்பட்டு வருகின்றது.

அந்த வகையில் எமது பிரதேச செயலக சமூகசேவைகள் கிளையின் பிரதான சேவைகளை விபரிப்பதாயும், மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இக்கட்டுரை அமைகின்றது எனலாம்.


I. மூத்த பிரஜைகளுக்கான சேவைகள்



**"வயோதிபம் என்பது இயலாமையின் முகவரி. இவ்வேளையில் ஏதோ ஒரு கட்டத்தில் தனது வேலைகளை தானே செய்ய முடியாமல் உடல், மனம் மாற்றப்படுகின்றது. இதுதான் பாதுகாப்பளிக்கப்படவேண்டும்."**

முதியோர் என்பவர்கள் ஒரு தேசத்தின் முதுசம். ஒரு தேசத்தை ஆற்றுப்படுத்தும் சக்தி. தள்ளாத வயதினராக இருந்தாலும் அல்லாடும் தேசத்தின் அரும்பணியாளர்களாக இருந்து சாதனை புரிந்திருக்கிறார்கள். இத்தகு நிலையைக் கடந்து இயலாநிலையை அடைந்த 60வயதினைக் கடந்தவர்கள் இதற்குள் உள்ளடக்கப்படுவர். 60-74 வயதிற்குட்பட்டவர்கள். இளம் மூத்த பிரஜைகள் என்றும், மேற் பட்டோர் மூத்த பிரஜைகள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இத்தகையோரிற்காக சமூக சேவைப் பகுதியால் மேற்கொள்ளப்படும் சமூக நலத்திட்டங்களாவன.

### *01. முதியோர் அடையாள அட்டை வழங்கல்*



அறுபது வயதினைத் தாண்டிய இருபாலாருக்கும் அவர்கள் சேவைகளை பெற்றுக் கொள்ளும் போது முன்னுரிமை பெற்றுக் கொள்வதற்கு முதியோர் அடையாள அட்டை வழங்கப்படுகிறது. சமூக சேவைகள் அமைச்சின் முதியோருக்கான தேசிய செயலகம் இச்சேவையை வழங்குகின்றது. குறித்த விண்ணப்பதாரி புகைப்படம், குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரதி என்பவற்றுடன் உரிய விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து கொள்வதனூடாக முதியோர் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### *02. முதியோருக்கான ரூபா 1000/= கொடுப்பனவு*

பொதுசன மாதாந்த உதவிப்பணம் (PAMA) பெற்றுவந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர் 70 வயதைத் தாண்டியதும் மாதம் ஒன்றிற்கு ரூபா 1000 வீதம் கொடுப்பனவு வழங்கப்படும். இதற்கு குறித்த விண்ணப்பதாரி பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் பயனாளியாக விளங்க வேண்டும். அத்தகைய பயனாளி உரிய வயதை எய்தியதும் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்வதுடன், வயதை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப்பிரதியை சமர்ப்பிப்பதனூடாக இக் கொடுப்பனவிற்கு தகுதியுடையவராவார்.

#### *01. தனித்து வாழும் ஆண்கள் கொடுப்பனவு.*

தியாகிகள் அறக்கொடை நிறுவனத்தினூடாக தனித்து வாழும் ஆண் முதியவர்களுக்காக இவர்களின் வாழ்வாதாரத்திற்கு ஒவ்வொரு மாதமும் உதவித் தொகை வழங்கப்படும்.



எவ்வித உதவியுமற்ற தனித்து வாழும் ஆண் முதியவர்கள் இக்கொடுப்பனவிற்குத் தகுதியுடையவர்களாவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 03. முதியவரை இல்லமொன்றில் இணைத்தல்.




பிள்ளைகள், உறவினர் எவரினதும் ஆதரவின்றி வாழும் முதியவர்களின் பாதுகாப்பு நிலையை உறுதிப்படுத்தும் வகையில் இச் செயற்பாடு மேற் கொள்ளப் படுகின்றது. இத்தகு நிலைக்குள்ளாகிய நபர் பற்றி உரிய பகுதிக்குத் தெரியப்படுத்துமிடத்து அவர் பற்றி ஆராயப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முதியோர் இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்படுவார்.

இவ்வாறு தனித்து வாழும் முதியவர் –

- ✓ வயது 60 வருடங்களைத் தாண்டி யிருத்தல் வேண்டும்.
- ✓ தன்னைக் கண்காணிப்பதற்கு யாருமற்ற, வாழ்வதற்கு எந்தவொரு வருமான வழியும் இல்லாதவராக இருத்தல்.
- ✓ சிறந்த மனநிலை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- ✓ பரவும் நோய்களால் பீடிக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.

போன்ற தேவைகள் தகைமைகளாக எதிர் பார்க்கப்படும்.

### 04. கண்வில்லை பெற்றுக்கொடுத்தல்




அறுபது வயதினைத் தாண்டிய வறுமைக் கோட்டின் கீழ் வாழும் கண்பார்வை பாதிப் படைந்த நோயாளி இவ் உதவித் திட்டத்திற்குத் தகுதியுடையவராவார். இதற்கு உரிய நபர் மருத் துவச் சான்றிதழுடன் தேவைக்கடிதம் என்ப வற்றைச் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து தனக்குப் பொருத்தமான கண் வில்லையைப் பெற்று மருத்துவச் சிகிச்சையை மேற்கொள்ள முடியும்.

### 05. முதியோர் சங்கங்களை அமைத்தல்.

கிராம மட்டங்களில் சங்கங்களை நிறுவி, அதனை அரசின் கீழ் பதிவு செய்து முதியோர் தேவைகளை நிறைவு செய்தல் இதன் நோக்கமாயுள்ளது. இவ்வாறான சங்கங்கள் உருவாகி செயலூக்கமுடையதாக செயலாற்றுவதனூடாக பல்வேறுபட்ட முன்னேற் பாடான நடவடிக்கைகளை எதிர்பார்க்க முடியும்.

- ✓ சுகாதார சேவைகள் மேற்கொள்ளல்.
- ✓ சுயதொழில் அல்லது வருமானம் தேடித்தரக் கூடிய வழிகளை முன்வைத்தல்.
- ✓ தொண்டர் அடிப்படையில் பகுதிநேர அடிப் படையில் சேவை வழங்கல்.
- ✓ முதியோர் உரிமைகளைப் பேணல்.
- ✓ முதியோர் எதிர்நோக்கும் பிரச்சினை களிற்குத் தீர்வுகாணல் போன்ற செயற்பாடு களை செயல்வடிவமாக்கல் இதன் நோக்க மாயுள்ளது.

### 06. சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம்.



நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் பங்காளர்களாக்கிக் கொண்டு சுய தொழில் ஒன்றில் அல்லது முறைசாராத தொழில் ஒன்றில் ஈடுபடுபவர் களிற்குப் பாதுகாப்பை வழங்கல் இதன் நோக்கமாகும். அரசின் ஏனைய ஓய்வூதியம் அல்லது சமூக பாதுகாப்பு முறையின் கீழ் நலனடையும் நபர் அல்லாதவராக இருக்கும் ஒருவர் 18–59 வயது காலப்பகுதியில் தனது வருமானத்தில் சேமிப்பொன்றை (கட்டுப்பணம் கட்டல்) மேற் கொள்ளலூடாக 60 வயதைத் தாண்டியதும் குறித்த கொடுப்பனவிற்கு ஏற்புடையவரா கின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II. விசேட தேவையுடையோரிற்கான சேவைகள்.

**"நீங்களும் எங்களைப்போன்றவர்களே. நாம் ஒருவரை ஒருவர் மதிப்போம். சமமெனக் கணிப்போம். ஒருவருக் கொருவர் உதவுவோம்."**

பௌதிக ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிப்பிற்குள்ளான நபர்கள் இவ் வகைப் பாட்டிற்குள் உள்வாங்கப்படுகின்றனர். பௌதிக ரீதியான என்கின்ற போது கண், காது, வாய், கை, கால், விரல்கள் போன்ற உறுப்புக்கள் பாதிப் புற்றோ, துண்டிக்கப்பட்டோ விளங்கும் நபர்கள் இதற்குள் அடங்குவர். உள ரீதியான என்கின்ற போது மன ரீதியான பாதிப்பிற்குள்ளான நோயாளிகள் இதற்குள் உள்வாங்கப்படுவர். இத்தகைய நபர்களிற்காகவும் சமூகசேவைப் பகுதி பல நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது.

### 01. நலநோன்பு அட்டை வழங்கல்






விசேட தேவையுடையோரிற்கான புனருத்தாரண நிகழ்ச்சிகளை மேற்கொள்ளும் பொருட்டு அவர்களுக்கான ஓர் அடையாள அட்டை போன்ற சிறிய புத்தகம் வழங்கப்படு கின்றது.

### 02. வாழ்வாதாரக் கொடுப்பனவு ரூ.3000/=

விசேட தேவைக்குரியவரைத் தலை மைத்துவமாகக் கொண்டியங்கும் குடும்பங் களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. குறித்த தகுதிப்பாடுடைய ஊனமுற்ற விண்ணப்ப தாரியின் குடும்ப நிலைகள் ஆராயப்பட்டு கொடுப்பனவிற்கு உள்வாங்கப்படுவர். இதன் மூலம் குறித்த பயனாளிக்கு மாதம் ஒன்றிற்கு ரூபா 3000 வீதம் கொடுப்பனவுத்தொகை வழங்கப்படும்.

### 03. வீடமைப்பு உதவி வழங்கல்.



விசேட தேவை யுடையோரைக் கொண்ட குடும்பத்திற்கு இவ் உதவித்திட்டம் வழங்கப் படுகின்றது. புதிதாக வீடு நிர்மாணிப்பவருக்கு ரூபா 250,000 கொடுப் பனவும், வீடுதிருத்த வேலைக்கு ரூபா 150,000 கொடுப்பனவும் உதவி வழங்கப்படும். இதற்குத் தேவையான தகைமைகளாகப் பின்வரும் விட யங்கள் எதிர்பார்க்கப்படும்.

- ✓ பூரண அங்கவீனராக வீட்டு வசதி அற்ற வராக இருத்தல்.
- ✓ மாதாந்த வருமானம் 6000 ரூபாவிற்குக் குறைவாக இருத்தல்.
- ✓ 18 வருடங்களைத் தாண்டிய 70 வருடத் திற்குக் குறைவான வயதினைக் கொண்டிருத்தல்.
- ✓ காணியின் உரிமை தனக்குரியதாய் இருத்தல். மற்றும் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டதாக இருத்தல்.

போன்ற விடயங்கள் ஆராயப்பட்டு சிபார்சு செய்யப்படும்.

### 04. கருவிகள் வழங்குதல்







வலுவற்றவர்களுக்கு அவர்களின் குறைபாட்டு நிலையைக் குறைத்துக்கொள்ளத் தேவையான கருவிகளை வழங்குதல் இதன் நோக்கமாகும். இதன் மூலம் செவியில் பொருத்தும் கேட்டல் கருவிகள், முச்சக்கர வண்டி (மூன்று சில்லுச் சைக்கிள்), சக்கர நாற்காலி, மூக்குக் கண்ணாடி, ஊன்றுகோல்கள், செயற்கைக் கைகள், கால்கள், வெள்ளைப் பிரம்பு, கெலிபஸ் பாதணிகள் போன்ற கருவி கள் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


குறித்த பயனாளி இதற்காக குறை பாட்டு அறிக்கை, வருமானத்தை உறுதிப் படுத்தும் கிராமசேவையாளரின் அறிக்கை, மருத்துவ அறிக்கை போன்றவற்றை சமர்ப்பித்து உரிய உதவியைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

### 05. சுயதொழில் கொடுப்பனவு

18 வயதிற்கு மேற்பட்ட விசேட தேவைக் குரிய நபரைக் கொண்ட குடும்பத்திற்கு சுய தொழில் ஒன்றை மேற்கொள்ள ரூபா 25,000 பெறுமதியான உதவித்தொகை வழங்கப்படும்.

சக்கர நாற்காலி பயன்படுத்துபவர், அல்லது கால்கள் மடக்க முடியாத நிலையுடைய நபர்களிற்கு அவர்களது இலகு நடமாட்டத் திற்கேற்ப வீட்டை சீர்செய்ய உதவித்தொகை வழங்கப்படும்.

### 06. சமுதாய மட்டத்திலான புனருத்தான நிகழ்ச்சித்திட்டம்



விசேட தேவைக் குட்பட்டோரின் தேவைகள் பற்றி அறிந்து கொள்ள ஒவ்வொரு கிராமங் களிற்கும் தொண்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களினூடாக குறித்த கிராமங்களில் வாழும் விசேட தேவையுடைய நபரின் தேவைகள் நிவர்த்தி செய்யப்படும். புனர்வாழ்வு, உபகரணத் தேவைப்பாடு போன்ற தேவைப்பாடுகள் அறியப்பட்டு தீர்வு காணப்படும்.

### 07. சுய உதவிக்குழு

மாவட்டமட்டத்தில் செயற்படும் இக் குழுவில் விசேட தேவைக்குரிய நபர்கள் பிரதேச மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டு அனுப்பி வைக் கப்படுவர். இதனூடாக விசேட தேவைக்குரிய நபர்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு தீர்வுகள் முன்வைக்கப்படும்.

## III. பொதுமக்களிற்காக மேற்கொள்ளப் படும் சேவைகள்.




குடும்பங்களால் எவ்வித உதவியுமற்றவர்கள், தனித்து வாழ்பவர்கள், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் (விதவைகள், கண வனால் கைவிடப்பட்டவர்கள், குடும்பத் தலைவர் சிறைச்சாலையில் வாழ்பவர்கள்) வயோதிபர், புத்தி சுவாதீனமற்றவர்கள், அநாதைகள், பாரிய நோய்களிற்கு உள்ளான நோயாளிகள் போன்ற இடையூறுகளை எதிர் கொள்ளும் நபர்களிற்கும் சமூகமட்டத்தில் பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

### 01. பொதுசன மாதாந்த உதவிப் பணம் (PAMA)



குறைந்த வருமானம் மற்றும் விசேட சலுகைகள் தேவைப்படும் குடும்பங்களிற்கான பிழைப்பூதியக் கொடுப்பனவை வழங்கல் இதன் நோக்கமாகும். இக்கொடுப்பனவு அங்கத்தவர் எண்ணிக்கைக் கேற்ப ரூபா 250- ரூபா 500 வரை வழங்கப் படும்.

### 02. சுயதொழில் கொடுப்பனவு.




மேலே குறிப் பிடப்பட்ட தகுதிப் பாடுடைய பொது சன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் குடும்பங்களது வருமான மட்டத்தை உயர்த்தும் பொருட்டு சுயதொழில் உதவி வழங்கப்படும். இதற்காக 15,000 ரூபா கொடுப்பனவாக வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 03. நோய்க் கொடுப்பனவுகள்




1. புற்றுநோயாளர்
2. காசநோயாளர்
3. தொற்று நோயாளர்
4. சிறுநீரக நோயாளர்

மேற்படி நோய்களிற்குள்ளான நபர் களிற்கு அவர்களது சிகிச்சைக்காலம் முழுவதும் மாதமொன்றிற்கு குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். இது ரூபா 350 –ரூபா 750 வரையிலானது.

### 04. உடனடித்தேவைகளைப் பூர்த்தி செய்தல்


வறுமைக்கோட்டிற்குட்பட்ட நபர்களின் மிக அத்தியவசியமான, அவசரமான தேவை களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இச்சேவை மேற்கொள்ளப்படுகின்றது. இவ் உதவித் திட்டத்தை DMC நிறுவனம் மேற்கொள் கின்றது.

### 05. உள ஆற்றுப்படுத்தல்



சமூக நெருக்கீடு களிற்கு உள்ளாகி உடல் ரீதி யாகவும், உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆற்றுப்படுத்தல் பயிற்சிகளை மேற்கொண்டு சமூகத்தோடு அவர்களையும் ஒன்றிணைத்தல் இதன் நோக்கியுள்ளது.

### 06. வரட்சிக்கால இலவச குடிநீர் விநியோகம்



குடிநீர் குறைபாடு ஏற்படும் வரட்சியான காலங் களில் மக்களிற்கான இலவச குடிநீர் விநியோகத்தை மேற் கொள்ளல் இதன் நோக்கமாகும்.

### 07. வரட்சிக்கால நிவாரண விநியோகம்.



வரட்சிக் காலங்களில் பாதிப்பிற்குள்ளான குடும்பங் களிற்கு இவ் உதவி வழங்கப் படுகின்றது.

### 08. தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு.



திடீரென ஏற்பட்ட புயல், சூறாவளி, வெள்ளம், காட்டுவிலங்குகள் போன்ற இயற்கை அனர்த்தங்களால் தனிப்பட்ட சொத்துக்களிற்கு ஏற்பட்ட அழிவு கள் மற்றும் அச்சுறுத்தல்களால் பொதுமக்களிற்கு ஏற்பட்ட இடர்பாடுகளிற்கு சலுகை வழங்குதல் என்ற அடிப்படையில் இவ் உதவிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது.

### 09. தன்னார்வத் தொண்டு நிறுவனங் களின் செயற்பாடுகளைக் கண்காணித்தல்

குறித்த பிரதேச செயலகப் பகுதிக்குட் பட்ட சமூகத்திற்கு சேவையாற்றும் தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகளை கண்காணிப் பதனூடாக சமூக தேவைப்பாட்டிற்கேற்ப வழிப் படுத்தல். அதன் மூலம் ஆற்றக்கூடிய சேவை களை விதந்துரைந்து சேவைகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

### 03. முதியோர் மற்றும் மாற்று ஆற்றலுடையோர் தினம்

ஒக்டோபர் முதலாம் திகதி முதியோர் மற்றும் மாற்றாற்றல் உடையோர் தினத்தை நடாத்தி அவர்களது வினைத்திறன் மற்றும், மகிழ்ச்சியை அதிகரிக்கச் செய்து பங்கு பற்றலுடன் கூடிய நிகழ்வுகளை நடாத்தி அவர் களைக் கௌரவித்தல்.

இத்தகைய பல்வேறுபட்ட செயல் நடவடிக்கைகளை வேலணை பிரதேச செயல கத்தில் சமூகசேவைப்பகுதி மேற்கொண்டு மக்களிற்கு சேவையாற்றலையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

### பிரதேச செயலக சமூக பராமரிப்பு நிலையத்தில் நன்னடத்தை அதிகாரியின் பங்களிப்பு

இலங்கையின் 13 வது அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு அமைவாக மாகாணங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு பகிரப்பட்ட அதிகாரங்களின் அடிப் படையில் மாகாண நன்னடத்தை சிறுவர் பரா மரிப்பு சேவைகள் திணைக்களம் உருவாக்கப் பட்டது. அதன் அடிப்படையில் கைதடி, யாழ் பாணத்தில் அமைந்துள்ள வட மாகாணத் திற்கான நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் இம் மாகாணத்துக் கான நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகளை வழங்கி வருகிறது.

நன்னடத்தை அதிகாரியின் நியமனம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு தொடர் பான உத்தியோகத்தரின் கடமை பொறுப்புக்கள், நீதி நிர்வாக பிரிவு ரீதியாக (Judicial Division) நீதி மன்றங்களில் நன்னடத்தை பிரிவு (Probation Unite) அமைத்தல் தொடர்பாக 1944 ஆம் ஆண்டு 42ஆம் இலக்க நன்னடத்தை தவ றாளிகள் கட்டளைச் சட்டத்தில் (Probation of offenders ordinance, No 42 of 1944) விபரிக்கப் பட்டுள்ளது. எனினும் கடந்த காலங்களில் ஏற் பட்ட அசாதாரண சூழல் காரணமாக நீதிமன்ற செயற்பாடுகள் தடைப்பட்டிருந்தமையால் நன் னடத்தை உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக ரீதியாக இணைக்கப்பட்டு தமது சிறுவர் தொடர் பான சேவைகளை ஆற்றிவந்தனர்.

யுத்தம் முடிவடைந்து இயல்பு வாழ்க்கை திரும்பியதை தொடர்ந்து 2012 ஆண்டு முதல் நன்னடத்தை தவறாளிகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாகவும், தேசிய கொள்கைக்கு அமையவும் நீதி நிர்வாக பிரிவுகளின் அடிப்படையில் நன்னடத்தை பிரிவு கள் அந்தந்த நீதிமன்றங்களில் உருவாக்கப்பட்டு ஒவ்வோரு பிரிவுக்கும் நிலையப் பொறுப்பு நன்னடத்தை அதிகாரியும் (Probation Officer in charge), நன்னடத்தை அதிகாரிகளும் (Probation Officers) நியமிக்கப்பட்டு தமது கடமைகளை ஆற்றிவருகின்றனர்.

2012 ஆண்டு யாழ் மாவட்டத்தில் சிறுவர் நீதிவான் நீதிமன்றம் (Juvenile Magistrate courts) ஒன்றும் ஆரம்பிக்கப்பட்ட தனை தொடர்ந்து 1939 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க சிறுவர் மற்றும் இளம் பராயத்தினருக் கான கட்டளைச் சட்டத்திற்கும் (Children and Young person ordinance, No 48 of 1939), தண்டனை சட்டக்கோவைக்கும் அமைவாக சிறு வர்களுக்கான சட்டரீதியான சேவையை ஆற்றி வருகின்றனர்.

நீதிவான்/மாவட்ட நீதிமன்றங்களில் (District / Magistrate courts) நன்னடத்தை தவ றாளிகள் கட்டளைச் சட்டம் மற்றும் ஏனைய சட்டங்களிற்கு அமைவாக சிறுவர்கள், வயது வந்தவர்கள் தொடர்பாக நீதிமன்ற பணிப்புக்கு அமைவாக சேவையாற்றி வருகின்றனர். எனினும் வட மாகாணத்தில் 2012 ஆண்டுக்கு முன்னர் நன்னடத்தை அதிகாரிகள் பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டு கடமை யாற்றும் போது சிறுவர்களுக்கு கிடைத்த சிறந்த பலாபலன்கள் அடிப்படையில் நீதிமன்ற கடமை களுக்கு மேலதிகமாக, நீதிமன்றச் செயற் பாடுகள் பாதிக்காத வகையில் வாராந்தம் புதன் கிழமை தோறும் பிரதேச செயலக சமூக பரா மரிப்பு நிலையத்தில் கடமையாற்றி வரு கின்றனர்.

இதன் மூலம் சிறுவர் உரிமை மேம் பாட்டு உத்தியோகத்தர், சமூக சேவை உத்தி யோகத்தர், உளநல ஆலோசகர், பெண்கள் அபி விருத்தி உத்தியோகத்தர், முன் பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அலுவலர், கிராம சேவை உத்தியோகத்தர்கள் எனப் பல தரப் பினருடன் இணைந்து பின்வரும் கடமைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன.

- ✓ சிறுவர் தொடர்பான பிரச்சினைகளுக்கு சமூக ரீதியான தீர்வை எட்ட முயற்சித்தல்.
- ✓ சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை பெற்று உரிய நடவடிக்கை எடுத்தல்.
- ✓ முற்தடுப்பு, விழிப்புணர்வு போன்றவற்றி னுடாக சிறுவர் பிரச்சினையை இனம் காணுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✓ விசேட பாதுகாப்புப் பராமரிப்பு (Special Care & Protection) தேவைப்படும் சிறுவர்களுக்கு உரிய பாதுகாப்பு பராமரிப்பை உறுதிப் படுத்தல்.
- ✓ விடய மாநாடுகளின் (Case Conference) ஊடாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உச்ச நலனைக் கருத்தில் கொண்டு தீர்மானங் களை மேற்கொள்ளல், மாற்றுத் திட்டங் களுக்கு பரிந்துரை செய்தல்.
- ✓ பாதிக்கப்பட்ட சிறுவர்களின் குடும்பங்களுக் கான வாழ்வாதார உதவிகள், பாடசாலை உபகரணம், தொழிற்பயிற்சி, பிற நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கு உரிய பரிந்துரைகள், சிபார்சுகளை மேற் கொள்ளல்.
- ✓ சிறுவர் இல்ல அனுமதி, சிறுவர் இல்ல முற் தடுப்பு, மீள்இணைப்பு செயற்பாடுகளூடாக சிறுவர்களின் உரிமைகளை பாதுகாத்தல். (Prevention from Institutionalization and Reunification from Institution)
- ✓ மத்தியஸ்தர் சபைக்கான (Mediation Board) பரிந்துரைகளை மேற்கொள்ளல்.
- ✓ பிரதேசத்தில் உள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையங்களையும் (Children Development Centres), பகல் பராமரிப்பு நிலையங் களையும் (Day Care Centres) பதிவு செய்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல்.
- ✓ பாதிக்கப்பட்ட பிள்ளைகள் தமது கருத்துக் களை தடையின்றி தெரிவிப்பதற்குரிய சூழல் சமூக பராமரிப்பு நிலையத்தில் காணப்படு கின்றமையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் இரகசியத்தன்மை பாதிக்காதவாறு சமூக பராமரிப்பு நிலைய உத்தியோகத்தர்களுடன் இணைந்து உரிய விசாரணைகளை மேற் கொள்வதன் மூலம் சிறுவர்களுக்கு உரிய சட்டரீதியான நிவாரணத்தையும், ஏனைய உதவிகளையும் உடன் பெற்றுக்கொடுக்க முடிகிறது.
- ✓ நீதிமன்றுகளுக்கு சமர்ப்பிக்க வேண்டிய சமூக அறிக்கைக்கு (Social Report) தேவை யான தவகல்களை சமூக பராமரிப்பு அலுவலர்களூடாக பெற்று சிறந்த அறிக்கையை தயாரிக்க சமூக பராமரிப்பு நிலையம் உதவுகின்றது.

மாகாண நன்னடத்தை சிறுவர் பரா மரிப்பு சேவைகள் திணைக்கள உத்தியோகத் தர்களான நன்னடத்தை அதிகாரிகளுக்கு இவற்றின் ஊடாக பிரதேச சிறுவர்களுக்கான பாதுகாப்பு, பராமரிப்பை கிடைக்க செய்வதற்கு சமூக பராமரிப்பு நிலையம் சிறந்த களமாக விளங்குகிறது.

## பெண்கள் அபிவிருத்திப் பிரிவும் அதன் செயற்பாடுகளும்

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சினால் ஒவ்வொரு பிரதேச செயலக ரீதி யாகவும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத் தர்கள் நியமனம் செய்யப்பட்டு கடமை ஆற்றி வருகின்றனர். பிரதேச ரீதியாக பெண்கள் சார்ந்த வேலைத்திட்டங்களையும் அபிவிருத்தி செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவை கருதி இந் நியமனம் வழங் கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் வேலணைப் பிரதேச செயலகத்திலும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்பட்டு பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவில் பெண்கள் அபிவிருத்திப் பகுதி நடை பெற்று வருகின்றது.

பெண்கள் அபிவிருத்தி நடவடிக்கைகள் சார்ந்த பிரதேச தரவுகளைச் சேகரித்தல், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், கணவனை இழந்த பெண்கள், வறுமைக்குட்பட்ட பெண்கள் சார்ந்த தரவுகளை சேகரித்தல், அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை இனம்காணல் ஊடாக கருத்திட்டங்களைத் தயாரித்து பிரதேச செயலர் ஊடாக அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்று அங்கீகரிக்கப்பட்ட நிகழ்சித்திட்டங் களை அமுல்படுத்தல் மற்றும் பின்னூட்டல் செய்தல், பெண்களுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் கடன் திட்டங்களை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளல் அத்துடன் பிரதேசத்தில் பெண்கள் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செயற்படுத்துகின்ற அரச, அரசசார் பற்ற நிறுவனங்களுடன் இணைப்பு நடவடிக்கை களை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கை களை பெண்கள் அபிவிருத்திப் பகுதியானது மேற்கொண்டு வருகின்றது.

வேலணை பிரதேச செயலகத்தின் கிராம சேவகர் பிரிவுகளில் மகளிர் விவகார சங்கங்களை உருவாக்கி சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் கீழ் பதிவினை மேற்கொள்வதுடன் அமைக்கப்பட்ட மகளிர் விவகார சங்கங்களின் மாதாந்தக் கூட்டங் களிலும் விசேட நிகழ்வுகளிலும் பங்கு பற்றலுடன் வழிகாட்டல்களையும் பெண்கள் அபிவிருத்திப் பிரிவு செய்து வருகின்றது. அவ்வாறு உருவாக்கப்பட்ட மகளிர் விவகாரச் சங்கங்களை பிரதேச செயலக மட்டத்தில் ஒன்றிணைத்து பிரதேச மகளிர் மகா சங்கம் (பல + மண்டலா) அமைப்பினை உருவாக்கி சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் கீழ் பதிவு செய்தல் அதனூடாக அனைத்து மகளிர் விவகார சங்கங்களுக்குமான சுழற்சிமுறைக் கடன் திட்டங்களை அமைச்சினூடாக பெற்றுக் கொடுத்தல், சமூக பொருளாதார வேலைத் திட்டங்களை ஏற்பாடு செய்தல் சுயவேலை வாய்ப்பு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகளை மகளிர் சங்கங்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியும்.

உதாரணமாக:- கடற்தொழில் புரியும் பெண் களை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் உபகரணங்கள் வழங்கப்பட்டது.





அடுத்து மகளிர் விவகார சங்க பெண் களுக்கான சந்தை வாய்ப்பு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல், பயிற்சியளித்தல், பொருளாதார ரீதியாக பயன்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பெண்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் அவற்றின் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற சேவைகளை பெண்கள் பிரிவு ஆற்றி வருகின்றது.

பெண்கள் அபிவிருத்திப் பகுதியானது பெண்கள் குடும்பம் சார்ந்த பிரச்சினைகளை இனங்காணுகின்ற போது பெண்களுக்கான ஆலோசனைகள் தொடர்பாக ஈடுபடுதல், வீட்டு வன்முறைகளுக்கு ஆளாகின்ற பெண்களை வன் முறையிலிருந்து தவிர்த்தல், வன்முறை களுக்கு உட்பட்டு வரும் பெண்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கான தீர்வினை ஏற்படுத்த உதவுதல் அவர்களுக்கான தொடர் கண்காணிப்பினை செய்தல், அவர்களுக்கு தேவையான போது பாதுகாப்புக்கட்டளை, பராமரிப்பு வழக்கு போடுதல் போன்ற சட்ட உதவிகளை பெண்கள் இலவசமாக பெற்றுக் கொள்வதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கை களை மேற்கொள்கின்றது. பால்நிலை சமத்துவம் தொடர்பாக மகளிர் விவகார சங்கங் களின் அங்கத்தவர்களுக்கு அறிவுறுத்தல், பெண்பிள்ளைகள் துஸ்பிரயோகத்திற்கு ஆளா வதைத் தடுப்பதற்கு செயற்படுதல் மற்றும் அவர் களின் பாதுகாப்பு பற்றி அறிவுறுத்தல், பெண் களுக்கான சட்ட உதவிகள், வேறு சேவைகளை பெற்றுக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

அத்துடன் யாழ் போதனா வைத்தியசாலையில் பால்நிலை வன்முறைக்கு எதிரான செயற்பாட்டு மையம் அறை இல 32 இல் பெண்கள் குடும்பம் சார்ந்த பிரச்சினைகள் கையாளப்படுகின்றன. வாரத்தில் ஒரு நாள் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைகளை மேற்கொள்வதுடன் பெண்கள் தேவைக்கு ஏற்ப ஏனைய பகுதிகளுடனும் இணைந்து செயற் படுகின்றார்.

பெண்கள் தொடர்பான முக்கியத்துவத் தினை சமூகத்திற்கு எடுத்துச் செல்வதன் பொருட்டு சர்வதேச மகளிர் தினம், சர்வதேச சிறுமிகள் தினம், பெண்களுக்கெதிரான வன் முறை ஒழிப்பு வாரம் ஆகிய தினங்களும் பிரதேச செயலக பெண்கள் பிரிவினால் நடாத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறாக வேலணை பிரதேச செயல கத்தின் பெண்கள் பிரிவு தமது சேவைகளை ஆற்றி வருகின்றது.

பெண்கள் வலுவூட்டல் நிகழ்வுகளின் சில பதிவுகள்.....





**சிறுவர் உரிமைகள் மேம்பாட்டுப் பிரிவும் அதன் செயற்பாடுகளும்**

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைத் திணைக்களம் சிறுவர்களின் சிறந்த நலனை முன்னெடுக்கும் பொருட்டு ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாகவும் மத்திய அரசின் கீழ் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாள ரையும் மாகாண அரசின் கீழ் நன்னடத்தை உத்தி யோகத்தரையும் நியமனம் செய்து வேலணை பிரதேச செயலகத்தில் சமூக பராமரிப்பு நிலையத்தின் சிறுவர் பிரிவில் கடமை ஆற்றி வருகின்றனர். அந்த வகையில் சிறுவர் பிரிவானது பின்வரும் சேவைகளை செய்து வருகின்றது.

***பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழு***

சிறுவர்களின் உரிமைகள் சாசனம் உயிர் வாழ்தல், பங்களிப்பு , மேம்பாடு, பாது காப்பு ஆகிய நான்கையும் முக்கிய தூண்களாக குறித்துரைக்கின்றது. இவ் வகையில் சிறுவர் களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், மேம் படுத்துவதற்குமுரிய நடவடிக்கைகள் பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுவினால் முன்னெடுக்கப்படவேண்டும். இவ்வகையில் பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுவின் தலைவராக பிரதேச செயலர் இருப்பார். இக் குழுவின் மூலமாக சிறுவர்களின் நலன் பேணும் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். சிறுவர் தொடர் பாக பிரதேச மட்டத்தில் உள்ள பிரச்சினைகளை இக் குழுவின் மூலமாக தீர்த்து வைப்பதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்படும். அவ்வாறு தீர்க்க முடியாத பிரச்சனைகளை மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவிற்கு பாரப்படுத்தப் படும்.

சிறுவர்களின் பங்களிப்பு உரிமையை வலுப்படுத்தும் பொருட்டு சிறுவர் கழகங்களை அமைத்துச் செயற்படுத்துவதன் மூலமாக சிறுவர் களின் திறன்களும் அவர்களின் பங்களிப்பு மற்றும் தலைமைத்துவ பண்புகள் வளர்க்கப்படு கின்றன. இவ்வாறு கிராம அலுவலர் பிரிவு ரீதி யாக உருவாக்கப்படும் சிறுவர் கழகங்களில் 6 – 18 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் பங்குபெறுவர். அவர்களே அக் கழகத்தின் தலைமைப் பொறுப்பு மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை வகிப்பார்கள். எனினும் கிராம அலுவலர், சமுர்த்தி அபி விருத்தி அலுவலர், சமயத்தலைவர், மற்றும் சமூகத் தலைவர் ஆகியோர் ஆலோசனைக் குழுவில் அங்கத்துவம் வகிப்பதன் மூலமாக இக் குழுவினை வழி நடாத்துவார்கள். இவ்வாறாக உருவாக்கப்பட்ட சிறுவர் கழகத்திற்கு அவர்கள் தாம் விரும்பிய பெயர் ஒன்றை சூட்டிக் கொள் வதுடன், வினைத்திறனுடன் இயங்கும் 04 மாதங்கள் பூர்த்தியடைந்த கழகங்கள் நன் னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்முடியும். இதற்கான சிபாரிசுகளை கிராம அலுவலர், சிறுவர் உரிமைகள் மேம் பாட்டு அலுவலர், மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோர் வழங்குவர். பதிவு செய்யப்பட்ட சிறுவர் கழகமொன்றின் செயற்பாடு திருப்தி கரமாக அமையாது விடின் பதிவை இரத்துச் செய்யும் உரிமை நன்னடத்தை சிறுவர் பரா மரிப்பு சேவைகள் திணைக்கள ஆணை யாளருக்கு உரியதென்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டும்.





### *சிறுவர் சபை*

கிராம மட்டத்தில் இயங்கும் சிறுவர் கழகங்களின் பிரதிநிதிகளான தலைவர், செய லாளர், பொருளாளர் ஆகியோரை இணைத்து பிரதேச மட்டத்தில் சிறுவர் சபை உருவாக்கப்படு கின்றது. இங்கே சிறுவர்கள் தலைமை பொறுப்பு மற்றும் நிர்வாக பொறுப்பை பெற்றுக் கொள் கின்றனர். இக் குழு பிரதேச செயலரின் கண் காணிப்பின் கீழ் இயங்கும். அதன் மூலமாக சிறுவர்களின் கருத்தைச் செவிசாய்த்தலும் அபி விருத்தியில் அவர்களைப் பங்காளிகளாக்கு தலும் சாத்தியமாகும்.



**வேலணை பிரதேச சிறுவர் சபை**

### *விழிப்புணர்வு நிகழ்வுகள்*

சிறுவர்களைத் துஷ்பிரயோகங்களி லிருந்து பாதுகாப்பதற்காக பெற்றோரினையும் சமூகத்தினையும் அணிதிரட்டுவதற்காக விழிப் புணர்வு நிகழ்ச்சிகளை திட்டமிடலும் நடை முறைப்படுத்துதலும் மற்றுமொரு முக்கிய பணி யாக அமைகின்றது. நன்னடத்தை சிறுவர் பரா மரிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய அரச திணைகளங்கள், அரச சார் பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் அனுசரணை யுடன் பெற்றோர் சிறுவர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புகளிற்கான விழிப்புணர்வு நிகழ்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. இதன் மூலமாக சிறுவர் பாதுகாப்பு வலைப்பின்னல் ஸ்திரப்படுத் தப்படுவதுடன் சமூகத்தின் பொறுப்பும் உணர்த் தப்படுகின்றது.

### *கட்டாயக் கல்வி*

14 வயதிற்குட்பட்ட அனைத்து சிறுவர் களும் கட்டாயக் கல்வியைப் பெறவேண்டும் என்ற வகையில் சிறுவர்களின் பாடசாலைக் கல் வியை ஊக்குவித்தல் முக்கியமான கடமையாக வுள்ளது. குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பாடசாலை செல்வதை கை விட்டுள்ள பிள்ளைகளின் கல்வியைத் தொடரும் பொருட்டு அவர் ஷகளை மீளவும் பாடசாலைகளில் இணைத்து அவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்ச்சி யாக கண் காணித்தல் மற்றும் தேவையான உதவிகளை பெற்றுக் கொடுத்தல் அரச நிறு வனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக பெற்றுக் கொடுத்தல் முக்கியமான பணியாகவுள்ளது.

உதாரணம் 1. செவண சரண

2. கப்பக்கரு தெக்குரு

### *போசாக்கு மற்றும் மருத்துவ உதவி*

சிறுவர்களுக்குத் தேவையான சுகா தாரம் மற்றும் போசாக்கு தேவைகளுக்கான உதவிகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு சிபார்சுகளை நன்னடத்தைத் திணைக்களத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு சமர்பிப்பதன் மூலமாக கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுத்தல். எடுத்துக்காட்டாக இரட்டைப் பிள்ளைகளுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் முறையினை நோக்கின் பொருளாதார நெருக்கடியினை எதிர் கொண்டுள்ள குடும்பமொன்றிற்கு (அரச திணைக்களங்கள் , கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியவற்றின் உத்தியோகத்தரல்லாத) இரட்டைக் குழந்தைகள் ஒரே பிரசவத்தில் கிடைத்தால் அக்குழந்தைகளின் நலன் கருதி இக் கொடுப்பனவு நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இதே போன்று நோயுற்ற, சத்திர சிகிச்சைக்குட்படுத்த வேண்டிய நிலையிலுள்ள பிள்ளைகள் மற்றும் விபத்துக்குள்ளான பிள்ளைகளுக்குரிய மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கொடுப்பனவைப் பெறுவதற்கான சிபார்சுகளைச் செய்வதன் மூலமாக திணைக்களத்தின் நிதியைப் பெற்று உரிய பயனாளிக்கு விநியோகிப்பதன் மூலம் பிள்ளைகளுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படுகின்றன. இவ் உதவிகளை பொருத்தமான அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகவும் பெற்றுக் கொடுக்கமுடியும்.

### *சிறுவர் தினம்*

ஒக்டோபர் 01ஆம் திகதி சர்வதேச சிறுவர் தினத்தை கொண்டாடுவதன் மூலமாக, சிறுவர்கள் சமூக மட்டத்தில் முக்கியமானவர்கள் என்ற கருத்தினை சமூக மட்டத்திற்கு எடுத்து செல்லுதல் முக்கியமான பணியாகும். சிறுவர்களின் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் குடும்பம், சமூகம் மற்றும் சமூக மட்ட அமைப்புகள், அரச நிறுவனங்கள் ஆகியவற்றினால் வழங்கப்படும் முறைப்பாடுகளுக்கு அமைவாக, தலையீடுகளை குடும்ப மட்டத்திலும் சமூக மட்டத்திலும் மேற்கொள்ளலாம். இதற்காக சம்பவ மாநாடுகள், சாத்தியமான தீர்வுகளை பெறுவதற்கான வழிகாட்டல்களை மேற்கொள்ளுவது சாத்தியமாகும். இது போன்ற செயற்பாடுகளை சிறுவர் மேம்பாட்டுப் பிரிவு ஆற்றிவருகின்றது.

### உளவளத் துணைப் பிரிவும், அதன் செயற்பாடுகளும்

நவீன சமூகத்தில் காணப்படுகின்ற மாற்றங்கள் மற்றும் சிக்கலான தன்மைகளினால் மனிதன் அன்றாட வாழ்வில் பல்வேறு பட்ட பிரச்சினைகளுக்கு உட்பட்டு கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்க்கைப் போராட்டத்தைக் கொண்டு செல்வதைக் காணலாம். முக்கியமாக தீர்வு காண்பதற்கு கஷ்டமான அல்லது இயலாத சில பிரச்சினைகள் காரணமாக தனி மனிதன் அதிக உடல், உள பாதிப்புக்கு உள்ளாகின்றான். நவீன கால நகரமயமாதல் மற்றும் தொழில்நுட்பமயமாதல் காணப்படுகின்ற சமூக அமைப்பில் நாம் அனைவரும் ஓய்வின்றி வாழ்கின்றோம். இதனால் எம்மால் ஏனையவர்களின் கவலைகளைப் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளோம். ஆகவே நாம் வாழும் சமூகத்திலேயே நாம் ஒவ்வொருவரும் தனிமைப்படுத்தப் பட்டுள்ளோம். இத்தகைய சந்தர்ப்பங்களில் தான், தனியாக தீர்த்துக்கொள்ள முடியாத பிரச்சினைகளை தாமே வெற்றிகரமாக தீர்த்துக் கொள்வதற்கு உளவளத்துணை உந்து சக்தியாக அமைகின்றது.

### *உளவளத்துணை என்பது.....*

- ✓ அனைவருக்குள்ளும் திறமைகள் ஒளிந்து கிடக்கின்றன. அத்தகைய திறமைகளை விருத்தி செய்து கொள்வதற்கும், ஒருவர் தனது பிரச்சினையை தானாகவே தீர்த்துக் கொள்வதற்குச் செய்கின்ற ஒரு உதவியாகும்.
- ✓ பிரச்சினை அல்லது சிக்கல் ஒன்றில் அகப்பட்டுள்ள ஒருவருக்கு அல்லது குழுவிற்கு பண்பு ரீதியில் மேலானதும் திருப்தியானது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான தீர்மானங்களை அவர்களாகவே எடுக்க ஒத்தாசை புரியும் ஒரு வகையான மேம்பாடுள்ள செயற்பாடாகும். இது உடல், உளச் சமநிலையை சீராக வைத்திருக்க உதவி புரிகின்றது.

உளவளத்துணை என்பது அறிவுரை பகர்வதோ அல்லது எச்சரிக்கை செய்வதோ அல்ல. சேவை நாடியின் பிரச்சினைக்கு தீர்வைத் திணிப்பதோ அல்லது பலவந்தப்படுத்துவதோ அல்ல. சேவை நாடி தனது பிரச்சினையை தானாகவே தீர்த்துக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கும் ஒரு இதமான தலையீடே உளவளத் துணை ஆகும். இங்கு பிரச்சினையின் இரகசியத் தன்மையானது உளவளத்துணையாளரினால் கட்டாயமாகப் பேணப்படுகின்றது. இப் பண்பே சேவைநாடிக்கும் உளவளத்துணையாளருக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்ப அடிப்படையாக விளங்குகின்றது.

சாதாரண வாழ்வில் மனிதர்கள் முகங் கொள்ளும் பலதரப்பட்ட உளவியல் நடத்தைகள் (Psychological Bahavior), மற்றும் ஆளிடை உறவுகள் (Interpersonal Relationship), போன்ற பிரச்சினைகளை உளவியல் விஞ்ஞான ரீதியில் அணுகி, அவற்றைத் தீர்ப்பதற்கு வழிகாட்டுதல் (Guidance), தீர்மானம் எடுக்க உதவுதல் (Helping to Decision Making), வசதி வாய்ப்புக் களை சிகிச்சையளித்தல் (Facilitating), கற்றுக் கொடுத்தல் (Educating), சுகமளித்தல் (Therapy / Treatments), மற்றும் தேவையான போது வேறு நிபுணத்துவ சேவைகளுக்கு வழிகாட்டுதல் (Reffering) போன்றனவே உளவளத்துணையின் பிரதான செயற்பாடுகளாகும்.

உளவளத்துணையில் எப்போதும் உளவளத் துணையாளருக்கும், சேவை நாடிக்கும் இடையே நட்புடன் கூடிய நல்லுறவு காணப்படும். எனினும் சமூக பராமரிப்பு நிலையத்தில் சேவை யாற்றும் உளவளத்துணையாளர்கள் தமது சேவை நாடியினரிடமிருந்து தனிப்பட்ட இலா பங்கள் எதனையும் எதிர்பார்ப்பதில்லை. உள வளத்துணையாளர் மற்றும் சேவை நாடியின் உறவானது தொழில் வாண்மையான ரீதியில் மாத்திரமே காணப்படும். எனினும் உளவளத் துணையின் வெற்றியானது உளவளத்துணை யாளர், சேவைநாடியின் உறவிலேயே தங்கி யுள்ளது.

## *உளவளத்துணை யாருக்காக?*

"அனைவருக்கும் உளவளத்துணை"

எமது குடும்ப உறுப்பினர்கள் அல்லது நாம் பழகும் ஒருவருக்கு ஏதோ ஒரு பிரச்சினை ஏற் பட்டு மனமுடைந்துபோய் இருப்பின் அதனால் நாளாந்த செயற்பாடுகளை செய்துகொள்ள முடியாமல் கஷ்டபடுவாராயின் அவருக்கு உள வளத்துணை அவசியமாகின்றது.

- குடும்ப பிரச்சினை
- பாலியல் பிரச்சினை
- சுகாதார பிரச்சினை
- கல்வியில் பிரச்சினை
- காதல் தோல்வி
- தொழில் பிரச்சினை
- கடுமையான பொருளாதார பிரச்சினை
- ஏதோவொரு பொருத்தப்பாடற்ற நடத்தை
- ஏதோவொரு தீய பழக்கத்திற்கு அடிமை

மேற்சொன்ன பிரச்சினைகளில் ஏதோ வொன்று இன்று இல்லாவிடினும் நாளையாவது அனுபவிக்க வேண்டிவரலாம் என்ற உணர்வு உங்களுக்குள் ஏற்படின் இன்றே உளவளத் துணையாளரின் உதவியை பெற்றுக்கொள்வ தால் அது எங்களுடைய நாளைய வாழ்க் கையை மிகச் சிறந்த வாழ்க்கையாக திட்ட மிட்டுக்கொள்ள உதவியாக அமையும். அதுமட்டு மின்றி எதிர்பார்க்கப்படும் பிரச்சினை அல்லது சிக்கல்களை தவிர்த்துக்கொள்ள முடியும்.

எல்லோருக்கும் தனது பிரச்சினையை சரி யாகப் புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் இருப் பின் அப்பிரச்சினையை சுயமாக தீர்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளக்கூடிய இயலுமையும் அவனுள் காணப்படும். எனவே உளவளத் துணையின் போது உளவளத்துணையாளர் செய்வது உள வியல் அறிவையும், உளவியல் முறைகளையும் பயன்படுத்தி அவரது பிரச்சினையை யதார்த்த பூர்வமாக விளங்கிக்கொள்ளவும், அதனைத் தீர்த்துக் கொள்ளவும் உதவி வழங்கி, சேவை நாடிக்குத் தேவையான பின்னணியையும், சூழலையும் ஒழுங்குபடுத்திக் கொடுப்பதே ஆகும்.




### உளவளத்துணையின் நோக்கம்

உளவளத்துணை செயன்முறையின்போது உளவளத்துணையாளர் தனது சேவைநாடிக்கு பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள உதவியும், உபகாரமும் அளிப்பதோடு அதற்காக அவரோடு தொழில் வாண்மையான ஒரு தலையீட்டை மேற்கொள்கின்றார். இத் தலையீடு பிரதானமாக மூன்று வகைப்படும்.

| | |
|---|---|
| சிகிச்சையளித்தல் | **Therapy / Treatment** |
| முன்தடுப்பு செய்தல் | **Prevention** |
| விருத்திசெய்தல் | **Development** |

நீண்ட காலமாக இருக்கும் தனது பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியாததால் எல்லா மனிதர்களும் உளரீதியான அழுத்தங்களுக்கு உட்பட வாய்ப்புண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நபரின் நல்லாரோக்கியத்தைக் கருத்திற்கொண்டு மருந்து அல்லாத சிகிச்சை முறையை (Non Drugs Therapy) மேற்கொள்வதன் மூலம் குறித்த நபரை சமநிலைக்கு கொண்டுவருவது இவ் வகையான உளவளத்துணையின் ஒரு நோக்க மாகும்.


மனிதனின் நாளாந்த வாழ்க்கை நிகழ்வுகள் காரணமாக உள அழுத்தங்களும், பிரச்சினைகளும் ஏற்பட வாய்ப்புண்டு. அவற்றிலிருந்து மனிதனைப் பாதுகாத்துக்கொள்வதே இவ்வகை உளவளத்துணையின் நோக்கமாகும்.

மூன்றாவது முறையின் நோக்கம் நாளாந்த வாழ்வில் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள், சிக்கல்களுக்கு பயமின்றி பின்வாங்காது துணிவாக எதிர்கொண்டு அதனை வெற்றி கொள்வதற்கு மனிதன் தனது உள்ளத்தை உறுதிப்படுத்துவதற்காக வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் ஆளுமையையும் மேம்படுத்துவதாகும்.




### உளவளத்துணையின் பயன்பாடுகள்

- உளவளத்துணையினூடாக நாளாந்த வாழ்க்கையில் தோன்றும் எதிர்பாரா நிகழ்வுகளை துணிவோடு எதிர்கொண்டு வாழ்க்கையை மேலும் வெற்றிகரமானதாக மாற்றிக்கொள்ளத் தேவையான சக்தியையும், தைரியத்தையும் பெற்று வாழ்க்கைப் பாதையை சரியான முறையில் அமைத்துக் கொள்ள முடியும்.



- உடல், உள நோய்கள் போன்றவற்றிற்கு நீண்ட காலமாகக் காணப்படும் உள அழுத்தங்கள், உளச் சமநிலையின்மைகள் காரணமாக அமைகின்றன. உளவளத்துணையின் மூலம் அவ்வாறான உள அழுத்தங்களையும், உளச் சமநிலையின்மைகளையும் சமநிலைப்படுத்தி உள அமைதியையும், உள ஆறுதலையும் பெற்றுக்கொள்ள முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

- உளவளத்துணையினூடாக முன்வரல், எதிர் கொள்ளும் ஆற்றல், தனிப்பட்ட செயற்பாடுகள், திறன்கள், ஆளுமை போன்ற பண்புகளை விருத்தி செய்து எமது நாளாந்த வாழ்க்கையை அழகுபடுத்திக்கொள்ள முடியும்.




- குடும்பத்தில் ஏற்படுகின்ற எவ்வகையான சிக்கலான பிரச்சினைகளுக்கும் இலகுவாக தீர்வுகண்டு எமது குடும்ப வாழ்க்கையை மகிழ்ச்சிகரமானதாக மாற்றிக்கொள்ள குடும்ப உளவளத்துணை உதவுகின்றது.







- உளவளத்துணையினூடாக மன விரக்தியை ஆற்றுப்படுத்தி தற்கொலை முயற்சிகளைத் தடுக்கமுடியும்.



- கல்வி உளவளத்துணை ஊடாக மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் கற்றலுக்குரிய சிறந்த பின்னணியையும், சூழலையும் ஒழுங்குபடுத்திக் கொடுத்து அவர்களை செயற்றிறன் மிக்க மாணவர்களாக உருவாக்க முடியும்.





- தொழில் உளவளத்துணை ஊடாக சேவை நாடிக்குத் தொழில் வழிகாட்டுதல்களை வழங்கி அத் தொழில்த்துறை சார்ந்த தேர்ச்சிபெற்ற வல்லுநர்களிடம் தொடர்புகளை ஏற்படுத்திக்கொடுப்பதன் மூலம் எமது பிரதேசத்தில் வினைத்திறன் மிக்க ஒரு தொழில் சமுதாயத்தினரை உருவாக்க முடியும்.



- பிரச்சினைகள் தீர்க்கப்படாமைக்கான முக்கிய காரணம் அவை பகிர்ந்து கொள்ளப்படாமையே ஆகும். எனவே உங்களால் தீர்வு காண முடியாத பிரச்சினைகளை உளவளத்துணையாளர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் பிரச்சினையின் இரகசியத் தன்மையானது கட்டாயமாகப் பேணப்படும். இவ்வாறு பகிர்ந்துகொள்வதன் மூலம் நீங்களே உங்கள் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கான உந்து சக்தியையும், ஆலோசனைகளையும் உங்கள் பிரதேச சமூக பராமரிப்பு நிலையத்திலுள்ள உளவளத்துணையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வாழ்க்கையும் மகிழ்ச்சிகரமானதாக அமையும்.

### அனர்த்த முகாமைத்துவ சேவையும் செயற்பாடுகளும்

அனர்த்தம் என்பது ஆபத்து நிலையும் அதனால் வரும் நலிவுத் தன்மையே அனர்த்தம் என வரையறுக்கலாம். ஆபத்து+நலிவுத்தன்மை = அனர்த்தம்.

### அனர்த்த நிவாரணம்

அனர்த்த நிவாரண சேவையைப் பொறுத்த வரையில் அனர்த்தத்தின் பின் ஏற்படும் பாதிப்புக்களுக்கான நிவாரணம் ஆகும். இதில் பின்வரும் நிவாரண சேவைகள் உள்ளடங்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்கள் அல்லது பொது மண்டபங்களில் தங்கி இருந்தால் அவர்களுக்கு மூன்று நாட்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் ஒரு வாரத்திற்கு உலர் உணவும் வழங்கப்பட வேண்டும். மேலதிகமாக தேவை ஏற்படும் போது மாவட்டச் செயலரின் அனுமதியோடு வழங்கப்படும்.

அதே போல் வரட்சிக் காலத்தில் குடிநீர் விநியோகம் மற்றும் வரட்சி நிவாரணங்கள் பாதிப்பு நிலையினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட வேண்டும்.

அனர்த்தத்தின் போது உயிர் இழப்புகள் இல்லது காயங்கள் ஏற்படின் அதற்கு ஏற்ற கொடுப்பனவுகள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கைக்கேற்ப வழங்கப்பட வேண்டும்.

அனர்த்தத்தின் போது வீடுகள் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ சேதமடைந்தால் அதன் பாதிப்பு நிலையினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும். பகுதியாக சேதமடைந்தால் உச்சத் தொகையாக ரூபா 50000உம் முழுமையாக சேதமடைந்தால் உச்சத் தொகையாக ரூபா 100000உம் வழங்கப்படும்.

அனர்த்தத்தின் போது வாழ்வாதாரத்திற்கான உபகரணங்கள் பாதிப்படைந்திருந்தால் அதற்கான உபகரணங்கள் மற்றும் சுயதொழில் உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

அனர்த்தத்தின் போது பயிரழிவுகள் ஏற்பட்டால் அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். எனினும் பயிர்கள் என்னும் போது பணப்பயிர்கள் தவிர்க்கப்படும் அதே வேளை ஒருவரது வாழ்வாதாரத்தைப் பாதித்தால் அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும்.

### *அனர்த்தத் தணிப்பு*

அனர்த்தத் தணிப்பு என்னும் போது அனர்த்தம் ஏற்படும் முன்னர் செய்யப்படும் வேலைத் திட்டமாகும். அதாவது இது ஆபத்து நிலையினை அடிப்படையாகக் கொண்டு அதனைத் தடுத்தல் அல்லது குறைப்பதற்கான நடவடிக்கையாக அமையும். இதனை விட அனர்த்த விழிப்புணர்வு மற்றும் அனர்த்தத்திற்கு முன்னதான தயார்படுத்தலை குறிப்பிடலாம்.

அனர்த்தத் தணிப்பு செயற்றிட்டத்தில் அனர்த்தத்தினைக் குறைப்பதற்கான திட்டங்களாக இருக்கும். இது பாதிப்பு நிலையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

அனர்த்தங்கள் ஏற்படும் இடத்து அதற்கான அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பாதிக்கப்பட்ட மக்களுக்கான முன்னெச்சரிக்கை மற்றும் விழிப்புணர்வுகளை மேற்கொள்ளல் போன்ற தேவைப்பாட்டிற்காக ஒவ்வொரு கிராமங்களிலும் அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். இக் குழுக்கள் அனர்த்தத்தின் போது அனைவருடனும் இணைந்து செயற்பட வேண்டும்.

**உசாத்துணை நூல்கள் :-**

உளவியல், உளவளத்துணை
*(சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு)*

உளவியல் சார் உளவளத்துணை அணுகுமுறை
*(திரு. றிட்லி ஜயசிங்க)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமுர்த்தி திட்டமும் வறுமை ஒழிப்பும்


செல்வி.நாகரெத்தினம் நகுலராணி
சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர்,
பிரதேச செயலகம், வேலணை.


இலங்கையில் வறுமையினைக் குறைப்பதற்கு பல வேலைத்திட்டங்கள் 1948ஆம் ஆண்டின் சுதந்திரத்திற்குப் பின்னால் மேற்கொள்ளப்பட்டன. அந்த வேலைத்திட்டங்கள் நலன்புரி நோக்கங்களைக் கொண்ட வேலைத் திட்டங்கள் என ஆய்வுகளின் போது தெளிவாகின்றது. அந்த நிலையினை விட சற்று மேலோங்கிய வேலைத்திட்டமாக ஜனசவிய வேலைத்திட்டத்தினை அறிமுகப்படுத்திக் கொள்ள முடியும். அதன் மூலம் குறைந்த வருமானம் பெறுவோரின் அன்றாட குறைபாடுகளை ஓரளவாவது பூர்த்தி செய்து கொள்வதற்குத் தேவையான பொருட்கள் ஒரு சிலவற்றினை யாவது கொள்வனவு செய்வதற்கு நிவாரணத் தொகையொன்றும் வழங்கப்படுவதுடன் வினைத்திறன் மிக்க பொருளாதார செயற்பாடொன்றில் ஈடுபடுவதற்குத் தேவையான கடன் தொகையொன்றினை பெற்றுக் கொள்ள வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. அதற்கு அரசாங்கத்தினாலும் குறைந்த வருமானம் பெறுவோரினால் சேகரித்துக் கொள்ளப்பட்ட நிதியங்களை கடனாகப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1994ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது பொதுஜன ஐக்கிய முன்னணியால் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதியில், உள்ளடக்கப்பட்ட ஒரு முக்கிய உடன்பாடானது இந் நாட்டின் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டமாக சமுர்த்தி இயக்கத்தை அமுல்படுத்துவதாகும். வறுமையை ஒழிக்கும் பொருட்டு வறுமை நிவாரணத்தை விநியோகிப்பதைவிட பாரிய பணிகளை மேற் கொள்ள வேண்டும் என்பதை நன்கு விளங்கி அத்தகைய நிகழ்ச்சித் திட்டத்திற்காக அதிகாரம் கொண்ட நிறுவனமும், ஒழுங்கமைப்பும் அவசியம் என்பதையும் முறையாகப் புரிந்து கொண்ட அரசாங்கம், சமுர்த்தி ஆணையாளர் நாயகத்திணைக்களத்தையும் சமுர்த்தி அதிகார சபையையும் நிறுவி நிவாரணத்தை விநியோகிப்பதற்கு மேலதிகமாக பாரிய அபிவிருத்தி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கையையும் எடுத்தது.

முதற்தடவையாக வறுமை ஒழிப்பினதும், கிராமிய அபிவிருத்தியினதும் தலைமைத்துவத்தை இளைஞர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதன் மூலம், இந்நாட்டின் இளைஞரை எமது அபிவிருத்தி பணியில் வழிகாட்டிகளாக்குவதற்கு சமுர்த்தி இயக்கத்தினூடாக மேற்கொண்ட நடைமுறை உலகின் சகல ஒழுங்கமைப்பினதும் பாராட்டுதலுக்கும் அவதானத்திற்கும் உட்படுத்தப்பட்டது.

சமுர்த்தி திட்டமானது வறுமை நிவாரணத்தினை மாத்திரம் விநியோகிக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றல்ல. அது பாரிய ஒரு பொருளாதார,சமூக அபிவிருத்தித் திட்டமாகும். சமூக வலுப்படுத்தலின் ஊடாக வறிய மக்களை ஒழுங்கமைத்துச் செய்தல், அவர்களை சமூக அபிவிருத்தி பணியில் ஈடுபடுத்தல். பரந்த சமூக அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப் படுத்தல், சமூக துஷ்பிரயோகம், போதை பொருட்கள் தீயபழக்கங்கள் ஆகியவற்றிலிருந்து மக்களை மீட்டெடுப்பதுடன் சமுர்த்தி திட்டத்தினூடாக கிராமிய பிரதேசங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தள வசதிகளை மேம்படுத்தல் போன்ற மிகப்பாரியதும்,பரந்ததும் வெற்றிகரமானதும், பலமுள்ளதுமான திட்டமென அறியப்படுகிறது.

வறிய குடும்பங்களின் அங்கத்தவர்கள் எதிர்பாராத விதமாக முகம் கொடுக்க வேண்டிய மரணம், நோய் போன்ற சந்தர்ப்பங்களிலும் திருமணம், மகப்பேறு போன்ற பல்வேறு சந்தர்ப் பங்களிலும் அதன் பொருட்டு அவசியமான பணம் அவர்களிடம் இல்லாமையால் அக்குடும்ப அங்கத்தினர் அதிகளவு வட்டி விகிதத்திற்கு கடன் பெறுதல் அவர்களது வறுமைத்தன்மை மேலும் அதிகரிப்பதற்கு காரணமாய் உள்ளது என அறியப்பட்ட பின்னரே சமுதாயத்திலுள்ள வறிய குடும்பங்களின் பொருட்டு பாதுகாப்பிற்கான அவசியத்தை நன்கு உணரக்கூடியதாக இருந்தது.

1996ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி வேலைத்திட்டமானது இலங்கை யிலுள்ள வறுமை நிலையினையும் வறுமை யினைக் குறைப்பதற்கும் ஒவ்வொரு காலப் பகுதியிலும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடு களை சிறப்பாக ஆராய்ந்த பின்னர் தயாரிக்கப் பட்ட ஒரு வேலைத்திட்டமாகும். இதற்கு வெளி நாடுகளில் செயற்படுத்தப்படுகின்ற வெற்றிகர மான வேலைத்திட்டங்களில் இலங்கைக்கு உரித் தாக்கிக் கொள்ளக்கூடிய கருத்திட்டங்களின் பல்வேறு பிரிவுகளையும் ஒன்றிணைத்து சமுர்த்தி வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டது.

"வறியோர் குறைந்த சுபீட்சமிகு இலங்கை" என்ற குறிக்கோளை கொண்ட சமுர்த்தி திட்ட மானது யாழ் மாவட்டத்தில் 1997ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1998 ஆம் ஆண்டு வேலணை பிரதேச செயலகப்பிரிவிலே சமுர்த்தி ஊக்கு விப்பாளர்களும், 2000ஆம் ஆண்டிலே சமுர்த்தி முகாமையாளர்களும் நியமிக்கப்பட்டு வேலைத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டது. 2003ஆம் ஆண்டு வேலணை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 30 கிராம சேவையாளர் பிரிவுகளில் 15 கிராம சேவையாளர் பிரிவுகளை கொண்டதாக வேலணை, புங்குடுதீவு சமுர்த்தி வங்கிச் சங் கங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

அத்தோடு அரச சார்பற்ற நிறுவனங் கள் உட்பட மக்கள் அமைப்புக்களால் உருவாக் கப்பட்டு நடாத்திச் செல்லப்படுகின்ற கடன் தொகைகளை பரிமாறிக் கொண்டும் சமூக வலு வூட்டல், மற்றும் இடையீட்டாளர் பணி போன்ற வேலைத்திட்டங்களைக் கற்றுக் கொள்வதற்கும் மறந்து விடவில்லை. அவ்வாறான சர்வதேச மற்றும் உள்நாட்டு அனுபவங்களையும் முன் மாதிரிகளையும் ஒன்று சேர்த்து மூன்று வழிகளி னூடாக சமுர்த்தி வேலைத்திட்டம் தயாரிக்கப் பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அவை யாவன

01. நலன்புரித்திட்டம்
02. கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டம்
03 வங்கித்திட்டம்.

***01. நலன்புரித்திட்டம்***

**I. சமுர்த்தி நிவாரணம்**

வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பிரி வினருக்கு வழங்கப்படுகின்ற நிவாரணமானது யாழ்ப்பாண மாவட்டத்தில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதத்திலிருந்து நடை முறைக்கு கொண்டு வரப்பட்டது. பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் பொருளாகவும் சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் பணமுத்திரையாகவும், கட்டாய சேமிப்பு, சமூகப்பாதுகாப்பு வீட்டுலொத்தர் போன்ற அமைப்புக்களைக்கொண்ட நிவாரண மானது தற்போது பணமுத்திரையாகவும், கட்டாய சேமிப்பு வீட்டு லொத்தர் சமூகப் பாது காப்பு என்ற அமைப்புக்களை கொண்டு விளங்குகின்றது. வேலணை பிரதேச செயலர் பிரிவிலே 30 சதவீதமானனோர் சமுர்த்தி நிவாரணத்தைதற்போது பெற்று வருகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சமுர்த்தி முத்திரையில் உள்ளடக்கப் பட்டுள்ள விடயங்கள்

| சமுர்த்தி முத்திரையின் பெறுமதி | பணமுத்திரை | கட்டாய சேமிப்பு | வீட்டு லொத்தர் | சமூகபாதுகாப்பு |
|---|---|---|---|---|
| 750/= | 595/= | 100/= | 10/= | 45/= |
| 1200/= | 945/= | 200/= | 10/= | 45/= |
| 1500/= | 1145/= | 300/= | 10/= | 45/= |

### சமூகப்பாதுகாப்பு

சமுர்த்தி முத்திரையில் 45/= பெறுமதி யான முத்திரைக்கு பிறப்பு, இறப்பு, நோய், திருமணம் போன்றவற்றிற்கு கொடுப்பனவு வழங்குவதனூடாக வறிய குடும்பங்களின் இயலாமையை குறைக்கின்றது. சமூக பாதுகாப்புநிதி மூலம் குழந்தை பிறப் பிற்கு 5000.00 அடிப்படையில் முதல் மூன்று குழந்தைகளிற்கும், இறப்பிற்கு 10,000.00 ரூபாவும், திருமணத்திற்கு 5000.00 ரூபாவும், வைத்தியத்திற்கு ஒரு நாளைக்கு 200.00 வீதம் 30 நாட்களிற்கு வழங்கப்படுகின்றது. இதற்கு குழந்தை பிறப்பிற்கு பிறப்புச் சான்றிதழும், இறப்பிற்கு இறப்புச் சான்றிதழும், வைத்தியத் திற்கு மருத்துவச் சான்றிதழும், திருமணத்திற்கு விவாகச் சான்றிதழும் இணைப்பதனூடாக இந் நிதியினைப் பெற்றுக் கொள்ளலாம்.

### வீட்டு லொத்தர்

இத் திட்டத்தினூடாக வீடு இல்லாதவர் களிற்கு வீட்டுத் திட்டத்தினை பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தினை வழங்குதல். அத்துடன் அதிஸ்டசாலிகளாக தெரிவு செய்யப் படும் குடும்பத்தினருக்கு ரூபா 150000.00 நிதி விடுவிக்கப்படும்.

### II சிப்தொற புலமைப் பரிசில் திட்டம்

சமுர்த்தி முத்திரை பெறுகின்ற வறிய குடும்பங்களைச் சேர்ந்த க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த உயர் கல்வியைத் தொடரும் மாணவர்களிற்கு மாதாந்தம் 1000.00 ரூபா இரண்டு வருடங்களிற்கு வழங் கப்படும். நாடு பூராகவும் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 20 பேர் தெரிவு செய்யப்படுவர்.

### III. மண்ணெண்ணெய் முத்திரை

மின்சாரமற்ற வறிய கல்வி கற்கும் மாண வர்களைக் கொண்ட குடும்பங்களிற்கு வழங்கப் படும் முத்திரையாகும். இது மாதாந்தம் 200/= பெறுமதியைக் கொண்டதாகும்.

### IV கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய் மாருக்கான போசணை முத்திரை

சமுர்த்தி திட்டத்தின் மற்றுமொரு பாரிய பணி கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய் மாருக்கு போசணைப் பொதிகள் வழங்குவ தாகும். தாய்ப்பாலூட்டலை ஊக்குவித்தலுக்காக மேற் கொள்ளப்படுகின்ற திட்டமாகும். கடந்த வருடங்களில் 200/= பெறுமதியான முத்திரை வழங்கப்பட்டது. தற்போது 500/= பெறுமதியான பொருட்கள் (கருவாடு, கடலை, முட்டை, குத்தரிசி, பயறு) வழங்கப்படுகின்றது.

### 2. கிராம அபிவிருத்தி வேலைத்திட்டம்

சமூக பொருளாதார முறையில் பாதிக்கப் பட்ட பிரிவினர்களில் பெண்கள், இளைஞர்கள் போன்றோரின் வாழ்க்கை நிலையை உயர்த்து வதன் மூலம் வறுமையை வெற்றி கொள்வதற் காக கிராமிய பொருளாதார சமுதாய சூழலுக்கு அவசியமான அடிப்படை வசதிகள், பொது வசதிகள், தொழில் ஆற்றல்களை அவர்களின் பங்களிப்பின் மூலம் செயற்படுத்துதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

நீண்டகால பரந்த அளவிலான முதலீட்டு கருத்திட்டங்கள், இயந்திரங்களை பெரு மளவில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப ரீதி யான திட்டங்களைத் தவிர்த்து கிராமத்தின் வறுமைப்பட்ட மக்கள் பிரிவினருக்கு பயன்தரக் கூடியதும் ஒருவருட காலத்திற்குள் செய்து முடிக்கக் கூடியதுமான கருத்திட்டங்கள் இந் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கிராமிய மக்களின் வாழ்வினை கட்டி யெழுப்புவதற்காக பின்வரும் திட்டங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 01. பௌதீக அபிவிருத்தி.

I. கிராமிய தெருக்கள் அமைத்தல்/ விரிவு படுத்தல்/கொங்கிரீட் இடல்

II. விவசாய நடவடிக்கைகளுக்காக வாய்க் கால் வரம்புகளை அமைத்தல், குளங்களைப் புனரமைத்தல், விவசாயக் கிணறுகளை அமைத்தல்

III. கிராமிய நீர் வழங்கல் திட்டத்தினூடாக மற்றும் வேறு மார்க்கங்கள் மூலம் சுத்த மான நீர் வசதிகளை வழங்குதல்.

IV. சுகாதாரம் (துப்பரவு ஏற்பாட்டுத்திட்டம்) தேகாரோக்கிய வசதிகளை திட்டமிடல்

V. மின்சாரம் மற்றும் தொடர்பாடல் வசதி களை வியாபித்தல்.

### 02. கிராமிய மக்களின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக

I. வாழ்வாதார அபிவிருத்தி

II. மூலதனத் தேவையை வழங்குவதற்குரிய வழிகாட்டல் (வாழ்வாதார உபகரணங் களை வழங்குதல்.

III. கல்விச் சேவை.

IV. வீடுகளைத் திருத்தம் செய்தல்.

### 03. ஆன்மீக அபிவிருத்தி

I. ஆளுமை விருத்தி.

II. போதை ஒழிப்பு.

### 3. வங்கித்திட்டம்

சமுர்த்தி வேலைத்திட்டத்தின் பிரதான அங்கமாக குறுநிதியியல் (Micro Finance) உள்ளடக்கப்பட்டு அதற்காக தனிப்பட்ட ஸ்தாபன கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

வறிய மக்களின் சேமிப்புப் பழக்கத்தினை அதிகரிப்பதன் மூலம் அவர்களினது முதலீட்டு சக்தியினை மேம்படுத்தி உற்பத்தித் துறையில் ஈடுபடுத்தலும் அன்றாடம் அவர்களிடையே தோன்றும் சிறுகடன் தேவைப்பாடுகளுக்காக அவர்கள் முறையற்ற கடன் சந்தையில் அகப்படு வதனை தடுப்பதற்காகவும் அதன் மூலம் அவர் களை கடன் சுமையில் இருந்து மீட்டு முறை யான நிதிச் சந்தையை நோக்கி நகரச் செய் வதற்கும் சமுர்த்தி வங்கிச் சங்கம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

சமுர்த்தி வங்கிச் சங்கத்தினூடாக இலக்குக் குழுவினருக்கு அதாவது குறைந்த வருமானம் பெறுவோருக்கு கீழ் குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் கிடைக்கப் பெறுகின்றன.

I வறியோருக்கு சந்தர்ப்பம் வழங்குதல்

II வலுவூட்டுதல்

III பாதுகாப்புத்தன்மை

### சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் பிரதான பணிகள்

I வைப்புக்களை ஏற்றல்

II கடன்களை விடுவித்தல்

III காப்புறுதி

போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்படு வதனால் அங்கத்தவர்களிற்கும் வாடிக்கை யாளர்களிற்கும் பாரியதொரு சேவையினை வழங்குகின்றது.

### சமுர்த்தி வங்கிச் சங்கத்திலுள்ள வைப்புக் கணக்குகளின் வகைகள்.

I. அங்கத்தவர் வைப்பு

II. பங்குக் கணக்கு

III. குழுவைப்பு (ஐந்து பேரைக் கொண்டது.)

IV. அங்கத்தவர் அல்லாதோர்

V. திரியமாதா வைப்பு (பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்களிற்கானது)

VI. சிறுவர் வைப்பு

V. சிசுரக்க வைப்பு (பாடசாலை செல்லும் பிரிவினருக்கானது)

VI. கட்டாய சேமிப்பு

### கடன் வழங்குதல்

புதிய வருமானமீட்டும் கருத்திட்டங்களை ஆரம்பிக்கவோ அல்லது ஏற்கனவே உள்ள கருத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதற்கோ தேவையான நிதி வசதிகளை வழங்குவதற்கு கடன்திட்டங்கள் பல சமுர்த்தி வங்கிகளால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு.

### கடனின் வகைகள்

01. பயிர்ச்செய்கைக்கடன்
02. மீன்பிடிக்கடன்
03. சுயதொழில்கடன்
04. நுகர்வுக்கடன்
05. இடர்கடன்
06. வீட்டுக்கடன்
07. ரட்டவிரு கடன்
08. திவிநெகும இதரகடன்
09. வாழ்வாதார அபிவிருத்தி கடன்
10. மகுட அபிவிருத்திக் கடன்

வறுமையினை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட சமுர்த்தித் திட்டமானது பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

### சமூக அபிவிருத்தி

இலக்காக கொள்ளப்பட்டவர்களின் சமூக ரீதியான பிரச்சினைகளிற்கு நிரந்தரமான தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இடம் பெறுவது

1. போதை நிவாரண வேலைத்திட்டம்
2. சிறுவர் துஸ்பிரயோகத்தை தடுக்கும் வேலைத்திட்டம்
3. தற்கொலை முயற்சியைத் தடுக்கும் வேலைத் திட்டம்
4. சர்வதேச தினங்களுடன் இணைந்ததான திட்டம்.

- சர்வதேச மகளிர் தினம்
- சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம்
- சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினம்
- சர்வதேச வறுமை ஒழிப்பு தினம்
- சர்வதேச எழுத்தறிவு தினம்

### 5. பல்வேறு நலன்புரி வேலைத் திட்டங்கள்

- அங்கவீனமுற்ற படைவீரர் நலன்புரி
- முதியோர் நலன்புரி
- திரிய பியச வீடமைப்புத்திட்டம் (நிரந்தர வீடில்லாத பிரிவினருக்கு வீடுகளை அமைத்துக்கொள்ள உதவும் திட்டம் இதற்கு 100000/= நிதி விடுவிக்கப் படும்)

### 6. சிறுவர் கழக வேலைத்திட்டம்

சர்வதேச தினங்கள், கலாசார வைபவங்கள் சமய வைபவங்களை ஒட்டி பல்வேறு மேம்பாட்டு மற்றும் தேசிய வைபவங்களை ஒழுங்கு செய்வதும் உதவிகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. உதாரணமாக சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி திரியமாதா வைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் சிங்கள இந்து புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களும், புத்தாண்டு வைபவங்களை நடாத்துதலும். வெசாக் மற்றும் நத்தார் தினங்களை முன்னிட்டு பல்வேறு மேம்பாட்டு திட்டங்களை நடாத்துதலும் இவற்றில் சிலவாகும்.

### திவிநெகும

2012ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு திவிநெகும தேசிய வேலைத்திட்டத்தினூடாக விவசாயம். கால்நடை மற்றும் மீன்பிடி போன்ற துறைகளின் கீழ் அன்றாட தேவைகளை வீட்டிலேயே நிறைவேற்றிக் கொள்வதற்கும், சுய தொழில் மற்றும் குடிசைக் கைத்தொழில்களை நடத்திச் செல்வதன் மூலம் மனை அலகினுள்ளே மேலதிக வருமானத்தை ஈட்டிக் கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது. சுய பொருளாதாரத்தை அதிகரிப்பதன் ஊடாக இலங்கையின் வறுமையை இல்லாதொழிப்பதற்கான பல்வேறு நடைமுறைகள் இத்திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவிநெகும சமுதாய அடிப்படையிலான வங்கிகள் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற் காகவும், முதலீட்டு வாய்ப்புக்களை அபிவிருத்தி செய்வதற்காகவும், உற்பத்தி வாய்ப்பினை அபி விருத்தி செய்வதற்காகவும் கடன் வசதிகளை வழங்குவதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. வறுமையை இல்லாதொழிப்பதற்காக பல்வேறு துறைகளை அபிவிருத்தி செய்து அதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்து வதில் திவிநெகும திட்டம் முக்கிய பங்கினைக் கொண்டுள்ளது.

பல்வேறு அம்சங்களைக் கொண்ட சமுர்த்தி திட்டமானது வறுமை ஒழிப்பில் முக்கிய பங்காற்றியுள்ளதுடன், "திவிநெகும" (வாழ்வின் எழுச்சி திட்டம்) எதிர்காலத்திலே பல நன்மை களையும் உயர்வுளையும் வழங்கி வறுமை யற்றதோர் இலங்கையை உருவாக்கும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடர்பாடல் கலை

## (மற்றவர்களைக் கவரும் மனித உள்ளகத் தொடர்பை மேம்படுத்தலும்)

## (Bewitching and achieving interpersonal impact)


**திருமதி.தட்ஷாயினி திலீபன்**

முகாமைத்துவ உதவியாளர்

பிரதேச செயலகம் – வேலணை


தொடர்பாடல் கலை என்பது தனி ஒரு முறைமை அல்ல. இது ஒரு சிக்கலான கலை. மற்றவர்களுடன் உரையாடும் போது மற்றவர்களின் தோற்ற பொலிவுகளையும், அவர்களின் நிலையையும் (Posture and gesture) மனதில் வைத்து உரையாட வேண்டியுள்ளது. நாங்கள் உரையாடும் போது எமது தொனி, உரையாட வேண்டிய கருத்து என்பனவற்றை முன்னதாகவே யோசிக்க வேண்டியுள்ளது.

உண்மையாக ஒரு திறமையான தொடர்பாடலுக்கு முக்கியமாக இருக்க வேண்டியது நம்பிக்கை. பல மனிதர்களிடம் திறமையான யோசனைகள், தகவல்கள், வசதிகள் இருந்தும் அதை தக்க முறையில் சொல்லவோ பிரயோகிக்கவோ முடியாத நிலையில் உள்ளார்கள் (Incosistency) மற்றும் சில பேருக்கு தகவல்கள் கோர்வையாக வராமலும் தாவும் தன்மையும் கொண்டிருக்கும். இன்னும் சில பேருக்கு தாழ்வு மனப் பான்மை (Inferiority Complex), தன்னுணர்ச்சித் தன்மை, (EGO) உண்டு. இவை யாவும் தொடர்பாடலுக்குரிய தடைக்கற்களாகும். இவற்றைத் தவிர்க்க பயிற்சி தேவை.

பல தொடர்பாடல் சந்தர்ப்பங்களில் 'Bert Decket' எனும் அறிஞர் ஒன்பது நடத்தை திறன்களையும் பின்வருமாறு வரிசைப்படுத்தியுள்ளார்.

1. விழித் தொடர்பாடல் (Eye Communication)
2. அங்கத் தோரணையும் அசைவும் (Posture and movements)
3. முகத்தின் வெளிப்பாடு (Facial expression)
4. உடையும் தோற்றமும் (Dress and appearance)
5. தொனி (Vocal variety)
6. மொழி (Language)
7. கேட்போரின் பங்களிப்பு (Listener's involvement)
8. நகைச்சுவை (Humor)
9. உங்கள் பார்வையில் நீங்கள் (The Natural self)

இனி ஒவ்வொரு நடத்தை திறன்களையும் விரிவாக ஆராய்வோம்

### *விழித்தொடர்பாடல்*
### (EYE COMMUNICATION)



இது நடத்தை திறன்களில் மிக முக்கியமானது. இது பற்றி விவரிக்க முன்னர் சில கேள்விகளை நாம் எழுப்பலாம்.

1. அடுத்தவரிடம் கதைக்கும் போது நீங்கள் எங்கே பார்க்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?
2. நீங்கள் அடுத்தவரிடமிருந்து கேட்கும் போது நீங்கள் எங்கே பார்க்கிறீர்கள் என்று கவனமாயிருக்கிறீர்களா?
3. அவர் கண்களை தவிர வேறு பக்கம் கவனம் திரும்புகின்றதா?

இக் கேள்விகளே விழித்தொடர்பாடலுக்குரிய முக்கிய காரணிகள் ஆகும். நீங்கள் நிதானமாகவும், உண்மையாகவும் உமது கேட்போரை பார்க்கவும் உமது விழித் தொடர்பாடல் பாதிக்கத்தக்க வகையில் இருக்க கேட்போரை 5–10 வினாடிகள் பார்க்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் உரையாடும் போது எதிராளி கண்களை வேறுபக்கம் திருப்பினார் எனில் அவர் அக்கருத்தில் விருப்பமில்லாதவராகவோ அல்லது பின்வாங்குகின்றார் என்றோ அர்த்தம். எமது கண்களால் ஒரு விடயத்தை சொல்லலாம். இது ஆதரவான பார்வை மூலமும் (Intimacy), கட்டாயப்படுத்துவதன் மூலமும் (Intimidiation), அக்கருத்தில் அவர்களை சம்பந்தப்படுத்துவதன் மூலமும் (Involvement) நம் விடயத்தை அவர் களுக்கு சொல்லலாம். ஆனால் நேர்ப்பார்வை எமது பார்வையாளனுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தி விடும். உரையாடும் போது ஒரு குறிப் பிட்ட அரை வினாடிக்கு கண்களை மூடித் திறத்தல் பார்வையாளரை பாதிக்கத்தக்க வகையில் இருக்கும். பொதுவாக அசௌகரிய மான சந்தர்ப்பங்களில் பார்வையாளனின் கண் களுக்கு சற்று மேலே பார்க்கவும் (Forehead) மேலே குறிப்பிட்ட விடயங்களை பயிற்சியின் மூலம் மேம்படுத்தலாம். மேலும் இத் தொடர் பாடல் நரம்புத்தொகுதியுடன் நேர்த்தொடர்பு கொண்டிருப்பதால் கவன ஒருங்கிணைப்பு அவசியமாகும்.

### *அங்கத் தோரணையும் அசைவும்*



### (POSTURE AND MOVEMENT)

அடுத்த நடத்தைத் திறன் அங்கத்தோரணையும் அசைவும் ஆகும். அதற்கு முன் சில கேள்வி களை நம்முன் எழுப்பலாம்?

1. நீங்கள் மற்றவர்களுடன் உரையாடும் போது நடக்கின்றீர்களா?
2. நீங்கள் மற்றவர்களுடன் நின்று/இருந்து உரையாடும் போது எதிராளி எவ்வாறு செய் கின்றாரோ அவ்வாறு நீங்களும் செய் கின்றீரா?
3. உரையாடும் போது நிமிர்ந்து நேராக தோள்கள் பதிந்து சாதாரண நிலையில் உள்ளதா?

இக் கேள்விகளைக் கேட்ட பின்னர் எமது நோக்கம் நிமிர்ந்து நிற்கவும், எளிதாகவும், இயற்கையாகவும் அசைய/நடக்க வேண்டும். இங்கு நீங்கள் பார்வையாளனுடன் உரையாடும் போது நீங்கள் உங்கள் இருக்கையை விட்டு அல்லது உங்கள் நிலையை விட்டு பார்வை யாளனை நோக்கி வரவும். இது உங்களுக்கும் அவருக்குமுள்ள இடைவெளியை கணிசமான அளவு குறைக்கும். எனினும் இந் நடத்தை அளவோடு இருத்தல் வேண்டும். மேலும் உங் களுக்கு என ஒரு பாணி உரையாடும் போது, நடக்கும் போது வைத்திருத்தல் தொடர்பாடலை இலகுவாக்கும்.

### *முகத்தின் வெளிப்பாடு*

### (FACIAL EXPRESSIONS) *– புன்னகை*

இந்த நடத்தைத் திறனில் எமது நோக்க மானது இயற்கையானதாகவும், சிரித்த முக பாவத்துடனும் இருத்தல் வேண்டும். அசௌ கரியமான சந்தர்ப்பங்களில் கூட சிரித்த முக பாவத்துடன் இருக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும். உண்மையில் எங்களில் 1/3 பங்கு பேர் மாத்திரமே சிரித்த முகத்துடன் இருக்கின் றார்கள். அவர்களில் சிலர் சிரிக்கும் போது கண்கள் கூட சிரிக்கும். அடுத்து 1/3 பங்கு பேர் நடு நிலையானவர்கள். இவர்கள் கடுமையான முகத்தில் இருந்து அல்லது சாதாரண முகத்தில் இருந்து புன்னகை முகத்திற்கு உடனடியாக மாறக் கூடியவர்கள். அடுத்து 1/3 பங்கினர் கடுமையான முகத்துடன் இருப்பவர்கள் இவர்கள் சிரித்தாலும் அதிலும் ஒரு கடுமை இருக்கும்.

புன்னகைப்பது என்பது ஒரு மர்மமான விடயம் அல்ல. ஆனால் அதன் பாதிப்பை தவிர "உன் புன்னகை போதுமடி" என்று அறிஞர்கள் சொல்வதில் ஏதோ விடயம் இருக்கத்தானே வேண்டும். பௌதீகரீதியாக புன்னகை தசை களால் உருவாக்கக் கூடியதும் பயிற்சியின் மூலமும் மேம்படுத்தக் கூடிய ஒன்றாகும். உதடு களால் சிரிக்கும் பயிற்சியை விட கன்ன என்பு களால் சிரிக்கும் பயிற்சி மேம்பட்டது. உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னங்களின் மேல் பகுதியை அப்பிள் பழமாக ஒப்பிட்டு அதை மேலே உயர்த்தி, தாழ்த்தி புன்னகைக்கு பயிற்சி பெறுங்கள். அது உண்மையில் மற்றவர்களுடன் உள்ள தொடர்பாற்றலை பாதிக்காத வகையில் இருக்கும்.



### *உடையும் தோற்றமும்*
(DRESS AND APPEARANCE)

வழமை போல் நீங்கள் சில கேள்விகளை இந் நடத்தைத் திறனில் கேட்டுப் பாருங்கள்.

1. நீங்கள் தலையை அலங் கரிக்கும் போது உங்களுக்கு என ஒரு பாணியை பின்பற்றுகின்றீர்களா?
2. உடை விடயத்தில் உங்களுக்கு பொருத்தமானதாகவும், இணைக்கக்கூடிய விதத்திலும் அணிகின்றீர்களா?
3. நீங்கள் அணியும் நகை, கழுத்துப்பட்டி, இடுப்புப்பட்டி என்பனவற்றை மற்றவர்கள் கவனிக்கிறார்களா?
4. நீங்கள் உடைகளை ஒவ்வொரு நாளும் "அழுத்தி" அணிகின்றீர்களா?
5. நகங்கள் விடயத்தில் நீங்கள் கவனம் செலுத்துகின்றீர்களா?
5. காலணிகள் உங்கள் தோற்றத்தில் மாற்றம் ஏற்படுத்துகின்றனவா?

இந்த நடத்தை திறன் இயல்பில் எமது நோக்கமானது, உடையானது தோற்றத்திற்கு நேர்த்தியாகவும், பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும். ஆனால் அவ்வுடையானது சௌகரியமாகவும் இருத்தல் வேண்டும். உண்மையாக 90% உடல் பாகத்தை ஆடைகள் மூடுகின்றன. 10% பாகத்தை தலைப்பகுதி ஆக்ரமித்து முக்கியமாக தொடர்பாடுகின்றது. ஆயினும் ஆடைகளும் மற்றவர்களுடன் உரையாடுகின்றன.

பொதுவாக உங்கள் நண்பர்கள் ஐவரை எடுத்து அவர்களின் உடைகள், நிறங்கள், அழகுணர்ச்சி, நகைகள் என்பவற்றை அவதானிக்கவும், அவற்றில் எவை உங்கள் மனதிற் பதிகிறது (Impression)என்பதை அவதானிக்கவும். அவை கூட உங்கள் உடை விடயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி அதனுடாக மற்றவர்களில் பாதிப்பை ஏற்படுத்தும். மற்றும் ஒவ்வொரு நாளும் தோற்றத்தில் ஏதாவது மாற்றத்தை (New outfit) ஏற்படுத்தும் வகையில் உங்கள் உடையினை வடிவமையுங்கள். நீங்கள் உடைகளை வாங்கும் விடயத்திலும் இதை மேற்கொள்ளுங்கள். மேலைய நாடுகளில் உடைக்கென ஆலோசகர்கள் (Consultants) இருக்கிறார்கள். மற்றும் பல புத்தகங்கள் உள்ளன. John Molloyஇன் "How to dress for success"அதில் குறிப்படதக்கது.

### *தொனி* (VOCAL VARIETY)

வழமை போல் இந்த நடத்தை திறனில் சில கேள்விகளை எழுப்பலாம்.

1. உங்கள் தொனி உயர்ந்த தொனியா, அல்லது தாழ்ந்த தொனியா?
2. உங்கள் குரல் இனிமையானது என்று மற்றவர்கள் உங்களை பாராட்டியிருக்கிறார்களா? இல்லையா?
3. உங்கள் குரலில் எவ்வாறு புன்னகையை இடுவது என்று உங்களுக்கு தெரியுமா?
4. ஒரு தகவலை மற்றவர்களுக்கு சொல்கையில் ஏற்ற இறக்கங்களுடன் உங்கள் தொனியை மாற்றுகின்றீர்களா?


இத் திறனில் எமது நோக்கம் குரலானது உயர்ந்த பண்பாகவும் (Sublime), இனிமையானதாகவும் இருத்தல் வேண்டும்.

தொடர் தொனி வெளிப்பாடானது இடையிடையே ஓய்வு, ஆழ்ந்த மூச்சு என்பனவும் திட்டமிட்ட கருத்தும், குரலில் பொருத்தமான இடங்களில் ஏற்ற இறக்கமும் அவசியமாகும்.

உங்கள் குரலில் ஒருவித வகைத் தன்மையை (Variety) பேணுங்கள். மற்றும் எழுதப்பட்ட உரைப்பந்திகளையோ, குறிப்புக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையோ நீங்கள் மற்றவர்களுடன் தொடர்பாடும் போது பயன்படுத்துவது அவ்வளவாக விரும்பப்படுவதில்லை. திட்டமிட்டதும் எழுந்தமானதுமான கருத்துக்கள் உங்கள் குரலில் இருந்தாலும் அது உயிர்த்துடிப்பானதாகவும் (Animated) இயற்கையானதாகவும் இருக்கும்.




### *மொழி* (LANGUAGE)

உங்களது மொழி நடையானது பொருத்தமானதாகவும், தெளிவானதாகவும் இருப்பதுடன், திட்டமிட்ட நிறுத்தங்களுடன் தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களற்றதாகவும் இருக்கவேண்டும். உங்கள் சொல் வளத்தை கூட்டுவதில் நீங்கள் அக்கறை எடுத்தல் நல்லது. மற்றும் உங்கள் மொழி நடையில் அலட்டல் (Jargon) வார்த்தைகளை தவிருங்கள். ஈர்ப்பான வசனங்களை பேசுங்கள். மதிநுட்பமான வசனங்கள் உங்கள் எதிரியை திணறடிக்கும். உதாரணமாக "நான் மாட்டேன் " என்று சொன்னால் நீங்கள் விடவா போகிறீர்கள் என்று நேரடியாகச் சொன்னால் எதிராளி குறிப்பிட்ட செயலைச் செய்ய கட்டாயப்படுத் தலாம். மற்றும் உங்கள் வசன நடையில் "ம்ம்", "அஅ" என்ற வசனங்களை இயலுமானவரை தவிருங்கள்.

### *கேட்போரை விடயத்துடன் சம்பந்தப் படுத்தல்* (Listeners involvements)

இந்நடத்தை திறனில் எமது நோக்கமானது கேட்போரை எமது விடயம் சம்பந்தமாக ஆர்வப்படுத்தலாகும். முதலில் நீங்கள் அவர்களை சந்திக்கையில் நட்பு ரீதியாக அணுகுங்கள். பின் அவர்களை பற்றி ஒரு இதமான அபிப்பிராயம் (Warm Comment) ஒன்று கூறி அவர்களுக்கு மெல்லிய ice வையுங்கள். அவர்களுக்கு கிட்ட நெருங்குதல், மெல்லிய விரல் ஸ்பரிசம் போன்றன உங்கள் கருத்து சம்பந்தமாக அவர்களை பாதிக்கத்தக்க வகையில் அமையும். மற்றும் Visuals செய்துகாட்டல், நடித்துக்காட்டல், மாதிரிகளை காட்டுவதன் மூலமும் பார்வையாளனை ஈர்க்க முடியும். சாதுரியமான கேள்விகளை கேட்பதன் மூலம் அவர்களை சுறுசுறுப்பாகவும் சிந்திக்கவும் வைக்கலாம். பதிலளிக்கத்தக்க, இலகுவான, Response ஆன கேள்விகளை கேட்பதன் மூலமும் நாம் அவர்களை திசை திருப்பலாம்.

### *நகைச்சுவை* (Humor)

இந்நடத்தை திறனில் சில கேள்விகளை எழுப்பலாம்.

1. நீங்கள் நகைச்சுவை உணர்வுடையவர்களா?
2. உங்களை சிரிக்க வைக்ககூடிய விடயங்கள் என்னென்ன என்று உங்களுக்கு தெரியுமா?
3. நீங்கள் மற்றவர்களை சிரிக்க வைக்க முயற்சிக்கிறீர்களா? அப்படியானால் அது உங்கள் மகிழ்ச்சிக்கா? மற்றவர்கள் மகிழ்ச்சிக்கா?
4. நடந்த சில நகைச்சவை நிகழ்ச்சிகளை நீங்கள் மீட்டு தனிமையில் நீங்கள் சிரிக்கிறீர்களா?

இவ்வினாக்கள் ஒருவகைத் தன்மையாக இருப்பதை அவதானிக்கலாம். உண்மையில் மனிதன் ஒரு "சிரிக்கும் விலங்கு" என்று கருதப்படும் நிலையில் நகைச்சுவை என்னும் நடத்தைத்திறனில் எமது நோக்கமானது எதிராளிக்கும் உங்களுக்கும் இடையில் நகைச்சுவை மூலம் ஓர்இணைப்பை உருவாக்குவதாகும்

நகைச்சுவை சம்பந்தமான சில செய்திகளை சொல்லும்போது அவற்றிற்கு சில நடை, பாணி (Pacing), நீங்கள் சொல்லும் விதம், சொல்லப்படுகின்ற சந்தர்ப்பம் போன்றவற்றை நீங்கள் அவதானிக்கவேண்டும். உங்கள் கருத்து மற்றவர்களை அடைய வேண்டுமாயின் நீங்கள் மற்றவர்களால் விரும்பப்பட (Like ability) வேண்டும். இது உள்ளார்ந்த மன இயல்பு ஆகும். இந்த விரும்பப்படல் பின்வரும் காரணிகளால் ஏற்படலாம். மற்றவர்களுடன் நட்பு ரீதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவு, ஆர்வத்துடனும் அக்கறையுடனும் பழகுதல், திறந்த மனத்துடன் தனிப்பட்ட ரீதியில் கதைத்தல், மற்றவர்கள் மனத்திற்கு இசைந்து வளைந்து கதைத்தல், நம்பிக்கையாகவும் சுய நலமின்றியும் பழகுதல், மற்றும் நகைச்சுவை யாக பழகுதல் இவ்வியல்புகளில் விரும்பப்படல் நகைச்சுவையாக பழகுவதால் இலகுவாக ஏற் படலாம்.

நகைச்சுவை உணர்வின் வெற்றி யானது நேரத்தில் (Timing) தங்கியுள்ளது. பொதுவாக மற்றவர்களுடன் உரையாடும் போது அவர்களின் முகத்தை பார்த்தே உரையாடு கின்றோம். ஆகவே ஒரு நகைச்சுவையை சொல்லும் போது எமது முகத்தில் ஒரு நளினம், ஒரு நக்கல் எமது பார்வையாளனுக்கு சிரிப்பை வரவழைக்கும். மற்றும் நகைச்சுவை விடயங் களை நினைத்தல், அது சம்பந்தமான விடயங்களை ஒவ்வொரு நாளும் எழுதுதல் (Journal), நகைச்சுவை உணர்வு மிக்கவர் களுடன் உரையாடுதல் போன்றன உங்கள் நகைச்சுவை உணர்வை ( Sense of Humor) அதி கரிக்கும்.

### *உங்கள் பார்வையில் நீங்கள்*

(The Natural Self)

இந்நடத்தை திறனின் நோக்கமானது எமது தொடர்பாடல் சந்தர்ப்பங்களில் பலமான உங்கள் நடத்தை திறமைகளை பாவித்தலும், உங்கள் பலவீனங்களை பலமாக்குதலும்.

1. இங்கு மேலே சொல்லப்பட்ட 8 நடத்தை திறமைகளில் உங்களின் பலமான திறமை களை வரிசைப்படுத்த முடியுமா?
2. மற்றும் நடத்தை திறமைகளில் உங்கள் பல வீனங்களை வரிசைப்படுத்த முடியுமா?
3. ஒவ்வொரு நடத்தை திறமையில் சொல்லப் பட்ட வினாக்களுடன் நீங்கள் ஏதாவது வகையில் சம்பந்தப்பட்டிருக்கிறீர்களா?
4. அசௌகரியமான சந்தர்ப்பங்களில் புத்தி சாலித்தனமாக (Intellectual) சமாளிக்கும் வன்மை இருக்கிறதா?

போன்ற வினாக்களை எம்முன் நிறுத்தி அவற்றை நிவர்த்தி செய்ய இயலுமானவரை முயலலாம். மற்றும் தொடர்பாடலுக்கு முன் சொல்ல வேண்டிய கருத்தில் ஓர் ஆயத்தம் (Preoaration) இருத்தல் வேண்டும். மேலும் சொல்ல வேண்டிய கருத்தில் நல்ல ஞானம் (Professional) இருத்தல் அவசியம். ஆனால் மிகைப்படுத்தல் (ex-aggregation) விரும்பத் தக்கது அல்ல.

மேற்சொன்ன 9 நடத்தை திறன் களையும் பாவிக்கும் போது மற்றவர்களை நீங்கள் கவருகிறீர்களோ? இல்லையோ? மற்றவர்கள் உங்களை கவனிப்பார்கள். மேற் சொன்ன கருத்துக்கள் ஒன்றும் என்னுடைய சொந்த கருத்துக்கள் அல்ல. இந்நடத்தை திறன்கள் யாவும் Deckers Communications என்ற நிறுவனம் வெளியிட்ட வெளியீடுகளை அடிப்படையாக கொண்டவையாகும். மேலும் இந்நடத்தை திறன்களை கைக்கொண்டால் மனித உள்ளகத் தொடர்பு மேம்படுவது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளத்தனையது உயர்வு: உள்ளத்தின் செம்மையே ஆரோக்கியம்

நா.நவராஜ்
உளவளத் துணையாளர்
சுகாதார சேவைகள் பணிமனை – வேலணை

உள்ளம் பெருங்கோயில் என்றார் திருமூலர். உள்ளுதல் என்றால் நினைத்தல் என்று பொருள். நினைத்தல் என்ற தொழிலைச் செய்பவன் மனிதன். அவனிடம் இருப்பது உள்ளம். உள்ளத்துக்கு ஒத்தகருத்து மனம். இன்று மனம் பற்றிய, உளம் பற்றிய கல்வியும் ஆராய்ச்சியும் வளர்ச்சிகண்டு வருகின்றது. மனிதன் மனத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளத் தலைப்பட்டிருக்கின்றான் என்பது இதன் பொருள். இதன் அடிப்படையில் உடம்பில் ஏற்படும் பல விளைவுகளுக்கு உள்ளம் காரண மாக இருப்பதைக் கண்டு உடலுக்கும் உள்ளத் திற்கும் – உள்ளத்திற்கும் உடலுக்கும் இடையில் ஓர் இறுக்கமான பிணைப்பு இருப்பதை உணர்ந்து வெறும் நோயற்ற நிலைதான் ஆரோக்கியும் என்ற நினைப்பை மாற்றி வெறுமனே நோயற்றிருப்பதோ அங்கவீனம் அற்றிருப்பதோ ஆரோக்கியம் அல்ல. உடல், உள, சமூக நன்னிலை அடைதலே ஆரோக்கியம் எனப் புரிந்து இந்த நன்னிலையை – ஆரோக் கியத்தை அடைவதற்கு உளத்திற்கு உதவுவது ஆன்மிகம் என்பதால் அதனையும் சேர்த்து வரைவிலக்கணத்தை உருவாக்கி தற்பொழுது வரை அதனையே பின்பற்றி வருகின்றான்.

இந்த முன்னேற்றம் நடந்திருப்பதை ஒரு சிலர் மாத்திரமே அறிந்து நல்லபடி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பலருக்கு இவ் விட யங்கள் தொடர்பான அறிவு இருந்தாலும் சமூகநாணம் என்ற வலைக்குள் சிக்குண்டு வெளிவர முடியாமல் இருக்கின்றனர். உடலுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் போல உள்ளத்துக்கும் முக்கியத்துவம் தருவதற்குத் தயங்குகின்றனர். உடலுக்கு ஒரு பிரச்சினை என்றால் அதற்குரிய மாற்றத்தை அறிந்து செயற்படுத்துவதில் காட்டும் வேகத்தை தனது உள்ளத்தைப் பிரச்சினையில் இருந்து விடு விப்பதற்கும் செம்மைப்படுத்துவதற்கும் பயன் படுத்துவதில்லை. ஏன் அதனைச் செம்மைப் படுத்த வேண்டும் என்று கேட்கின்றனர்.

உடம்பில் ஒரு நோய் வந்தால் மனம் பல எதிரான எண்ணங்களை உருவாக்கி தானும் துவண்டு விடுகிறது. அதுபோல மனதில் ஒரு கவலையோ துன்பமோ குடிகொண்டு விட்டால் அது உடம்பில் தாக்கத்தை ஏற்படுத்து கின்றது. இந்த இருவகையான நிலைக்கு உட் பட்டு துன்புறுவது எமது நாளாந்த வாழ்க் கையின் அனுபவமாக இருக்கிறது.

எமது இன்றைய வாழ்க்கை முறையில் நாம் பயன்படுத்தும் உணவு தொடங்கி கையில் இருக்கும் தொலைபேசி வரை உடலையும் மனத்தையும் பாதிக்கின்றவையாக அடை யாளம் காணப்பட்டிருக்கின்றன. எமது வாழ்க்கையோ இயந்திரத்தனம் பொருந்திய தாக வேகமாக நகர்கின்றது. வேலைப் பழுவினால் ஓய்வில்லாமல் பலர் தவித்துக் கிடக்கின்றனர். இது எமது நீண்ட வாழ்க் கைக்குச் சவாலாக இருப்பதை நாம் உணர மறுக்கின்றோம். கடந்த ஆண்டு ஐக்கிய அரபு எமிரேட்டில் 45 வயதினைக் கூட எட்டாத 403 பேர் மரணம் அடைந்தார்கள். இவர்களில் 71 வீதம் பேர் இயற்கையாக மரணம் அடைந் தார்கள். அவ்வியற்கை மரணத்துள் 91 வீதம் பேர் வேலைப்பழுவினால் வந்த மன அழுத்தத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாலேயே இறந்தார்கள் என்பது கசப்பான உண்மையாக இருக்கிறது.

இத்தகைய வாழ்க்கை முறையால் மனதில் ஏற்படும் பல நெருக்கடிகளால் எமது சிந்தனைகள் எதிரான சிந்தனைகளாக மாற்றப் படுவதற்குரிய சாத்தியங்கள் இருக்கின்றன. இந்தச் சிந்தனை மாற்றத்தால் எமது மனம் அழுத் தத்தைச் சந்திக்கின்றது. இது எமது உடலிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மனதில் ஏற் படும் அழுத்தத்தால் உடலில் ஏற்படும் நோய் நிலைமையை உளவியலாளர்கள் "மெய்பாட்டு" நோய்கள் எனக் கூறுவர். எம்மிடம் உளவளத் துணைக்கு வருபவர்களில் பலர் இம் முறைப் பாடுகளையே கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ் மன அழுத்தங்கள் எம்மில் காணப்படும் சில உடல் சார்ந்த பிரச்சினைகளை (சலரோகம், அல்சர், எக்ஸிமா) அதிகரிக்கச் செய்கின்றன. அத்தோடு இத்தகையை உடல் நோய்கள் ஒருவரில் ஆரம்பிக்கின்ற போது இந்நோய்கள் தொடர்பான ("மாற்ற முடியாத வருத்தம் எனக்கு வந்திட்டுது", "நான் வருத்தக் காரன் ஆகிவிட்டேன்") போன்ற எதிரான எண்ணங்களும் இவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தி இவர்களது உடல் நோயை அதிகரிக் கின்றன. இது ஒரு வட்டமாக நடைபெறுகின்றது. இதைப் பலர் உணர்வதில்லை.

உடலில் உண்மையாகவே (மெய் பாடுகள் அல்லாத) நோய் ஏற்பட்டிருப்பினும் அந்த நோயினைக் குணமாக்கும் தன்மை மனத்திலும் தங்கியுள்ளது. தீர்க்க முடியாத நோய்கள் என கருதப்படும் நோய்களுக்கு உட் பட்டிருப்பவர்கள் கூடத் தமது வாழ்நாள்கள் வரையறுக்கப்பட்ட நிலையிலும் தமது மனத் தினை எவ்வாறு செம்மைப்படுத்தி அழுத்த மில்லாமல் வைத்திருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து அவர்களின் வாழ்நாள் நிர்ணயிக்கப் படுகின்றது என்பதை நாம் பல உதாரணங்கள் மூலம் கண்டிருக்கின்றோம் அறிந்திருக் கின்றோம்.

அண்மையில் ஓர் ஆராய்ச்சிக் குறிப் பொன்றில் மார்பகப்புற்று நோய் வந்தவர்களை ஆய்வு செய்து "மார்பகப் புற்று நோய் வந்த அத்தனை பெண்களினுடைய வாழ்க்கை முறை, அவர்களின் எண்ண ஓட்டம் போன்றவை பற்றி ஆராய்ச்சி செய்தோம். மார்பகப் புற்று நோய் உருவாகுவதற்கு சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் பாகவே, அந்தப் புற்று நோய் வந்த அத்தனை பேரின் எண்ண ஓட்டமும் எதிர்மறையான எண்ண ஓட்டமாக இருந்தது. ஆய்வு செய்த 100 பேரில் 98 பேர் 10 ஆண்டுகளுக்கு முன்னரே புற்றுநோயை வரவழைக்கும் எதிர்மறையான மனஅமைப்பை உருவாக்கியிருந்தனர்." என்று குறிப்பிட்டுள்ளனர். இந்த ஆய்வுகளின் சரி பிழைக்கு அப்பால் நாம் சிலவற்றை விளங்கிக் கொள்ளவேண்டிய தேவை இருக்கின்றது.

முன்னர் சொன்ன ஆரோக்கியத்தைப் பற்றிய வரைவிலக்கணத்தின் படி உடல், உள, சமூக மற்றும் ஆன்மிக நன்னிலை அடைதல் என்ற படிநிலை இருக்கிறது. இவற்றில் உடலையோ சமூகத்தையோ ஆன்மிகத் தையோ முதன்மையாகச் சொல்லிவிட முடி யாது. காரணம் உடலைச் செம்மையாக வைத் திருத்தல் என்னும் போது அதனோடு உளம் தானாகவே இணைகின்றமை வெளிப்படை. சமூகம் என்பது தனிநபர் பலர் சேர்வது, எனவே அதனை செம்மைப்படுத்த வேண்டுமெனில் அதுவும் தனிநபரைச் செம்மைப்படுத்துவது என்பதையே சார்கின்றது தனிநபர் என்னும் போது அது அவரது உள்ளத்தைச் செம்மைப் படுத்தல் என்ற நிலைக்கே இட்டுச்செல்கின்றது. ஆன்மிகம் என்பதும் ஒரு நபர் சார்ந்த அவரது உளம் சார்ந்த ஒரு விடயம்- மனித உள்ளத்தைச் செம்மைப்படுத்தும் ஒரு கருவி. இதன் அடிப்படையில் நோக்கும் போது இங்கு உளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது முதன்மை நிலை பெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கின்றது.


"உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன், உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" (திருமூலர்) என்ற பாடல் வரி களில் உடம்பை வளர்க்கும் உபாயம் என்ற வரி சிந்தனைக்குரியது. அந்த உபாயம் என்ன? எளிமையாகச் சொன்னால் உள்ளத்தைச் செம்மையாக்குவதே அந்த உபாயம். திருமூலர் உள்ளத்தைச் செம்மையாக்க ஆன்மிகத்தையே கருவியாகக் கொண்டு அதன் மூலம் உடலை நன்கு வளர்த்து உயர்வு பெற்றார் என்று அறி கின்றோம்.

முதன்மை பெறும் இந்த உள்ளத்தைச் செம்மைப்படுத்தும் ஒரு கருவியாக ஆன்மிகம் இருக்கிறது. இதனைவிடப் பிரச்சினைகள் வரும் போது அதனை "எங்கள் பல்லைக் குத்தி மற்றவருக்கு ஏன் மணக்கக் கொடுப்பான்" என்று எண்ணாது நம்பிக்கைக்குரியவரோடு மனந் திறந்து பகிர்ந்து கொள்ளுதல், நல்ல இசையைக் கேட்டல், இனிய புத்தகங்களை வாசித்தல், விளையாடுதல், நாடகம் (T.V நாடகம் அல்ல), நடனம் போன்ற கலைகளை ரசித்தல் அதனில் ஈடுபடுதல், நல்லவர்களுடனான சேர்க்கை, நகைச்சுவையை ரசித்து மனம் விட்டுச் சிரித்தல், போன்றனவும் எமது உள்ளத்தைச் செம்மை யாக்கும் கருவிகளாகத் தொழிற்பட வல்லன.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் உள்ளத்தைச் செம்மையாக்கினால் எமது வாழ்வு புதிய பாதையில் பயணிக்கும். இதற்கு சிலருக்கு நேரத்தைக் கண்டு பிடிப்பது சிக்கலான தாக இருக்கலாம். அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். வாழ்க்கையில் நாம் எப்போதும் நாண் ஏற்றிய வில்லுப் போல இருந்தால் அது பிரச்சினையாகி விடும். வில்லைத் தேவைப்படும் போது மட்டுமே நாண் ஏற்றிப் பின்னர் அதனைத் தளர்த்தி வைக்க வேண்டும். அப்பொழுது தான் அதனைத் தேவைப்படும் போது பயன்படுத்த முடியும். எமது மனத்துக்கும் இந்நடைமுறை நன்கு பொருந்தும். மனம் தெளிவாக நலமாக இருந்தால் உடலுக்கு வரும் பிரச்சினைகள் குறையும். நோய்நிலையுற்றாலும் "நோய் கூட ஒரு வரம்" என்ற ஜென்னின் அருமையான வாக்கியத்தைச் சொல்ல முடியா விடினும் தளர்வறியா மனம் இருக்கும். சமூகத்தோடு நல்ல உறவினை வளர்த்துக் கொள்ளமுடியும். எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு எமது வாழ்க்கையை நன்னிலைப்படுத்த முயலு வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# KEYS AND CLEAR THINKING FOR SUCCESS IN LIFE



Mr.N.Kajendra
*Development Officer*
*Divisional Secretariat - Velanai*

Life 'really' is like a movie you write the script. You are the star, director and critic and like a movie, it ends. What's important in life is not just the journey, but the quality of the journey. That's why it's important to make every day the best it can be, because 'now' is all you have.

Much has been written on what it takes to win the game of life. Here's my list; take what you want

- **I Love people, use things**
  People who become 'successful' and miss a successful life are those who love things and use people be sure to put people as a priority for your life.
- **Take time off**
  Life isn't just about work. There is so much else to experience here in this life and unfortunately too little time to enjoy it.
- **Be a giver**
  Be someone who gives more than takes. Yes, we all have to take from time to time, but we should take only when we need to and give every time we have chance to.
- **Be a lifelong learner**
  We become better people as we learn take time throughout your life to row and learn and become a better person.
- **Keep a sense of humor**
  People who laugh are a gift to the world. Don't take yourself out your circumstances seriously, learn to look on the bright side and see the humor in situations.
- **Honor your commitments**
  This is a key to a successful life. We live this life based on commitment are those who will be respected and trusted by others.
- **Mentor someone**
  Always take the time to mentor someone this goes a long way and makes the world a better place.

Thinking is necessary if anyone want to succeed in life. Thinking needs constant practice. If anyone has enthusiasm, he/she can succeed in improving his/her thinking powers. Enthusiasm generates interest and sustains thinking.

Concentration will help us to arrange our thoughts in order and become a rapid thinker. Here there are two types of thinking in our area.

**I. Positive thinking**

**II. Negative thinking**

Positive thinking refers that think positively, act positively, image



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

positively and also believe positively. It will definitely give powerful results. Positive thinkers are not afraid about problems. They believe any problems as an opportunity. It will lead to amazing results.

On the other hand, we know the second category of people that is negative thinkers is high in amount in our area. Their achievements are limited, due to their negative thinking. They never think optimistically, so they hardly get desired results. If they change their mental attitude will also become positive thinkers.

## The power of positive thinking

Of course, you want good results in doing your job, in reaching your goals, in maintaining good health, and living your life in general. Here is good news for your good results can be yours. How powerful results will be yours by thinking positively, acting positively, imaging positively, praying positively and believing positively.

## How to be a positive thinker?

The number of priority in becoming a positive person is desire you must want to be a positive person so intently that you determine to start at once the process of change in yourself. If you believe you can change from negative to positive you will do so.

Positive thinking is the direct opposite of negative thinking. The negativist is a disbeliever; the positive thinker is a believer. The one is full of self-doubt the other endowed with self – confidence. The one gives up when confronted with difficulty. The other rises to the occasion when the going gets tough. The negative thinker, by hopelessness, shuts off the flow of creative power. The positive thinker having faith on himself opens wide the channels of inflowing power and creativity that produce amazing results. In short the negative thinker tends to see and thereby to cause, failure. The positive thinker images the – possible and attracts success to himself and his projects.

Effecting change from the negative to positive requires, at first, beginning to entertain positive ideas about small things. Bombard your long established negative mental attitude with small positives such as the thoughts.

"I can", "it's just possible", "that's going to turn out well" one may become a positive thinker not only by having intense desire, but also by implementing whenever chance occurs.

## Drop the negative word habit

Positive thinkers are word droppers. They drop every negative word that gets in way of personal growth, and development words such as if, cant and impossible. They simply and forthrightly chuck them out of their vocabulary and thinking. A negative word is a symbol of a negative concept that can be harmful. Dropping it is of super importance. In fact, it is good to go so far as to bury such failure – generating words.

The thoughts, ideas and concepts that lodge in your minds result in



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

attitudes and beliefs and these in turn determine whether we experience failure or success. The 'if only' attitude is a despairing, totally ineffective look back at something that has gone by, if only I had not sold when I did; if only I had taken the job. The positive thinker is free from all such futile recriminations. His ideas is not "if only". It is a much stronger, forward looking idea, one full of hope and exceptions. It is the dynamic thought. "Next time" with this concept he gets unlimited positive results. If he makes a mistakes doesn't do what he should done or does what he should not have done he turns his back on all of it and simply affirms, next time I will do better, act more wisely. Next time, I will have improved judgment.

## Belief power gets powerful results

What is believed? A believe in what? The answer to both questions is a belief in life, in the future, in your job, in your education, in your country and last but certainly not least, in yourself.

A notable American scholar, Williams James, a professor of philosophy, anatomy, and psychology, stated "belief at the beginning of a doubtful undertaking is the one thing that will guarantee the success of any venture."So what is the one thing that guarantees success? Not knowledge, not education. Not training, not experience, not money; it is belief. Belief in a project and belief in yourself are vital to success. Naturally other qualifications are extremely important, but the primary factor, the one basic essential, is belief – the belief that you can generate the powerful results you want. Another name for belief is positive thinking. It is a face that some positive thinkers get positive results. William James declared, "Be not afraid of life.Belief that life is worth living and your belief will help create the fact".

Believers are a terrific breed of men and women. Nothing daunts them. They are afraid of nothing. If they have doubts, they rise above them. They become persons of power. These big, rugged souls sweep everything before them they are doers, achievers, winners; they have the magic word – belief.

## The positive thinker wins over discouragement

Does the positive thinker ever get discouraged? Of course. He is a human being. Subject to the rise and fall of moods. But the positive thinker does not remain discouraged because he learns how to deal with this feeling. Spirit is a variable, a mixture of light and dark, up and down, joy and gloom, a rhythmic variation of levels.It is easier to let the down cycle take over than to maintain the up cycle of spirit. The latter requires desire, will, and effort with a pattern of uplifting thoughts.

Hence, as a positive thinker, you must take authority over the rhythmic mood cycle, when it goes down, ride with it, but mentally make your thought control and bring it upward quickly. As a result, while discouragement comes at intervals, you must not give in to it or settled down in it. Turn on your mental



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

lifting power and rise up over the discouraging mood. The positive thinker wins over discouragement.

## Success in dealing with problems

The positive thinker is an achiever who gets powerful results for several reasons. He is not afraid of nor abashed by that phenomenon known as a problem. As a practical positive thinking philosopher, he knows that every problem contains the seeds of its own solutions, and progress will stop. The positive thinker knows that good outcomes are rooted in the fertile soil of thought problems.

## The positive thinker as an achiever

Jess Owens, four gold medals winner at the 1936 Olympic put it "have a dream, a big dream. You will never go any higher than you can dream. But you can go as high as you dream if you work at it, believe in it and stick to it. To reach your dream, you must climb a ladder on which there are tour rungs. They are determinations, dedications, discipline and attitude."


As Jesse Owen, a positive thinker is a true achiever. By years of research and studies it was found that positive thinking not only improves our mental attitude but also reduce health problems. It was found that it relives a person from headache; reduce overall stress, achieve great inner peace and emotional balance.

The following nine concepts are very important when we involve in positive thinking. These guidelines are very helpful in order to tackle any problem and overcome these problems. These are

1. Stamp your goal indelibly on your mind.
2. Always image yourself as succeeding.
3. When a negative thought enters your mind, immediately cancel it out with a positive thought.
4. Mentally minimize difficulties, maximize your strengths.
5. Deny the power of difficulty over you. Affirm the power of faith to overcome.
6. Believe in yourself.
7. Always be genuinely and friendly.
8. Keep on learning, growing, improving yourself.
9. Build a ladder to your dreams.

There are other aspects of a successful life. But these are the simple ones that you can begin to apply today. You can work and become a success. You might as well enjoy life.

## "Change your mind change your life"




**References**

1. **Ethic of Management Author** : Norman Vincent Peale

2. **How to stop worrying and start living Author** : - Dale Carnegie

3. **The power of positive thinking Author**: - Norman Vincent Peale



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போருக்கு பின்னரான தமிழ்ச் சூழல் - ஒரு பின்நவீனப் பார்வை

திரு.ந.ரதிகுமார்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், வேலணை.

கடந்த நூற்றாண்டின் பின் அரைப் பகுதியில் இதுவரை மேற்கொண்டிருந்த இயற்கை, சமூக அறிக்கைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டிருந்தமை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. அதாவது நாம் ஒரு காலத்திலிருந்து பிறிதொரு காலத்திற்கு நகர்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதனை இச்சிந்தனை மாற்றம் எமக்கு எடுத்தியம்புகின்றது எனலாம். இச் சிந்தனை மாற்றத்தினை மேற்குலகம் "பின் நவீனத்துவம்" என வரையறை செய்கின்றது. இரண்டாம் உலகப்போர் ஏற்படுத்திய உயிரழிவுகளும், சொத்தழிவுகளும் உலக சிந்தனை மாற்றத்திற்கு ஒரு மைல் கல்லாக அமைந்தது. போர் தொடர்பான அருவருப்பும் மனித சாரம் சத்தினை மதிப்பதான மானிடவாத சிந்தனைகளும் இக்காலத்திலேயே முகிழ்ச்சி பெற்றது. அறிவியல் ரீதியாக நோக்கும் போது நாம் இயற்கை, சமூகம் இவற்றை மொழியை ஊடகமாக கொண்டே அறிய முயல்கின்றோம். அத்தகைய மொழியை நாம் எவ்வாறு துல்லியமாக பயன்படுத்தலாம், மொழியை விடுத்து எம்மால் வேறு ஒரு ஊடகம் சாத்தியமற்றது என்பதன் விளைவாலும் அர்த்தம் – சொல் இவற்றுக்கிடையிலான தொடர்பை மொழியியலாளர்கள் ஆராய்ச்சி செய்தனர். இதன் விளைவாக இவற்றுக்கிடையிலான தொடர்பு சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் மாறும் இயல்புடையது இவை ஒன்றை ஒன்று மாற்றி பிரதியீடு செய்ய முடியும் அந்த வகையில் பிரபஞ்சம் பற்றியோ சமூகம் பற்றியோ நாம் உறுதியான மாற்றமுறாத உண்மை என்பதனை கண்டுகொள்ள முடியாது. இதுவரை அறிவு என நாம் ஏற்றுக்கொண்டவை அனைத்தும் மீள்வாசிப்பு செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி நிற்பதே பின் நவீனம் எனலாம். இது தொடர்பான விரிவான பார்வை அவசியமானது எனினும் இங்கு சுருக்கமாகவே இதனை தெளிவுபடுத்தி போருக்குப் பின்னரான தமிழ்ச்சூழல் எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என்பதனை விமர்சன ரீதியாக ஆராய இக்கட்டுரை முயல்கிறது.

பின்நவீனம் என்பது நவீனகாலத்தை தொடர்ந்து எழுச்சிபெற்றகாலமாகும். அந்த வகையில் 17ம் நூற்றாண்டு தொடக்கம் 20ம் நூற்றாண்டின் முற்பகுதிவரையான காலப் பகுதியை நாம் நவீனகாலம் என வரையறை செய்யலாம். இக்காலத்தில் இயற்கை,சமூகம் இவற்றை பற்றி முழுமையான உண்மையறிவை பெறுதல் சாத்தியம் என்றவகையில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு விஞ்ஞானம், தொழில் நுட்பம், மருத்துவம் ஈறாக கொள்கைகளையும் கண்டுபிடிப்புக்களையும் சாத்தியப் படுத்தியது. புவியீர்ப்பு கொள்கை, தொலைகாட்டி கண்டுபிடிப்பு, பென்சிலின் மருந்து கண்டுபிடிப்புக்களை விஞ்ஞான, மருத்துவத்திலும், தனி மனிதன், சமூகம் தொடர்பாக மொத்த தத்துவ கோட்பாடுகளை பிராய்ட்டின் உளப்பகுப்பாய்வு மூலமும் (தனிமனித ஆளுமையை விளக்கினார்), கார்ல்மாக்ஸ் பொருளாதார கோட்பாடு மூலம் முழு சமூக பிரச்சனைக்கும் பொருளாதாரம் என்ற ஒருமை தீர்வை முன்வைத்தமை போன்றவற்றை சமூக விஞ்ஞானத்திலும் எடுத்துகாட்டாக கூறலாம்.

ஆனால் நவீனத்தை தொடர்ந்து எழுச்சி பெற்ற பின் நவீனத்துவ சிந்தனை முற்றிலும் நவீனத்தில் இருந்து மாறுபட்ட சிந்தனையே அல்லது அதனை நிராகரிப்பதாக அமைகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனலாம் அந்த வகையில் நவீனம் சாத்தியப்படுத்திய இயற்கை, சமூகம் தொடர்பான உண்மை அறிவு என்பது சாத்தியம் என்ற எடுகோளை நிராகரித்து உண்மை அறிவு என்பது சாத்தியமற்றது. ஒரு காலத்தில் உண்மை என ஏற்றுக் கொள்ளப்பட்டது பிறிதொரு காலத்தில் நிராகரிக்கப்படலாம் எனக் கூறி உலகு தொடர்பாக இதுவரை நாம் மேற்கொண்ட அறிகைகள் தொடர்பான சந்தேகத்தையும் அது தொடர்பான மீள்வாசிப்பின் அவசியத்தையும் வலியுறுத்தியது. அந்த வகையில் பின் நவீனம் இதுவரை கவனிக்கப்படாத இடத்தில் இருந்த பெண்கள் சிறுபான்மையினர், ஒரு பாலினத்தவர்கள், சமூகத்தால் ஒதுக்கப்பட்ட பித்துநிலையாளர், போன்ற ஓரங்கட்டப்பட்ட குழுமத்தினை உலக அரங்கில் ஒலிக்கச் செய்தனவெனலாம்.

இத்தகைய மாற்றம் ஒரு குழுமத்திற்கோ, அல்லது ஒரு நாட்டிற்கோ உரியதல்ல மேற்குலகில் இது (பின்நவீனம்) முகிழ்ச்சி பெற்றாலும் அனைத்து இன, மத, நாடுகளுக்கும் பொதுவான மாற்றமாகவே இது அமைகின்றது. விரும்பியோ விரும்பாமலோ இன்றைய உலக மயமாதல் போக்குகளால் அனைத்து நாடு தழுவிய மாற்றமாகவே இது இனங்காணப்படுகின்றது.

பின்நவீனச் சிந்தனையின் சூழமைவை நோக்கிய பின் போருக்குப் பின்னரான இலங்கைத் தமிழச்சூழலை நோக்கப் புகுந்தால் எத்தகைய மாற்றங்கள் கலை, கலாசாரப் பின்னணியில் இடம்பெற்றுள்ளன என்பதனை பின் நவீன பண்புகளடிப்படையில் இன்று ஆராய்வோம். கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக இலங்கையில் நடைபெற்ற இன முரண்பாட்டின் உச்சநிலை ஆயுதப்போர் 2009.05.19 முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆயுத வழிப் போராட்டத்தில் இறுதிக் குழுவாக நின்று போராடிய புலிகளின் முன்னணி தலைவர்களின் மரணம், சில முன்னணி தலைவர்களின் காணாமல் போதல்களுடன் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதென அறிவிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. இன்றுவரை நான்கு வருடங்களும் கரைந்து போய்விட்டது யாவருக்கும் ஆச்சரியமே. இலங்கையில் போர் ஓய்வது என்பது அசாத்தியமானது என்ற நிலையே உலகரீதியாகவும் ஏன் இலங்கை மக்களாலும் சரி இவ்வாறே நம்பப்பட்டிருந்தது. சற்றும் எதிர்பாராத விதமாய் ஏதோ கனவிலிருந்து மீண்டது போல் நாம் போர் மேகங்களிலிருந்து விடுபட்டுள்ளோம் என்பது தெரிகிறது. போர்மேகங்களிலிருந்து நாம் விடுபட்டாலும் நாம் எமது சமூகத்தையும் கலாசாரத்தையும் அபிவிருத்திப்படியில் ஏற்றிவைக்க நீண்ட தூரம் பயணிக்க வேண்டியதை அது வலியுறுத்துகிறது. இத்தகைய போராட்டம் ஆரம்ப காலத்தில் இன விடுதலைக்கான போராட்டமாக இனங்காணப்பட்டாலும் பிற்பட அது பயங்கரவாதமாக இனங்காணப்பட்டமையை நாம் காண்கின்றோம். இத்தகைய சிந்தனை மாற்றம் பின்நவீனத்தின் பலாபலன் எனலாம். இத்தகைய சிந்தனையும் நிலையானதாகக் கொள்ளமுடியாது. இதுகூட நிரந்தரமெனக் கூறமுடியாது. காலப்போக்கில் இது கூட மாற்றமடையும் மீண்டும் பழைய சிந்தனைகளோ அல்லது புதிய சிந்தனைகளோ தோற்றம் பெறலாம்.

இனி நாம் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழர்கள் செறிவாக வாழும் வடக்குக் கிழக்கு பகுதிகளில் குறிப்பாக வடக்கில் ஏற்பட்டுள்ள வாழ்வியல் மாற்றங்களை ஆராய்வோம் எந்தவொரு நாட்டிலும் போருக்குப் பின்னரான காலப் பகுதியில் திடீரென எழுச்சியோ அல்லது வீழ்ச்சியோ எழுவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாகவே ஆராட்சியாளர்கள் கூறுகின்றனர். அந்த வகையில் எமது நாட்டிலும் முடிவுற்ற போரானது தமிழ் மக்களின் வாழ்வியலில் தாக்கங்களை மிக விரைவாக ஏற்படுத்தியுள்ளதெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் நடைபெற்ற காலப்பகுதியில் எமது சமூகத்தில் இடப்பெயர்வுகளும், உயிரழிவுகளும், சொத்தழிவுகளும் அன்றாட நிகழ்வாகக் காணப்பட்டிருந்த பொழுதும் குப்பி விளக்கில் படித்த கல்வியின் தரம் இன்று மின்சார வசதியில் எம்மவரிடம் காணப்படவில்லை. கல்வித் தரத்தில் மிகவிரைவாக வீழ்ச்சிநோாக்கி செல்லும் மாவட்டமாக மாறிவருவது வேதனைக் குரியதே. அன்று நாம் பல இன்னல்களுக்கு மத்தியிலும் எமது தனித்துவமான கலாசாரப் பண்புகளையும், சடங்காசாரங்களையும், கட்டுமை செய்யப்பட்ட ஒழுக்க விழுமியங் களையும் பேணி வந்துள்ளோம். என்பது சமூக ஆர்வலர்களின் ஒருமித்த கருத்தாக இருந்தது. ஆனால் இன்றைய சமுதாயம் இவற்றை யெல்லாம் இழந்துவிட்டதோ என எண்ணத் தோன்றுமளவிற்கு மாற்றமடைந்துள்ளமை எமது எதிர்கால சமூகம் தொடர்பான ஒரு கேள்விக் குறியையே உருவாக்கியுள்ளது. இத்தகைய தமிழச்சூழல் மாற்றங்கள் கட்டமைக்கப்பட்ட கலாசாரமோ, ஒழுக்கமோ, தனித்துவமோ சாத்தியமில்லை என்ற பின் நவீனப்பாங்கை எமக்கு வெளிப்படுத்துகிறது எனலாம்.

எமது சூழலில் கட்டமைக்கப்பட்ட பாலியல் ஒழுக்கம் கடைப்பிடிக்கப்பட்டிருந் தமை யாவரும் அறிந்ததே. அதாவது பாலியல் உறவு என்பது ஒழுக்கமற்ற நிலை யிலும் பாலியல் உறவுக்கான விருப்பு (Sexual pleasure) என்பது கணவன் மனைவிக்கு அப்பால் நடைபெறுவதை பத்திரிகைச் செய்திகள் எமக்கு அறிவிக்கின்றன. குறிப்பாக பாலியல் வேட்கைகள் சிறுமியரை மையப்படுத்தியதாக வயது வந்த பெரியோர்களால் வெளிப்படுத்தப் படுவது வேதனைக்குரியதே. இதனை வெளிப் படத்துபவர்களுக்கான விழிப்புணர்வு நட வடிக்கைகளும் போதியதாக இல்லை. இது தமிழ் சூழலில் மட்டுமன்றி உலகளவில் நடைபெறுவ தாகவும் பாலியல் வேட்கைக்கான பகுதி ஆண் உறுப்புக்கு அப்பால் (குதவழி, வாய்வழி இன்பம்) மாற்றமடைந்து வருவது உலகப் பொதுமையானதெனினும் இது எமது கலாசார ஒழுக்க விழுமியங்களிற்கு ஒவ்வாதவையே. இத்தகைய நடத்தைகள் பிறழ்வு நடத்தையாக ஆரம்ப காலங்களில் இனங்காணப்பட்டது. ஆனால் இன்று உலகு பற்றிய சிந்தனை மாற்றத் தினால் மனிதன் இப்படித்தான் வாழவேண்டு மென்பதில்லை. எப்படியும் வாழலாம் என்ற தத்துவத்தை வெளிப்படுத்துவது இதற்கு சாதக மாய் அமைகிறதோ என எண்ணத் தோன்று கிறது. எது எப்படியோ இத்தகைய ஒழுக்க விழுமியங்களுக்கு மாறான பாலியல் உறவு என்பது எமது தமிழ்ச் சூழலிற்குப் பொருத்த மான ஒன்றல்ல. அதனை நாம் ஏற்றுக் கொள்ளவோ, அங்கீகரிக்கவோ முடியாது. அந்த வகையில் அவற்றை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கை எமக்கு அவசியமானதாகும்.

போர் முடிந்து நான்கு வருடம் கழிந்த நிலையில் அபிவிருத்திகள் சாத்தியமானதோ இல்லையோ நாம் பல சாதனைகளிற்கு சொந்தக்காரர்களாக மாறியிருக்கின்றோம் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இன்று கொழும்பு மாவட்டத்தைப் பின்தள்ளி யாழ்ப் பாண மாவட்டம் தனிநபர் வருமானச் செலவு அதிகரித்த மாவட்டமாக முதலாவது இடத்தைப் பிடித்துள்ளமை சிந்தனைக்குரியதே. ஒரு காலத்தில் விவசாய, சுயதொழில்,புத்தாக்க முயற்சிகளில் ஈடுபட்டு உள்ளூர் உற்பத்திகளை கொண்டு தனது உணவுத் தேவைகளையும், உடமைத்தேவைகளையும் பூர்த்தி செய்த நாம் இன்று அவற்றை இழந்து அனைத்தையும் பணம் கொடுத்து வாங்கவேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளோம். காரணம் வேறுயாருமல்ல நாமே தான். உச்சக்கட்ட போரின் விளிம்பில் கூட தொலையாத தன்னம்பிக்கை, முயற்சியாண்மை அனைத்தையும் நாம் இழந்துள்ளோம். நம்மை நாமே இன்று தொலைத்து நிற்கின்றோம். இவற்றிலிருந்து விடுபட பல்வேறு திட்டங்களை முன்வைத்து எமது சுய உற்பத்திகளையும், வினைத்திறன்களையும் வளர்ப்பது அவசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானதாகும். ஏன் மது அருந்துவதில் கூட நம்ம வர்களை விஞ்ச எவருமில்லை. மாதாந்தம் அருந்தப்படும் மதுவின் அளவு ஒவ்வொரு மாதத்திலும் அருந்தப்பட்ட அளவிலிருந்து அதி கரித்துச் செல்வதையே புள்ளிவிபரங்கள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. மேலும் மது அருந்தும் தரப்பினரும் புதிய தரப்பினராக காணப்படு கின்றனர். பாடசாலை செல்லும் மாணவர்கள், பெண்கள் என்று இந்த தரப்பினரது அதிகரிப்பும் எம்மை ஆச்சரியத்தில் மூழ்க வைத்துள்ளது. போருக்குப்பின்னரான காலப் பகுதியில் பல் வகை போதையூட்டும் வஸ்துக்களும் கிடைக்கக் கூடியதாயுள்ளமை எமது சமூகத்திற்கு கிடைத்த சாபக்கேடு இவ்வாறு எமது சமூகம் பல கொடூர மான சாதனைகளுக்குச் சொந்தமானதாக மாறிக் கொண்டிருக்கின்றது.

போருக்கு பின்னரான இன்றைய காலப் பகுதியில் எமது சமூகம் பல கலாசாரப் பிறழ்வு களையும், நடத்தைப் பிறழ்வுகளையும் சந்தித்து வருவதை காணக்கூடியதாகவுள்ளது. சினிமாக் கலாசாரத்தின் மோகத்திலும், வெளிநாட்டு மோகத்திலும் நம்மவர்கள் சிக்கி எமது அடை யாளங்களை இழந்து வருகின்றோம் எனலாம். சினிமா கதாநாயகர்களுக்கு பால் வார்ப்பும் அந்த பாத்திரமாகவே மாறும் வெறிபிடித்த இளைஞர்கள் சினிமாக் கொலைகளையும் அடி தடிகளையும் பார்த்து அந்தப்பாணியில் தங் களையே மாற்றிக்கொண்டு சமூகத்தைச் சீரழிக்கும் நாயகர்கள் இங்கு ஏராளம். இவை யெல்லாம் எமது சமூகத்திற்கு ஏற்க முடியா தவையே. போருக்கு முன்னரான காலப் பகுதியில் இவை இருந்தாலும் ஒப்பீட்டளவில் இன்றுதான் அதிகரித்துள்ளது. பின்நவீனப் பார்வையில் இத்தகைய மாற்றம் கடந்த காலத்தை போல் நிகழ்காலமிருக்குமென்றோ கடந்த காலத்தை பின்பற்றி நிகழ்காலமும் எதிர்காலமும் இருக்கும் என்றோ கட்டுமை செய்யமுடியாது என்பதை புலப்படுத்துகிறது. போருக்கு முன்னரான காலப்பகுதியில் வெளி நாட்டு உறவுகள் இங்கு வாழும் தங்கள் உறவு களுக்கு பணப்பரிமாற்றங்களையே மேற் கொண்டிருந்தனர். அது அவர்களின் வாழ்வா தாரத்தை மேம்படுத்த வழிகோலியது எனலாம். ஆனால் இன்று அவர்களோ தமது உறவுகளுக்கு புதிய புதிய தொழில்நுட்பக் கருவிகளையும் குறிப்பாக பன்முக வசதிகள் உள்ளடங்கிய கையடக்க தொலை பேசிகளையும், கணினி களையும் வழங்கி தம்மையறியாமலே இங்குள்ள உறவுகளின் கல்வி, கலாசாரம் போன்றவற்றில் பாரிய தாக்கத்திற்குக் காரண மாகின்றனர். இவற்றைப் பயன்படுத்தி பல புதிய அறிவுத்தளங்களைத் தேடி எமது அறிவை வளப் படுத்த முடியுமெனினும் எம்மில் பலர் இவற்றை பொழுதுபோக்குக்கும், பெருமைக்கும் மட்டுமே பயன்படுத்துகின்றனர். தொலைபேசிகளும், மடிக்கணினிகளும், மரணச்சடங்கிலும், ஆலய வழிபாட்டிலும், சமய கலாசார நிகழ்வுகளிலும் தொல்லை தருபவையாக மாறிவருவதுடன் எமது அடிப்படைத்தேவைகளில் ஒன்றாக மாறி வருகிறது. பின்நவீனப்பார்வையில் கூறுவ தாயின் கைத்தொலைபேசிகள், கணினிகள் என அனைத்துவகை தொழில்நுட்ப சாதனங்களும் வீடியோ, பாட்டு, SMS, MMS, Camera போன்ற பன்முக வசதிகளை உள்ளடக்கி உற்பத்தி செய்யப்பட்டு வருகிகின்றது. ஆரம்ப காலத்தில் தொலைபேசி என்பது கதைக்க மட்டும், றேடியோ கேட்பதற்கு என்ற நிலையே இருந்தது அதாவது நவீனத்தில் ஒருமைத்துவ சிந்தனையே இருந்தது ஆனால் இன்று அதி லிருந்து விடுபட்டு பன்மைத்துவ சிந்தனைக்கு மானுட சமூகம் முன்னேறியுள்ளது. எனினும் அவற்றை ஆரோக்கியமாக பயன்படுத்துவது நம் அனைவரது கடமையுமாகும்.

பின் நவீன சிந்தனை நாம் எப்படியும் வாழலாம் இப்படித்தான் என்று வரையறை யொன்று மில்லை எனவும் ஒரு குறிப்பிட்ட குழாத்திற்கு அல்லது ஒரு நாட்டிற்கு என தனித்துவமான கொள்கை அல்லது கலாசாரம் என்பது சாத்தியமில்லை அவை மாறக்கூடியது. கட்டமைக்கப்பட்ட உண்மைகள் என்பது அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமாயிருந்தாலென்ன இயற்கை தோற்றப் பாடாக இருந்தாலென்ன சாத்தியமில்லை என்பதே பின்நவீனத்தின் சாராம்சம் எனலாம். பின்நவீனம் பல சாத்தியப்பாடுகளை தோற்று வித்தாலும் பல பாதக நிலைக்கும் இட்டுச் சென்றுள்ளது என்பது மறுப்பதற்கில்லை. இச் சிந்தனைகளால் தமிழ்ச்சூழல் தனது தனித்துவ மான கட்டமைப்புக்களை இழந்து வருவது அவதானிக்ககூடியதாகவுள்ளது. இதற்கு காரணம் உலகுபற்றிய பொதுப் பார்வையில் ஏற்பட்ட மாற்றங்களே எனலாம். ஒரு காலத்தில் கலாசாரமாக பார்க்கப்பட்ட ஒரு செயல் இன்று கலாசாரபிறழ்வாக நோக்கப்படும் தன்மை காணப்படுகிறது. அவ்வாறான கலாசாரங்கள் மீறப்படும் போது அதனை வலியுறுத்தி கடைப்பிடிக்க சொன்னால் அங்கு தனிமனிதர் உரிமை மறுக்கப்படுவதாக மனித உரிமை ஆர்வலர்கள் இன்று வாதிடுவர். இவ்வாறு பல நிகழ்வுகள் முன்பு ஒழுக்கமாக பார்க்கப் பட்டவை இன்று மீறல்களாக ஒழுக்க மற்றவையாக கணிக்கப்படுகிறது. இவற்றிற்கு காரணம் பின்நவீனப் பார்வைகளே.

இன்று எமது சூழலில் சமூக சேவைகள், முதியோரை பேணுதல் , ஏழைகளுக்கு உதவுதல் போன்ற பண்புகள் அருகி வருவதை காணக் கூடியதாய் உள்ளது. எத்தனையோ முதி யோர்கள் தங்கள் பிள்ளைகளாலேயே முதி யோர் இல்லங்களுக்கு அனுப்பி வைக்கப்படு கிறார்கள். கிராம மட்ட சமூக சேவை நிலை யங்கள் இன்று வெறும் கட்டிடங்களாகவே காணப்படுகின்றன. அதனூடான சேவைகள் என்பது பேச்சளவிலேயே காணப்படுகின்றது. ஏழைகளுக்கு உதவுவது, சமய சடங்குகளில் உள்ள நம்பிக்கைகள் என எல்லாம் இன்று வழக்கிலிருந்து விலகுவதை காணக்கூடிய தாயிருக்கின்றது.

சமகாலச் சூழலின் சிந்தனைப் புலத்தை தொகுத்து நோக்கின் கடந்த காலத்தைக் கொண்டு நிகழ்காலமும், எதிர்காலமும் இப்படித் தான் இருக்கும், இருக்க வேண்டும் என எம்மால் எதிர்வு கூறமுடியாது.

உலகமயமாதல் தன்மைகளால் ஒரு கருத்து அல்லது சிந்தனை உலகத்திலுள்ள மூலை முடுக்கெல்லாம் பரவி அதனை அனைத்து சமூக தரப்பினரும் பிரதிபலிக்கு மளவிற்கு இன்று தொழிநுட்பம் வளர்ச்சி கண்டுள்ளது. எமது பண்பாட்டுத் தளங்களில் பாரியதொரு தொழிநுட்பத் திரை வீழ்ந்துள்ளது. இதிலிருந்து வெளிவருவது கடினமானது. எமது பண்பாடுகள் விற்பனைப் பண்டங்களாக மாற்றப்பட்டுள்ளன. மாற்றம் என்ற சொல் ஒன்றே என்றும் மாறாத ஒன்று. ஏனையவை எல்லாமே தன்னில் மாற்றத்தை வெளிப் படுத்தும்.

அத்தகைய மாற்றம் என்பது ஆரோக்கியமானதாக அமைய வேண்டும். நாம் நன்மை தீமைகளை பிரித்து நன்மைகளை உள்வாங்கி தீமைகளை ஒழிக்க வேண்டும். இல்லாதுவிடின் எமது தற்கால சூழமைவும் தனது தனித்துவங்களை இழந்து முறையற்ற உறவுகள், பிறள்வுகளால் சமூக சீரழிவுகளையும், பல உயிர்கொல்லி நோய்களையும் ஏற்படுத்தி மீள முடியாத ஒரு சமூகமாக சில பத்தாண்டுகளில் மாறிவிடும் என்பதில் ஐயமில்லை. எனவே எதிர்கால சந்ததியினரை வழிப்படுத்தவும், நெறிப்படுத்தவும் அனைத்து தரப்பினரும் இன மத அரசியல் பேதமின்றி ஒன்றிணைந்து செயற்படுவதன் அவசியம் உணரப்படுகின்றது. பின்நவீனச் சூழமைவு பல நன்மைகளோடு தீமைகளையும் எமது சூழலில் விதைத்துள்ளது. எனவே நாம் ஒவ்வொருவரும் பாலில் இருந்து நீரை விலக்கி பாலை மட்டும் அருந்தும் அன்னப் பறவை போல் தீமையை விலக்கி நன்மையை மட்டும் உள்வாங்கி எதிர்கால சந்ததியை பிறழ்வற்ற சமூகமாக வளப்படுத்துவோமாக.

9590(P)

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச செயலர் பிரிவில் சமூக நிறுவனங்கள்

## வட இலங்கை சர்வோதயம்

### தோற்றமும் வளர்ச்சியும்

முத்தமிழ் இசைக்க மேகலை பிறக்க இந்து மகாசாகரம் இசைக்க சிலப்பதிகாரம் செய்திகள் கூற மீகாமன் படையெடுக்க நாகங்கள் பூவெடுத்துப் பூசிக்க வெடியரசன் ஆட்சி செய்ய பூங்குடி என்னும் புங்கனூர் என வழங்கி மருவிய புங்குடுதீவு மேலைத்திசையில் சிறப்புடன் வாழ்ந்த திரு கந்தையா பார்வதிப் பிள்ளையின் மைந்தனால் பிரிவினைகளற்ற எழுச்சியும் வேற்றுமைகளில் ஒற்றுமை கொண்ட சமுதாயத்தை கிராம மட்டத்திலிருந்து உலக மட்டத்திற்கு எழச் செய்து புதியதோர் உலகம் செய்வோம் என்பதை நோக்கமாகவும் கிராமங்களிலிருந்து உலகை நோக்கியெழும் வாழ்க்கை நெறி சமுதாயத்தை கருணை, அகிம்சை, தியாகம், மனிதநேயம் என்ற சனாதன தர்மங்களுக்கூடாக மனிதோதய மேம் பாட்டிற்குள் அழைத்துச்செல்வோம் என்பதை இலட்சியமாகவும் கொண்டு 27.07.1972ம் ஆண்டு வட இலங்கை சர்வோதயம் இம் மண்ணிலே மலர்ந்தது.

மனிதனாகப் பிறந்தவன் மனிதனுக்குச் சேவை செய்வதையே தன் கடனாகவும், கடமை யாகவும் கொள்ளல் வேண்டும் என்பதனை உணர்ந்து வட இலங்கை சர்வோதயத்தின் வாயிலாக பல பணிகளை ஆற்றியவர் எம் தொண்டர் திருநாவுக்கரசு அவர்கள், சிறு வயதிலேயே துடிப்புள்ள இளைஞனாகவும் சிந்தனைக் கூடாரமாகவும் திகழ்ந்த தொண்டரை நாம் பிரித்துப் பார்க்க முடியாது ஏனெனில் சர்வோதயம் என்றால் அது திருநாவுக்கரசர் தான் அதேபோல் திருநாவுக்கரசு என்றால் அது சர்வோதயம் தான் என்னும் அளவிற்கு இரண்டுமே எட்டாச் சிகரமாயும், புகழிடமாயும் இருந்தன. தொண்டர் அவர்கள் பல்வேறு பட்ட பணிகளை மக்கள் மத்தியிலே மேற்கொண்டார். அந்த வகையிலே சுகாதாரம், கல்வி, விவசாயம், சிரமதானம், முதியோர் கௌரவிப்பு, குடியேற்றத்திட்டம், பொது நிலையங்கள் அமைத்தல், தலைமைத்துவப் பயிற்சி, கலை கலாசார ஆன்மீக நிகழ்வு, சேமிப்புத்திட்டம் போன்ற பாரிய பணிகளை மேற்கொண்டார். அந்த வகையிலே அவரின் பணிகளை நாம் நோக்குவோம்...

### குடியேற்றத்திட்டம்

1977-1983களிலே இடம்பெற்ற இனக் கலவரத்தின் போது மலையக-மற்றும் தென் பகுதி வாழ் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்த வேளை கேரதீவுப் பிரதேசத்தில் முகாமிட்டு தற்காலிக் குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் தொடர்ந்து ஜெயபுரம், திருக் கேதீச்சரம் போன்ற இடங்களில் இவ்வாறான மக்களைக் குடியேற்றினார்.

அதனைத் தொடர்ந்து 1983ம் ஆண்டு இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை காங்கேசன்துறையிலே முகாமிட்டு கப்பலில் அகதியாய் வந்த எம்மினத்தவருக்கு உணவு தேநீர் வழங்கி யாழ்ப்பாணத்துக்கு திருப்பி அனுப்பி வைக்கும் சேவையை அரசாங்கத்துடன் சேர்ந்து சேவையாற்றியதில் சர்வோதயமானது பூரண பங்களிப்பை நல்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990 களில் இடம்பெற்ற இடப்பெயர்வின் போது ஊர்காவற்றுறை, மண்டைதீவு, வேலணை ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து புங்குடுதீவு நோக்கி வந்த மக்களுக்கு உணவு, உடை, உறையுள் என்பவற்றைக் கொடுத்து ஆதரித்து தன்னாலான முழுப்பங் களிப்பையும் சர்வோதயத்தினூடாகப் பெற்றுக் கொடுத்தார்.

புங்குடுதீவு, கேரதீவு எனும் இடம் 1972-1974 ஆண்டுகளில் கடலோடு கடலாக மாறும் அபாயத்திலிருந்த பூமியை மீட்டெடுத்து காலம் காலமாக நடைபெற்றுவந்த மண்ணகழ்வைத் தடுத்து மக்கள் குடியிருப்புக்கு ஏற்றவாறு காட்டை அழித்து களனியாக்கி அரசாங்கத்துடன் இணைந்து 117 குடும்பங்களுக்கு காணிகளைப் பகிர்ந்தளித்து மக்கள் குடியேற்றத்திற்கு வித்திட்டார்கள். இதை எழுத்து வடிவில் மிகச்சுருக்கமாகச் கூறிவிட்டாலும் பல்வேறு சவால்களையும், அழுத்தங்களையும், எதிர்ப்புக் களையும் எதிர் கொண்டு மக்களின் நல்வாழ் விற்காக எடுத்த முயற்சி இன்று கேர நகராக புத்துயிர் பெற்று நிற்பதைக் காணமுடிகிறது.

## சிரமதானப்பணி

கழுதைப்பிட்டி தொடக்கம் வங்களாவடிச் சந்தி வரை போக்குவரத்துப் பாதையை அகலிப்புச் செய்து போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து மக்களின் துயரங்களைத் துடைத்தது மட்டுமல்லாது 50 வருடங்களாக யாருமே பயணிக்க முடியாத வகையிலே இருந்த காணியை மீட்டெடுத்து மணியகாரன் வீதி என்ற பாதையைத் திறந்து வைத்து தொழிற் தேவை வாழ்க்கைத் தேவை என்பன நிறைவு செய்யப்பட்டன. புங்குடுதீவின் பிரதான வீதி போக்குவரத்து வசதி கருதி துப்பரவு செய்யப் பட்டது. இத்தகைய செயற்பாட்டிற்கு முன்னின்று உழைத்தது வட இலங்கை சர்வோதயமாகும்.

## சுகாதாரப்பணி

புங்குடுதீவு வாழ் மக்களின் நோயைத் தீரப்பதற்காகவும் கட்டுப்படுத்துவதற்காகவும் பல்வேறு வைத்திய நிலையங்கள் அமைக்கப் பட்டன. அந்த வகையிலே குறிகட்டுவான், இறுப் பிட்டி, வல்லன், ஊரதீவு போன்ற இடங்களைக் குறிப்பிடலாம். அத்தோடு தாய் சேய் மரண வீதத்தைக் குறைக்கும் நோக்கத்துடனும் பல்வேறு சேவைகளை ஆற்றும் முகமாகவும் பல்தரப்பட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை வைத்து மக்களை மரண வீதத்திலிருந்து காப் பாற்றிய பெருமை வட இலங்கை சர்வோத யத்தையே சாரும்.

அதனை விட தொழுநோய், காசநோய் என்பன ஏற்பட்ட வேளை தடுப்பூசிகள், மருந்துகள் என்பன பெற்றுக் கொடுக்கப்பட்டது. அத்தோடு பல்வேறுபட்ட நோய்களை தீர்க்கும் நோக்கத்திலே ஐந்து தொண்டர்களை இந்தியாவிலுள்ள செங்கல்பட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. அப் பயிற்சியின் பயனாக பல்வேறுபட்ட பரி சோதனை முகாம்கள் அமைக்கப்பட்டன. அதனாலே புங்குடுதீவில் 72 தொழு நோயாளிகள் அடையாளங் காணப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர். அத்தோடு சூழல் சுகாதாரத்தைப்பேணும் நோக்கத்துடன் மலசல கூடங்களை அமைத்துக் கொடுத்தார்.

## விவசாயப்பணி

1997ம் ஆண்டிலிருந்து விவசாய நட வடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக நெற் காணிகளைப் பயன்படுத்தி 200 பரப்பு காணியில் நெல் சாகுபடி செய்ய ஊக்குவிக்கப் பட்டது. வீட்டுத்தோட்டங்களை உருவாக்கும் நோக்கத்துடன் மக்களுக்கு விசேட பயிற்சி வகுப்புக்கள் நடாத்தியதோடு விதைகளை இலவசமாக வழங்கும் திட்டம் முழுமையாகப் பயனளிக்கக் கூடியவாறு நடைமுறைப் படுத்தப்பட்டது. அத்தோடு கேரதீவுக் கிரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திலே பானை நீர்ப்பாசனை முறைமை யிலான தென்ன நடுகையையும் தலைமன்னார் பகுதிகளிலிருந்து எடுத்து வரப்பட்ட வீரியம் கொண்ட பனைவிதைகளை நாட்டி கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நிலைக்கு உருவாக்கப்பட்டுள்ளமையை நாம் காணலாம். விவசாயத் திணைக்களத்தின் உதவியுடன் 2000 க்கு மேற்பட்ட தென்னை பல நூறு நிழல் தரு மரங்கள், வாழை, கொய்யா, மாதுளை போன்ற பயன்தரு மரங்கள் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. சாவகச்சேரிப் பகுதியிலிருந்து 3000 இலாந்தா இன முருங்கைத்தடி, பப்பாசி போன்றவற்றை புங்குடுதீவுப் பிரதேசத்திற்கு பெற்றுக் கொடுத்து அவர்களின் பயிர்ச் செய்கை யினையும் ஊக்கப்படுத்தி பெரும் நன்மை களைப் பெற்றுக் கொடுத்தது.

## கல்விப்பணி

மாணவர்களின் கல்வியறிவு வீதத்தை மேம்படுத்தும் நோக்கமாக எட்டு கிளை நூலகங் களை உருவாக்கிக் கொடுத்தது சர்வோதயம். "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்ற கருத்தை இம்மண்ணிலே நிலை நிறுத்தி அதற்கான பயனையும் திருப்பதியையும் மக் களுக்குப் பெற்றுக் கொடுக்க முன்னின்று செயற் பட்டது. அத்தோடு எமது கிராமத்திலே உள்ள சிறார்களின் முன்னேற்றத்திற்கும் அவர்களை தலைசிறந்த மாணாக்கர்களாக உருவாக்கும் நோக்கிலேயும் கல்வியிலே பின்னடைவு ஏற் பட்டிருக்கும் மாணவர்களை சிறந்த கல்வி மான்களாகத் திகழ வேண்டும் என்பதற்காக முன்பள்ளி, மாலைநேர வகுப்பு, அறநெறிப் பாடசாலை போன்றனவும் அமைக்கப்பட்டன.

அதனைவிட இன்றைய உலகிலே கணனி அறிவு மிக அவசியம் என்று கருதி அதனையும் மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் வகையிலே கணனி வகுப்புக்கள் சர்வோத யத்திலும் நடத்தப்பட்டு வருகின்றன. அதுமட்டு மன்றி புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாண வர்களை கௌரவப்படுத்திப் பல்வேறுபட்ட உதவித்திட்டங்களையும் வழங்கி வருகின்றது. அத்தோடு கா.பொ.த சாதாரண தரம் சித்தி பெற்று உயர் தரம் கற்கும் மாணவர்களுக்கும், பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்கும் கல்வித்தேவையை ஆண்டாண்டு தோறும் பூர்த்தி செய்து வருகின்றது.

அதனைவிட முத்தமிழ் வளர்ச்சியை கிராமங்களில் வளர்க்கும் முகமாக நீதி நூல்கள் முற்றோதல், கிராமவிழா, அறநெறிப்பாடசாலை நடாத்தி போட்டிப் பரீட்சை வைத்து பரிசில் வழங்கி கௌரவிக்கின்றது. இதனால் மாணவர் களின் ஆளுமை வளர்வதுடன் தலைமைத்துவப் பண்பையும் வளர்த்துச் செல்கின்றது.

## சேமிப்புத்திட்டம்

பல்வேறு கிராமங்களிலும் உள்ள தேசிய சேமிப்பு வங்கி ஹற்றன் நஷனல் வங்கி போன்றவற்றுடன் சிறுவர்களை இணைத்து ஏறத்தாழ 1000 சிறுவர்களுக்கு சேமிப்புப் புத்தகம் திறக்கப்பட்டு சேமிப்புப் பழக்கத்தை மென்மேலும் விருத்தியடைய முன்னின்று உழைத்தது மட்டுமன்றி சேமிப்புப் பழக்கத்தை சிறு துளி பெரு வெள்ளத்தைப் போன்று உருவாக்கிப் பெற்றுக் கொடுத்தது.

## குடிநீர் விநியோகம்

வறட்சிக் காலத்திலே மக்களுக்கு குடிநீர் தேவை என்பதைக்கருத்திற் கொண்டு சாட்டிக் கிராமத்தில் கிணறு வெட்டி அங்கிருந்து பௌசர் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகின்றது. அத்தோடு பொது இடங்களிலே கிணறுகள் அகழ்ந்து நல்ல தண்ணீர் பெற்றுக்கொடுத்து மக்களின் தாகங்களைத் தீர்த்ததோடு குடிநீர்த் தேவையை அன்றாடம் பூர்த்தி செய்கின்றது. அதனை விட கோமாதாக்களின் தாகங்களைத் தீர்க்கும் பொருட்டு புங்குடுதீவிலே பத்து தண்ணீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டன. இதனூடே ஆவினங்களின் தாகங்கள் முற்றாகத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்கப்பட்டன. இது உண்மையிலேயே ஓர் சிறப்பான செயற்பாடாகும்.

### முதியோர் கௌரவிப்பு

"மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்ற வாசகத்திற்கிணங்க முதியோரின் அறிவுரைகளும் நற் கருத்துக்களும் எம் சமூகத்திற்கு அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வானது கடந்த ஆண்டுகளிலே நடாத்தப்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

### பொதுநிலையங்கள் அமைத்தல்

மக்களின் அன்றாட தேவைக்காக மண்டைதீவு, புங்குடுதீவு, வேலணை, சரவணை, தொல்புரம் போன்ற இடங்களிலே பொது நிலையங்களை அமைத்து மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

### கலை கலாசார ஆன்மீக நிகழ்வுகள்

யோகர்சுவாமியின் அஸ்தி வைத்துக் கட்டப்பட்ட அவருடைய கோயிலிலே அன்னதான நிகழ்வுகள் பூசை வழிபாடுகள், கூட்டுப் பிரார்த்தனை, நற்சிந்தனை என்பன நடாத்தப்பட்டு வருவதோடு ஏனைய கோயில்களிலும் அன்னதான நிகழ்வு சிறப்பாக நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கதொன்றாகும். ஒவ்வொரு மாதமும் ஆயிலிய நன்னாளிலே அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கம் நிலையத்திலுள்ளோருக்கும் ஏனையோருக்கும் மதிய போசனம் வழங்கி வருவது சிறப்பானதொரு செயலாகும்.

மற்றும் ஞாபகார்த்த திதியை முன்னிட்டு ஆத்ம சாந்தி வழிபாடுகளும் மேற்கொள்ளப்படுவதோடு விசேட சிறப்பான தினங்களிலே அனுட்டிப்போரின் நாமங்களைக்கூறி பிரார்த்தனை செய்யப்பட்டு வருகின்றது. மக்கள் தரமான பொருட்களையும் நியாயமான விலையில் பெற்று பயன் பெறுவதற்கு பல சரக்கு விற்பனை நிலையம், புடைவைக்கடை, உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் என்பனவும் இயங்கி வருகின்றன.

அதனைவிட எமது கிராமத்தில் கிடைக்கக் கூடிய மூலப்பொருட்களான பனை வளத்தை பயன்படுத்தி வருமானத்தை சுயமாக பெற்றுக் கொள்வதற்கு தீவகக் கல்வி வலய அனுசரனையுடனும் UNDP உதவியுடனும் பன்ன வேலைப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

தீவகக் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் சமூகக் கற்கை நிலையம் இயங்கி வருகின்றது. இதிலே பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களிலிருந்து 20 பெண்கள் தெரிவு செய்யப்பட்டு உள்ளூர் மூலப்பொருட்களை பயன்படுத்தி உணவு பதனிட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. குறிப்பாக அரிசிமா, குறிஞ்சாமா, வடகம், புளுக்கொடியல், மோர்மிளகாய், ஒடியல்மா போன்ற உற்பத்திப் பொருட்கள் மக்கள் மத்தியிலே சிறந்த வரவேற்பை பெற்ற தொன்றாகும்.

அதனை விட எதிர்கால சந்ததியினருக்கும், பயிற்சியாளர்களுக்கும் எமது நிறுவனமானது ஓர் வரப் பிரசாதம் என்றே குறிப்பிட வேண்டும் ஏனெனில் வாழ்வாதாரத்திலே பின்தங்கியுள்ள மக்கள், சுற்றுலா பயணிகள் போன்றோர் இதனைப் பார்வையிட்டு தாமும் இவ்வாறான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் அத்தோடு அதனை செயற்படுத்த வேண்டும் என எடுத்துரைத்து தம் முன்னேற்றப்பாதையை அமைத்துக் கொள்கின்றன.

அத்தோடு மக்களின் மனம் கவர்ந்த ஓர் இடமாகவும் என்றுமே மறக்க முடியாத ஓர் நிறுவனமாகவும் உள்ளது. ஏனெனில் கிராமங்களின் வளர்ச்சி அபிவிருத்தியையும் மக்களின் வாழ்க்கையில் நல்கீர்த்தியையும் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் 1978ம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அணையா விளக்கு" ஏற்றப்பட்டு இற்றைக்கு வரை 35 ஆண்டுகள் ஒளிகாழாது பிரகாசித்துக் கொண்டிருப்பது ஓர் அதிசயிக்கத்தக்கதும் வரவேற்கத்தக்கதுமான ஓர் அற்புத தீபமாகும். 1991 இடப்பெயர்வுக் காலத்திலும் கூட இவ் விளக்கை காப்பாற்றவென எமது நிலையத்தின் பொறுப்பாளரும் ஜீவதானியுமான செல்வி.க. புஸ்பமணி அவர்கள் இடம்பெயராது புங்குடு தீவிலே தங்கியிருந்து அணையா விளக்கையும், நிலையத்தில் உள்ள யோகர் சுவாமியின் தீபத்தையும், நிலையத்தில் பிரதிஸ்டை செய்யப் பட்டு வழிபாடு செய்யப்பட்டு வரும் சிவலிங்கப் பெருமானின் தீபத்தையும் காழாது காப்பாற்றி வந்துள்ளார்.

எமது நிறுவனத்தின் பணிகள் சிறக்கவும் வளரவும் அன்றும் இன்றும் நிதியுதவியை நல்கி நிற்பவர்கள் புங்குடுதீவைச் சார்ந்த நல்லுள்ளங் களும் எமது நிறுவனத்தில் ஆரம்ப காலங்களில் பங்கெடுத்து எம்மிடையே பணியாற்றி ஒத்துழைப்பு நல்கி தற்போது வெளிநாடுகளில் வாழ்ந்துவரும் நல்லிதயங்களும் ஆகும்.

இவ்வாறான ஓர் சிறப்பான அரச சார்பற்ற நிறுவனமாகவும், மக்களின் உயிர் நாடி தோழ னாகவும் வீற்றிருந்து அவர்களின் எண்ணங் களுக்கு குரல் கொடுத்து அளப்பெரிய சேவை களை திறம்பட ஆற்றி வருகின்றது. இதன் சேவையானது என்றுமே மறையாது.

யோகர் சுவாமியின் அஸ்தி இம் மண்ணிலே வாழும் வரை இவ் நிறுவனத்தின் செயற் றிட்டங்கள் என்றுமே மாறாது. ஏழு மலைகள், சமுத்திரங்கள் தாண்டியும் சர்வோதயத்தின் பணியானது பரந்து என்றைக்குமே விரிந்து கிடக்கும் என்பது எமது திண்ணம். அப்பர் யோகர் சுவாமியின் வழியிலே நாமும் சென்று அவரின் பாதார விந்தங்களை அடைந்து நல்லாசி பெறுவோமாக!..

## கிராமிய வலுப்படுத்தலுக்கான அமைப்புக் களின் இணையம் - வேலணை

ஆரம்பம்

இவ் இணையத்தைச் சுருக்கமாக கோர் (CORE) என்று அழைப்பர். இவ் இணையம் 2004 ஆம் ஆண்டு போரூட் (FORUT) நிறு வனத்தால் தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உருவாக்கப்பட்டது. அப்போது பிரதேச செயலரினால் தெரிவு செய்யப்பட்ட தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஏழு (07) கிராம மட்டச் சங்கங்கள் இக் கோர் நிறு வனத்தின் அங்கத்துவமாக இணைந்து கொண்டன. இங்கு P.R.A என்ற பயிற்சியின் மூலம் அடிப்படைத் தகவல்களும் தரவுகளும் பெறப்பட்டு அங்கத்துவச் சங்கங்களின் தேவைகள் இனங்காணப்பட்டது. பின்பு இச்சங் கங்களின் நிர்வாகத்தை மீளப் புனரமைப்புச் செய்ததுடன் சங்க அங்கத்தவர்களை சிறுசிறு குழுக்களாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டது. பின்னர் இவ் அங்கத்துவச் சங்கங்கள் இக்குழுக்கள் மூலம் குழுச்சேமிப்பைப் பெற்றுக் கோர் நிறுவனத்தில் வைப்பில் இட்டது. மேலும் கோர் நிறுவனத்திற்கான நிதியுதவியினை போரூட் (FORUT) நிறுவனமே வழங்கி யிருந்தது.

### பதிவு செய்தல்

இக் கோர் அமைப்பானது 2005.06.24 ஆம் நாள் தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பகுதியில் 1998 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க தொண்டர் சமூக சேவைகள் நிறுவனங்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) என்னும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பதிவிலக்கம் (J/V/VOP/2005/01) ஆகும். இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்று வரை வேலணை வங்களாவடியில் உள்ள பிரதான வீதி மில் ஒழுங்கையில் இயங்கி வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்கத்துவம்

இவ் இணையத்தில் 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியின் பின் மேலும் சில சங்கங்கள் அங்கத்துவமாக இணைந்து கொண்டன. எனவே தற்போது 15 சங்கங்கள் அங்கத்துவம் பெற்றுள்ளன. எனவே இணைய அமைப்பின் அடிப்படை விதிகளை ஏற்று செயற்பட விரும்பும் தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட எந்தவொரு பதிவு செய்யப்பட்ட கிராம அமைப்பும் அங்கத்துவம் பெற முடியும். என்ப துடன் சங்கங்களைச் சாராத தனியாட்களும் இவ் இணையத்தில் அங்கத்துவம் பெறமுடியும்.

## நோக்கம்

இதனுடைய நோக்கமானது "வேலணைப் பிரதேச, பொருளாதாரத்தில் நலி வுற்ற மக்களின் வாழ்வாதாரத்தினையும் சுய தொழிலையும் கல்வி, கலை, கலாசார வளர்ச் சியையும் நோக்காகக் கொண்டு செயற்படல்" ஆகும்.

## தூர நோக்கு

இதனுடைய தூர நோக்கானது "வேலணைப் பிரதேச, பொருளாரத்தில் நலி வுற்ற மக்களை அவர்களின் பங்களிப்புடன் நுண்நிதிச் செயற்பாட்டின் மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தி மது, புகைத்தல், போதைப் பொருள் பாவனையை விலக்கலுக் கான நடவடிக்கையையும் சிறுவர் – இளைஞர் அபிவிருத்தி, பால் சமத்துவ நிலை, உட்கட்டு மான அபிவிருத்தி, கலை, கலாசாரத்துடனான கல்வி, பொருளாதார மேம்பாட்டை இலக்காகக் கொண்டு நல்லதொரு சமூகத்தைக் கட்டி யெழுப்புதல்" ஆகும்.

## இணையத்தின் செயற்பாடுகள்

இணையத்தின் செயற்பாடுகளாக அங்கத்துவச் சங்கங்களினதும் அதன் அங்கத்தவர்களினதும் தனியாரினதும் சேமிப்புக்களை ஏற்றல், அங் கத்துவச் சங்கங்களுக்கும் அதன் அங்கத்தவர் களுக்கும் தனியாருக்கும் கடன்களை வழங் குதல், கல்விசார், தொழில்சார், சாரதிப் பயிற்சி வகுப்புக்களை நடத்துதல், மது போதைப் பொருள், எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல், நட்டஈடு, குத்தகை போன்ற நிதி தொடர்பான சேவைகளை வழங்கல், சூழல் பாது காப்பு, தொற்று நோய்கள், சமூகப்பிரச் சினைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக துண்டுப்பிரசுரங்களையும் கையேடுகளையும் வெளியீடு செய்தல், அரச சார்பற்ற நிறுவனங் களின் (IOM) வேலைத் திட்டங்களை மேற் கொள்ளுதல் போன்ற பல செயற்பாடுகளை குறிப்பிடலாம்.

கோர் நிறுவனத்தால் இன்று வரை நிகழ்த்தப் பட்ட பயிற்சி வகுப்புக்கள்

| | |
|---|---|
| 2004 | தலைமைத்துவப் பயிற்சி |
| 2005 | கோழி வளர்ப்புப் பயிற்சி<br>நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தற் பயிற்சி |
| 2006 | தையற் பயிற்சி<br>தலை அலங்கரிப்பு பயிற்சி<br>உணவு தயாரித்தற் பயிற்சி |
| 2007 | மின்னிணைப்புப் பயிற்சி<br>பன்னை வேலைப் பயிற்சி<br>கோழி வளர்ப்புப் பயிற்சி<br>தொழிலை எவ்வாறு ஆரம்பிப்பது தொடர்பான பயிற்சி<br>தொழிலை எவ்வாறு இனங்காணல் தொடர்பான பயிற்சி |
| 2008 | கணினிப் பயிற்சி<br>சாரதிப் பயிற்சி |
| 2009 | வீட்டுத் தோட்டப் பயிற்சி |
| 2010 | கையடக்கத் தொலைபேசி திருத்தற் பயிற்சி<br>தொழிலை எவ்வாறு ஆரம்பிப்பது தொடர்பான பயிற்சி |
| 2011 | கணினிப் பயிற்சி |
| 2012 | சாரதிப் பயிற்சி<br>கணினிப் பயிற்சி |
| 2013 | சாரதிப் பயிற்சி<br>கணினிப் பயிற்சி |
| 2014 | சாரதிப் பயிற்சி<br>கணினிப் பயிற்சி |

## இணையத்தின் தற்போதைய நிலை

இவ் இணையத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள கிராம மட்ட சங்கங்கள் தற்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளப் புனரமைக்கப்பட்டு வருகின்றன. அவை இணையத்துடனான தொடர்புகளைப் பேணி வருவதிலும் அக்கறை காட்டத் தொடங்கி யுள்ளன. இதனால் இவ் இணையம் ஊடாக ஏற்கனவே வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பில் சிக்கல்கள் குறைவடைந்து வருகின்றது இதனால் கோர் நிறுவனத்தின் நிதியும் பெருக வாய்ப் புள்ளது.

இருப்பினும் கிராம மட்ட சங்கங்களை திறம்பட செயற்பட வைப்பதில் கோர் நிறுவனம் தொடர்ந்து முயற்சிகளை எடுத்து வருகின்றது. அதே போன்று கிராமமட்ட சங்கங்களுக்கு பொறுப்பாகவுள்ள வேறு நிறுவனங்களும் இவ்விடயத்தில் அக்கறை காட்டி எமது நிறுவன வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்குமாறு இந் நேரத்தில் வேண்டி நிற்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாம்பல் பூத்த தணல்

திரு.த.செல்வகுமார்
முகாமைத்துவ உதவியாளர்
பிரதேச செயலகம் – வேலணை.

எனக்கே நானோர் எதிரி – என்
நரம்பில் கொதிக்கும் குருதி
தனியே வேறொரு பிறவி – நான்
தலைக்கனம் கூடிய துறவி

உள்ளம் என்றொரு பாறை – அதன்
உள்ளே எத்தனை கோறை?
கள்ளம் கபடம் சேர்ந்து – மனம்
கருகிப் போகும் சோர்ந்து.

வீட்டின் உள்ளே கிடந்தேன் – வெளி
உலகம் தெரியா திருந்தேன்.
பூட்டை உடைத்துத் திறந்தேன். – நான்
புதிதாய் உலகை அறிந்தேன்.

கூடா நட்பில் விழுந்தேன் – நான்
குடித்தே வாழ்வை இழந்தேன்.
காடா யிருந்த உள்ளம் – அதில்
காதல் என்னும் வெள்ளம்

மூச்சை விடவும் மறந்தேன் – பெண்
மொழியில் அறிவைத் துறந்தேன்.
கூச்சம் சிறிதும் இன்றி – நான்
கொஞ்சித் திரிந்த பன்றி.

வாழ்க்கை மேலே செல்லும் – என
மனதின் பறவை சொல்லும்.
வேட்கை தினமும் கொல்லும் – அவள்
விழியோ மனதை அள்ளும்.

கோடை காலத் தூறல் – அது
போலே எந்தன் காதல்
ஓடை காய்ந்து போச்சு – காதல்
ஓடம் சாய்ந்து போச்சு.

வியர்வைத் துளிகள் எல்லாம் – என்
விழியின் நீராய்ச் செல்லும்.

துயரைப் போக்கிக் கொள்ள – நான்
துணிந்தேன் என்னைக் கொல்ல.

தூக்கில் தொங்கிச் சரிவேனா? – இல்லை
துணிபோல் நெருப்பில் எரிவேனா?
நாக்கைப் பிடுங்கிச் சாகாமல் – நான்
நாயாய்ப் பேயாய் அலைவேனா?

பேய்கள் ஓடும் தலைக்குள்ளே – மனம்
பிறழ்ந்து போகும் அறைக்குள்ளே.
வாய்கள் எல்லாம் என் பேச்சு – என்
வாழ்க்கை முடிந்து போயாச்சு.

புல்லின் நுனியில் பனிகண்டேன் – அதன்
பொருளை நானும் மனம்கொண்டேன்.
செல்லும் காலம் தினம்செல்லும் – அதில்
துயரம் என்ப தொருகாலம்.

வாழ்க்கை என்றும் முடியாது. – அந்த
வரத்தை இழக்க முடியாது.
ஏக்கம், கவலை இருந்தாலும் – அதை
எரிப்பேன் தடயம் தெரியாது.

துயரம் இனிமேல் எனக்கில்லை – நான்
தொடர்ந்த பாவம் கணக்கில்லை.
உயிரின் கடைசித் துளிவரைக்கும் – என்
உணர்வுக் கில்லை அவையடக்கம்.

எவரும் எனக்கு நிகரில்லை – என்ற
எண்ணம் தலைக்குள் புகவில்லை.
சுடரும் அறிவின் துணைகொண்டு – நான்
துலங்கும் நாட்கள் தொலைவில்லை.

சாம்பல் பூத்த தணல்மேலே – சிறு
சருகாய் அமரும் துயர்போலே
தூங்கும் திறமை வெளியாகும் – என்
தொடக்கம் அதிலே முடிவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவக மாதாவின் கண்ணீர் கதறல்
# "நீயும் என் சேயல்லவோ"

திரு.இளையதம்பி கங்கேஸ்வரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் – வேலணை.

புழுதிக் குழியலுடன் புரண்டடித்தே விளையாடி
வீம்பாக பேசி வம்புச் சண்டை தானிழுத்து
வித்துவான் கலாநிதிகள் எக்கவுண்டர்
எஞ்சினியர்
என்னுள்ளும் பலருண்டே
ஏற்றி நான் போற்றிடுவேன்–என்னுள்
நீ இல்லை என்ற கவலை மட்டும்

சொந்த வேலை செய்து சோற்றுக்குப்
பஞ்சமின்றி
சொந்தங்களோடு வாழ்வதே சொர்கமல்லோ
பூத்திடும் பனந்தோப்புடன் புகையிலை
வெங்காயம் புளுக்கொடியல் பனாட்டுடன்
பசும்புல் வெளிக்காடாய்
பொங்குவளம் சேர்ப்பவள் நான்

ஈரெட்டு வயதினில் இங்கு நீ எப்படியிருந்தாய்
ஏர் பூட்டி நாண் இழுத்து என் உடம்பை நீகிழித்து
ஏற்றங்கள் பல கண்டு எழில் செய்தவனே
அம்மாவிற்கு அணிகலன் அக்காவிற்கு அடுக்குக்
காப்பு
அப்பனுக்கு வேட்டி சாறம் வாங்கி
அப்பனுக்கற்ற வாழ்க்கை வாழ்ந்தவன்
நீயல்லவோ

வெளிநாட்டு மோகமுன்னை
வெறித்தனமாய் ஆக்கியதால்
கைவிலங்கு பூட்டிக் கொண்டாய்
களவாக வெளிநாடு நீ சென்ற காரணத்தால்
தன் பிள்ளை வெளிநாட்டில் தனக்கேன் கவலை

உன் தாயுமுளறுகிறாள் உனக்கதுவும் புரிகிறதா
தம்பியும் கடல்வழியே வந்தானங்கு
ஆழிக்கடல் அவன் விதியை உமிந்ததினால்
அம்மாவும் சோறற்றுக் கிடக்கிறாள் சோம்பலாக
ஆறுதல் கூறவிங்கு அக்காவும் வருவதில்லை
வட்டிக்கு தந்த அட்டியலை எப்போ தருவான்
தம்பி
வாய் கூசா கடிந்திடுவாள் நாளும் உன்னை

ஊனுடம்பு தானதுவும் ஊடறுத்து
உன்னுடம்பு குளிரதனில் நடுநடுங்க
குலை நடுக்கம் தாங்காமல் இமைக்கா உன்
விழிகள்
அப்பனவன் சொன்ன அறிவுரைகள்
அறிவுறுத்தும்
மாரடைப்பில் மனிதனும் சாவடைந்தான் இங்கு
அவன் கட்டை கூட பார்க்க விதியுமில்லை
உனக்கு

என்னை விட்டு நீங்களெல்லாம்
வெளிநாடு செல்வதனால்
சேயற்ற தாயாக செத்து மடிகிறேன்
விடுபட்ட நாளன்று விநாயகனை வழிபட்டு
அரவணைக்க அம்மா உனக்குண்டு
ICRC வருவார்கள் அவர்களுடன் வா
மகனே.

**இறங்கும் கண்ணீர் துளிகளுடன்**
**தீவக மாதா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேடல்


சுப்பிரமணியம் அருள்செல்வம்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் - வேலணை


பூங்காற்று பூக்களைத்தேட
புதுராகம் பாக்களைத்தேட
வானமுகில் வான் நிலவைத்தேட
தாமரைகள் சூரியனைத்தேட
தீரவில்லைதேடல்-பூமியில்
ஓய்வதில்லை தேடல்

முயற்சிகள் வெற்றிகளைத்தேட
நித்திரைகள் கனவுகளைத்தேட
இளமையெல்லாம் மகிழ்வதனைதேட
புரட்சியெல்லாம் புதியதனைத்தேட
நிரந்திரமாய் தொடருதடாதேடல்-மனிதன்
வாழ்வெல்லாம் ஓய்வதில்லைத்தேடல்

பயணங்கள் சாலைகளைத்தேட
கவிவரிகள் அர்த்தங்களைத்தேட
கருவண்டு தேன் மலரைத்தேட
பருவங்கள் காலநிலைதேட
தீர்வதில்லையே தேடல்-இங்கு
எந்தக்கணங்களுமே தேடல்

உழைப்பவர்கள் ஓய்வுகளைத்தேட
பசித்தவர்கள் உணவுதனைத்தேட
ஏழைமனம் செல்வமதைத்தேட
ஆத்திகர்கள் பக்திதனைத்தேட
உண்மையெல்லாம் நீதிதனைதேட
தேடல்கொண்டே சுழலுதடா பூமி-மனிதன்
தேடுவது இல்லையென்றால் ஞானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by: Mathi Colours, Nallur, Jaffna. 021 2229285
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org